# காவல் நிலை ஆணைகள்

பாகம் II

குறிப்புதவிநூல்

ஆதாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

©
தமிழ்நாடு அரசு
1977

விற்பனைக்கு அல்ல

தமிழ்நாடு அரசு அச்சகத்தில் இயக்குநரால் அச்சிடப்பட்டது

# காவல் நிலை ஆணைகள்

## பாகம் II.

ஆதாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது

(அலுவலக உபயோகத்திற்கு மட்டும்)

©
தமிழ்நாடு அரசு
1973

தமிழ்நாடு அரசு அச்சகத்தின் இயக்குநரால் அச்சிடப்பட்டது.

விற்பனைக்கு அல்ல.

## உள்ளடக்கங்களின் அட்டவணை.

### பாகம் I

### 1-ம் தொகுதியின் இணைப்பு.


| | பக்கம் |
|---|---|
| ..டை, தளவாடங்கள் ஒழுங்கு முறை விதிகள் .. | 1 |
| குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலை கூட்டு இயக்குனரின் பரிசீலனைக்காக ஆவணங்களை அனுப்புவதிலும், வழக்கு மன்றங்களில் அவர் வருகைக்குக் கேட்பதிலும் காவல் துறை அலுவலர்களும், பிற அலுவலர்களும் தெரிந்து கொள்ள வேண்டிய அறிவுரைகள். | 52 |
| குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆசாய்ச்சிச் சாலைக் கூட்டு இயக்குனரின் சேவையைப் பெறுவதற்கான விண்ணப்பங்களையும் அதற்காகத் தொகை செலுத்துவதையும் ஒழுங்கு படுத்தும் விதிகள். | 58 |
| ..ருவரை அடையாளம் தெரிவதற்குரிய மச்சங்கள், தழும்புகள், மற்ற வகைகளையும் பதிவு செய்வதற்கான அறிவுரைகள். | 62 |
| ..ங்கலான விரல் ரேகைகளை விளக்கம் செய்யப் பவுடரைப் பயன்படுத்துவதற்கான அறிவுரைகள். | 66 |
| ..மிழ்நாடு மாநிலத்திலுள்ள தனிக் காவல் துறை அலுவலர்களைப் பதிவு செய்வதையும் பணியில் அமர்த்துவதையும் ஒழுங்குபடுத்துவதற்கான அறிவுரைகள். | 67 |
| ..ற்றவாளிகளை மருத்துவ அடிப்படையில் விடுதலை செய்வதற்கான நிபந்தனைகள். | 72 |
| ..பொது வருங்காலச் சேம நிதி (தமிழ் நாடு) விதிகள். | 75 |
| 1950-ஆம் ஆண்டு தமிழ் நாடு உதவித் தொகையுள்ள வருங்காலச் சேம நிதி-ஓய்வூதியம்-ஈட்டுறுதி விதிகள். | 151 |
| ..மிழ்நாடு மாநிலத்தில் மருத்துவ உதவியும் அரசாங்க மருத்துவ நிலையங்களின் கட்டணங்கள் விதிப்பதையும் பற்றிய விதிகள். | 209 |

தமிழ் நாடு அரசுக்கு முகவரி செய்துள்ள மனுக்களை யும் ஏனைய கடிதங்களையும் அனுப்புவதும், பெறுவதும் பற்றிய கட்டளைகள். ப

அகில இந்திய பணியாளர்த் தொகுதிகள் சட்டம். 1951 32

ஷெ (பயணப் படிகள்) விதிகள், 1954 .. 33

ஷெ (மருத்துவ வருகை உதவி) விதிகள், 1954 33

ஷெ (ஈட்டுப்படி) விதிகள், 1954 .. .. 34

இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (ஆட்களைச் சேர்த்தல்) விதிகள், 1954. 350

இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (தகுதிகாண் பருவம்) விதிகள், 1954. 356

இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (பணி அமைப்பு) விதிகள், 1954. 365

இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (மூத்த நிலை ஒழுங்கு முறை) விதிகள், 1954. 370

இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (சம்பளம்) விதிகள், 1954. 37


## II-ம் பாகம் தனிப்பட்டதும் மற்றும் உள்ளூர்ச் சட்டங்களின் கீழும் காவல் பணியினர் கடமைகள்.


1859 ஆம் ஆண்டு சென்னை மாவட்டக் காவல் சட்டம் XXIV. 397

சென்னை மாநகரக் காவல் சட்டம், III (1888) .. 414

1907 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டத்தின்கீழ் உள்ள விதிகள். 466

சென்னை மாவட்டக் காவல் (திருத்தச்) சட்டம், 1865 468

1861 ஆம் ஆண்டு V ஆவது காவல் சட்டம் .. 469

1864 ஆம் ஆண்டு II ஆவது தமிழ் நாடு வருவாய் வசூல் சட்டம். 478

அச்சகம், புத்தகம் பதிவுச் சட்டம், 1867 .. .. 479

கால்நடை வரை கடந்து நுழைதல் சட்டம், 1871 .. 481

தமிழ் நாடு நாடகக் காட்சிகள் சட்டம், 1954 .. 484

அபின் சட்டம், 1878 .. .. .. .. .. 491

அபின் விதிகள், 1948 (அபின் சட்டத்தின் கீழ் அறிக்கைகளிலிருந்தும் விதிகளிலிருந்தும் பகுதி நகல்). 498

| | பக்கம். |
|---|---|
| இந்தியப் புதையல் சட்டம், 1878 .. .. .. | 507 |
| கடல் சுங்கங்கள் சட்டம், 1878 .. .. .. | 507 |
| தமிழ்நாடு வனச் சட்டம், 1882 .. .. .. | 512 |
| இந்திய வெடிப் பொருள்கள் சட்டம், 1884 .. | 520 |
| வெடிக்கும் தன்மையுள்ள பொருள்கள் சட்டம், 1884. | 532 |
| இந்திய வெடிப் பொருள்கள் சட்டத்தின்கீழ் அறிவிக்கைகள், 1884. | 534 |
| சுரங்கமிட்டு வெடிக்க வைக்கும் வெடிப் பொருள்களை அழிப்பதற்கான கட்டளைகள். | 541 |
| இந்தியத் தந்தி சட்டம், 1885 .. .. .. | 543 |
| பொது மக்கள் கூடும் இடங்கள் பற்றிய தமிழ்நாடு சட்டம், 1888. | 547 |
| தமிழ்நாடு நகரங்கள் தொல்லை சட்டம், 1889 .. | 555 |
| சென்னை நகரத் தொல்லை (திருத்துவதற்கும் புதுக் கோட்டைக்கு நீடிப்பதற்கும்) சட்டம், 1951. | 561 |
| கால்வாய்கள் பொதுத் தோணிகள் சட்டம், 1890 (1890 ஆம் ஆண்டு கால்வாய்களும் பொதுத் தோணிகள் சட்டத்தின்கீழ் அறிவிக்கைகளும் கப்பலோட்டுதல் விதிகளும் மேற்குக் கரைக் கால்வாய்கள்). | 562 |
| இந்திய ரயில்வேக்கள் சட்டம், 1890-கீழ் அறிவிக்கைகள். | 570 |
| விலங்குகளுக்குக் கொடுமை செய்வதைத் தடுக்கும் சட்டம், 1890. | 575 |
| குற்றவியல் நடைமுறைச் சட்டம், (1898 விடுதலை செய்யப்பட்ட குற்றவாளிகள் இருப்பிடங்களை அறிவிப்பதைப் பற்றிய விதிகள்). | 588 |
| தண்டப்பணம் விதிப்பதற்காகவும் ஜப்தி செய்யப்பட்ட சொத்திற்கு உரிமைக் கோரிக்கைகளை நிர்ணயிப்பதற்காகவும் உள்ள ஆணைகளை நிறைவேற்றுவதற்கும் ஒழுங்கு படுத்துவதற்குமான விதிகள். | 591 |
| இந்திய அஞ்சல் அலுவலகச் சட்டம், 1898 .. | 596 |
| கிரெண்டர்ஸ் பார்ஸி என்னும் குதிரைத் தொற்று நோய்ச் சட்டம், 1899. | 600 |
| 1903 ஆம் ஆண்டு அயல் நாட்டிடம் ஒப்புவிப்புச் சட்டம், 1903. | 601 |
| தமிழ்நாடு ஜமீன் நிலச் சட்டம், 1908 .. .. | 604 |
| இந்தியப் பத்திரப் பதிவுச் சட்டம், 1908 .. | 607 |

குற்றச் சட்டத் திருத்தச் சட்டம், 1908 .. ..
குற்றச் சட்டத் திருத்தச் சட்டம், 1932 .. ..
குற்றச் சட்டத் திருத்தச் சட்டம், 1938 .. .. 623
அரசு துரோகக் கூட்டங்களைத் தடுக்கும் சட்டம் 1911. 621
நச்சுச் சட்டம், 1919 .. .. .. .. 624
1919 ஆம் ஆண்டு நச்சுச் சட்டத்தின்கீழ் விதிகள். 626
தமிழ்நாடு குழந்தைகள் சட்டம், 1920 . 646
1920ஆம் ஆண்டு தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் கீழ் விதிகள். 650
தமிழ்நாடு மாவட்ட நகராட்சிச் சட்டம், 1920 .. 652
தமிழ்நாடு மாவட்ட கழகங்களின் சட்டம், 1920 .. 668
இந்தியச் சுழல் துப்பாக்கிகள் சட்டம், 1920 .. 706
கைதிகளை அடையாளங் காட்டும் சட்டம், 1920 .. 707
1920 ஆம் ஆண்டு கைதிகளை அடையாளங் காணும் சட்டத்தின் கீழ் விதிகள். 710
இந்திய கடவுச் சீட்டு சட்டம், 1920 .. .. 713
இந்தியக் கடவுச் சீட்டு விதிகள், 1921 .. .. 715
இந்தியக் குடிபெயர்தல் சட்டம் 1922 .. .. 722
இந்தியக் குடிபெயர்ச்சி விதிகள், 1923 .. .. 728
காவல்துறை (விசுவாசமின்மையைத் தூண்டும்) சட்டம், 1922. 738
இந்திய அரசினர் அலுவலக மறையங்கள் சட்டம், 1923. 741
இந்திய வாணிகக் கப்பல்கள் சட்டம், 1923 .. 758
தமிழ்நாடு சூதாட்டச் சட்டம், 1930 763
அபாயகரமான மருந்துச் சரக்குகள் சட்டம், 1930. 771
அபாயகரமான மருந்துச் சரக்குகள் (இறக்குமதியும் ஏற்றுமதியும்) ஒரு வண்டியிலிருந்து மாற்றுதலுக்குமான விதிகள், 1933. 788
தமிழ்நாடு உற்பத்தி செய்யப்பட்ட மருந்துச் சரக்குகள் விதிகள், 1932. 800
தயாரிக்கப்பட்ட மருந்துச் சரக்குகள் மத்திய அரசு விதிகள், 1934. 804
மத்திய (Charas) சாராஸ் (தரைவழி இறக்குமதி) விதிகள், 1935. 806
தமிழ்நாடு பரத்தமைத் தடுப்புச் சட்டம், 1930 .. 810

| இ | பக்கம். |
|---|---|
| கடல் கழிம் த்தமைத் தொழில் தடுப்பு விதிகள், | 823 |
| மிழ்நாடு மோட்டார் ஊர்திகள் வரி விதிப்புச் சட்டம் 1931-இன் கீழ் கட்டளைகள். | 825 |
| மிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (1932) சட்டத்தின் கீழ் விதிகள். | 833 |
| தயிலை மாவட்டங்கள் தொழிலாளர் குடிபெயர்தல் (1932) சட்டத்தின்கீழ் விதிகள். | 837 |
| இந்திய வான் தந்திச் சட்டம், 1933 .. .. | 841 |
| இந்திய வான் தந்தி (வைத்திருத்தல்) விதிகள், 1933. | 845 |
| இந்திய ஆகாய விமானச் சட்டம், 1934 .. .. | 848 |
| இந்திய ஆகாய விமான விதிகள், 1937 .. .. | 849 |
| ஆகாய விமானங்களுக்கு நேரும் விபத்துக்களை ஆய்வு செய்வதில் உள்ளூர் அதிகாரிகளுக்கு வழிகாட்டலான அறிவுரைகளின் குறிப்புகள். | 892 |
| ஆகாய விமான ஆட்களுக்கு 1931 ஆம் ஆண்டு 3 ஆம் எண் அறிவிப்பு. | 892 |
| பட்ரோலியம் (நில எண்ணெய்ச்) சட்டம், 1934. | 901 |
| பட்ரோலிய விதிகள், 1937 .. .. .. | 914 |
| ந்தியாவில் கால்சியம் கார்பைனட் இறக்குமதி செய்தல், இருப்பு (கைவசம்) வைத்திருத்தல் முதலியவைகளை ஒழுங்குபடுத்தும் விதிகள், 1937. | 984 |
| ல்சியம் பாஸ்பைடை இறக்குமதி செய்தல், இருப்பு (கைவசம்) வைத்திருத்தல் முதலியவைகளை ஒழுங்குபடுத்தும் விதிகள். | 1003 |
| றயமான தகவல்களைப் பாதுகாத்தல் தமிழ்நாடு காவல்துறைத் தலைவர், காவல் ஆணையர் ஆகியோரின் செயற் கட்டளைகள். | 1004 |
| மிழ்நாடு குற்றவாளிகள் (நன்னடத்தைக் கண் காணிப்புச்) சட்டம், 1937. | 1011 |
| ண்டாமை (குற்றங்கள்) சட்டம், 1955 .. .. | 1020 |
| வில் தகுதிக் குறைகள் (நீக்கப்படல்) சட்டம் 1938 ஆம் ஆண்டு XXI ஆம் சட்டம். | 1032 |
| மிழ்நாடு மோட்டார் சாராவி விற்பனை வரி விதிப்புச் சட்டமும் விதிகளும், 1939. | 1045 |
| மிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டம், 1939 .. | 1047 |
| நாடு பொது உடல் நலச் சட்டம், 1939 .. | 1051 |
| ழ்நாடு யாத்திரிகர்கள் சாலைச் சுங்கங்கள் (ஊர் களும் விலங்குகளும்) விதிகள், 1939. | 1054 |

புக்கம்.


தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1939 .. 1058

தமிழ்நாடு கோமாரிச் சட்டம், 1940 .. .. 1060

தமிழ்நாடு கோமாரி (தொற்று நோய் ஒதுக்கிடம்) விதிகள், 1944. 1073

தமிழ்நாடு கால்நடை முன்னேற்றச் சட்டம் (1940 ஆம் ஆண்டு XV சட்டமும் அதன்கீழ் விதிகளும்.) 1074

ரயில்வே சரக்குகள் (சட்ட விரோதமாக கைவசம் வைத்திருப்பது) அவசரச் சட்டம், 1944. 1077

மத்திய ஆயத் தீர்வை உப்புச் சட்டம், 1944 .. 1078

அயல் நாட்டார் சட்டம், 1946 .. .. .. 1110

தமிழ்நாடு குற்றவாளிகளின் (நன்னடத்தைக் கண் காணிப்பு) விதிகள், 1947. 1125

லஞ்சம் (ஊழல்) தடுப்புச் சட்டம் (1947 ஆம் ஆண்டு 11 ஆம் சட்டம்). 1136

தமிழ்நாடு கோயில் நுழைவிற்கு அதிகாரமளித்தல் சட்டம் (1947 ஆம் ஆண்டு V ஆம் சட்டம்). 1143

தமிழ்நாடு வழக்கமாய்க் குற்றம் செய்பவர்களைக் கட்டுப்படுத்தும் சட்டம் (1948 ஆம் ஆண்டு VI ஆம் சட்டம்). 1148

குற்றவாளிகளை அறிவிக்கை செய்தலும் அவர்கள் நடமாடுவதில் கட்டுப்பாடுகளும். 1149

தமிழ்நாடு வழக்கமாய்க் குற்றம் செய்பவர் கட்டுப்பாட்டு விதிகள், 1949. 1159

தமிழ்நாடு கலகங்களை அடக்கும் சட்டம் (1948 ஆம் ஆண்டு III ஆம் சட்டம்). 1184

வெடிப் பொருள்கள் (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் (1949 ஆம் ஆண்டு LV ஆம் சட்டம்). 1186

சின்னங்களும் பெயர்களும் (தவறாகப் பயன்படுத்தப் படுவதைத் தடுத்தல்) சட்டம்) 1950 ஆம் ஆண்டு XII ஆம் சட்டம்). 118

விமானப்படை சட்டம்) 1950 ஆம் ஆண்டு XLY ஆம் சட்டம்). 11

# உடை, தளவாடம் ஒழுங்குமுறை விதிகள்.

## அத்தியாயம் I.

### உடை, தளவாடங்கள் பற்றிய விவரங்கள்.

### இந்தியக் காவல் பணியாளர் தொகுதி.

**இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (சீருடை) விதிகள், 1954.**
**இந்தியக் காவல் பணியாளர் தொகுதி ( I.P.S. ).**

(1) இந்தியக் காவல் பணியாளர் தொகுதியிலுள்ள எல்லா அலுவலர்களும் அணிய வேண்டிய சீருடை பற்றி மத்திய அரசு வெளியிட்ட ஒழுங்குமுறை விதிகள் கீழே தரப்பட்டுள்ளன :—

இந்திய அரசின் உள்துறை அமைச்சகத்தின், டில்லி, 1954, செப்டம்பர் 14 ஆம் தேதியிட்ட அறிவிக்கை மீண்டும் கீழே வெளியிடப்பட்டுள்ளது.

எண் 13/2(54- A.I.S. (ii) அனைத்து இந்தியப் பணியாளர் தொகுதி 1951 ஆம் ஆண்டுச் சட்டம் (1951 இன் LXI மூன்றுவது பிரிவின் முதல் உட்பிரிவின்படி அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கங்களைக் கலந்து ஆராய்ந்து பின் வரும் விதிகளை அமைத்துள்ளது; அதாவது

1. சுருக்கத் தலைப்பு.—இவ் விதிகள் இந்தியக் காவல் பணி (சீருடை) விதிகள், 1954 என அழைக்கப்படும்.

2. வரையறைகள்.—இவ்விதிகளில் குறிப்பிட்ட சந்தர்ப்பத்திற்கு வேறு முறையாகத் தேவைப்படாதவரையில்—

(அ) பணியிலுள்ள ஒரு உறுப்பினரைக் குறிக்கும் கையில் அரசாங்கம் என்பது அந்த உறுப்பினர் சேர்ந்துள்ள பணி அமைப்பிற்குரிய மாநில அரசாங்கம் என்று பொருள்படும்.

(ஆ) பணியாளர் தொகுதி என்பது இந்தியக் காவல் பணியாளர் தொகுதி என்று பொருள்படும்.

சீருடையின் விவரம் :

3. இந்தியக் காவல் பணியார் தொகுதியிலுள்ள உறுப்பினர் அணிய வேண்டிய சீருடை, 6 ஆவது விதியின் ஏற்பாட்டுக்கு

உட்பட்டு இவ் விதிகளின் அட்டவணைகளில் குறிப்பிட்டுள்ளவாறு இருக்க வேண்டும். (இனி இது சீருடை என்று குறிக்கப்படும்).

ஆயினும், இவ் விதிகள் நடைமுறைக்கு வருவதற்கு முன்பே ஒருவர் பணியாளர் தொகுதியின் உறுப்பினரா. இருந்தால் அத்தகைய தொடக்கக் காலத்தில் இதைப் போன்று அவர் உபயோகத்தில் உள்ள சீருடைத் தளவாடங்களில் யாதேனும் ஒன்று கிழிந்து போதல், அல்லது சீருடையைப் பேணி வைத்துக் கொள்ள அடுத்த உதவித் தொகையைப் பெறுதல், இவற்றுள் எது முன் நிகழுமோ அதுவரை அவர் தாமாகவே சீருடைக்கான பொருள் எதனையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதில்லை.

சீருடை உதவித் தொகை :

சீருடையின் விலைக்காகவும் அதனைப் பேணி வைத்துக்கொள் வதற்காகவும் பணியாளர் தொகுதியின் ஒவ்வொரு உறுப்பினரும், பணியில் அமர்த்தப்பட்டதிலிருந்து அரசாங்கத்தினிடமிருந்து தொடக்க உதவித் தொகையாக ரூபாய் ஆயிரமும், பின்னர் ஒவ் வொரு ஐந்தாண்டு காலத்திற்குப் பிறகும் புதுப்பிக்கும் உதவித் தொகையாக ரூபாய் ஐந்நூறும் பெறத் தகுதியுள்ளவராகிறார்.

ஆயினும், பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் உதவித் தொகை பெறுதற்குரிய தேதியிலிருந்து இரண்டாண்டுகளுக்குள் ஓய்வு பெற வேண்டியிருந்தால், அவருக்கு இத்தகைய எந்த உதவித் தொகையையும் கொடாது அரசினர் நிறுத்தி வைக்கலாம்.

மற்றும், மாநிலக் காவல் பணி அலுவலர் ஒருவர், ஒரு பணியில் அமர்த்தப்பட்டிருந்து அவ்வலுவலரின் சீருடையின் போதிய அளவு அதிக எண்ணிக்கையுள்ள பொருள்கள், பணியிலுள்ள உறுப் பினர்களுக்கு இவ்விதிகளின் கீழ் வரையறை செய்யப்பட்ட வற்றோடு ஒத்திருக்கின்றன என்று அரசினர் சான்று அளித்தால், அந்த அலுவலர் வேலைக்கு அமர்த்தப்பட்டவுடன், இவ்விதியின் கீழ் அனுமதிக்கப்பட்ட சீருடை உதவித் தொகைக்கும், மாநிலக் காவல் பணித் தொகுதி அலுவலராக அவர் கடைசியாகப் பெற்று வந்த சீருடை உதவித் தொகைக்கும் உள்ள வித்தியாசத்துக்குச் சமமான தொகையைப் பெறுதற்கு உரியவராவார். அவருக்கு அடுத்த உதவித் தொகைக்கான ஐந்தாண்டுக் கால அளவு, அவர் அத்தகைய அலுவலராகக் கடைசிச் சீருடை உதவித் தொகை பெற்ற தேதியிலிருந்து கணக்கிடப்படும்.

2) எப்பொழுதாயினும் மத்திய அரசு மாநில அரசுகளைக் கொண்டு இந்த விதிப்படி ஏற்கத்தக்க சீருடை உதவித் சுழின் அளவை மாற்றலாம்.

ரக்கும் சேணத்திற்குமான உதவித் தொகை :

். (1) பணியிலிருக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் வேலையில் அமர்த்தப்பட்டவுடனும் அதன் பின்னர் ஒவ்வொரு ஏழாண்டு இடையிட்ட காலத்திலும் அவர் ஒரு குதிரையைப் பேணி வைத்துக் கொள்ளவோ அல்லது இருக்கும் குதிரையைத் தொடர்ந்து பேணி ை ந்துக்கொள்ளவோ வேண்டுமென அரசினர் கருதினால் குதிரையும் குதிரைச் சேணமுமாகிய இவற்றின் விலைக்காக ஆயிரத்து இருநூறு ரூபாய்க்கு மேற்படாத உதவித் தொகையைப் பெறுவதற்கு உரியவராவார்.

ஆனால்,

(அ) பணியிலிருக்கும் உறுப்பினர், தாம் அவ்வாறு ஒரு குதிரையை வைத்துப் பராமரித்து வருவதாகவும் சாதாரணமாக கடந்த ஏழாண்டுகளாகப் பராமரித்து வந்திருப்பதாகவும் சான்று அளித்தாலன்றி அத்தகைய உதவித் தொகை மீண்டும் புதிதாகக் கொடுக்கப்பட வேண்டியதில்லை.

(ஆ) உதவித் தொகைக்குரிய தேதியிலிருந்து ஐந்தாண்டுகட்குள் ஓய்வு பெறுதற்குரிய பணியிலிருக்கும் உறுப்பினர் ஒருவருக்கு, அத்தகைய உதவித் தொகையைக் கொடுக்காமல் ரசினர் நிறுத்தி வைக்கலாம்.

(2) வைத்துப் பராமரிக்கப்படும் குதிரையின் உயரம் 14.2 கபிடிக்குக் குறைவாக இருக்கக் கூடாது.

(3) உள்விதி (1) இன் படி உதவித் தொகை பெற்றுப் பணி ருக்கும் உறுப்பினர் அரசாங்கத்தின், முன்அனுமதியின்றி ரையை வேறொருவரிடம் ஒப்புவிக்கவோ, விற்கவோ அல்லது டமானம் வைக்கவோ கூடாது.

(4) உள்விதி (1) இன் படி உதவித் தொகை பெற்று குதிரை த்துப் பராமரித்து வரும் பணியிலிருக்கும் ஒவ்வொரு உறுப் ரும் தம் சொந்தச் செலவில் குதிரையை ஈட்டுறுதி (இன்ஷ்யூர்) திருக்க வேண்டும்.

பணி உடையில் சிறு மாற்றங்கள் :

6. முறைப்படி அமையாத வேலைகளில் ஈடுபடும்போது பணியிலிருக்கும் உறுப்பினர் அணிய வேண்டிய பணி உடையில் மத்திய அரசுத் தொடர்புள்ள மாநில அரசாங்கத்தைக் கலந்து அவ்வப்பொழுது உள்ளூர் சூழ்நிலைகளுக்கேற்றவாறு அதற்குரிய சிறு மாற்றங்களைச் செய்யலாம்.

உரை விளக்கம் :

7. இந்த விதிகளின் உரை விளக்கம் பற்றி ஏதேனும் வினா எழுமாயின் அதனை மத்திய அரசுக்குத் தெரிவித்து அதில் அவர்கள் கூறும் முடிவே இறுதியானதாகும்.

நீக்கலும் காத்தலும் :

8. இவ் விதிகள் உடனடியாகச் செயல்படத் தொடங்குவதற்கு முன்னர் இவற்றிற்குத் தொடர்பாக நடைமுறையிலிருந்த எவையேனும் விதிகள் இதனால் நீக்கப்படுகின்றன.

ஆயினும் அவ்வாறு நீக்கப்பட்ட விதிகளின் கீழ் இடப்பட்ட ஆணை அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாதேனும் இவ்விதிகளின் தொடர்புள்ள ஏற்பாட்டின் கீழ் இடப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும்.

அட்டவணை.

அணி வகுப்புக் காட்சி :

இதில், அலுவலர்கள் குதிரை ஏற்றப் பணியில் இல்லாதபோது உச்சித் தொப்பி, மேல் சட்டை, ஊதா குழலும் கயிறும், மேல் சட்டையின் நிறத்திற்கேற்ற கால்சட்டை, தவிட்டு நிற கணுக்கால் பூட்சுகள், செருப்புகள், காக்கிச் சட்டை, நீல நிறக் கழுத்துக் கச்சை (டை), காக்கிப் பாதவுறைகள், பழுப்பு நிற சாம் வார்ப்பட்டை, மற்றும் வாள், பதக்கங்கள், அலங்காரப் பொருட்கள் இவற்றை அணிந்து கொள்வதும்; குதிரை ஏற்றப் பணியிலிருக்கும் போது உச்சித் தொப்பி, மேற்சட்டை, ஊதாகுழலும் கயிறும், முழங்காற் சட்டைகள், ராணுவ பூட்சுகள், குதிமுள் (Spurs) காக்கிச் சட்டைகள், நீல நிறக் கழுத்துக் கச்சை, காக்கிப் பாதவுறைகள், பழுப்பு நிற சாம் வார்ப்பட்டை, வாள், பதக்கங்கள் அலங்காரப் பொருட்கள் இவற்றை அணிந்துகொள்வதும் ஆகும்.

குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் அல்லது சீரிய பெருமக்கள் இவர்களின் அரசாங்க வருகைகள், புறப்பாடுகள் ஆகிய இக் காலங்களில் அளிக்கப்படும் மரியாதை அணி வகுப்புகள் போன்ற எல்லா அரசாங்கக் கொண்டாட்டங்களிலும், கொண்டாட்ட அணி வகுப்புகளிலும் அல்லது முழு ஆடையும் அணிய ஆணையிடும் காலங்களிலும் இவை அணியப்பட வேண்டும்.

பணி உடை :

2. உச்சித் தொப்பி, மேற்சட்டை, ஊதுகுழலும் கயிறும், காற்சட்டைகள், செருப்புகள், கணுக்கால் பூட்சுகள், காக்கிப் பாதவுறைகள், காக்கிச் சட்டை, நீல நிறக் கழுத்துக் கர்சை, மேற்சட்டைத் துணி போன்ற அதே மாதிரித் துணியிலான வார்ப்பட்டை அல்லது சுழல்கைத்துப்பாக்கி எடுத்துச் செல்லும்போது அணிந்து கொள்ளும் பழுப்பு நிற சாம் வார்ப்பட்டை நாடா ஆகியவை பணி உடையாகும்.

ஓர் அலுவலர் முறைப்படி அமையாத உடையைப் பயன்படுத்த அனுமதிக்கப்பட்டபொழுது தவிர, கடமைப் பணியாற்றும் மற்ற எல்லாக் காலங்களிலும் கூட்டம் நடக்கும்பொழுது அல்லது வழிக் காவல் செய்யும்பொழுது அல்லது குடியரசுத் தலைவர், ஆளுநர் அல்லது சீரிய பெருமக்கள் சொந்த வருகையின் போதும புறப்படும போதும் சாலை வழியைத் தடங்கலில்லாது காக்கும்போதும் இந்த உடை அணியப்பட வேண்டும்.

வழிக் காவல் செய்யும்போது அல்லது சாலை வழியைத் தடங்கலின்றிக் காக்கும்போதும் மட்டும் சுழல் கைத் துப்பாக்கியை அணிந்து கொள்ள வேண்டும்.

முறைப்படி அமையாத (சாதா) உடை.

3. உச்சித் தொப்பி அல்லது ராணுவ சாதா தொப்பி, சட்டை மற்றும் பழுப்பு நிற சாம் வார்ப்பட்டை அல்லது துணி வார்ப்பட்டையோடு புஷ் சட்டை பாதவுறை அல்லது காலுறைகள், அரைக் காற்சட்டைகள் அல்லது காற்சட்டைகள் மற்றும் செருப்பு அல்லது கணுக்கால் பூட்சும் சாதா உடை ஆகும். முறையான எவ்வித சந்தர்ப்பங்களிலும் இவ்வுடையை அணியக் கூடாது அலுவலகங்களிலும் ஆய்வுகளிலும், ஆலோசனைக் கூட்டங்களிலும், கூட்டங்களிலும், நீதிமன்றங்களில் சாட்சி கூறத் தோன்றும் போதும், சுற்றுப் பயணங்களிலும் மற்றும் சாதாரண அணி வகுப்புகளிலும் இந்த உடையை அணியலாம்.

அன்ரக் காற்சட்டைகள் அணியும்போது கணுக்கால் ட (Hosetop) கால்மேசு, பூட்சு இவற்றை அணி வகுப்பி அணிய வேண்டும். காலுறைகள், செருப்பு இவற்ை காலங்களில் அணிந்து கொள்ளலாம்.

கலகம், கூட்டுக் கொள்ளை ஆகியவை நடக்கும் காலங் இதுபோன்ற ஏனைய பணியாற்றுங் காலங்களிலும் மு அமையாத உடையை அணியும்போது மங்கிய கரு நீலப் நூலால் பூ வேலைப்பாட்டுடன் கூடிய வரிசைக்குரிய வில் அணியலாம்.

**தலை உடை.**

4. உச்சித் தொப்பிகள், காக்கிப் பருத்திக் கம்பளித் (காபர்டின்) (காக்கி என்று சொல்லப்படும்போது நூற் விகான் எண் 1 நிறத்தைக் குறிக்கும்) மொத்த உயரம் 4½"; சுற்றளவில் பொருந்தக்கூடிய தொப்பிக்கு குறுக்கு வி 10-3/8" ; மேற்கூறப்பட்ட இந்த நிலை அளவுக்குத் தொப்பி, த அளவில் சற்று மேலாக அல்லது கீழாக வேறுபடுமாறு உச்சி சுற்றளவின் ஒவ்வொரு ¼ அங்குலத்துக்கும் விட்டத் அங்குலம் பெரிதாகவோ அல்லது சிறிதாகவோ இருக்க வே எடுத்துக்காட்டாக சுற்றளவில் 22¼" உள்ள ஒரு தொப்பிக்கு யில் குறுக்கு விட்டம் 10 5/8" ஆகவும் 21" சுற்றளவு உள்ள தொப்பிக்கு விட்டம் 10" ஆகவும் இருக்க வேண்டும். பக்கங் நான்கு துண்டங்களாகச் செய்யப்பட்டு, சுற்று வரிப் பட்டைக இடையே 2 1/8" உயரம் இருக்க வேண்டும். முன்பக்கத்தி பட்டையின் மத்தியில் வெள்ளியாலான இந்தியக் காவல் மாதிரிச் சின்னங்கள் அணியப்பட வேண்டும். தொப்பி உயரமான விரைப்புள்ள தோல் அல்லது வேறு பொருளால பட்டையின் மேல் அமைக்கப்பட்டிருக்க வேண்டும். 3/8" முள்ள பழுப்புத் தோலாலான மோவாய்ப்பட்டை உச்சி மூலை மூலைகளின் பின்புறத்துக்கருகில் வைக்கப்பட்டுள்ள இந் காவல் பணி அடையாளமாகிய இரண்டு கழுத்துப் பட் பித்தான்களோடு சேர்த்துப் பித்தானிடப்பட வேண்டும்.

அலுவலர்கள் உச்சித் தொப்பிக்குப் பதிலாக தலைப் அல்லது காக்கிப் பட்டு அல்லது மஸ்லின் அணியலாம். துறை துணைத் தலைவர் தகுதியிலும் அதற்கு மேலும் உள்ளவ அவர்கள் தகுதிக்கு ஏற்ற வில்லையோடு கரு நீலப் பட்டை ஒ யும் அணிவார்கள்.

அரசாங்கச் சின்னமும், இரண்டு நட்சத்திரங்களும் அணிய உரிமையுள்ளவர்கள், இந்திய அரசுப் புலனாய்வுக் குழுவின் இயக்குநர், காவல் துறைத் தலைவர், புலனாய்வுக் குழுவின் துணை இயக்குநர்கள், காவல் துறை ஆணையர்கள், காவல் துறையின் துணைத் தலைவர், காவல் துறை துணை ஆணையர்கள் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோராவார்கள்

வெள்ளிப் பூ வேலை செய்யப்பட்ட இந்தியக் காவல் பணிச் சின்னத்தோடு சுற்று அடிப்பட்டைகள் இரண்டிற்கு இடையே வைக்கப்பட்டுள்ள ஒரு கரு நீல நிறக் கம்பளிப் பட்டையை அணிவார்கள். முகப்புப் பட்டைக் கருப்புத் தோலால் ஆகியது. நீல நிறப் பட்டையினையும் பூ வேலை செய்யப்பட்ட சின்னத்தையும் தங்கள் உச்சித் தொப்பிகளில் அணிய உரிமை பெற்ற தகுதியுள்ள அலுவலர்கள் தலைப்பாகையை அணிந்தால் அதுபோன்ற நீலப் பட்டையினையும் பூ வேலை செய்யப்பட்ட சின்னத்தையும் தலைப் பாகையில் அணிவர்.

### மேற்சட்டை.

5. இது, காக்கி டிரில் (வெப்பக் காலத்தில்) மற்றும் கம்பளித் துணி (குளிர் காலத்தில்) ஆகியவற்றில் ஒரு மார்புடையதாக, இடுப்பு ஓய்வுக் கோட்டு போன்று வெட்டப்பட்டு, மார்பிலும் தோள்களிலும் மிகுந்த தொளதொளப்புடையதாக ஆனால் இடுப் பில் இறுக்கமாக, கீழ் முனையில் பட்டாளச் சட்டை போன்று இருக் கும். இடுப்பின் ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு வெள்ளி தகடிட்ட கொக்கி இருக்கும். நீளம் சாதாரண சிவிலியன் ஓய்வுக் கோட்டுப் போன்ற அதாவது உட்காருமிடத்தை மூடுமளவு இருக்கும். கழுத்துப் பட்டை (Coller) சாதாரண சிவிலியன் ஓய்வுக் கோட்டில் இருப்பது போன்றே வெட்டப்பட வேண்டும். 6½" அகலமும் மூடியின் உச்சிவரை 7½" உயரமும் குறுக்கு ஒட்டுகளுமுள்ள இரண்டு மார்புப் பைகள் நடுவில் 2¼" பெட்டி மடிப்புடன் தலைப்பில் ஒரு சிறிய காவல் பணி அடையாளப் பித்தானோடு பொருத்தப்பட்டிருக்கும். மூடி 2¼" உயரமுடையதாகவும் 6½" அகலமுடையதாகவும் பித்தான் துளையுடன் பைகளை மூடத் தக்க வாறிருக்கும். இடுப்புக்குக் கீழே தலைப்பில் 9¼" அகலமுடைய தாகவும் அடியில் 10½" அகலமுடையதாகவும் பையின் உச்சி வரை 8" உயரமுடையதாகவும் (ஓரங்களில் மடிப்புடன் கூடிய) இரண்டு விரிவடையும் பைகள் தலைப்பில் இந்தியக் காவல் பணி அடையாளப் பித்தானோடு மூடியுடன் தைக்கப்பட்டிருக்கும். மூடி,

பித்தான் துளையோடு பைகளை மூடுவதற்கேற்றவாறு 3½" உயரமும் 10¾" அகலமும் உடையதாய் பையின் மேற்பகுதியை அவசிய மானால் அகலப்படுத்துவதற்கு ஏற்ற முறையில் பையின் தலைப்பு அதன் மூலைகளில் தைக்கப்பட்டிருக்கும். நடுத்தர இந்தியக் காவல் பணி அடையாளப் பித்தான்கள் நான்கு சட்டையின் முற்பகுதியின் கீழ் இருக்கும். அடிப் பித்தான் கொப்பூழ் இருக்குமிடத்திலும் மேல் பித்தான் கொப்பூழிலிருந்து கழுத்துக் கச்சை முடிச்சுப் போடும் இடத்திற்குமிடையே ¾" இடைவெளி இருக்குமாறு பொருத்தப்பட வேண்டும். சட்டையின் கூர்மையான முன்கை முனையில் 5" உயரமும் பின்புறத்தில் 2½" உயரமும் உள்ளதாக இருக்கும். தோள் வார்ப்பட்டைகள், உடை தைக்கப்பட்டிருக்கும் அதே துணியில் இந்தியக் காவல் பணி அடையாளச் சிறிய பித்தானுடன் தைக்கப்பட்டிருக்கும். மேற்சட்டை மென்மையான அல்லது பாதி விரைப்புள்ள கழுத்துப் பட்டையோடு கூடிய சட்டையுடனும் கரு நீல நிற மாலுமி முடிச்சுக் கழுத்துக் கச்சை யுடனும் அணியப்பட வேண்டும்.

**காற்சட்டைகள்.**

6. மேற்சட்டைக்கு ஈடாக காக்கி (பருத்திக் கம்பளித் துணி) காபெர்டைன் அல்லது காக்கி டிரில்லில் மேல்மடித்தல் இல்லாமல் மேற்காலிலிருந்து குதிகால் வரை வாகு செய்து அடிப்பாகம் 18" முதல் 19" வரை அகலமாக இருக்க வேண்டும்.

**முழங்கால் சட்டை (Breeches) பெட்போர்டு மாதிரி.**

7. காக்கி டிரில் சிற்றங்கி (டியூனிக்)யோடு காக்கிப் பருத்தி நூல் கயிறும்; காக்கிப் பருத்திக் கம்பளித் துணிச் சிற்றங்கியோடு (காபெர்டைன் டியூனிக்) காக்கிக் கம்பளிக் கயிறும் அணிய வேண்டும்.

**(கணுக்கால்) பூட்சு.**

8. சாதாரண விரல் மூடிகளோடும் ஒன்பது ஜோடி துவாரங் களுடன் சாதா பழுப்புத் தோலில் கணுக்கால் வரை இருக்க வேண்டும்.

**ஜோடு (Shses)**

9. சாதாரண விரல் மூடிகளோடும் ஐந்து ஜோடி துவாரங் களுடன் (ஐலெட்) சாதா பழுப்பு நிறத் தோலில் டெர்பி ஜோடி களாக இருக்க வேண்டும்.

ராணுவ பூட்சு :

10. மென்மையான பழுப்புத் தோல், தலைப்பிலிருந்து நான்கு முதல் ஆறு அங்குலத்திற்கு கால்கள் விறைப்பாக்கப்பட்டு, முன் புறத்தில் கயிறு (லேஸ்) பொருத்தப்பட்டு, ஒன்பது ஜதைத் துளை களுடன், பழுப்புத் தோலாலான கால் பட்டையுடன் (Garters) காலின்மேல் தலைப்பில் கட்டும் வசதி இல்லாமலும், விரல் மூடிகள் இல்லாமலும் இருக்கும். பூட்சை சரியாக வைப்பதற்காக பின் தலைப்பில் உள்ள ஒரு பட்டை, ஒரு சுருக்குக் கயிறோடு பொருத்தப் பட்டிருக்கும்.

தார்க்குச்சி (குதிரை ஏற்றப் பணியில் இருக்கும்போது மட்டும்) :

11. ஓட்டுவதற்கு இலேசானதாக, பழுப்பு நிறந் தோல் பட்டையும் தலைப்புற மூடியும், தோல் பட்டைக்குக் கீழே பழுப்பு நிறத் தோலும் கூடியதாக இருக்கும்.

இடுப்புக் கச்சை :

12. பட்டாள ஒழுங்குமுறைப்படி சாம் பழுப்பு நிறத்தில் வெள்ளி வளையப் பதிப்புக்களுடன் இருக்கும் ரிவால்வர் எடுத்துச் செல்லாமல் வேலை செய்யும் உடையில் இருக்குங் காலங்களில் மேற் சட்டை போன்ற அதே துணியில் வெள்ளி வளையம் பதிக்கப்பெற்ற இடுப்புக் கச்சையை அணிய வேண்டும்.

வாள் :

13. காலாட்படைக்கு உள்ள மாதிரியில் அரைக் கூடை வடிவப் பிடியுடன் வெள்ளை உலோகத்தால் செய்யப்பட்டு "I.P.S." என்ற எழுத்துக்களோடு அரசாங்கச் சின்னமும் பொறிக்கப்பட்டிருக்கும்.

வாள் முடிச்சு :

14. பழுப்பு நிறத் தோலில் 'அகார்னுடன்' (Acorn) கூடியது.

வாள் உறை :

15. காலாட்படைக்குள்ள மாதிரியில் பழுப்பு நிறத் தோலால் ஆகியது.

ஊதல் :

16. காவல் துறைக்குரிய ஊதல் மாதிரி ஒரு கரு நீல இணைப்புக் கயிறுடன் வட்ட முடிச்சிட்டு இடது மார்புப் பைக்குள் வைத்து அணிந்து கொள்ள வேண்டும்.

வரிசை மதிப்பு வில்லைகள் :

17. வெள்ளி உலோகத்தாலாகியது. அரசாங்கச் ... 1-5/32"-க்கு ¾" அளவில் இருக்கும். நட்சத்திரங்கள் ... நட்சத்திர மாதிரியாக (ஐந்து முனைகளுடன்) ஓரங்குல அக... இருக்க வேண்டும். புலனாய்வுக் குழுவின் துணை இயக்கு... காவல் துறை ஆணையர்கள் மற்றும் காவல் துறை துணைத் ... ஆகியோர், தோள் பட்டையில் சம கோண முக்கோண வடி... முனை மேலே இருக்குமாறு வில்லைகளில் மூன்று நட்சத்தி... அணிய வேண்டும். நட்சத்திரங்கள் நடுவில் எந்தப் பூ... மின்றிச் சற்று சொரசொரப்பாக இருக்கும். உடைவாளும், ... தடியும் வாளின் முனை முன்புறத்தில் இருக்குமாறும் வாளின்... பாகம் கைக்கு வெளிப்புறமோ அல்லது உட்புறமோ இருக்குமா... உடைவாளையும் குறுந்தடியையும் அணிதல் வேண்டும். ... 1-7/8", குறுந்தடி 1-¾" இருக்க வேண்டும்.

கலகங்களின்போதும், கொள்ளைக் கூட்டங்களைப் பிடிக்... போதும் அவை போன்ற வேறு பணியாற்றுங் காலங்களி... சாதாரண வேலைக்குரிய ஆடைகளை அணியும்போது கருநீலப்... நூலால் பூ வேலை செய்யப்பட்ட வரிசை வில்லைகளை அ... வேண்டும்.

| | |
|---|---|
| (அ) இயக்குநர், புலனாய்வுக் குழு | குறுக்கு வாளும் குறுந்த... அரசாங்கச் சின்னமும். |
| (ஆ) காவல் துறைத் தலைவர். | குறுக்கு வாளும் குறுந்தடி... ஒரு நட்சத்திரமும். |
| (இ) துணை இயக்குநர்கள், புலனாய்வுக் குழு, காவல் துறை ஆணையர்களும், காவல் துறைத் துணைத் தலைவர்களும். | அரசாங்கச் சின்னமும் மூன்... நட்சத்திரங்களும். |
| (ஈ) காவல் துறை தேர்வுத் தரத்தில் சேர்ந்தவர்களாய் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சம்பள உயர்வுத் தடையைக் கடந்தவர்களாய் 20 ஆண்டு காலம் பணியில் உள்ள காவல் துறை கண்காணிப்பாளர்களும், துணை ஆணையர்களும் மற்றும் தேர்வுத் தரத்தில் உள்ள காவல் துறைக் கண்காணிப்பாளர்களும். | அரசாங்கச் சின்னமும் இர... நட்சத்திரங்களும். |

| | | |
|---|---|---|
| (உ) | பதினைந்தாண்டுகளுக்கு மேலும் ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாகவும் பணியில் உள்ள காவல் துறை கண்காணிப்பாளர்களும் மற்றும் காவல் துறை துணை ஆணையாளர்களும். | அரசாங்கச் சின்னமும் ஒரு நட்சத்திரமும் |
| (ஊ) | பதிலியாக அல்லது நிலையாக (முதுநிலைச் சம்பள அளவில்) பணி புரியும் பதினைந்தாண்டுகட்குக் குறைவான பணி உடைய மத்திய துணைப் புலனாய்வு அலுவலர்கள் மற்றும் காவல் துறை துணை ஆணையர்கள். | அரசாங்கச் சின்னம். |
| (எ) | (இளநிலைச் சம்பள அளவில்) மத்திய புலனாய்வுத் துணை அலுவலர்கள் மற்றும் புலனாய்வுக் குழுவின் தொழில் நுட்ப அலுவலர்கள் உட்பிரிவுகட்குப் பொறுப்பாகவுள்ள காவல் துறை உதவிக் கண்காணிப்பாளர் அல்லது இதற்கு ஒப்பான பதவி வகிப்பவர்கள் அல்லது அப்பதவியில் ஐந்தாண்டும் அதற்கு மேலும் பணி புரிபவர்கள். | மூன்று நட்சத்திரங்கள். |
| (ஏ) | (i) உட்பிரிவுக்குப் பொறுப்பாக இல்லாமலும். (ii) மேலே (எ) இல் குறிப்பிட்ட பதவிகட்குச் சமமான பதவியில் இல்லாமலும் இரண்டாண்டுகட்குக் குறையாமலும் ஐந்தாண்டுக்குக் குறைவாகவும் பணி புரியும் காவல் துறை உதவி கண்காணிப்பாளர்கள். | இரண்டு நட்சத்திரங்கள். |
| (ஐ) | இரண்டாண்டுகட்குக் குறைவான பணி உடைய காவல் துறை உதவிக் கண்காணிப்பாளர்கள். | ஒரு நட்சத்திரம். |

18. அ முதல் ஏ வரை குறிப்பிடப்பட்டுள்ள பணிச் காலம் என்பது பணித் தொகுதியில் (உண்மையில் பணியாற்றிய அல்லது ஒப்புக்கொண்ட) காலத்தைக் குறிக்கும். நேரடியாகப் போட்டித் தேர்வுகளின் மூலம் வேலையில் அமர்த்தப்பட்டவர்களைப் பொருத்த வரை பணிக் காலம் என்பது பணித் தொகுதியில் உண்மையாகவே பணிபுரிந்த காலம் என்று பொருள்படும். மற்றவற்றில், அதாவது போர்ப்பணி காரணமாக வேலையில் சேர்க்கப்பட்டவர், அவசர கால வேலை நியமனங்களில் புதிதாகச் சேர்க்கப்பட்டவர்கள், அல்லது பணியில் பதவி உயர்வு பெற்றவர்கள், ஆகியவர்களைப் பொருத்த வரை, இச்சொல், பணியில் ஏற்றுக்கொண்ட வேலை அளவைக் குறிக்கும். ஆகையால் அலுவலர்களுக்குப் பணியில் முதுநிலைக் காரணங்களுக்காகக் கொடுக்கப்பட்ட உண்மைக் கால அளவைவிட இக்கால அளவு நீண்டதாயிருக்கும்.

19. ஏதாவது வரிசை வில்லை கொடுப்பது சம்பள ஏற்றமுறைத் தடையோடு தொடர்புடையதாகவிருந்தால் அலுவலர்கள் அந்தத் தடையைக் கடந்திருக்க வேண்டும்.

20. ஒரு அலுவலரால் அணியப்பட்டிருக்கும் வரிசை வில்லை அவர் ஒரு காவல் துறை அலுவலில் நிலையாக அல்லது பதிலியாக உண்மையாகவே பெற்றிருக்கும் வரிசையோடு தொடர்புடையதாக இருக்க வேண்டும். ஒரு காவல் துறைப் பதவி அல்லாத மறு வேலைக்கு அனுப்பப்பட்டிருக்கும் ஒரு இந்தியக் காவல் துறை அலுவலரைப் பொருத்தவரையில் அவர் அணிய வேண்டிய வரிசை வில்லையானது அவர் அத்தகைய மறு வேலைக்கு அனுப்பப்படுவதற்கு முன்னதாகத் தன் சொந்த மாநிலத்தில் நிலையாக அல்லது பதிலியாகத் தாம் பெற்றிருந்த பதவியின் வரிசையோடு தொடர்புள்ளதாக இருக்க வேண்டும். தமது மாநிலத்திற்கு அப்பால் ஒரு உயர்ந்த காவல் துறைப் பதவியில் மறு வேலைக்குச் சென்றிருக்கும் ஒரு இந்தியக் காவல் துறை அலுவலரைப் பொருத்தவரையில் அவர் தமது சொந்த மாநிலத்திற்கு அலுவலகக் கடமை காரணமாகவோ அல்லது பிறவாறோ வரும்போதுங்கூட அந்த உயர் பதவிக்கான வரிசை வில்லையை அவர் அணிந்து கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும்.

21. இந்தியக் காவல் துறைப் பணித் தொகுதியின் உறுப்பினர்கள் அரை அங்குலக் கொட்டை எழுத்துக்களில் I.P.S. என்றுள்ள காவல் துறைக்குரிய வெள்ளி வில்லையை தோள்பட்டையின் அடியில் அணிய வேண்டும்.

வார்ப்பட்டை (பெல்ட்) :

22. வலது பக்கத்தில் ரிவால்வரை அணிந்துகொள்ளும்போது பழுப்பு நிற சாம் வார்ப்பட்டையுடன் இரண்டாவது தோள் பட்டையை அணிந்து கொள்ள வேண்டும்.

சுழல் துப்பாக்கி (ரிவால்வர்) அல்லது (அதிகாரியின் விருப்பத்திற் கேற்ப) தானியங்கி கைத்துப்பாக்கி (பிஸ்டல்) :

23. பழுப்பு நிற கைத்துப்பாக்கி உறையுடனும் தோட்டாப் பையுடனும்.

(சுழல் துப்பாக்கியையும் தோட்டாப் பையையும் அதற்கான குறிப்பிட்ட ஆணைகள் அளிக்கப்பட்டாலன்றி அணி வகுப்புக் காட்சியின்போது அணியக் கூடாது.)

தலைக் கவசம் (Helmet) (சாதா வேலை உடைக்காக) :

24. இது பட்டாளத்துக் காக்கி டெண்ட் கிளப் மாதிரியில் தலை மூடிக்கும் தலைப்பாகைக்குமிடையே காலங்குல அகலத்தில் கரு நீலப் பட்டையொடு ஆறு மடிப்புக் காக்கியாலான தலைப்பாகை யுடன் கூடியதாயிருக்கும். கட்டியவுடன் முழுவதுமாக மூன்றங் குல அகலத்துக்கு மேல் இருக்காது. உலோகத்தால் செய்தது ஏதுமிருக்காது. 3/8" அகலம் பழுப்புத் தோல் பட்டை இருக்கும்.

புஷ் சட்டைகள் :

25. காலாட்படைக்குள்ள மாதிரி காக்கி டிரில், மெல்லிய அல்லது கெட்டி (டுவில்) துணியில் காக்கி நிற எலும்பு பித்தான்களுடன்.

நாடாக்கள் (Gorget patches)

26. அரசாங்கச் சின்னமும் இரண்டு நட்சத்திரங்களும் அணியும் அலுவலர்களும், அரசாங்கச் சின்னமும் மூன்று நட்சத்திரங்களும் அணியும் அலுவலர்களும், நடுவில் வெள்ளிக் கோடிட்ட கம்பளியா லான கருநீல (ஜார்ஜெட் பேட்ச்களை) நாடாக்களை அணிய வேண்டும்.

உயர்ந்த பதவியிலுள்ள சிந்தூர மரத்தின் (ஓக்) வெள்ளி இலை மாதிரியான நடுக் கோடிட்ட அதே மாதிரியான நாடாக்களை (ஜார்ஜெட் பேட்ச்களை) அணிய வேண்டும்.

உள் சட்டை ( Jersey ) :

27. முன்புறத்தில் இரண்டு பித்தான்களையுடைய காக்கிக் கம்பளி பாலானது.

**அரைக்காற் சட்டைகள் ( Shorts ):**

28. இரண்டு நீண்ட துணிப் பட்டைகளுடன் பக்கங்களில் கொக்கிகளுடன் (Buckles) இடுப்புப் பட்டை 2¼" அகலம் இருக்குமாறு கெட்டிக் காக்கித் துணி(டிரில்)யால் ஆகியது.

**சட்டைகள் ( Shirts ):**

29. மெல்லிய அல்லது (டுவில்) கெட்டிக் காக்கித் துணியில் மேற் சட்டை மாதிரியில் இரண்டு மார்ப்புப் பை உள்ளதாக காக்கி நிற எலும்புப் பித்தான்களுடன் இருக்கும்.

**பிடி உள்ளங்கி :**

30. பயிற்சியிலிருக்கும் தகுதிகாண் பருவ அலுவலர்கட்கு அரைக் கைகளுடன் வெள்ளைப் பருத்தி நூல் அல்லது கம்பளி யால் ஆகியது.

**கணுக்கால் பட்டிகள் :**

31. ஃபாக்ஸ் சுருள் ( Fox Shiral ) மாதிரியில் காக்கிக் கம்பளியாயிருக்கும்.

**(கால்மேசு) ( Hos Topes ) முழங்காலுறை :**

32. காக்கிக் கம்பளியாலானது.

**பாதவுறைகள் ( Socks ):**

33. காக்கி நிறப் பருத்தி நூலால் அல்லது கம்பளியால் அல்லது பட்டுப் போன்ற நூலால் ஆகியவை.

**நீண்ட மேஜோடு அல்லது காலுறை ( Stockings ).**

34. காக்கி நிறக் கம்பளியாலானவை.

**மேல் அங்கி ( Over coat ):**

35. நீர் புகாதவாறு அழுத்தமாக நெய்யப்பட்டு வெளிறின பழுப்புக் கலந்த காக்கித் துணியில் முழங்கால் வரை தொடுவதாக இரட்டை மார்புடனிருக்கும். பின்புறத்தில் 18 முதல் 20 அங்குல முள்ள சேணம் மடிப்புடன் கூடிய பட்டை இருக்கும். 2½" அளவுள்ள கீழ் மடிப்புள்ள கழுத்துப் பட்டையும் ( Turn down Collar ) பின்புற மடிப்பும் மார்புப் புறத்தில் பின் மடிப்பும் உள்ளதாகக் கொக்கியும் கண்ணும் கொண்டு இணைக்கத் தகுந்த தாகவும் இருக்கும். ஒவ்வொரு பக்கத்திலும் நான்கு பித்தான்கள் உண்டு. மூன்று பித்தான்கள் பித்தாணிடுவதற்கும் ஒன்று

க்குக்குக் கீழுமாக இருக்கும். மூடியுடைய இரண்டு காலுடைய பைகளும் ஒவ்வொரு பக்கத்திலும் உட்புறத்தில் மார்புப் பையும் இருக்கும். இடதுபுறத்தில் வாள்பட்டை ன்ற சிறு பையும் ஒற்றைத் துணியாலான திருப்பித் தைத்த ன கைகளும் இருக்கும். 4½ அங்குல நீளமுள்ள அதே ணியாலான தோள்பட்டைகள் பித்தான்களால் பொருத்தப் ட்டிருக்கும். வரிசை வில்லைகளும் பித்தான்களும் வெள்ளி லானவை. தொண்டைக்கு நேரேயுள்ள திறந்த பகுதியின் றுக்கே வேண்டும்போது பித்தானிடுவதற்கு ஏற்றவாறு கழுத்து ட்டையில் ஒரு துணி நாடா பொருத்தப்பட்டிருக்கும். கோட்டு வளிறிய பழுப்பு நிறக் கம்பளித் துணியால் உள்ளீடு ( Lining ) சய்யப்பட்டிருக்கும். அது அந்த அலுவலர் பணி புரியும் நிலத்து அரசால் இன்னதென்று குறிப்பிடப்பட்ட துணியாக இருக்கும்.

**கை உறைகள் :**

36. 'டான்' ஒழுங்குமுறை மாதிரியில் வேண்டும்பொழுது அணிய வேண்டும்.

37. இந்தியக் காவல் துறை உறுப்பினர்கள் 1954 ஆம் ஆண்டைய இந்தியக் காவல் துறைப் பணி (ஆள்சேர்ப்பு) விதிகளின் இரண்டாவது விதியின் 'இ' உட்பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ளபடி சின்னம், வில்லைகள், பித்தான்களில் I.P.S. என்ற எழுத்துக் களுக்குப் பதிலாக, I.P. என்ற எழுத்துக்களையே தொடர்ந்து பயன்படுத்தலாம்.

### பிற்சேர்க்கை.

வில்லைகளிலும் பித்தான்களிலும் உபயோகப்படுத்துவதற்கான இந்தியக் காவல் பணி அடையாளம்.



## வில்லைகள்.

| | |
|---|---|
| தொப்பிக்கு | 1-5/8" உயரத்தில் |
| காவலருக்கு | 1¼" உயரத்தில் |

## பித்தான்கள்.

| | |
|---|---|
| குவிந்திருக்கும் வண்ணம் | வார்ப்பு அச்சிட்டு செதுக்கப்பட்டுள்ளது. |
| பெரியது | 40 வரிகள் (Lines) |
| நடுத்தரம் | 30 வரிகள் |
| சிறியது | 24 வரிகள் |
| கார்ஜட் (அடையாளப் பதக்கம்) | 20 வரிகள் |

## இந்தியக் காவல் துறை தோள் வில்லைகள்.

# I. P. S.

நாடாக்களின் (கார்ஜட் பேட்) அளவுகள்.

மேற்சட்டைக்கு.




சட்டைகளுக்கும் புஷ் சட்டைகளுக்கும்.



## (2) தமிழ்நாடு காவல் துறைப் பணி.

*2. தமிழ்நாடு காவல் துறைப் பணி அலுவலர்களுக்கு மாநில அரசு பின்வரும் உடை ஒழுங்குமுறைகளை விதித்திருக்கிறது:—

தமிழ்நாடு காவல் துறை அலுவலர்கள் அணிய வேண்டிய சீருடை பின்வரும் விதி விலக்குகளோடு இந்தியக் காவல் துறைப் பணி அலுவலர்களின் சீருடையோடு முற்றிலும் ஒத்ததாக இருக்க வேண்டும்.

(i) பருத்திக் கம்பளித் துணிக்கும் (காபெர்டைன்) காக்கிக் கம்பளிக் கயிறுக்கும் பதிலாகக் காக்கி டிரில் துணியை உபயோகிக்கலாம்.

(ii) தலை உடை.—பொன் ஜரிகையுடன் பொதுச் சிவப்பான பொது நிறமுடைய எந்தவிதத் தலைப்பாகையையும் துனிகளைத் தொங்கவிடமால் கட்டிவிட வேண்டும்.

ஐரோப்பிய அல்லது ஆங்கிலோ இந்திய அலுவலர்கட்கு இந்தியக் காவல் துறைப் பணி அலுவலர்கட்கு உள்ளது மாதிரியே ஆகும்.

குறிப்பு.—தமிழ்நாடு காவல் துறைப் பணி அலுவலர்கட்கு இந்தியவர்கள் விரும்பினால் இந்தியக் காவல்துறைப் பணி அலுவலர்கட்கு விதிக்கப்பட்ட தலை உடையை அணிவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

(iii) பித்தான்கள்.—" M.P.S. " மேல் பூச்சு உள்ள பித்தான்கள் ஆகும்.

(iv) தலைக் கவசம், உச்சித் தொப்பி, வாள் மற்றும் பிற வற்றிற்கான வில்லைகள் M.P.S. மாதிரியில் இருக்கும். I.P.S. என்ற எழுத்துகட்குப் பதிலாக தோள்பட்டைகளில் M.P.S. என்ற எழுத்துக்கள் இருக்கும்.

†(v) மேற்சட்டை.—இந்தியக் காவல்துறை அலுவலர்கட்கு விதிக்கப்பட்ட அதே மாதிரியில் M.P.S. பித்தான்களுடன்.

(vi) வில்லைகள் ( Badges ).—(அ) உட்கோட்டங்களின் பொறுப்பாகவுள்ள காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் அல்லது அதற்குச் சமமான தகுதியுடையவரான சான்றளிக்கப் பட்ட பிற பதவிகளை உடையவர்கள் அல்லது ஐந்தாண்டும் அதற்கு மேற்பட்டும் பணியில் உள்ளவர்கள்—மூன்று நட்சத்திரங்கள்.

---

*அ. ஆ. எண் 88, நீதி, 23 பிப்ரவரி 1923, 610 நீதி, 30 செப். 1926, மற்றும் நீதி 26 எப்ரல் 1923, மற்றும் 46 பொது காவல் துறை 6 பிப்ரவரி 1936.
†அ. ஆ. எண் 4262, உள்துறை 29 செப். 1950, தேதியிட்டது. உள்துறை குறிப்பாணை எண் 44854—K 49—13 16—1—1950 தேதியிட்டது.

* (ஆ) 5 ஆண்டுகட்குக் குறைவாகவும் 2 ஆண்டுகட்குக் குறையாமலும் பணியில் உள்ள காவல் துறை துணைக் கண்காணிப்பாளர்கள் (i) உட்கோட்டங்களில் பொறுப்பு வகிக்காதவர்களும், (ii) மேலே (அ)இல் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கு ஒப்பான பதவியில் இல்லாதவர்களும்—இரண்டு நட்சத்திரங்கள்.

(இ) இரண்டு ஆண்டுகட்குக் குறைந்த பணியில் பயிற்சியின் கீழ் இருக்கும் காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள்—ஒரு நட்சத்திரம்.

குறிப்பு.—(1) நட்சத்திரங்கள், இந்தியக் காவல் துறைப் பணி அலுவலர்கட்குரிய அதே மாதிரியிலும் அளவிலும் இருக்க வேண்டும்.

(2) கலகங்கள், கொள்ளைகள் நடக்கும் காலங்களும் அவை போன்ற மற்ற வேலைகளிலும் முறையாயமையாத உடை அணியும் போது கருநீலப் பட்டு நூலில் பூ வேலை செய்யப்பட்டுள்ள வரிசைக்குரிய வில்லைகளை அணியலாம்.

## பின் இணைப்பு.

வில்லைகள், பித்தான்கள், வாள் ஆகியவற்றில் உபயோகப் படுத்தும் தமிழ்நாடு காவல் துறை அடையாளம்.



†குறிப்பு.—தொப்பி வில்லை ஒரு இலை வரிசை வளைவுடன் தமிழ்நாடு காவல் துறைப் பணி அலுவலர்களாலும் மலபார் தனிக் காவல் துறையையும் தனிக் காவல் படையையும் சேர்ந்த தளவாய்களாலும் உதவித் தளவாய்களாலும் அணியப்பட வேண்டும்.

---

*உள்துறை பரிந்துறை எண். 130674, காவல் IV.50—12, 6—2—1952 தேதியிட்டது.

†அ. அ. எண். 178, உள்துறை 16 ஜனவரி 1951 தேதியிட்டது;

## (3) அரசிதழ்ப் பதிவு பெற்ற அலுவலர்கட்கு மட்டும் பொருந்தும் துணை அறிவுரைகள்.

3. மத்திய அரசும் மாநில அரசும் வெளியிட்டுள்ள அரசிதழ்ப் பதிவு பெற்ற அலுவலர்கட்குப் பொருந்தும் துணை அறிவுரைகள் கீழே தரப்பட்டுள்ளன :—

*1. (அ) கூடுதலான சுழல் துப்பாக்கி (ரிவால்வர்) அல்லது கைத் துப்பாக்கி (பிஸ்டல்) முதலியன வைத்துக் கொள்ளுதல். இந்தியக் காவல் துறைப் பணி அலுவலர்கள் தங்கள் தளவாடத்தோடு கூடுதலாக ஒரு ரிவால்வர் அல்லது பிஸ்டல் வைத்துக் கொள்ளலாம்.

† (ஆ) அரசிதழ்ப் பதிவு பெற்ற காவல் துறை அலுவலர்கள் தங்கள் தளவாடத்தின் ஒரு பகுதியாக வைத்திருக்கும் சொந்த ரிவால்வர்கள் அல்லது பிஸ்டல்களுக்குத் தோட்டாக்கள் வேண்டுமென்று கேட்டால் குறிப்பிட்ட அளவில் தோட்டாக்களின் விலையை முன்கூட்டியே பெற்றுக்கொண்டு காவல்துறை இருப்புச் சரக்கிலிருந்து கொடுக்கலாம்.

(2) சிறப்பு அணி வகுப்பு மற்றும் பிற சமயங்களில் பதக்கங்களை அணிதல்.

(அ) களப் பணிச்சீருடையோடு இராணுவ அலுவலர்கள் எவ்வப்பொழுது பதக்கங்கள் அணிகிறார்களோ அதுபோன்ற சிறப்பு அணி வகுப்புக் காலங்களில் காவல் துறை அலுவலர்கள் மரியாதை அணி வகுப்பு உடைகளுடன் பதக்கங்களையும் அணி வகைகளையும் அணிதல் வேண்டும்.

(ஆ) பதக்கங்களின் அடிப்பக்கம் மேற்சட்டையின் இடது மார்ப்புப் பையின் பித்தானின் தலைப்போடு வரிசையாக இருக்கும்படி இடது மார்பில் பதக்கங்கள் அணியப்பட வேண்டும்.

(இ) சிறப்பு அணி வகுப்பு இல்லாத மற்றக் காலங்களில் முறையாயமையாத வேலை உடை அணிந்திருக்கும்போது அல்லாமல் பிற காலங்களில், பதக்கங்களின் நாடாக்கள் மட்டும் இடது மார்பில் மேற்சட்டையின் இடது மார்புப் பைக்கு ஓரங்குலம் மேலே அணியப்படவேண்டும்.

---

*அ. ஆ. 2192, நீதிமுறை 26 செப். 1919 மற்றும் 448, நீதிமுறை 28 ஜூன் 26.

†அ. ஆ. சென்னை எண். 347, உள்துறை 31 ஜன. 49 தேதியிட்டது. (P.G. பகுதி 1, 19 மார்ச் 1949 தேதியிட்டது.)

*(4) தமிழ்நாடு காவல் துறைச் சார்நிலைப் பணித் தொகுதி.

வில்லைகளிலும் பித்தான்களிலும் பயன்படுத்த தமிழ்நாடு காவல் துறைச் சின்னமும் இந்திய அரசின் அரசாங்கச் சின்னத்தோடு M. P. சின்னமும்.

4. ஆய்வாளர்கள்.—



பணி உடை.

தலைப்பாகை.—மதுரை சிவப்பு நிறத்தில் ஓரங்குல அகலப் பொன் சரிகையால் அழகு செய்யப்பட்டுத் தொங்கும் முனைகள் இல்லாது அழகாகக் கட்டப்பட்டிருக்கும். இந்துக்களும் முஸ்லீம்களும் அவரவர்களுக்குரிய தனி முறையில் தலைப்பாகையைக் கட்டிக் கொள்ளுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

குறிப்பு.—ஐரோப்பியர் மற்றும் ஆங்கிலோ இந்திய அலுவலர்கள் கூட ஒரே மாதிரி தலை உடையை அணிவார்கள்.

கூம்புக் குல்லா ( Forage cap ).—மூன்று துணி இணைப்புகளோடு நீலத் துணியில் 4¼" மொத்த உயரத்தில் தலைப்பில் ஒரு தொப்பிக்கு 10⅜ அங்குல குறுக்கு விட்டமும், அணியும் இடத்தில் 21¾" சுற்றளவும் உடையதாகவும் இருக்கும். இந்த அளவுக்கு மேலோ அல்லது கீழோ தலையின் அளவில் தலைப்பு விட்டத்தில் 1/8 அங்குலம் விட்டத்தில் பெரிதாகவோ சிறிதாகவோ இருக்கும் உதாரணமாக 22¼" சுற்றளவுள்ள தொப்பிக்குத் தலைப்பில் குறுக்கு விட்டம் 10 5/8 இருக்கும். 21 " சுற்றளவுக்கு விட்டம் 10" இருக்கும். தொப்பியின் பக்கங்கள் நான்கு துண்டுகளாகச் செய்யப்பட்டு இணைப்புகட்கிடையே 2 1/8" உயரம் உள்ளதாக இருக்கும். இரண்டு கீழ்

*அ. ஆ. பலவகை எண். 4953, உள்துறை 27 டிசம்பர் 1957 தேதியிட்டது.

இணைப்புகட்கிடையில் 1¾" அகலமுள்ள கருப்பு அல்கோரா ஆட்டு மயிர்க் கம்பளி (மொகைர்) நூலாலாகிய ஒக் இலேச்சரிகைப் பட்டை அமைக்க வேண்டும். தொப்பியின் முன்புறத்தில் நடுவில் இந்திய அரசாங்கச் சின்னம் நடுவில் அமைக்கப்பட்டு தலைப்பில் Madras Police) / "தமிழ்நாடு காவல்" என்ற சொற்கள் சுற்றிலும் உடைய வெள்ளை உலோகத்தாலான வில்லையை அணிய வேண்டும். 3/8" அகலமுள்ள அசல் கருப்புத் தோலினுலாகிய முகவாய்ப் பட்டையானது, முனைகளில் இரண்டு கறுப்புப் பித்தான்களோடு பொருத்தப்பட்டு சுருங்கி நீளும் வளையத்தோடு கூடியதாக இருக்கும். அசல் கருப்புத் தோலின் முனை 1¾ அங்குல அகல முள்ளதாக 45 பாகை கோணத்தில தொங்கக் கூடியதாக இருக்கும். காக்கி உறையோடு அணிய வேண்டும்.

குறிப்பு.—ஆய்வாளர்கள் தங்கள் விருப்பத்திற்கிணங்க எந்த நேரத்தில் அணிய வேண்டும் என்ற எந்த வித வரையறையுமின்றிக் கூம்புக் குல்லாவை அணியலாம்.

மேற்சட்டை.—காக்கி டிரில்லில் முன்பக்கத்தின் கீழ் நடுத்தர அளவுள்ள முலாம் பூசிய M.P. பித்தான்கள் தைத்திருக்கும். கீழ் பித்தான் இடுப்புப் பட்டையின் கீழ் முனையில் இருக்கும். 2¼" அகலத்தில் இடுப்புப் பட்டையும் விளிம்பும் சட்டையின் கீழ்த் தொங்கலில் ஒவ்வொரு பக்கத்திலும் 4½" உயரத்திற்குத் திறமையாக இருக்கும். சதுரமாக வெட்டப்பட்ட கழுத்துப் பட்டையின் முன்புறத்தில் இரண்டு கொக்கிகள் இருக்கும். 6½" அகலமும் மூடியின் தலைப்பிலிருந்து 7½" உயரமும் உள்ள இரண்டு குறுக்கு வெட்டு மார்புப் பைகள் பித்தான்களுடன் இருக்கும். மூடி நடுவில் 2¼" பெட்டி மடிப்புடன் இருக்கும். இடுப்புக்குக் கீழே ஓரங்களில் பெட்டி மடிப்புடைய விரிவடையும் பைகள் தலைப்பில் 9¼" அகலமும் அடியில் 10¼ அங்குலமும் பையின் தலைப்பு வரை 8 அங்குல உயரமும் இருக்கும். பையின் தலைப்பில் இரண்டு சிறிய M. P. முலாம் பூசிய பித்தான்கள் தைக்கப்பட்டிருக்கும். பைகளை மூடுவதற்கான மூடி 3½" உயரத்தில் 10¾" அகலத்தில் இடுப்புப் பட்டையின் பித்தாள் முனையில் தைக்கப்பட்டிருக்கும் பைகளின் தலைப்புகள் முனைகளில் கீழ்ப்புறமாகத் தைக்கப்படாமல் எல்லாப் பக்கங்களிலும் அகலுவதற்கேற்ப அமைக்கப் பட்டிருக்கும். இடுப்புப் பட்டையின் தலைப்பில் வலதுபுறத்தில் வெளிப்புற டிக்கட்பையும், சங்கிலி அல்லது (ஸ்ட்ராப்) பட்டை வைப்பதற்குரிய துவாரத்தோடு உட்புறத்தில் கடிகாரப் பையும் இருக்கும். கோட்டு தைக்கப்பட்டுள்ள அதே துணியினுலான

தோள்பட்டைகள் சிறிய M.P. முலாம் பூசிய பித்தான்களுடன் பொருத்தப்பட்டிருக்கும். முன்கைகள் முனையிடப்பட்டு 5½" அகலம் முனையிலும், 2½" அகலம் பின்புறத்திலுமிருக்கும். வெள்ளை உலோகத்தாலான M.P. இணை எழுத்துக்களை தோள் பட்டைகளிலும், காலரின் ஒவ்வொரு பக்கத்திலும் சுற்றிலும் பூ வளையம் வேலைப்பாடுள்ள உலோகத்தாலான இந்திய அரசாங்கச் சின்னத்தையும், அணியவேண்டும்.

*அரைக்காற்சட்டைகள்.*—மேற்சட்டையைப் போன்றே காக்கி டிரில்லால் ஆகியது.

*பட்டிகள்.*—காக்கிக் கம்பளியாலானது.

*பூட்சு.*—பழுப்பு நிறக்கணுக்கால் வாரிழையோடு கூடிய (லேஸ்) பூட்சுகள் விரல் மூடியுடன்.

*வார்ப்பட்டை (பெல்ட்).*—பட்டாள ஒழுங்குமுறைக்குரிய மாதிரியில் வெள்ளை உலோகப் பொருத்துகளுடன் கூடிய சாம் பிரௌன் (Sam Brown) வார்ப்பட்டை ஆகும்.

*ஊதல்.*—வழக்கமாக காவல் துறைக்குரிய மாதிரியில் காக்கி இணைப்புக் கயிறுடன் இடது மார்புப் பையில் வைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

*ரிவால்வர்.*—அரசாங்கத்தால் வழங்கப்பட்டபடி இருக்கும்.

*புத்தகங்கள்.*—சிறப்பு அணி வகுப்புகள் மற்றும் பிற நிகழ்ச்சி களுக்குரியவற்றிற்கு பத்தி 3 (2) இல் மேலேயுள்ள குறிப்புரை களைக் காண்க.

முறையாயமையாத வேலை உடை.

*தலை உடை.*—ஆய்வாளர்கள் (வேலை நேர) பணி உடை போன்றே ஒரு தலைப்பாகையையோ அல்லது ஓரங்குலப் பொன் சரிகைக் கரை போடப்பட்ட சிகப்புத் துணியாலான தலைப் பாகையையோ அவர்கள் விரும்பும் வண்ணம் கட்டிக் கொள்ளலாம். வெளி வேலைகட்கு ஒரு வெயில் தடுக்கும் தொப்பியை அணியலாம்.

*குறிப்பு.*—ஆய்வாளர்கள் அவர்கள் விருப்பத்திற்கேற்ப எந்த நேரத்தில் அணிய வேண்டும் என்ற வரையறையின்றிக் கூம்புக் குல்லாக்களை ( Forage cap ) அணியலாம்.

*சட்டை.*—காலருடன் கூடிய காக்கிச் சட்டையாக இருக்கும். குறுக்கு வெட்டு மார்புப் பைகள் 5½" அகலமாகவும் மூடியின் தலைப்புக்கு 6½" உயரமுள்ளதாகவும் மூடியுடன் இருக்கும்.

பையில் இரண்டு பித்தான்கள் தைக்கப்பட்டிருக்கும். அவற்றில் தலைப்புப் பித்தான் ஒன்று, காலர் எலும்புகள் சேருமிடத்தில் மார்பைத் திறவையாக விட்டு ஓரங்குலம் கீழே இருக்கும். தோள்பட்டைகள் அதே துணியால் இருக்கும். சட்டை, பைகள், தோள்பட்டைகள் இவற்றிற்கான பித்தான்கள் கொம்பு அல்லது எலும்பால் ஆகியவை. பணி உடையில் தோள்பட்டையில் இருப்பது போலவே M.P. இணைப்பு எழுத்துக்கள் இருக்கும். சட்டையின் கழுத்துப் பட்டையின் ஒவ்வொரு முனையிலும் வெள்ளை உலோகத்தாலாகிய இந்திய அரசாங்கச் சின்னமும் இருக்கும்.

**அரைக்காற் சட்டைகள்.**—வார்ப் பட்டை வளையங்களுடன் காக்கி டிரில்லில் இருக்கும்.

**பட்டிகளும், பூட்சுகளும்.**—வேலை நேர உடையைப் போலவே பூட்சுகளுக்கும் பட்டிகளுக்கும் பதிலாகக் காக்கிக் காலுறைகளும் பழுப்பு நிற சோடுகளும் அணியலாம்.

**வார்ப்பட்டை (பெல்ட்).**—ஈட்டி உதவி வார் இணைப்பு இல்லாமல் பணி உடையில் இருப்பது போன்றதாகும்.

குறிப்பு.—இருப்பினும் ஆய்வாளர்கள் சாம்பிரௌன் (Sam Brown) வார்ப்பட்டைகட்குப் பதிலாக வெள்ளை உலோகக் கொக்கிகள் உடைய காக்கித்துணி வார்ப்பட்டைகளை அவர்கள் விருப்பத்திற்கேற்ப அணியலாம்.

5. உதவி ஆய்வாளர்கள் :

பணி உடை.

**தலைப்பாகை.**—உதவி ஆய்வாளர்கட்கு, ஆய்வாளாகளுக்குரியது போன்றதாகும்.

**கூம்புக் குல்லா.**—ஆய்வாளர்களுக்குரியது போன்றதாகும்.

**மேற் சட்டைகள்.**—ஆய்வாளர்களுக்குரியது போன்றது. ஆனால் கழுத்துப் பட்டையில் இந்திய அரசாங்கத்தின் சின்னம் இல்லாமல் தோள்பட்டைகளில் இணைப்பு எழுத்துக்களுக்குப் பதிலாக வெள்ளை உலோகத்தாலான ½" பெரிய எழுத்துக்களில் M.P. என்று இருக்கும்.

**அரைக் காற் சட்டைகள்.**—மேற்சட்டைத் துணியைப் போன்றே காக்கி டிரில்லில் இருக்கும்.

**பட்டிகள்.**—காக்கிக் கம்பளியில் இருக்கும்.

**பூட்சு.**—பழுப்பு நிறக் கயிறுகளுடன் கணுக்கால் பூட்சுகள் விரல் மூடிகளுடன் இருக்கும்.

**வார்ப்பட்டை (பெல்ட்).**—2" அகலத்தில் சாதா பழுப்பு நிறத் தோலில் சதுரமான பித்தளைக் கொக்கிகளுடன் இருக்கும். நீண்ட ஈட்டி வாருடன் கூடியது, சட்டைக்கு உள்ளே அணிய வேண்டும். ரிவால்வர் எடுத்துச் செல்லும்போது மேற் சட்டைக்கு வெளியே (ஈட்டி உதவி வார் இல்லாமல்) அணிய வேண்டும்.

**ஊதல்.**—ஆய்வாளர்களுக்குரியது மாதிரி.

**ரிவால்வர்.**—அரசாங்கம் கொடுப்பனவற்றைப் போன்றன.

**பதக்கங்கள்.**—ஆய்வாளர்களுக்குரிய மாதிரி.

### முறையாயமையாத உடை.

முறையாயமைந்தவையல்லாத ஏனைய சாதாரண வேலைகளின் போதும், வெளி வேலைகளின்போதும், ஆய்வாளர்கட்கு விதிக்கப் பட்ட முறையாயமையாத சாதா உடையை அணிய வேண்டும். ஆனால், தோள் பட்டையில் M. P. இணை எழுத்துக்களுக்குப் பதிலாக ½" M.P. பெரிய எழுத்துக்களும், சட்டையின் காலரின் ஒவ்வொரு முனையிலும் ஒரு வெள்ளை உலோக நட்சத் திரமும் இருக்க வேண்டும். பணி உடையில் மேலே கண்டவாறு சாதா தோல் வார்ப்பட்டையை அணிய வேண்டும்.

**6. சேம (ரிசர்வ்) ஆய்வாளர்கள்.**

### பணி உடை.

**தலை உடை.**—கூம்புக் குல்லா. ஆய்வாளர்களுக்குரிய மாதிரி.

**மேற்சட்டை.**—காக்கி டிரில்லில் முன்பக்கத்தின் கீழ் நடுத்தர அளவுள்ள முலாம் பூசிய M.P. பித்தான்கள் தைத்திருக்க வேண்டும். கீழ்ப் பித்தான் இடுப்புப் பட்டையின் கீழ் முனையில் இருக்கும் 2¼" அகலத்தில் இடுப்புப் பட்டையும் விளிம்புடனும் சட்டையின் ஒவ்வொரு கீழ்த்தொங்கலில் விளிம்போரத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் 4½" உயரத்தில் [illegible]யுமாக இருக்கும். படையைச் சேராத சாதாரண அலுவலரின் அங்கியில் இருப்பது போன்றே கழுத்துப் பட்டை வெட்டபட்டிருக்கும். 6½" அகலம் 7½" உயரத்தில் 2½" [illegible]டியுடன் நடுவில் பெட்டி மடிப் புடன் தலைப்பில் பித்தான்களை இரண்டு [illegible]றுக்கு வெட்டு மார்புப் பைகள் இருக்கும். [illegible]டுப்புக்கு கீழே பக்கத்தில் பெட்டி மடிப்புடைய இரண்டு [illegible] பைகள் [illegible]ப்பில் 9¼" அகலமும் அடிப்பாகம் 10¼" அகலமும் உயரம் 8 அங்குலமும் உள்ள பைகளின்

தலைப்பில் இரண்டு சிறிய M,P. மூலாம் பூசிய பித்தான்கள் தைக்கப்பட்டிருக்கும். பைகளை மூடுவதற்கான மூடி 3½" உயரத்திலும் 10¾ அங்குல அகலத்திலும் இடுப்புப் பட்டையிலுள்ள அடிப்பாக விளிம்பில் பித்தான், துளைகளோடுள்ள மூடிகள் தைக்கப்பட்டிருக்கும். பைகளின் தலைப்புகள், முனைகளில் கீழ்ப்புறமாகத் தைக்கப் படாமல் எல்லாப் பக்கங்களிலும் அகலுவதற்கேற்றவாறு அமைக்கப்பட்டிருக்கும். இடுப்புப் பட்டையின் தலைப்பில் வலது பக்கம் வெளிப்புறத்தில் டிக்கட் பையும் அதன் உள்புறத்தில் சங்கிலி அல்லது வார்ப்பட்டை (ஸ்ட்ராப்) வைப்பதற்குக் கடிகாரப் பையும் இருக்கும். கோட்டு தைக்கப் பட்டுள்ள அதே துணியினாலான தோள் பட்டைகள் சிறிய M.P. மூலாம் பூசிய பித்தான்களுடன் தைக்கப்பட்டிருக்கும். முன்கைகள் முனையிடப்பட்டு 5½" அகலம் முனையிலும் 2½" அகலம் பின் புறத்திலுமிருக்கும். சேம (ரிசர்வ்) ஆய்வாளர்கள் வெள்ளை உலோகத்தாலான (இந்திய நட்சத்திர மாதிரி) மூன்று ஐம்முனை நட்சத்திரங்களையும், ½" அகலத்தில் பாதி சிகப்பும் பாதி கரு நீலநிறமுடைய (ரிப்பனையும்) நாடாவையும் மற்றும் ஆய்வாளர்களைப் போலவே தோள்களில் M.P. எழுத்துக்களையும் அணிவர். ஆனால் ஆய்வாளர்கள் காக்கி ஊதல் கயிறு அணிவது போலல்லாமல் வேற்றுமை தெரிவதற்காக இவர்கள் பச்சை ஊதல் கயிற்றினை அணிவர். முன்கைகளில் வெள்ளை உலோகத்தாலான இந்திய அரசாங்கச் சின்னத்தையும் அணிவர். சேம (ரிசர்வ்) ஆய்வாளர்கள் வலது மணிக்கட்டில் இலை வளைவு வடிவத்தில் உள்ள இந்திய அரசாங்கச் சின்னத்தை அணிவார்கள்.

மேற்சட்டையைக் காக்கிச் சட்டை, கழுத்துப் பட்டை, கழுத்துக் கச்சை இவற்றுடன் அணிய வேண்டும்.

**அரைக்காற் சட்டைகள்.**—மேற்சட்டையைப் போன்றே காக்கி டிரில்லால் ஆனது.

**பட்டிகள்.**—(ஹோஸ்டாப் கால்மேசு) முழுங்காலுறைகளும் குறும் பட்டிகளும்.

**பூட்சு.**—வார்ப்பட்டை, ரிவால்வர் பதக்கங்களும் ஆய்வாளர்களுக்கு உரியன போன்றே.

### முறையாயமையாத பணி உடை.

**கூம்புக் குல்லா.**—பணி உடையில் உள்ளமாதிரி அல்லது வெயில் தடுக்கும் தொப்பி ஆகும்.

**சட்டை.**—ஆய்வாளர்களுக்குள்ள மாதிரி.

**அரைக்காற் சட்டைகள்.**—பணி உடையில் உள்ள மாதிரி.

**பட்டிகள் மற்றும் பூட்சுகள்.**—பணி உடையில் உள்ள மாதிரி. பூட்சுகளுக்கும் பட்டிகளுக்கும் பதிலாகக் காக்கிக் காலுறைகளும் பழுப்புச் சோடுகளும் அணியலாம்.

**வார்ப்பட்டை.**—ஆய்வாளர்களுக்குரியது போன்றது. வெள்ளை உலோகத்தாலான இலை வளைவுகளின் வடிவமான இந்திய அரசாங்கத்தின் சின்னத்தைத் தோல் பட்டையுடன் வலது மணிக் கட்டில் அணிய வேண்டும்.

**7. சேம (ரிசர்வ்) உதவி ஆய்வாளர்கள் :**

### பணி உடை.

**கூம்புக் குல்லா.**—ரிசர்வ் ஆய்வாளர்களுக்குள்ள மாதிரி.

**மேற்சட்டை.**—ஆய்வாளர்களுக்கென வகுக்கப்பட்டு வழங்கப் பட்டு வருவதைப் போன்றே காக்கி டிரில்லில் ஆனது. ஆனால் கழுத்துப்பட்டையை இந்திய அரசாங்கத்தின் சின்னம் இல்லாமல் இணை எழுத்துக்களுக்குப் பதிலாகத் தோள்பட்டைகளின் ½" அளவில் M.P. என்ற பெரிய எழுத்துக்களோடு கூடியதாக இருக்கும். ஒவ்வொரு முன்கைப் பட்டியிலும் வெள்ளை உலோகத் தாலான இந்திய அரசாங்கத்தின் சின்னம் அணியப்பட வேண்டும்.

**அரைக்காற் சட்டைகள்.**—தனிக் காவல் துறைக்குரிய மாதிரியில் இடுப்பில் வார்ப்பட்டைகளுக்கான வளையங்களுடன் வழங்கப்பட்டு வரும் காக்கி டிரில்லில் இருக்கும்.

**பட்டிகள்.**—சேம ஆய்வாளர்களுக்குள்ள மாதிரி.

**வார்ப்பட்டை ஊதல்.**—சேம ஆய்வாளர்களுக்குள்ள மாதிரி.

**பதக்கங்கள்.**—ஆய்வாளர்களுக்குள்ள மாதிரி.

**ரிவால்வர்.**—வழங்கப்பட்ட மாதிரி.

### முறையாயமையாத (சாதாரண) வேலை உடை.

சேம (ரிசர்வ்) ஆய்வாளர்கட்குரியது போன்றது. ஆனால் தோள்பட்டையில் M.P. எழுத்துச் சின்னத்துக்குப் பதிலாக அரை அங்குல அளவில் M.P. என்ற பெரிய எழுத்துக்கள்

இருக்கும். சட்டையின் ஒவ்வொரு மேல்கையிலும் வெள்ளை உலோகத்தாலான இந்திய அரசாங்கத்தின் சின்னம் இருக்கும்.

காவலர் தொகுதி.

**8. ஜமேதார்கள் :**

**தலை உடை.**—காக்கிக் கம்பளித் துணியாலாகிய கூர்க்காவிற்குரிய மாதிரியில் உள்ள சாய்வுத் தொப்பி ஆகும். இடது பக்க விளிம்பு மேற்புறம் திரும்பிப்பித்தான் பிடிப்பியால் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும். 3/8" அகலமுள்ள தோலாலான முகவாய் வார்ப்பட்டையுடன் இருக்கும். இரண்டங்குலச் சதுரமுள்ள பச்சை நிறத் துவியாலான பகட்டுக் குஞ்சம் ஒன்று திரும்பியிருக்கும். இடதுபக்கம் விளிம்பின் மேல் தைக்கப்பட்டிருக்கும். அதன் மேல் பச்சைப் பின்னணியில் ஒரு அங்குல வெள்ளிச் சரிகையினாலாகிய இந்திய அரசாங்கச் சின்னமும் அணிய வேண்டும்.

**மேற் சட்டை.**—சேம உதவி ஆய்வாளர்களுக்குரியது போன்றது. ஆனால் இடுப்புக்குக் கீழே பைகள் இல்லாமலும் சட்டையின் கைகளில் இந்திய அரசாங்கச் சின்னம் இல்லாமலும் தோள் பட்டைகளில் பெரிய எழுத்துக்கள் இல்லாமலும் இருக்கும்.

**அரைக்காற் சட்டைகள்.**—காக்கி டிரில்லில் பறக்கும் முகப்புடனும் வார்ப்பட்டைகளுடனும் இருக்கும்.

**பட்டிகள்.**—காக்கி கம்பளியில் இருக்கும்.

**வார்ப்பட்டை.**—சேம உதவி ஆய்வாளர்களுக்குரியது போன்ற சாம் பிரவுன் வார்ப்பட்டை ஆகும்.

**பதக்கங்கள்.**—ஆய்வாளர்களுக்குள்ள மாதிரி.

**ரிவால்வர்.**—அரசாங்கத்தால் வழங்கப்பட்ட மாதிரி.

முறையாயமையாத வேலை உடை.

வேலையின் இயல்பின் தேவைக்கு ஏற்பக் காலுறைகளுடனும் பூட்சுகளுடனும் அல்லது அவையில்லாமலும் பணியன்களும் அரைக் காற் சட்டைகளும் ஆகும்.

**9. தலைமைக் காவலர்களும், காவலர்களும் :**

அலுவலக நடைமுறை நூலில் அச்சிடப்பட்டுள்ள உடை.— தளவாடம் ஒதுக்கீட்டுப் பட்டியலில் குறிக்கப்பட்ட அளவின்படி, தலைமைக் காவலர்களுக்கும், காவலர்களுக்கும் உடையும் தளவாடப் பொருட்களும் கொடுக்கப்படும்.

பணி உடை.

நிலையங்களோடு இணைக்கப்பட்டுள்ளவர்கள்—தலை உடை.— சிகப்புக் குல்லா ஷூம்லாவுடன் சென்னை நகரக் காவல் துறைக் குரிய மாதிரியில் மாவட்ட எழுத்துக்களும் பெரிய அளவில் எண்களும் பொறிக்கப்பட்ட தலைப்பாகையை அணிய வேண்டும். இப்பொழுது கையிருப்பில் இருக்கும் மாவட்ட எழுத்துக்களும் எண்களும் தீர்ந்து போகும் வரை இவ்வாறு அணிய வேண்டும். தலைமைக் காவலர்களின் தலைப்பாகை, சாதா கரைக்குப் பதிலாக வெள்ளிச் சரிகைக் கரையுடன் இருக்கும்.

தலைமைக் காவலர்கள், தலைப்பாகையின் முன்புறத்தின் நடுப் பகுதியில் வெள்ளிச் சரிகையாலான இந்திய அரசாங்கச் சின்னத்தைக் கையிருப்பிலிருக்கும் பெரும் எண்களும் மாவட்ட எழுத்துக்களும் தீர்ந்துபோகும் வரை அணிய வேண்டும்.

**சேமப் படையில் உள்ளவர்கள்.**—( Armed Reserve ) கூர்க்கா விற்குரிய மாதிரி தடிப்பமாகத் தைக்கப்பட்ட காக்கித் துணியில் சாய்வுத் (ஸ்லௌச்) தொப்பி இருக்கும். இடது பக்கத்திலுள்ள விளிம்பு வட்டம் மேலே திருப்பி மடக்கப்பட்டுப் பித்தான்களோடு தைக்கப்பட்டிருக்கும். இரண்டங்குல சதுர அளவில் பளபளப் புள்ள ஒரு கரும்பச்சை இறைக் குஞ்சம் மேலே திருப்பி மடக்கப் பட்டுள்ள விளிம்பு வட்டத்தில் தைக்கப்பட்டிருக்கும். அதிலே 7/16" அளவில் கொட்டை எழுத்தாலான மாவட்ட எழுத்துக்களும் எண்களும் வைக்கப்பட வேண்டும். தலைமைக் காவலர்கள் இந்த மாவட்ட எழுத்துக்களுக்கு மேலே வெள்ளிச் சரிகையாலான இந்திய அரசாங்கச் சின்னத்தை அணிய வேண்டும்.

நிலையங்களோடு இணைக்கப்பட்டுள்ளவர்களும், ஆயுத சேமப் படையில் உள்ளவர்களும்—கோட்டு.—கழுத்துப் பட்டை இல்லாத சட்டை மாதிரியில் காக்கி டிரில்லில் இருக்கும் சட்டைக் கழுத்து வெட்டுடன் தமிழ்நாடு காவல் துறைக்குள்ள மாதிரியில் நடுத்தர மான மூன்று பித்தான்களோடு பொருத்தப்பட்டிருக்கும். இடுப்

புக்குக் கீழே (கோட்டின்) அங்கியின் நீளம் 13 அங்குலம் இருக்கும் அடியிலிருந்து 4 அங்குலத்தில் 7×6 அங்குல அளவில் இடது பக்கத்தில் மேல்மூடியுடன் ஒட்டுப் பையிருக்கும். தமிழ் நாடு காவல் துறைக்குள்ள மாதிரியில் சிறிய பித்தான் மூடியோடு பொருத்தப்பட்டிருக்கும். ஊதல்கள் கொடுக்கப்பட்டுள்ளவர் களுக்கு இடது மார்பில் மூடியில்லாத ஊதல் பை இருக்கும். பையின் தலைப்பு இரண்டாவது பித்தான் துளை மட்டத்தில் இருக்கும். சேமப் படையில் உள்ளவர்கட்கு அதே துணியிலான வலை பின்னப்பட்ட தோள்பட்டைகள் முறையான சிறு பித்தானுடன் தைக்கப்பட்டிருக்கும். இத்தகையோர் மாவட்ட எழுத்துக்களையும் எண்களையும் எந்த இரண்டு தோள்பட்டை களிலும் அணிவர்.

*அரைக்காற் சட்டைகள்*.—(அ) மாவட்டக் காவல் துறைக்குள்ள மாதிரியில் முன்புறம் திறப்பு இல்லாமல் தலைப்புத் தையல் விளிம்பில் ஒரு நாடா தைக்கப்பட்டிருக்கும்.

*சேமப்படை (ஆயுத ரிசர்வ்) மாதிரி*.—(ஆ) காக்கி டிரில்லால் தொங்கும் முகப்போடு வார்ப்பட்டைகளுக்கான மூன்று வளையங்களோடு இருக்கும். இடுப்பின் பின்புறத்தில் கழட்டும் கொக்கிகளோடு இறுக்கிக் கட்டும் வார்ப்பட்டை இருக்கும்.

*பூட்சுகள்*.—படைத்தளவாட ஒழுங்கு முறைப்படி வழங்கப்பட்ட மாதிரியில் கருப்பு நிறத்தில் இருக்கும்.

*காலுறைகள்*.—கம்பளி கலந்ததாய் சாம்பல் நிறத்தில் இராணுவத்திற்குள்ள மாதிரியில் முழங்காலுறைகளும் (ஹோஸ் டாப்புகள்) குறும்பட்டிகளும் இருக்கும்.

*வார்ப்பட்டை*.—இரண்டு அங்குலம் அகலமுள்ள பழுப்பு நிறத் தோளில் பித்தளை பாம்புக் கொக்கிப் பிடிப்பு பித்தளை ஓடும் வளையத்துடன் இருக்கும்.

*கச்சை—தலைமைக் காவலர்கள்*.—தமிழ் நாடு காவல் துறை என்ற சொற்களைச் சுற்றிலும் உடைய இந்திய அரசாங்கச் சின்னம் இரண்டங்குல அகலத்தில் சிகப்பு அல்லது பச்சைப் பட்டில் நெசவு செய்யப்பட்டு அலுமினியத்தாலான கொக்கித் தகடுடன் இருக்கும்.

**வரிசை வில்லைகள்—தலைமைக் காவலர்கள்.**—(அ) சேமப்படை தடிப்பமாகத் தைக்கப்பட்ட சாய்வுத் தொப்பியில் குஞ்சமிடப் பட்ட பகுதியில் பச்சைப் பின்னணியில் மாவட்ட எழுத்துக்கள் எண்களோடு கூடிய வெள்ளிச் சரிகையாலான இந்திய அரசாங்கத்தின் சின்னம் இருக்கும்.

(ஆ) **வட்டக் காவல் துறை.**—( Taluk Police ) சரிகைக் கரையோரமுடைய தலைப்பாகையில் நீலப் பின்னணியில் வெள்ளிச் சரிகையில் இந்திய அரசாங்கச் சின்னம் இருக்கும்.

குறிப்பு.—(1) பதிலிப் பணிபுரியும் தலைமைக் காவலர்கள் வெள்ளிச் சரிகையாலான இந்திய அரசாங்கச் சின்னத்தோடு கூடிய இரட்டை வரிசையிட்ட சட்டைக் கைச் சின்னத்தை (கோர்) அணிவர்.

(2) நிரந்தரத் தலைமைக் காவலர்கள் சம்பள உயர்வுத் தடையைக் கடக்கும் வரை வெள்ளிச் சரிகையாலான இந்திய அரசாங்கச் சின்னத்தோடு கூடிய மூன்று வரிசையிட்ட ஒழுங்கு (கோர்)ச் சட்டைக் கைச் சின்னத்தை அணிவர்.

(3) சம்பள உயர்வுத் தடையைக் கடந்த நிரந்தர தலைமைக் காவலர்கள் இந்திய அரசாங்கச் சின்னத்தை அணிவர். வெள்ளிச் சரிகை, கோட்டின் கைகளில் அணியப்பட வேண்டும்.

(4) சேமப் படையில் உள்ள நாயக்குகள் இந்திய அரசாங்கச் சின்னம் இல்லாமல் இரட்டை வரிசை வெள்ளிச் சரிகையை மட்டும் அணிவர்.

(5) சேமப் படையில் உள்ள லான்ஸ் நாயக்கருகள் இந்திய அரசாங்கச் சின்னம் இல்லாத ஒற்றை வரிசை ஒழுங்குச் சின்னம் அணிவர்.

வெள்ளிச் சரிகையாலான இந்திய அரசாங்கச் சின்னத்துட னிருக்கும் சட்டைக் கைச் சின்னம், நீலப் பின்னணியில் வட்டத் தலைமைக் காவலர்களால் அணியப்பட வேண்டும். இவற்றைப் பச்சைப் பின்னணியில் தலைமைக் காவலர்கள் சேமப் படையில் உள்ள நாயக்குகளும் மற்றும் லான்ஸ் நாயக்குகளும் அணிய வேண்டும்.

**வேலை நேர வில்லைகள்.**—போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக் கட்டமையில் இருப்பவர்கள் ஊதல் பைக்கு ஓரங்குலம் மேலே

சிகப்பு பின்னணியில் 7/8 அங்குலம் பெரிய எழுக்களாலான T.C. என்பதை அணிய வேண்டும். அவர்கள் தங்கள் சொந்த எண்ணைத் தலைப்பாகையிலோ அல்லது ஊதல் பைக்கு மேலே T.C. பெரிய எழுத்துக்கட்குக் கீழே அவர்கள் இடது மார்பிலோ அணிய வேண்டும். இதற்காகப் போக்குவரத்துக் கடமையில் உள்ள ஒவ்வொரு காவலருக்கும் மார்பில் அணிவதற்கு ஒன்றும் தலைப்பாகையில் அணிவதற்கு ஒன்றுமாக இரண்டு எண்கள் கொடுக்கப்பட்டிருக்கும்.

வாடகை வண்டிப் பணித் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளவர்கள் 7/8 அங்குல பெரிய எழுத்துக்களாலான H.C. என்பதை சிகப்புப் பின்னணியில் அணிய வேண்டும்.

*(1) திறமை வில்லைகள்.*—தமிழ்நாடு கசரத்துப் (டிரில்) பயிற்சிக் கையேட்டின் 113-ஆவது பிரிவின்படி, தகுதி பெற்றவர்கள் நல்ல முறையில் துப்பாக்கிச் சுடுதலுக்குப் பொன் அல்லது வெள்ளிச் சரிகை அல்லது வெள்ளைப் பட்டாலான குறுக்கு வசத்திலுள்ள துப்பாக்கிகளைப் பச்சை அல்லது சிகப்புப் பின்னணியில் இடது முன்கையில் அணிய வேண்டும்.

*(2) உடற்பயிற்சி ஆசிரியர்கள்.*—பொன்னும் வெள்ளியாலுமாகிய சரிகையில் அல்லது மஞ்சளும் வெண்மையுமான பட்டாலாகிய குறுக்கு வசத்திலுள்ள வாள்களைப் பச்சைத் துணிப் பின்னணியில் முறையே முதல் இரண்டாம் வகுப்பு ஆசிரியர்கள் அணியவேண்டும். வலது மேற்கையில் வரிசை வில்லைகட்கு மேலே அணிய வேண்டும்.

*(3) முதல் உதவி.*—உடற் பயிற்சி ஆசிரியர் வில்லையைப் போன்றே செயின்ட் ஜான் ஆம்புலன்ஸ் (நோயாளி வண்டி)க் கழகத்தார் தரும் வில்லையை அணிய வேண்டும்.

**பதக்கங்கள்.**—ஆணையிடப்படும்பொழுது பதக்கங்கள் பணி உடையோடு இடது மார்பில் அணியப்பட வேண்டும். பதக்கங்களின் அடிப்பகுதி கோட்டின் இரண்டாவது பித்தானின் அடிப்பகுதியோடு சமமாக ஒரே வரிசையிலிருக்க வேண்டும். மற்றக் காலங்களில் (சேமப் படையில் உள்ளவர்கள் முறையாயமையாத வேலை நேர உடையை அணிந்திருக்கும் பொழுது தவிர) கோட்டின் முன்புறத்திலுள்ள இரண்டாவது பித்தானுக்கும் தலைப் பித்தானுக்கும் நடுவில், இடது மார்பில் நாடாக்கள் மாத்திரம் அணியப்படவேண்டும்.

முறையாயமையாத வேலை நேர உடை (சேமப் படையில் உள்ளவர்களுக்கு).—வேலையின் இயல்பின் தேவைக்கேற்ப, காலுறையும் பூட்சுகளும் அல்லது அவை இல்லாமலே பனியனும் அரைக் காற்சட்டையும் ஆகும்.

(5) மலபார் தனிக் (போலீஸ்) காவலர் வில்லைகள், பித்தான்கள் மற்றும் வாள்களில் உபயோகிக்கும் மலபார் தனிக் காவலர் சின்னம்.

10. அலுவலர்கள்.—மலபார் தனிக் காவலரோடு இணைக்கப் பட்டுள்ள இந்திய இராணுவ அலுவலர்கள், இந்தியக் காவல் துறைப் பணி அலுவலர்களுக்குக் குறிப்பிடப்பட்ட அதே உடையை அணிய வேண்டும். ஆனால் மேற்சட்டையின் தோள் பட்டைகளில் I.P.S. எழுத்துகளுக்குப் பதிலாக M.S.P. எழுத்துக் களை அணிய வேண்டும். எவ்வாறிருப்பினும் எந்தெந்தச் சமயங் களில் படைப் பிரிவின் முழுச் சீருடை அல்லது உணவகச் சீருடை அணிய வேண்டுமோ அவ்வப்பொழுது முழு உடைச் சீருடை அல்லது உணவகச் சீருடையினை அணிவர்.

* துணைத் தளவாய்.—ஒரு துணைப் பிரிவுக்குப் பொறுப்பாக உள்ள காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர் அணிந்துள்ள அதே வரிசையுள்ள சீருடையினையும் வில்லைகளையும் துணைத் தளவாய் அணிவார். ஆனால் M.P.S. எழுத்து வில்லைகளுக்குப் பதிலாக அந்த இடத்தில் M.S.P. எழுத்து வில்லைகள் இருக்கும்.

உதவித் தளவாய்கள்.—உதவித் தளவாய்கள், தகுதிகாண் பருவ காலத் துணைத் துறைக் கண்காணிப்பாளர் வரிசைக்கான அதே சீருடையை அணிவார்கள். ஆனால் M.P.S. (எழுத்துக்கள் வில்லைகளுக்குப் பதிலாக அந்த இடத்தில் M.S.P. எழுத்துக்கள் இருக்கும்.

கீழ் வரிசைகளிலிருந்து உயர்வு பெற்றுள்ள உதவித் தளவாய்கள், முழங்காற்சட்டைகள், இராணுவப் பூட்சுகள், வாள் இவற்றை அணிவதிலிருந்து விலக்குப் பெறுகிறார்கள். ஆனால் பிடிப்பான சிற்றங்கிகள், காற்சட்டைகள், கூம்புத் தொப்பி ஆகிய வற்றைச் சிறப்புக்காலங்களில் அணிய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

*அ. ஆ. எண். 852 உள்துறை 1952 மார்ச் 5-ஆம் தேதியிட்டது.

*ஐந்தாண்டுகளும் அதற்கு மேலும் பணியில் இருந்த **உதவித்** தளவாய்கள் மூன்று நட்சத்திரங்கள் அணிவார்கள்.

**உதவித்** தளவாய்கள் இரண்டாண்டுப் பணியில் **இருந்தவர்கள்** இரண்டு நட்சத்திரங்களை அணிவார்கள்.

தளவாய், துணைத் தளவாய் மற்றும் உதவித் தளவாய்கள் **நீல** நிறக் கழுத்துக் கச்சைகளை (டை) அணிவார்கள்.

11. இளநிலை அலுவலர்கள்.—கீழ்க் கண்ட ஆணைகளால் மலபார் தனிக்காவல் துறை இந்திய அலுவலர்கள் அணிய வேண்டிய உடை ஒழுங்குப்படுத்தப்படுகிறது.

பணி உடை.

**தலை உடை.**—கூர்க்காவிற்குள்ள மாதிரி காக்கிக் கம்பளியாலான சாய்வுத் தொப்பி; முகவாய் வார்ப்பட்டை 3/8 அங்குலம் அகலத்தில் பழுப்புத் தோலாலானது; இடது பக்க விளிம்பு வட்டம் மேலே மடக்கப்பட்டு பித்தானுல் பொருத்தப்பட்டிருக்கும். கம்பெனியின் நிறத்தாலான ஒரு அழகுத் துணி மேலே திருப்பப் பட்ட விளிம்பு வட்டத்தில் அணியப்பட வேண்டும்.

**மேற்சட்டை.**—காக்கி டிரில், ஒற்றை மார்பு, இடுப்பில் பின் புறம் சேர்ப்புப் பட்டியோடு ஓய்வுக் கோட்டுப் போன்று வெட்டப் பட்டு மார்பிலும் தோள்களிலும் தளர்வாகவும் ஆனால் இடுப்பில் இறுக்கமாகவும் இருக்கும். அடி விளிம்பு வரை இராணுவச் சட்டையின்கீழ்த் தொங்கலைப் போன்று பின்புறத்தில் உடையின் கீழிருந்து இடுப்பு ஓரம் வரை திறவையாக இருக்கும். சுமார் 3 அங்குலம் திறவையான ஸ்டேப் கழுத்துப் பட்டையும் 6½ அங்குல அகலமும் மூடியின் தலைப்பு வரை 7½ அங்குலம் உயரமும் மத்தியில் 2¼ அங்குலம் பெட்டி மடிப்போடும் கூடிய இரண்டு குறுக்கு வெட்டு மார்புப் பைகள் இருக்கும். 6½ அங்குலம் அகலமும் 2¼ அங்குலம் உயரமுள்ள மும்முனையிட்ட மூடி M.S.P. மாதிரியான சிறு பித்தானுடன் பொருத்தப்பட்டிருக்கும். இடுப்புக்குக் கீழே பக்கங்களில் விரிவடையும் இரண்டு பைகள் தலைப்பில் 9¼ அங்குலம் அகலமும், அடியில் 10½ அங்குலமும் பையின் தலைப்பு வரை 8 அங்குலம் உயரமும் இருக்கும். பையின் தலைப்பில் வெள்ளை உலோகத்தாலான M.S.P. மாதிரியில் ஒரு சிறு பித்தானும் இருக்கும். பையை மூடுவதற்கு 3½ அங்குலம் உயரமும்

---

*சென்னை ஆணை எண் 511, உள்துறை 25—2—1954.

10¾ அங்குலம் அகலமும் உள்ள மூடி பித்தான் துளையுடன் இருக்கும். அவசியமானுல் தலைப்புப் பாகத்தில் பையை விரியச் செய்வதற்கேற்றவாறு பைகளின் தலைப்பு மூலைகளோடு சேர்த்துத் தைக்கப்பட்டிருக்கும். உள்ளே கடிகாரப் பை இருக்கும் முன்புறத்தில் கிழாக வெள்ளை உலோகத்தாலான நடுத்தர அளவுள்ள நான்கு M. S. P. பித்தான்கள் இருக்கும். பின்புறம் 2½ அங்குலம் அகலத்திலிருந்து முனையில் 6 அங்குலம் வரை பெரிதாகவுள்ள கூர்முனையுள்ள முன்கை இருக்கும். வரிசை வில்லைகளும் வெள்ளை உலோகத்தாலான M. S. P. பெரிய எழுத்துக்களும் அதே துணியாலான தோள்பட்டையில் சிறிய M.S.P. பித்தான் ஒன்ருேடு தைக்கப் பட்டிருக்கும். மென்மையான காக்கிக் கழுத்துப் பட்டையோடும் சட்டையுடனும் காக்கிக் கழுத்துக் கச்சையுடனும் மேற் சட்டையை அணிய வேண்டும். சாதா பொன்ஞலாகிய பாதுகாப்பு ஊக்கினைக் கழுத்துப் பட்டையில் கழுத்துக் கச்சைக்குக் கீழே அணியலாம்.

### அரைக்காற் சட்டை.

தொளதொளப்பான முன்புறம், வார்ப்பட்டை இடுவதற்கான வளையத்தோடு காக்கி டிரில்லில் இருக்கும்.

### பட்டிகள்.

இளம் நிறமான காக்கியில் அதே நிறமுள்ள காக்கி முழுங் காலுறையுடன் அணிய வேண்டும்.

### பூட்சு.

கணுக்கால் பழுப்பு நிறத்தில் வாரினுலான கயிற்ருேடும் விரல் மூடிகளுடனும் இருக்கும்.

### வார்ப்பட்டை.

"சாம் பிரௌன்" நிறத்தில் வெள்ளை உலோகத்தாலான பொருத்துக்களுடன் இருக்கும்.

### வாள்.

எஃகு பிடியுடன் M.S.P. இணை எழுத்துக்களோடு கூடிய இந்திய அரசாங்கச் சின்னத்துடன் இருக்கும்.

### வாள் முடிப்பி.

அகார்னுடன் பழுப்பு நிறத் தோலாலானது.

### ஊதல்.

வழக்கமான காவல் துறைக்குரிய மாதிரியில் காக்கி கயிற்ருேடு கட்டப்பட்டு இடது மார்புப் பையில் வைத்துக்கொள்ளுமாறு இருக்கும்.

### வரிசை வில்லைகள்.

வெள்ளை உலோகப் பட்டையாலானது.

### சுபதார்—மேஜர்.

½ அங்குலம் அகலமுள்ள இரண்டு தடித்த வெள்ளை உலோகப் பட்டைகளோடு நடுவில் ¼ அங்குலம் அகலமுள்ள மெல்லிய பட்டை இருக்கும்.

### சுபதார்.

½ அங்குலம் அகலமுள்ள இரண்டு தடித்த வெள்ளை உலோகப் பட்டையில் இருக்கும்.

### ஜமேதார்.

½ அங்குலம் அகலமுள்ள ஒரு தடித்த வெள்ளை உலோகப் பட்டையில் இருக்கும்.

### பதக்கங்கள்.

அரசிதழ்ப்பதிவு பெற்ற அதிகாரிக்குள்ளவை மாதிரி (பத்தி 3(2) மேலே).

### முறையாயமையாத வேலை நேர உடை.

### தலை உடை.

பணி உடையில் உள்ள மாதிரி; (Pig Sticker Topee) அல்லது இசைவாணை உள்ளபொழுது பன்றி குத்தியின் சாதா தொப்பியாக இருக்கும்.

மலபார் தனிக் காவல் துறை இளநிலை அலுவலர்கள், தங்கள் விருப்பத்தின்படி கூர்க்கா, கம்பளித் தொப்பியைப் போன்று மேலுறையிட்ட கூம்புத் தொப்பிகளை மாலை நேரத்தில் பொது விழாக்களில் கலந்துகொள்ளும்போது அணிய அனுமதிக்கப் பட்டுள்ளார்கள். அவர்கள் கூம்புத் தொப்பிகளைத் தங்கள் சொந்தச் செலவிலேயே வாங்கிக் கொள்ள வேண்டும். இப் பொழுது காவல்துறை ஆய்வாளர்கள் அணிவது போன்றே கூம்புத் தொப்பி வில்லைகளை அவர்கள் அணிய வேண்டும்.

### சட்டை.

காக்கிக் கெட்டித் துணியில் (டுவில்லில்) அரைக் கைகளுடனும் ஒழுங்கு மடிப்புள்ள மார்புப் பைகளுடனும் பணிவுடையைப்போல் வரிசை வில்லைகளையும் பெரிய எழுத்துக்களையும் வைத்துக் கொள் வதற்கேற்ற தோள்பட்டைகளுடன் இருக்கும். கழுத்தில் (டை) கச்சையில்லாமல் திறந்தபடி அணிய வேண்டும்.

### அரைக்காற் சட்டை.

பணி உடையில் உள்ள மாதிரி.

### பூட்சும் பட்டிகளும்.

பணி உடையில் உள்ளமாதிரி கருப்பு இராணுவ பூட்சும், காக்கி டிரில் கீழ்முழங்காலுறையும் (கெய்டர்) எலும்புப் பித்தான்களுடன் அணிவதற்கு இசைவாணை இருப்பின் அணியலாம்.

### சோடுகள்.

சாதா பழுப்பு நிறத் தோலை காக்கிக் காலுறைகளுடன் களைப் பாயிருக்கும்போதும் வேலை இல்லா நேரத்தின் போதும் அலுவலகத்தில் மட்டும் அணியலாம்.

### 12. பிற வரிசைகள்.

மலபார் தனிக் காவல் துறையில் உள்ள பிற வரிசையினருக்கு அலுவலக நடைமுறை நூலில் அச்சிடப்பட்டுள்ள உடை, தள வாடப் பொருள்களின் ஒதுக்கீட்டுப் பட்டியலில் விதிக்கப்பட்டுள்ள விகிதத்துக்கேற்ப, உடையும் தளவாடப் பொருள்களும் வழங்கப் படும்.

### பணி உடை.

### தலை உடை.

கூர்க்காவிற்குள்ள மாதிரி தடித்த காக்கி டிரில்லாலான சாய்வுத் தொப்பியும் பழுப்பு நிறத் தோலிலான முகவாய் வார்ப்பட்டையும் ஆகும். இடது பக்க விளிம்பு வட்டம் மேலே மடக்கப்பட்டுப் பித்தானால் பொருத்தப்பட்டிருக்கும். ½" சதுரமுள்ள ஒரு கம் பெனி நிறத்தாலான அழகுத் துணி மேலே மடிக்கப்பட்ட விளிம்பு வட்டத்தில் தைக்கப்பட்டிருக்கும்.

### அங்கி (கோட்).

காக்கி டிரில்லால் ஆனது ; 2 அங்குலமுள்ள ஒற்றை நீலக் கழுத்துப்பட்டை இரண்டு ஊக்குகளால் இணைக்கப்பட்டிருக்கும். 5 நடுத் தரஅளவுள்ள M.S.P. மாதிரிப் பித்தான்களுடன் கீழ்

நோக்கித் திறமையாக இருக்கும். தலைப்பிலுள்ள இரண்டு சாதாப் பைகள் 6" × 6" அளவுள்ள மூடியுடன் இரண்டு M.S.P. சிறிய பித்தான்களோடு தைக்கப்பட்டிருக்கும். வெள்ளை உலோகத்தாலான M.S.P. என்ற கொட்டை எழுத்துக்கள் தோள்பட்டைகளில் அணியப்பட வேண்டும். சாதா முன்கைகள் இருக்கும்.

**அரைக்காற் சட்டைகள்.**

காக்கி டிரில்லில் முன்புறம் தொங்கலோடு வார்ப்பட்டைக்கான பக்க வளையங்களும் இருக்கும்.

**பட்டிகள்.**

வழங்கப்பட்ட மாதிரி காக்கிக் கம்பளியில் இருக்கும்.

**பூட்சு.**

கரும்பு நிறத்தில் இராணுவச் சரக்கிலிருந்து வழங்கப்பட்ட மாதிரி இருக்கும்.

**பாதவுறைகள்.**

சாம்பல் நிறக் கம்பளியில் இராணுவத்துக்குரிய மாதிரி இருக்கும்.

**வார்ப்பட்டைகள்.**

சிறிய தோல் பைகளுடனும் ஈட்டி வாளுடனும் இருக்கும்.

**வரிசை வில்லைகள்.**

மங்கிய சாம்பல் நிறத் துணிப் பின்னணியாக அங்கியின் (coat) மேல் காக்கி நூலாலானது. சட்டையின் மேல் வெண்ணிறத் துணி அல்லது நாடாவாலும் ஆனது. பனியனில் காக்கித் துணி அல்லது நாடாவினால் ஆனது. வடிவில் 90 பதாகை (டிகிரி) கோணமுள்ள பட்டை அல்லது பட்டைகள் கோட்டுகளுக்கும் சட்டைகளுக்கும் ஒவ்வொரு பக்கமும் 3 அங்குல நீளத்திலும், பனியன்களுக்கு 2¼ அங்குல நீளத்திலுமாக 3/8" அகலமுள்ள துணியாலோ அல்லது நாடாவாலோ ஆகியிருக்கும். இரண்டு பட்டைகளுக்கிடையேயுள்ள இடைவெளி ¼" இருக்கும். இப்பட்டைகளை இரண்டு மேற்கைகளின் வெளிப்புறத்தில் முழங்கைக்கும் தோள் பட்டைக்கும் அல்லது தோள் நுனிக்கும் நடுவில் அணிய வேண்டும்.

கம்பெனி அவில்தார்-மேஜர்—இந்திய அரசாங்கத்தின் சின்னம்.

கம்பெனி குவார்டர் மாஸ்டர் அவில்தார்—மூன்று கம்பு வடிவச் சின்னத்திற்கு மேல் இந்திய அரசாங்கத்தின் வெற்றிச் சின்னம்.

அவில்தார்—மூன்று கம்பு வடிவச் சின்னம்.

நாயக்கு—இரட்டை கம்பு வடிவச் சின்னம்.

லாயன்ஸ் நாயக்கு—ஒற்றைக் கம்பு வடிவச் சின்னம்.

அவில்தார் மேஜரும் அவில்தார் சிறப்புக் காலங்களில் ஆணை யிடப்படும்பொழுது வலது தோளில் பின்னல்பட்டினுலாகிய ஒரு வகைச் சிகப்புக் கச்சையை அணிவர்.

## திறமை வில்லைகள்.

### 1. சுழல் துப்பாக்கி.

ஆணை பெருத ( Non Commissioned ) அலுவலர் களிலும் ஒவ்வொரு கம்பெனியில் உள்ளவர்களிலும் மிகச் சிறந்த முறையில் துப்பாக்கி சுடுபவர்களுக்கு உரிய வில்லை, நட்சத்திரமும் குறுக்குவசத்தில் வைக்கப்பட்ட சுழல் துப்பாக்கியும் ஆகும்.

(ஆ) சிறந்த முறையில் துப்பாக்கி சுடுபவர்களுக்குரிய வில்லை குறுக்குவசதியில் வைத்த சுழல் துப்பாக்கிகளாகும். மற்ற வரிசை களில் குறி தவருது சுடும் தகுதி உடையவர்களுக்கு இது வழங்கப் படும்.

### 2. எடை குறைந்த ( Light ) ஆட்டோமாடிக்.

(இ) பட்டாளத்தில் உள்ள காவலர்கட்கிடையேயுள்ள மிகச் சிறந்த முதல் வகுப்பு துப்பாக்கிக்காரர்கட்கு—நட்சத்திரமும் மற்றும் அதைச் சுற்றி L. M. O. வளையமும்.

(ஈ) எல்லா முதல் வகுப்புத் துப்பாக்கிக்காரர்கட்கும்— சுற்றிலும் L. M. O. வளையம் உள்ளது.

குறிப்பு.—(1) மேற்கண்ட துப்பாக்கி சுடும் வில்லைகள் ஆண்டு தோறும் வழங்கப்படும் அவை கோட்டு அல்லது சட்டைகளில் இடது மேற்கையில் அணிய வேண்டும்.

(2) துப்பாக்கி அல்லது எடை குறைந்த ஆட்டோமாடிக் இவற்ருல் குறி தப்பாமற சுடுபவர் "கம்பெனி சுடுதல்" அல்லது "பட்டாளியன் சுடுதல்" என்ற வில்லைக்குத் தகுதியுடையவரா யிருக்கும்போது அவற்றில் மிக உயர்ந்த வில்லையை மட்டுமே அணிய வேண்டும்.

(3) இலேசான எந்திரத் துப்பாக்கிப் பகுதிக்காரர்கள் எடை குறைந்த ஆட்டோமேடிக்குக்கான வில்லைகளையே அணிவர்.

## 5. பலவகை.

### ஆயுதம் செப்பனிடுபவர் வில்லை.

(அ) குறுக்காக வைக்கப்பட்ட சாமனமும் சுத்தியலும் ஆகும். இது ஆயுதத் தொழிற்சாலையில் பயிற்சி பெற்ற ஆயுதம் செப்பனிடுவோருக்கு வழங்கப்படும்.

### கொம்பு ஊதுபவர் வில்லை.

(ஆ) கயிறேடிணைந்த கொம்பு. வருடாந்திர **கொம்புத்** தேர்வில் தகுதி பெற்றவர்கட்கு ஆண்டுதோறும் வழங்கப்படும்.

### உடல்பயிற்சி வில்லை.

(இ) குறுக்காக வைக்கப்பட்ட வாள்கள், அம்பாலாவில் உள்ள இராணுவ உடற்பயிற்சிப் பள்ளியில் தகுதி பெற்ற ஆணை பெருத அலுவலர்களுக்கு (nou Commercial Officers) வழங்கப்படும்.

குறிப்பு.—(அ), (ஆ), (இ) இனங்களில் மேலே குறிப்பிடப் பட்ட வில்லைகள் வலது மேற்கையில் முட்டிக்கும் தோள்முனைக்கும் இடையே அணியப்பட வேண்டும்.

**பதக்கங்கள்.**—தமிழ்நாடு காவல்துறை சார்நிலைப் பணியிலுள்ள தலைமைக் காவலர்க்கும், காவலர்க்கும் உள்ள மாதிரி.

### முறையாயமையாத வேலை நேர உடை.

**தலை உடை.**—பணி உடையில் உள்ள மாதிரி.

**சட்டை.**—காக்கி டுவில்லில், கொம்பு அல்லது எலும்புப் பித்தான்களுடன் கழுத்துத் திறந்திருக்குமாறு வழங்கப்பட்ட மாதிரியில் தோள் பட்டைகளில் M.S.P. பெரிய எழுத்துக்களுடன் இருக்கும்.

**பனியன்கள்.**—வெள்ளைப் பருத்தியால் ஆனது. அரைக்காற் சட்டைகள் மேஜோடுகள், பட்டிகள் மற்றும் பூட்சுகள் வழங்கப் பட்ட மாதிரி இருக்கும்.

**குறிப்பு.**—ஆணையிடப்படுவதற்கேற்பத் தகுந்த சமயங்களுக் கேற்றவாறு அரைக்காற் சட்டையைப் பூட்சுகள் பாத உறை களோடு அல்லது இல்லாமல் அணியலாம்.

## தனிப்படைக் காவலர்.

தனிப்படைக் காவலர் தொகுதியின் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்குமுரிய உடை ஒழுங்கு முறைகள் மேழ்க் குறிக்கப்பட்டவற்றைத்தவிர ஏனைய எல்லாம் மலபார் தனிக் காவலர்க்கு உரிய மாதிரியாகும்.

**தளவாய்கள்.**—தமிழ்நாடு காவலர் துறைப் பணித் தொகுதியிலிருந்து பதவி உயர்வு பெற்றிருக்கும் காவல் துறைப் பதிலிக் கண்காணிப்பாளர் வரிசைக்குரிய அதே சீருடையையும், வில்லைகளையும் இந்த அலுவலர்கள் அணிவார்கள். ஆனால் M.S.P. எழுத்துக்களுள்ள வில்லைகளிருக்குமிடத்தில் S.A.P. எழுத்து வில்லைகள் இருக்கும்.

**துணைத் தளவாய்கள்.**—இவ்வலுவலர்கள் தகுதிகாண் பருவத்திலுள்ள காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளரின் வரிசைக்குள்ள அதே சீருடை வில்லைகளை அணிவார்கள் M.P,S. எழுத்துள்ள வில்லைகளின் இடத்தில் S.A,P. வில்லைகள் இருக்கும்.

*பிற வரிசைகள்.—கோட்டுகளில் M.S.P. வில்லைகள் அணிய வேண்டிய இடத்தில் வெள்ளை உலோகத்தாலான S.A.P. வில்லைகள் அணியப்பட வேண்டும். மற்றும் M.S.P. பித்தான்கட்குப் பதிலாக S.A.P. பித்தான்கள் இருக்கும்.

### ஓய்வு பெற்ற காவல் துறை அலுவலர்கள் சில கட்டுப் பாடுகளுக்குட்பட்டு அணியும் சீருடை.

13. ஓய்வு பெறும்பொழுது பதினேந்தாண்டுகட்குக் குறையாது அங்கீகரிக்கப்பட்ட பணி புரிந்திருக்கிற காவல் துறையின் உதவி ஆய்வாளர் உள்ளிட்டு அத்துறையின் கீழ்நிலைவரைக்குமுள்ள ஓய்வு பெற்ற அலுவலர்கள் ஓய்வு பெற்ற பின்னரும் சிறப்பு அணிவகுப்புக் காலங்களிலும் அல்லது அரசாங்க அலுவலர்களைப் பார்க்கப்போகும்போதும் ஓய்வு பெற்ற அக்காலத்தில் காவல் துறைப் படையில் இருந்த அவர்கள் வரிசைக்குரிய சீருடையை அணியலாம். சீருடையை அவ்விதம் அணிவதற்கு ஒவ்வொருவரும் தனித்தனியே அரசிதழ்ப்பதிவு பெற்ற அலுவலர்கள் தாங்கள் இறுதியாகப் பணி புரிந்த அந்த மாநில அரசாங்கத்திடமிருந்தும், அரசிதழ்ப்பதிவு பெறாத அலுவலர்கள் எந்தக் காவல் துறைத் தலைவரின் கீழ் இறுதியாகப் பணியாற்றினரோ அவரிடமிருந்தும் அனுமதி பெறவேண்டும்.

---

*அ. ஆ. எண் 4953, உள்துறை 17—12—1961 தேதியிட்டது.

## பிற அறிவுரைகள்.

*14. (1) தம்முடைய நிலையான வரிசைக்கு மேலான வரிசையில் பதிலிப் பணிபுரியும் அலுவலர்கள் தாங்கள் பதிலிப் பணிபுரியும் வரிசைக்குரிய சீருடை அல்லது வில்லையை அணிய அனுமதிக்கப் பட்டுள்ளார்கள். எவ்வாறிருப்பினும் அந்தப் பதிலிப் பணியில் குறிப்பிட்ட தகுதிகாண் பருவத்தை மனநிறைவு கொள்ளுமாறு முடித்ததாக உறுதி சொல்லப்பட்டதும் பதிலிப் பணிக்குரிய சீருடையையும் வில்லையையும் அணிய அவர்கள் கடமைப்பட்டுள் ளார்கள்.

சீருடை அரசாங்கச் செலவிலேயே அளிக்கப்படும். ஒரு உயர் பதவிக்குப் பதிலிப் பணி புரிய அமர்த்தப்பட்ட சார்நிலைக் காவல் துறை அலுவலருக்கு, அத்தகைய பதவி உயர்வின்போது அவர்கள் பதிலிப் பணி புரியும் பதவிக்கு ஏற்ற சீருடையும் வில்லைகளும் வழங்கப்படும். அந்தப் பதவியிலிருந்து அவர்களுடைய நிலையான பதவிக்குத் திருப்பி அனுப்பப்படும்போது அச் சீருடையும் வில்லைகளும் அவர்களிடமிருந்து திருப்பப் பெற்றுக் கொள்ளப் படும்.

(2) உடை, துணி தளவாடம் வில்லைகள் ஆகியவற்றில் அங்கீகரிக்கப்பட்ட மாதிரியிலிருந்து எந்த மாறுதலும் கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

(3) சீருடைகளையும் தளவாடங்களையும் பெறும்போது அவசியமானல் அலுவலர்கள் தாங்களே நேரில் ஒப்பு நோக்கிப்பொருள்கள் யாவும் அங்கீகரிக்கப்பட்ட மாதிரியிலேயே வழங்கப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். சார்நிலைக்காவல் துறை அலுவலர்களுக்கு அரசாங்கத்தால் வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட துணி, தளவாடங்கள் முதலிய பொருள்கள் எல்லாவற்றின் முத்திரையிடப்பட்ட மாதிரிகள் காவல் துறைத் தலைவரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

(4) இசைவாணை பெறாத அணி அல்லது சின்னத்தைக் காவல் உடையோடு அணியக் கூடாது.

(5) முறையான சீருடையைப் போலியுடை (Fancy Dress) நடனத்தின்போது அணியக் கூடாது. ஆனல் பழங்காலச் சீருடை மாதிரியை அக் காலங்களில் அணியலாம்.

(6) தங்கள் மேலதிகாரிகளின் தனி அனுமதி பெற்றிருந்தாலன்றி கடமையாற்றுங் காலங்களில் எல்லா வரிசைகளிலுமுள்ள அலுவலர்களும் சீருடையை அணிய வேண்டும்.

---

*அ.ஆ. எண் 2291, உள்துறை 13—7—1945 மற்றும் 3065, உள்துறை 6—9—1945.

சேர்ஜ் மேற்சட்டையும் சேர்ஜ் காற்சட்டைகளும்.

(7) தட்ப வெப்ப நிலைக்குத் தேவையேற்படும்போது அலுவலர்கள் தாமாகவே மங்கலான பழுப்பு நிற சேர்ஜ் துணியாலான மேற்சட்டைகளையும் காற்சட்டைகளையும் வைத்துக் கொள்ளலாம்.

(8) தாமே சொந்தமாகச் சீருடையைத் தயாரித்துக் கொள்ள வேண்டிய எந்த அலுவலர்களும் அவருடைய பழைய உடைப் பொருள் ஒன்று கிழிந்து போனாலொழிய அதற்கொப்பான புதிய அங்கீகரிக்கப்பட்ட மாதிரிப் பொருள்களை விலைக்கு வாங்க வேண்டியதில்லை.

(9) அலுவலக நடைமுறை நூலில் துணி, தளவாடப் பொருள்கள் ஒதுக்கீட்டுப் பட்டியலில் அச்சிடப்பட்டுள்ளன 8, 18, 36 வரிசை எண்களில் கண்ட பகுதிகளில் பணி புரியும் தமிழ்நாடு காவல் துறை சார்நிலைப் பணித் தொகுதி அலுவலர்களுக்கு சேர்ஜ் துணியாலான உடை வழங்கப்படும். அவர்களின் பணி உடை சேர்ஜ் மேற்சட்டை, காற்சட்டை மற்றும் பூட்சுகளும் ஆகும்.

(10) போக்குவரத்துக் கட்டுப்பாட்டில் ஈடுபட்டிருப்பவர்கட்கு வெயில் தொப்பியும், வெள்ளை டிரில் கோட்களும் வழங்கப்படும்.
மற்றும் ஆணையிடப்படும் பொழுது அவற்றைப் பணி உடையாக அணியலாம்.

## அத்தியாயம் III

## நன்மதிப்புச் சின்னங்களும் அணிகளும் பதக்கங்களும்

*15. மத்திய அரசாங்கம் அல்லது மாநில அரசாங்கத்தால் பதக்கங்களையும் அணிகளையும் அணிவதற்காக விதிக்கப்பட்ட அறிவுரைகள் கீழே தரப்பட்டுள்ளன :—

1. சாதா உடைகள் காலை உடை (பிராக் கோட்).

(1) சாதாரணமாக அணிகள் அணியப்படுவதில்லை.

(2) சிறப்பு அணி வகுப்புக் காலங்களில் பதக்கங்கள் பெற்றுள்ளவர்கள் இடது மார்பில் அவற்றை அணிவர்.

(ii) சாதா உடைகள்—மாலை.

(1) சாதாரணமாக அணிகள் அணியப்படுவதில்லை

*அ. ஆ. எண். 522, பொது 3-5-1912 தேதியிட்டது.

(2) சிறப்புக் காலங்களில் "சிற்றணிகளுடன் உடைகள்" என்று ஆணை இருக்கும்போது பதக்கங்கள் பெற்றுள்ளவர்கள் கோட்டின் மார்புப் பின் மடிப்புப் பகுதியில் சிற்றணிகளை (இடது பக்கத்தில்) அணிவர்.

(iii) அலுவலக உடை கழற்றிய சீருடை--பகலில்.

பதக்கங்கள் பெற்றுள்ளவர்கள் ஒரு நாடாத் துண்டை அரை அங்குல நீளத்தில் அணிவர்.

(iv) அலுவலக மாலைச் சீருடை (படைசாரா அலுவலர் உணவக உடை) பதக்கங்கள் பெற்றுள்ளவர்கள் சாதாரண காலங்களில் சிற்றணிகளைக் கோட்டின் மார்புபின் மடிப்புப் பகுதியில் (இடது புறம்) அணிவர். மிகவும் முறையான சந்தர்ப்பங்களில் முழு அளவுப் பதக்கங்களை இடது மார்பில் அணிவர்.

(v) அலுவலக முழு உடை.

பதக்கங்கள் பெற்றுள்ளவர்கள் முழு அளவுப் பதக்கங்களை இடது மார்பில் அணிவர்.

**குறிப்பு.**—(அ) சீருடை அணிய உரிமை பெறாதவர்கள் அந்த உரிமை பெற்றவர் சீருடை அணியும் காலங்களில் மேற்கொள்ளும் III,IV,V தலைப்புக்களில் குறிப்பிட்ட வழக்கத்தை இயன்ற அளவு கடைப்பிடிக்க வேண்டும்.

(ஆ) (1) அணிகளும் பதக்கங்களும் இடது மார்பில் அணியப் பட வேண்டும்.

(2) கீழ் வரும் பட்டியல், நன்மதிப்புச் சின்னங்களும் அணிகளும் பதக்கங்களும் எந்த வரிசைக் கிரமத்தில் அணியப்பட வேண்டும் என்பதைக் காட்டுகின்றது. இதனை 22—4—1941 தேதிப் பட்டியலுக்குப் பதிலாகக் கொள்ள வேண்டியது. உறுப்பினர்களுக்குரிய சில வரிசை முறைச் சட்டங்களால் அளிக்கப்பட்ட முதன்மையினை இது எவ்வகையிலும் பாதிக்காது.

1. பாரத ரத்ந.
2. பரம வீர் சக்ரா.
3. அஷோக் சக்ரா முதல் வகுப்பு.

4. பத்ம விபூஷன்.

5. பத்ம பூஷன்.

6. மகா வீர் சக்ரா.

7. அஷோக் சக்ரா இரண்டாம் வகுப்பு.

8. பத்மஸ்ரீ.

9. வீர் சக்ரா.

10. அஷோக் சக்ரா மூன்றும் வகுப்பு.

11. துணிவுச் செயலுக்காகக் குடியரசுத் தலைவரின் காவல் துறைத் தீயணைப்புத் துறைப் பணித் தொகுதிகளின் பதக்கம்.

*12. துணிவுச் செயலுக்கான காவல்துறைப் பதக்கம்.

13. 1947 பொதுப் பணித் தொகுதிகள் பதக்கம்.

14. சிறப்புச் சேவைக்கான குடியரசுத் தலைவரின் காவல் தீயணைப்புத் துறைப் பணித் தொகுதிகள் பதக்கம்.

15. மதிப்புக்குரிய சேவைக்கான பதக்கம்.

16. நீண்ட சேவை நன்னடத்தைப் பதக்கம்.

17. மதிப்புக்குரிய சேவைக்கான காவல் பதக்கம்.

18. உள்நாட்டு இராணுவ அணிவகை.

19. உள்நாட்டு இராணுவப் பதக்கம்.

20. 1947 இந்திய விடுதலைப் பதக்கம்.

21. 1950 விடுதலைப் பதக்கம்.

22. 'காமன்வெல்த்' பரிசுகள்.

23. பிற பரிசுகள்.

குறிப்பு.—மேற்கண்டவை, அவை போன்ற தரங்களுக்கான நன்மதிப்புச் சின்னங்களுக்கும் பொருந்தும். இளநிலைக்கான நன்மதிப்புச் சின்னத்தின் உயர்ந்த தரத்திற்குரிய சிறு அமைப்பு அல்லது நாடாவை, முதுநிலை நன்மதிப்புச் சின்னத்திற்குக் கீழான தரத்திற்குரியவற்றோடு அணியும்பொழுது உயர்தரத்தின் சிற்றணி அல்லது நாடா முதலில் வர வேண்டும். அதாவது K.C.I.E. இன் சிற்றணி அல்லது நாடா C.B. க்கு முன்னே வர வேண்டும். மற்றும் G.C.M.G.K.C.B -க்கு முன் வரவேண்டும் நன்மதிப்புச் சின்னத்தின் நான்கு நட்சத்திரங்கட்கு மேற்படாமலும். மூன்று தாழ்ந்த வில்லைகட்டு மேற்படாமலும் ஒரே

*அ. ஆ. எண். 1812, உள்துறை 1959 ஜூன் 25-ந் தேதியிட்டது.

நோத்தில் முழுச்சீருடையோடு அணியலாம். ஆர்டர் நாடாக்கள். நாடா மட்டும் அணியும்போது, ஆர்டரின் உறுப்பினாது நாடாக்களின் அகலத்திலேயே இருக்க வேண்டும். உறுப்பினர் வகுப்பு இல்லையென்றால் நாடாவானது தோழமை ஆர்டரின் நாடாவின் அகலத்தில் இருக்க வேண்டும்.

### பாரனெட்டின் ( Baronet ) வில்லை.

நன்மதிப்புச் சின்னத்துக்குரிய கழுத்து வில்லையைப் போன்று, வில்லையைக் கழுத்தைச் சுற்றி ரிப்பனால் தொங்கவிட்டு அணிய வேண்டும். மதிப்புச் சின்னத்தின் வில்லையை அடுத்து முதலாவதாக இதனை அணிய வேண்டும். இதனைச் சிற்றணியாக அணிதல் கூடாது. ஓய்வு உடைச் சீருடையில் இருக்கும்போது நாடாவை அணிதல் கூடாது.

### நைட்ஸ் பேச்லர் ( Knights Bachelor ) வில்லை.

(பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நன்மதிப்புச் சின்னத்தின் நைட் (Knight) நட்சத்திரத்துக்குப் பிறகு இவ்வில்லை அணியப்பட வேண்டும். இதனைச் சிற்றணியாகவோ அல்லது ஓய்வு உடைச் சீருடையுடனே அணியக் கூடாது.)

* இந்திய நன்மதிப்புச் சின்னம் (இராணுவம்)
பர்மா நன்மதிப்புச் சின்னம் (வீரத்துக்கு)

அணிகள்—

ராயல் செஞ்சிலுவை (முதல் வகுப்பு).
சிறப்புச் சேவைச் சிலுவை.
இராணுவச் சிலுவை.
சிறப்புப் பறத்தல் சிலுவை.
விமானப்படைச் சிலுவை.
ராயல் செஞ்சிலுவை (இரண்டாம் வகுப்பு).
பிரிட்டிஷ் இந்திய நன்மதிப்புச் சின்னம் (ஆர்டர்).
கெய்சாரி ஹிந்த் பதக்கம்.
பர்மா நன்மதிப்புச் சின்னம் (நல்ல சேவைக்கு)
செயின்ட் ஜான் நன்மதிப்புச் சின்னம்
ஆல்பர்ட் பதக்கம்.

---

* இந்திய நன்மதிப்புச் சின்னம் (இராணுவம் மற்றும் சிவில்) 1902 இன் நன்மதிப்புச் சின்னத்தினின்றும் வேறுபட்டது.

**வீரத்துக்காகவும் சிறப்பு நடத்தைககுமான பதக்கம்.—**

வீரத்திற்கான தென் ஆப்ரிக்கா யூனியன் மன்னர் தங்கப் பதக்கம். (King's Medal)

சிறப்பு நடத்தைப் பதக்கம்.

தெளிவான வீரப் பதக்கம்.

ஜார்ஜ் பதக்கம்.

காவல் துறை தீயணைப்புத் துறைச் சேவைகளில் வீரத்துக்கான மன்னர் பதக்கம்.

எடவர்டு பதக்கம்.

ராயல் தென் ஆப்பிரிக்கா எல்லைப்படை சிறப்பு நடத்தைப் பதக்கம்.

மன்னரின் ஆப்பிரிக்கத் துப்பாக்கிப் படைச் சிறப்பு நடத்தைப் பதக்கம்.

இந்தியர் சிறப்புச் சேவைப் பதக்கம்.

பர்மா வீரப் பதக்கம்.

வீரத்திற்கான தென் ஆப்பிரிக்கா யூனியன் மன்னரின் வெள்ளிப் பதக்கம்.

சிறப்புச் சேவைப் பதக்கம்.

இராணுவப் பதக்கம்.

சிறப்புப் பறத்தல் பதக்கம்.

விமானப் படைப் பதக்கம்.

காவலர் பதக்கம் (அயர்லாந்து).

** கடலில் உயர்காப்புப் பதக்கம்.

% இந்திய நன்மதிப்புச் சின்னம் (சிவில்).

வீரத்துக்கான இந்தியக் காவல் துறைப் பதக்கம்.

வீரத்துக்கான பர்மா காவல்துறைப் பதக்கம்.

---

** முன்பு, வணிக வாரியம், கப்பல் அமைச்சர் அல்லது போர் போக்குவரத்து அமைச்சரின் பரிந்துரையின் பேரிலும் இப்பொழுது போக்குவரத்து அமைச்சரின் பரிந்துரையின் பேரிலும் வழங்கப்படுகிற அலுவல் பதக்கமாகும். (ஆர்டர் ஆப் மெரிட்).

% இந்திய நன்மதிப்புத் தகுதிச் சின்னம் (இராணுவமும் சிவிலும்) 1902 இல் நிறுவப்பட்ட (ஆர்டர் ஆப் மெரிட்) நன்மதிப்புத் தகுதிச் சின்னத்தினின்றும் வேறுபட்டது.

¬ பிரிட்டிஷ் பேரரசுப் பதக்கம்.
கானடாப் பதக்கம்.
செய்ன்ட் ஜான் நன்மதிப்புச் சின்னத்தின் உயிர்காப்புப் பதக்கம்.

**மதிக்கத் தக்க சேவைகட்கான காவல் துறைப் பதக்கங்கள்.**

**சிறப்புச் சேவைக்கான காவல் துறைத் தியணைப்புத் துறைச் சேவைகளுக்கான மன்னர் பதக்கம்.**

& 1914-19 முதல் உலகப் போரில் வழங்கப்பட்ட போர்ப் பணி நட்சத்திரங்களும் பதக்கங்களும் பின்வரும் வரிசையில் அணியப்பட வேண்டும் :—

1914 நட்சத்திரம், 1914-15 நட்சத்திரம். பிரிட்டிஷ் போர்ப் பதக்கம், வணிகக் கப்பற்படைப் போர்ப் பதக்கம், வெற்றிப் பதக்கம், உள்நாட்டுப் படையின் போர்ப் பதக்கம். இந்தியப் பொதுப் பணிப் பதக்கம் 1908; (ஆப்கானிஸ்தானப் பணிக்காக 1919). 1939-45 இரண்டாம் உலகப் பெரும் போரில் பணி புரிந்தமைக்காக வழங்கப்பட்ட போர்ப் பணி நட்சத்திரங்களும் பதக்கங்களும், பின்கண்ட முறையில் அணியப்பட வேண்டும்—

1939-1945 நட்சத்திரம், அட்லாண்டிக் நட்சத்திரம், விமானக் குழு ஐரோப்பிய நட்சத்திரம், ஆப்ரிக்க நட்சத்திரம், பசுபிக் நட்சத்திரம், பர்மா நட்சத்திரம், இத்தாலி நட்சத்திரம், பிரான்ஸ், ஜெர்மனி நட்சத்திரம், பாதுகாப்பு நட்சத்திரம், 1939-45 போர்ப் பதக்கம், கானடா டொமினியன் தொண்டர் பணிப் பதக்கம், தென் ஆப்பிரிக்கா யூனியன் ஆப்பிரிக்கா பணிப் பதக்கம், இந்தியப் பணிப் பதக்கம்—

---

¬ முன்பு பிரிட்டிஷ் அரசாங்கத்தின் மதிக்கத் தகுந்த சேவைக்கான நன்மதிப்புச் சின்னத்தின் ஆர்டர் பதக்கம். **இதில்** 1922 டிசம்பர் 29 ஆம் தேதிக்கு முன் வழங்கப்பட்ட ஆர்டர் பதக்கமும் சேர்ந்துள்ளது.

& போர்ப் பதக்கங்கள் (எந்தப் போர் நடவடிக்கைக்காக வழங்கப்பட்டதோ அந்தத் தேதி வரிசை முறைப்படி) துருவப் பதக்கங்கள் (தேதி வரிசைப்படி)

ராயல் விக்டோரியன் பதக்கம் (தங்கம், வெள்ளி வெண்கலமும்).

பேரரசுச் சேவைப் பதக்கம்.

(1908) இந்தியப் பொதுச் சேவைப் பதக்கம் அணியும் வரிசை முறை. கப்பல் பொதுச் சேவைப் பதக்கம் (1915), பொதுச் சேவைப் பதக்கம் (தரைப்படையும் ராயல் விமானப் படையும்—1918) மற்றும் இந்தியப் பொதுச் சேவைப் பதக்கம் (1936) வேறுபடுவதோடு போர்ச் செயல்களில் பெறுபவர் ஈடுபட்ட தேதிக்கேற்பவும் வேறுபடும்;

மதிக்கத் தகுந்த சேவைக்கான இந்தியக் காவல் துறைப் பதக்கம்.

மதிக்கத் தகுந்த சேவைக்கான பர்மா காவல் துறைப் பதக்கம்.

மதிக்கத் தகுந்த சேவைக்கான குடியேற்ற நாட்டுக் காவல் துறைப் பதக்கம்.

### விழா, முடிசூட்டு விழா, தர்பார் பதக்கங்கள்.

விக்டோரியா அரசியின் ஜூபிலி பதக்கம் 1897 (தங்கம், வெள்ளி, வெண்கலம்).

விக்டோரியா அரசியின் போலீஸ் ஜூபிலி பதக்கம் 1887.

விக்டோரியா அரசியின் ஜூபிலி பதக்கம் 1897 (தங்கம், வெள்ளி, வெண்கலம்).

விக்டோரியா அரசியின் போலீஸ் ஜூபிலி பதக்கம் 1897.

விக்டோரியா அரசியின் நினைவுப் பதக்கம் 1900 (அயர்லாந்து).

ஏழாம் மன்னர் எட்வர் முடிசூட்டு விழாப் பதக்கம் 1902.

ஏழாம் எட்வர்டு மன்னரின் போலீஸ் முடிசூட்டு விழாப் பதக்கம் 1902.

ஏழாம் எட்வர்டு மன்னரின் தர்பார் பதக்கம் 1903 (தங்கம், வெள்ளி, வெண்கலம்).

ஏழாம் எட்வர்டு மன்னர் போலிஸ் பதக்கம் 1903 (ஸ்காட்லாந்து).

ஏழாம் எட்வர்டு மன்னர் வருகை நினைவுப் பதக்கம் 1903: (அயர்லாந்து).

ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் பதக்கம் 1911.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் போலீஸ் முடிசூட்டு விழாப் பதக்கம் 1911.

மன்னரின் வருகை நினைவுப் பதக்கம் 1911 (அயர்லாந்து).

ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் தர்பார் பதக்கம் 1911 (1911 ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் தர்பார் தங்கப் பதக்கம் யுனைடெட் கிங்டத்தில் ஆட்சி புரியும் இந்தியத் தலைவர்கள் மட்டும் அணியலாம்) (தங்கம், வெள்ளி, வெண்கலம்).

**ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் வெள்ளி விழாப் பதக்கம் 1935.**

ஆறும் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாப் பதக்கம் 1937.

ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் நீண்ட கால உண்மைச் சேவைப் பதக்கம்.

ஆறும் ஜார்ஜ் மன்னரின் நீண்ட கால உண்மைச் சேவைப் பதக்கம்.

**திறமை மற்றும் நீண்ட கால சேவை அணிகளும் பதக்கங்களும்.**

நீண்ட சேவை நன்னடத்தைப் பதக்கம்.

**கடற்படை நீண்ட சேவை நன்னடத்தைப் பதக்கம்.**

மதிக்கத் தகுந்த சேவைக்கான பதக்கம்.

இந்திய நீண்ட சேவை நன்னடத்தைப் பதக்கம் (இந்திய இராணுவத்தின் ஐரோப்பியர்கட்கு).

இந்திய மதிக்கத்தகுந்த சேவைப் பதக்கம் (இந்திய இராணுவத்திலுள்ள ஐரோப்பியர்கட்கு);

ராயல் கடற்படை மதிக்கத் தகுந்த சேவைப் பதக்கம்.

ராயல் விமானப் படை மதிக்கத் தகுந்த சேவைப் பதக்கம்.

**ராயல் விமானப் படை நீண்ட சேவை நன்னடத்தைப் பதக்கம்.**

இந்தியர் நீண்ட சேவை நன்னடத்தைப் பதக்கம் (இந்திய இராணுவத்திற்கு).

ராயல் தென்னுப்பிரிக்க எல்லைப்படை நீண்ட சேவை நன்னடத்தைப் பதக்கம்.

மன்னரின் ஆப்பிரிக்கத் துப்பாக்கிப் படை நீண்ட சேவை நன்னடத்தைப் பதக்கம்.

இந்தியர் மதிக்கத் தகுந்த சேவைப் பதக்கம் (இந்திய இராணுவத்திற்கு).

டிரான்ஸ் ஜோர்டான் எல்லைப்படை நீண்ட சேவை நன்னடத்தைப் பதக்கம்.

மதிக்கத் தகுந்த சேவைக்கான ஆப்பிரிக்கப் போலீஸ் பதக்கம்.

ராயல் கன்னடியக் குதிரைப் போலீஸ் நீண்ட சேவைப் பதக்கம்.

குடியேற்றப் போலீஸ் மற்றும் தீயணைப்புப் படை நீண்ட சேவைப் பதக்கம்.

தொண்டர் அலுவலர் அணி.

தொண்டர் நீண்ட காலச் சேவைப் பதக்கம்.

தொண்டர் அலுவலர் அணி (இந்தியாவுக்கும், குடியேற்றங் கட்கும்.

குடியேற்றத் துணைப்படை அலுவலர்கள் பதக்கம்.

குடியேற்ற துணைப்படை நீண்ட காலச் சேவைப் பதக்கம்.

நன்கு சுடுதலுக்கான பதக்கம் (கப்பற்படை).

இராணுவ நீண்டகாலச் சேவைப் பதக்கம்.

இம்பபீரியல் இயாமன்றி நீண்ட காலச் சேவைப் பதக்கம்.

உள்நாட்டுப் படை அணி.

திறமை அணி.

உள்நாட்டுத் திறமைப் பதக்கம்.

திறமைப் பதக்கம்.

தனிச் சேம (ரிசர்வ்) நீண்ட சேவை நன்னடத்தைப் பதக்கம்.

ராயல் கடற்படை சேம அலுவலர்கட்கான அணி.

ராயல் கடற்படைச் சேமப் பணி அலுவலர்கட்கான அணி.

ராயல் சேமக் கடற்படை நீண்ட சேவை நன்னடத்தைப் பதக்கம்.

ராயல் கடற்படை சேமப் பணி நீண்ட சேவை நன்னடத்தைப் பதக்கம்.

ராயல் கடற்படை துணை நோய்த் தளச் சேமம் நீண்ட சேவை நன்னடத்தைப் பதக்கம்.

ராயல் விரைவுக் கப்பற்படை சேமம் நீண்ட சேவை நன்னடத்தைப் பதக்கம்.

ராயல் கப்பற்படை வான் தந்தித் துணைச் சேமம் நீண்ட சேவை நன்னடத்தைப் பதக்கம்.

விமானத் திறமைப் பரிசு.

மன்னரின் பதக்கம் (இராணுவப் படைகளுள் முதல்தரத் துப்பாக்கிச் சூட்டிற்கு).

ராக்கட் கருவித் தொண்டர் நீண்ட சேவைப் பதக்கம்.

£ தனிக் காவலர் சேவைப் பதக்கம்.

தென்னாப்பிரிக்க யூனியன் நினைவுப் பதக்கம்.

செய்ன்ட் ஜான் நன்மதிப்புச் சேவைப் பதக்கம்.

---

& போர்ப் பதக்கங்கள் (எந்தப் போர் நடவடிக்கைக்காக வழங்கப்பட்டதோ அந்தத் தேதி வரிசை முறைப்படி)
துருவப் பதக்கங்கள் (தேதி வரிசைப்படி)
ராயல் விக்டோரியன் பதக்கம் (தங்கம், வெள்ளி, வெண்கலமும்).
பேரரசுச் சேவைப் பதக்கம்.

† முற்காலத்தில் வணிகக் குழு (Board Trade).
கப்பல் அமைச்சர், போர் போக்குவரத்து அமைச்சர் இவர்களின் பரிந்துரைகளின் பேரிலும் இப்பொழுது போக்குவரத்து அமைச்சர் பரிந்துரையின் பேரிலும் வழங்கப்படும் ராக்கெட் உயிர்காக்கும் கருவி கம்பெனி அல்லது படைப் பிரிவின் அலுவல் முறைப் பதக்கம்.

'லீக் ஆப் மெர்சி' நன்மதிப்புப் பதக்கம்.

மருத்துவத் தொண்டர் சேவைப் பதக்கம்.

தென்னாப்பிரிக்கப் போர்ப் பணிப் பதக்கம்.

அயல்நாட்டு முறைகள் (வழங்கப்பட்ட தேதி வரிசைப்படி).

அயல்நாட்டு அணிகள் (வழங்கப்பட்ட தேதி வரிசைப்படி).

அயல்நாட்டுப் பதக்கங்கள் (வழங்கப்பட்ட தேதி வரிசைப் படி).

**குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச்சாலை கூட்டு இயக்குநரின் பரிசிலனைக்காக ஆவணங்களை அனுப்புவதிலும் வழக்கு மன்றங்களில் அவர் வருகைக்குக் கேட்பதிலும் காவல் துறை அலுவலர்களும் பிற அலுவலர்களும் தெரிந்து கொள்ள வேண்டிய அறிவுரைகள்.**

**குறிப்பு.**—குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைக் கூட்டு இயக்குநரை உண்மையிலேயே முக்கியமாகவுள்ள வழக்குகளில் மட்டும் கலந்து பேச வேண்டும். தொடர்புள்ள காவல்துறைத் துணைத் தலைவரின் ஒப்பளிப்பினை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளாமல் காவல் துறை அலுவலர்கள் அவரைக் கலந்து பேசக் கூடாது.

## ஆவணங்களை அனுப்புதல்.

1. கூட்டு இயக்குநரின் பரிசிலனைக்கு விரும்பப்பட்ட ஆவணங்கள், முடியுமானால் எழுதாத தாள்கட்கிடையே அல்லது மெல்லிய அட்டைகட்கிடையே தட்டையாக வைக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்வதற்கு மிகப் பெரியனவாக இருக்குமாயின், அவை மடிக்கப்படாமல் சுற்றப்பட வேண்டும். மடிப்பதைத் தவிர்க்க முடியாவிடின் பழைய மடிப்புகளிலேயே மறுபடியும் மடிப்பதற்கேற்ற கவனம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## தனித்தறியும் அடையாளங்கள்.

2. எல்லா ஆவணங்களையும் தனியே தெரிந்துகொள்ளக் கூடிய A, B. C அல்லது (1), (2), (3) முதலிய அடையாளங்களைக் கொண்டிருக்க வேண்டும். ஆவணங்களின் மேல் வேறு எவற்றை யேனும் எழுதுதலைத் தவிர்க்க வேண்டும். உறைகள் அல்லது மேற்

கூட்டுடன் கடிதங்களை அனுப்புவதாயிருந்தால் அதன் மேற்கூடுகள் உள்ளே இருக்கும் கடிதத்திற்குள்ள துணை அடையாளம் அல்லது எண் இவற்றைப் பெற்றிருக்க வேண்டும். இவ்விதம் ஒரு கடிதம் 'A' என்று குறிப்பிட்டால் அதன் மேலுறை A-1 என்று குறியிடப்பட வேண்டும் அல்லது கடிதத்துக்கு 1 என்று குறிப்பிட்டிருந்தால் மேலுறை I-a எனக் குறிப்பிடப்பட வேண்டும். இதற்கு முன்பே வழக்கு மன்றச் சான்றுவணமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள ஆவணங்களில் வழக்கு மன்றக் குறியீடுகளைக் கவனித்து மேற்கொள்ள வேண்டும்.

### தாள்களைத் தைத்தல் அல்லது கட்டுதல்.

3. தாள்களைச் சேர்த்துத் தைப்பது அல்லது கட்டுவதில் எழுதிய பகுதிகள் எவையேனும் சேதமாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

### ஆய்வுக்குக் கருதப்பட்ட கையெழுத்துகளை அல்லது எழுதிய பகுதியைச் சுழித்தல்.

4. எதில் கூட்டு இயக்குநரின் அபிப்பிராயம் தேவைப் படுகிறதோ அல்லது அவர் கவனம் செலுத்தப்பட வேண்டுமோ அந்தக் கையெழுத்தை மட்டும் அல்லது எழுத்துள்ள பகுதியாக இருந்தால் அந்தக் குறிப்பிட்ட பகுதியையும் (கறுப்பு, ஈயம் அல்லது சிவப்பு அல்லது நீலம்) பென்சிலால் சுழித்துத் தெளிவாகக் காட்ட வேண்டும்.

### மைக்குறிகள் தவிர்க்கப்பட வேண்டும்.

5. ஆய்வுக்கோ, ஒப்புநோக்குவதற்காகவோவுள்ள கையெழுத்துக்கள் அல்லது எழுதியதின் பகுதிகள் இவற்றை வட்டமிடுவது அல்லது குறிப்பிடுவதைக் கூர்மையான பென்சிலால் கவனமாகவும் சுத்தமாகவும் செய்தல் வேண்டும். வட்டமிடுதல் முழுமையாக அமைவதோடு வெறும் அடிக் கோடுகளிடுதல், பிறைக் குறிகளிடுதல் ஆகியவை தவிர்க்கப்பட வேண்டும். பக்கத்தில் எதிரே பிற எழுத்துக்களிருப்பின் அவற்றைப் பிரிக்கும் கோடு வெளிப் பகுதிகளைத் தெளிவாக விலக்க வேண்டும். இச் செயலில் ஏற்படும் கவனக் குறைவு தேவையற்ற மிகுதியான வேலைக்குக் காரணமாவதோடு, தவறுகளிலும் கொண்டு போய்விடும். வரிப் பிளந்தும் சேர்த்தும் எழுத்தின் மேல் விளிம்பியும் எழுதியிருத்தல். பத்திரங்களில் உள்ள கையெழுத்துக்கள், வேறு கையெழுத்துக்களும் குறிப்புகளும் எழுத்துக்களுமிருக்கும்

அரசாங்க நாணயச் செலாவணி நோட்டுகளின் மறுபுறம் உள்ள கையெழுத்துக்கள் ஆகிய இவற்றில் தனிக் கவனம் செலுத்த வேண்டும்.

## ஒப்பு நோக்குதற்கான மாதிரிகளும் எழுத்துக்களும்

6. ஐயுற்ற நபர் அல்லது நபர்களின் மாதிரிக் கையெழுத்துக்கள் சிரமமில்லாமல் எவ்வளவு அதிகமாகக் கிடைக்கக்கூடுமோ அவ்வளவினையும் பெற்று அனுப்புவது உசிதமாகும். இத்தகைய மாதிரிகளைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்த வேண்டும். உண்மையானதென்று திட்டவட்டமாகத் தெரியவந்தாலன்றி எந்த எழுத்தும் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவோ உண்மையானதென்றோ தகுதியளிப்பது கூடாது.

7. ஒப்புநோக்குவதற்காகக் கையால் எழுதப்பட்டவைகளைத் தேர்ந்து எடுப்பதில், கூடியவரை ஐயத்திற்குரிய ஆவணம் எழுதப்பட்ட ஏறக்குறைய அதே காலத்தில் எழுதிய கையெழுத்துக்களைத் தேர்ந்து எடுக்க வேண்டும் அல்லது ஐயுறப்பட்டவர் அல்லது குற்றவாளியின் இப்பொழுதுள்ள கையெழுத்து, கடிதங்களிலோ புத்தகங்களிலோ அல்லது பதிவேடுகளிலோ எளிதில் கிடைக்கும் போது இவ்வாறு செய்தல் வேண்டும்.

8. ஐயுறப்பட்டவர் அல்லது குற்றவாளிகளாகிய பலரிடமிருந்து மாதிரிக் கையெழுத்துக்களை வாங்கும்பொழுது ஒவ்வொரு தனிப்பட்டவரின் எழுத்துக்களையும் தனித்தனிக் காகிதத்தில் வாங்க வேண்டும். அதே காகிதத்தில் வாங்குதல் கூடாது. ஒருவர் தன்னுடைய கையெழுத்தின் பல மாதிரிகளைத் தர வேண்டியிருக்கும் காலங்களில் கூட ஒவ்வொரு மாதிரியையும் தனித் தனித் தாளில் எடுப்பது நல்லது. அவர் மற்ற மாதிரிக் கையெழுத்துக்களை எழுதும்போது அதற்கு முன்னர் எழுதிய காகிதத் துண்டுகளை அவர் கண்ணில் படாமல் அப்புறப்படுத்தி விடும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். மாதிரிக் கையெழுத்துக்களைப் பெறுவதில் அப்பொருளை எழுதும்படி வாசகமாகச் சொல்ல விவாதத்திற்குரிய ஆவணங்களை ஐயுறப் பட்டவர் பார்த்து எழுதும்படி எவ்வாற்றானும் அனுமதிக்கக் கூடாது. ஒரு நீளமான எழுத்துப் பகுதியை எழுத வாசித்த பொழுதோ அல்லது நகல் எடுக்கக் கொடுக்கப்பட்ட பொழுதோ அதனை எழுத எடுத்துக்கொண்ட சரியான நேரம், எழுதும் போது காகிதம் இருந்த நிலை அதாவது கடினமாகவுள்ள

தட்டையான மேற்பரப்பில் வைக்கப்பட்டிருந்ததா, உள்ளங் கையில் பிடிக்கப்பட்டிருந்ததா, தொடையின் குறுக்கே வைக்கப் பட்டிருந்ததா அல்லது வேறெந்த நிலையிலாயினும் வைக்கப் பட்டிருந்ததா என்பதைக் கவனிக்க வேண்டும். மாதிரி எடுக்கும் அலுவலர் அதில் மேலே கண்ட விவரங்களோடு எழுதியவரின் பெயரும் எழுதிய தேதியும் குறிக்க வேண்டும். அதே காகிதத்தில் அந்த மாதிரிக் கையெழுத்துத் தன் முன்னிலையில் எழுதப்பட்ட தென்று அவர் சான்றும் கொடுக்க வேண்டும்.

## எழுதியவற்றிற்குத் தேதியிடுதல்.

9. ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள எழுதியவைகளில் தேதி இல்லையானால் எழுதின உத்தேசத் தேதியை அதில் பென்சிலால் எழுத வேண்டும். உதாரணமாக "ஜூலை 1904 இல் எழுதப் பட்டதெனச் சொல்லப்படுகிறது" என்பதுபோல். அதே போல் வாதத்திற்குரிய ஆவணம் தேதியில்லாமலிருக்குமாயின் அது எழுதப்பட்ட உத்தேச அல்லது நிகழக்கூடிய தேதியை அல்லது அதைப் பெற்றுக் கொண்ட தேதியைக் கண்டறிந்து குறிப்பிட வேண்டும்.

## பேனாவும் எழுதும் அட்டையும்.

10. சந்தேகப்பட்ட ஒருவர் எழுதியவற்றைப் பரிசீலிக்க வேண்டியிருப்பின் அவருடைய பேனாவையும், எழுதும் அட்டையையும் கிடைத்தால் அனுப்பவேண்டும். இம்மாதிரியான வற்றில் பேனாவின் கைப்பிடியில் எழுதியவரின் பெயரையுடைய துண்டுக் காகிதம் ஒன்று ஒட்டப்பட வேண்டும். அதே மாதிரி சீட்டு ஒன்றை எழுதும் அட்டையிலும் ஒட்ட வேண்டும்.

## அரக்கு முத்திரைப் பதிவுகள்.

11. அரக்கு முத்திரைப் பதிவுகளைச் சோதனைக்கு அனுப்பும் போது மெழுகு அல்லது அரக்கு, அஞ்சல் போக்குவரத்தில் உடைந்து போகாவண்ணம் கட்டி அனுப்புமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அரக்குப் பதிவுடைய பகுதியின் ஒவ்வொரு பக்கத்திலும் மெல்லிய பஞ்சுத் திரளினை வைப்பது தகுந்த பாதுகாப்பைத் தரும்.

## எழுதிய காலம் அல்லது தேதி வேண்டப்படும் பத்திரங்களைப் பாதுகாத்தல்.

12. ஆவணத்தின் எழுதிய காலம் ஐயப்பாட்டிற்குரியதாக விருக்கும்போது ஆவணங்களைக் கைப்படாமலும் தூசி படாமலும்

முக்கியமாக விரல் அடையாளங்களும் மற்ற அடையாளங்களும் எழுத்துக்களில் படாதவாறும் பார்த்துக்கொள்ள வேண்டும். எழுதுவதற்கு உபயோகப்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் பேனாவும் மைக்கூடும் கிடைத்தால் அவற்றை அனுப்பி வைக்க வேண்டும்.

## ஆவணங்களோடு அனுப்பும் மேற்கடிதம்.

13. ஆவணங்களைச் சோதனையாளருக்கு ஆய்வுக்காக அனுப்பும் போது கவனமாக அதனைக் கட்டிப் பதிவுக் கடிதம் அல்லது பதிவுப் பார்சல் அஞ்சலாக அவருடைய அலுவலக முகவரிக்கு ஒரு குறிப்பாணை அல்லது கடிதத்துடன் பின்கண்ட செய்திகளோடு அனுப்ப வேண்டும்.

(1) எழுதப்பட்டுள்ள மொழி என்னவென்பதைக் குறிக்க வேண்டும்.

(2) சான்றுவணங்களின் எண்ணிக்கையையும் அவற்றைத் தனித்தனியே வேறுபடுத்திக் காட்டும் அடையாளங்களுடனும் மற்ற அவசியமான விபரங்களுடனும் குறிக்க வேண்டும். அபிப்பிராயம் கேட்டுள்ள ஐயப்பாட்டிற்குள்ள ஆவனங்களுக்கும் ஒப்புநோக்குதற்குரிய ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆவணங்களுக்கும் இவ் விவரங்களைத் தனியாகக் காட்ட வேண்டும். பின் சொல்லிய ஒப்புக்கொள்ளப்பட்ட ஆவணங்களை அவைகளை எழுதியவர்களுக் கேற்ற முறைப்படி பிரித்து வைக்க வேண்டும்.

(3) கருத்துரை விரும்பப்படுகிற குறிப்பிட்ட எழுத்துக்கள் அல்லது எழுத்துக்களின் பகுதியைப் பற்றித் தெளிவாகவும் சரியாகவுமுள்ள வினாவினைக் கூட்டு இயக்குநர்க்கு அனுப்ப அனுப்ப வேண்டும்.

(4) தலைப்பு எண், தேதி, குற்றஞ்சாட்டுபவர். சாட்டப்பட்டவர் இவர்களின் பெயர்கள், குற்றச்சாட்டுத் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரிவு, ஆகிய வழக்கிற்கான விவரங்களை எழுதப்பட்டதற்கான சூழ்நிலையைப் பற்றியும் எவையேனும் பிற பொருள்கள் பற்றியும் அல்லது கூட்டு நெறியாளருக்குத் தெரிவிக்க வேண்டிய குறிப்புகள் பற்றியும் உள்ள தன் கருத்துரையோடு வேண்டும்.

(5) வழக்கு ஏற்கனவே தொடங்கப்பட்டு இருந்தால், அடுத்த விசாரணைக்குக் குறிப்பிடப்பட்டுள்ள தேதியை, விசாரணைக்குரிய வழக்கு மன்றத்தின் பெயரோடு தெரிவிக்க வேண்டும்.

## நீதிமன்ற வருகைக்கான வேண்டுகோள்களும் அழைப்புக் கட்டளைகளும்.

**14.** நீதிமன்ற வருகைக்கான அழைப்புக் கட்டளைகளையும் கூட்டு இயக்குநர் குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைக் காவல் துறை (புலனாய்வுப் பகுதி) துணைத் தலைவர் அலுவலகம், சென்னை—4 என்ற முகவரிக்கு எழுதி அனுப்ப வேண்டும்.

15. நீதிமன்ற வருகைக்கான அழைப்புக் கட்டளையைக் கூட்டு இயக்குநருக்கு அனுப்பும்போது ஆய்வாளர் அனுப்பிய கருத்துரையின் எண்ணும் தேதியும் குறிப்பிடப்பட வேண்டும்.

16. கூட்டு இயக்குநர் நீதிமன்றத்துக்கு வர வேண்டிய தேவை ஏற்படுகையில் முடிந்தவரை நீண்டகால அறிவிப்புத் தர வேண்டும். அவருடைய பிற ஈடுபாடுகளுக்கு ஏற்பப் பொருத்தமான தேதிகளை அமைத்துக்கொள்ள முயற்சிகள் செய்யவும் வேண்டும். ஒரு முக்கியமான வழக்கின் அவசர அழைப்புக் காரணமாகவோ அல்லது வேறு சூழ்நிலை காரணமாகவோ கூட்டு இயக்குநர் நீதிமன்றத்துக்கு வருதற்கான தற்போதுள்ள நிகழ்ச்சி முறையை மாற்றிக் கொள்ளும்படி சில சமயங்களில் ஏற்படுகிறது. அப்படிப்பட்டவற்றில், அவர் வருவதற்கு வேறு தேதிகள் அவசியமாக இருக்கும்பொழுது நீதிமன்றத்தின் ஏற்புக்காக அவர் புதிய தேதிகளைத் தெரிவித்துக் கொள்வார்.

## ஆணைக் குழு அனுப்புதல்.

17. குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைத் துணை இயக்குநரை விசாரணை செய்வதற்காக ஒரு ஆணைக் குழுவை அனுப்புவதாக முடிவு செய்யப்பட்டவற்றில் எந்தத் தேதிகள் வசதிப்படுமென்பதை முதலில் அவரிடமிருந்து கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும். கூட்டு இயக்குநர், அவர் தலைமையிடத்தில் இருக்கின்ற ஒரு தேதியைத் தெரிவிப்பார்.

## சோதனையாளரோடு பேசுவதற்கு அலுவலர்களை அனுப்புதல்.

18. எதாவதொரு தனி வழக்கில் குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைக் கூட்டு இயக்குநரோடு பேசித் தெரிவதற்கு ஒரு அலுவலரை அனுப்பி வைக்க விரும்பிய பொழுது

கூட்டு இயக்குநர் இருக்கும் தலைமை இடத்தில் அவர் இருக்கின்ற தேதிகளையும், அனுப்பப்படும் அலுவலர் அவரை வசதியாக எப்பொழுது பார்க்கலாமென்பதையும் முன்கூட்டியே விசாரித்துக் கொள்ள வேண்டும்.

### சான்றினைச் சோதனை செய்வதற்கு முன்னர் சோதனையாளருடன் கலந்து பேசுதல்.

19. வழக்குக்குப் பொறுப்பாகவுள்ள அரசாங்க வழக்கறிஞர் அல்லது அரசாங்கக் குற்ற விசாரணை வழக்கறிஞர் இயலும் பொழுது கூட்டு இயக்குநர் சோதனை செய்வதற்கு அல்லது சான்று தருவதற்கு முன்பு அவரோடு தனித்து முன்கூட்டிக் கலந்து பேசுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

### பார்வைக் குறிப்புகளின் முடிவை அலுவலர்கள் தெரிவித்தல்.

20. கூட்டு இயக்குநருக்குப் பார்வைக் குறிப்பு அனுப்பிய எல்லா அலுவலர்களும் காலப் போக்கில் அத்தகைய குறிப்பின் இறுதி முடிவை, சிறப்பாகக் கையெழுத்தைப் பற்றிய முடிவை அவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

### சோதனையாளரைத் தங்க வைக்கக் கூடாது.

*21. குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைக் கூட்டு இயக்குநர், நீதிமன்றங்களுக்கு வருவதை அவர் நிகழ்ச்சி நிரலின்படி பின்பற்ற வேண்டியிருப்பதாலும் பயணம் செய்து கொண்டிருக்கும்போதுங்கூட அவர் வேலைகளைக் கவனிக்க வேண்டியிருப்பதாலும் நீதிமன்றங்களும் வழக்குத் தொடரும் அலுவலர்களும், அவருடைய சாட்சி விசாரணையைத் தாமதமின்றி செய்து முடிக்க ஏற்பாடு செய்வதோடு தேவையான நேரத்துக்கு மேலதிகமாக அவரை நிறுத்தி வைத்தல் கூடாது.

### குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைக் கூட்டு இயக்குநரின் சேவையைப் பெறுவதற்கான விண்ணப்பங்களையும் அதற்காகத் தொகை செலுத்துவதையும் ஒழுங்குபடுத்தும் விதிகள்.

1. விண்ணப்பங்கள் கூட்டு இயக்குநர் குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலை, மைலாப்பூர், சென்னை-4-க்கு நேரே அனுப்பப்பட வேண்டும்.

---

*அ. ஆ. (MS.) கைபி எண் 2514, உள்துறை, ஆகஸ்டு 6.

2. ஏற்றுக் கொள்ளத் தகுந்த விண்ணப்பங்கள் மூன்று வகைப்படும் :—

(அ) காவல் துறையிலிருந்தும் குற்ற விசாரணை நீதி மன்றங்களின் தலைமை அதிகாரிகளிடமிருந்தும் இம் மாநிலத்தின் உயர்நீதிமன்றத்திலிருந்தும் வரும் விண்ணப்பங்கள்.

(ஆ) தமிழ் நாடு அரசாங்கத்தின் பிற துறைகளின் அதிகாரி களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள்.

(இ) மாநகராட்சி மன்றங்கள், ஜில்லா போர்டுகள், நகராட்சிகள், உள்ளாட்சி மன்றங்கள், பல்கலைக் கழகங்கள், ஆகியவற்றிலிருந்து வரும் விண்ணப்பங்கள், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகங்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் நேரே பெறப்படும். மாநகராட்சி மன்றங்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் நேரே பெறப்படும். ஆனால் மற்ற உள்ளாட்சி மன்றங்களிலிருந்து வரும் விண்ணப்பங்கள் உள்ளூர் மாவட்டக் குற்ற இயல் நீதிபதியின் மூலம் அனுப்பப்பட்டால் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பத்தை அனுப்பி வைப்பதற்கு முன்னர் மாநிலக் குற்றம் துலக்கும் விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைக் கூட்டு இயக்குநரைக் கலந்தாலோசிப்பது நல்லது என உள்ளூர் மாவட்டக் குற்ற இயல் நீதிபதி தன்னிறைவு கொள்ளுதல் வேண்டும்.

3. 'இ', 'ஈ' வகுப்புகளின் கீழ் வரும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால் குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலை கூட்டு இயக்குநர் அவைகளைப் பிற வேலைக்கு இடையூறின்றி ஏற்றுக்கொள்ள இயலாதென்று எண்ணுவாராஞல் அவைகளை மறுத்து விடலாம்.

4. 'அ' வகுப்பில் வருவனவற்றிற்கு எந்தக் கட்டணமும் விதிக்கப்படமாட்டாது. 'ஆ' வகுப்பில் கருத்துரை வழங்கப்பட்ட ஒவ்வொன்றிற்கும் கருத்துரை, புகைப்படச் செலவு, சாட்சி கூறுதல் ஆகிய எல்லாவற்றிற்குமாக 220 ரூபாய்க் கட்டணம் விதிக்கப்படும். 'இ' வகுப்பில் கருத்துரை வழங்கப்பட்ட ஒவ்வொன்றிற்கும் கருத்துரை, புகைப்படச் செலவு ஒரு நாளைக்கு மட்டும் சாட்சி கூறுதல் ஆகிய எல்லாவற்றிற்குமாக 250 ரூபாய் கட்டணம் விதிக்கப்படும்.

கீழே குறிப்பிட்ட 12-ஆவது விதிக்குட்பட்ட 'இ' வகுப்புகளுக்குரிய பயணப் படி இந்தக் கட்டணத்தில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.

5. இவ்விதியின் இறுதியில் கூறப்பட்டிருக்கும் விலக்குக்கு உட்பட்டு எல்லாவற்றிலும் இந்தக் கட்டணம் முன்பணமாகக் கொடுக்கப்படுவதோடு ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வருமாறு ஒரு சான்றிதழோடு சேர்த்து அனுப்பப்பட வேண்டும் :—

[redacted] 196 தேதியில் [redacted] ரூபாய் இருநூற்று இருபது/இருநூற்று ஐம்பது கூட்டு இயக்குநர் குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைக் கட்டணக் கணக்கில் ...க்காகக் (இங்கே வழக்கின் விவரங்களைப் பூர்த்தி செய்யவும்) கருவூலத்தில் வைப்புந் தொகையாகச் செலுத்தப் பட்டுள்ளது. இந்தத் தொகை XIII காவல் துறை—வரவுகள்—பலவகை—தமிழ் நாடு குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலை கூட்டு இயக்குநர்—கட்டணம்.

கருவூல அலுவலர் கையொப்பம்.

மேலொப்பமிடப்பட்டது.

வழக்கைப் பணிந்தனுப்பும் அலுவலர் கையொப்பம்.

'ஆ' வகுப்பு விண்ணப்பங்களில் கூறப்பட்டுள்ள **தனிச்** சூழ்நிலைகளில் இத்தகைய சான்றிதழ் இல்லாமலும் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும். ஆனால் சான்றிதழை எவ்வளவு விரைவில் அனுப்ப முடியுமோ அவ்வளவு விரைவில் அனுப்ப வேண்டும்.

6. புகைப்படங்களின் விலை மிக அதிகமாக இருப்பின் 'ஆ' வகுப்பு வழக்குகளுக்குக் கட்டணம் 180 ரூபாயுடன் புகைப் படங்களின் விலையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும். 'இ' வகுப்பு வழக்குகளில் கட்டணம் 200 ரூபாயுடன் புகைப் படங்களின் விலையையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

'இ' வகுப்பு வழக்குகளில் செலவு செய்வதற்கு முன்பே அதிகப்படியாகும் செலவைப் பற்றி வழக்கை அனுப்பிய அதிகாரிகட்குத் தெரிவிக்க வேண்டும். அவர்கள் குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைக் கூட்டு இயக்குநர் வழக்கில் ஆய்வு தொடங்குவதற்கு முன்பே இத் தொகை வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டது என்றும் சான்றிதழ் கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

7. (i) கருத்துரை வழங்காது புகைப்படங்கள் மட்டும் எடுக்கப்பட்டிருக்கும் வழக்குகளில் புகைப்படங்களுக்கான சரியான செலவுத் தொகை மட்டும் 35 ரூபாய்க்குக் குறையாமல் விதிக்கப்படும்.

(ii) சோதனை முழுவதும் முடிந்து எந்தவிதக் கருத்துரையும் வழங்க முடியாத வழக்குகளில் மொத்தக் கட்டணமாக 100 ரூபாய் விதிக்கப்படும்.

சாட்சி தேவையில்லை என்றாலும் அல்லது ஆணைக் குழு சாட்சியை விசாரித்தாலும் கட்டணத்தில் எவ்விதமான தள்ளு படியும் அனுமதிக்கப்படமாட்டாது.

8. 'இ' வகுப்பு வழக்குகளில் நீதிமன்றத்திலோ அல்லது ஆணைக் குழுவிலோ சாட்சி கூறும் முதல் நாளுக்குப் பிறகு அவ் வதிகாரி நிறுத்தி வைக்கப்படும் ஒவ்வொரு நாளுக்கும் கூடுதல் கட்டணமாக 100 ரூபாய் விதிக்கப்படும்.

9. 'இ' வகுப்பு வழக்குகளில் குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைக் கூட்டு இயக்குநர் தன்னுடைய மற்ற வேலைகளுக்கு இடையூறு இல்லாதிருப்பின், நீதிமன்றங் களுக்கு வரச் சித்தமாயிருப்பார். ஆணைக் குழுவின் மூலம் சாட்சியை விசாரிக்க வேண்டுமாயின் அத்தகைய ஆணைக் குழு சென்னையிலுள்ள குற்ற விசாரணை மாநில நீதிபதி ஒருவருக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

10. குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைக் கூட்டு இயக்குநரை வழக்கின் தேவைக்கு ஏற்பக்கூடியவரை குறைந்த கால அளவிற்கே நிறுத்தி வைக்குமாறும் அவர் ஒரே பயணத்தில் அடிக்கடி பல நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டி யிருப்பதால் வருவதற்கு அவர் குறிப்பிடும் நேரத்தையும் தேதிகளையும் இயன்றவரை ஏற்றுக் கொள்ளுமாறும் நீதிமன்றத் தலைமை அதிகாரிகள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

11. எந்த வழக்கிலாவது அவ்வழக்கிற்காகச் செலவழிக்கப்பட்ட காலத்துக்கும் உழைப்புக்கும் ஏற்ப வழக்கமான தொகை போதவில்லையாயின் ஒரு அதிகக் கட்டணத்தை விதிக்கும் உரிமை தமிழ்நாடு அரசு உள்துறைக்கு உண்டு.

12. சாட்சி கூறுவதற்காகவோ அல்லது வேறு எக்காரணத்துக்காகவோ அரசாங்கக் குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைக் கூட்டு இயக்குநர் பயணம் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டால், அவருடைய சேவையைப் பயன்படுத்திக் கொள்ளும் அதிகாரி, தமிழ்நாடு அரசாங்கம் பயணத்திற்காக விதித்துள்ள விகிதப்படி பயணப் படியைக் கொடுக்க வேண்டும். அதிகாரியோடு செல்லும் சேவகருக்கும் ( Peon ) தமிழ்நாடு அரசாங்கம் சேவகருக்கு விதித்துள்ள விகிதத்தில் பயணப் படி கொடுக்கப்பட வேண்டும்.

'இ' வகுப்பு வழக்குகளில் பயணப் படியும் 8-ஆவது விதியின் படியுள்ள கட்டணமும் குற்றம் துலக்கும் மாநில விஞ்ஞான ஆராய்ச்சிச் சாலைக் கூட்டு இயக்குநர் பயணத்தைத் தொடங்குவதற்கு முன்னர் வைப்புத் தொகையாகச் செலுத்தப்பட்டிருப்பதாக வழக்கு மன்றத்தின் தலைமை அலுவலர் சான்றிட வேண்டும்.

## ஒருவரை அடையாளம் தெரிவதற்குரிய மச்சங்கள், தழும்புகள், மற்ற வகைகளையும் பதிவு செய்வதற்கான அறிவுரைகள்.

1. ஒருவரைப் போதிய அளவு தனியாக அடையாளம் கண்டு கொள்வதற்காக வருணிக்கவும் வருணிக்கப்பட்டவர் இவர்தான் என்று பிறருக்குச் சான்றாகத் தெரிந்து கொள்ளவும் பல செய்திகளைக் குறிப்பது இன்றியமையாத வழக்கமாகவுள்ளது. பெரும்பான்மையும் எவ்வளவுக்கெவ்வளவு மனித இனத்துக்குப் பொதுவாக அமையாத ஒரு தனித்தன்மை ஒருவரிடம் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அது அவருக்குள்ள ஒரு சிறப்புத் தன்மையாகிறது. எனவே அடையாளம் கண்டு கொள்வதற்கு ஒரு மதிக்கத்தக்க கருவியாக உள்ளது. எடுத்துக் காட்டாக ஒரு மனிதனுக்கு முகத்தில் பெரியம்மையால் குழி விழுந்துள்ளது என்றால் பெரும்பான்மையோருக்கு அவ்வாறின்மையால் அவன் குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையுள்ள மனிதர்களுக்குள் ஒருவன் ஆகின்றான் என்பது தெளிவாகின்றது. ஆனால் பெரியம்மையால் உருமாறிய பல மனிதரைப் பார்ப்பதால் அடையாளம் கண்டுகொள்ள இதுமட்டும் போதாது. மேலும் அவருக்கு ஒரு கண் குருடு என்றும் சேர்த்துக் கூறப்பட்டால் இவ்விரண்டு தனித்தன்மைகள் ஒரு சேரப் பெற்றிருப்பவர்களின் தொகை சிறிதாகும். இவர் இடது கண் குருடானவர் என்று குறிப்பிட்டால் அத்தகையவர் எண்ணிக்கை இன்னும் சிறிதாகும். மேலும் அவருக்குத் தனது வலது கையின் பின்புறத்தில்

ஒரு ரூபாய் அகலமுள்ள தழும்பு இருப்பதாகவோ அல்லது இடது பெருவிரலின் கடைசிக் கணுவை இழந்து உயரம் ஐந்தடி பத்தங்குலம் இருப்பதாகவோ கூறிவிட்டால் அந்தத் தனி மனிதரைச் சரியாக வரையறுத்துக் கூறினதாக ஆவதோடு இந்த எல்லாத் தனித் தன்மைகளையும் உடைய யாரேனும் ஒருவரே விவரிக்கப்பட்ட நபர் ஆவார் என்பது பெரிதும் ஐயத்திற்கிடமின்றித் தெளிவாகப் புலப்படும். ஆகையால் எவ்வளவுக்கெவ்வளவு அதிக எண்ணிக்கையுள்ள தனித் தன்மைகள் குறிக்கப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அவரைப் பற்றிய விளக்கமும் திருத்தமாக ஏற்படும். அவைகள் மற்ற மனிதர்களிடத்தில் பெரும்பாலும் எவ்வளவுக்கெவ்வளவு பொதுவாக இல்லாமலிருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அடையாளம் காண்பதில் ஏற்படும் தவறுகளுக்கான வாய்ப்புகளும் குறைவாக இருக்கும்.

2. உடையின் வெட்டு, அமைப்பு அல்லது துணியின் வகை, தலைமயிரின் நிறம் அல்லது தோலின் நிறம் ஆகியவை போன்ற இயல்புகள் சில வழக்குகளில் உதவியாகயிருந்தாலும் அவை மிகவும் பொதுவானவையாகவும் மாற்றக் கூடியனவாகவும் இருப்பதால் சாதாரணமாக மதிக்கத்தக்கனவாகா. பொதுத் தன்மைகள் குறைவாகவும் பின்பற்ற முடியாதவைகளாகவும் உள்ள இயல்புகளை நம்புவதே மேலானதாகும்.

3. ஒருவர் மேலிருக்கும் ஒவ்வொரு அடையாளத்தையும் தழும்பையும் அளவிட வேண்டும் என்ற அவசியமில்லை. மிகவும் நன்ருகத் தோன்றும் நிரந்தரமான மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட அடையாளங்களைப் பதிவு செய்து அவற்றின் இடங்களைச் சரியாகக் குறிப்பிட்டால் போதுமானது. முடிவு செய்வதற்கு இயலும் வகையிலாவது, தேர்ந்தெடுக்கப்பட்ட அடையாளங்கள் நிரந்தரமானவையா என்பதில் கவனம் கொள்ள வேண்டும்.

4. அடையாளக் குறிகளைப் பதிவு செய்யும் முறைகளைப் பற்றிய சுருக்கமான அறிவுரைகளைப் பொதுவாகத் தெரிந்துகொள்ளுமாறு அவை கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(1) குறிகளும் தழும்புகளும்.—இவை மதிக்கத் தகுந்தனவாகவும் நிரந்தரமானவையாகவும் இருக்க வேண்டும். அவற்றின்

அளவு, உருவ அமைப்பு, இடம் (தெரிந்தால்) ஏற்பட்டதற்கான காரணம் ஆகிய இவற்றோடு ஒரு நிலையான இடத்திலிருந்து எந்தத் திசையில் எத்தனை அங்குல தூரத்தில் அவை உள்ளன என்பதையும் குறிப்பிட வேண்டும்.

(2) வழக்கமாகக் குறிக்கும் நிலையான இடங்கள்.—

(அ) தலைக்கும் முகத்துக்கும்.—கண் அல்லது வாயின் மூலைகள், காதுகள் அல்லது மூக்குத் துவாரங்கள் ஆகிய இவற்றில் அளப்பதற்கு எது வசதியாக இருக்குமோ அது.

(ஆ) கழுத்துக்கு.—ஏழாவது அல்லது சிறப்பாகத் தெரியும் பின்புறமுள்ள முதுகெலும்பு அல்லது முன்புறத்தில் உள்ள குரல்வளை—

(இ) மேற்கை—முழங்கை முட்டிலிருந்து

(ஈ) கைகளுக்கு நடுவிரலின் முனை.

(உ) உடலின் முன்பகுதிக்கு—தொப்பூழும் அதைச் சார்ந்த நடுக்கோடும்.

(ஊ) பின்புறத்துக்கு—ஏழாவது முதுகெலும்பு அதைச் சார்ந்த நடுக்கோடும்.

(எ) கால்களுக்கு.—முழங்கால் மடக்கின் மையம்.

(3) உடலின் முன்புறத்திலும் பின்புறத்திலும் உள்ள குறிகளை அளக்கும் போது உடலின் மையத்தில் கீழ்நோக்கிக் கற்பனையாக ஒரு கோட்டை வரைந்து கொள்ள வேண்டும். தழும்புகள் இக்கோட்டிற்கு வலமாகவோ இடமாகவோ, தொப்பூழுக்கு மேலோ கீழோ (பின்புறத்தில் ஏழாவது முதுகெலும்புக்குக் கீழோ) இருப்பதாகக் குறிப்பிட வேண்டும்.

(4) உடலின் மையப் பகுதியில் உள்ள ஒரு தழும்பின் தூரத்தை ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து அளந்து பார்ப்பதற்கு, கற்பனைக் கோட்டிற்கு வலமாகவோ இடமாகவோ படுக்கை வாட்டில் அதன் தூரத்தைத் தெரிந்துகொள்ள வேண்டும். அடுத்தபடியாக இந்தக் கற்பனைக் குத்துக்கோடும், படுக்கை வாட்டக் கோடும், தொப்பூழுக்குத் தொடர்பாக வெட்டுகின்ற இடத்திலிருந்து உள்ள தூரத்தை அளக்க வேண்டும். அத்தழும்பு இக்கற்பனைக் கோட்டிலேயே எங்காவது இருந்தால் அவ்விடத்தைக் காட்டுவதற்கு தொப்பூழுக்கு மேல் அல்லது கீழ் உள்ள தூரத்தைக் குறிப்பிடுவது மிகவும் அவசியமாகும்.

(5) அத்தழும்பு வலது உறுப்பில் உள்ளதா இடது உறுப்பில் உள்ளதா என்பதை மாறாது குறிப்பிடுவதோடு அது இருப்பது உட்புறத்திலா, வெளிப்புறத்திலா, மேற்புறத்திலா, கீழ்ப் புறத்திலா என்பதையும் குறிப்பிட வேண்டும்.

எடுத்துக் காட்டுகள் :

(அ) தீப்புண், வட்டவடிவம், விட்டம் 1¼ அங்குலம்; தொப்பூழிலிருந்து 5 அங்குலமும், மையக் கோட்டுக்கு இடப் புறத்தில் 3 அங்குலமும் இருக்கும்.

(ஆ) பின்புறத்தில் நீளவாட்டமான தழும்பு; 3 அங்குல நீளம், மத்தியில் ½ அங்குல அகலம், மேல் கீழாக இரு முனைகளும் கூர்மையானவை, ஏதாவது முதுகெலும்பிலிருந்து 7 அங்குலமும் மையக் கோட்டுக்கு வலது புறத்தில் 2½ அங்குலமும் இருக்கும்.

(இ) தீப்புண், ஒழுங்கில்லாத வடிவம், வலது தொடையின் வெளிப்புறத்தில் உள்ளது. அதன் அருகாமையிலுள்ள நுனி முழங்கால் முட்டியிலிருந்து 5 அங்குல தூரத்தில் உள்ளது.

குறிப்பு.—சோதனையிடும்போது அந்நபர் உள்ளங்கைகளை முன்பக்கமாகத் திருப்பிக் கைகளைத் தொங்க விட்டுக் கொண்டு நேராக நிற்க வேண்டும். அடையாளக் குறிகளைப் பற்றிய குறிப்புகள் புரிந்து கொள்ளுமளவில் மிகவும் சுருக்கமாகவும், அநாவசியமாக நீளமாக இல்லாமலும் இருக்க வேண்டும்.

(6) எவ்வகையான உடற்குறைபாடுகளையும் எப்பொழுதும் பதிவு செய்ய வேண்டும்.

பின்வருவன தலைமையானவையாகும் :

(அ) தலை—முயல் உதடு, ஊறுபட்ட அல்லது இழந்த ஒற்றைக் கண், (ஓரப்பார்வை), ஒண்ணரைக்கண். காது, மூக்கு அல்லது மண்டையோடு இவற்றின் அங்க மாறுபாடு, பல்லில்லா திருத்தல் ;

(ஆ) உடல்—கைவிரல்களும், கால் விரல்களும் இல்லா திருத்தல், அல்லது அதிகமாயிருத்தல், ஒட்டின விரல்கள், உறுப்பு அல்லது உறுப்பின் பகுதி குறைந்திருத்தல், அசைக்க முடியாத மூட்டுகள், பயனற்ற சதைகள் ;

(7) மச்சங்கள், தழும்புகள், ஊனங்கள் இவற்ருேடு சோதனையில் உள்ள ஒருவரைத் தனியாக அடையாளம் தெரிதற்குரிய வழக்கத்துக்கு மாருன உயரம், தத்திப் பேசுதல், தனி மாதிரியான நடை அல்லது போக்கு இவை போன்ற தனி இயல்புகள் அடையாளம் காண்பதில் உபயோகமுள்ளவைகளாக இருக்கும்.

(8) அடையாளம் கண்டு கொள்வதற்குச் சிறந்த சாதனங்களென்று மெய்ப்பிக்க கூடிய எல்லாக் குறிப்புக்களையும் உடைய முழுப் பட்டியலைத் தருவதென்பது செயல் முறையில் இயலாததாகும். சோதனையாளர் தமது பகுத்தறிவைப் பயன்படுத்தி மிகவும் உபயோகப்படத்தக்கனவாகவுள்ளவற்றைக் குறிக்க வேண்டும்.

**மங்கலான விரல் ரேகைகளை விளக்கம் செய்யப் பவுடரைப் பயன்படுத்துவதற்கான அறிவுரைகள்.**

(1) குற்றம் செய்யும் ஒருவர் அக்குற்றம் செய்யப்படும் இடத்தில் உள்ள பல பொருள்களையோ அல்லது சாமான்களையோ அடிக்கடி தொடுதலால் அவற்றின் மேல் தனி விரல் அடையாளங்களை விட்டுச் செல்கிருர். இவ்வாறு விட்டுச் செல்லப்பட்ட விரல் அடையாளங்கள் மங்கலாகவும் அல்லது கண்ணுக்குத் தெரியாமலும் கூட இருக்கலாம். ஆனல் அவ்விரல் அடையாளங்களின் மேல் மென்மையாக சாம்பல் நிறப் பவுடர், கரிய (கிராபைட்) பவுடர், அலுமினியப் பவுடர் அல்லது கரித்தூள் இவற்றைத் தூவுவதால் அவைகள் பெரிதாகவும் தெளிவாகவும் தெரியுமாறு செய்யலாம்; பிறகு, அவற்றைப் பதிவில் வைத்துக் கொள்வதற்காகப் புகைப்படமாக எடுத்துக் கொள்ளலாம். உள்ள அடையாளங்கள் கூடியவரை தெளிவாக இருந்தால் அவற்றை விரிவுபடுத்துவதற்கு முன்னும் பின்னும் புகைப்படம் எடுப்பது நல்லது.

2. மங்கலான அடையாளங்களை விரிவுபடுத்துவதற்கு (1) சாம்பல் நிறப் பவுடர், (2) கிராபைட் பவுடர், (3) அலுமினியப் பவுடர் (4) கரித்தூள் இவைகள் உபயோகப்படும்; கண்ணடி மேலும், பளபளப்பாக்கப்பட்ட மரத்தின் மேலும் உலோகத்தின் மேலும் உள்ள வெளியில் தெரியாத அடையாளங்களை சாம்பல் நிறப் பவுடர் பெரிதாகக் காட்டும். காகிதத்தைத் தவிர மற்ற எல்லாப் பொருள்களிலும் எல்லா வெண்மை நிற மேற்புறங்களிலும் கிராபைட் பவுடரை உபயோகிக்க வேண்டும். சாம்பல்

நிறப் பவுடர், கிராபைட் பவுடர் இரண்டும் பயனற்று விடும் பொழுது அலுமினியப் பவுடரால் அடையாளங்கள் சில சமயம் புலப்படும். (உறிஞ்சு தாள்) பிளாட்டிங் பேப்பர் உட்பட எல்லா வகைக் காகிதங்கட்கும் அடையாளங்களை விரிவாக்க நன்னிதாகப் பொடி செய்யப்பட்ட கரித்தூள் மிகச் சிறந்த சாதனமாக விருக்கிறது. சம அளவு பாலும் நீரும் கலந்த கலவையில் முழுக்கி எடுப்பதால் அவற்றைக் காகிதத்தின் மேல் நிரந்தரமாக இருக்குமாறு செய்துவிடலாம்.

3. பவுடர்களை ஒரு சிறிய, மென்மையான, நுண்ணிய, தூய்மை யான ஒட்டக மயிர்த் தூரிகையினால் தெளிக்க வேண்டும். ஒவ்வொரு வகைப் பவுடருக்கும் தனித் தனித் தூரிகையைப் பயன்படுத்த வேண்டும். தூரிகையைப் பவுடர் குப்பியினுள் விட்டு எடுத்து, தூரிகையில் ஒட்டிக் கொண்டிருக்கும் பவுடரை சோதனை செய்ய வேண்டிய மேற்பரப்பில் இலேசாகத் தெளிக்கவும். மேல் பரப்பைப் பவுடர் மெல்லிதாகவும் சமமாகவும் வருமாறு மெதுவாகவும் மழமழப்பாகவும் தூரிகையினால் பரப்பவும். மேலே அதிகமாக இருக்கும் எல்லாப் பவுடரும் தூரிகையைக் கொண்டே அகற்றப்பட வேண்டும். வாயால் ஊதக் கூடாது. ஊதினால் வாயிலிருந்து வரும் ஈரம் அடையாளங்களைக் கெடுத்து விடும். அடையாளத்தில் விளிம்புகள் புலப்படத் தொடங்கியவுடன் அவ்விளிம்புகள் படிந்துள்ள திசை வாட்டத்தில் பவுடரைத் தூரிகையால் (பிரஷால்) தள்ள வேண்டும். அவற்றின் குறுக்கு வாட்டத்தில் தள்ளக் கூடாது. விளிம்புகளுக்கிடையே கிடக்கும் அதிகப்படியான பவுடர்களை அடையாளத்தின் இடையில் கோடு விழாமலோ, மங்குதல் ஏற்படாமலோ விரிவடையுமாறு தூரிகை யால் அகற்ற வேண்டும். அடையாளங்கள் விரிவடைந்த பிறகு புகைப்படம் எடுக்கும் வரை அவற்றில் வெயிலோ ஈரமோ படாமல கவனமாய்ப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

தமிழ்நாடு மாநிலத்திலுள்ள தனிக் காவல் துறை அலுவலர்களைப் பதிவு செய்வதையும், பணியில் அமர்த்துவதையும் ஒழுங்கு படுத்துவதற்கான அறிவுரைகள் :—

குறிப்பு.—தனிக் காவல் துறை அலுவலர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் போலீஸ் சட்டங்களின்படி கட்டாயமாகப் பதிவு செய்து கொள்ளும் வழியைக் கையாளுவதற்கு முன்னர் அவர்களைத் தாமாகவே வேலையில் சேரும்படி ஊக்கப்படுத்த வேண்டும்.

1. அமைதிக்குலைவிற்கான அச்சநிலை ஏற்படும்போது காவலர்கள், பொது அமைதியைக்காப்பதற்காகச் செய்யும் சட்ட பூர்வமான கடமையில் அவர்களுக்கு உதவுமாறு மிகவும் அண்மையில் குடியிருக்கும் எவரையேனும் அழைப்பதற்கான உரிமை அரசாங்கத்துக்கு இருக்கிறது.

2. தனிக் காவல் பணியாளர்களின் உதவி விரும்பப்பட்டால், கீழே கண்ட சட்டப் பிரிவின்படி விண்ணப்பமிட அதிகாரமுள்ள ஆய்வாளர் (இன்ஸ்பெக்டரின்) தகுதிக்குக் குறையாத ஒரு காவல் துறை அதிகாரியின் விண்ணப்பத்தின் பேரில் அண்மையில் உள்ள மாஜிஸ்டிரேட் (குற்றயியல் நீதிபதி) 1859-ஆம் ஆண்டைய காவல் துறைச் சட்டம் XXIV -இன் 16-வது பிரிவின்படி அவர்களை வேலையில் நியமிக்கலாம். அப்பொழுது, காவல் துறை அதிகாரி அவ்வாறு தேவையென்று கருதுகிற குறிப்பிட்ட காலத்துக்கு அந்தக் குறிப்பிட்ட வேலைக்கு தேவையானவர்களை வேலையில் நியமிப்பது மாஜிஸ்டிரேட் (குற்றயியல் நீதிபதி) டின் கடமையாகிறது. காலம் இருக்குமானால் மாஜிஸ்ட்ரேட் (குற்றயியல் நீதிபதி), தனிக் காவல் துறை அதிகாரிகளின் பட்டியலை சப்-டிவிஷனல் மாஜிஸ்டிரேட்டின் (குற்றயியல் கோட்டத் துணை நீதிபதியின்) முன் அனுமதிக்காக அனுப்பி வைக்க வேண்டும். எவ்வாறாயினும் அவ்வலுவலருக்கு ஒரு பிரதியைப் பணிந்தனுப்ப வேண்டும்.

3. தனிக் காவல் துறை அலுவலர்களுக்குரிய கடமைகள் இந்தியத் துணைப் படையின் சட்டமும் விதிகளின் கீழுமுள்ள கடமைகளில் குறுக்கிடாமலிருக்குமாயின் அந்த நிபந்தனைக்குட்பட்டு இந்தியத் துணைப் படையைச் சேர்ந்தவர்களைத் தனிக் காவல் துறை அலுவலர்களாகப் பதிவு செய்யலாம்.

4. ஒவ்வொரு வட்டார ஆய்வாளரும் (சர்க்கிள் இன்ஸ்பெக்டர்) அவருடைய வட்டாரத்திலுள்ள பெரிய இடங்கள் ஒவ்வொன்றிலும் குடியிருக்கும் இத்தகைய வேலைக்குப் பொருத்தமானவர்களைக் காட்டும் பட்டியல் ஒன்று வைத்திருக்க வேண்டும். ஏனெனில் தேவைப்படும் தனிக் காவல் அலுவலர்களைக் காலதாமதமின்றி (குற்ற இயல் நீதிபதி) மாஜிஸ்டிரேட் நியமிப்பதற்கு அநுகூலமாக அதற்கு வேண்டிய விவரங்களை அவருக்கு அனுப்புவதற்கு அது உதவியாயிருக்கும்.

5. அடிக்கடி ஓய்வு கொடுப்பதற்கும் குறைந்த நேரம் வேலை வாங்குவதற்கும் ஏற்றவாறு பட்டியலிடப்பட்டவர்களின் எண்ணிக்கை போதிய அளவு பெரிதாக இருக்க வேண்டும். செல்வாக்கும், நல்ல நிலைமையுமுள்ள மனிதர்களைக் காட்டக்கூடிய தனிப் பட்டியல் ஒன்றை வட்டார ஆய்வாளர் தயாரித்து வைத்திருக்க வேண்டும். தேவைப்படும்பொழுது அவர்களைத் தணிக்கை அல்லது மேற்பார்வை அலுவலர்களாக நியமித்துக் கொள்ளலாம்.

6. தனிக் காவல் அலுவலர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வர்கள் கூடிய வரை தலைமையானவர்களாகவும் செல்வாக்குள்ளவர் களாகவும் அவர்களுடைய தனிச் செல்வாக்கைச் சுற்றுப் புறத்தில் உள்ளவர்கள் மதிக்கத் தக்க தனிச் செல்வாக்குள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

7. ஒவ்வொரு தனிக் காவல் அலுவலரும் மாஜிஸ்டிரேட்டின் கையொப்பமிடப்பட்டு அவர் சென்று பணி புரிய வேண்டிய இடத்தையும் மணி நேரத்தையும் காட்டக்கூடிய எழுத்து மூலமான ஆணையைப் பெற வேண்டும். வேலைக்கு அழைக்கும் போது அவர்கட்குப் பதவியைக் குறிக்கும் தகுதியான வில்லையும் கொடுக்கப்படும்.

8. இவ்வாறு நியமிக்கப்பட்ட தனிக் காவல் அலுவலர்களின் பட்டியல் ஒன்று உள்ளூர் காவல் நிலையத்தில் தொங்கவிடப்பட வேண்டும். அவர்கள் வருகையைப் பதிவு செய்ய வேண்டிய இடம் ஒரு காவல் (போலீஸ்) நிலையமாகவே இருக்க வேண்டும் என்பதில்லை. அவ்விடத்துக்குத் துணை ஆய்வாளருக்குக் குறை வில்லாத் தகுதியுடைய அலுவலர் ஒருவர் குறிப்பிட்ட நேரத்தில் சென்று தனிக் காவல் அலுவலர்களின் வருகையைச் சரிபார்த்து அவர்களுக்குரிய வேலைகளை எழுத்து மூலமாகப் பிரித்துக் கொடுப்பார். அதில் வேலை நேரத்தையும் அதன் தன்மையையும் குறிப்பிடுவார்.

9. அழைக்கப்பட்ட ஒவ்வொரு தனிக் காவல் அலுவலரும் சாதாரணக் காவல் அலுவலர்களைப் போன்றே அதே அதிகாரங்களும் சலுகைகளும் பாதுகாப்பும் உடையவர்களாய் அதே அதிகாரிகள் சொல்லுகிறபடி கேட்டு அதே கடமைகளைச் செய்பவராவார்கள்.

10. விதிப்படி, தனிக் காவல் அலுவலர்களின் கடமைகள் அவர்களின் சொந்தமான சுற்றுப்புறங்களில் அமைதியைக் காப்பதற்குட்பட்டதாகும். ஆனால் அவர்கட்குக் காவல்துறை வேலைகள் எவையேனும் கொடுக்கப்படலாம். அவர்களைப் பொறுத்த வரையில் ஒழுங்குமுறைத் தேவைகள் எளிதானவையாயிருக்கும். உள்ளூர் வாசிகளால் குற்றமானதென்றும், தொந்தரவு தரக் கூடியதென்றும் கருதப்படக் கூடிய எந்த அலுவல் நிபந்தனைகளையும் வற்புறுத்தக்கூடாது. உதாரணமாக உடற்பயிற்சி பெரும்பான்மையும் பொருத்தமற்றதாகும். அணி வகுப்புகளின் போதும் அல்லது போலீஸ் நிலையத்துக்கு வரும்போதும் சிறிய அலுவலர்களுக்கு வணக்கஞ் செலுத்துதல் தேவையில்லை. தேவைப் படும்போது தொந்தரவு கொடுக்காத வகையில் இவற்றை ஒழுங்குபடுத்த வேண்டும்.

11. கடமை ஆற்றும் காலங்கள் நீளமாக இல்லாது அடிக்கடி ஓய்வுகள் இருக்க வேண்டும்.

12. தனிக் காவல் அலுவலர்களின் வேலையைக் கண்காணித்துத் தணிக்கை செய்வதுடன் வேலைக்கு வராதவர்களைக் குறித்துக் கொள்ளவேண்டும். ஆனால் இக்கண்காணிப்பு முடிந்த வரை பொறுக்கி எடுக்கப்பட்டு, முன்கூட்டியே மற்றவர்கட்குப் பொறுப் பாக ஏற்படுத்திய தனி காவல் அலுவலர்களிடம் ஒப்புவிக்கப்பட வேண்டும்.

13. தனிக் காவல் அலுவலர்களின் உதவிக் குழுவினர் மீது ஒழுங்கு அமைந்த காவல்துறையினர் கடுமையாக இருப்பது அவசியமானால் அவர்களை முடிந்தவரை தனிப் பகுதியினராகக் கையாள வேண்டும். தேவைப்பட்ட ஒழுங்கமைந்த வன்மையை உபயோகிக்கும் வேலையைக் கூடுமான வரை ஒழுங்கமைந்த காவல் துறையினரே செய்தல் வேண்டும்.

14. சென்னை மாநகரில் அழைக்கத் தகுந்தவர்களின் பட்டியல் காவல் ஆணையரால் (போலீஸ் கமிஷனரால்) தயாரிக்கப்படும். 1888-ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் சட்டம் 17-ஆவது பிரிவின்படி அவரே தன் அதிகாரத்தில் தனிக் காவல் அலுவலர்களை நியமிக்கலாம்.

15. எந்தத் தனிக் காவல் அலுவலராவது தக்க காரணமின்றி அவ்வாறு பணி செய்வதற்குத் தவறினாலும் அல்லது மறுத்தாலும்

அல்லது அவரது கடமைகளைச் செய்வதற்காகக் கொடுக்கப்படும் சட்ட பூர்வமான ஆணைகளுக்கு அல்லது கட்டளைகளுக்குக் கீழ்ப் படியாமல் இருந்தாலும் சென்னை மாவட்டம் மாநகரக் காவல் சட்டங்களின் கீழ்க் குற்றவாளியெனத் தீர்ப்புக் கூறப்பட்டு ஐம்பது ரூபாய்களுக்கு மேற்படாத அபராதம் செலுத்துவதற்கு உரியவராவார்.

குறிப்பு.—(1) கடமையில் இருக்கும்போது காயப்பட்டு சென்னை மாநகரிலோ அல்லது வெளியூரிலோ அரசாங்க மருத்துவ நிறுவனத்தில் சேர்க்கப்பட்டுள்ள ஒவ்வொரு தனிக் காவல் அலுவலரும் இலவசமாக இடவசதியும் உணவும் மருத்துவமும் பெறுவதற்கு உரியவராவார். இவ்வாறு காயப்பட்ட அலுவலர் உள்ளூர் நிதி மருத்துவ நிறுவனம் அல்லது நகராட்சி மருத்துவ நிறுவனம் இவற்றில் எதிலேனும் அனுமதிக்கப்பட்டிருந்தால் அந்நிறுவனத்தின் விதிப்படி அவரிடமிருந்து வாங்கப்படும் எல்லாவிதக் கட்டணங்களையும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

(2) ஒரு தனிக் காவல் அலுவலருக்குச் சொந்தமான அல்லது அவரால் கடனுகைப் பெறப்பட்ட மோட்டார் வண்டி அவர் கடமை ஆற்றும் காலத்தில் உபயோகிக்கும்போது சேதப்படுத்தப் பட்டாலும் அல்லது காணுமல் போனாலும் அதற்கேற்றவாறு அத்தகைய சேதத்துக்கான செலவு அல்லது அந்த வண்டியின் விலை மதிப்பு ஈட்டுறுதியினால் (இன்ஷ்யூரன்சினால்) சரிசெய்யப் படாமலோ அல்லது ஈட்டுறுதி அலுவலகத்தால் ஏற்றுக்கொள்ளப் படாமலோ இருந்தால் அந்த அளவுக்கு அரசாங்கத்தால் ஈடு செய்யப்படும். ஆயினும் இந்த உரிமை கேட்பு இத்தகைய செலவு பற்றி அல்லது விலை மதிப்புப் பற்றி சென்னை மாநகரத்திற் குள்ளிருந்தால் காவல் ஆணையர் மூலமாகவும் அல்லது வெளியூராக இருந்தால் எந்த மாவட்டக் காவல் கண்காணிப்பாளரின் கீழ் அந்தத் தனிக் காவல் அதிகாரி அந்தச் சமயத்தில் பணி புரிந்தாரோ அவர் மூலமும், சரியான காலத்தில் உரிமைக் கோரிக்கை செய்து கொள்ள வேண்டும்.

(3) தனது கடமைகளின் நேர்விளைவாக ஒரு தனிக் காவல் அலுவலர் சொந்தச் சொத்து ஏதேனும் சேதப்பட்டிருந்தால் அத்தகைய சேதம் அல்லது இழப்பு இன்ஷ்யூரன்ஸினால் ஈடுசெய்யப்படாமலும், அல்லது இன்ஷ்யூரன்ஸ் அலுவலகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படாமலும் உள்ள அந்த அளவுக்கு நியாயமான இழப்பு ஈட்டுத் தொகை அரசாங்கத்தால் அவருக்கு அளிக்கப் படும். ஆயினும்,

(4) இத்தகைய சேவையின் நேர் காரணமாக ஒரு தனிக் காவல் அலுவலருக்கு எந்தவிதமான காயமோ அல்லது உயிரிழப்போ ஏற்பட்டாலும் அரசாங்கம் நியாயமான ஈட்டுத் தொகையைத் தரும்.

**விளக்கம்.**—முதலாவது குறிப்பின் கீழ் வராதனவற்றில் இவ்வேற்பாட்டின் கீழ் அளிக்கப்படும் ஈட்டுத் தொகையில் அரசாங்கம் அல்லது உள்ளூர் நிதி அல்லது நகராட்சி மருத்துவ மனை இல்லாதவிடத்தில் அந்தத் தனிக் காவல் அலுவலர் தனி மருத்துவர் ஒருவர் மூலம் செய்துகொள்ளப்பட்ட மருத்துவச் செலவுகளும் அடங்கும். இத்தகைய மருத்துவ மனை இருக்குமிடத்தில் ஒரு தனி மருத்துவரை அமர்த்தியிருந்தால் மேற்கண்ட செலவினங்கட்கு அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றிருந்தாலன்றி அந்தத் தனிக் காவல் அலுவலரே அச் செலவை ஏற்க வேண்டும்.

(5) மேற்கண்ட அறிவுரைகட்கும் குறிப்புகட்கும் தனிக் காவல் அலுவலர் என்ற சொற்றொடரில் 'தனிக் காவல் காவலரும்' அடங்கும்.

## குற்றவாளிகளை மருத்துவ அடிப்படையில் விடுதலை செய்வதற்கான நிபந்தனைகள்.

நிபந்தனைகளாவன:—

(1) குறிப்பிட்ட (பெயரை எழுதுக) விடுதலை செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினான்கு நாட்களுக்குள் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் முன்பும் அவர் இல்லாவிடின் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் உள்ள கண்காணிப்பாளரிடம் முன்பு ஆஜராகித் தன்னை விடுதலை செய்வதற்காகச் சிறைக் கண்காணிப்பாளரால் கொடுக்கப்பட்ட நிபந்தனைகளின் பிரதியைக் காட்ட வேண்டும்.

(2) அது முதல் அவர் மாவட்டக் காவல் கண்காணிப்பாளரோ அல்லது அலுவலக (மானேஜரோ) மேலாளரோ மாதத்துக்கு ஒரு முறை. எந்த நேரத்தில் எந்த அதிகாரியிடம் வந்து அறிக்கை செய்ய வேண்டும் என்று கட்டளையிடுகிறார்களோ அவ்வாறு தாமாகவே வந்து அறிக்கை செய்து கொள்ள வேண்டும்.

(3) கூறப்பட்ட மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் அல்லது அவரது (மானேஜர்) அலுவலகத்தின்

கண்காணிப்பாளரிடம் எழுத்து மூலமாக அனுமதி பெறாமல் அவர் அந்த மாவட்டத்தை விட்டு வெளியில் செல்லக் கூடாது.

(4) அத்தகைய அனுமதியை வழங்குவதற்கான நிபந்தனைகளை அவர் ஏற்றுக் கொள்ளவும் நிறைவேற்றவும் வேண்டும்.

(5) இந்தியாவில் நடைமுறையிலிருக்கும் எந்தச் சட்டத்தின் மூலமாகவும் தண்டனை விதிக்கப்படக் கூடிய எந்தக் குற்றத்தையும் அவர் செய்யக் கூடாது.

(6) அவர் கெட்ட நடவடிக்கையில் பேர்போனவர்களுடன் சேரக் கூடாது. ஒழுக்கக் கேடான வாழ்க்கையை நடத்தவும் அல்லது குற்றமான வாழ்க்கையைக் கடைப்பிடிக்கக் கூடாது.

(7) அவர் நேர்மையாகவும் அமைதியாகவும் வாழ்ந்து ஒரு நாணயமான வாழ்க்கைத் தொழிலைப் பெற முயல வேண்டும்.

**கெடுக் காலம் முடிவதற்கு முன் ஆலோசனைக் கழகத்தின் பரிந்துரையின் பேரில் விடுதலை செய்யப்படும் கைதியிடமிருந்து பெறப்பட வேண்டிய பிணைப் பத்திரத்தின் படிவம்.**

.................................................(ஊர்ப் பெயர்) ஊரிலிருக்கும் .................................................(தகப்பனார் பெயர்) மகனான (பெயர்) ................................................. என்னும் நான் இதன் பின் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளைப் பின்பற்றுவதாக ஒப்பந்தம் செய்து கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையின் பேரில், தமிழ்நாடு அரசாங்கம், நான் சிறையிலிருக்க வேண்டிய முறையான கெடுக் காலம் முடிவடைவதற்கு முன் என்னை விடுதலை செய்வதற்கு ஆணையிட்டிருப்பதால் கீழே கண்டவாறு நான் கட்டுப்பட்டு நடந்து கொள்வேன்.

(1) நான் சிறையிலிருக்க வேண்டிய முறையான காலம் முடிவடையும் தேதி வரை நான் கீழே கொடுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டு நிறைவேற்றுவேன் ;

(2) என்னை விடுதலை செய்த பதினான்கு நாட்களுக்குள் எனக்குச் சொந்தமான மாவட்டத்திலுள்ள நல்வாழ்வு அலுவலரின் முன் அல்லது அம்மாவட்டத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட நல்வாழ்வு அலுவலர்கள் இருந்தால் என்னுடைய குடியிருப்புப் பகுதியை ஆட்சி எல்லையாகவுடைய நல்வாழ்வு அலுவலரின் அல்லது ஆட்சி எல்லையாகவுடைய நல்வாழ்வு அலுவலரின் முன் அல்லது

மாவட்டத்தின் நல்வாழ்வு அலுவலரின் பொறுப்பில் நியமிக்கப் பட்டுள்ள வேறெந்த அலுவலரின் முன் அல்லது மேலே கூறப்பட்ட ஆட்சி எல்லையுடைய நல்வாழ்வு அலுவலரின் முன் நான் ஆஜராகி நிறைவேற்றித் தரப்பட்ட ஒப்பந்தப் பத்திரத்தின் நகலேயும் ஆணையின் நகலேயையும் பார்வைக்குக் கொண்டுவந்து காட்டுவேன்;

(3) நான் சிறையிலிருக்க வேண்டிய முறையான கெடுத் தேதி முடியும் வரை, சொல்லப்பட்ட நல்வாழ்வு அலுவலரின் அல்லது மற்ற அலுவலரின் கண்காணிப்புக்கு நான் என்னே உட்படுத்திக் கொள்வேன் ;

(4) நான் சிறையிலிருக்க வேண்டிய முறையான கெடுத் தேதி முடியும் வரை சொல்லப்பட்ட நல்வாழ்வு அலுவலர் அல்லது மற்ற அலுவலர்களுக்கு என்னுடைய குடியிருப்பு இடம், வாழ்கைக்கான வழி இவற்றைத் தெரிவிப்பேன்.

(5) சொல்லப்பட்ட நல்வாழ்வு அலுவலர் அல்லது பிற அலுவலரின் எழுத்து மூலமான அனுமதியின்றி நான் சொல்லப் பட்ட மாவட்டத்தை விட்டுப் போகாமல் இருப்பேன் ;

(6) நான் கெட்ட நடத்தை உடையவர்களோடு சேராமலும் அல்லது ஒழுங்கீனமான வாழ்வை கைக்கொள்ளாமலும் இருப்பேன் ;

(7) நான் நேர்மையாகவும் அமைதியாகவும் ஒரு ஒழுக்கமான வாழ்க்கைத் தொழிலேச் சம்பாதித்துக் கொள்ள முயற்சி செய்வேன் ;

(8) இந்தியக் குடியாசு எல்லேக்குள் அமுலிலிருக்கும் எந்தச் சட்டத்தின்படியும் தண்டிக்கத்தக்க எக்குற்றத்தையும் நான் செய்யாமலிருப்பேன் ;

(9) நான் போதை தரும் பொருட்களேப் பயன்படுத்துவதி லிருந்து என்னேத் தடுத்துக் கொள்வேன்.

(10) சொல்லப்பட்ட நல்வாழ்வு அலுவலரால் அல்லது பிற அலுவலரால் மேலே கண்ட நிபந்தனேகளேச் சரிவர அனுசரிப் பதற்கு அவ்வப்பொழுது கொடுக்கப்படும் சட்டபூர்வமான கட்டளேகளே நான் மேற்கொண்டு நிறைவேற்றுவேன் ;

என் சார்பாக மேற்கண்ட நிபந்தனேகளில் எவையனேனும் மீறப்பட்டால்
ரூபாயுள்ள

தொகையை நான் தமிழ்நாடு அரசாங்கத்துக்குப் பறிமுதல் தொகையாகக் கொடுக்க நான் கட்டுப்படுகிறேன். மீண்டும் என்னைச் சிறை செய்வதற்கும், விடுதலை செய்யப்பட்ட நாளிலிருந்து தண்டனை நிறைவடையாமலிருக்கும் மீத நாட்களுக்குச் சிறையிலிருப்பதற்கும் என்னை உரியவனுக்குகிறேன்.

19 தேதியில் தேதியிடப்பட்டது.

கையெழுத்து.

## பொது வருங்காலச் சேம நிதி (தமிழ்நாடு) விதிகள்.

குடிமை முறை (சிவில்) அலுவலர்களின் (வகை, கட்டுப்பாடு மேல்முறையீடு) விதி 41, விதி 42-உம் விதி 44-இன் (d) கூற்றின்படி கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்களையும் சொல்லப்பட்ட விதிகளின் நோக்கத்திலிருந்து விலக்கப்பட்டுத் தமிழ்நாடு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டுப் பணி புரியும் ஊழியர்களைப் பொறுத்தவரை உள்ள அதிகாரங்களையும் செயல்படுத்துவதில் தமிழ்நாடு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்கு அல்லது விதிகளை அமைக்கும் அதிகாரத்துக்குட்பட்ட ஊழியர்கட்குப் பொருந்துவதான பொது வருங்காலச் சேம நிதி விதிகளை முறைப்படுத்தும் இப்போதுள்ள அவசரச் சேமிப்பு விதிகளைத் தள்ளிவிட்டு. இத்துடன் இயற்றியுள்ள விதிகளில் கண்டுள்ள வெளிப்படையான விலக்கு ஏற்பாடுகளுக்கு உட்பட்டு, மாநில அரசு பின்கண்ட விதிகளைச் செய்வதற்கு விரும்பியுள்ளது. இது, விதி 9-இன் உள்விதி (1)-இன் 1-ஆவது கூற்றினைப் பின்பற்றி அரசாங்கச் செயலாளருடைய முன் அனுமதியையும் மற்றும் சொல்லப்பட்ட குடிமுறை அலுவலர்களின் (வகை, கட்டுப்பாடு, மேல்முறையீடு) 11-ஆம் விதியின் கீழ் மன்றத்திலுள்ள கவர்னர் ஜெனரலுடைய முன் அனுமதியையும் பெற்றுள்ளது : பெயர் வகையில்—

### விதிகள்.

**சுருக்கத் தலைப்பும் தொடக்கமும் விளக்கங்களும்.**

(1) (அ) இந்த விதிகள் பொது வருங்காலச் சேமநிதி (தமிழ்நாடு) விதிகள் என்றழைக்கப்படலாம்.

(ஆ) அவை 1935 எப்ரல் முதல் தேதியிலிருந்து நடைமுறைக்கு வரும்.

2. (1) இவ் விதிகளில் பொருள் அல்லது சூழ்நிலைக்கு ஏதேனும் ஒவ்வாமை இருந்தாலொழிய—

(அ) கணக்கு அலுவலர் என்பது சென்னை அரசாங்கக் கணக்குத் துறைத் தலைவர் என்று பொருள்படும்.

(ஆ) வேறு வகையாக விளக்கமாகக் கூறப்பட்டிருந்தாலொழிய அடிப்படை விதிகளில் விளக்கப்பட்டபடி ஊதியம் (emolument) என்பது சம்பளம், விடுமுறைச் சம்பளம் அல்லது பிழைப்பூதியம் (Subsistence grant) மற்றும் அரசாங்கச் செயலாளரால் மாற்றி விகிதப்படி கணக்கிடப்பட்ட கடல் கடந்த நாட்டுச் சம்பள ஸ்டர்லிங் உட்பட மற்றும் வெளி நாட்டு அலுவல் காரணமாகப் பெறப்படும் சம்பள இயல்புடைய எந்தவித ஆதாயம் என்று பொருள்படும்.

(இ) குடும்பம் என்பது—

(i) ஆண் சந்தாதாரரைப் பொருத்தவரை. மனைவி அல்லது மனைவிகள், சந்தாதாரரின் குழந்தைகள், சந்தாதாரரின் காலஞ்சென்ற மகனின் விதவை, அல்லது விதவைகளின் குழந்தைகள் என்றும். ஆனால் ஒரு சந்தாதார் தன்னுடைய மனைவி சட்டப்படி தன்னிடமிருந்து பிரிக்கப்பட்டுவிட்டதாகவோ அல்லது அவளுக்குரிய சமுதாயத்தின் வழக்கமான சட்டப்படி வாழ்க்கை உதவிப் பொருள் பெறுவதினின்றும் நிறுத்திவிட்டிருப்பதாவோ மேற்கொண்டு அவசரக் குறிப்பின் வழியாக அவளையும் அவ்வாறு கருத வேண்டும் என்று தெளிவாக மெய்ப்பித்தால் அச்சந்தாதார் எழுத்து மூலமான அறிவிப்பின் மூலம் இவ்விதிகளுக்குரிய பொருள்களில் அவள் சந்தாதாரரின் குடும்பத்தின் உறுப்பினராக தொடர்ந்து இருந்து வருகிறாள் என்று கணக்கு அலுவலருக்குக் குறிப்பித்தாலன்றி, அவள் அத்தகைய உறுப்பினராகக் கருதப்பட மாட்டாள்.

(ii) பெண் சந்தாதாரரைப் பொருத்தவரை கணவன், சந்தாதாரரின் குழந்தைகள், சந்தாதாரரின் காலஞ்சென்ற மகனின் விதவை அல்லது விதவைகள் குழந்தைகள் என்றும்; ஆனால் ஒரு சந்தாதாரர் கணக்கு அதிகாரிக்கு எழுத்து மூலமான அறிவிப்பில் அவளுடைய கணவனைத் தன் குடும்பத்திலிருந்து விலக்கும்படியான தன் விருப்பத்தைத் தெரிவித்திருந்தால் பின்னல் சந்தாதாரர் எழுத்து மூலமாகத் தன் கணவனை விலக்குமாறு தந்த அறிவிப்பை முறையாக ரத்து செய்தாலொழிய, இந்த விதிகளுக்குரிய பொருள்

களில் கணவன் தொடர்ந்து சந்தாதாரரின் குடும்ப உறுப்பினராகக் கருதப்பட மாட்டார்.

குறிப்பு I.—"குழந்தைகள்" என்பது சட்டமுறைப்படியான குழந்தைகள் என்று பொருள்படும்.

குறிப்பு II.—கணக்கு அலுவலர் அல்லது அவர் மனதில் ஏதேனும் ஐயம் எழுமானல் சென்னை அரசாங்க வழக்கீட்டு ஆலோசகர், சந்தாதாரரின் தனிப்பட்ட சட்டப்படி தத்து எடுப்பு இந்த வழக்கில் மட்டும் இயற்கையாகவுள்ள குழந்தைக்குரிய தகுதியைப் பெறுதற்குரியதென சட்டப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று மனநிறைவு கொள்வாரானல், தத்துக் குழந்தையும் ஒரு குழந்தையாகக் கருதப்பட வேண்டும்.

குறிப்பு III.—கணக்கு அலுவலர் அல்லது அவர் மனதில் ஏதேனும் ஐயம் எழுமானல் சென்னை அரசாங்க வழக்கீட்டு ஆலோசகர், தொடர்புள்ளவர்களின் தனிப்பட்ட சட்டத்தின்படி இத்தகைய தத்து எடுப்பு இந்த வழக்கில் மட்டும் சட்டப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று மன நிறைவு பெற்றுரென்ருல், ஒருவரால் மற்ருெருவருக்குத் தத்துக் கொடுக்கப்பட்ட குழந்தை முன்சொல்லப்பட்டவருடைய குழந்தையாகக் கருதப் படமாட்டாது.

(ஈ) 'நிதி' என்பது பொது வருங்காலச் சேம நிதி என்று பொருள்படும்.

(உ) அரசு, ஆளுநர், மாநிலம் என்பது முறையே தமிழ்நாடு அரசு, ஆளுநர், மாநிலம் என்று பொருள்படும்.

(ஊ) 'விடுப்பு' என்பது தொடர்புள்ள அரசுப் பணியாளருக்குப் பொருந்தக்கூடிய விடுப்பு விதிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட யாதேனும் ஒருவகை விடுப்பு என்று பொருள்படும்.

(எ) ஆண்டு என்பது நிதியாண்டு என்று பொருள்படும்.

(2) வருங்காலச் சேம நிதிச் சட்டத்தில் (XIX 1) அல்லது அடிப்படை விதிகளில் வரையறுக்கப்பட்டு இவ் விதிகளில் பயன்படுத்தப்பட்ட மற்ற யாதானும் ஒரு சொல் அவற்றில் வரையறுக்கப்பட்ட பொருளில் பயன்படுத்தப்படும்.

(3) இவ்விதிகள் வழக்கத்திற்கு வருவதற்கு முன் இருந்தது போல், பொது வருங்காலச் சேம நிதி தொடர்ந்திருப்பதை முடிவடையச் செய்வதாகவோ அல்லது புது நிதியை அமைப்பதாகவோ இந்த விதியில் உள்ள யாதொன்றும் பொருள்படாது.

*நிதியின் அமைப்பு.*

3. இந் நிதி இந்தியாவில் ரூபாய் மதிப்பில் இருக்க வேண்டும்.

(4) (1) (3), (4) உள் விதிகளின் ஏற்பாடுகளின்படி பின்வரும் அரசாங்கப் பணியாளர் வகுப்புகள், அவர்களுடைய பணியானது அவற்றை ஒழுங்குபடுத்தும் விதிகளின் பொருளுக்குள் மேல்நிலை என்று வகுக்கப்பட்டிருந்து, அவர்கள் ஆளுநர் விதி இயற்றும் அதிகாரத்தின் கீழுள்ளவராகவும் இருந்தால் இந்த நிதியில் சேர்வதற்கு தகுதியுடையனவாகும்.

ஆனால், அடிப்படை விதி 9 இன் கீழ் உள்ள III ஆவது கிளை விளக்கத்திற்கேற்ப ஒரு நிலையில் அல்லது தரத்தில் கீழ் நிலையாகவும் மற்றொரு நிலை அல்லது தரத்தில் மேல்நிலையாகவும் கருதப்பட்டுள்ள அரசுப் பணியாளரின் பணியானது அவர்களால் வாங்கப்படும் சம்பளம் எதுவானாலும் இந்த உள் விதியின் பொருட்டு மேல்நிலை என்று வகைப்படுத்தப்படும்.

அவர்கள்—

(அ) ஓய்வூதியத்திற்குரிய அல்லது உரியதல்லாத எந்தப் பணியைச் சேர்ந்த எல்லா முழு உறுப்பினர்களும்;

(ஆ) தகுதிகாண் பருவம் முறையாக முடிவுற்றவுடன் அப் பணியின் முழு உறுப்பினர்களாக ஆக்கப்படும் ஏதேனும் ஒரு பணியிலும் உள்ள எல்லாத் தகுதிகாண் பருவத்தினரும்;

(இ) பணியில், பதிலியாகவோ தற்காலிக முறையிலோ பணியிடங்களைப் பெற்று ஏதேனும் ஒரு பணியிலுள்ள எல்லாத் தகுதிகாண் பருவத்தினரும் ஏற்கப்பட்ட தகுதிகாண் பருவத்தினரும் ஆவார்கள்;

ஆனால், அவர்கள் வேலையில் நியமிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது அவர்கள் அலுவலகத்தின் தலைவர் கருத்துப்படி குறைந்தது மூன்று ஆண்டுகளுக்காவது வேலையில் இருக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

(2) நிலையாக 15 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளம் பெற்று வருவாய்த் துறையில் நியமிக்கப்பட்டுள்ள படி எழுதுவோரும் திருத்துவோரும் நீதித் துறையில் உள்ள எல்லாப் படி எழுதுவோரும் இந்த நிதியில் சேர்வதற்கு உரியவர்களாவார்கள்.

ஆனால், அவர்கள் நியமிக்கப்பட்டிருப்பவர்களாக அல்லது அவர்கள் அலுவலகத் தலைவர் கருத்துப்படி குறைந்தது மூன்று ஆண்டு வேலையில் இருக்கக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். படி எழுதுவோரும் திருத்துவோரும் பெறும் நிலைச் சம்பளத்தைப் பொருத்து 10 ஆவது விதியின் கீழ், சந்தாத் தொகை நிர்ணயிக்கப்படும். அவர்களால் ஈட்டப்பட்ட மிகு ஊதியம் இதற்குக் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

நிதியின் குறுமச் சந்தா 1 ரூபாய் ஆகும்.

(2-அ) மின் துறையின் நடைமுறைச் செலவின் கீழுள்ள பணி அமைப்பின் எல்லா உறுப்பினர்களும் இந்த நிதியில் சேர்வதற்கு உரியவர்களாவார்கள். ஆனால், அவர்கள் வேலையில் நியமிக்கப்பட்டுள்ளவர்களாகவும் அல்லது அவர்கள் அலுவலகத் தலைவர் கருத்துப்படி குறைந்தது மூன்று ஆண்டுகள் வேலையில் இருக்கக்கூடியவர்களாகவும் இருத்தல் வேண்டும். அவர்கள் சம்பளத்தைப் பொருத்து 10 ஆவது விதியின் கீழ் சந்தாத் தொகை நிர்ணயிக்கப்பட வேண்டும். எந்த மிகு ஊதியமும் அவர்கள் வாங்கிய மிகை நேரப்படியும் இதில் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. இந்த நிதிக்குக் குறுமச் சந்தா 1 ரூபாயாகும்.

(2-ஆ) நிலையாக்கப்பட்டக் கடைநிலைப் பணியைச் சேர்ந்த எல்லா உறுப்பினர்களும் இந்த நிதியில் சேர உரியவர்களாவார்கள். இந்த நிதிக்குக் குறுமச் சந்தா 1 ரூபாயாகும்.

(3) உதவித் தொகை வருங்காலச் சேம நிதிக்குச் சந்தாத் செலுத்த கேட்கப்பட்ட அல்லது அனுமதிக்கப்பட்ட அரசின் எந்த பணியாளரும் அவர் அந்த நிதிக்குச் சந்தா செலுத்தும் உரிமையை வைத்திருக்கும்போது, இந்த நிதிக்குச் சந்தாதாரராகச் சேர அல்லது தொடர்ந்திருக்க உரியவராகமாட்டார்.

(4) இந்த விதியின் கீழ் உறுப்பினராவதற்குத் தகுதி பெறாத அரசுப் பணியாளர் எவரேனும் ஒருவர் இதற்கு முன் அமலிலுள்ள விதிகள் அல்லது ஆணைகளின் கீழ் உறுப்பினராவதற்கு முறையாக அனுமதிக்கப்பட்டிருப்பவரானால், அவர் உறுப்பினராகத் தொடர்ந்து இருக்க வேண்டும். ஆளுநரின், விதி அமைக்கும் அதிகாரத்தின் கீழ்த் தொடர்ச்சியாக நீடித்திருக்கும் வரை அந்த விதிகளில் அப்போதைக்கப்போதுள்ள சந்தாளிர்கான கட்டுப்பாட்டுப் பந்தத்திற்கும் அதன் விகிதங்களுக்கும் சம்பந்தப்பட்ட தனி ஏற்பாடுகள் எவற்றிக்கேனும் அவர் உட்பட்டு இருக்க வேண்டும்.

(5) மாவட்டக் கழகத்தின் அலுவலரை அல்லது ஊழியரைப் பொருத்தவரை அவருடைய பணிகள் அரசுப் பொதுப் பணித் துறையால் எடுத்துக் கொள்ளப்பட்டு அவர் இந்த நிதியின் கீழ் வருவதைத் தேர்ந்தெடுத்திருப்பாராயின், இந்த நிதிக்கு அனு மதிக்கப்படுவதற்குரிய உரிமை அவ்வாறு தேர்ந்தெடுத்த தேதி யிலிருந்தல்லாமல் அவர் அரசுப் பணிக்கு வந்த தேதி முதல் இருந்து வருவதாகும்.

(6) சென்னை மாநகரத்தில் சட்ட அலுவலர்கள் ஆவார் அரசுத் தலைமை வழக்கறிஞரும் அரசு வழக்கறிஞரும் பொதுக் குற்றவியல் வழக்கறிஞரும் மாநிலக் குற்றவியல் வழக்கறிஞருமாம்.

5. (1) 1909 ஆகஸ்டு 1-ஆம் தேதியில் அல்லது அதற்குப் பிறகு அரசுப் பணியில் சேர்ந்து ஒரு பணியின் முழு உறுப்பினர்களா யுள்ள எல்லாத் தகுதியுள்ள ஐரோப்பியர்களும் ஆங்கிலோ—இந்தியர்களும்*, நிலையான மாதச் சம்பளம் 100 ரூபாயாக** வந்ததும் அந்த நிதியில் சேர்வார்கள்.

(2) தகுதியுடைய மற்ற எல்லா அரசுப் பணியாளர்களும் அந்த நிதியில் சேர்வதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

6. (1) விதி 5 உள் விதி (2) இன்படி தேர்ந்தெடுக்கும் உரிமை யைப் பயன்படுத்தும் அரசுப் பணியாளர் ஒருவர் அந்த நிதிக்குச் சந்தாச் செலுத்துவதை எந்தக் காலத்திலும் நிறுத்திக் கொள்ளலாம். ஆனால் விடுப்பில் இருக்கும்போது தவிர, மூன்று தடவைகளுக்கு மேல் சந்தாச் செலுத்துவதை அவர் நிறுத்தி விட்டால் அச் சந்தாவைப் புதுப்பிக்கும் அவர் உரிமை காலங் கடந்ததாகிவிடும்.

---

* இந்தச் சொல்லிற்கு ஒருவருடைய தந்தை அல்லது ஆண் வழியில் வந்த மற்ற ஆண் மூதாதையர்கள் ஐரோப்பியப் பரம்பரையில் இருந்தவராக அல்லது இருக்கிறவராகவும், இந்திய அரசு 1870 ஆம் ஆண்டுச் சட்டம் 6 ஆவது பிரிவில் விளக்கப்பட்டவாறு அ.ஆ. எண் 207 நிதி (ஓய் வூதியம்) தேதி 7 மார்ச்சு 1936—இந்தியக் குடியினராகவும் உள்ள ஒருவர் என்று பொருள்.

**அரசுப் பணியாளர் எவரேனும் சந்தாச் செலுத்து வதற்குக் கடமையுள்ளவராக ஏற்பட்டவுடனே, செயல் அதிகாரிகள், கணக்கு அலுவலருக்கு அறிவிக்க வேண்டும்.

(2) மேல் நிலைப் பணியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தகுதி காண் பருவத்தினர் உள்ளிட்ட ஒரு சந்தாதார் கடைநிலைப் பணியாளரின் இடத்துக்குக் குறைக்கப்படுவாரானால், அவர் கடைநிலைப் பணியில் ஒரு நிலையான உறுப்பினராக இருந்தால் ஒழிய, மறுபடியும் மேல்நிலைப் பணிக்கு அவர் எடுத்துக் கொள்ளப்படும்வரை, சந்தா செலுத்துவதை நிறுத்திவிட வேண்டும்.

(3) உள்விதி (1) இன் கீழ் சந்தாதார் ஒருவர், ஒருவருக்கு சந்தாவைப் புதுப்பிக்கும் உரிமை காலங் கடந்தாகிவிடுமானாலும் அல்லது உள்விதி (2) இன் கீழ் சந்தா செலுத்துவதை அவர் நிறுத்திவிடுவாரானாலும் அப்படியிருந்தும், அவர் அந் நிதியின் சந்தாதாருக்குள்ள ஏனைய பொறுப்புக்களையும் உரிமைகளையும் தன்னிடம் வைத்துக் கொள்ள வேண்டும்.

*நியமனங்கள்.*—7 (1) ஒரு சந்தாதார் நிதியில் சேர்ந்த பிறகு, எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக, நிதியில் தன் பேரில் இருக்கும் தொகையை, தனக்கு இறப்பு நிகழுமானால், அத் தொகை கொடுக்கப்படுவதற்கு உரியதாவதற்கு முன்பும், கொடுக்கப்படுவதற்குரியதாகிவிட்டால், கொடுக்கப்படாமலிருப்பதற்கு முன்பும் பெற்றுக் கொள்ளும் உரிமையை ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு அளித்து, நியமனம் ஒன்றைக் கணக்கு அலுவலருக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

ஆனால், நியமனம் செய்யுங் காலத்தில், சந்தாதாருக்குக் குடும்பம் இருந்தால், அந்த நியமனம் குடும்பத்தின் உறுப்பினர்கள் அல்லாத வேறு எந்த ஒருவர் அல்லது பலருடைய பெயரால் இருக்கக் கூடாது.

(2) உள்விதி (1) இன் கீழ், சந்தாதார் ஒருவர், ஒருவருக்கு மேற்பட்டவர்களை நியமனம் செய்தால், நிதியில் எந்த நேரத்திலும் தன்னுடைய பெயரில் இருக்கும் தொகை முழுவதும் அடங்குதற்கேற்ற விதத்தில் நியமனதார்களில் ஒவ்வொருவருக்கும் கொடுக்கக் கூடிய தொகையை அல்லது பங்கை அவர் நியமனத்தில் விளக்கமாகக் குறிப்பிட வேண்டும்.

(3) ஒவ்வொரு நியமனமும் சூழ்நிலைக்குப் பொருந்துமாறு முதல் அட்டவணையில் உள்ள படிவங்களில் ஒன்றில் இருக்க வேண்டும்.

(4) ஒரு சந்தாதாரர் எந்த நேரத்திலும் கணக்கு அலுவலருக்கு எழுத்து மூலமான அறிவிப்பை அனுப்பி ஒரு நியமனத்தை ரத்து செய்துவிடலாம். ஆனால் அந்தச் சந்தாதாரர் அத்தகைய அறிவிப்புடன், இந்த விதியின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செய்து கொண்ட ஒரு நியமனத்தையும் அனுப்ப வேண்டும்.

(5) ஒரு சந்தாதாரர் ஒரு நியமனத்தில்,

(அ) ஏதேனும் ஒரு குறிப்பிடப்பட்ட நியமனதாரரைப் பொறுத்துச் சந்தாதாரருக்கு முன்னே அவர் இறந்துவிட நேர்ந்தால் அந் நியமனக்காரருக்கு அளிக்கப்பட்ட உரிமை, அந்த நியமனத்தில் குறிப்பிடப்பட்ட அத்தகைய மற்றொரு நபருக்குச் செல்ல வேண்டுமென்பதும்,

(ஆ) நியமனத்தில் குறிப்பிடப்பட்ட தற்செயல் நிகழ்வு ஒன்று ஏற்படின் அந்த நியமனம் செல்லாததாகிவிடும் என்பதும்; ஆனால் நியமனம் செய்யும் காலத்தில் சந்தாதாரருக்குக் குடும்பம் இல்லாதிருந்து, பின்னால் குடும்பம் ஏற்படுவது நேரிடுமானால் அந்த நியமனம் செல்லாததாகிவிடுமென்றும் அதில் குறிப்பிட வேண்டும்.

(6) உள்விதி (5) இன் உட்பிரிவின் நியமனத்தில் எந்தத் தனி ஏற்பாடும் செய்யப்படாத நியமனதார் இறந்த உடனேயே அல்லது உள்விதி (5) இன் (ஆ) கூறு அல்லது அதனோடுள்ள ஏற்பாட்டின்படி ஏதேனும் ஒரு நிகழ்வு நேர்ந்ததன் காரணமாக அந்த நியமனம் செல்லுபடியாகாது போனால், சந்தாதாரர் நியமனத்தை ரத்து செய்த எழுத்துமூலமான அறிவிப்பு ஒன்றை இந்த விதியின் ஏற்பாடுகளுக்கிணங்குமாறு செய்துள்ள புதிய நியமனத்தையும் சேர்த்து அனுப்ப வேண்டும்.

(7) சந்தாதாரரால் செய்யப்பட்ட ஒவ்வொரு நியமனமும் கொடுக்கப்பட்ட ஒவ்வொரு ரத்து அறிவிப்பும் அது செல்லுபடியாகக் கூடிய அளவிற்கு கணக்கு அலுவலரால் பெறப்பட்ட தேதியிலிருந்து செயல்முறைக்கு வரும்.

**சந்தாதாரரின் கணக்குகள்.—**

(8) விதி (13) இன் (2) ஆம் உள் விதியின்படி ஒவ்வொரு சந்தாதாரரின் பெயரிலும் ஒரு கணக்கு தயார் செய்யப்பட வேண்டும். விதி 13 உள்விதி (2) இல் கண்டபடி கணக்கிடப்பட்ட வட்டியுடன் அவருடைய சந்தாத் தொகையை அது காட்ட வேண்டும்.

**நிபந்தனைகளும் சந்தா விகிதங்களும்.—**

(9) (1) விதி 6 இல் குறிப்பிட்டவாறு சந்தாதாரர் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டிருக்கும் காலம் தவிர மாதந்தோறும் அவர் நிதிக்குச் சந்தா செலுத்த வேண்டும்.

ஆனால் ஒரு சந்தாதாரர் அவரது விருப்பத்திற்கிணங்க விடுப்புக் காலங்களில் சந்தா செலுத்தாமலிருப்பதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். மேலும் ஒரு சந்தாதாரர் தற்காலிகமாக நீக்கி வைக்கப்பட்டிருந்த ஒரு காலத்துக்குப் பிறகு மீண்டும் வேலையில் அமர்த்தப்படுத்தப்படும்போது அனுமதிக்கத்தகுந்த அந்தக் காலத்துக்குரிய சந்தாப் பாக்கித் தொகையின் பெரும் அளவிற்கு மேற்படாத எந்தத் தொகையையும் ஒரே மொத்தமாகவோ அல்லது தவணைகளிலோ செலுத்துவதை அவர் விருப்பத்துக்கிணங்கி ஒத்துக் கொள்ள வேண்டும்.

(2) சந்தாதாரர் விடுப்புக் காலத்தில் சந்தாச் செலுத்துவதைத் தான் தேர்ந்தெடுக்கவில்லை என்பதைப் பின்வருமாறு அறிவிக்க வேண்டும் :—

(அ) தன்னுடைய சம்பளப் பட்டியல்களில் தாமே பணம் வாங்கிக் கொள்ளும் ஒரு அலுவலராக அவர் இருந்தால் விடுப்பில் சென்ற தமது முதல் சம்பளப் பட்டியலில் எந்தவிதக் குறைப்பும் இன்றி பணம் வாங்கிக் கொள்வது ;

(ஆ) தன்னுடைய சம்பளப் பட்டியலில் தாமே பணம் வாங்கிக் கொள்ளும் அலுவலராக இல்லாமல் இருந்தால் தாம் விடுப்பில் செல்வதற்கு முன் தமது அலுவலகத்தின் தலைமை அதிகாரிக்கு எழுதித் தெரிவிப்பது உரிய காலத்தில் சரியான தகவல் கொடுக்கத் தவறினால் அவர் சந்தாச் செலுத்த ஒப்புக் கொண்டிருப்பதாகக் கருதப்படுவார்.

இந்த உள் விதியின்படி சந்தாதாரரால் தேர்ந்தெடுக்கப்பட்டது அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் கருதப்பட்டது இறுதியானதாகும்.

(3) விதி 29 இன் கீழ் நிதியில் தம் பேரில் இருக்கும் தொகையைத் திரும்ப எடுத்திருக்கின்ற ஒரு சந்தாதாரர் அவ்வாறு திரும்ப எடுத்துக்கொண்ட பிறகு அவர் தனது வேலைக்குத் திரும்பினாலொழிய அது வரைக்கும் நிதிக்குச் சந்தா செலுத்தக் கூடாது.

**10.** (1) பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டுச் சந்தாத் தொகை சந்தாதாரராலேயே முடிவு செய்யப்பட வேண்டும் :—

(அ) அது முழு ரூபாய்களாகக் குறிப்பிடப்பட வேண்டும்

(ஆ) அவ்வாறு குறிப்பிடப்பட்ட தொகை அவருடைய ஊதியத்தின் 6¼ சதவிகிதத்துக்குக் குறையாமலும் (அதாவது ரூபாய்க்கு ஓரணாவாகவும்) 15 5/8 சதவிகிதத்துக்கு மேற்படாமலும் (அதாவது ரூபாயில் 2½ அணாவாகவும்) இருக்க வேண்டும்.

குறிப்பு.—குறுமச் சதவிகிதத்தை முழு ரூபாயாக்குதல்—6½ சதவீதமான ஊதியம் முழு ரூபாயாகச் சொல்லக் கூடிய தொகையாக இல்லையானால் அந்தத் தொகைக்குக் கீழ் அடுத்து முழு ரூபாயாக வரும் தொகையை சந்தாவின் குறும எல்லையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

(2) உள்விதி (1) இன் காரியங்களுக்காக சந்தாதாரரின் ஊதியமானது,

(அ) முந்திய ஆண்டின் மார்ச்சு 31-ஆம் தேதி அரசாங்க அலுவலில் இருந்த சந்தாதாரரைப் பொறுத்தவரையில் அந்தத் தேதியில் அவர் பெறுதற்குரியதான ஊதியங்களாகும் —

(i) ஆனால் கீழ் வருமாறு சொல்லப்பட்ட தேதியில் சந்தாதாரர் விடுப்பில் இருந்து, அத்தகைய விடுப்புக் காலத்தில் சந்தா செலுத்துவதில்லை என்று தேர்ந்தெடுத்துக் கொண்டால், அல்லது சொல்லப்பட்ட தேதியில் தற்காலிகமாக நீக்கப்பட்டிருந்தால் அவருடைய ஊதியம் அவர் வேலைக்குத் திரும்பி வந்தவுடன் முதல் நாளில் பெறுதற்குரிய ஊதியமாக இருக்க வேண்டும்.

(ii) சொல்லப்பட்ட தேதியில் சந்தாதாரர் இந்தியாவுக்கு வெளியே வேறு வேலைக்கு அனுப்பப்பட்டிருந்தால் அல்லது சொல்லப்பட்ட தேதியில் விடுப்பிலிருந்து அதில் தொடர்ந்து இருந்து வருவாரானால் அத்தகைய விடுப்புக் காலத்திலும் சந்தா செலுத்துவதை அவர் தேர்ந்தெடுத்திருந்தால், அவருடைய ஊதியம் அவர் இந்தியாவிலேயே வேலையிலிருந்தால் அல்லது விடுப்பில் இல்லாமலிருந்தால் அவர் எந்த ஊதியம் பெறுவதற்குரியவராக இருப்பாரோ அந்த ஊதியமாகும்.

(iii) சொல்லப்பட்ட தேதிக்குப் பின் ஒரு நாளில் 5 ஆவது விதியின் செயற்பாட்டின் கீழ்ச் சந்தாதாரர் முதல் தடவையாக நிதியில் சேர்ந்தால் அத்தகைய பிந்திய தேதியில் அவர் பெறுதற்குரிய ஊதியம் எதுவோ அதுவே அவர் ஊதியமாகும்.

(ஆ) முன் ஆண்டின் மார்ச் 31-ஆம் தேதி அரசாங்கப் பணியில் இல்லாத ஒரு சந்தாதாரரைப் பொறுத்தவரை, அவர் வேலையில் சேர்ந்த முதல் நாளில் அவர் பெறுதற்குரியதாயுள்ள ஊதியமும் அல்லது 5 ஆவது விதியின் செயற்பாட்டின் கீழ் நிதியில் முதல் தடவையாக வேலைக்குச் சேர்ந்த முதல் நாளைக்குப் பிந்திய தேதியில் சேர்ந்திருந்தால் அத்தகைய பிந்திய தேதியில் அவர் பெறுதற்குரியதாகவுள்ள ஊதியமும் ஆகும்.

(3) சந்தாதாரர் ஒவ்வொரு ஆண்டும் அவருடைய மாதச் சந்தாத் தொகையை உறுதி செய்வதைப் பின்கண்ட விதத்தில் :—

(அ) முன் ஆண்டின் மார்ச் 31-ம் தேதி அவர் வேலையிலிருந்தால், அம்மாதத்திற்குரிய சம்பளப் பட்டியில் இதற்காக அவர் செய்யும் தொகைக் குறைப்பின் மூலமும் ;

(ஆ) முன் ஆண்டின் மார்ச் 31-ம் தேதி அவர் விடுப்பிலிருந்து அத்தகைய விடுப்பில் சந்தா செலுத்தாமலிருக்கத் தேர்ந்தெடுத்திருந்தால் அல்லது அத்தேதியில் தற்காலிகமாக நீக்கப்பட்டிருந்தால் வேலைக்குத் திரும்பிய பிறகு அவருடைய முதல் சம்பளப் பட்டியல் இதற்காகச்செய்யும் தொகைக் குறைப்பின் மூலமும் ;

(இ) அந்த ஆண்டில் முதல்தடவையாக அரசாங்க வேலையில் அவர் சேர்ந்திருந்தால் அல்லது விதி 5 உள்விதி (1) இன் கீழ் ஒரு குறிப்பிட்ட தேதியில் கட்டாயமாக நிதியில் சேரும்படி ஏற்பட்டிருந்தால் அல்லது நிதியில் முதல் தடவையாகச் சேர்ந்திருந்தால் அவர் நிதியில் சேரும் மாதத்தின் சம்பளப் பட்டியில் இதற்காக அவர் செய்யும் தொகைக் குறைப்பின் மூலமும் ;

(ஈ) முன் ஆண்டின் மார்ச் 31-ம் தேதி அவர் விடுப்பிலிருந்து தொடர்ந்தும் விடுப்பில் இருந்து கொண்டு அத்தகைய விடுப்பில் சந்தா செலுத்துவதைத் தேர்ந்தெடுத்திருப்பாரானால், அம் மாதத்தில் சம்பளப் பட்டியில் இதற்காக அவர் ஏற்படுத்துகின்ற தொகைக் குறைப்பின் மூலமும் ;

(எ) முன் ஆண்டின் மார்ச் 31-ம் தேதி அவர் வெளிநாட்டுப் பணியில் இருந்தால், நடப்பு ஆண்டில் ஏப்ரல் மாதத்திய சந்தாவிற்காக கருவூலகத்தில் அவரால் செலுத்தப்பட்ட தொகையின் மூலமும் அறிவிக்க வேண்டும்.

(4) அவ்வாறு உறுதி செய்யப்பட்ட சந்தாத் தொகையானது ஆண்டு முழுவதும் மாறுதலில்லாமல் இருக்க வேண்டும்.

ஆனால், ஒரு சந்தாதாரர் ஒரு மாதத்தின் ஒரு பகுதியில் வேலையிலும், அந்த மாதத்தின் மீதப்பகுதியில் விடுப்பிலும் இருந்து இத்தகைய விடுப்பில், சந்தா செலுத்தாமலிருப்பதைத் தேர்ந்தெடுத்திருந்தால் செலுத்த வேண்டிய சந்தாத் தொகை அம்மாதத்தில் வேலையில் உள்ள நாட்களின் எண்ணிக்கையின் விகிதத்தில் இருக்க வேண்டும்.

11. ஒரு சந்தாதாரர் வெளிநாட்டுப் பணிக்கு மாற்றப்பட்டிருக்கும்போது அல்லது இந்தியாவுக்கு வெளியே சார்புப் பணிக்கு அனுப்பப்பட்டிருக்கும்போது அவர் அவ்வாறு மாற்றப் படாமலோ அல்லது சார்புப் பணியில் அனுப்பப்படாமலோ இருந்தால் எவ்வாறோ அவ்வாறு அவர் நிதியின் விதிகட்குட்பட்டு இருக்க வேண்டும்.

**12. சந்தா வசூல் செய்தல்.**—(1) இந்தியாவில் உள்ள அரசாங்கக் கருவூலத்திலோ அல்லது உள்நாட்டிலோ அல்லது ஒரு குடியேற்ற நாட்டுக் கருவூலத்திலோ ஊதியங்கள் பெறும்போது இவ்வூதியங் களுக்கான சந்தாக்களையும் முன்பணங்களுக்கான முதலையும் வட்டியையும் அந்த ஊதியர்களிலிருந்தே வசூல் செய்ய வேண்டும். இதைத் தவிர வெளிநாட்டு ஸ்டர்லிங் சம்பளம் அல்லாத ஊதியங்கள் இந்தியாவில் பெறப்படும்போது, வெளிநாட்டு ஸ்டர்லிங் சம்பளத்திற்கான பிடித்தங்களை அவை அனுமதிக்கப் பட்ட காலங்களில், இந்தியாவில் செய்ய வேண்டும்.

(2) ஊதியங்கள் எவையேனும் வேறு வழிகளில் வாங்கப் பட்டால் சந்தாதாரர் தனது பாக்கிகளை மாதந்தோறும் கணக்கு அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

(3) அரசுப் பணியாளர் ஒருவர் விதி 5 இன் உள்விதி (1) இன் படித்தாயுள்ள நிதியில் சேர வேண்டியதாயுள்ள தேதி யிலிருந்து சந்தாச் செலுத்தத் தவறினால் சந்தா பாக்கியாக நிதிக் குச் சேர வேண்டிய மொத்தத் தொகையை விதி 13-இல் குறிப் பிடப்பட்டுள்ள விகிதப்படி அதற்குரிய வட்டியுடன் நிதிக்குச் சந்தாதாரரால் உடனே செலுத்தப்படவேண்டும்; அல்லது செலுத் தத் தவறினால் விதி 14-இன் உள்விதி (1) இன் கூறு (இ) இன்படி தனிக் காரணங்களுக்காக முன்பணம் கொடுக்கத் தகுந்த அதி காரமுள்ள அதிகாரியால் கட்டளையிடும் வண்ணம் சந்தாதாரின்

ஊதியத்திலிருந்து தவணைகளிலோ அல்லது வேறு வகையிலோ பிடித்தம் செய்து வசூல் செய்யக் கணக்கு அலுவலரால் ஆணை யிடப்பட வேண்டும்.

13. வட்டி.—(1) மைய அரசுப் பணிக்களைப் பொறுத்தவரைப் பொது வருங்காலச் சேம நிதியின் சந்தாக்களுக்கு வட்டி கொடுப் பதற்காக அப்போதைக்கப்போது குறிப்பிடப்பட்ட கணக்கு முறைப்படி ஒவ்வொரு ஆண்டுக்கும் நிச்சயிக்கப்படும் அத்தகைய விகிதத்தில் உள்ள வட்டியைச் சந்தாதாரின் கணக்கில் வரவு வைக்க 5 ஆவது உள்விதியின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு அரசு கொடுக்க வேண்டும்.

ஆனால் ஒரு ஆண்டுக்கு நிச்சயிக்கப்பட்ட வட்டி விகிதம் 4 சத விகிதத்துக்குக் குறைவாக இருந்தால், முதல் தடவையாக 4 சத விகிதத்திற்குக் குறைவாக விகிதம் உறுதி செய்யப்பட்ட ஆண்டுக்கு முன் ஆண்டில் இருக்கும் எல்லாச் சந்தாதாரர்களுக்கும் 4 சத விகிதத்தில் வட்டி அனுமதிக்கப்பட வேண்டும்.

(2) ஒவ்வொரு ஆண்டின் இறுதி நாள் தொடங்கி பின்வரும் முறையில் வட்டி வரவு வைக்கப்பட வேண்டும்.

(i) முன் ஆண்டின் இறுதி நாளில் சந்தாதாரரின் வரவாக இருந்த தொகையில், நடப்பு ஆண்டில் ஏதேனும் திரும்பப் பெற் றிருந்தால் அத்தொகைகளைக் குறைத்துக் கொண்டும்—பன்னி ரண்டு மாதங்கட்கும் வட்டி;

(ii) நடப்பு ஆண்டில் திரும்பப் பெறப்பட்ட தொகை களுக்கு நடப்பு ஆண்டின் தொடக்கத்திலிருந்து திரும்பப் பெறப்பட்ட மாதத்துக்கு முந்திய மாதத்தின் இறுதி நாள் வரையுள்ள வட்டி;

(iii) முன் ஆண்டின் கடைசி நாளுக்குப் பிறகு சந்தாதாரரின் கணக்கில் வரவு வைக்கப்பட்ட எல்லாத் தொகை களின் மேலும்—வைப்புச் செய்யப்பட்ட தேதியிலிருந்து நடப்பு ஆண்டின் இறுதி வரை வட்டி;

(iv) வட்டியின் மொத்தத் தொகை அண்மையான முழு ரூபாய்க்குச் சரி செய்யப்பட வேண்டும் (எட்டணாவை அதற்கு அடுத்த ரூபாயாகக் கணக்கிடுதல்).

ஆனால் ஒரு சந்தாதாரரின் வரவில் இருக்கும் தொகை கொடுக்கப்பட வேண்டியதாக ஆகும்போது, அதற்கு இந்த உள்விதியின்படி நடப்பு ஆண்டின் தொடக்கத்திலிருந்து அல்லது

வைப்பு வைக்கப்பட்ட தேதியிலிருந்து ஏற்றவாறு சந்தாதாரின் வரவாகவுள்ள தொகை கொடுக்கப்பட வேண்டிய தேதி முடிய வட்டி வரவு வைக்கப்பட வேண்டும்.

(3) இவ்விதியில் வைப்புத் தேதி என்பது ஊதியங்களிலிருந்து வசூல் செய்யும் நேர்வுகளில் அது வசூல் செய்யப்படும் மாதத்தின் முதல் தேதியாகவும், சந்தாதாரரால் அனுப்பப்படும் தொகையைப் பொறுத்தவரை. அது கணக்கு அலுவலரால் அம்மாதத்தின் ஐந்தாம் நாளுக்கு முன் பெறப்பட்டிருந்தால் அவ்வாறு பெறப்பட்ட மாதத்தின் முதல் தேதியாகவும், ஆனால் அம்மாதத்தின் ஐந்தாம் நாள் அல்லது அதற்குப் பின் பெறப்பட்டிருந்தால் அடுத்து வரும் மாதத்தின் முதல் தேதியாகவும் கருதப்படும்.

(4) விதிகள் 28, 29 அல்லது 30-இன் கீழ் கொடுக்கப்பட வேண்டிய தொகையோடுங்கூட, அது கொடுக்கப்படும் மாதத்துக்கு முன் மாதத்தின் இறுதி முடிய வட்டியும், அல்லது இத் தொகை கொடுக்கப்பட வேண்டிய மாதத்துக்குப் பிறகு ஆறு மாதங்களின் இறுதி முடிய, இக்காலங்களில் எது குறைவாக இருக்கிறதோ அதற்கு அத்தொகைக்கான வட்டியும் சேர்த்து யாருக்குக் கொடுக்க வேண்டுமோ அவருக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

ஆனால் கணக்கு அலுவலர் அந்த நபர் (அல்லது அவருடைய முகவருக்கு) அவருக்குப் பணமாகக் கொடுப்பதாக அல்லது அவருக்குக் கொடுப்பதற்காக ஒரு காசோலையை அஞ்சல் செய்துள்ளதாக ஒரு தேதி தெரிவிக்கப்பட்டுள்ளவற்றில் அவ்வாறு தெரிவித்த தேதிக்கு முந்திய மாதத்தின் இறுதி முடிய மட்டும் அல்லது காசோலை அனுப்பிய தேதி முடிய மட்டும் ஏற்றவாறு வட்டி கொடுக்கப்பட வேண்டும்.

குறிப்பு.—பதவிப் பணி அல்லது தற்காலிகமான தன்மையில் ஒரு பணியிடத்திலுள்ள ஒரு சந்தாதாரர் அவருடைய பணியிடம் முடிந்ததும். விதி 28-இன் படி அவருடைய வரவில் சேர்ந்திருக்கும் தொகையை நிதியிலேயே விட்டு வைக்கும் தன் விருப்பத்தைச் செயற்படுத்துவாரானால் அவ்வேலை முடிவடைந்ததற்குப் பிறகு ஓராண்டுக்கு மேற்படாமல் அத்தொகைக்கு வட்டி அனுமதிக்கப்பட வேண்டும். அச்சந்தாதார் பின்னர் அரசாங்கத்தின் கீழ் மறு வேலை பெறுவாரானால் திரும்பப் பெறுக வைப்புத் தொகை சந்தா புதுப்பிக்கப்படும் தேதியிலிருந்து வட்டி பெற மீண்டும் தொடங்கும்.

(5) ஒரு முஸ்லிம் சந்தாதாரர் தான் வட்டி பெற விரும்பவில்லை என்று கணக்கு அலுவலருக்குத் தெரிவித்தால் அவர் கணக்கில் வட்டி வரவு வைக்கப்பட மாட்டாது. ஆனால் அடுத்து அவர் வட்டி வேண்டுமென்று கேட்டால் அவர் கேட்கும் ஆண்டின் முதல் தேதியிலிருந்து வரவு வைக்க அல்லது அவர் அவ்வாண்டில் நிதியில் சேர்ந்திருந்தால் நிதியில் சேர்ந்த தேதியிலிருந்து அது வரவு வைக்கப்படும்.

(6) விதி (12) இன் உள்விதி (3), விதி (15) இன் உள்விதி (5), விதி (18) இன் உள்விதி (3), விதி (20) இன் உள்விதி (4), விதி (22) இன் உள்விதி (1) அல்லது விதி (23) இன் உள்விதி (2) அல்லது விதி 28 அல்லது விதி 29 இன் கீழ் நிதியில் சந்தாதாரரின் கணக்கில் வரவு வைத்து மாற்றீடு செய்யப்பட்ட தொகைகளுக்கான வட்டியை இவ்விதியில் உள்விதி (1) இல் தொடர்ந்து நிர்ணயிக்கப் பட்டபடியும் இவ்விதியில் எவ்வாறு விளக்கப்பட்டுள்ளதோ அந்த மாதிரியிலும் அத்தகைய விகிதங்களில் கணக்கிட வேண்டும்.

நிதியிலிருந்து முன்பணங்கள்--14. (1) ஐந்தாவது அட்டவணை யில் குறிப்பிட்டுள்ள தகுதியுள்ள அதிகாரியின் யுக்தப்படி ஒரு சந்தாதாரருக்கு நிதியில் அவருடைய வரவாக இருக்கும் தொகை யிலிருந்து பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு தற்காலிகமாக முன் பணம் அளிக்கலாம்.

(அ) விண்ணப்பதாரின் பொருள்நிலைக்கான சூழ்நிலைகளால் சரியென, ஒப்பளிக்கும் அதிகாரி மனநிறைவு பெற்றாலொழிய முன் பணம் அளிக்கக்கூடாது. அது பின்வரும் காரியம் அல்லது காரியங்களுக்காகச் செலவு செய்யப்படும் : வேறுவிதச் செலவிற் காக அல்ல :—

(i) விண்ணப்பதாரர் அல்லது உள்ளபடியாக அவரைச் சார்ந்து இருக்கும் ஒருவரின் நீண்டகாலப் பிணி சம்பந்தமாக ஏற்பட்ட செலவினங்களைக் கொடுப்பதும் ;

குறிப்பு.—பிள்ளைப்பேறு காரணமாகச் செலவுகளை ஈடு செய்ய வும் [1] நீண்டகால மருத்துவக் கவனம், மருத்துவ மனையில் நீண்ட காலம் தங்கியிருத்தல் அல்லது காலங் கடத்தும் மருத்துவப் பண்டுவம் ஆகியவை தேவையுள்ள நேர்வுகளிலும்,

(2) சந்தாதாரின் வருவாய் விகிதத்திற்கு ஒவ்வாத செல வினங்கள் உள்ள சூழ்நிலைகளிலும் ;

முன்பணம் அனுமதிக்கத் தக்கதாகும்.

(ii) விண்ணப்பதாரர் அல்லது அவரையே உள்ளபடியாகச சார்ந்திருக்கும் ஒருவரின் உடல் நலம் அல்லது கல்வி காரணமாக வெளிநாடு செல்லும் பயணச் செலவைக் கொடுப்பதும்;

(iii) திருமணங்கள், சாவுகள் அல்லது சமய ஒழுக்கப்படி அவர் செய்ய வேண்டிய கடமையாகவுள்ள சடங்குகள் முதலியவற்றின் தொடர்பாக விண்ணப்பதாரரின் தகுதிக்கு ஏற்ற அளவில் கட்டபாடாகவுள்ள செலவினங்களுக்குக் கொடுப்பதும் ஆகும்.

(ஆ) ஒப்பளிக்கும் அதிகாரி, முன்பணம் அனுமதிப்பதற்கான காரணத்தை எழுத்து மூலமாகப் பதிய வேண்டும்.

(இ) தனிக் காரணங்களுக்காகவன்றி முன்பணமானது.

(i) மூன்று மாதச் சம்பளம் அல்லது நிதியில் சந்தாதாரின் வரவில் உள்ள தொகையில் பாதி இவற்றில் எது குறைவாக உள்ளதோ அதற்கு அதிகப்படக் கூடாது. அல்லது,

(ii) முன்பே அளிக்கப்பட்ட முன்பணம் உள் கூறு (i) இன் கீழ் அனுமதிக்கத் தகுந்த தொகையில் மூன்றில் இரு மடங்குக்கு அதிகமாயிராமல் இருந்தாலொழிய, முன்னைய முன் பணங்கள் யாவும் அவற்றிற்குரிய வட்டியுடன் கடைசியாகத் திருப்பிச் செலுத்தியதற்குப் பிறகு குறைந்தது பன்னிரண்டு மாதங்கள் வரையிலும் கொடுக்கப்படக் கூடாது.

ஆனல், காரணம் ஒரு இரகசியமான இயல்புடையதாக இருப்பின் அது கணக்கு அலுவலருக்கு இரகசியமாகத் தெரிவிக்கப் படலாம்.

(2) முன்பணத்தின் தொகையைக் குறிப்பிடுவதில் ஒப்பளிக்கும் அதிகாரி நிதியில் சந்தாதாரரின் கணக்கில் வரவாக இருக்கும் தொகையைப் பற்றிப் போதிய கவனம் செலுத்த வேண்டும்.

15. (1) ஒப்பளிக்கும் அதிகாரி கட்டளையிடும் வண்ணம் அத்தகைய எண்ணிக்கையுள்ள சமமான மாதத் தவணைகளில் முன் பணம் வசூலிக்கப்படவேண்டும். ஆனல் அவ்வெண்ணிக்கை சந்தாதாரர் தாமே தேர்ந்தெடுத்துக் கொண்டாலொழிய பன்னிரண்டுக்குக் குறைவாகவோ அல்லது எந்த நிலையிலும் இருபத்து நான்குக்கு அதிகமாகவோ இருக்கக் கூடாது. ஒரு சந்தாதாரர் தன் விருப்பத்தின் பேரில் ஒரு மாதத்தில் இரண்டு அல்லது அதிகமான தவணைகளைத் திருப்பிக் கொடுக்கலாம். ஒவ்வொரு தவணையும் எண்ணிக்கையில் முழு ரூபாய்களாக இருக்க வேண்டும்.

தேவைப்பட்டால் அத்தகைய தலைமை உறுதி செய்வதற்கு ஏற்றவாறு முன்பணத் தொகையைக் குறைக்கவோ அதிகரிக்கவோ செய்யலாம்.

(2) சந்தாக்களை வசூல் செய்வதற்கான 12 ஆவது விதியில் குறிப்பிட்டுள்ள முறையில் வசூல் செய்யப்பட வேண்டும். அவ் வசூல் முன்பணம் பெறப்பட்ட பின் முழு மாதத்துக்குரிய சம் பளத்தை அல்லது வெளிநாட்டுப் பணிக்கான ஊதியத்தைப் பெறும்போது முதல் தடவையாகத் தொடங்க வேண்டும். சந்தா தாரர் விடுப்பில் இருக்கும்போதோ அல்லது பிழைப்பூதியம் வாங்கிக் கொண்டிருக்கும்போதோ அவரின் ஒப்புதலிருந் தாலன்றி வசூல் செய்யக் கூடாது. சந்தாதாரரின் எழுத்து மூல மான வேண்டுகோளின்மேல் சந்தாதாரருக்கு முன்பணமாக அளிக்கப்பட்டிருந்த சம்பளத்தைப் பிடித்தம் செய்யும்போதும் அனுமதிக்கும் ஒப்பளிப்பு அதிகாரி வசூல் செய்வதை ஒத்தி வைக்கலாம்.

(3) சந்தாதாரருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முன்பணம் கொடுக்கப்பட்டிருந்தால் ஒவ்வொரு முன்பணமும் வசூல் காரியங் களுக்குத் தனித்தனியாகப் பாவிக்கப்பட வேண்டும்.

(4) (அ) முன்பணத்தின் முதல் தொகை முழுவதும் திருப் பிக் கொடுக்கப்பட்டவுடன் அத் தொகைக்கு முதல் தொகை வாங்கப்பட்டதற்கும் முழுவதும் திருப்பிக் கொடுக்கப்பட்டதற்கும் இடையே உள்ள காலத்தில் ஒவ்வொரு மாதத்துக்கும் ஐந்தில் ஒரு பகுதி சதவிகிதமாக வட்டி கொடுக்கப்பட வேண்டும்.

ஆனால் நிதியில் வட்டியில்லாத வைப்புத் தொகையை உடைய முகம்மதியச் சந்தாதாரர்கள் நிதியிலிருந்து அவர்களுக்கு அளிக்கப்பட்ட முன்பணத்தின் பேரில் வட்டிக்காக கூடுதலான தவணையை நிதியில் செலுத்தும்படி கேட்கப்பட மாட்டார்கள்.

(ஆ) சாதாரணமாக, முதல் தொகை முழுவதையும் திருப் பிக் கொடுத்த பிறகு அந்த மாதத்தில் ஒரே தவணையில் வட்டி வசூல் செய்யப்பட வேண்டும். ஆனால் கூறு (அ) இல் குறிப் பிடப்பட்ட காலம் இருபது மாதங்களுக்கு அதிகமானால் சந்தா தாரர் அவ்வாறு விரும்புவாரானால் வட்டியை இரண்டு சமமான மாதத் தவணைகளில் வசூல் செய்யலாம். வசூல் செய்யும் முறை உள்விதி (2) இல் குறிப்பிட்டுள்ளபடி இருக்கும். விதி 13 இன் உள்விதி (2) இன் (iv) ஆவது கூற்றில் குறிப்பிட்டுள்ளவாறு

செலுத்துந் தொகை நெருங்கி உள்ள ரூபாயாக முழுதாக்கப்பட வேண்டும்.

(5) ஒரு சந்தாதாரருக்கு முன்பணம் கொடுக்கப்பட்டு அவரால் வாங்கப்பட்டுமிருந்து பின்பு திரும்பக் கொடுத்தல் முடிவடைவதற்கு முன் அனுமதி மறுக்கப்பட்டிருந்தால், வாங்கப்பட்ட தொகையின் முழுவதும் அல்லது மீதமுள்ளது, விதி 13-ல் குறிப்பிடப்பட்ட விகிதத்தில் வட்டியுடன் உடனடியாக சந்தாதாரரால் நிதிக்குத் திரும்பிச் செலுத்தப்பட வேண்டும்; அல்லது தவறினால், சந்தாதாரரின் ஊதியத்திலிருந்து தவணைகளில் அல்லது வேறுவிதமாக அரசாங்கம் கட்டளையிடும் வண்ணம் வசூல் செய்யக் கணக்கு அலுவலரால் ஆணையிடப்படலாம்.

(6) இவ் விதியின்படி செய்யப்படும் வசூல்கள் அவை நிதியில் சந்தாதாரரின் கணக்கில் வரவு வைக்கப்படுவது போலவே வரவு வைக்கப்பட வேண்டும்.

## ஈட்டுறுதிக்கும் குடும்ப ஓய்வு ஊதிய நிதிக்கும் செலுத்துதல்

16.(*) இதன் கீழ் வரும் 17 முதல் 26 வரை உள்ள விதிகளில் அடங்கியுள்ள நிபந்தனைகட்குக் கட்டுப்பட்டு—

(i) (அ) இதற்காக அரசாங்கத்தால் எற்றுக்கொள்ளப்பட்ட குடும்ப ஓய்வூதிய நிதிக்கான சந்தாக்கள் ; அல்லது

(ii) ஒரு வாழ்வு ஈட்டுறுதிக்குச் செலுத்தும் தொகைகள் ஒரு சந்தாதாரரின் விருப்பத்தின் பேரில் முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ நிதியின் சந்தாவிற்கு மாற்றீடு செய்யப்படலாம் ;

(ஆ) நிதியில் சந்தாதாரரின் கணக்கில் வரவாக இருக்கும் வட்டியுடன் கூடிய சந்தாத் தொகையை—

(i) ஒரு வாழ்வு ஈட்டுறுதிக்குச் செலுத்துவதற்காக ;

(ii) ஒரு தடவையில் செலுத்தி வாழ்வு ஈட்டுறுதியை வாங்குவதற்காக ;

---

* இணைப்பு " ஈ " யைப் பார்க்கவும்.

(iii) ** அரசாங்கத்தின் ஏற்புப் பெற்ற குடும்ப ஓய்வூதிய நிதிக்கு ஒற்றைத் தவணைக் கட்டணத்தை அல்லது சந்தாக்களைச் செலுத்துவதற்காக திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் (1) மேற்கொள்ளப்பட்ட ஈட்டுறுதி விபரங்கள் கணக்கு அலுவலருக்குப் பணிந்தனுப்பப்பட்டு அவரால் தகுந்தது என்று ஏற்றுக் கொள்ளப்படாதவரையிலும் அல்லது (2) திரும்பப் பெறுவதற்குப் பன்னிரண்டு மாதங்கட்கு முன் செயல்பட்டதற்கு அல்லது விலைக்கு வாங்கப்பட்டதற்குக் கொடுத்த ஏதேனும் தொகையை நிறைவு செய்வதற்காகத் திரும்பப் பெறும் தேதியிலிருந்து ஆறு மாதத்துக்குள் உள்ளபடியாகக் கொடுக்கப்பட வேண்டிய தவணை பணம் அல்லது சந்தாவுக்குத் தேவையான தொகைக்கு அதிகமாக, எந்தத் தொகையையும் திரும்பப் பெறக்கூடாது.

கணக்கு அலுவலர் மேற்கொள்ளப்பட்ட ஈட்டுறுதி விபரங்களைத் தகுந்ததென்று ஏற்றுக்கொள்வதற்கு முன் ஈட்டுறுதி முக்கியமாகச் சந்தாதாரரின் குடும்பத்தின் நன்மைக்காகவே எடுக்கப்பட்டுள்ளதென்று தாம் மனநிறைவுகொள்ள வேண்டும். இந் நிபந்தனையை நிறைவு செய்யாத ஈட்டுறுதியை ஏற்றுக்கொள்வதை மறுத்துவிட வேண்டும்.

மேலும், ஒரு கல்விக் கட்டளை ஈட்டுறுதிக்காகச் செலுத்தப்படும் தொகைகள் நிதியின் சந்தாக்களுக்கு மாற்றீடு செய்யப்படலாகாது. ஒரு ஈட்டுறுதித் தொகை முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ, சந்தாதாரரின் இயல்பான மூப்பு ஓய்வுக்காலத்திற்கு முன்பே கொடுக்கப்படுவதற்குரியதாயிருந்தால் அத்தகைய

---

** தமிழ்நாடு அரசால் கீழ்க்காணும் நிதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன :—

1. மேல்நிலைப்பணிகள் (இந்தியா) குடும்ப ஓய்வூதிய நிதி.
2. வங்காளச் சமுதாயப் பணிக் குடும்ப ஓய்வூதிய நிதி.
3. பம்பாய் அரசுப் பணி குடும்ப ஓய்வூதிய நிதி.
4. வங்காளம் தமிழ்நாடுப் பணிக் குடும்ப ஓய்வூதிய நிதி.
5. பொதுக் குடும்ப ஓய்வூதிய நிதி.
6. இந்துக் குடும்ப ஆண்டுத் தொகை நிதி.
7. வங்காள கிருத்துவ குடும்ப ஓய்வூதிய நிதி.

ஈட்டுறுதியை வாங்குவதற்காகவோ அல்லது அதற்காக ஏதேனும் கொடுத்த தொகையை நிறைவு செய்வதற்காகவோ தொகைகளைத் திரும்ப எடுக்கலாகாது.

மேலும், திரும்ப எடுக்கப்படும் தொகைகள் அடுத்துள்ள ரூபாய்க்கு முழுதாக்கப்பட வேண்டும்.

16. (1) விதி 16 இன் கீழ் நிதிக்குரியதான சந்தாவுக்கு மாற்றீடு செய்வதற்கும் அல்லது நிதியிலிருந்து சந்தாக்களைத் திரும்பப் பெறுவதற்கும் அனுமதிக்கப்பட்ட ஈட்டுறுதிகளின் எண்ணிக்கை நான்குக்கு மேற்படக் கூடாது.

ஆனால் 1953 அக்டோபர் 21 ஆம் தேதிக்கு அடுத்து முன்பாக, நிதிக்கு உரிய சந்தாக்கள் அல்லது நிதியிலிருந்து திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்ட சந்தாக்கள் நான்குக்கு மேற்பட்ட ஈட்டுறுதிகளைப் பொருத்து அனுமதிக்கப்பட்டிருந்தால் அத்தகைய மாற்றீடு அல்லது திரும்ப எடுத்தல் ஆகிய இவை அந்த ஈட்டுறுதிகளைப் பொருத்தவரை தொடர்ந்து அனுமதிக்கப்பட வேண்டும்.

(2) நிதியிலிருந்து சந்தாவைத் திருப்பப் பெற்றுக்கொள்வதை விதி 16 இன் கீழ் அனுமதிக்கலான (உள்விதி 1 இன் எற்பாட்டில் குறித்த ஈட்டுறுதி உள்பட்ட) ஈட்டுறுதிக்கான தவணைப் பணம் ஆண்டுக்கொரு முறை அன்றி வேறு முறையில் கொடுக்கப்பட மாட்டாது.

**விளக்கம்.**—உள்விதி (1) இல் குறிப்பிட்டுள்ள பெரும எண்ணிக்கையுள்ள ஈட்டுறுதிக் கணக்கிடுகையில் முதிர்ந்துவிட்ட ஈட்டுறுதிகளைத் தள்ளிவிட வேண்டும்.

17. (1) விதி 16 கூறு (அ) இன் கீழ் மாற்றீடு செய்யப்பட்ட சந்தாக்கள் அல்லது கொடுக்கப்பட்ட மொத்தத் தொகை விதி 10 உள் விதி (1) இன் கீழ் நிதிக்குக் கொடுக்கப்பட வேண்டிய குறுமச் சந்தாத் தொகைக்குக் குறைவாக இருந்தால் அந்த வேறுபாடு விதி 13 உள்விதி (2) கூறு (iv) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அணித்தான முழு ரூபாய்க்கு முழுதாக்கப்பட்டு சந்தாதாரரால் நிதிக்கு ஒரு சந்தாவைப் போன்று கட்டப்பட வேண்டும்.

(2) விதி 16 கூறு (ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ளவற்றில் எந்தக் காரியங்களுக்காகவாவது சந்தாதாரர் நிதியில் தனது வரவில் இருக்கும் எந்தத் தொகையையாவது திரும்ப எடுத்தால்,

அவ் விதியின் கூறு (அ) இன கீழ்தான் தேந்தெடுத்திருப்பதற்கு உட்பட்டு விதி 10 இன் கீழ்க் கொடுக்கப்பட வேண்டிய சந்தாவைத் தொடர்ந்து கட்ட வேண்டும்.

ஆனால் விதி 6 (1) இல் அனுமதிக்கப்பட்டுள்ள விருப் புரிமையைப் பயன்படுத்தி நிதிக்குச் சந்தா செலுத்துவதை நிறுத்திவிட்ட ஒரு அரசாங்கப் பணியாளரால் சந்தாக் கொடுக்கப் பட வேண்டியதில்லை.

18. (1) விதி 16 கூறு (அ) இன் கீழ் சந்தாவிற்கு அல்லது தொகை செலுத்துவதற்கு மாற்றீடு செய்ய விரும்பும் ஒரு சந்தா தாரர் நிதிக்குரிய சந்தாவை ஏற்றபடி குறைத்துக்கொள்ளலாம்.

(அ) ஆனால் சந்தாதார் தனது சந்தாவைக் குறைத்துக் கொள்வதற்கான செய்தியையும் காரணத்தையும் தனது சம்பளப் பட்டியிலோ அல்லது கடித மூலமாகவோ கணக்கு அலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(ஆ) கணக்கு அலுவலருக்கு அவர் கோரும் காலத்திற்குள் சந்தாவில் குறைக்கப்பட்டிருக்கும் தொகை 16 ஆம் விதி (அ) கூற்றில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட் டுள்ளது என்று கணக்கு அலுவலருக்கு மனநிறைவு ஏற்படுமாறு பற்றுச் சீட்டுகளை அல்லது அவற்றின் சான்றிட்ட படிகளை அனுப் பவும் வேண்டும்.

(2) 16 ஆம் விதியின் (ஆ) கூற்றின் கீழ் யாதொரு தொகை யைத் திரும்பப் பெற விரும்பும் ஒரு சந்தாதாரர்—

(அ) திரும்பப் பெறுவதற்கான காரணத்தை ஒரு கடிதம் மூலம் கணக்கு அலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(ஆ) அதைத் திரும்ப பெறுவதற்கு வேண்டிய ஏற்பாடு களைக் கணக்கு அலுவலருடன் செய்ய வேண்டும்.

(இ) கணக்கு அலுவலருக்கு அவர் கோரும் காலத்திற்குள் திரும்பப் பெறப்பட்ட தொகை 16 ஆம் விதியின் (ஆ) கூற்றில் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கணக்கு அலுவலருக்கு மனநிறைவு ஏற்படும்படி பற்றுச் சீட்டுகளை அல்லது அவற்றின் சான்றிட்ட படிகளை அனுப்பவும் வேண்டும்.

(3) சந்தாவில் எவ்வளவு குறைக்கப்பட்டதோ அந்தத் தொகையை அல்லது ஏதேனும் திரும்பப் பெறப்பட்ட தொகையைப் பொருத்தவரை, கணக்கு அலுவலர் உள்விதி (1) கூறு (ஆ) விலும் உள்விதி (2) கூறு (இ)யிலும் கூறப்பட்டுள்ள விதத்தில் மனநிறைவு பெற்றிராவிட்டால், தொகை செலுத்தப்பட்டிருக்க வேண்டிய ஆண்டிற்கு அத் தொகைக்கு 13 ஆம் விதியின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட விகிதத்தில் வட்டி சேர்த்து சந்தாதாரரின் ஊதியத்திலிருந்து வசூலிக்க ஆணையிட்டு அதனை நிதியில் சந்தாதாரரின் கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

19. (1) சந்தாதாருக்காக ஈட்டுறுதி நிறுமங்களுக்கு, அரசு எந்தப் பணமும் செலுத்தவோ அல்லது ஒரு ஈட்டுறுதியை அமலில் வைத்திருப்பதற்கு நடவடிக்கையெடுக்கவோ செய்யாது.

ஆயினும், போலீஸ் கமிஷனர் சென்னை மாநகரக் காவல் துறைச் சார்புப் பணியாளர் தொகுதி வரிசையைச் சேர்ந்த ஒரு சந்தாதாரின் எழுத்து மூலமான கோரிக்கையின் மேல் காவல் ஆணையாளர் அரசால் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைக்கிணங்கச் சந்தாதார்களுக்காக ஈட்டுறுதி நிறுமங்களுக்கு நேரடியாக ஈட்டுறுதித் தவணைக் கட்டணங்களைச் செலுத்தலாம். அவ்வாறு பணம் செலுத்தும்போது சந்தாக்கள் செலுத்துவதில் ஏதாவது காலதாமதத்தாலோ அல்லது செலுத்தப்படும் பணம் அந்த ஈட்டுறுதியை அமலில் வைத்திருப்பதற்குப் போதாததாலோ ஏதாவது இழப்பு ஏற்பட்டால் அதற்கு அரசு பொறுப்பேற்காது. மேலும் அரசு அந்த ஈட்டுறுதி நிறுமத்துடன், ஈட்டுறுதி அல்லது தவணைக் கட்டணம் அல்லது அம் மாதிரியானவற்றைக் குறித்து யாதொரு கடிதப் போக்குவரத்தும் வைத்துக்கொள்ளாது.

(2) இந்த விதிகளின் கீழ் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு ஈட்டுறுதி சந்தாதாராலேயே தம் வாழ்வுக்காக எடுக்கப்பட்டதாயும், அது அவருடைய மனைவியின் அல்லது மனைவி மக்களாகிய இவர்களின் அல்லது இவர்களில் யாரேனும் ஒருவரின் நன்மைக்காக எடுக்கப்பட்டிருப்பதாக அதன் மேலேயே கூறப்பட்டு அது ஒரு ஆண் சந்தாதாரரால் எடுக்கப்பட்ட ஈட்டுறுதியாயிருந்தாலன்றி, அது சட்டப்படி ஆளுநருக்குச் சந்தாதாரரால் உரிமைப்படுத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

**விளக்கம் 1.**—இந்த விதியின் நோக்கத்திற்காக சந்தாதாரரும் அவருடைய மனைவி அல்லது கணவரும் சேர்ந்த வாழ்வின் மேலுள்ள ஒரு ஈட்டுறுதி சந்தாதாரின் வாழ்வின் மேலுள்ள ஈட்டுறிதியாக கருதப்படும்.

விளக்கம் 2.—சந்தாதாரரின் மனைவிக்கு உரிமையளிக்கப்பட்டுள்ள ஒரு ஈட்டுறுதி, அது சந்தாதாரருக்கு அல்லது சந்தாதாரரும் அவர் மனைவியும் ஆகிய இருவருக்கும் கூட்டாக தக்கவாறு உரிமை செய்து மறு உரிமை அளிக்கப்பட்டிருந்தாலன்றி ஒப்புக் கொள்ளப்பட மாட்டாது.

(3) அந்த ஈட்டுறுதி சந்தாதாரரின் மனைவி அல்லது கணவர் அல்லது அவரின் மனைவி அல்லது கணவரும் குழந்தைகளும் அல்லது அவர்களில் எவரேனும் அல்லாத வேறு பயனுளியின் நலனுக்காக எடுக்கப்படலாகாது.

* ஆனால் முன்னால் அமலிலிருந்த விதிகளின் 21 ( ) ஆம் விதியின் கீழ் உள்ள குறிப்பின் கீழும் அல்லது 21 விதியின் (ஆ) அல்லது (இ) கூறுகளின் கீழும் ஈட்டுறுதிகள் எடுத்துள்ள சந்தாதாரர்கள் அவ்வாறு எடுக்கப்பட்ட ஈட்டுறுதிகள் சம்பந்தப்பட்ட வரையில் அந்த விதிகளின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டிருக்க வேண்டும்.

20. (1) ஒரு ஈட்டுறுதி சம்பந்தமாக முதல் தடவையாகச் சந்தாவை நிறுத்திக் கொண்ட அல்லது நிதியிலிருந்து முதன் முதலாகத் திரும்பிப் பெற்றுக் கொண்டதற்குப் பின் மூன்று மாதங்களுக்குள்ளும் அல்லது அந்த ஈட்டுறுதி நிறுமத்தின் தலைமையிடம் இந்தியாவுக்கு வெளியிலிருந்தால் அதன் முடிவுச் சான்றிதழைப் (இடைகாலப்பற்றுச் சீட்டுப்) பார்வை காட்டப் படுவதின் பேரில் கணக்கு அலுவலர் மனநிறைவு கொள்வாரானால் அவர் நிர்ணயிக்கக் கூடிய அதிக காலத்திற்குள் ;

(அ) அந்த ஈட்டுறுதி ஒரு ஆண் சந்தாதாரரால் எடுக்கப் பட்ட ஈட்டுறுதியாயிருந்து அதன் மேலேயே அவரது மனைவி அல்லது அவர் மனைவி மக்களும் அல்லது இவர்களில் எவருடைய நன்மைக்காகவென்று கூறப்பட்டிருந்தாலொழிய, அந்த ஈட்டுறுதி 25 ஆம் விதியின் கீழ் நிதிக்குச் செலுத்தப்படுவதற்காகும் தொகைக்குப் பிணையமாக ஆளுநருக்கு உரிமைப்படுத்தப்பட வேண்டும். அந்த ஈட்டுறுதி சந்தாதாரர் வாழ்வின் பேரிலும் அல்லது சந்தாதரரின் மனைவி அல்லது கணவருடைய கூட்டு வாழ்வின் பேரிலும் அல்லது அது எற்கெனவே உரிமைப்படுத்தப் பட்டுச் சந்தாதாரரின் மனைவியின் பேரிலும் இருப்பதற்கேற்ப

---

*"ஆ"வின் பிணைப்பைப் பார்க்கவும்.

அதனை இரண்டாவது அட்டவணையில் உள்ள படிவங்களில் (1) ஆம் படிவம் அல்லது (2) ஆம் படிவம் அல்லது (3) ஆம் படிவத்தில், உரிமை செய்திருத்தலை ஈட்டுறுதியின் மேல்—மேல் குறிப்பாக எழுதிக் கணக்கு அலுவலருக்குக் கொடுக்க வேண்டும்.

(ஆ) அந்த ஈட்டுறுதி ஒரு ஆண் சந்தாதாரரால் எடுக்கப் பட்டு அதன் மேலேயே அது சந்தாதாரரின் மனைவி அல்லது மனைவி மக்கள் அல்லது அவர்களில் எவருடைய நலனுக்காக என்று குறிப்பிடப்பட்டிருந்தால் அதனைக் கணக்கு அலுவலருக் குக் கொடுக்க வேண்டும்.

(2) கணக்கு அலுவலர் முடியுமானால் அந்த ஈட்டுறுதி நிறுமத் தைக் கேட்டு அந்த ஈட்டுறுதியின் பேரில் முந்தின உரிமைப்பாடு ஏதும் இல்லை என்பதற்கு மனநிறைவு கொள்ள வேண்டும்.

(3) நிதியிலிருந்து பணம் செலுத்துவதற்காக ஒரு ஈட்டுறுதிக் கணக்கு அலுவலரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பிறகு, அந்த ஈட்டுறுதியின் சொற்கள் மாற்றப்படக் கூடாது. மேலும் ஈட்டுறுதியை வேறொரு ஈட்டுறுதிக்குக் கணக்கு அலுவலரின் முன்னனுப்புதலில்லாமல் மாற்றிக் கொள்ளக் கூடாது. அவருக்கு மாற்றத்தின் அல்லது புதிய ஈட்டுறுதியின் விபரங்களை அளிக்க வேண்டும்.

(4) சொல்லப்பட்ட மூன்று மாத காலத்திற்குள் அல்லது உள் விதி (1) இன் கீழ் கணக்கு அலுவலர் நிர்ணயிக்கக் கூடிய காலத் திற்குள், அந்த ஈட்டுறுதி உரிமைப்படுத்தப்பட்டு கொடுக்கப்படா விட்டால், அந்த ஈட்டுறுதிக்காக நிதியிலிருந்து நிறுத்தி வைக்கப் பட்ட அல்லது திரும்பப் பெறப்பட்ட தொகை 13 ஆம் விதியின் ஏற்பாட்டின்படியுள்ள விகிதத்தில் அதற்கான வட்டியுடன் சந்தா தாரரால் நிதிக்கு ஏற்ற முறையில் செலுத்தப்படவோ அல்லது திரும்பிச் செலுத்தப்படவோ வேண்டும் அல்லது செலுத்தத் தவறி னால் அடிப்படை விதிகளில் விளக்கப்பட்டுள்ளபடி அந்தத் துறை யின் தலைவர் கட்டளையிடுகிறபடி தவணைகளிலோ அல்லது வேறு விதமாகவோ சந்தாதாரின் ஊதியத்திலிருந்து கழித்துக் கொள் வதின் மூலம் வசூலிப்பதற்குக் கணக்கு அலுவலரால் ஆணையிடப் படும்.

குறிப்பு.—இந்த உள்விதியின் நோக்கத்திற்காகக் காவல் துறை அணைத் தலைவர்கள் துறைத் தலைவர்களாகக் கருதப்படுவார்கள்.

(5) ஈட்டுறுதியை உரிமைப்படுத்தும் அறிவிப்புச் சந்தா தாரரால் ஈட்டுறுதி நிறுமத்திற்குக் கொடுக்கப்பட்டு அந்த நிறுமம் அறிவிப்பைப் பெற்றுக் கொண்டதற்குரிய ஏற்புச் சீட்டை உரிமைப்படுத்திய தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள் கணக்கு அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

குறிப்பு.—1. சந்தாதாரர்கள் உரிமைப்படுத்தியதற்கான அறிவிப்பை ஈட்டுறுதி நிறுமத்துக்கு இரட்டைப் பிரதியில் அனுப்பும் படி தெரிவித்துக் கொள்ளப்படுகிறார்கள். கிரேட் பிரிட்டன் அல்லது அயர்லாந்தில் உள்ள ஒரு நிறுமத்திற்கு அறிவிப்பு அனுப்ப வேண்டியவற்றில் 1867 ஈட்டுறுதிச் சட்டத்தால். Vict, c. 144, 30-ம், 91-ம் ஒப்பியுள்ளவாறு ஏற்பளிப்புக்குக் கட்டண மாகிய ஐந்து ஷிலிங்குடன் அனுப்பும்படியாயும் தெரிவிக்கப்படு கிறார்கள்.

2. பணியை விட்டு விட்டு கிரேட் பிரிட்டனுக்கு அல்லது அயர் லாந்துக்குப் போகும் சந்தாதார்கள் ஆங்கில முத்திரைத்தாள் சட்ட உரிமைப்பாடுகள். அல்லது மறு உரிமைப்பாடுகள் ஆகிய வற்றிற்கு அந்த நாடுகளில் முதலில் சேர்ந்த 30 நாட்களுக்குள் முத்திரை வரித் தாளிட வேண்டுமென்று தெரிவிக்கப்படுகிறார்கள். இல்லாவிட்டால், 1891 ஆம் ஆண்டு முத்திரைவரித்தாள் சட்டத்தின் கீழ் ( Vict. c. 39, 54, 55) தண்டம் சட்டப்பட்டு ஈட்டுறுதி பண மாக மாற்றப்படுவதற்கு உரியதாகும் போது இடர்ப்பாடுகள் உண்டாகலாம்.

3. ஒரு உள்ளாட்சிக் கழகத்தின் கீழ் உள்ள ஒரு மருத்துவ அல்லது கல்வி நிறுவனத்தின் பணியாற்றுபவர் அதனால் நிறுவப் பட்டு நடத்தப்பட்டு வரும் வருங்காலச் சேம நிதிக்கு சந்தாதார ராக இருந்து, பிறகு அந்த நிறுவனம் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டதால் அந்த அரசாங்கத்தின் நிலையான ஓய்வூதியத் திற்குத் தகுதியான பணிக்கு மாற்றப்பட்டு, அவருடைய ஈட்டுறுதி அந்த மாற்றலின் மேல் அவர் பேரில் மறு உரிமை செய்யப்பட் டுள்ள நேர்வுகளில் அவர் அதனை ஆளுநருக்கு உரிமைப்படுத்த வேண்டும்.

21. ஈட்டுறுதி நடைமுறையிலிருக்கும்போது அதன் வரையறை களின்படி தன்விருப்பத்திற்கேற்பப் பெறக் கூடிய மிகை ஊதியத்தை சந்தாதார் வாங்கக் கூடாது. ஈட்டுறுதியின் வரையறைகளின்படி அது நடைமுறையிலுள்ளபோது ஒரு

சந்தாதாரர் மிகை ஊதியத்தை வாங்காமலிருப்பதற்கு விருப்புரிமையில்லாதவற்றில், அத்தொகை எதுவாயினும் சந்தாதார் உடனே நிதிக்குச் செலுத்த வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் அந்தத் தொகையைச் சந்தாதாரரின் ஊதியத்திலிருந்து குறைத்துக் கொண்டு தவணைகளில் அல்லது (14)-ஆம் விதியின் (1)-ஆம் உள்விதியின் (இ) கூற்றில் சொல்லப் பட்ட தனிக் காரணங்களுக்காக முன்பணம் ஒப்பு அளிப்புத் தரத் தகுதியுள்ள அதிகாரி கட்டளையிடும் வண்ணம் வேறு விதங்களில் வசூலிப்பதற்குக் கணக்கு அலுவலரால் ஆணையிடப்படும்.

22. (1) 26-ஆம் விதியில் சொல்லியுள்ளபடி தவிர சந்தாதார் :—

(அ) தம் பணியை விட்டு விலகும்போதும் ; அல்லது

(ஆ) வேலையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு ஆயத்தமாக விடுப்பில் செல்லும்போதும் அல்லது நீண்ட விடுமுறைகள் உள்ள துறையில் பணியிலிருந்தால் விடுமுறையுடன் சேர்த்து ஓய்வு பெற ஆயத்தமாக விடுப்பில் செல்லுகையில் அவர் கணக்கு அலுவலருக்குத் தனது ஈட்டுறுதியை திரும்ப உரிமைப்படுத்தவோ அல்லது திருப்பித் தரவோ கேட்டு விண்ணப்பிக்கின்றபோதும் ;

(இ) விடுப்பில் இருக்கையில் ஓய்வு பெற அனுமதிக்கப் பட்டபோது அல்லது ஒரு தகுதியுள்ள மருத்துவ அதிகாரியால் அவர் மேற்கொண்டு பணி செய்யத் தகுதியுடையவரல்ல என்று விளம்பப்பட்டபோது அவர் தமது ஈட்டுறுதியை மறு உரிமைப் படுத்தவோ அல்லது திருப்பித் தரவோ கோரி விண்ணப்பிக்கின்ற போதும் ; அல்லது

(ஈ) 16-ஆம் விதியின் (அ) பகுதியின் (ii)-ஆம் கூற்றிலும் 16-ஆம் விதியின் (ஆ) பகுதியின் (i)-ஆம் (ii)-ஆம் கூற்றிலும் சொல்லப்பட்டுள்ள நோக்கங்களில் எவற்றிற்காகவேனும் நிதி யிலிருந்து பணம் திரும்பப்பெற்றதை அல்லது நிறுத்தி வைத்துக் கொள்ளப்பட்ட ஏதேனும் முழுத் தொகையை சந்தாதாரர் செலுத்துகிற அல்லது திரும்பச் செலுத்துகிறபோதும், கணக்கு அலுவலர்—

(i) அந்த ஈட்டுறுதி 20-ஆம் விதியின் கீழ் அல்லது அதற்கு முன்னால் அதைப் போன்ற அமுலிலிருந்த விதியின் கீழ், ஆளுநருக்கு உரிமைப்படுத்தப்பட்டிருந்தால், அதை மூன்றாம் அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள படிவங்களில் (1)-ஆம் படிவத்தில் அந்த சந்தாதாரருக்கு மறு உரிமைப்படுத்தியும்

அல்லது அந்தச் சந்தாதாருக்கும், கூட்டாகக் காப்புறுதி பெற்றவருக்கும் ஏற்றவாறு மறு உரிமைப்படுத்தியும், அதைச் சந்தாதாருக்கு அந்த மறு உரிமைப்படுத்தியதற்குக் கையெழுத்திட்டு ஈட்டுறுதி நிறுமத்துக்கு முகவரியிடப்பட்ட அறிவிப்புடன் சேர்த்துச் சந்தாதாருக்குக் கொடுத்துவிட வேண்டும் ; அல்லது

(ii) அந்த ஈட்டுறுதி தமக்கு 20 ஆம் விதியின் **(1)** ஆம் உள்விதியில் (இ) கூற்றின் கீழ் கொடுக்கப்பட்டிருந்தால் அதைச் சந்தாதாருக்குத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

ஆனல், அந்தச் சந்தாதார் ஓய்வு பெற ஆயத்தமாக விடுப்பில் சென்ற பிறகும் அல்லது விடுப்பில் இருக்கும்போது ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டபிறகும், அல்லது ஒரு தகுதியுள்ள மருத்துவ அதிகாரியால் அவர் மேற்கொண்டு பணிக்குத் தகுதியற்றவர் என்று சொல்லப்பட்ட பிறகும் அவர் திரும்பி வேலைக்கு வந்தால் அவ்வாறு மறு உரிமைப்படுத்தப்பட்ட அல்லது திரும்பக் கொடுக்கப்பட்ட ஈட்டுறுதி அது முடிவடையாமல் அல்லது உரிமைப்படுத்தப்படாமல் அல்லது ஒப்படைக்கப்படாமல் அல்லது வில்லங்கத்திற்குட்படாமலிருந்தால் மறுபடியும் கவர்னருக்கு உரிமைப்படுத்தப்பட்டுக் கணக்கு அலுவலர்க்குக் கொடுக்கப்படவோ அல்லது தக்கபடி, 20 ஆம் விதியில் சொல்லியபடி ஏற்றவாறு மீண்டும் கொடுக்கப்படவோ வேண்டும். அதன் மேல் இந்த விதிகளின் ஏற்பாடுகள் தேவையான அளவில், மறுபடியும் அந்த ஈட்டுறுதியைப் பொருத்தவரை பொருந்தும்.

மேலும், அந்த ஈட்டுறுதி முடிவடைந்தோ அல்லது உரிமைப்படுத்தப்பட்டோ அல்லது பற்றுப்பொறுப்புச் செய்யப்பட்டோ அல்லது ஏதாவது வில்லங்கத்திற்குட்பட்டோ இருந்தால், அப்படிப் பட்டதற்கு, உரிமைப்படுத்துவதற்கும் கொடுப்பதற்கும் தவறிய ஈட்டுறுதிக்குப் பொருந்துகின்ற 20 ஆம் விதியின் (4) ஆவது உட்பிரிவின் ஏற்பாடுகள் பொருந்துவனவாகும்.

(2) 26 ஆவது விதியில் சொல்லியுள்ளபடி தவிர, சந்தாதார் பணியை விட்டு விலகுவதற்கு முன்னல் இறந்துவிட்டபோது, கணக்கு அலுவலர்

(i) 20ஆம் விதியின் கீழ் அல்லது அதற்கு முன் அமுலிலிருந்த அது போன்ற விதியின் கீழ் அந்த ஈட்டுறுதி, ஆளுநருக்கு உரிமைப்பட்டிருந்தால், மூன்றுவது அட்டவணையில் சொல்லப்

பட்டிருக்கிற படிவங்களில் (2) ஆம் படிவத்தில் அந்த ஈட்டுறுதியை அந்தச் சட்டப்படி பெற உரிமையுள்ள அத்தகைய ஒருவருக்கு மறு உரிமைப்படுத்தி, அதை அந்த ஈட்டுறுதி நிறுமத்திற்கு மறு உரிமைப்படுத்தியதைப் பற்றிய கையொப்பமிட்ட அறிவிப்புடன் அவருக்கு கொடுத்துவிட வேண்டும், அல்லது

(ii) 20 ஆம் விதியின் (1) உள்விதியின் (இ) கூற்றின் கீழ் அந்த ஈட்டுறுதி கொடுக்கப்பட்டிருந்தால், அதன் பயனையடைய வேண்டியவர் எவரேனுமிருந்தால் அவருக்கும் அல்லது அப்படி எவரும் இல்லாவிட்டால் அதைச் சட்டப்படிப் பெற உரிமையுள்ளவருக்கும் கொடுத்துவிடவேண்டும்.

(23) (1) 20 ஆம் விதியின் கீழ் அல்லது இதற்கு முன்னால் அமுலிலிருந்த அதற்கு நிகரான விதியின் கீழ் ஆளுநருக்கு உரிமைப்படுத்தப்பட்ட ஈட்டுறுதி ஒன்று, அதன் சந்தாதார் பணியை விட்டு விலகுவதற்கு முன்னால் முதிர்வடைந்து விட்டால் அல்லது ஒரு சந்தாதாரர் அவர் மனைவி அல்லது கணவர் இவர்கள் வாழ்வின்பேரில் கூட்டாக எடுக்கப்பட்ட ஈட்டுறுதி 20 ஆம் விதியின் கீழ் அல்லது இதற்கு முன்னால் அமுலிலிருந்த அதற்கு நிகரான விதியின் கீழ் உரிமைப்படுத்தப்பட்ட ஈட்டுறுதிச் சந்தாதாரரின் மனைவி அல்லது கணவர் இறந்ததின் காரணமாகப் பணம் செலுத்துவதற்குரியதாக வந்தால், கணக்கு அலுவலர், 26 ஆம் விதியில் சொல்லப்பட்டுள்ளபடியின்றி அடியிற்கண்டபடி மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(i) காப்புறுதி செய்யப்பட்ட பணமும் அதன் மேல் சேர்ந்த மிகை ஊதியமும் கூடிய தொகை, அந்த ஈட்டுறுதியைப் பொருத்து நிதியிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்ட அல்லது திரும்பப் பெறப்பட்ட மொத்தத் தொகையும் அத்துடன் அதன் மேல் 131 ஆவது விதியில் சொல்லப்பட்ட விகிதத்தில் வட்டியும் சேர்ந்த தொகைக்கு அதிகமாய் இருந்தால், கணக்கு அலுவலர் அந்த ஈட்டுறுதியை நான்காவது அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள படிவத்தில் அந்தச் சந்தாதாரருக்கு அல்லது அந்தச் சந்தாதாரருடன் கூட்டாக காப்பு உறுதியளிக்கப்பட்டுள்ளவருக்கு ஏற்றபடி மறு உரிமைப்படுத்திச் சந்தாதாரருக்கு அளிக்க வேண்டும். சந்தாதாரர் அந்த ஈட்டுறுதிப் பணங்கள், ஈட்டுறுதி நிறுமத்திலிருந்து வந்தவுடனே திரும்பப் பெறப்பட்ட அல்லது நிறுத்தி வைக்கப்பட்ட தொகை முழுவதையும் வட்டியுடன் அந்த நிதிக்குச் செலுத்த அல்லது திரும்பிச் செலுத்த வேண்டும்.

அவ்வாறு செய்யத் தவறுபவைகளுக்கு ஒரு ஈட்டுறுதியை உரிமைப் படுத்தி, அதனைக் கொடுக்கத் தவறுபவர்களுக்குப் பொருந்தும் 20 ஆம் விதியின் (4) ஆம் உள்விதியின் ஏற்பாடுகள் பொருந்துவன வாகும்.

(ii) காப்புறுதியளிக்கப்பட்ட தொகையும் அதன் மேல் ஏற்பட்ட மிகை ஊதியங்களும் சேர்ந்து நிறுத்தி வைக்கப்பட்ட அல்லது திரும்பிப் பெறப்பட்ட தொகையும் அதன் வட்டியும் சேர்ந்த மொத்தத்திற்குக் குறைவாயிருந்தால் கணக்கு அலுவலர்கள் காப்புறுதித் தொகையை அதன் மிகை ஊதியத்துடன் சேர்த்து வசூலித்து அதை நிதியில் சந்தாதாரரின் கணக்கில் வரவு வைக்க வேண்டும்.

(2) 26 ஆம் விதியில் சொல்லியுள்ளபடி தவிர கணக்கு அலுவலரிடம் 20 ஆம் விதியின் (1) ஆம் உள்விதியின் (ஆ) கூற்றின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள ஒரு ஈட்டுறுதி, சந்தாதாரர் பணியை விட்டு விலகுவதற்கு முன்றால் முதிர்வடைந்து விட்டால், கணக்கு அலுவலர் அந்த ஈட்டுறுதியைச் சந்தாதாரருக்கு அளித்துவிட வேண்டும்.

ஆயினும், ஒரு ஈட்டுறுதியின் மேல் கூறப்பட்டுள்ள சந்தா தாரரின் மனைவியின் அல்லது அவர் மனைவி மக்களின் அல்லது அவர்களில் எவருடைய உரிமையாவது அந்த ஈட்டுறுதி முதிரும் போது முடிவடைந்து, அந்த ஈட்டுறுதித் தொகை தமக்கு ஈட்டுறுதி நிறுமத்தால் கொடுக்கப்பட்டிருந்தால், சந்தாதாரர் அதைப் பெற்றவுடன், அடியிற்கண்டபடி நிதிக்குச் செலுத்தவோ அல்லது திரும்பச் செலுத்தவோ வேண்டும்.

(i) அந்த ஈட்டுறுதியைப் பொருத்து ஏதேனும் நிறுத்தி வைக்கப்பட்ட முழுத் தொகை அல்லது நிதியிலிருந்து திரும்பிப் பெறப்பட்ட தொகை அதற்கு 13 ஆவது விதியில் கூறப்பட்ட படியுள்ள விகிதத்தில் வட்டியுடன் சேர்த்தும்; அல்லது

(ii) காப்புறுதியளிக்கப்பட்ட தொகைக்குச் சமமான தொகையும், அத்துடன் ஏதாவது கூடியுள்ள மிகை ஊதியமும் சேர்ந்து, எது குறைவோ அதையும் செலுத்த வேண்டும். அவ்வாறு செய்யத் தவறுபவருக்கு ஒரு ஈட்டுறுதியை உரிமைப்படுத்திக் கொடுக்கத் தவறியதற்குப் பொருந்தும் 26 ஆம் விதியின் (4) ஆம் உள்விதியின் ஏற்பாடுகள் பொருந்துவனவாகும்.

(24) 16 ஆம் விதியின் (அ) உள்விதியின் (1) கூறு (i) இல் சொல்லப்பட்டுள்ள குடும்ப ஓய்வூதிய நிதியில் ஒரு சந்தாதாரரின்

பற்று முழுதுமாக அல்லது நிதி ஒரு பகுதியாக எக்காரணத்தாலேனும் முடிவுற்றிருந்தால், அந்தச் சந்தாதாரரின் வருங்காலச் சேம நிதிக் கணக்கிற்குச் சந்தாதார் குடும்ப ஓய்வூதிய நிதியிலிருந்து திரும்பப் பெறப்பட்ட தொகையைச் செலுத்தி ஈடு செய்ய வேண்டும். அப்படி செலுத்தத் தவறினவற்றில் அந்தத் தொகையை சந்தாதாரரின் ஊதியங்களிலிருந்து தவணைகளாகவும் அல்லது 14 ஆம் விதியின் (1) ஆம் உள்விதியின் (ஆ) கூற்றின் கீழ் தனிக் காரணங்களை முன்னிட்டு, முன்பணம் ஒப்பளிக்கத் தகுதியுள்ள அதிகாரி கட்டளையிடும் விதத்தில் வேறு வகைகளாகவும் சந்தாதாரரின் ஊதியங்களிலிருந்து கழிக்க வேண்டும்.

(25) அந்த ஈட்டுறுதி கெடுத் தீர்ந்துவிட்டால் 20 ஆம் விதியின் கீழ் அது ஆளுநருக்கு அல்லாமல் வேறு வகையில் உரிமைப் படுத்தப்பட்டிருந்தாலும் அல்லது பற்றுப் பொறுப்பு உள்ளதாயிருந்தாலும் அல்லது வில்லங்கத்துக்கு உட்பட்டிருந்தாலும் அதற்கு ஒரு ஈட்டுறுதியை உரிமைப்படுத்திக் கொடுக்கத் தவறியவற்றிற்குப் பொருந்தக் கூடிய ஏற்பாடுகளே பொருந்துவனவாகும்.

(26) (அ) (2) ஆம் விதியின் கீழ் ஆளுநருக்கு உரிமைப் படுத்தல் அல்லாத மற்ற உரிமைப்படுத்தலைப் பற்றி, அல்லது

(ஆ) அதில் உள்ள பற்றுப் பொறுப்பு அல்லது வில்லங்கத்தைப் பற்றி,

(இ) அந்த ஈட்டுறுதி அல்லது பெறப்பட்ட பணம் ஆகியவற்றைப்பற்றிய நடவடிக்கையைத் தடுத்திருக்கிற ஒரு நீதி மன்றத்தின் ஆணையைக் குறித்து,

கணக்கு அலுவலர் அறிவிப்பு வரப்பெற்றால்,

(i) 22 ஆம் விதியில் சொல்லியுள்ளபடி அதை மறு உரிமைப்படுத்தவோ அல்லது ஒப்படைக்கவோ கூடாது, அல்லது

(ii) 23 ஆவது விதியில் சொல்லியுள்ளபடி அந்த ஈட்டுறுதியால் காப்புறுதியளிக்கப்பட்ட பணத்தை வசூலிக்கவோ அல்லது அந்த ஈட்டுறுதியை மறு உரிமைப்படுத்தவோ ஒப்படைக்கவோ கூடாது. ஆனால் அதைப்பற்றி அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

26. (அ) இந்த விதிகளிலுள்ளவை எப்படியிருந்தாலும், 20 ஆம் விதியின் கீழ் அல்லது முன்னால் அமுலிருந்த அதற்கு நிகரான

விதியின் கீழ் ஆளுநருக்கு உரிமைப்படுத்தப்பட்ட ஈட்டுறுதியைப் பொருத்தவரை, சந்தாதாரரின் வரவில் உள்ள தொகையில் மீதமுள்ளதைத் தமிழ்நாடு உதவித் தொகை வருங்காலச் சேம ஓயவூதிய நிதி அல்லது தமிழ்நாடு உதவி சேர்ந்த வருங்காலச சேம நிதிக்கு அவர் வரவாக மாற்றியபோது கணக்கு அலுவலர் அந்த ஈட்டுறுதியை அந்த சந்தாதாருக்கு அல்லது சந்தா தாருக்கு கூட்டுக் காப்புறுதி உடையவருக்கு ஏற்ற வகையில் நான்காவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள இரண்டு படிவங்களில் இரண்டாவதாகவுள்ள படிவத்தில் மறு உரிமைப் படுத்தி அவ்வாறு மறு உரிமைப்படுத்தியதற்குக் கையொப்பமிட்டு ஈட்டுறுதி நிறுமத்துக்கு முகவரியிட்ட அறிவிப்புடன் சேர்த்து சந்தாதாருக்குக் கொடுத்துவிட வேண்டும். சந்தாதாரர் அந்த ஈட்டுறுதியைப் பெற்றதின் பேரில் அதை ஏற்றவாறு தமிழ்நாடு உதவி சேர்ந்த வருங்காலச் சேம நிதி ஓய்வூதிய ஈட்டுறுதி விதிகள் 1950 இன் 35 ஆம் விதியின் கீழ் அல்லது தமிழ்நாடு உதவி சேர்ந்த வருங்காலச் சேம விதிகள் 19 ஆம் விதியின் கீழ் ஆளுநருக்கு மறு உரிமைப்படுத்தப்பட வேண்டும். சந்தா தாரர்களால் ஆளுநருக்கு ஏற்கனவே "மேலும் உரிமைப்படுத்தப் பட்ட" ஈட்டுறுதிகளிலும் இந்த நடைமுறை கையாளப்பட வேண்டும்.

**தகுதியற்ற உபயோகத்துக்காக நிதியிலிருந்து பெறப்பட்ட அல்லது நிறுத்தி வைக்கப்பட்ட அல்லது திரும்பப் பெறப் பட்ட பணங்களை வசூலித்தல்.**

(27) இந்த விதிகளில் உள்ளவை எப்படியிருந்தாலும், 14 ஆம் விதியின் (1) உள்விதியின் கீழ் முன்பணமாக நிதியிலிருந்து பெறப்பட்ட பணமும், அல்லது 16 ஆம் விதியின் (அ) கூறு அல்லது (ஆ) கூற்றின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்ட அல்லது நிதியிலிருந்து திரும்பப் பெறப்பட்ட பணமும், அவை எந்த நோக்கத்திற்காக வாங்குவதற்கு அல்லது நிறுத்திக் கொள்வதற்கு அல்லது திரும்பப் பெறுவதற்கு ஒப்பளிப்புத் தரப்பட்டதோ அதைத் தவிர இதர நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஒப்பளிப்புத் தரும் அதிகாரி மனநிறைவு கொள்வாரானால், சம்பந்தப்பட்ட தொகை 15 ஆம் விதியில் சொல்லிய விகிதப்படி கூடிய வட்டியுடன் சந்தாதாரரால் உடனடியாக ஏற்றவாறு நிதிக்குச் செலுத்தப்படவோ அல்லது திரும்பிச் செலுத்தப் படவோ வேண்டும். தவறினால், அந்தத் தொகை சந்தாதாரரின்

ஊதியத்திலிருந்து அவர் விடுப்பிலிருந்தாலும் ஒரே மொத்தமாகக் கழிக்கப்பட்டு வசூலிக்கும்படி ஆணையிடப்படும். அவர் திரும்பிச் செலுத்த வேண்டிய அல்லது செலுத்த வேண்டிய மொத்தத் தொகை அவருடைய ஊதியங்களின் பாதிக்கு மேல் இருந்தால், அவருடைய ஊதியங்களின் பாதியில் மாதாந்தரத் தவணைகளாக, வசூலிக்க வேண்டிய மொத்தத் தொகையும் செலுத்தப்படும் வரை அல்லது திரும்பச் செலுத்தப்படும் வரையில் ஏற்றவாறு வசூல் செய்ய வேண்டும்.

குறிப்பு.—இந்த விதியில் பயன்படுத்தப்பட்ட "ஊதியங்கள்" என்ற சொல் பிழைப்பு ஊதியத்தை உட்படுத்தாது.

*நிதியில் சேர்ந்துள்ள தொகையை முடிவாகத் திரும்பப் பெறுதல்.*

(28) ஒரு சந்தாதார் அவர் பணியிலிருந்து வெளியேறும் போது, நிதியில் அவர் வரவாக இருக்கும் தொகை அவருக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

ஆனால் ஒரு சந்தாதார் வேலையிலிருந்து விலக்கப்பட்டால் அல்லது நீக்கப்பட்டால் நிதியில் அவர் வரவில் இருக்கும் தொகை—

(அ) அவர் வேலை விலக்கலை அல்லது நீக்கலை எதிர்த்து மேல் முறையீடு செய்திருந்தால், அந்த மேல் முறையீடு முடிவாகும் வரையில் அல்லது, அவர் தமது மேல்முறையீட்டைத் திரும்பப் பெற்றுக் கொண்டதாக எழுத்து மூலமாய்த் தெரியப் படுத்தினலொழிய,

(ஆ) அவர் அத்தகைய ஒரு மேல்முறையீடு செய்யாதிருந் தால் மேல்முறையீடு செய்வதற்குக் கொடுக்கப்பட்ட காலம் முடியும் வரையிலும் அல்லது அவர் அம்மாதிரி மேல்முறையீடு செய்வதில்லை என்று எழுத்து மூலமாகத் தெரிவித்தாலொழிய, கொடுக்கப்படக் கூடாது.

மேலும், வேலையிலிருந்து விலக்கப்பட்டு அல்லது நீக்கப்பட்டு மறுபடியும் வேலையில் திரும்ப அமர்த்தப்பட்ட ஒரு சந்தாதார் இந்த விதியினைத் தொடர்ந்து நிதியிலிருந்து அவருக்குச் செலுத்தப்பட்ட தொகையை, 13 ஆம் விதியில் சொல்லியுள்ள விகிதத்தில் அதற்குள்ள வட்டியுடன் 20 ஆம் விதியின் ஏற்பாட்டில் சொல்லியுள்ள விதத்தில் அரசால் அவ்வாறு கேட்கப்பட்டால்

திரும்பச் செலுத்த வேண்டும். அப்படித் திரும்ப செலுத்தப் பட்ட தொகை அந்த நிதியில் அவர் கணக்கில் வரவு வைக்கப்படும்.

பதிலியாக அல்லது தற்காலிகமாக ஒரு பணியிடத்தில் உள்ள ஒரு சந்தாதார் தம் வேலை முடிவடையும்போது அந்த நிதியிலிருந்து தொகையைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம், அல்லது அவர் கடைசியாக வேலையை விடும்போது பெற்றுக் கொள்வதற்காக அந்த நிதியிலேயே விட்டு வைக்கலாம்.

29. ஒரு சந்தாதார்—

(அ) ஓய்வு பெற ஆயத்த விடுப்பில் சென்றிருந்தாலும் அல்லது அவர் ஒரு நீண்ட கால விடுமுறைத் துறையில் வேலையிலிருந்து அந்த நீண்ட கால விடுமுறையில் கூட ஓய்வு பெற ஆயத்தமாக விடுமுறையோடு சேர்ந்த விடுப்பில் சென்றிருந்தாலும்; அல்லது

(ஆ) விடுப்பிலுள்ள போது ஓய்வு பெற அனுமதிக்கப் பட்டாலும் அல்லது ஒரு தகுதியுள்ள மருத்துவ அதிகாரியால் மேற்கொண்டு வேலை செய்யத் தகுதியற்றவர் என்று சொல்லப் பட்டிருந்தாலும்; அல்லது

(இ) அவர் வயது முதிர்வு காலத்தை அடைந்தும் ஏதோ ஒரு காரணத்தால் ஓய்வு பெற அனுமதிக்கப்படாதபோது, நிதியில் அவர் வரவில் இருக்கும்தொகை, அவரால் கணக்கு அலுவலருக்கு விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதின் பேரில் சந்தாதாரருக்கு செலுத்தப்படுவதற்குரியதாகும்.

ஆயினும், சந்தாதார், பணிக்குத் திரும்பிவந்தால், 14 ஆம் விதியின் (1) உள்விதியின் (இ) கூற்றின் கீழ் தனிக் காரணங் களுக்காக முன் பணம் கொடுப்பதற்கு ஒப்பு அளிப்புத் தரக் கூடிய அதிகாரி கட்டளையிட்டால், அச்சந்தாதார் அந்த நிதியிலிருந்து இந்த விதியின் கீழ்த் தமக்குத் செலுத்தப்பட்ட தொகை முழுவதையும் அல்லது பகுதியை, (3) ஆம் விதியில் சொல்லியுள்ள விகிதப்படி அதற்கு வட்டியுடன், சொல்லப்பட்ட அதிகாரி கட்டளையிட்டவாறு பணமாக அல்லது பிணையமாக அல்லது ஒரு பகுதிப் பணமாகவும் ஒரு பகுதி பிணையமாகவும் தவணைகளிலோ அல்லது மற்ற விதமாக ஊதியத்திலிருந்து பிடித்துக் கொள்வதன் மூலமாகவோ அல்லது வேறுவிதமாகவோ, தன்னுடைய கணக்கில் வரவு வைக்க நிதிக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும்.

*30. தமது கணக்கில் வரவாக இருக்கும் தொகை செலுத்தப் படக் கூடியதாக ஆவதற்கு முன்னால் அல்லது அது செலுத்தப்படக் கூடியதாயிருந்தும் செலுத்தப்படுவதற்கு முன்னால் ஒரு சந்தா தாரருக்கு இறப்பு நேர்ந்தபோது—

சந்தாதார் ஒரு குடும்பத்தை விட்டுச் சென்றால்—

(அ) தம்முடைய குடும்பத்தின் ஒரு உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் பேரில் 7 ஆம் விதியின் ஏற்பாட்டுக்கு அல்லது இதற்கு முன்னால் அமுலிலிருந்த அதற்கு நிகரான விதிக்கு இணங்கச் சந்தாதாரரால் செய்யப்பட்ட ஒரு நியமனம் உளதாயிருந்தால், அந்த நியமனத்திற்குச் சம்பந்தப்பட்ட நிதியில் அவருடைய வரவில் இருக்கும் தொகை அல்லது அதன் ஒரு பகுதி அவரால் நியமிக்கப்பட்டவர் அல்லது நியமிக்கப்பட்டவர்களுக்கு அந்த நியமனத்தில் சொல்லப்பட்டுள்ள விகிதாசாரத்தில் செலுத்தப்படத் தக்கதாகும்.

ஆனால், சந்தாதார் இறந்த தேதியன்று எவரொருவர் அந்தக் குடும்பத்தின் உறுப்பினராகும் தகுதியுடையவராயுள்ளாரோ அவருக்கு மட்டும் அந்தத் தொகை செலுத்தப்படத்தக்கதாகும்.

(ஆ) அந்தச் சந்தாதாரரின் குடும்பத்தின் உறுப்பினர் அல்லது உறுப்பினர்களின் பெயரால் அத்தகைய ஒரு நியமனம் இல்லாவிட்டாலும் அல்லது அத்தகைய நியமனம் அந்த நிதியில் அவருடைய வரவில் இருக்கும் தொகையில் ஒரு பகுதியைப் பொருத்தவரையில் மட்டும் இருந்தாலும், அந்த நியமனம் சம்பந்தப்படாத தொகை முழுவதுமோ அல்லது பாகமோ அந்தக் குடும்பத்தின் ஒரு உறுப்பினர் அல்லது உறுப்பினர்களாக இல்லாதவர்கள், பேரில் ஏதேனும் நியமனம் இருப்பதாகத் தோன்றினும், எங்ஙனமாயினும், அவர் குடும்பத்தின் உறுப்பினர் களுக்குச் சம பாகங்களில் செலுத்தப்படத் தக்கதாகும்.

ஆயினும்,

(1) சட்டப்படி தக்க பருவம் அடைந்துள்ள ஆண் மக்கள் (குமாரர்கள்)

(2) இறந்துபோன மகனின் சட்டப்படித் தக்க பருவம் அடைந்துள்ள குமாரர்கள்.

---

*"E" ன் இணைப்பையும் பார்க்கவும்.

(3) கணவன்மார் உயிருடனிருக்கும் திருமணமான பெண் மக்கள்.

(4) இறந்து போன மகனுடைய திருமணமாகிக் கணவன் மார் உயிருடனுள்ள பெண்மக்கள் ஆகியவர்களுக்கு.

(1), (2), (3), (4)-ஆம் கூறுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் தவிர அந்தக் குடும்பத்தில் வேறு எவரேனும் உறுப்பினர் இருந்தால், ஒரு பாகமும் அளிக்கப்படமாட்டாது.

மேலும், ஒரு இறந்து போன குமாரனின் விதவை அல்லது விதவைகளும், குழந்தை, அல்லது குழந்தைகளும் அந்த மகன் சந்தாதாரருக்குப் பிறகு இருந்திருந்து மேலே முதல் ஏற்பாட்டின் (1) கூற்றின் ஏற்பாடுகளிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தால் என்ன பாகம் பெற்றிருப்பாரோ அந்தப் பாகத்தை மட்டுமே அவர்களுக்குள் சமபாகங்களாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(ii) சந்தாதார் குடும்பத்தை விட்டுப் போகாதபோது, அவரால் 7-ஆம் விதியின்படி அல்லது இதற்கு முன்னால் அமுலிலிருந்த அதற்கு நிகரான விதியின்படி எவரேனுமொருவர் அல்லது பலர் பேரில் ஒரு நியமனம் செய்து அது உள்ளதா யிருந்தால் நியமனம் செய்யப்பட்ட அந்த நிதியில் அவர் வரவில் உள்ள தொகை அல்லது அதன் பாகம் அந்த நியமனத்தில் சொல்லப்பட்டுள்ள விகிதாச்சாரப்படி நியமனதார் அல்லது நியமனதார்களுக்குச் செலுத்தப்படக் கூடியதாகும்.

குறிப்பு 1.—இறந்துபோன சந்தாதாரரின் பயனுளியாகிய வயதடையாத ஒரு சிறுவனுக்குச் செலுத்தப்பட வேண்டிய வருங்காலச் சேம நிதி, இந்த விதிகள் அமுலுக்கு வருவதற்கு முன் அமுலிலிருந்த போது வருங்காலச் சேம நிதியை முறைப் படுத்தும் விதிகளின்கீழ் செய்யப்பட்ட உறுதிமொழியில் சந்தாதாரரால் நியமிக்கப்பட்ட கார்டியனுக்கு (காப்பாளருக்கு)ச் செலுத்தப்படலாம். சந்தாதார், அப்படி ஒரு காப்பாளர் நியமிக்கப்படாதபோது அந்தத் தொகை வருங்காலச் சேம நிதி 1925-ஆம் ஆண்டுச் சட்டத்தின் 4-ஆவது பிரிவின் (1) உட்பிரிவின் (ஆ) கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ. 5,000 வரம்புக்கு அதிகப் படாவிட்டால், பயனுளியாயுள்ள வயதடையாத சிறுவனுக்காகப் பணத்தைப் பெற்றுக் கொள்ள நீதிமன்றத்தால் நியமனம் செய்யப்படும் காப்பாளரை மட்டுமே ஏற்றுக்கொள்ள வேண்டும்,

ஆனால் அத்தாரப்பினர் நீதிமன்றத்திலிருந்து காப்பாளருக்குள்ள சான்றிதழைப் பெறுவதற்குப் பண வசதியில்லை என்று சொன்னால், ஏதேனும் பணம் கொடுப்பதற்கு அரசாங்கத்தின் ஆணைகளைப் பெற வேண்டும்.

குறிப்பு 2.—வயதடையாத பயனாளி ஒருவருடைய பாகம் ரூ. 100-க்கு அதிகப்படாதவற்றில் நீதிமன்றத்தினிடமிருந்து காப்பாளர் சான்றிதழ் பெறாமலே,

(i) வயதடையாத பயனாளியின் இயல்பாகவுள்ள காப்பாளருக்கு; அல்லது

(ii) இயல்பாகவுள்ள காப்பாளர் இல்லாதபோது வயதடையாத அந்தப் பயனாளிக்காகப் பணம் பெறக்கூடிய தகுதியுடையவர் என்று அந்த அலுவலகத்தின் தலைவரால் கருதப்படும் ஒருவருக்கு, பின்னால் வரக் கூடிய யாதொரு உரிமைக் கோரிக்கைகளுக்கு அரசாங்கத்துக்கு ஈட்டுறுதி செய்ய இரண்டு பிணையாட்கள் ஒத்துக்கொண்டு கையொப்பமிட்டுப் பிணைமுறி (இணைப்பு ஊ-வைப் பார்க்கவும்) எழுதிக் கொடுப்பதின் பேரில் பணம் கொடுக்கலாம்.

ஆயினும், அப்படிச் செய்வது தக்கதெனத் தோன்றினால் பணம் கொடுத்தற்கு முன்பு, பின்னால் வரக்கூடிய ஏதேனும் உரிமைக் கோரிக்கைகளுக்கு அரசாங்கத்துக்கு ஈட்டுறுதி செய்ய ஒத்துக்கொண்டு இரண்டு பிணையாட்கள் கையொப்பமிட்ட பிணை முறி ஒன்று எழுதிக் கொடுக்கும்படி இயல்பாகவுள்ள காப்பாளரைக் கேட்கலாம்.

மேலும், இந்தச் சட்டத்தின் கீழ் வருவனவற்றில் மேலே சொல்லப்பட்ட 100 ரூபாய் வரம்பைப் பொருட்படுத்தாமலே, இறந்து போன ஒரு சந்தாதாரரின் விதவைக்கு அவள் மாற்றார் குழந்தைகள் அல்லாத வயதடையாத தன்னுடைய குழந்தைகளுக்காக, நீதிமன்றத்திலிருந்து காப்பாளர் சான்றிதழ் பெறாமலே பணம் கொடுக்கலாம். தக்கதெனத் தோன்றினால் பணம் கொடுக்கப்படுவதற்கு முன்பு, பின்னால் வரக்கூடிய உரிமைக் கோரிக்கைகளுக்கு அரசுக்கு ஈட்டுறுதி செய்ய ஒத்துக் கொண்டு இரண்டு பிணையாட்கள் கையொப்பமிட்ட பிணைமுறி எழுதித் தரும்படி அவ்விதவையைக் கேட்கலாம்.

குறிப்பு 3.—நியமிக்கப்பட்டவர் சந்தாதாரருக்கு முன்னுல் இறந்து, அந்த நியமனம் சந்தாதார் இறந்தபோது சட்டப்படி செல்லத்தக்கதாயிருந்தால் அல்லது நியமிக்கப்பட்டவர் சந்தாதாரருக்குப் பிறகும் ஆனுல், பணம் பெறுவதற்கு முன்பும் இறந்துவிட்டால் அத்தகையவற்றில், நிதியில் சந்தாதாரருடைய வரவில் நிலுவையிலுள்ள தொகையில் முழுவதும் அல்லது ஒரு பாகத்தைப் பெற நியமிக்கப்பட்டவருக்குச் சேர வேண்டிய வருங்காலச் சேம நிதிப் பணத்தை அடியிற்கண்டபடி கொடுக்க வேண்டும் :—

(அ) இறந்துபோன நியமிக்கப்பட்டவருக்குச் சேர வேண்டிய தொகை 500 ரூபாய்க்கு அதிகப்படாதபோது சம்பந்தப் பட்ட மாவட்டத்தின் ஆட்சியாளர் போதுமானதெனக் கருதும் அளவில், உரிமை கோருபவர் அல்லது உரிமை கோருபவர் களுடைய உரிமை அல்லது உரிமை மூலம் பற்றி, விசாரணை நடத்திய பிறகு ஆட்சித் துறையின் அல்லது ஏனைய சட்ட அதிகாரியின் கடிதங்களைத் தாக்கல் செய்வது தேவையில்லை யென்று கருதித் தொகையைப் பெறுவதற்கு உரியவர்களென அவரால் அறிக்கை செய்யப்பட்ட உரிமை கோருபவர் அல்லது கோருபவர்களுக்கு அந்தத் தொகையைக் கொடுத்துவிட அரசுக் கணக்குத் துறைத் தலைவர் அதிகாரமளிக்கலாம். அந்த விசாரணைப் பதிவுகள் குறைந்தது நம்பிக்கையான அல்லது பற்றில்லாத இருவருடைய கையொப்பமிட்ட வாக்கு மூலங்களைக் கொண்டதாயிருக்க வேண்டும்.

ஆனுல், அந்த மாதிரியுள்ளவற்றில் தக்கதெனக் கருதினுல் அத்தாரப்பினரைத் தொகை கொடுக்கப்படுவதற்கு முன்பு, பின்னுல் நேரக்கூடிய உரிமைக் கோரிக்கைகளுக்கு அரசுக்கு ஈட்டுறுதி செய்ய இரண்டு பிணையாட்கள் ஒத்துக்கொண்டு கையொப்பமிட்ட பிணைமுறி ஒன்றை எழுதித்தருமாறு கேட்கலாம்.

(ஆ) இறந்துபோன நியமிக்கப்பட்டவருக்குச் சேர வேண்டிய தொகை, 500 ரூபாய்க்கு அதிகப்பட்டால், இறந்து போன நியமிக்கப்பட்டவருடைய சொத்தின் நிருவாகம் கொடுக்கப்பட்டுள்ளதென்பதற்குச் சான்றுக விருப்புறுதி மெய்ப்பிதழ் அல்லது (நீதிமன்றம் அளிக்கும்) நிருவாகம் உரிமைப் பத்திரத்தையாவது அல்லது பணத்தைப் பெற்றுக் கொள்ள

உரிமையளிக்கும் வழியுரிமைச் சான்றினையாவது, யார் தாக்கல் செய்கின்றனரோ அவருக்கு மாநிலக் கணக்குத் துறைத் தலைவர் பணம் கொடுக்க வேண்டும்.

ஆனால், அந்தப் பணத்தைப் பெற நியமனம் செய்யப் பட்டவரின் **வழியுரிமை என்று** உரிமை கோருபவரின் உரிமையையும் **உரிமை மூலம் பற்றியும்** அரசு மனநிறைவு பெற்று, (நீதிமன்றங்கள்) அல்லது சட்ட அதிகாரிகள் அளிக்கும் நிருவாக உரிமைப் பத்திரத்தைத் தாக்கல் செய்யச் சொல்வது தேவை யில்லாத காலதாமதத்தையும தொந்தரவையும் கொடுக்கும் என்று கருதினால், உரிமை கோருபவருக்கு, பின்னால் ஏற்படும் உரிமைக் கோரிக்கைகளுக்கு அவர் அரசுக்கு ஈட்டுறுதி செய்ய இரண்டு பிணையாட்கள் ஒத்துக்கொண்டு கையொப்பமிட்ட பிணைமுறி எழுதித் தருவதன் மேல், பணத்தைக் கொடுக்க மாநிலக் கணக்குத் துறைத் தலைவருக்கு அரசு அதிகார மளிக்கலாம்.

31. (1) நிதியில் ஒரு **சந்தாதாருடைய** வரவில் உள்ள பணம் செலுத்தப்பட வேண்டியதாகும் போது, அதை வருங்காலச் சேம நிதியில் 1925-ஆம் ஆண்டுச் சட்டத்தின் 4-ஆம் பிரிவில் சொல்லியுள்ளபடி செலுத்த வேண்டியது கணக்கு அதிகாரியின் கடமையாகும்.

(2) இந்த விதிகளின்கீழ் பணம் செலுத்தப்பட வேண்டிய அல்லது ஈட்டுறுதி மறு உரிமைப்படுத்தப்பட வேண்டிய அல்லது கொடுக்கப்பட வேண்டிய ஒருவர் பைத்தியக்காரராயிருந்தால் அவரது சொத்துக்கு 1912-ஆம் ஆண்டு இந்திய பைத்தியச் சட்டத்தின்கீழ் ஒரு மேலாள் நியமிக்கப்பட்டிருந்தால் அந்த மேலாளருக்குப் பணத்தைக் கொடுக்கவோ, மறுஉரிமை செய்யவோ அல்லது ஒப்படைக்கவோ வேண்டுமே அல்லாது அந்தப் பைத்தியக்காரருக்கு அவ்வாறு செய்யக்கூடாது.

(3) இந்த விதிகளின்கீழ் வருங்காலச் சேம நிதி நிலுவைகளைக் கொடுக்கும்படி விண்ணப்பங்களைச் சந்தாதாரிட மிருந்து அலுவலகத் தலைவர்கள் பெற்றுக் கணக்கு அலுவலருக்கு அனுப்ப வேண்டும். அந்த விண்ணப்பங்கள் (எ) இணைப்பில் உள்ள படிவத்திலிருக்க வேண்டும். நிதிக்கணக்குகள் முடிப்பதற்கு வேண்டியவாறு அதற்கு இரண்டு வாரங்களுக்குள்ளாக கணக்கு

அலுவலரிடம் வந்து சேரும்படி அனுப்ப வேண்டும். திரும்பப் பெறப்படும் பணங்கள் இந்தியாவிற்குள் மட்டுமே கொடுக்கப்படும். அந்தத் தொகைகள் கொடுக்கப்பட வேண்டியவர்கள் அவைகளை இந்தியாவில் பெறத் தாங்களே ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

குறிப்பு.—ஒரு சந்தாதாரின் வரவில் உள்ள தொகை, விதிகள் 28, 29 அல்லது 30-இன் கீழ்க் கொடுக்கப்பட வேண்டியதாயிருந்தால் கணக்கு அலுவலர் அந்தத் தொகையில் விவாதத்திற்கோ அல்லது ஐயத்திற்கோ இடமில்லாத பாகத்தைத் தாமதமின்றிக் கொடுப்பதற்கு இசைவாணையிட வேண்டும். மீதமுள்ளதை எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் கொடுக்க வேண்டும்.

32. (அ) வேறு ஏதேனும் உதவித் தொகை கூடிய வருங்காலச் சேம நிதியாகிய அரசாங்க வருங்கால சேம நிதியில் சந்தாதாரராயிருக்கும் ஒரு அரசாங்கப் பணியாளர் ஓய்வூதியம் பெறக்கூடிய அரசாங்கப் பணிக்கு நிலையாக மாற்றப்பட்டால், மாற்றமான தேதியில் அந்தச் சந்தாத தொகையும் அதன் மேல் கூடிய வட்டியும் சேர்ந்து அத்தகைய வேறு நிதியில் அவர் வரவில் இருப்பதை அரசாங்கப் பணியாளரின் ஒப்புதலின் மேல் இந்த நிதிக்கு அவர் பேரில் மாற்ற வேண்டும்.

(ஆ) மாநில ரயில்வே வருங்காலச் சேம நிதி உதவித் தொகை கூடிய வருங்காலச் சேம நிதி (இந்தியா), உதவித் தொகை சேர்ந்த வருங்காலச் சேம நிதி (தமிழ்நாடு) அல்லது மற்ற ஏதேனும் மாகாண உதவித் தொகை சேர்ந்த வருங்காலச் சேம நிதிக்குச் சந்தாதாரரயுள்ள ஒரு அரசாங்கப் பணியாளர் ஓய்வூதியம் உடைய அரசாங்கத்தின்கீழ் ஒரு பணிக்கு நிலையாக மாற்றப்பட்டு அத்தகைய ஓய்வூதியப் பணியில் ஓய்வூதியம் பெறுவதை அவர் தேர்ந்தெடுத்திருந்தால் அல்லது ஓய்வூதியம் பெறுமாறு கேட்கப்பட்டிருந்தால்—

(i) மாற்றமான தேதியில் அத்தகைய உதவித் தொகை சேர்ந்த வருங்காலச் சேம நிதியில் அவருடைய வரவில் உள்ள சந்தாத் தொகையும் அதன் மேல் சேர்ந்த வட்டியும் சம்பந்தப்பட்ட வேறு அரசின் இசைவு பெற்று இந்த நிதியில் அவர் வரவுக்கு மாற்றப்பட வேண்டும்.

(ii) அத்தகைய உதவித் தொகை கூடிய வருங்காலச் சேம நிதியில் உள்ள அரசாங்க உதவித் தொகையும் அதன் மேல் கூடிய வட்டியும் சேர்ந்து இருக்கும். ஏதேனும் தொகையானது அரசாங்கத்தின் இசைவின் பேரில் அந்த மாகாணத்தின் வருவாய்களில் வரவுத் தொகையாக மாற்றப்படவேண்டும்.

(iii) அவர் அதற்குப் பரிமாற்றமாக அந்த உதவித் தொகை சேர்ந்த வருங்காலச் சேமநிதிக்குச் சந்தா செலுத்திய காலத்தில் அரசாங்கம் நிர்ணயிக்கக் கூடிய அத்தகைய பாகத்தைத் தமது ஓய்வூதியத்திற்குக் கணக்கிட்டுக் கொள்ள உரிமையுள்ளவராவார்.

(இ) ஒரு உள்ளாட்சிக் கழகத்தின் கீழ் உள்ள ஒரு மருத்துவம் அல்லது கல்வி நிறுவனத்தின் பணியாளர், அந்தக் கழகத்தால் நிறுவி நடத்தப்பட்டு வந்த வருங்காலச் சேம நிதிக்குச் சந்தாதாரராயிருந்து அத்தகைய நிறுவனங்கள் அரசாங்கத்தால் எடுத்துக் கொள்ளப்பட்டதால் ஓய்வூதியம் பெறக்கூடிய அரசாங்கப் பணிக்கு நிலையாக மாற்றப்பட்டிருந்தால்—

(i) சந்தாத் தொகையும் அதன் மேல் கூடிய வட்டியும் உள்ளாட்சிக் கழகத்தின் வருங்காலச் சேம நிதியில் அவர் கணக்கில் வரவாகவுள்ள சந்தாத் தொகையும் அதன் மேல் கூடிய வட்டியும் இந்த நிதிக்கு அவர் பேரில் வரவாக மாற்றப்படும்; மேலும்

(ii) அந்தப் பணியாளர் தம் முந்திய பணியில் உள்ளாட்சிக் கழகத்தின் வருங்காலச் சேமநிதி அனுகூலங்களை விடாது வைத்திருந்தால், உள்ளாட்சிக் கழகத்தின் வருங்காலச் சேம நிதிக் கணக்கில் அவர் வரவில் உள்ள உள்ளாட்சிக் கழகத்தால் அளிக்கப்பட்ட உதவித் தொகையும் அதன் மேல் கூடிய வட்டியும் இந்த நிதியில் அவர் வரவுக்கு மாற்றப்படும்.

(ஈ) (1) 1943 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து தமிழ்நாடு உதவித் தொகை சேர்ந்த வருங்காலச் சேம நிதிக்குச் சந்தா செலுத்தத் தேர்ந்தெடுக்காத சென்னை உயர்நீதிமன்ற அலுவல் உரிமை மாற்றம் பெறுபவரின் (Official Assignee) பணித் தொகுதியின் ஒரு உறுப்பினர், சொல்லப்பட்ட அந்தத் தேதிக்கு முந்தி அவர் செய்த பணியை ஓய்வூதியத்திற்குக் கணக்கிட்டுக் கொள்ள விரும்பினால் அவர்

கணக்கில் அவர் வரவில் 1943 மார்ச்சு 31 இல் அலுவல் உரிமை மாற்றம் பெறுபவர் (அபிஷியல் அசைனி) வருங்காலச் சேம நிதியில் உள்ள தொகையும் அதற்குக் கூடிய வட்டியும் இந்த நிதியில் அவர் கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன் 1943 மார்ச்சு 31-ல் அவர் கணக்கில் வரவாகவுள்ள உதவித் தொகைகளும் அதன் மேல் கூடிய வட்டியும் மாநில வருவாய் களின் வரவாக மாற்றப்படும்.

(2) அத்தகைய உறுப்பினர் 1943 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதிக்கு முந்தியுள்ள தமது பணிகளின் அனுகூலங்களை விடாது வைத்துக் கொண்டால் 1943 மார்ச்சு 31-ல் அலுவல் உரிமை மாற்றம் பெறுபவர் (Official (Assignee வருங்காலச் சேம நிதியில் அவர் வரவில் உள்ள தொகை முழுவதும் இந்த நிதிக்கு அவர் வரவாக மாற்றப்படும்.

32. (அ) இந்த நிதியின் சந்தாதார் பின்னால் (தமிழ்நாடு) உதவித் தொகையுடன் சேர்ந்த வருங்காலச் சேம நிதியின் அனுகூலங்களுக்குச் சேர்த்துக் கொள்ளப்பட்டால், அவருடைய சந்தாத் தொகையும் அதன் மேல் கூடிய வட்டியும் (தமிழ்நாடு) உதவித் தொகையுடன் சேர்ந்த வருங்காலச் சேம நிதிக்கு அவருடைய வரவாக மாற்றப்படும்.

## நடைமுறை விதிகள்.

33. இந்த விதிகளின்கீழ் நிதிக்குச் செலுத்தப்பட்ட எல்லாத் தொகைகளும் "பொது வருங்காலச் சேம நிதி" என்று சொல்லப்படும் கணக்குக்கு அரசாங்கப் புத்தகங்களில் வரவு வைக்கப்பட வேண்டும். இந்த விதிகளின்கீழ் அவை செலுத்தப்பட வேண்டிய பிறகு ஆறு மாதங்களுக்குள் பெற்றுக் கொள்ளப்படாத தொகைகள் அந்த ஆண்டு முடிவில் "வைப்புத் தொகைகளுக்கு" மாற்றப்பட்டு வைப்புத் தொகைகள் பற்றிய சாதாரண விதிகளின்கீழ் செயலாற்றப்படும்.

34. இந்தியாவில் ஊதியத்திலிருந்து கழிப்பதின் மூலமாக அல்லது பணமாக சந்தா செலுத்தப்படும்போது சந்தாதார்

தமக்கு கணக்கு அலுவலரால் தெரிவிக்கப்படும் இந்த நிதியில் தமது கணக்குக்குரிய எண்ணிக்கைக் குறிப்பிட வேண்டும். அந்த எண்ணில் ஏற்படும் யாதொரு மாறுதலும் அதே மாதிரி கணக்கு அலுவலரால் சந்தாதாரருக்குத் தெரிவிக்கப்படும்.

35. (1) ஒவ்வொரு ஆண்டும் முடிந்த பிறகு கூடிய விரைவில் கணக்கு அலுவலர் ஒவ்வொரு சந்தாதாருக்கும் அந்த ஆண்டின் எப்ரல் மாதம் 1-ம் தேதியில் முன் இருப்பையும் அந்த ஆண்டில் வரவு வைக்கப்பட்ட அல்லது பற்றுன மொத்தத் தொகையும் அந்த ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதியில் வரவு வைக்கப்பட்ட வட்டியின் மொத்தத்தையும் அந்தத் தேதியின் இருப்பையும் காட்டும் ஒரு விவரப் பட்டியல் அனுப்ப வேண்டும். அந்தக் கணக்கின் விவரப் பட்டியலோடு கணக்கு அலுவலர் அடியிற் கண்டவைகளையும் கேட்டுச் சேர்த்து அனுப்ப வேண்டும்.

(அ) சந்தாதார் 7-ம் விதிகயின்கீழ் அல்லது அதற்கு முன் அமுலிலிருந்த அதற்கு நிகரான விதியின்கீழ்ச் செய்யப்பட்ட நியமனம் எதிலேனும் ஏதாவது மாற்றம் செய்ய விரும்புகிறரா ; என்பதும்,

(ஆ) 7-ம் விதியின் (1)-ம் உள் விதியின் ஏற்பாட்டின் கீழ் சந்தாதார் தம்முடைய குடும்பத்தில் யாதொரு உறுப்பினரை நியமிக்காதவற்றில் அவர் ஒரு குடும்பத்தைப் பெற்றிருக்கிறரா என்பதும் ஆகும்.

(2) சந்தாதார்கள் அந்த ஆண்டறிக்கைப் பட்டியல் சரிதான என்று தாங்கள் மனநிறைவு செய்து கொள்ள வேண்டும். அதில் உள்ள பிழைகளை அந்த விவரப் பட்டியல் தம்மிடம் வரப்பெற்ற தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கணக்கு அலுவலர் பார்வைக்குக் கொண்டு வர வேண்டும்.

(3) ஒரு சந்தாதார் கோரினல் கணக்கு அலுவலர், ஒன்றிற்கு மேற்படாமல் ஆண்டில் ஒரு முறை அவருடைய கணக்கு எழுதப்பட்டுள்ள கடைசி மாதத்தில் நிதியில் அவர் வரவில் உள்ள மொத்தத் தொகையைச் சந்தாதாருக்குத் தெரிவிக்க வேண்டும்

## முதல் அட்டவணை [7 (3)-ம் விதியைப் பார்க்கவும்].

### நியமனப் படிவங்கள்.

I. சந்தாதாருக்கு குடும்பம் இருந்து அதில் ஒரு உறுப்பினரை நியமிக்க விரும்பும்போது.

நான் இதனல் (தமிழ் நாடு) பொது வருங்காலச் சேம நிதி விதிகளின் 2-ம் விதியில் விளக்கப்பட்டுள்ளபடி என் குடும்பத்தின் ஒரு உறுப்பினரான அடியில் சொல்லப்பட்டுள்ளவரை, நிதியில் என் வரவில் இருக்கும் தொகையை அது கொடுக்கப்படுவதற்கு உரியதாக்குவதற்கு முன்பும் அல்லது கொடுக்கப்படுவதற்கு உரியதாகியும் கொடுக்கப்படாததற்கு முன்பும் நான் இறக்க நேரிட்டால் அத் தொகையைப் பெற்றுக் கொள்வதற்கு நியமிக்கிறேன்.

| நியமிக்கப்பட்டுள்ளவரின் பெயரும், முகவரியும். | சந்தாதாரருக்குள்ள உறவு. | வயது. | *இந்த நியமனம் செல்லத் தகாததாய்விட நேரிடக்கூடிய எதிர்பாரா நிகழ்ச்சிகள். | நியமிக்கப்பட்டுள்ளவர் சந்தாதாரருக்கு முன்னல் இறக்க நேரிட்டால் அவர் உரிமையை அடையக் கூடியவர் எவரேனுமிருந்தால் அவர் பெயரும், முகவரியும், உறவும். |
|---|---|---|---|---|
| | | | | |

19 தேதியிட்டது. இடம்—

சந்தாதாரரின் கையொப்பம்.

கையொப்பத்திற்கு இரண்டு சாட்சிகள்.

1.

2.

---

* குடும்பம் இல்லாத ஒரு சந்தாதாரர் ஒரு நியமனம் செய்த போது அவர் இந்தக் கட்டத்தில் தாம் பின்னுல் ஒரு குடும்பத்தைப் பெற்றுக்கொண்டால் இந்த நியமனம் சட்டப்படி செல்லத்தகாதது என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

II. சந்தாதாருக்குக் குடும்பம் இருந்து அதன் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களை நியமிக்க விரும்பும்போது.

நான் இதனால் (தமிழ் நாடு) பொது வருங்காலச் சேமிப்பு நிதி விதிகளின் 2-ம் விதியில் கொடுக்கப்பட்டுள்ளபடி என் குடும்பத்தின் உறுப்பினர்களான அடியிற் கண்டவர்களை, நிதி எல். வாவில் உள்ள தொகையை அது கொடுக்கப்படுவதற்கு முன்னால் அல்லது கொடுக்கப்பட உரியதாகி, ஆனால் கொடுக்கப்படாததற்கு முன்பும் எனக்கு இறப்பு நேரிட்டால் அந்தத் தொகையைப் பெற்றுக்கொள்ள நியமனம் செய்கிறேன். மேலும் அந்தத் தொகை, சொல்லப்பட்ட அவர்களுக்குள் கீழே அவர்கள் பெயர்களுக்கு நேரே காட்டப்பட்டிருக்கும் முறையில் வகுக்கப்பட வேண்டும் என்றும் இதனால் அறிவிக்கிறேன்.

| நியமிக்கப்பட்டுள்ளவரின் பெயரும், முகவரியும். | சந்தாதாரருக்குள்ள உறவு. | வயது. | *சேர்ந்துள்ள தொகையில் ஒவ்வொருவருக்கும் கொடுக்கப்பட வேண்டிய பங்குத் தொகை. | *இந்த நியமனம் செல்லத் தகாததாயவிட நேரிடக்கூடிய எதிர்பாரா நிகழ்ச்சிகள். | நியமிக்கப்பட்டுள்ளவர் சந்தாதாரருக்கு முன்னால் இறக்க நேரிட்டால் அவர் உரிமையை அடையக் கூடியவர் எவரேனுமிருந்தால் அவர் பெயரும், முகவரியும், உறவும். |
|---|---|---|---|---|---|
| | | | | | |

இடத்தில் தேதியிட்டது.

கையொப்பத்திற்கு இரண்டு சாட்சிகள்.

1.

2.

* குறிப்பு.—நிதியில் சந்தாதாரரின் வாவில் எக்காலத்திலும் இருக்கக் கூடிய மொத்தத் தொகையைக் காட்டும்படி இந்தக் கட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**III.** *சந்தாதாரர் குடும்பம் இல்லாதிருந்து ஒருவரை நியமிக்க விரும்பும்போது.*

**நான்** இதனல், (தமிழ் நாடு) பொது வருங்காலச் சேம நிதி விதிகளின் 7-ம் விதியில் விளக்கப்பட்டுள்ளபடி குடும்பம் இல்லாததால் அடியில் சொல்லப்பட்டுள்ளவரை, நிதியில் என் வரவில் உள்ள தொகையை அது கொடுக்கப்படுவதற்கு முன்பும் அல்லது கொடுக்கப்பட உரியதாகியும் கொடுக்கப்படாததற்கு முன்பும் எனக்கு இறப்பு நேரிட்டால் அந்தத் தொகையைப் பெற்றுக்கொள்ள நியமிக்கிறேன்.

| நியமிக்கப்பட்டுள்ளவரின் பெயரும், முகவரியும். | சந்தாதாரருக்குள்ள உறவு. | வயது. | *இந்த நியமனம் செல்லத் தகாததாய்விட நேரிடக்கூடிய எதிர்பாரா நிகழ்ச்சிகள். | நியமிக்கப்பட்டுள்ளவர் சந்தாதாரருக்கு முன்னால் இறந்துவிட்டால் அவர் உரிமையை பெறக் கூடியவர் வேறு யாரேனுமிருந்தால் அவர் பெயரும், முகவரியும், உறவும். |
|---|---|---|---|---|
| | | | | |

இடத்தில் தேதியிட்டது.

சந்தாதாரரின் கையொப்பம்.

கையொப்பத்திற்கு இரண்டு சாட்சிகள்.

1.

2.

* குறிப்பு.—குடும்பமில்லாத ஒரு சந்தாதாரர் ஒரு நியமனம் செய்தபோது, தாம் பின்னல் ஒரு குடும்பத்தைப் பெற்றுக் கொண்டால் இந்த நியமனம் சட்டப்படி செல்லத்தக்கதாகாது என்று அவர் இந்தக் கட்டத்தில் குறிப்பாகச் சொல்ல வேண்டும்.

**IV. ஒரு சந்தாதாரர் குடும்பமில்லாமல் ஒருவருக்கு மேற்பட்டவர்களை நியமிக்க விரும்பினால்.**

(தமிழ் நாடு) பொது வருங்காலச் சேம நிதி விதிகளின் 2-ம் விதியில் விளக்கப்பட்டுள்ளபடியான ஒரு குடும்பம் இல்லாத, நான், இதனால் அடியில் சொல்லப்பட்டுள்ளவர்களை, நிதியில் என் வரவில் உள்ள பணத்தை, அந்தப பணம் செலுத்தப்படுவதற்கு உரியதாவதற்கு முன்பும் அல்லது செலுத்தப்பட உரியதாகி ஆனால் செலுத்தப்படாமலிருப்பதற்கு முன்பும் எனக்கு இறப்பு நேரிட்டால் அந்தத் தொகையைப் பெற்றுக்கொள்ள நியமிக்கிறேன். மேலும், அந்தத் தொகை சொல்லப்பட்ட அவர்களுக்குக் கீழே அவர்கள் பெயர்களுக்கு நேரே காட்டப்பட்டிருக்கும் முறையில் வழங்கப்பட வேண்டும் என்றும் இதனால் அறிவிக்கிறேன்.

| நியமிக்கப்பட்டவர்களின் பெயரும், முகவரியும். | சந்தாதாரருக்குள்ள உறவு. | வயது. | *சேர்ந்துள்ள தொகையில் ஒவ்வொருவருக்கும் செலுத்தப்பட வேண்டிய பங்குத் தொகை. | **இந்த நியமனம் செல்லத் தகாததாய்விட நேரிடக்கூடிய எதிர்பாரா நிகழ்ச்சிகள். | நியமிக்கப்பட்டுள்ளவர் சந்தாதாரருக்கு முன இறந்துவிட்டால் அவர் உரிமையைப் பெறக் கூடியவர் எவரேனுமிருந்தால் அவர் பெயரும், முகவரியும், உறவும். |
|---|---|---|---|---|---|
| | | | | | |

இடத்தில் —————— தேதியிட்டது.

சந்தாதாரரின் கையொப்பம்.

கையொப்பத்திற்கு இரண்டு சாட்சிகள்.

1.
2.

---

குறிப்பு.—* நிதியில் சந்தாதாரரின் வரவில் எக்காலத்திலும் இருக்கக்கூடிய தொகை முழுமையும் காட்டப்படும்படி இந்தக் கட்டம் நிறைவு செய்யப்பட வேண்டும்.

** குடும்பம் இல்லாத ஒரு சந்தாதார் ஒரு நியமனம் செய்தபோது தாம் பின்னால் ஒரு குடும்பத்தை ஏற்படுத்திக் கொண்டால் இந்த நியமனம் சட்டப்படி செல்லத்தகாதது என்று அவர் இந்தக் கட்டத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

இரண்டாம் அட்டவணை (2) (1) (அ) விதியைப் பார்க்கவும்.

## உரிமைப்படுத்துதல் படிவங்கள்.

(1)

உடைய அ ஆ என்னும் நான் இதனால் இந்த உள்ளடக்கம் ஈட்டுறுதியை (தமிழ் நாடு) பொது வருங்காலச் சேம நிதி விதிகளில் 25 ஆம் விதியின் கீழ் நான் இனிமேல் அந்த நிதிக்குச் செலுத்த வேண்டி வரும் எல்லாத் தொகைகளையும் செலுத்துவதற்காகப் பிணையமாகத் தமிழ் நாடு ஆளுநர் அவர்களுக்கு உரிமைப்படுத்துகிறேன்.

19 ஆம் தேதியிட்டது.

சந்தாதாரரின் கையொப்பம்.

கையெழுத்திற்கு ஒரு காட்சி.

(2)

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் எங்கள் வேண்டுகோளின் பேரில் சொல்லப்பட்ட அ, ஆ ஆகிய என்னால் வருங்காலச் சேம நிதிக்குச் செலுத்தப்பட வேண்டிய சந்தாக்களுக்குப் பதிலீடாக ஈட்டுறுதிக்குள் பணம் செலுத்துவதை அல்லது அந்தப் பொது வருங்காலச் சேம நிதியில், சொல்லப்பட்ட அ, ஆ வின் வரவில் உள்ள தொகையிலிருந்து தொகை ரூ. யை ஈட்டுறுதித் தவணைகளைச் செலுத்துவதற்காகத் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கும் ஒத்துக்கொண்டுள்ளதையொட்டி அ, ஆ (சந்தாதாரர்) வும் இ, ஈ (கூட்டுக் காப்புறுதி பெற்றவரும்) ஆகிய நாங்களும் இதனால் கூட்டாகவும் தனித்தனியாகவும் சொல்லப்பட்ட ஆளுநர் அவர்களுக்கும் (தமிழ் நாடு) பொது வருங்காலச் சேம நிதி விதிகளில் 25 ஆம் விதியின் கீழ், சொல்லப்பட்ட அ, ஆ, அந்த நிதிக்கு இதற்குப் பின் செலுத்த வேண்டிய எல்லாத் தொகைகளுக்கும் பிணையமாக இந்த உள்ளடக்கம் ஈட்டுறுதியை உரிமைப்படுத்துகிறோம்.

உள் ஈட்டுறுதியின் மேல் முந்தைய உரிமைப்படுத்தல் ஒன்றும் இல்லையென்றும் இதனால் சான்றளிக்கிறோம்.

19                ம் தேதியிட்டது.

சந்தாதார் கூட்டுக் காப்புறுதி பெற்றவர் இவர்களின் கையொப்பங்கள்.

கையொப்பத்திற்கு ஒரு சாட்சி.

குறிப்பு.—இந்த உரிமைப்படுத்தல் அந்த ஈட்டுறுதியின் மேலேயே சந்தாதாரரின் கையெழுத்தால் அல்லது தட்டெழுத்தால் அல்லது வேறுவிதமாக அந்த உரிமைப்படுத்துவதற்கான தட்டெழுத்திட்ட அல்லது அச்செழுத்திட்ட துண்டுத்தாள் அந்த ஈட்டுறுதியில் அதற்காகக் காலியாய் வைக்கப்பட்டுள்ள இடத்தில் ஒட்டப்படலாம். ஒரு தட்டெழுத்திடப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட மேல் குறிப்பு தக்கவாறு கையொப்பமிடப்பட்டு ஈட்டுறுதியின் மேல் ஒட்டப்பட்டால், நான்கு ஓரங்களிலும் குறுக்காகச் சுருக்கொப்பமிட வேண்டும்.

(3)

அ, ஆ-வின் மனைவியும் உள் ஈட்டுறுதியின் உரிமையளிக்கப்பட்டவருமான இ, ஈ ஆகிய நான் காப்புறுதி பெற்ற அ, ஆ-வின் வேண்டுகோளின் பேரில் தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் அ, ஆ பொது வருங்காலச் சேமிப்பு நிதிக்குச் செலுத்த வேண்டிய சந்தாத் தொகைகளுக்குப் பதிலீடாக உள்ளடக்கம் ஈட்டுறுதிக்குச் செலுத்தும் தொகைகளை ஏற்றுக் கொள்ள ஒத்துக்கொண்டிருக்கிற தமிழ் நாடு ஆளுநர் அவர்களுக்கு அந்த ஈட்டுறுதியை அ, ஆ உரிமைப்படுத்தும் பொருட்டு. அ, ஆ-வின் வேண்டுகோளின்படி இந்த ஈட்டுறுதியில் அ, ஆ-வின் சார்பாக என்னுடைய பற்றுரிமையை விட்டுக்கொடுத்து இதனால் அ, ஆ-வின் வேண்டுகோளின் பேரிலும் கட்டளையின்படியும் உரிமைப்படுத்துகிறேன். சொல்லப்பட்ட அ, ஆ ஆகிய நான் (தமிழ் நாடு) பொது வருங்காலச் சேம நிதி விதிகளில் 25-ஆம் விதியின் கீழ் சொல்லப்பட்ட அ, ஆ இதன் பின் அந்த நிதிக்குச் செலுத்த வேண்டிய எல்லாத் தொகைகளுக்கும் பிணையமாக இந்த உள்ளடக்கம் ஈட்டுறுதியை சொல்லப்பட்ட ஆளுநர் அவர்களுக்கு உரிமைப்படுத்தி உறுதி செய்கிறேன்.

உள்ளடக்கம் ஈட்டுறுதியின் பேரில் யாதொரு முன் உரிமைப் படுத்தலும் இல்லையென்று இதனால் நாங்கள் சான்றளிக்கிறோம்.

19 ம் தேதியிட்டது.

உரிமைப்படுத்தப்பட்டவர் சந்தாதார்
இவர்களின் கையொப்பம்.

கையொப்பத்திற்கு ஒரு சாட்சி.

இடம்.

மூன்றும் அட்டவணை (22)-ஆம் விதியைப் பார்க்கவும்.

தமிழ் நாடு ஆளுநரால் மறு உரிமைப்படுத்தும் படிவங்கள்.

(1)

(தமிழ்நாடு) பொது வருங்காலச் சேம நிதி விதிகளில் 25-ஆம் விதியின் கீழ், மேலே பெயர் சொல்லப்பட்ட அ, ஆ வால் செலுத்தப்பட வேண்டியதாகும். எல்லாத் தொகையும் செலுத்தப்பட்டு விட்டதாலும் அவரால் வருங்காலத்தில் அத்தகைய பணம் செலுத்தப்பட வேண்டிய பொறுப்பு முடிவடைந்துவிட்டதாலும் தமிழ் நாடு ஆளுநர் அவர்கள் இதனால் உள்ளடக்கம் ஈட்டுறுதியைச் சொல்லப்பட்ட $\dfrac{\text{அ. ஆ.}}{\text{அ. ஆ. + இ.ஈ.}}$க்கு மறு உரிமைப்படுத்துகிறார்.

19 தேதியிட்டது.

நிறைவேற்றுளார். க.ப.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும்<br>அவர் சார்பிலும் நிதியின்<br>கணக்கு அலுவலர் முன்னிலை<br>யில்.

கணக்கு அலுவலரின்<br>கையொப்பம்.

ப. ச.

(ஒரு சாட்சி அவர் தம்முடைய பதவிப் பெயரையும் முகவரியையும் சேர்க்க வேண்டும்.)

(2)

மேலே பெயர் சொல்லப்பட்ட அ. ஆ.
19 தேதியன்று இறந்து விட்டதால் * தமிழ்நாடு ஆளுநர் இதனுல் உள்ளடக்கம் ஈட்டுறுதியை இ, ஈ. மறு உரிமைப் படுத்துகிருர்.

19 தேதியிட்டது.

நிறைவேற்ருளர். ப.க.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் தரப்பிலும், கணக்கு அலுவலர் முன்னிலையில். — கணக்கு அலுவலரின் கையொப்பம்.

க.ப.

(ஒரு சாட்சி அவர் தம்முடைய பதவிப் பெயரையும் முகவரியையும் சேர்க்க வேண்டும்.)

* அந்த ஈட்டுறுதியைப் பெறச் சட்டப்படி உரிமையுள்ளவரின் விவரங்களைப் பதியவும்.

நான்காம் அட்டவணை (23 ஆவது விதியைப் பார்க்கவும்.)

தமிழ்நாடு ஆளுநர் மறு உரிமைப்படுத்தும் படிவம்.

தமிழ்நாடு ஆளுநர் இதனுல் அ உள்ளடக்கம் ஈட்டுறுதியைச்
அ. ஆ.
சொல்லப்பட்ட ———————க்கு
அ. ஆ. இ. ஈ
மறு உரிமைப்படுத்துகிருர்.

19 ம் தேதியிட்டது.

நிறைவேற்ருளர்.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் தரப்பிலும் நிதியின் கணக்கு அலுவலர் முன்னிலையில். — க.ப. கணக்கு அலுவலர் கையொப்பம்.

ப. ச.

(ஒரு சாட்சி அவர் தம்முடைய பதவிப் பெயரையும் முகவரியையும் சேர்க்க வேண்டும்.)

தமிழ்நாடு உதவித் தொகையுள்ள வருங்காலச் சேமநிதி ஓய்வூதியம் ஈட்டுறுதி விதிகள் 1950 அல்லது (தமிழ் நாடு) உதவித் தொகையுள்ள வருங்காலச் சேமநிதி விதிகளின்படி சேர்க்கப் பட்ட நிதியின் விதிகளின் கீழ் ஒரு ஈட்டுறுதிப் பத்திரத்தைப் பெற்றிருக்கும் பொது வருங்காலச் சேமநிதிச் சந்தாதாரரைப் பொருத்தவற்றில் பயன்படுத்த வேண்டிய ஆளுநர் மறு உரிமைப் படுத்தும் படிவம்.

(36. அ. விதியைப் பார்க்கவும்)

தமிழ்நாடு பொது வருங்காலச் சேம நிதி விதிகளில் 25 ஆம் விதியின் கீழ் அ. ஆ. செலுத்த வேண்டிய எல்லாத் தொகை

களுக்கும் பிணையமாக (அ.ஆ. / அ.ஆ. + இ.ஈ.) இதனுள் அடங்கிய ஈட்டுறுதி

எண் தேதி (ஈட்டுறுதி நிறுமத்தின் பெயரை இவ்விடம் குறிக்கப்பட்டுள்ளளவும்) ஈட்டுறுதியைத் தமிழ் நாடு ஆளுநருக்கு உரிமைப்படுத்தியுள்ளதாலும்.

மேலும், அந்த ஈட்டுறுதி தமிழ்நாடு உதவித் தொகையுள்ள / தமிழ்நாடு உதவித்தொகையுள்ள

வருங்காலச் சேமிப்புநிதி—ஓய்வூதியம் ஈட்டுறுதி விதிகள் 1950ன் / வருங்கால சேமிப்பு நிதி விதியில் 19 ஆம்

விதியின் கீழ் ஒரு புதிய உரிமைப்படுத்தல்தேவைப்படுவதாலும்.

மேலும், அந்த ஈட்டுறுதியை ஈட்டுறுதியளிக்கப்பட்டவருக்கு / ஈட்டுறுதியளிக்கப்பட்டவர்கட்குக்

கூட்டுக் காப்புறுதி பெற்றவருக்கும் அவர்/அவர்களின் மேலே சொல்லப்பட்டுள்ளபடி தமிழ்நாடு ஆளுநர் ஒரு புதிய உரிமைப் படுத்துதலைச் செய்ய வசதியளிப்பதற்கும், மறு உரிமைப் படுத்தல் தேவை என்று தெரிவதாலும்.

இப்போது, அதனால் தமிழ்நாடு ஆளுநர் இதனால் அந்தச் சொல்லப்பட்ட ஈட்டுறுதியைச் சொல்லப்பட்ட

அ. ஆ. / அ.ஆ. + இ.ஈ. க்கு

அந்தச் சொல்லப்பட்ட அ. ஆ. தமிழ் நாடு உதவித் தொகையுள்ள / அ. ஆ. + இ. ஈ. தமிழ் நாடு உதவித் தொகையுள்ள

வருங்காலச் சேமநிதி ஓய்வூதியம் ஈட்டுறுதி 1950 ஆம் / வருங்காலச் சேம நிதி விதிகளின்

விதிகளின் 35 ஆம் விதிக்கு / 19 ஆம் விதிக்கு இணங்க ஒரு புதிய உரிமைப் படுத்தல் செய்வதற்காக, மறு உரிமைப்படுத்துகிறார்.

19 ஆம் தேதியிட்டது.

நிறைவேற்றாளர்.

| | |
|---|---|
| தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் தரப்பிலும் நிதியின் கணக்கு அலுவலர் முன்னிலை யில் | க.ப. கணக்கு அலுவலரின் கையொப்பம். |

ப. ச.

(ஒரு சாட்சி அவர் தம்முடைய பதவிப் பெயரையும், முகவரியையும் சேர்க்க வேண்டும்.)

ஐந்தாம் அட்டவணை (14 ஆம் விதியைப் பார்க்கவும்).

தற்காலிகமான முன்பணங்கள் அளிக்கத் தகுதியுள்ள அதிகாரிகள்.

(1) 14 ஆம் விதியின் (1) ஆம் உள்விதியின் (இ) உள் பகுதியின் கீழ், தனிக் காரணங்கள் தேவைப்படாத, ஒரு முன்பணம் கொடுப்பதற்கு கீழ்க் காணுமாறு ஒப்பளிக்கலாம்.

(i) அரசிதழ் பதிவு பெற்ற சந்தாதார்களுக்கு

(அ) அரசாங்கத்தால் அல்லது

(ஆ) அந்த அலுவலர்கள் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தால் அடியிற் குறிப்பிட்டுள்ள துறைத் தலைவர்களால்.—

(1) வருவாய்த் துறை வாரியம்.

(2) உயர்நீதி மன்றம்.

(3) கல்வித் துறை இயக்குநர்.

(4) காவல் துறைத் தலைவர்.

(5) மருத்துவத் துறை இயக்குநர்.

(6) பொது உடல் நலத் துறை இயக்குநர்.

(7) பொதுப் பணித் துறைத் தலைமைப் பொறியாளர்கள்.

(8) மின் துறைத் தலைமைப் பொறியாளர்.

(9) வனத் துறைத் தலைவர்.

(10) வேளாண்மைத் துறை இயக்குநர்.

(11) தொழில் வாணிகத் துறை இயக்குநர்.

(12) கூட்டுறவுத் துறைத் தலைவர்.

(13) ஆவணப் பதிவுத் துறைத் தலைவர்.

(14) உள்ளாட்சித் துறைத் தலைமை ஆய்வாளரும் அலுவலால் ( ex-officio ) நகராமைப்புத் துறை இயக்குநரும்.

(15) தமிழ்நாடு போக்குவரத்து ஆணையாளர்.

(16) அரிசன நலத் துறை இயக்குநர்.

(ii) கூட்டுறவுத் துறையில் மாதம் ஒன்றுக்கு 200 ரூபாய்களுக்குக் குறையாத சம்பளமும் மற்றத் துறைகளில் 150 ரூபாய்க்குக் குறையாத சம்பளமும் பெறும் அரசிதழ்ப் பதிவு பெறாத உறுப்பினர்களுக்கு.

(அ) துறைத் தலைவராலும் அல்லது அந்த உறுப்பினரை வேலையிலிருந்து விலக்கிவிடத் தகுதியுள்ள மற்ற அதிகாரியால், அல்லது

(ஆ) அந்த அலுவலர்கள் தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பவர்களுக்கு அடியிற் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளால்

(1) அரசினர் அச்சகக் கண்காணிப்பாளர்.

(2) பொதுப் பணித் துறையின் மின் துறையின் கண்காணிப்புப் பொறியாளர்கள்.

(3) காவல் துறைத் தலைவர்கள்.

(4) மாவட்டங்களின் ஆட்சியாளர்கள்.

(5) வருவாய்த் துறை வாரியத்தின் செயலாளர்.

(iii) காவல் துறையின் சந்தாதார்களைப் பொருத்தவரை அரசிதழ்ப் பதிவு பெறாத வேலையிடங்களில் மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய்க்குக் குறைவாய்ச் சம்பளம் பெறும் அலுவலர்களைப் பொறுத்தவரை அவர்கள் தம் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பின் அடியிற் கண்ட அதிகாரிகளால்

(அ) குற்றப் புலனாய்வுத் தனிப் பகுதியின் கண்காணிப்பாளர் (பு. த. ப)

(ஆ) குற்றப் புலனாய்வுப் பகுதியின் கண்காணிப்பாளர் (கு. பு. ப)

(இ) காவல் துறைக் கண்காணிப்பாளரின் நேர்முக உதவியாளர்கள்.

(iv) மற்றச் சந்தாதார்களைப் பொருத்தவரை அந்த அலுவலகத் தலைவர்கள் அல்லது அந்தச் சந்தாதாரரை வேலையிலிருந்து விலக்கிவிடத் தகுதியுள்ள எவரேனும் கீழ்நிலை அதிகாரி.

2. (14) ஆம் விதியின் (i) உள் விதியின் (இ) கூற்றின் கீழ் தனிக் காரணங்களுக்காகக் கொடுக்கப்படும் முன் பணத்திற்கு, அந்தச் சந்தாதாரரை வேலையிலிருந்து நீக்கிவிடத் தகுதியுள்ள அதிகாரி அல்லது அந்தச் சந்தாதாரரின் பணிகள் இரவலாக அளிக்கப்பட்டிருந்தால் அந்த உறுப்பினர் இரவலாகப் பணி செய்யும் துறையில் ஒரு நிலையான அலுவலை வகிப்பவராயின் அந்தச் சந்தாதாரரை வேலையிலிருந்து நீக்கிவிடத் தகுதியுள்ள அதிகாரி ஒப்பளிக்கலாம்.

## 'அ' வின் இணைப்பு.

(2 ஆம் விதியைப் பார்க்கவும்.)

1925 ஆம் ஆண்டு XIX ஆம் எண் சட்டம் இந்தியச் சட்டமன்றத்தால் அங்கிகரிக்கப்பட்டது.

[1925 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27 ஆம் தேதி முதன்மை ஆளுநர் (கவர்னர் ஜெனரல்) அவர்களின் ஒப்புதல் பெற்றது.)

அரசுக்குரியவும் மற்றவற்றிற்குரியவுமான வருங்காலச் சேமிப்பு நிதிகளுக்குச் சம்பந்தப்பட்ட சட்டத்தைத் திருத்தவும் தொகுக்கவுமான ஒரு சட்டம்.

அரசாங்கத்திற்குரியவும் மற்றவற்றிற்குரியவுமான வருங்காலச் சேமிப்பு நிதிகளுக்குச் சம்பந்தப்பட்ட சட்டத்தைத் திருத்தவும் தொகுக்கவும் வேண்டியது உகந்ததாயிருப்பதால், இதனால் அடியிற் காணுமாறு சட்டமியற்றப்படுகிறது.—

### சிறு தலைப்பும், பரப்பும் ஆரம்பமும்.

1. (1) இந்தச் சட்டம் 1925 ஆம் ஆண்டு வருங்காலச் சேமிப்பு நிதிகள் சட்டம் என்று சொல்லப்படலாம்.

(2) இந்தச் சட்டம் ஜம்முவும் காஷ்மீர் மாநிலம் தவிர இந்தியா முழுமைக்கும் பொருந்துவதாயுள்ளதாகும்.

(3) மைய அரசு அரசிதழில் ஒரு அறிவிக்கையின் மூலம் குறிப்பிடும் தேதியில் இது, அமலுக்கு வரும்.

விளக்கங்கள்

(2) இந்தச் சட்டத்தில் பொருளில் அல்லது சூழ்நிலையில் ஒவ்வாததாக ஏதேனும் இருந்தாலொழிய—

(அ) "கட்டாய வைப்புத் தொகை" என்பது வருங்காலச் சேமிப்பு நிதிக்கு செலுத்தும் சந்தாத் தொகை அல்லது அதன் வைப்புத் தொகை என்று பொருள்படும். அது நிதி விதிகளின் கீழ் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி ஏற்பட்டாலல்லாது வாழ்வு ஈட்டுறுதிக்குத் தவணைக் கட்டணம் செலுத்துவதற்கும் அல்லது ஒரு குடும்ப ஓய்வூதிய நிதிக்குச் சநதாத் தொகை அல்லது தவணைக் கட்டணம் செலுத்துவதற்குமல்லாது வேறு எவ்விதமான கேட்பின் பேரிலும் திருப்பிக் கொடுக்கப்பட மாட்டாது. ஏதேனும் உதவித் தொகையும் ஏதேனும் வட்டியும் அல்லது நிதியின் விதிகளின் கீழ், இத்தகைய ஏதேனும் சந்தாத் தொகை வைப்புத் தொகை அல்லது உதவித் தொகை ஆகிய இவற்றின் மேல் சேர்ந்த உயர்வுத் தொகையும் இதில் அடங்கும். ஏதேனும் தற்செயல் நிகழ்வுக்குப் பின் சந்தாதாரரின் கணக்கில் வரவாக மீதமுள்ள ஏதேனும் சந்தாத் தொகையும் வைப்புத் தொகையும் உதவித் தொகையும் வட்டியும் உயர்வுத் தொகையும் ஆகிய இவையும் இதில் அடங்கும்.

(ஆ) "உதவித் தொகை" என்பது ஒரு வருங்காலச் சேம நிதியில் நிதியைச் செயலாற்றும் ஒரு அதிகாரியால் நிதியில் ஒருவருடைய கணக்கில் வரவாகவுள்ள வைப்புத் தொகைக்கு அல்லது இருப்புக்குக் கூடுதலாகவும் சந்தாவாகவும் வரவு வைக்கப்படும்,

ஒரு தொகை என்று பொருள்படும். உதவித் தொகையுடன் சேர்ந்த வருங்காலச் சேமிப்பு நிதி என்பது உதவித் தொகையை வரவு வைக்க, விதிகளால் எற்பாடு செய்யப்பட்டுள்ள ஒரு வருங் காலச் சேமிப்பு நிதியென்று பொருள்படும்.

(இ) "ஆதாரவில் இருப்பவர்" என்பது ஒரு வருங்காலச் சேமிப்பு நிதியின் காலஞ்சென்ற சந்தாதார் அல்லது அதில் வைப்புத் தொகை வைப்பாளருடைய அடியிற்கண்ட உறவினர்கள் என்று பொருள்படும். அவர்கள் மனைவி, கணவர், பெற்றோர், குழந்தை, வயதடையாத சகோதரன், மணமாகாத உடன் பிறந் தவள், காலஞ்சென்ற மகளின் விதவையும், குழந்தையும் மற்றும் அந்தச் சந்தாதாரரின் அல்லது வைப்புத் தொகை செலுத்திய வரின் பெற்றோர் உயிரோடில்லையென்றால் தந்தையின் பெற்றோர் ஆகியவராவார்.

(ஈ) "அரசாங்க வருங்காலச் சேமிப்பு நிதி" என்பது ஒரு ரயில்வே வருங்காலச் சேமிப்பு நிதியைத் தவிர அரசுப் பணியில் உள்ளவர்கள் அல்லது கல்வி நிறுவனங்களில் வேலையிலிருப்பவர்கள் அல்லது கல்வி நோக்கங்களுக்காகவே உள்ள கழகங்களால் வேலை யில் அமர்த்தப்பட்டிருப்பவர்கள் ஆகிய இவர்களில் யாதொரு வகுப்பு அல்லது வகுப்புகளில் உள்ளவர்களுக்காக மாநிலச் செயலாளர், மைய அரசு, அரசாங்கப் பிரதிநிதி அல்லது மாநில அரசு ஆகிய இவர்களின் அதிகாரங்களின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு வருங்காலச் சேமிப்பு நிதியென்று பொருள்படும். மேலும் இந்தச் சட்டத்தில் அரசாங்கத்தைச் சுட்டும் குறிப்புகளுக்கும் அவ்வாறே பொருள் கொள்ள வேண்டும்.

(உ) "வருங்காலச் சேமிப்பு நிதி" என்பது யாதொரு வகுப்பு அல்லது வகுப்புகளைச் சேர்ந்த பணியாளரின் சந்தாக்களை அல்லது வைப்புத் தொகைகளைப் பெற்று அவர்களின் தனிப்பட்ட கணக்குகளில் வைக்கப்பட்டுள்ள நிதியென்று பொருள்படும். யாதொரு உதவித் தொகையும் அந்த நிதியின் விதிகளின் கீழ் உள்ள அந்தச் சந்தாக்களின் அல்லது உதவித் தொகைகளின் அல்லது வைப்புத் தொகைகளின் மேல் எற்படும் வட்டி அல்லது உயர்வுத் தொகையும் இதில் அடங்கும்.

(ஊ) "ரயில்வே ஆட்சி முறை" என்பது—

(i) ஒரு ரயில்வேயானது ஐக்கிய அரசின் United Kingdom பாராளுமன்றத்தில் ஒரு தனிப்பட்ட சட்டத்

தின் கீழ் அல்லது ஒரு இந்தியச் சட்டத்தின் கீழ் அல்லது அரசுடன் ஒரு ஒப்பந்தத்தின் கீழ் ஒரு ரயில்வேயை அல்லது ட்ராம்வேயைச் செயல்படுத்தும் ஒரு நிறுமம் என்றும் அல்லது

(ii) மைய அரசால் அல்லது மாநில அரசால் செயல் படுத்தப்படும் யாதொரு ரயில்வே அல்லது டிராம்வேயின் மேலாளர் என்றும் பொருள்படும். (ii) ஆம் உட்கூற்றில் சொல்லப்பட்டுள்ளவற்றில் மைய அரசும் அல்லது மாநில அரசும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு இதில் அடங்கும்.

(எ) "ரயில்வே வருங்காலச் சேமிப்பு நிதி" என்பது ஒரு ரயில்வே ஆட்சிமுறையின் அதிகாரிகளால் அதன் வேலையாட்களின் வகுப்பு அல்லது வகுப்புக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு வருங் காலச் சேமிப்பு நிதி என்று பொருள்படும்.

கட்டாய வைப்புத் தொகைகளுக்குப் பாதுகாப்பு.

(3) (1) யாதொரு அரசாங்கம் அல்லது ரயில்வே வருங்காலச் சேமிப்பு நிதியில் உள்ள ஒரு கட்டாய வைப்புத் தொகை உரிமை மாற்றப் படுவதற்கோ அல்லது பற்றுப் பொறுப்பாக ஆக்கப்படுவதற்கோ ஏற்றத்தகாது. அது யாதொரு குடிமுறை வருவாய் அல்லது குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பாணை அல்லது ஆணையின் கீழ், அந்தச் சந்தாதார் அல்லது வைப்புத் தொகைச் செலுத்துபவர் பட்ட கடன் அல்லது வேறு பொறுப்பிற்காக ஜப்தி செய்யப்படுவதற்குரியதாகாது. அத்தகைய கட்டாய வைப்புப் பணத்தின் மேல் நொடித்தவர் சொத்து ஆட்சியர் (Official Assignee Receiver) அல்லது 1920 ஆம் ஆண்டு மாநில (இன்சால் வென்சி) நொடிப்புச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள (ரிசிவரும்) வழக்குச் சொத்துப் பேணுநரும் யாதொரு உரிமைக் கோரிக்கை பெறுவதற்கும் உரியதாக மாட்டாது.

(2) அத்தகைய நிதியில் யாதொரு சந்தாதாரர் அல்லது தொகை வைப்பவர் அவர் இறக்கும்போது அவர் கணக்கில் வரவாக இருந்து அந்த நிதி விதியின் கீழ் அந்தச் சந்தாதார் அல்லது தொகை வைப்பவரின் ஆதரவில் இருப்பவருக்கு அல்லது அவர் சார்பில் பணத்தைப் பெறச் சட்டப்படி அதிகாரமளிக்கப் பெற்ற ஒருவருக்குக் கொடுக்கப்படுவதற்கு உரியதாகவுள்ள தொகை இந்தச் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட யாதொரு கழிவுக்குட்

பட்டும், ஆதாரவிலிருப்பவர் அந்த சந்தாதாரின் அல்லது தொகை வைப்பவரின் விதவை அல்லது குழந்தையாயிருப்பின் அவர்களைத் தவிர இந்தச் சட்டம் வருவதற்கு முன்னால் செய்யப்பட்ட ஒரு உரிமைப்படுத்தலின் கீழ் உரிமைப்படுத்தப்பட்டவரின் உரிமைகளுக்கு உட்பட்டும் அந்த ஆதாரவிலிருப்பவருக்குச் சட்ட உரிமையுடையதாகச் செய்யப்பட்ட தொகையாகும். அது மேலே சொல்லப்பட்டவைகளுக்கு உட்பட்டு இறந்து போனவரால் அல்லது சந்தாதார் அல்லது தொகை வைப்பவர் இறந்து போவதற்கு முன்னால். அவர் ஆதாரவிலிருப்பவரால் ஏற்படுத்தப்பட்ட யாதொரு கடன் அல்லது பொறுப்பிலிருந்து விடுபட்டதாகும்.

பணம் திருப்பிக் கொடுப்பதைப் பற்றிய ஏற்பாடுகள்.

(4) (1) யாதொரு அரசாங்க அல்லது ரயில்வே வருங்காலச் சேமிப்பு நிதியின் விதிகளின் கீழ் யாதொரு சந்தாதார் அல்லது தொகை வைப்பவர் கணக்கில் வரவாக உள்ள தொகை அல்லது இந்தச் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட யாதொரு கழிவு செய்யப்பட்ட பின் மீதமுள்ள தொகை செலுத்தப்படுதற்குரியதாகும்பொழுது, அந்தப் பணத்தைக் கொடுக்க வேண்டிய பொறுப்புள்ள அலுவலர், அந்தத் தொகையை அல்லது பாக்கியிருப்பை, அந்தச் சந்தாதாரருக்கு அல்லது தொகை வைத்தவர்குச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு செலுத்திவிட வேண்டும். அல்லது அவர் இறந்து போயிருந்தால்—

(அ) அந்தத் தொகைக்கு அல்லது மீதிப் பணத்திற்கு அல்லது அதன் பாகத்திற்கு 3 ஆம் பிரிவின்படி ஆதரிக்கப்பட்ட ஒருவருக்குச் சட்டப்படி உரிமை ஏற்பட்டிருந்தால், அந்த அலுவலர் அந்தப் பணத்தை ஆதரிக்கப்பட்டவருக்கு அல்லது அவர் தரப்பில் பணம் பெறச் சட்டப்படி அதிகாரம் பெற்றவருக்குக் கொடுக்க வேண்டும் அல்லது

(ஆ) அந்த மொத்தத் தொகை அல்லது பாக்கிப் பணம், ஐயாயிரம் ரூபாய்களுக்கு அதிகமில்லாவிட்டால் அந்தப் பணத்தை அல்லது அதன் பாகத்தை, நிதியின் விதிகளின் கீழ் அதைப் பெற நியமிக்கப்பட்டுள்ள ஒருவருக்கும், (அ) கூற்றின் கீழ்ச் செலுத்தப்பட வேண்டியதாயில்லாவிடில் அல்லது எவரும் அவ்வாறு நியமிக்கப்படாதிருந்தால் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அதைப் பெற வேறு வகையில் உரிமையுடையவர்களாகத் தமக்குத் தோன்றும் எவரேனும் ஒருவருக்கும், அல்லது

(இ) (அ) அல்லது (ஆ) கூற்றுக்களின் கீழ் எவருக்கும் அந்தத் தொகை அல்லது பாக்கித் தொகை அல்லது அதில் ஏதேனும் ஒரு பாகம் செலுத்தப்பட வேண்டியதாயில்லாத வற்றில்—

(i) அதை நிதியின் விதிகளின் கீழ் அதைப் பெற நியமிக்கப்பட்ட எவரேனும் ஒருவருக்கு அவர் ஒரு விருப்புறுதி மெய்ப்பிதழை அல்லது இறந்து போனவரின் சொத்தை நிர்வகிப்பதற்குச் சான்றாக (நீதிமன்றம் அளிக்கும்) நிர்வாக உரிமைப் பத்திரங்களை அல்லது 1925 ஆம் ஆண்டின் இந்திய வழியுரிமைச் சட்டத்தின் கீழ் அல்லது 1827 ஆம் ஆண்டு பம்பாய் ஒழுங்கு முறை விதி VIII இன் கீழ் அந்தப் பணத்தை அல்லது பாகத்தைப் பெற உரியவர்களாக நிர்ணயித்த ஒரு சான்றிதழை உடையவர் தாக்கல் செய்ததன் மேல் அவருக்கும், அல்லது

(ii) அவ்வாறு எவரும் நியமிக்கப்பட்டிராதபோது, அத்தகைய விருப்புறுதி மெய்ப்பிதழை அல்லது (நீதிமன்றம் அளிக்கும்) சான்றிதழ்களைத் தாக்கல் செய்யும் எவருக்கேனும் கொடுத்து விட வேண்டும்.

ஆனாலும் சந்தாதாரரின் அல்லது தொகை வைப்பவரின் கணக்கில் வரவாக உள்ள மொத்தத் தொகை அல்லது யாதொரு பாகம் இந்தச் சட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னால் எவருக்கும் உரிமைப்படுத்தப்பட்டிருந்த போதும் அதை உரிமைப்படுத்தப் பட்டவரிடமிருந்து உரிமை படுத்தப்பட்டதின் எழுத்து மூலமான அறிவிப்பை அலுவலர் பெற்றிருந்தபோதும் அந்த அலுவலர், இந்தச் சட்டத்தில் அதிகாரமளிக்கப்பட்டுள்ள தொகையைக் கழிவு செய்த பிறகும், சந்தாதாரின் அல்லது தொகை வைத்தவரின் விதவை அல்லது குழந்தைகளுக்கு (அ) கூற்றின் கீழ்ச் செலுத்த வேண்டியதைச் செலுத்திய பிறகும்.

(i) அந்தச் சந்தாதாரர் அல்லது தொகை வைத்தவர் அல்லது அவர் இறந்துவிட்டால் செல்லத்தக்க உரிமைப்படுத்தல் இல்லாதபோது, அந்தப் பணம் அல்லது பாக்கி இந்தக் கூற்றின் கீழ் எவருக்குச் செலுத்தப்பட வேண்டுமோ அவர் எழுத்து மூலமாகத் தம் சம்மதத்தை அளித்தால், அந்தப் பணத்தை அல்லது அதன் பாகத்தை அல்லது மீதமுள்ள தொகையைச் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு உரிமைப்படுத்தப்பட்டவருக்குக் கொடுக்க வேண்டும். அல்லது

(ii) அத்தகைய இசைவு இல்லாத போது அந்தப் பணத்தை அல்லது அதன் பாகத்தை அல்லது மீதத் தொகையைச் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு செல்லாக்குவதைத் தகுதியுள்ள ஒரு உரிமையியல் நீதிமன்றத்தில், அதைப் பெறுவதற்குரிய உரிமையுள்ளவரைப் பற்றிய முடிவு எடுக்கப்படும் வரையில் நிறுத்தி வைக்க வேண்டும்

(2) (1) ஆவது உட்பிரிவால் அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் தொகையைச் செல்லாக்குவது, அவ்வாறு செலுத்தப்பட்ட தொகைக்குச் சமமாகச் சந்தாதாரர் அல்லது தொகை வைத்தவர் கணக்கில் வரவாகவுள்ள அவ்வளவு தொகையை அதன் எல்லாப் பொறுப்பிலிருந்தும் அரசாங்கம் அல்லது ரயில்வே நிர்வாகம் முழுவதும் கொடுத்துத் தீர்த்து விடுவதாகும்.

உரிமையளிக்கப்பட்டுள்ளவர்களின் உரிமைகள்.

5. (1) அப்பொழுது அல்லது ஏதேனும் ஒரு நிலையில் அமலிலிருக்கும் யாதொரு சட்டத்தில் எப்படிச் சொல்லியிருந்தபோதிலும் ஒரு அரசாங்கம் அல்லது ரயில்வே நெடுங்காலச் சேமிப்பு நிதியில் சந்தாதார் அல்லது தொகை வைத்தவர் வாவில் உள்ள பணத்தை அல்லது அதன் பாகத்தைப் பற்றிய யாதொரு விருப்பாவணத்தில் அல்லது வேறு வகையான ஏற்பாட்டில் அந்தப் பணம் முழுவதும் அல்லது அதன் பாகத்தைச் சந்தாதார் அல்லது தொகை வைத்தவர் பணம் செலுத்தப்படத்தக்க காலத்திற்கும் அல்லது செலுத்தப்படத்தக்கதாகிச் செலுத்தப்படுவதற்கு முன்பும் இறந்து விட்டால், எவரேனும் ஒருவர் பெறுவதற்கு உரிமை அளிப்பதாகவுள்ள ஏதேனும் ஒரு நியமனம் நிதியின் விதிகளுக்கிணங்க அவர்களால் செய்யப்பட்டதாக இருந்தால், சொல்லப்பட்ட அந்த நபர், மேலே சொல்லப்பட்ட அந்தச் சந்தாதாரர் அல்லது தொகை வைத்தவர் இறந்ததின் பேரில் மற்றவர்கள் எல்லாரையும் நீக்கிப். பின்வருமாறு இருந்தாலொழிய சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அந்தத் தொகை அல்லது பாகத்தைப் பெற்றுக் கொள்ள உரிமையுடையவராவார்.

(அ) எக்காலத்திலாவது அத்தகைய நியமனம் அதே மாதிரி செய்யப்பட்ட மற்றொரு நியமனத்தால் மாற்றப்பட்டாலும் அல்லது எந்த விதிகளில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரிக்கு அதே முறையில் வெளிப்படையாக ஒரு அறிவிப்பின் மூலம் ரத்து செய்யப்பட்டிருந்தாலும், அல்லது

(ஆ) அதில் சொல்லப்பட்ட சில நிகழ்ச்சிகள் நேர்வதின் காரணமாக அத்தகைய நியமனம் எச்சமயத்திலும் செல்லாததாகி விட்டாலும்,

சந்தாதாரருக்கு அல்லது தொகை வைப்பவருக்கு முன்பு சொல்லப்பட்ட நபர், இறந்துவிட்டாலும் அந்த நியமனம், சொல்லப்பட்ட அந்த நபருக்கு அளிக்கப்பட்ட உரிமையைப் பொருத்த வரையில், செல்லாததாயும் பயனற்றதாயும் ஆகி விடும்.

ஆனல் நிதியின் விதிகளுக்கு இணங்க இறந்து போனவருக்குப் பதிலாக இன்னெருவருக்கு அத்தகைய உரிமையை அளிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் நியமனங்களில் அத்தகைய உரிமையானது சொல்லப்பட்ட அவர் மேலே சொல்லப்பட்டவாறு இறந்து விட்டபோது சொல்லப்பட்ட மற்றெருவருக்குப் போய்ச் சேரும்.

(2) 1925-ஆம் ஆண்டு இந்திய வழியுரிமைச் சட்டத்திலும் அல்லது 1827-ஆம் ஆண்டு பம்பாய் ஒழுங்குமுறை விதியில் உள்ளவையிலும் எப்படிச் சொல்லப்பட்டிருந்தபோதிலும், மேலே சொல்லப்பட்டுள்ளபடி, உரிமையடைந்த எவரேனும் ஒருவர் அந்தப் பணத்தை அல்லது பணத்தின் ஒரு பகுதியைப் பெற உரிமையுள்ளவராக அந்தச் சட்டத்தின் கீழ் அல்லது அந்த ஒரு விதிமுறை விதியின் கீழ் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஒரு சான்றிதழ் அளிக்கப்படலாம். இறந்து போனவரின் சொத்துக்கு விருப்புறுதி மெய்ப்பிதழ் அல்லது நிர்வாகப் பத்திரமுள்ள எவரேனும் ஒருவருக்கு அளிக்கப்பட்ட எந்த கொடையாலும் அத்தகைய சான்றிதழ் செல்லாதநாகிவிட்டதாகவோ அல்லது தள்ளிவிடப்பட்டதாகவோ கருதப்பட மாட்டாது.

(3) 1946 ஆம் ஆண்டு வருங்காலச் சேமிப்பு நிதிகள் (திருத்தம்) சட்டத்தின் 21 ஆம் பிரிவின் 1 ஆவது உட்பிரிவால் திருத்தப்பட்ட இந்தப் பிரிவின் ஏற்பாடுகள், அந்தச் சட்டம் அமலுக்கு வந்த தேதிக்கு முன்னல் செய்யப்பட்ட அத்தகைய நியமனங்களுக்கும் பொருந்தும்.

ஆனல், அவ்வாறு திருத்தப்பட்ட இந்தப் பிரிவின் ஏற்பாடுகள் சொல்லப்பட்ட தேதிக்கு முன்னல் செலுத்தப்பட்ட அல்லது அந்த விதிகளின்படி செய்யப்பட்ட நியமனத்தையொட்டி நிதியின்

விதிகளின் கீழ் செலுத்தப்படுவதற்குரியதான எந்தக் தொகையையும் பாதிக்கும்படி செயலாற்றாது.

**தொகைக் கழிவு செய்வதற்குரிய அதிகாரம்.**—6. உதவித் தொகையுடைய வருங்காலச் சேமிப்பு நிதியாக உள்ள யாதொரு அரசாங்க அல்லது ரயில்வே வருங்காலச் சேமிப்பு நிதியில் ஒரு சந்தாதாரரின் அல்லது தொகைவைத்தவரின் வரவில் உள்ள பணம் செலுத்தப்படுவதற்குரியதாகும் இதற்காக நிதி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரி அவ்வாறு உத்தரவிட்டால், அந்தப் பணத்திலிருந்து அடியிற் காணும் தொகை கழிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு அல்லது ரெயில்வே நிர்வாகத்திற்குச் சந்தர்ப்பத்திற் கேற்றவாறு செலுத்தப்படலாம்.

அவை—

(அ) சந்தாதாரலால் அல்லது தொகை வைத்தவரால் அரசுக்கு அல்லது ரயில்வே நிர்வாகத்திற்கு ஏற்பட்டுள்ள பொருப்பின் கீழ் கொடுக்க வேண்டிய அந்த சந்தாதாரர் அல்லது தொகை வைத்தவர் கணக்குக்கு வரவு வைக்கப்பட்டுள்ள உதவித் தொகைகளும் அவைகளின் மேல் சேர்ந்துள்ள வட்டியும் அல்லது உயர்வும் சேர்ந்துள்ள மொத்த தொகைக்கு எல்லாவற்றிலும் அதிகப்படாத தொகையும், அல்லது

(ஆ) நிதியின் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தக் காரணங்களுக்கும் அந்தச் சந்தாதார் அல்லது தொகை வைத்தவர் வேலையிலிருந்து விலக்கப்பட்டிருந்தாலும் அல்லது அதில் நியமிக்கப்பட்டதிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள் அவர் அந்தப் பதவியிலிருந்து விலகிக் கொண்டாலும், உதவித் தொகைகளும், வட்டியும், உயர்வும் சேர்ந்த மொத்தத் தொகையும் அல்லது அதன் ஒரு பாகமும் ஆகும்.

**நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட செயல்களுக்குப் பாதுகாப்பு.**—7. இந்தச் சட்டத்தின் கீழ் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதிய யாதொன்றிலும் யாதொரு உரிமையியல் வழக்கு அல்லது ஏனைய சட்ட நடவடிக்கை ஏற்படமாட்டாது.

**வருங்காலச் சேம நிதிக்கு இந்தச் சட்டத்தைப் பொருத்துவதற்குரிய அதிகாரம்.**—(8) (1) உரிய அரசு அந்த அரசிதழில் ஒரு அறிவிக்கையின் மூலம் இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் 1914-ஆம் ஆண்டு உள்ளாட்சி அதிகாரிகள் கடன் சட்டத்தின் பொருளின்படி, உள்ளாட்சி அதிகாரியின் வேலையாட்களுடைய நன்மைக்காக ஏற்படுத்தப்பட்ட யாதொரு வருங்காலச் சேம நிதிக்கும் பொருந்தும் என்று கட்டளையிடலாம். அத்தகைய விளம்பரம் செய்யப்பட்டதன் பேரில், அந்த வருங்காலச் சேம நிதி ஒரு அரசாங்க சேம நிதியாக இருந்தால் எவ்வாறோ அவ்வாறும், அந்த உள்ளாட்சி அதிகாரி அரசாகவிருந்தால் எவ்வாறோ அவ்வாறும், இந்தச் சட்டம் அதற்கேற்பப் பொருந்துவதாகும்.

(2) உரிய அரசு அந்த அரசிதழில் ஒரு அறிவிக்கையின் மூலம், இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகள், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்கள் அல்லது நிலையங்களின் தொகுதியிலுள்ள வேலையாட்களுடைய நன்மைக்காக ஏற்படுத்தப் பட்ட யாதொரு வருங்காலச் சேம நிதிக்கும் பொருந்துவதாகு மென்று கட்டளையிடலாம். அத்தகைய விளம்பரம் செய்யப் பட்டதன் பேரில், வருங்காலச் சேம நிதி ஒரு அரசாங்க வருங்காலச் சேம நிதியாயிருந்தால் எவ்வாறோ அவ்வாறும், அந்த நிதியில் பொறுப்புள்ள அதிகாரி அரசாக இருந்தால் எவ்வாறோ அவ்வாறும், இந்தச் சட்டம் அதற்கேற்பப் பொருந்துவதாகும். ஆனால் 6 ஆவது பிரிவில் குறிக்கப்பட்ட உதவித் தொகைகளை அளிக்கும் அதிகாரி அரசாக இருந்தால் எப்படியோ அப்படியே அந்த உட்பிரிவு பொருந்துவதாகும்.

(3) உரிய அரசு அந்த அரசிதழில் ஒரு அறிவிக்கையின் மூலம் தமக்குத் தகுதியெனத் தோன்றும் யாதொரு பொது நிலையத்தின் பெயரையும் அட்டவணையில் சேர்க்கலாம். அத்தகைய சேர்ப்பு இந்தச் சட்டத்தால் செய்யப்பட்டதுபோன்று நடைமுறைக்கு வரும்.

(4) இந்தப் பிரிவில் உள்ள " உரிய அரசை " என்பது—

(அ) ஒரு பாளைய (கன்டோன்மென்ட்) அதிகாரி. ஒரு பெரிய துறைமுகத்திற்குத் துறைமுக அதிகாரி, ஏதேனும் நிறுவனம் அல்லது அதன் நோக்கங்கள் அரசியலமைப்பின்

**ஏழாவது அட்டவணையின் I ஆவது பட்டியலைச் சேர்வனவாக மைய அரசுக்குத் தோன்றும். அத்தகைய நிறுவனம் ஆகியவற்றைப் பொருத்தவரை மைய அரசும்,**

(ஆ) ஏனையவற்றில் மாநில அரசும் என்று பொருள்படும்.

**விளக்கம்.**—*1860* ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு நிறுவனத்தைப் பொருத்தவரையில் "மாநில அரசு" என்பது அந்தச் சங்கம் எந்த மாநிலத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதோ அந்த மாநில அரசு என்று பொருள்படும்.

**படை வீரர்களின் சொத்துக்கள் பற்றிய பாதுகாப்புகள்.**— 9. 1893 ஆம் ஆண்டு படைகளின் கடன் சட்டம் பொருந்தும் நிர்வாகத்திற்குரிய ஏதேனும் ஒரு சொத்திற்குச் சொந்தமான பணத்திற்கு 4 ஆம் பிரிவில் அல்லது 5 ஆம் பிரிவில் உள்ளது எதுவும் பொருந்தாது.

## அட்டவணை.

### நிறுவனங்களின் பட்டி.

[8 ஆம் பிரிவின் (2) ஆவது உட்பிரிவைப் பார்க்கவும்.]

1. இந்திய பாஸ்டர் நிலையம், காசாலி.
2. கல்கத்தா மேம்பாட்டுத் தீர்ப்பாயம்.
3. ஒரு காப்பாளர் நீதிமன்றம் (கோர்ட் ஆப் வார்ட்ஸ்).
4. இந்திய மையப் பருத்திக் குழு.
5. ராஞ்சி மனநோய் ஐரோப்பிய மருத்துவ மனையின் நம்பகர்கள்.
6. இந்தியப் பெண்களுக்குப பெண் வைத்திய உதவி வழங்கு தேசியச் சங்கம்.
7. சட்டமுறையால் நிறுவப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் சேர்ந்த ஒரு கல்லூரி.
8. இந்திய செஞ்சிலுவைச் சங்கம்.
9. இந்திய அரசுக்கு வரிக் குழு.

## இணைப்பு ஆ.

(4 ஆம், 19 ஆம் விதிகளைப் பார்க்கவும்.)

(1929 ஆம் ஆண்டு ஜூலை மாத முடிவு வரையில் திருத்தப்பட்ட பொது வருங்காலச் சேம நிதியை ஒழுங்குபடுத்தும் விதிகளிலிருந்து எடுத்த பகுதி நகல்கள்.)

**குறிப்பு 2.**—நிலையான அமைப்புகளில் உறுப்பினர்களாயுள்ள பிரிவு எழுத்தர்களும் அரசாங்க அச்சகங்களிலுள்ள துண்டுப் பணியாளர்களும் அந்த நிதிக்குச் சந்தாச் செலுத்தத் தகுதியுள்ளவர்கள்.

**குறிப்பு 3.**—கீழ்நிலைப் பணியில், காயமாயுள்ள, பட்வாரிகள் இந்நிதிக்குச் சந்தா செலுத்தத் தகுதியுள்ளவர்களாவார்கள்.

**குறிப்பு 4.**—கீழ்நிலைப் பணியில் தற்காலிகமாகவுள்ள பட்வாரிகளும் தற்காலிகமான மேல் நிலைப் பணியில் பணியாற்றும் எல்லா அலுவலர்களும், அவர்கள் வேலையில் நியமிக்கப்பட்டுள்ளவர்களாய் அல்லது அவர்கள் அலுவலகத் தலைவர்கள் கருத்துப்படி குறைந்தது மூன்று ஆண்டுகளுக்கு வேலையிருப்பவர்களாகயுள்ளவர்கள் அவர்கள் அலுவலகத் தலைவர்களின் சம்மதத்துடன் இந்த நிதிக்குச் சந்தாச் செலுத்தத் தகுதியுள்ளவர்களாவார்கள்.

**குறிப்பு 1.**—1913 ஆம் ஆண்டு ஜூன் முதல் தேதி அன்று அல்லது அதற்குப் பிறகு நியமிக்கபபட்ட பொதுப் பணித் துறையில் உள்ள தற்காலிகப் பொறியாளர்களும், ஏற்கெனவே வேலையிலிருந்து அவர்கள் மறுபடியும் உயர்த்தப்பட்ட சம்பள விகிதத்தில் மேலும் ஒரு கால அளவிற்கு வேலையிலமர்த்தப்பட்டு அல்லது அமர்த்தப் படக்கூடியவர்களாக உள்ள தற்காலிகமான பொறியாளர்களும் இந் நிதிக்கு ரூபாயில் 1½ அணு விகிதத்தில் அல்லது சம்பளத்தின் 9 3/8 சத விகிதத்தில் சந்தா செலுத்தக் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

7. * * *

**குறிப்பு 1.**—விளக்கங்களும் விலக்குகளும்.

**(ஊ)** அரசாங்க அச்சகங்களிலுள்ள துண்டுப் பணியாளர்கள் (Piece workers) அரசாங்கத்திலுள்ள துண்டுப் பணியாளர்களுடைய சந்தாக்கள் சம்பளத்தில் 6¼ சத விகிதக் குறும அளவுக்குட்பட்டவையல்ல. அவர்களைப் பொருத்தவரை முந்திய நிதியாண்டில் பிப்ரவரி 15-ஆம் தேதியிலிருந்து மார்ச் 14-ஆம்

தேதிக்குள் வருகின்ற ஒரு நாளில் மிகவும் அதிகமாய்ப் பெற்ற வருவாயின் பெரும் அளவு 15 5/8 சதவிகிதத்தில் கணக்கிடப்படும். ஆயினும் ஒரு துண்டுப் பணியாளர் அந்தக் காலம் முழுவதும் வேலைக்கு வாராமலிருந்தால், அந்த 15 5/8 சதவிகித அளவு அதற்கு பிறகு அவர் வேலை செய்த முதல் அச்சக மாதத்தில் (ஒரு மாதம் 15-ஆம் தேதியிலிருந்து அடுத்த மாதம் 15-ஆம் தேதி முடிய) ஏதேனுமொரு நாளில் மிகவும் அதிகமாய் ஈட்டிய தொகையின் மேல் கணக்கிடப்படும்.

(எ) ஏனைய துண்டு விகிதப் பணியாளர்கள் நிலையான அமைப்புகளின் உறுப்பினர்களான பிரிவு எழுத்தர்கள், தட்டச்சர்கள், ஏனைய துண்டு விகிதப் பணியாளர்களின் சந்தாக்கள். அதற்கு முந்திய நிதியாண்டில் மார்ச்சு மாதத்தில் ஈட்டிய தொகைகளின் மேல் கணக்கிடப்படும்.

21. (ii) ஒரு ஈட்டுறுதியானது சந்தாதாரரின் சொந்த வாழ்வின்பேரில் இருக்க வேண்டும். அவ்வாறுள்ளவற்றில் அந்த ஈட்டுறுதி எந்த மாதிரியில் உள்ளது என்பது முக்கியமல்ல. அதாவது, அது ஒரு வாழ்வு அல்லது ஒரு கட்டளை அல்லது இரட்டிப்புக் கட்டளை ஈட்டுறுதியாய் இருக்கலாம். ஆனால் அது அரசாங்கத்திற்குச் சட்டப்படி உரிமைப்படுத்தக் கூடியதாயிருக்க வேண்டும்.

குறிப்பு 1.—இந்த விதியின் நோக்கத்திற்காக ஈட்டுறுதியை யுடையவர் ஒரு மருத்துவக் கழகத்தால் வேலையினின்றும் ஓய்வு பெறும்படி செய்யப்பட்டால் காப்புறுதித் தொகையைச் செலுத்துவதற்கான பொறுப்பு ஈட்டுறுதியை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அவருக்கு இறப்பு ஏற்படும்பொழுது ஈட்டுறுதி பெற்றவரின் மனைவி அல்லது மக்களுக்கு அல்லது அவர்கள் எல்லோருக்கும் ஒரு வகை வருவாய்க்கு உறுதியளிக்கும் சில்லறைச் செலவின் ஆண்டுப் பணமும் இந்த விதியின் நோக்கத்திற்காக ஏற்றுக் கொள்ளப் படும்.

குறிப்பு 2.—ஒரு சந்தாதாரரால் தம்முடைய சொந்த வாழ்வின் மேல் குறிப்பாகப் பெயர் கூறப்பட்ட ஒரு முழுப் பயனாளியின் நன்மைக்காக ஒரு ஈட்டுறுதி எடுக்கப்பட்டிருந்தால், ஈட்டுறுதி எடுத்தவரும் முழுப் பயனாளியுமாகிய இருவாலும் ஒரு பொருந்தமான உரிமைப்படுத்தல் அனுமதிக்கக்கூடியதாகும். ஒரு சந்தா

தாரரால் தமது வாழ்வின் பேரில் ஒன்றுக்கு மேற்பட்ட பயனாளிகளின் நன்மைக்காக எடுக்கப்பட்ட ஈட்டுறுதியை உரிமைப் படுத்துதல் அது எடுக்கப்பட்ட தேதியில் அப் பயனாளிகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் சட்ட முறையில் ஏற்படும் இடர்ப்பாடுகளைக் கருதி இவ்விதியின் கீழ் அனுமதிக்கப்பட மாட்டாது.

21. (அ) (ஆ) நிதிக்குரிய திருமணமான ஒரு சந்தாதாரர் பொது வருங்காலச் சேம நிதிக்குச் சந்தா செலுத்துவதற்குப் பதிலாக (1) தன் சொந்த வாழ்வின் பேரில் ஈட்டுறுதி எடுக்கப்பட்டு அது தன் மனைவி அல்லது மக்கள் அல்லது அவர்கள் எல்லோருடைய நன்மைக்காகுமென்று அதன் மேல் கண்டிருந்தால் அந்த ஈட்டுறுதிக்குப் பணம் செலுத்தலாம். ஆனால் அத்தகைய ஈட்டுறுதி, இறந்தபோது முதிர்வடையாமல் சில ஆண்டுகளுக்குப் பின் முதிர்வடையுமானால் அந்தத் தேதி சந்தாதாரர் தம்முடைய பணி விதிகளின்படி ஓய்வு பெறும் மிகவும் சமீபத்திலுள்ள தேதிக்கு முன்னாலிருக்கக் கூடாது. அல்லது (ii) அவர் தம், சொந்த வாழ்வின் மேல் செய்யப்பட்டுத் தம்முடைய மனைவி அல்லது மக்கள் அல்லது அவர்களில் எல்லோருடைய அல்லது சிலருடைய நன்மைக்காக, இருக்கும்படி ஒரு அறுதியாவணம் மூலம் நம்பகர்களுக்கு உரிமைப்படுத்தப்பட்டிருக்கும் ஈட்டுறுதிக்கும் பணம் செலுத்தலாம்.

(இ) நிதிக்கு உரிய திருமணமான சந்தாதாரர் ஒருவர், பொது வருங்காலச் சேம நிதிக்கு உதவித் தொகைகள் செலுத்துவதற்குப் பதிலாக அல்லது தொடர்ந்து செலுத்துவதற்குப் பதிலாக ஏற்கெனவே சந்தா செலுத்தி வரப்படுகின்ற தம் சொந்த வாழ்வின் மேல் உள்ள ஈட்டுறுதிக்குப் பணம் செலுத்தலாம். ஆனால் அவர் தம்முடைய மனைவி அல்லது மக்கள் அல்லது அவர்களில் எவரேனும் அல்லது எல்லோரும் நன்மையடையும்படி நம்பகர்களுக்கு உரிமைப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். அல்லது. (ii) தம்முடைய ஈட்டுறுதியைத் தம் வாழ்வின் பேரில் இருக்கும்படி மாற்றி ஆனால் அதன் மேலேயே தம் மனைவி அல்லது அவர்களில் எவருடைய அல்லது எல்லோருடைய நன்மைக்காகவென்று குறிப்பிட்டிருக்க வேண்டும். ஆயினும் அந்த ஈட்டுறுதிக் இறப்புக் காலத்தில் முதிர்வடையாததாயும் சில ஆண்டுகளுக்குப் பிறகு முதிர்வடைவதாயுமிருந்தால், முதிர்வடையும் தேதி, தம் பணித் தொகுதியின் விதிகளின்படி தாம் ஓய்வு பெறக்கூடிய மிகவும் சமீபத்திலுள்ள தேதிக்கு முந்தியிருக்கலாகாது. அல்லது

(iii) தம் ஈட்டுறுதியைத் தம் சொந்த வாழ்வின் பேரில் உள்ள ஒரு ஈட்டுறுதியாக மாற்றிப் பிறகு அது தம் மனைவி அல்லது தம் மக்கள் அல்லது அவர்களில் எவரின் அல்லது எல்லோரின் நன்மைக்காக என்று ஒரு அறுதி ஆவணம் மூலம் நம்பகர்களுக்கு உரிமைப்படுத்துகிறார். மேலும் தாம் திருமணமாகாதவராயிருந்த போது நிதிக்குத் தொகை செலுத்துவதற்குப் பதிலாக அத்தகைய ஈட்டுறுதிக்குப் பணம் செலுத்திக் கொண்டிருந்தவரானால் அத்தகைய உரிமைப்படுத்தல், மாற்றல் அல்லது மாற்றலும் உரிமைப்படுத்தலும் தமது திருமணத்திற்கு முந்தியாவது அல்லது அவர் திருமணத்திற்குப் பிறகு மூன்று மாதங்களுக்குள்ளாவது செய்யப்பட வேண்டும்.

குறிப்பு 1.—ஒரு நடைமுறையில் உள்ள ஈட்டுறுதி மாற்றப் பட்டதன்மேல் அந்த ஈட்டுறுதியின் விடு மதிப்புத் தொகையின் ஏதேனுமொரு பகுதி ஒரு புதிய ஈட்டுறுதி எடுக்கப் பயன்படுத்தப் படாதபோது அந்தப் பாகம் செலுத்தப்பட வேண்டும் அல்லது நிதிக்குத் திருப்பிச் செலுத்தப்பட்டு சந்தாதாரரின் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

## இணைப்பு இ.

(14-ஆம் விதியைப் பார்க்கவும்)

செயல் அறிக்கைகள்.

## இணைப்பு ' ஈ '.

(விதி 16 ஐப் பார்க்க.)

ஒரு சந்தாதாரர் யாதொரு நிறுமத்தில் ஒரு வாழ்வு ஈட்டுறுதி எடுத்துப் பொது வருங்காலச் சேம நிதிக்குச் சந்தாக்கள் செலுத்துவதற்குப் பதிலாக அந்த ஈட்டுறுதியின் பேரில் தவணைக் கட்டணங்கள் செலுத்தக் கருதியபோது, அவர் சம்பந்தப்பட்ட அந்த நிறுமம் ஒரு பழுதற்ற நிறுமமென்று மனநிறைவு செய்து கொள்ள வேண்டும். இந்தியாவில் வேலை செய்து கொண்டிருக்கும் ஒவ்வொரு வாழ்வு ஈட்டுறுதி நிறுமமும் சட்டத்தின்படி இந்திய அரசாங்கத்திடம் அடியிற்காணும் ஈட்டுறுதிகளின் படிகளை வைத்திருக்கக் கொடுக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது.

(அ) அந்த நிறுமத்தின் பொறுப்புகளின் மதிப்பு உள்பட அதன் நிலை நிலைமை பற்றிக் காப்பீட்டுக் கணிப்பாளர் கடைசியாகச் செய்த ஆய்வின் மேலுள்ள அறிக்கை.

(ஆ) சென்ற நிதியாண்டிற்குரிய வாழ்வு ஈட்டுறுதி வருவாய்க் கணக்கு.

(இ) சென்ற நிதியாண்டு முடிவடையும்போதுள்ளபடி ஐந்தொகைக் குறிப்பு;

இவை கேட்கப்பட வேண்டும். சந்தாதாரர் இந்த ஆவணங்களை ஆராய்ந்து பார்த்து அந்த நிறுமத்தின் நிதி உறுதியுள்ளதென்பதைத் தாமே தீர்மானித்துக் கொள்ள அடியிற்காணும் மூன்று சோதனைகளைச் செய்ய வேண்டும்.

(1) கணிப்பாளரின் கடைசி ஆய்வு ஒரு பங்கிடக் கூடிய உபரியைக் காட்டியதா? அல்லது அதாவது ஈட்டுறுதி உடையவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பாகத்திற்குரிய ஒரு உபரியா என்பது.

(2) அந்த நிறுவனத்தின் மேலாண்மைச் செலவு தரகு (கமிஷன்) உள்படச் சென்ற நிதியாண்டின் தவணைக் கட்டண வருவாயில் மூன்றில் ஒரு பங்குக்கு அதிகமாகப் போகவில்லை என்பதை வருவாய்க் கணக்குக் காட்டுகிறதா?

(3) கடைசி ஐந்தொகைக் குறிப்பில் "தன் பிணையத்தின் மேலான கடன்கள்" நிறுமத்தின் மொத்த சொத்துக்களில் போதிய அளவு ஒரு பகுதியைக் கொண்டிருக்கவில்லையா? என்பனவாம்.

## இணைப்பு உ.

(30-ஆம் விதியைப் பார்க்கவும்.)

**1.** ஒரு சந்தாதாரரின் குடும்பத்தின் ஒரு உறுப்பினருக்கு 30-ஆம் விதியின் கீழ்ச் செலுத்தப்பட வேண்டிய யாதொரு தொகையும் 1925-ஆம் ஆண்டு வருங்காலச் சேம நிதிச் சட்டத்தின் 3-ஆம் பிரிவின் (2)-ஆம் உட்பிரிவின் கீழ் அந்த உறுப்பினருக்குச் சட்டப்படி உரிமையாகிறது.

2. ஒரு நியமிக்கப்பட்டவர் சந்தாதாரரின் 1925 ஆம் ஆண்டு வருங்காலச் சேம நிதிச் சட்டத்தின் 2-ஆம் பிரிவின் (இ) கூற்றில்

விளக்கப்பட்டுள்ளபடி, ஆதரவிலிருப்பவர் உள்ள போது அந்தத் தொகை அந்தச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அவ்வாறு நியமிக்கப்பட்டவருக்குச் சட்டப்படி உரித்தாகிறது.

3. சந்தாதாரர்க்குப் பின் குடும்பம் இல்லாதபோதும், 7 ஆவது விதியின்படி அவரால் செய்யப்பட்ட நியமனம் அமுலிலில்லாத போதும் அல்லது அவ்வாறான நியமனம் நிதியில் அவர் கணக்கில் வரவாக உள்ள பணத்தின் ஒரு பகுதிக்கு மட்டும் பொருந்திய தாயுள்ளபோதும், 1925 ஆம் ஆண்டு வருங்காலச் சேம நிதிச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் ( i) ஆம் உட்பிரிவின் (இ) கூற்றின் (ii ) ஆவது உட்கூற்றிலும் (ஆ) கூற்றிலும் உள்ள சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள் அந்த மொத்தத் தொகைக்கும் அல்லது அந்த நியமனம் சம்பந்தப்படாத அதன் பாகத்திற்கும் பொருந்துவன வாகும்.

### இணைப்பு உள.

[30 ஆவது விதியின் கீழ் 3 ( )கு ஆவது குறிப்பைப் பார்க்கவும்.]

ஒரு இறந்துபோன சந்தாதாரரின் ஒரு வயது வராத குழந்தை/குழந்தைகளுக்குச் சேர வேண்டிய வருங்காலச் சேம நிதித் தொகையை அதன்/அவர்களின் இயல்பான காப்பாளர் அல்லாத ஒருவரால் பெறப்பட்ட ஒரு வயது வராதவரின் பங்கு ரூ. 100 க்கு அதிகப்படாதபோது எழுதி வைக்கப்பட வேண்டிய இழப்பீட்டுப் பிணைமுறியின் படிவம்.

இந்த வாசகங்களால் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் ...................... இல் குடியிருக்கும் நான்/நாங்கள் ...................... அவன்/அவள்/அவர்கள் தாப்பில் பிணையாளர்களாகத் தமிழ் நாடு ஆளுநருக்கு (இதற்குப் பின்னால் ஆளுநர் என்று சொல்லப்படும் சொல் சூழ்நிலைக்கிணங்க அவருடைய அலுவலில் வழியுரிமை பெற்றவரையும், உரிமைப் படுத்தப்பட்டுள்ள வரையும் குறிக்கும்) உறுதியாய் ரூ ............ க்கு இதனால் கடமைப்பட்டுள்ளோம் என்றும் சொல்லப்பட்ட ஆளுநருக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூ. ............ க்கு அந்தப் பணம் நல்ல விதமாகவும் உண்மையாகவும் செலுத்தப்படுவதற்கு எங்களில் ஒவ்வொருவரும் தம்மையும் தம் வாரிசுகளையும், நிறை

வேற்றுளர்களையும் ஆட்சியாளரையும் உரிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களையும் கட்டுப்படுத்தியுள்ளோம் என்றும், எங்களில் [redacted] இருவரும் நாங்கள் எல்லோரும் கூட்டாக எங்களையும் எங்கள் வாரிசுகளையும் நிறைவேற்றுளர்களையும் உரிமைப்படுத்தப்பட்டவர்களையும் உறுதியாய் இதன் மூலம் கட்டுப்படுத்திக் கொள்ளுகிறோம் என்றும்,

19 [redacted] ஆம் தேதியன்று சாட்சிகளாகக் கையெழுத்திட்டு

(இ) ........................ என்பவர் அவர் இறந்தபோது பொது வருங்காலச் சேம நிதிக்குச் சந்தாதாரராயிருந்தாலும் அங்கு சொல்லப்பட்ட (இ) [redacted] தேதி இறந்து விட்டதாலும், தமிழ்நாடு அரசால் (இதற்குப் பிறகு அரசு என்று சொல்லப்படும்) ரூ.......... அவருடைய பொது வருங்காலச் சேம நிதி சேகரிப்புக் காரணமாக செலுத்த வேண்டியதாயிருப்பதாலும், (மேலே கட்டுப்படுத்திக் கொண்டுள்ள (அ) இதற்குப் பிறகு உரிமை கோரியவர்கள் என்று சொல்லப்படுபவர்கள்) அந்தத் தொகையை (இ) இன் வயது வராத குழந்தை/கள் காப்பில் * உரிமை கோருவதாலும் ஆனால் காப்பாளர் சான்றிதழ் பெற்றிராததாலும் ;

உரிமை கோருபவர்/கள் சம்பந்தப்பட்ட அலுவலரைத் தான் அவர்/அவர்கள் மேலே சொல்லப்பட்டுள்ள பணத்திற்கு உரிமையுடையவர்/கள் என்றும் உரிமை கோருபவரைக் காப்பாளர் சான்றிதழ் ஆஜர்படுத்தும்படி சொல்வது தேவையற்ற கால தாமதத்தையும் இடர்ப்பாட்டையும் உண்டாக்கும் என மன நிறைவு பெறச் செய்திருப்பதாலும் மேலும், அரசாங்கம் அந்தப் பணத்தை உரிமை கோருபவர்களுக்குச் செலுத்த விரும்புவதாலும் ஆயினும் அப்படிச் செலுத்தப்படுவதற்கு முன்னால் அரசாங்க

---

(அ) உரிமை கோருபவர்/களின் முழுப் பெயரும் இருப்பிடமும்

(ஆ) பிணையாட்களின் முழுப் பெயர்கள்.

(இ) இறந்து போனவரின் பெயர்.

(ஈ) அந்தப் பணம் செலுத்தும் பொறுப்பையுடைய அலுவரின் அலுவல் பெயர்.

* 'உரியவரென்று' அல்லது 'காப்பாளராக' என்று சந்தர்ப்பத்திற்கேற்றவாறு இங்கே எழுதவும்.

விதிகள் ஆணைகள் இவற்றின் கீழ் உரிமை கோருபவர்/கள் முதலில் ஒரு பிணைமுறி இரண்டு பிணையாட்களுடன் அந்த [ [redacted] (இறந்துவிட்டவர்) க்கு மேலே சொன்னபடி சேர வேண்டிய பணத்திற்கு அரசாங்கத்திற்கு இழப்பீடு செய்ய எழுதித் தர வேண்டியிருப்பதாலும், இந்தப் பத்திரத்தின் நிபந்தனை என்ன வென்றால் உரிமை கோருபவருக்கு/கோருபவர்களுக்கு பணம் செலுத்தப்பட்டு விட்ட பிறகு உரிமை கோருபவர்/கள் அல்லது பிணையாட்கள், அதை மேலே சொல்லப்பட்ட ரூ [redacted] தொகைக்கு மற்ற எவரேனும் அரசாங்கத்தின் மேல் யாதொரு உரிமை கோரினால், அரசாங்கத்திற்கு ரூ. ............ திரும்பச் செலுத்துவதுடன் வேறுவிதமாகவும் அந்தப் பணத்தைப் பொருத்தவரை அரசாங்கத்தை வேறு பொறுப்புகளிலிருந்து இடைஞ்சல் இல்லாமல் விடுவித்தும் இழப்பீடு செய்தும் அந்த உரிமை கோரின சம்பந்தமாய் எல்லாச் செலவுகளையும் ஏற்றுக் கொள்ளவும் செய்தால் மேலே சொல்லப்பட்ட எழுத்து மூலமான பிணைமுறி அல்லது சட்டப் பிணைப்புச் செல்லாததாகிவிடும் அல்லது வேறுவிதமானால் அது அமலிலும் உறுதியுள்ளதுமாகவும் இருக்கும்.

மேலே சொல்லப்பட்ட எழுத்து மூலமான பிணைமுறிக்கும் அதன் நிபந்தனைக்கும் சாட்சியாக உம் உம் ஆகிய நாங்கள் இந்த [redacted] ஆம் தேதியில் எங்கள் கையொப்பங்களை வைத்துள்ளோம்.

## இணைப்பு எ.

(30 ஆம் விதியின் கீழ் 3 ஆம் குறிப்பைப் பார்க்கவும்.)

சந்தாதாருடைய இறந்துபோன நியமிக்கப்பட்டவரின் வழியுரிமையாகப் பணம் செலுத்தும்படி உரிமை கோரும் ஒருவருக்கு, நிர்வாக உரிமைப் பத்திரங்கள் அல்லது வேறு சட்ட சம்பந்தமான ஆணையுரிமையைத் தாக்கல் செய்யும்படி வற்புறுத்தாமல் பொது வருங்கால சேம நிதித் தொகையைச் செலுத்த அதிகார மளிப்பதற்குப் பெறப்பட வேண்டிய இழப்பு ஈட்டுப் பத்திரத்தின் படிவம்.

இந்த ஆவணங்களால் எல்லோரும் தெரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் [redacted] ல் வசிக்கும் நான்/நாங்கள் (அ) ம் வசிக்கும் (ஆ) நாங்களும் அவன/அவர்/அவர்கள் தரப்பில் பிணையாட்கள் தமிழ்நாடு ஆளுநருக்கு (இதற்குப் பின்னால் ஆளுநர் என்று சொல்லப்படும் சொல் சந்தர்ப்பம்போல் அவருடைய அலுவலில் அவருக்குப்பின் வருபவர்களையும், உரிமைப்படுத்தப் பட்டுள்ளவரையும் சேர்த்துக் கொள்ளும், உறுதியோடு ரூ. [redacted] செலுத்துவதற்கு இதனால் சொல்லப்பட்ட ஆளுநருக்குக் கடமைப் பட்டுள்ளோம் என்றும் அந்தப் பணம் செலுத்தல் நல்ல விதமாகவும், உண்மையாகவும் செய்யப்படுவதற்கு எங்களில் ஒவ்வொருவரும் தம்மையும் நிறைவேற்றுனர்களையும் ஆட்சியாளர் களையும் சட்டப்படியான சார்பாளர்களையும், உரிமைப்படுத்தப் பட்டவர்களையும் எங்களில் ஒவ்வொருவரும் இருவரும் கூட்டாக எங்களையும் எங்கள் வாரிசுகளையும் நிறைவேற்றுனர்களையும் சட்டச் சார்பாளர்களையும் உரிமைப்படுத்தப்பட்டவர்களையும் உறுதியோடு இதன் மூலம் கட்டுப்படுத்திக் கொள்ளுகிறோம் என்றும்,

சான்றாக 19 [redacted] ம் தேதி எங்களின் கையொப் பங்களை வைக்கிறோம்.

தமது இறப்பின்போது (இ) [redacted] பொது வருங்காலச் சேம நிதிக்கு ஒரு சந்தாதாரராயிருந்தாலும்,

சொல்லப்பட்ட (இ) ................ 19. ............ ப் தேதியன்று இறந்துவிட்டதாலும்,

தமிழ்நாடு அரசாங்கத்தாரால (இதற்குப் பிறகு அரசாங்கம் என்று சொல்லப்படும்) (இ) [redacted] ன் பொது வருங்காலச் சேம நிதிச் சேர்ப்புகளின் சம்பந்தமாய் ரூபாய் [redacted] சொல்லப்பட்ட (இ) [redacted] ன் நியமிக்கப்பட்டவர்களாகிய (ஈ) க்குச் செலுத்த வேண்டியிருப்பதாலும்,

சொல்லப்பட்ட (ஈ) [redacted] சொல்லப்பட்ட (இ) க்கு முன்னால்/பின்னால் இறந்துவிட்டதாலும், ஆனால் பணம் பெறு வதற்கு முன்னால் இறந்துவிட்டதாலும்,

மேலே கட்டுப்படுத்தப்பட்டவர்/கள் (இதற்குப் பிறகு உரிமை கோருபவர்/கள் என்று சொல்லப்படும்) அந்தத் தொகைக்கு உரிமை கோருவதாலும், ஆனால் விருப்புறுதி மெய்ப்பிதழை

அல்லது நிர்வாக உரிமைப் பத்திரம் அல்லது வேறு சட்ட ஆணை உரிமை பெற்றில்லாததாலும்,

ன் மாவட்ட ஆட்சியாளர்/அரசாங்கம் உரிமை கோருபவருக்கு/வர்களுக்குச் சொல்லப்பட்ட பணத்தைச் செலுத்த விரும்புவதாலும், ஆனால் பிணையாட்களுடன் மேலே சொல்லப்பட்ட தொகை சேர வேண்டும் என்று கோருபவர்கள் அரசாங்கத்திற்கு இழப்பீட்டுப் பிணை முறி எழுதித் தர வேண்டியது அவசியம் என்று கருதுவதாலும்.

இந்தப் பிணை முறியின் நிபந்தனையாவது, உரிமை கோருபவருக்கு/வர்களுக்குப் பணம் செலுத்தப்பட்டு விட்ட பிறகு உரிமை கோருபவர்/கள் அல்லது பிணையாட்கள் மேலே சொல்லப்பட்ட ரூ [redacted] தொகைக்கு வேறு எவராலும் அரசாங்கத்தின் மேல் யாதொரு உரிமை கோரப்பட்டால், அரசாங்கத்திற்கு ஆ [redacted] திரும்பச் செலுத்துவதுடன் வேறுவிதமாகவும் அந்தப் பணத்தைப் பொறுத்தவரை அரசாங்கத்தை வேறு பொறுப்புகளிலிருந்தும் இடைஞ்சலில்லாமலும், விடுவித்ததும், இழப்பீடு செய்தும் அந்த உரிமை கோரின சம்மந்தமாய் எல்லாச் செலவுகளையும் ஏற்றுக் கொள்ளவும் செய்ய வேண்டும்.

அப்படிச் செய்தால் மேலே எழுதப்பட்ட பிணைமுறியும் சட்டப் பிணைப்பும் செல்லாததாய் விடும். மற்றவற்றில் அவை முழு அமுலிலும் உறுதியிலும் இருக்கும்.

---

(அ) உரிமை கோருபவரின்/பவர்களின் முழுப் பெயரும்

(ஆ) பிணையாளரின் முழுப்பெயரும் இருப்பிடமும்/களும்

(இ) சந்தாதாரரின் முழுப் பெயர்.

(ஈ) நியமிக்கப்பட்டுள்ளவரின் முழுப் பெயர்.

---

மேல் எழுத்து மூலமான பிணை முறிக்கும் அதன் நிபந்தனைக்கும் சான்றாக [redacted] ம் [redacted] ம் [redacted] ஆகிய நாங்கள் இதில் .................... ஆம் தேதி எங்கள் கையொப்பங்களை வைக்கிறோம்.

## இணைப்பு ஏ.

### வருங்காலச் சேம நிதியை இறுதியாகக் கொடுக்கும்படி கேட்பதற்கான விண்ணப்பத்தின் படிவம்.

1. சந்தாதாரரின் பெயர் (முழுப் பெயரும் பெரிய எழுத்துக்களிலும்)

2. அவர் சேர்ந்திருந்த அலுவலகத்தின் பெயரும் பதவியும்.

3. நிதியின் பெயரும், நிதிக் கணக்கின் எண்ணும்.

4. ஓய்வு பெற்றதன் பின் இருப்பிடமும் முகவரியும்.

5. கணக்கை முடிக்க வேண்டியதற்கான விவரங்கள்.

(அ) ஓய்வு பெற்றிருந்தால் ஓய்வு பெற்ற தேதி, காலை அல்லது மாலை.

(ஆ) வேலை விலகலாயிருந்தால் விலகல் செய்த தேதியும் காலை அல்லது மாலையும், அது ஏற்றுக் கொள்ளப்பட்ட தேதியும்.

(இ) விடுவிக்கப்பட்டிருந்தால்—

(i) விடுவிக்கப்பட்ட, விலக்கப்பட்ட அல்லது தள்ளப்பட்ட தேதி (காலை அல்லது மாலை) அதற்குரிய காரணங்களும்.

(ii) மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் அது தள்ளுபடி செய்யப்பட்ட தேதி (காலை அல்லது மாலை).

(iii) மேல்முறையீடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தால் அப்படித் திரும்பப் பெற்ற தேதி (காலை அல்லது மாலை) சந்தாதாரரால் எழுத்து மூலமாக அறிவிக்கை செய்யப்பட்டபடி.

(iv) மேல்முறை செய்யப்படாமல் இருந்தால் மேல்முறையீட்டுக் காலம் முதலான தேதி (காலை அல்லது மாலை).

(ஈ) இறந்திருந்தால்,

(i) இறப்பு நேர்ந்த தேதி.

(ii) அந்தத் தேதியில் உயிருடனிருந்த நியமிக்கப்பட்டவர்களின் பெயர் (தெரிந்திருந்தால்).

(iii) அறிவிக்கப்பட்ட நியமனம் முற்றும் செல்லாததாகும்படி செய்த நிகழ்ச்சியின் விவரங்கள் :

(அ) திருமணமாகாமலிருந்தபோது நியமனம் அனுப்பிய சந்தாதாரரின் திருமணம்;

(ஆ) 1935 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதிக்கு முன்னால் அறிவிக்கப்பட்ட நியமனத்தின் தேதிக்கும் 1935 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதிக்கும் இடையில் சந்தாதாரரின் மறு திருமணம் ஆகிய இவை போன்றவைகளாகும்.

(iv) நிதியில் உள்ள மீதித் தொகையின் ஒரு பாகத்திற்கு உரிமையுள்ள வருங்காலச் சேம நிதி விதிகளில் ......... ம் விதியில் விளக்கியுள்ளபடி குடும்ப உறுப்பினர்களின் (அவர்களுடைய பெயர், வயது, ஆணு அல்லது பெண்ணு முதலிய விவரங்கள் அடங்கிய) பட்டியலும் அதனுடன் சேர்த்து அவர்களுடைய அசல் விண்ணப்பங்களும்.

(உ) ஓய்வு பெறுவதற்கு ஆயத்தமாகவுள்ள விடுப்பைப் பற்றியதில் பணம் செலுத்தக் கேட்கப்பட்ட விண்ணப்பத்தின் தேதி.

6. கடைசியாக நிதிக்குக் கழிவு செய்யப்பட்ட தொகையும் அந்தக் கழிவு செய்யப்பட்டவைகளுக்குச் செல்லும் சீட்டின் எண்ணும் தேதியும்.

7. நிதியிலிருந்து பணம் செலுத்தப்படும் சந்தாதாரரால் எடுக்கப்பட்ட ஈட்டுறுதி எண்களும் ஏனைய விவரங்களும்.

8. கணக்கை முடிக்க வேண்டியதாக ஏற்பட்ட நிகழ்ச்சியின் தேதிக்கு முந்திய பன்னிரண்டு மாதங்களில் பெறப்பட்ட முன் பணங்களைப் பற்றிய விவரங்களும் ஈட்டுறுதிக்குத் தவணைக் கட்டணங்கள் செலுத்துவதற்காகத் திரும்பப் பெறப்பட்ட தொகைகளின் விவரங்களும் (ஏதாவதிருந்தால்).

அடியிற் கண்ட படிவத்திலுள்ள சான்றிதழ்களும் அளிக்கப்பட வேண்டும்.

I. மேலே விவரமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளவைகள் தவிர ......ஆம் தேதிக்கு* முந்திய பன்னிரண்டு மாதங்களில் ...... வருங்காலச் சேம நிதியிலிருந்து சந்தாதாரருக்கு எந்த முன் பணமும், அளிக்கப்படவில்லையென்று சான்றளிக்கப்படுகிறது.

---

* கணக்கை முடிப்பதற்கு அவசியமாயிருந்த நிகழ்ச்சியின் தேதி இங்கே குறிக்கப்பட வேண்டும்.

11. மேலே விவரமாகச் சொல்லப்பட்டுள்ளவை தவிர [redacted] தேதிக்கு * முந்திய பன்னிரண்டு மாதங்களில் [redacted] வருங்காலச் சேம நிதியிலிருந்து ஈட்டுறுதிக்குத் தவணைக் கட்டணங்கள் செலுத்துவதற்காக யாதொரு பணமும் திரும்பப் பெறப்படவில்லை என்று சான்று அளிக்கப்படுகிறது.

9. உதவித் தொகை கூடிய வருங்காலச் சேமிப்பு நிதிக்குச் சந்தாதாரர்களைப்பற்றியவரை விதிகளின் கீழ் சந்தாதாரரின் கணக்கில் உதவித் தொகையிலிருந்து ஏதாவது தொகை பிடிக்கப் பட வேண்டுமா என்பதைப் பற்றிய சான்றிதழ்.

10. பணம் செலுத்தப்பட வேண்டும் என்று விரும்பும் கருவூலத்தின் பெயர்.

11. அவ்வலுவலகத் தலைமை அதிகாரியின் எல்லைக்கப்பாற்பட்ட கருவூலத்தில் கொடுக்க விரும்பினால் எந்த அலுவலகத் தலைவரின் மூலம் செலுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

அலுவலகத் தலைவரின் தேதியிட்ட கையொப்பம். மேலே 8 (1) இல் சொல்லப்பட்ட சான்றிதழைப் பொருத்தவற்றில் வருங்கால சேம நிதிகளின் விதியின் கீழ் ஒப்பளிப்புத் தரும் அதிகாரியின் தேதியிட்ட கையொப்பம்.

## 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு உதவித் தொகையுள்ள வருங்காலச் சேம நிதி ஓய்வூதியம் ஈட்டுறுதி விதிகள்.

(1954 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி வரை திருத்தப்பட்டது.)

இந்திய அரசியல் அமைப்பின் 309 ஆம் விதியின் ஏற்பாட்டால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தினாலும் இதனால் அளிக்கப்படும் எல்லா அதிகாரங்களினாலும் தமிழ்நாடு ஆளுநர் இதனால், மாநில அலுவல்களில் சம்பந்தப்பட்டுள்ள ஓய்வூதியம் பெறும் பணியிடங்களையுடைய மேல் நிலைப் பணியாளர்களுக்காக உதவித் தொகையுள்ள வருங்காலச் சேமநிதி, ஓய்வு ஊதியம் ஈட்டுறுதி

* கணக்கை முடிப்பதற்கு அவசியமாயிருந்த நிகழ்ச்சியின் தேதி இங்கே குறிக்கப்படவேண்டும்.

இவற்றின் நன்மைக்காக ஒழுங்குபடுத்தி கீழ்க்காணும் விதிகளைச் செய்கிறார்:—

## விதிகள்.

(1) இந்த விதிகள் 1950-ஆம் ஆண்டு உதவித் தொகையுள்ள வருங்காலச் சேம நிதி-ஓய்வூதியம்-ஈட்டுறுதி விதிகள் என்று சொல்லப்படலாம்.

(i) அவை 1950-ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 1-ஆம் தேதி யன்று அமுலுக்கு வரும்.

(2) அடியிற்கண்டவர்களுக்கு—

(i) 1950-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியன்று அல்லது அதற்குப் பிறகு தமிழ்நாடு ஆளுநர் விதிகள் செய்யும் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள மேல்நிலைப் பணிகளில் சேர்ந்துள்ள எல்லா அரசுப் பணியாளர்களுக்கும்;

(ii) யாதொரு நிலையான வேலையில்லாத அத்தகைய எல்லா அரசாங்கப் பணியாளர்களுக்கும் மேல்நிலைப் பணியில் மொத்தம் 10 ஆண்டுகளுக்குக் குறைவாய்ப் பணியாற்றிய நிலையான அரசாங்கப் பணியாளர்களில் 1950-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி அரசாங்கப் பணியிலிருப்பவர்களுக்கும், இவ் விதிகளின் கீழ் வரத் தேர்ந்தெடுக்கப்படுபவர்களுக்கும், இந்த விதிகள் பொருந்தும்.

(அ) ஆனல் 1950-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி பணியில் இருந்த அரசாங்கப் பணியாளர் ஒருவர் அந்தத் தேதி யிலிருந்து அவர் இடையே விட்டுப் போகாமல் தொடர்ந்து பணியில் இருக்கக் கூடியவராயும் மேற்கொண்டு அந்தத் தேதி அல்லது அதற்கு முன்னல் முதலில் பதவியில் அமர்த்தப்பட்ட பணியிடத்தில் தகுதிகாண் பருவத்தை மனநிறைவு அளிக்குமாறு முடித்திருப்பவராயும் அல்லது அப்பணியிடத்திற்குத் தகுதிகாண் பருவம் ஏற்படுத்தப்படாமலிருந்தால், அந்தத் தேதியில் அல்லது அதற்கு முன்னல் மூன்று தொடர்ந்த ஆண்டுகளுக்குள் இரண்டு ஆண்டுகள் மனநிறைவு அளிக்குமாறு செய்திருந்தால் அவர் இவ் விதிகளின் கீழ் வரத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் விருப் புரிமையை 1951-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதிக்குள் எப்போதும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(ஆ) 1950-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியன்று விடுப்பில் இருந்த ஒரு அரசுப் பணியாளரைப் பொருத்தவற்றில் அவர் (அ) கூற்றில் உள்ள நிபந்தனைகளை அந்தத் தேதியில் நிறைவு செய்திருந்தால் அவர் இவ்விதிகளின் கீழ் வரத் தேர்ந்தெடுத்துக் கொள்வது விடுப்பிலிருந்து பணிக்கு வந்து சேர்ந்த மூன்று மாதங்களுக்குள்ளும் அல்லது 1951-ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ஆம் தேதிக்குள்ளும் எது பிற்பட்டதோ அதற்குள் அந்த விருப்புரிமையைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(இ) 1950-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதி பணியிலோ அல்லது விடுப்பிலோ இருந்து அந்தத் தேதியில் (அ) கூற்றில் சொல்லப்பட்ட நிபந்தனைகளை நிறைவு செய்யாத ஒரு அரசுப் பணியாளரைப் பற்றியவற்றில் இவ் விதிகளின் கீழ் வரத் தேர்ந்தெடுக்கும் விருப்புரிமையை, அவர் அந்த நிபந்தனைகளை நிறைவு செய்துகொள்ளும் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள்ளும் அல்லது 1951-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதிக்குள்ளும் எது பிந்தியோ அதற்குள் எக்காலத்திலும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

(ஈ) மேலே சொல்லப்பட்ட உட்பகுதிகள் (அ), (ஆ), (இ) கூற்றுகளில் உள்ளவை எப்படியிருந்தாலும் அரசு சட்டப்படி செல்லத்தக்க காரணங்களுக்காக ஒரு அரசுப் பணியாளரை இவ்விதிகளின் கீழ் வர அனுமதிக்கலாம்.

(உ) எல்லாவற்றிலும் ஒரு தடவை பயன்படுத்திய விருப்புரிமையே முடிவானதாகும்.

குறிப்பு 1.—இந்த விதிகளின் நோக்கங்களுக்காக "மேல்நிலை" "கீழ் நிலை" என்ற சொற்கள் குடிமுறை (சிவில்) பணியாளர் தொகுதி விதி முறைகளில் உள்ளவாறு அதே பொருள்படும்.

குறிப்பு 2.—உள்விதி (ii)-ல் வரும் "மொத்தப் பணி" என்னும் சொல்லில் தொடர்ந்து அல்லது இடைவிட்டு ஒழுங்கு முறையில் செய்யப்பட்ட நிலையானதல்லாத பணியும் அடங்கும். ஆனால் கீழ்நிலைப் பணி அதில் சேராது. வேலையினின்று விலகுதல் காரணமாக இடையில் விடுபட்ட பணி விடுப்பாக ஒழுங்குப் படுத்தப்பட்டாலன்றி அவ்வாறு விலகுதலுக்கு முன்னால் உள்ள பணியும் இடையில் விடுபட்ட பணிக் காலமும் விலக்கப்படும்.

குறிப்பு 3.—பணியில் ஒரு பகுதி, கீழ்நிலைப் பணியாகவும் வேறு சில பகுதி மேல்நிலைப் பணியாகவுமுள்ள அரசாங்கப் பணியார்களுக்கு மேல்நிலைப் பணி உயர்வு அளிக்கப்படும்போது, அவருடைய மேல்நிலைப் பணி பற்றியவற்றில் மட்டும் இவ்விதிகளின் கீழ் வருவதற்குத் தேர்ந்தெடுத்தாலன்றி அவருக்கு இவ்விதிகள் பொருந்தா.

குறிப்பு 4.—விருப்புரிமையைப் பயன்படுத்துவதை எல்லா நிகழ்வுகளிலும் எழுத்து மூலமாய் அந்தப் பணியின் பதிவுரு வைத்திருக்கும் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். அரசிதழ்ப் பதிவில்லாத அரசாங்கப் பணியாளர்களுக்கு அது பணிப் பதிவேட்டிலும் ஆண்டுப் பணி அமைப்பு விவர அறிக்கையிலும், தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். அரசிதழ்ப் பதிவு பெற்ற அரசுப் பணியாளர்களுக்கு அது, பணிகளின் வரலாற்றில் பதியப் பட வேண்டும்.

குறிப்பு 5.—இவ்விதிகள் சென்னையிலுள்ள உயர்நீதி மன்றத்தின் அலுவலர்களுக்கும் பணியாளர்களுக்கும் அல்லது தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவின் உறுப்பினர்களுக்கும் பணியார்களுக்கும் பொருந்தா. ஆயினும், அவை இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் 229 (2)-வது விதி அல்லது 318-ம் விதியின் கீழ்ச் சந்தர்ப்பந்திற்கேற்றவாறு தகுதியுள்ள அதிகாரியால் அவர்களுக்கும் பொருந்தும்படி செய்யப் படலாம்.

**I. ஓய்வூதியங்களும் பணிக் கொடையும்.**—3. இவ்விதிகளின் கீழ்ச் சொல்லப்பட்ட எவரொருவருக்கு ஓய்வூதியத் தொகை அல்லது பணித் தொகை சிவில் பணியாளர் விதிமுறைகளில் 474, 474 (அ) விதிகளில் சொல்லப்பட்டுள்ள அளவுக்குச் சரிபாதியாக இருக்கும்.

II. உதவித் தொகையுள்ள வருங்காலச் சேம-ஓய்வூதிய நிதி.—4. (1) இவ்விதிகளில் பொருளுக்கு அல்லது சூழ்நிலைக்கு ஒவ்வாத ஏதாகிலும் இருந்தாலும் அல்லது வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தாலுமொழிய,

(i) கணக்கு அலுவலர் என்பது உதவித் தொகையுள்ள வருங்காலச் சேம ஓய்வூதிய நிதியின் பொறுப்பிலுள்ள அரசாங்க நிதித் துறையிலுள்ள உதவிச் செயலாளர் என்று பொருள்படும்.

(ii) ஊதியங்கள் என்பது அடிப்படை விதிகளில் விளக்கப்பட்டுள்ளவாறு, சம்பளம், விடுப்புச் சம்பளம் அல்லது வாழ்க்கைக் கொடை என்று பொருள்படும்.

(அ) நிர்ணயிக்கப்பட்ட மாதச் சம்பளமில்லாத வேலையாட்களுக்கு, அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட எந்தக் கூலித் தொகையும்,

(ஆ) அயல் பணி சம்பந்தமாய் சம்பளத்தைப் போன்று பெறப்பட்ட எந்த ஊதியமும், இதில் அடங்கும்.

(iii) "குடும்பம்" என்பது,

(அ) ஒரு ஆண் சந்தாதாரைப் பொறுத்தவற்றில் அந்தச் சந்தாதாரரின் மனைவி அல்லது குழந்தைகளும், அந்தச் சந்தாதாரரின் இறந்துபோன மகனுடைய விதவை அல்லது குழந்தைகளும் என்று பொருள்படும்.

ஆயினும் ஒரு சந்தாதாரர் தமது மனைவி, நீதிமன்றம் மூலமாகத் தன்னிடமிருந்து பிரிக்கப்பட்டிருப்பதாகவோ அல்லது அவர் சேர்ந்த சமுதாயத்தின் பழக்கமான சட்டப்படி பேணுதல் செலவிற்கு உரிமையற்றவள் என்று மெய்ப்பித்தால் அந்தச் சந்தாதாரர் பின்னால் எழுத்து மூலமாய்த் தெளிவான அறிவிக்கையின் மூலம் கணக்கு அலுவலருக்கு அவளைக் குடும்பத்தின் உறுப்பினர்களாகக் கருத வேண்டும், என்று தெரிவித்தாலொழிய, அவள் இவ்விதிகளில் சம்பந்தப்பட்டவைகளில் சந்தாதாரரின் குடும்பத்தின் ஒரு உறுப்பினளாகக் கருதப்படமாட்டாள்.

(ஆ) ஒரு பெண் சந்தாதாரரைப் பொருத்தமட்டில் அந்தச் சந்தாதாரரின் கணவரும் குழந்தைகளும் அந்தச் சந்தாதாரின் இறந்து போன மகனின் விதவை அல்லது விதவைகளும் குழந்தைகளும் என்று பொருள்படும்.

ஆயினும், ஒரு சந்தாதாரர் எழுத்து மூலமாய் ஒரு அறிவிக்கையில் தமது கணவரைத் தமது குடும்பத்திலிருந்து நீக்க வேண்டும் என்று தமது விருப்பத்தைத் கணக்கு அலுவலருக்குத் தெரிவித்தால் அந்தச் சந்தாதாரர் பின்னால் அவரை நீக்கும் அறிக்கையை ஒழுங்காகப் பின்னால் ரத்து செய்தாலொழிய அவர் சந்தாதாரரின் குடும்பத்தின் ஒரு உறுப்பினராக இவ்விதிகள் சம்பந்தப்பட்டவைகளில் கருதப்படமாட்டார்.

விளக்கம் I.—"குழந்தைகள்" என்பது சட்ட முறைப்படியான குழந்தைகள் என்று பொருள்படும்.

விளக்கம் II—ஒரு தத்துக் குழந்தைக்கு, கணக்கு அலுவலர் அல்லது அவருக்கு ஐயம் ஏற்பட்டபோது தமிழ்நாடு அரசாங்க வழக்கறிஞர், சந்தாதாரரின் சொந்தச் சட்டத்தின் கீழ் தத்து எடுத்த ஒரு நியாயமான குழந்தையின் தகுதியை அளிக்கிறது என்று மனநிறைவு பெற்றால் அது ஒரு குழந்தையாகவே கருதப்படும். ஆனால் இந்த நிகழ்வில் மட்டுமே அவ்வாறு கருதப்படும்.

(iv) அரசாங்கம் ஆளுநர், மாநிலம் என்பன முறையே, தமிழ்நாடு அரசு, ஆளுநர், மாநிலம் என்று பொருள்படும்.

(v) விடுப்பு என்பது சந்தாதாரருக்குப் பொருந்தக் கூடிய அடிப்படை விதிகளில் அல்லது சிவில் பணியாளர் விதி முறைகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எந்த விதமான விடுப்பும் என்று பொருள்படும்.

(vi) ஆண்டு என்பது நிதியாண்டு என்று பொருள்படும்.

(2) இந்த விதிகளில் உபயோகப்படுத்தப்பட்ட வேறு எந்தச் சொல்லும், அது 1925 ஆம் ஆண்டு வருங்காலச் சேம நிதிகள் சட்டத்தில் (1925 ஆம் ஆண்டு XIX ஆம் மத்திய சட்டப்படி) அல்லது அடிப்படை விதியில் விளக்கப்பட்டுள்ள அதே பொருளில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளன.

(5) இவ்விதிகளின் கீழ் உதவித் தொகையுள்ள வருங்காலச் சேம—ஓய்வூதிய நிதி (இதற்குப் பிறகு நிதி என்று சொல்லப்படும்) தமிழ்நாடு அரசாங்கத்தாரால் நிர்வகிக்கப்பட்டு இந்தியாவில் ரூபாய்களில் கணக்கு வைக்கப்படும்.

(6) இனிமேல் அரசாங்கப் பணியில் சேரும் ஒவ்வொருவரும் அவர் முதலில் நியமிக்கப்பட்ட பதவியில் தக்கபடி தமது தகுதி காண்பருவத்தை மனநிறைவு பெறுமாறு முடிந்தாலும் அல்லது அப்படி ஒரு தகுதி காண்பருவம் இல்லாத ஒரு பதவியில் தொடர்ந்துள்ள மூன்று ஆண்டுக் காலத்தில் மொத்தம் இரண்டு ஆண்டுக் காலம் மனநிறைவு பெருமாறு பணி செய்திருந்தாலும் அதன் மேல், நியமிக்கும் அதிகாரி அவர் இடையே விட்டுப் போகாமல் தொடர்ந்து பணியில் நீடிக்கக் கூடியவர் என்று சான்றளிக்கும் தேதியிலிருந்து இந்த விதியில் சேர்ந்த அந்தத் தேதியிலிருந்து நிதியில் ஒரு சந்தாதாரராக இருப்பார். ? (ii) விதியின் ஏற்பாட்டில் (அ) கூற்றில் குறிப்பிடப்பட்ட அரசாங்கப் பணியாளர் நிதியில் 1950-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம்

தேதியன்று சேருவார். (ஆ) கூற்றில் குறிப்பிடப்பட்டவர் அரசாங்கப் பணியாளர் தமது விடுப்பிலிருந்து திரும்பப் பணிக்கு வந்த தேதியில் சேருவார். (இ) கூற்றில் குறிப்பிடப்பட்ட அரசுப் பணியாளர் விதியின் (அ) கூற்றில் சொல்லப்பட்ட நிபந்தனைகளை நிறைவு செய்த தேதியிலிருந்து நிதியில் சேருவார்.

அரசாங்கத்தால் நடத்தப்படும் யாதொரு உதவித் தொகை யில்லாத வருங்காலச் சேம நிதியில் அந்த சந்தாதாரரின் வரவில் இருப்பு உள்ள தொகை அந்தத் தேதியிலிருந்து நிதியில் அவர் வரவுக்கு மாற்றப்படும்.

6. (அ) ஒரு உள்ளாட்சிக் கழகத்தின் கீழ் அமர்த்தப்பட்டு அதனால் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்படும் வருங்காலச் சேம நிதிக்கு ஒரு சந்தாதாரராயிருப்பவர் அரசாங்கத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் ஒரு பணிக்கு நிலையாக மாற்றப்பட்டால்.

(i) அந்த உள்ளாட்சிக் கழக வருங்கால சேம நிதியில் அவர் வரவில் உள்ள சந்தாக்களின் தொகை கூடிய வட்டியுடன் நிதியில் அவர் வரவுக்கு மாற்றப்படும்; மேலும்

(ii) அந்தப் பணியாளர், அந்த உள்ளாட்சிக் கழகத்தால் முன்னர் அளிக்கப்பட்ட உதவித் தொகைகள் சம்பந்தமாய் வருங்காலச் சேம நிதி நலன்களை விடாது வைத்துக் கொண்டால் அந்த உள்ளாட்சிக் கழகத்தின் வருங்காலச் சேம நிதியில் அவர் வரவில் உள்ள அந்த உள்ளாட்சிக் கழகத்தாரால் அளிக்கப்பட்ட உதவித் தொகை அதன் மேல்கூடிய வட்டியுடன், இந்நிதியில் அவர் வரவுக்கு மாற்றப்படும்.

7. இந்த நிதிக்குச் சந்தாதாரராகியுள்ள ஒரு அரசாங்கப் பணியாளர் தமிழ்நாடு பொது வருங்காலச் சேம நிதியில் சேரக் கூடாது.

8. ஒவ்வொரு சந்தாதாரரின் பேரில் ஒரு கணக்கு ஆரம்பிக்கப் பட்டு அதில் அடியிற்கண்டவைகள் வரவு வைக்கப்படும்.

(i) சந்தாதாரரின் சந்தாக்கள்.

(ii) அவருடைய கணக்குக்கு அரசாங்கத்தால் அளிக்கப் பட்ட உதவித் தொகைகள்.

(iii) III. ஆம் விதியில் சொல்லப்பட்டுள்ளபடி. சந்தாக்களின் மேல் கூடிய வட்டி.

(iv) II. ஆம் விதியில் சொல்லப்பட்டுள்ளபடி. உதவித் தொகைகளின் மேல் வட்டி.

9. (1) ஒவ்வொரு சந்தாதாரரும் தாம் பணியில் அல்லது வெளிப் பணியில் உள்ளபோது மாதந்தரச் சந்தா செலுத்த வேண்டும்.

(2) அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு சந்தாத் தொகை சந்தாதாரராலேயே நிர்ணயிக்கப்படும்.

(அ) அது முழு ரூபாய்களில் சொல்லப்பட வேண்டும்.

(ஆ) அப்படிச் சொல்லப்பட்ட தொகை எதுவும் அவருடைய சம்பளத்தில் அல்லது விடுப்புச் சம்பளத்தில் 6¼ சதவிகிதத்திற்கு (அதாவது ஒரு ரூபாயில் ஒரு அணா) குறை வாயிருக்கக் கூடாது.

குறிப்பு 1.—இந்த விதியின் நோக்கங்களுக்காக "சம்பளம்" என்பது அடிப்படை விதி 9 (21)-இல் விளக்கப் பட்டுள்ளபடி பொருள்படும்.

அந்தச் சம்பளத்தின் அல்லது விடுப்புச் சம்பளத்தின் 6¼ சதவிகிதம் முழு ரூபாய்களாகச் சொல்லப்படக்கூடாத தொகையாயிருந்தால் அதற்கு அடுத்த முழு ரூபாய்களை குறுமச் சந்தாவாக எடுத்துக் கொள்ள வேண்டும். (எட்டு அணாக்கள் அல்லது அதற்கு மேல் அதற்கு அடுத்த மேல் ரூபாயாகக் கணக் கிடப்படும்).

குறிப்பு 2—விதி 2 ( )க்கு ஏற்பாடுகளில் சொல்லப்பட்ட அரசாங்கப் பணியாளர்கள் விஷயத்திலும் நிதிக்குச் சந்தாவாக முதல் கழிவு, கணக்கு அலுவலரால் கணக்கு எண்கள் அளிக்கப் பட்ட மாதத்திய சம்பளப் பட்டியலிலிருந்து செய்யப்பட வேண்டும் அல்லது அந்த மாதத்திய சம்பளப் பட்டியில் அந்தக் கழிவு செய்ய இயலாவிட்டால் அது அந்த மாதத்திற்கு உள்ள சம்பளப் பட்டியில் செய்யப்பட வேண்டும்.

குறிப்பு 3.—அவர்களிடமிருந்து முந்திய மாதங்களுக்கு நிலுவையிலுள்ள நிதியின் சந்தாக்கள் சம்மந்தமான வசூலை, முதல் கழிவு செய்யப்படும் மாதத்திலிருந்து செய்ய வேண்டும். பின்வரும்

மாதங்களுக்கு ஒரு மாதத்திய சம்பளப் பட்டியிலிருந்து **ஒரு** மாதத்திய நிலுவைக்கு மேற்படாத படி கழிவு செய்யப்பட வேண்டும்.

(இ) ஒரு சந்தாதாரர், தம் விருப்பப்படி விடுப்புக் காலத்தில் சந்தா செலுத்தாமலிருக்கலாம். அவர் தம் விடுப்புக் காலத்தில் சந்தாச் செலுத்தாமலிருக்க விரும்புவதை ;

(i) அவர் தம் சொந்தச் சம்பளப் பட்டியைத் தாமே அனுப்பிப் பணம் பெறும் ஒரு அலுவலராயிருந்தால் தாம் விடுப்பில் சென்ற பிறகு அனுப்பப்படும் முதற் சம்பளப் பட்டியில் ஒன்றும் கழிவு செய்யாமை மூலமும்,

(ii) அவர் தம் சம்பளப் பட்டியைத் தாமே அனுப்பிப் பணம் பெருத அலுவலராயிருந்தால், அவர் விடுப்பில் செல்வதற்கு முன்னல் தம் அலுவலகத் தலைவருக்கு எழுத்து மூலமான ஒரு அறிவிப்பு மூலமும் தெரிவிக்கவேண்டும்.

இந்தக் கூற்றின் கீழ் தெரிவிக்கப்படும் சந்தாதாரரின் விருப்பம் முடிவானதாகும். தேவையான தகவலைக் காலத்தில் கொடுக்கத் தவறினுல் சந்தா செலுத்துவதைத் தேர்ந்தெடுத் ததாகக் கருதப்படும்.

10. (1) இந்த விதியில் **வேறு விதமாகச்** சொல்லப்பட்டுள்ள படி தவிர, 6 ஆம் விதியின் கீழ் நியமிக்கும் அதிகாரியால் ஒரு சான்று அளிக்கப்பட்ட தேதியிலிருந்தும், அல்லது பணியில் சந்தா தாரர் நிலையாக்கப்பட்ட தேதியிலிருந்தும், எது முந்தியதோ அதிலிருந்து அரசாங்கம், ஒவ்வொரு சந்தாதாரரின் கணக்கிலும் வரவுவைக்க, உதவித் தொகையை, அவ்வப்போது பெறப்பட்ட உள்ளபடியான சம்பளத்தில் ரூபாயில் ஒன்பது பைசா விகிதத்தி லும் அல்லது அரசாங்கத்தின் கடன் பெறும் உரிமைக்கு இணங்க ஒரு பொது அல்லது சிறப்பான ஆணையால் அரசாங்கத்தால் குறிப்பிடப்படும் வேறு விகிதத்திலும் அளிக்கவேண்டும்.

குறிப்பு.—இவ்விதியின் நோக்கங்களுக்காக "சம்பளம்" என்பது அடிப்படை விதி 9 (21)-இல் விளக்கப்பட்டுள்ளவாறு பொருள்படும். படைப்பணியில் உள்ள அரசாங்கப் பணியாளர்கள் விஷயத்தில் "சம்பளம்" என்பது அடியிற்கண்டவைகளும் அடங்கும் :—

அறுவை மருத்துவர் பணித் தொகுதி படி.

பதிவாளர் படி.
நுண்ணறிஞர் சம்பளம்.
பொறுப்பு சம்பளம்.
அதிகாரச் சம்பளம்.
இரண்டாம் தலைமை அதிகாரச் சம்பளம்.
கூடுதல் சம்பளம்.
பதிவாளர் சம்பளம்.
படைச் சம்பளம்.
குடும்பப் படி.
வாணிகச் சம்பளம்.
பொறியாளர் சம்பளம்.
போர்ச் சம்பளம்.
துணைவர் படி.
தனிப்பட்ட படி.
அவசரப் படி.
சங்கேதப் படி.
இந்தியப் படைப்படி.
போர்ப் பணி ஊதிய உயர்வுகள்.
அயல் நாட்டுச் சம்பளம்.
திறமைப் படி.
குறை ஆய்பவர் படி.
திறமைச் சம்பளம்.
தரச் சம்பளம்.
நற் பணிச் சம்பளம்.
கப்பற்படைத் தலைமையிடப் பணிப்படி.
தொற்றுநோய் போர்ப் படி.

(2) அரசாங்கம் அந்த நிதிக்குத் தனிப்பட்ட விடுப்பு உட்பட விடுப்புக் காலத்தில், அந்த அரசாங்கப் பணியாளர் பணியிலிருந்தால் என்ன சம்பளம் பெற்றிருப்பாரோ அந்த அடிப்படையில், உதவித் தொகையைச் செலுத்த வேண்டும்.

(3) உள்விதிகள் (1) ஆம் (2) இன் கீழும் செலுத்தப்பட வேண்டிய உதவித் தொகை ஒவ்வொரு ஆண்டு முடிவுக்குப் பிறகும் துறை அலுவலர்களால் II-ஆம் இணைப்பில் சொல்லப் பட்டுள்ள உத்தரவுகளுக்கிணங்க அனுப்பப்படும் சம்பள விவரப் பட்டியல்களின் அடிப்படையில் அடுத்த முழு ரூபாய்க்குச் சரி செய்யப்பட்டு (எட்டு அணுககளும் அதற்கு மேலும் அடுத்த மேல் ரூபாயாகக் கணக்கிடப்பட்டு) சந்தாதாரரின் கணக்குக்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

* (4) 2 (ii) விதிக்கு ஏற்பாட்டில் சொல்லப்பட்ட ஒரு அரசாங்கப் பணியாளர் விஷயத்தில், பழைய பணிக்காக அரசாங்க உதவித் தொகை, அவர் தக்கபடி அமைக்கப்பட்ட பதவியில் அவர் தமது தகுதிகாண் பருவத்தை மனநிறைவு அளிக்குமாறு முடித்த அல்லது அந்தப் பதவிக்கு ஒரு தகுதிகாண் பருவம் நியமிக்கப் பட்டில்லாத போது தொடர்ந்துள்ள மூன்று ஆண்டு காலத்திற்குள் மொத்தம் இரண்டு ஆண்டு காலம் மனநிறைவு அளிக்குமாறு பணி செய்த, அல்லது தொடர்ந்து அரசாங்கப் பணியில் இருந்து வருகிற தேதிகளில், எது பின்னல் வருகிறதோ அந்தத் தேதி யிலிருந்து கணக்கிடப்பட்டு மொத்தமாக ஆண்டிற்கு 3 சதவிகிதம் கணக்கிடப்பட்ட வட்டியுடன் அந்த அரசாங்கப் பணியாளரின் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

எப்படியும் அந்த அரசாங்கப் பணியாளர் மேலே சொல்லப் பட்ட தேதிகளுக்கு முன்னல் ஒரு தேதியில், பணியில் நிலையாக்கப் பட்டால், அரசாங்க உதவித் தொகை அப்படிப்பட்ட நிலையாக்கப் பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

11. (1) அவ்வப்போது அரசாங்கத்தால் குறிப்பிடப்படும் விகிதத்தில் அரசாங்கப் பணியாளரின் நிதிக்கு ஒரு ஆண்டில் சொந்தச் சந்தாக்களின் மேலும் அந்நிலையில் ஏற்கனவே அவர் வரவில் உள்ள பணத்தின் மேலும் செலுத்தப்பட வேண்டும்.

வட்டி அடியிற்கண்டபடி ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் மாதம் 31-ஆம் தேதியிலிருந்து செலுத்தப்பட்டு வரவு வைக்கப்பட வேண்டும்.

(2) முந்திய ஆண்டின் மார்ச் மாதம் 31-ஆம் தேதி ஒரு சந்தாதாரரின் வரவில் இருந்து, நடப்பு ஆண்டில் ஏதேனும் திரும்பப் பெறப்பட்ட தொகை கழிக்கப்பட்டு பன்னிரண்டு மாதங்களுக்கு வட்டி,

*அ.ஆ. பலவகை எண் 1 நிதி (உ.வ.ஒ.நி.) 3—1—1955 தேதியிட்டது. 1955-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 19-ம் தேதியிட்ட சென்னை மாநில அரசிதழ்.

(i) அந்த ஆண்டில் திரும்பப் பெறப்பட்ட தொகைகளின் மேல்—நடப்பு ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து திரும்பப் பெற்ற மாதத்திற்கு முந்திய மாதத்தின் கடைசி நாள் வரைக்கும்.

(ii) முந்திய ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதிக்குப் பிறகு சந்தாதாரர் கணக்கில் வரவு-வைக்கப்பட்ட எல்லாத் தொகைகளின் மேலும், தொகை வைக்கப்பட்ட தேதியிலிருந்து நடப்பு ஆண்டு மார்ச் மாதம் 31-ஆம் தேதி வரையில் வட்டி;

(iii) வட்டியின் மொத்த தொகை அடுத்த ரூபாய்க்கு அதாவது எட்டு அணுக்களும், அல்லது அதற்கு மேலும் அடுத்த மேற்பட்ட ரூபாய்க்குச் சரி செய்யப்பட வேண்டும்.

ஆயினும் ஒரு சந்தாதாரர் வரவில் உள்ள தொகை செலுத்தப்படுவதற்குரியதானபோது, அதன் மேல் கூடிய வட்டி இந்த உள் விதியின் கீழ், நடப்பு ஆண்டு ஆரம்பத்திலிருந்து அல்லது வைப்புத் தொகை வைக்கப்பட்ட தேதியிலிருந்து சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அந்த சந்தாதாரர் வரவில் உள்ள தொகை செலுத்தப்பட வேண்டிய தேதி வரையில் மட்டுமுள்ள காலத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

(3) இவ்விதியின் நோக்கங்களுக்காக வைப்புத் தேதி, ஊதியங்களிலிருந்து திரும்பப் பெறப்பட்டவகைகளில் அவை வசூலிக்கப்பட்ட மாதத்தில், முதல் நாளாகக் கருதப்பட வேண்டும், சந்தாதாரரால் அனுப்பப்படும் தொகைகள் அவை கணக்கு அலுவலரால் அந்த மாதத்தின் ஐந்தாம் நாளுக்கு முன்னுல் வரப் பெற்றுல் வரப்பெற்ற மாதத்தில் முதல் நாள் வந்ததாக பாவிக்கப்படும் அல்லது அவை அதற்குப் பின்னுல் வந்தால் அடுத்து வரும் மாதத்தில் முதல் நாள் வந்ததாகப் பாவிக்கப்படும்.

(4) 24-ஆம் விதியின் கீழ் செலுத்தப்பட வேண்டிய யாதொரு தொகையுடன், பணம் செலுத்தப்படும் மாதத்திற்கு முந்திய மாதம் முடிவு வரையில் அல்லது அந்தத் தொகை செலுத்தப்படுவதற்குரிய மாதத்திலிருந்து ஆருவது மாதம் கடைசி வரையில் இந்த இரண்டு காலங்களில் எது குறைந்ததோ, அதற்கு வட்டியும் தொகை செலுத்தப்பட வேண்டியவருக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

ஆனால், கணக்கு அலுவலர் அந்த நபருக்கு (அல்லது அவர் பிரதிநிதிக்கு) அவர் எந்தத் தேதியில் பணமாகச் செலுத்தத் தயாராயிருப்பதாக தெரிவித்திருக்கிருரோ, அதற்கு பிறகும் அல்லது காசோலை மூலம் செலுத்துவதாயிருந்தால் அவர் நபரின் பேரில் காசோலை அஞ்சலில் அனுப்பப்பட்ட தேதிக்குப் பிறகும் உள்ள காலத்திற்கு வட்டி செலுத்தப்படமாட்டாது.

(5) ஒரு குடும்பத்தில் சந்தாதாரர் கணக்கு அலுவலருக்குத் தாம் வட்டி பெற விரும்பவில்லை என்று தெரிவித்தால் அவர் கணக்கில் வட்டி வரவு வைக்கக் கூடாது. ஆனால் அவர் பின்னுல், வட்டி கேட்டால், அவர் கேட்கும் ஆண்டில் ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து அது அவர் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

(6) 33-ஆம் விதியின் உள்விதி (3), 38-ஆம் விதியின் உள்விதி (4, அல்லது 37-ஆம் விதியின் உள்விதி (1) அல்லது 38-ஆம் விதியின் உள்விதி (1) அல்லது (2) அல்லது 22-ஆம் விதியின் கீழ், நிதியில் சந்தாதாரரின் பெயரில் திருப்பி வைக்கப்பட்ட தொகைகளுக்கு வட்டி, இந்த விதியின் உள்விதி (10)-இன் கீழ் பின்னர் குறிக்கப்படும் விகிதங்களில் கூடியவரை இவ்விதியில் விளக்கப்பட்ட முறையில் கணக்கிடப்பட வேண்டும்.

12. எந்தச் சந்தாதாரரும் நிதியில் அரசாங்க உதவித் தொகைகளும் அதற்கு வட்டியும் கூடிய பாகத்திலிருந்து முன்பணமாக அல்லது ஈட்டுறுதிக்குத் தவணைக் கட்டணங்களாக யாதொரு அல்லது தொகையும் திரும்பப் பெற அனுமதிக்கப்படமாட்டார்.

13. 12-ஆம் விதியில் உள்ள கட்டுப்பாட்டிற்குட்பட்டும், ஒரு சந்தாதாரருக்கு அடியிற்கண்ட கட்டுப்பாடுகளுக்குட்பட்டும், ஐந்தாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தக்க அதிகாரியின் கருத்துப்படி சந்தாதாரரின் வரவில் உள்ள பணத்திலிருந்து தற்காலிகமாக முன் பணங்கள் அளிக்கலாம்.

(அ) விண்ணப்பதாரரின் பண வசதிக்குரிய சூழ்நிலைப்படி அவ்வாறு செய்வது சரியெனவும் அது வேறு விதமாக அல்லாமல் அடியிற்காணும் காரியம் அல்லது காரியங்களுக்காகச் செலவு செய்யப்படும் எனவும் ஒப்பளிக்கும் அதிகாரி மனநிறைவு பெற்றுலொழிய ஒரு முன்பணமும் அளிக்கப்படமாட்டாது.

(i) அந்த விண்ணப்பதாரரின் அல்லது உள்ளபடியாக அவர் ஆதரவில் உள்ள யாரொருவரின் நீண்ட உடல்நலக் குறைவின் தொடர்பாக ஏற்கப்பட்ட செலவுகளைச் செலுத்துவதற்காக;

குறிப்பு—" பிள்ளைப் பேறு " பற்றிய செலவுகளைச் செய்வதற்காக,

(i) ஒரு நீடித்த மருத்துவம் பார்ப்பது ஒரு மருத்துவ மனையில் நீடித்த காலம் இருப்பது அல்லது நீடித்த பண்டுவம் பார்ப்பது ஆகியவை அவசியமாயுள்ளவற்றிலும் (2) சந்தாதாரரின் வருவாய்க்கு அதிக விகிதத்தில் செலவு ஏற்படும் ஏனைய சூழ்நிலைகளிலும் ஒரு முன்பணம் அனுமதிக்கப்படுவதற்குரியதாகும்.

(ii) அந்த விண்ணப்பதாரரின் அல்லது உள்ளபடியாக அவர் ஆதாரவில் உள்ள எவரொருவரின் உடல்நலங் காரணமாக அல்லது கல்வி காரணமாகச் செல்லும் வெளிநாட்டுப் பயணத்தின் செலவிற்காக ;

(iii) விண்ணப்பதாரரின் தகுதிக்குத் தக்கபடி வழக்கமாய்ச் செய்யப்பட வேண்டிய திருமணங்கள், ஈமக்கிரியைகள், தகனங்கள் அல்லது சடங்குகள் இவற்றின் தொடர்பாக ஏற்படும் செலவுகளுக்காக ;

(ஆ) ஒரு முன்பணம், தனிக் காரணங்களுக்காகவன்றி, மூன்று மாதச் சம்பளத்திற்கு அதிகப்படக் கூடாது. எப்படியும் அது நிதியில் சந்தாதாரரின் வரவில் உள்ள சந்தாக்களும் அதன் வட்டியும் சேர்ந்த தொகைக்கு மேற்படக் கூடாது.

(இ) ஒரு முன்பணம், தனிக் காரணங்களுக்காகவன்றி, ஏற்கனவே முன்பணமாக அளிக்கப்பட்டுள்ள தொகை (ஆ) கூற்றின் கீழ் அனுமதிக்கப்படக்கூடிய தொகையில் மூன்றில் இரண்டு பகுதிக்கு அதிகப்படாமலிருந்தாலொழிய, முந்திய எல்லா முன்பணங்களும் அவைகளின் மேல்கூடிய வட்டியுட்பட கடைசியாகத் திரும்பச் செலுத்தப்பட்ட பிறகு குறைந்தது பன்னிரண்டு மாதங்களுக்குள், அளிக்கப்படமாட்டாது. இந்த விதியின் கீழ் ஒரு முன்பணம் அளிப்பதில் ஒப்பு அளிப்புத் தரும் அதிகாரி, அந்த முன்பணம் அளித்த பிறகு, நிதியில் மீதியிருக்கும் சந்தாக்களும் அவைகளின் மேல்கூடிய வட்டியும் இந்த விதிகளின் 29 ஆம் விதிகளின் கீழ் செலுத்தப்பட வேண்டிய ஈட்டுறுதித் தவணைக் கட்டணங்களைச் செலுத்தப் போதுமானதாயிருக்கப் பார்த்துக் கொள்ளவேண்டும்.

(ஈ) ஒப்பு அளிப்புத் தரும் அதிகாரி அந்த முன்பணம் அளிப்பதற்குரிய தமது காரணத்தை எழுத்து மூலம் பதிய வேண்டும்

ஆயினும், அந்தக் காரணம் இரகசியமான தன்மையுடைய தாயிருந்தால் அதைக் கணக்கு அலுவலருக்கு இரகசியமாய்த் தெரியப்படுத்தப்படலாம்.

14. (1) ஒரு முன்பணம் ஒப்பு அளிப்புத் தரும் அதிகாரி ஆணையிடக் கூடிய எண்ணுள்ள சமமான மாதாந்தர தவணைகளில் சந்தாதாரரிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டும். ஆனால் அந்த எண்ணிக்கை, அந்தச் சந்தாதாரர் அவ்வாறு விரும்பினாலன்றி பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாமலும் எப்படியும் இருபத்து நான்குக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். ஒரு சந்தாதாரர் தமது விருப்புரிமையால் குறிப்பிட்ட எண்ணிக்கையுள்ள தவணைகளை விட குறைந்த எண்ணிக்கையான தவணைகளில் திருப்பிச் செலுத்திவிடலாம். ஒவ்வொரு தவணையும் முழு ரூபாய்களின் எண்ணிக்கையாயிருக்க வேண்டும். அதற்காகத் தேவையானால் அந்த மாதிரித் தவணைகளை நிர்ணயிக்க, முன்பணத் தொகையைக் கொஞ்சம் அதிகப்படுத்தியாவது குறைத்தாவது கொடுக்கலாம்.

(2) திருப்பி வசூலிப்பது 21ஆம் விதியில் சொல்லியுள்ளபடி செய்யப்பட வேண்டும். அது அந்த முன்பணம் செலுத்தப்பட்ட பிறகு சந்தாதாரர் விடுப்புச் சம்பளம் அல்லது பிழைப்பு நன்கொடை தவிர ஒரு முழு மாதத்திற்கு ஊதியம் பெறுவதிலிருந்து ஆரம்பிக்கப்படவேண்டும். சந்தாதாரரின் உடன்பாடில்லாமல், அவர் விடுப்பில் உள்ளபோதும் அல்லது பிழைப்பு நன்கொடை பெறும்போதும் திருப்பி வசூல் செய்யக் கூடாது. திருப்பி வசூல் செய்வது அந்தச் சந்தாதாருக்கு அளிக்கப்பட்ட சம்பள முன்பணம் வசூலிக்கப்படும் காலத்திற்கு ஒப்பளிப்புத்தரும் அதிகாரியால் தள்ளிப் போடப்படலாம்.

(3) ஒரு சந்தாதாருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட முன்பணங்கள் அளிக்கப்பட்டிருந்தால் திரும்ப வசூல் செய்யும் நோக்கத்திற்கு ஒவ்வொரு முன்பணமும் தனியாகப் பாவிக்கப்பட வேண்டும்.

(4) (அ) அந்த முன்பணத்தில் அசல் முழுமையும் திரும்பச் செலுத்தப்பட்டுவிட்ட பிறகு அதன் மேல் வட்டி ஒவ்வொரு மாதத்திற்கும் அல்லது பாகத்திற்கும் அசலின் மேல் 1/5 சதவிகிதம் பணம் பெற்றது முதல் அசல் முழுமையும் திரும்பச் செலுத்தப்பட்டது வரையான காலத்திற்குச் செலுத்தப்பட வேண்டும்.

ஆயினும், முகம்மதியச் சந்தாதாரர்களை அவர்கள் நிதியில் வைக்கும் தொகைக்கு வட்டியில்லாததால், அவர்களுக்கு நிதியிலிருந்து அளிக்கப்பட்ட முன்பணங்களுக்கு வட்டிக்காகக் கூடுதலான தவணைகள் எவையும் ஒன்றும் செலுத்தும்படிக் கேட்கக் கூடாது.

(ஆ) சாதாரணமாக, அசல் முழுமையும் செலுத்திவிடப்பட்ட பிறகு ஒரே தவணையில் அடுத்த மாதத்தில் வட்டி வசூலிக்கப்படும். ஆனால், (அ) கூற்றில் சொல்லப்பட்ட காலம் 20 மாதங்களுக்கு அதிகமானால், சந்தாதாரர் அவ்வாறு விரும்பினால், வட்டியை இரண்டு சமமான மாதாந்தரத் தவணைகளில் வசூலிக்கலாம். திரும்ப வசூலிக்கும் முறை (2) ஆம் உள் விதியில் சொல்லப்பட்டுள்ளது. எட்டு அணுக்களும் அல்லது அதற்கு மேற்பட்டும் அடுத்த உயர்வு ரூபாய்க்குக் கணக்கிடப்பட்டு செலுத்தப்படும் தொகைகள் அடுத்த ரூபாய்க்குச் சரி செய்யப்பட வேண்டும்.

(5) ஒரு சந்தாதாரருக்கு ஒரு முன்பணம் அளிக்கப்பட்டு அவர் அந்தத் தொகையைப் பெற்றுக் கொண்ட பிறகு திரும்பச் செலுத்துதல் முடிவடையுமுன் அந்த முன்பணம் தள்ளிவிடப்பட்டால் வாங்கிய தொகையின் மொத்தத்தை அல்லது மீதமுள்ளதை உடனடியாக, 11-ஆம் விதியில் சொல்லியுள்ளபடி வட்டியுடன் சந்தாதார் நிதிக்குத் திருப்பிச் செலுத்த வேண்டும் அல்லது அவர் அவ்வாறு செய்யத் தவறினால், கணக்கு அலுவலரால் சந்தாதாரரின் ஊதியங்களிலிருந்து அல்லது அரசாங்கம் உத்தரவிடக் கூடிய பிற முறையிலோ தவணைகளிலோ வசூலிக்க ஆணையிட வேண்டும்.

ஆயினும், தங்கள் வைப்புத் தொகைகளுக்கு வட்டியில்லாத முகம்மதிய சந்தாதாரர்களை யாதொரு வட்டியும் செலுத்தச் சொல்லக் கூடாது.

(i) இந்த விதியின் கீழ் வசூலிக்கப்படும் தொகைகள் அவ்வப்போது நிதியில் சந்தாதாரரின் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

**15.** ஒரு சந்தாதாரர் தம் பணியை விட்டு விலகும்போது நிதியில் அவர் வரவில் உள்ள பணம் அவருக்குச் செலுத்தப்படத்தக்கதாகும்.

ஆயினும், ஒரு சந்தாதாரர் வேலையிலிருந்து விலக்கப்பட்டாலும், அல்லது நீக்கப்பட்டாலும் அல்லது கட்டாயமாகப் பணியிலிருந்து ஓய்வில் செல்லுமாறு உத்தரவிடப்பட்டாலும், நிதியில் அவருடைய வரவில் உள்ள பணம் ;

(அ) அவர் அவ்வாறு வேலையிலிருந்து விலக்கப்பட்டதற்கு, நீக்கப்பட்டதற்கு அல்லது கட்டாய ஓய்விற்கு எதிர்த்து மேல் முறையீடு செய்திருந்தால் அந்த மேல்முறையீடு முடிவடைகிற வரையிலும் அல்லது அவர் எழுத்து மூலமாகத் தமது மேல்முறையீட்டைத் திரும்பப் பெற்றுக் கொண்டதாகத் தெரிவித்தாலன்றியும்,

(ஆ) அவர் அவ்வாறு மேல்முறையீடு ஒன்றும் செய்யாதிருந்தால், மேல்முறையீடு செய்வதற்கு நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவாகிற வரையிலும் அல்லது அவர் தாம் ஒரு மேல்முறையீடு செய்யப் போவதில்லை என்று எழுத்து மூலமாகச் சொன்னாலுமன்றியும்,

மேலும், வேலையிலிருந்து விலக்கப்பட்ட, நீக்கப்பட்ட அல்லது கட்டாயமாய் ஓய்வெடுக்கும்படி செய்யப்பட்ட ஒரு சந்தாதாரர் மறுபடியும் வேலையில் திரும்ப எடுத்துக் கொள்ளப்பட்டால் அப்படி அவரைத் திரும்ப வேலையில் எடுத்துக்கொள்ளும்படி உத்தரவிடும் அதிகாரி அவ்வாறு கேட்பாரானால் அந்த நிதியிலிருந்து அவருக்கு இவ்விதியின் கீழ்ச் செலுத்தப்பட்ட தொகையை அதன் மேல் 11-ஆம் விதியில் சொல்லப்பட்டுள்ள விகிதத்தில் ஏற்பட்ட வட்டியுடன் 22-ஆம் விதியின் ஏற்பாட்டில் சொல்லப்பட்டுள்ள முறையில் திருப்பிச் செலுத்த வேண்டும். அப்படித் திருப்பிச் செலுத்தப்பட்ட பணம் அவருடைய கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும். சந்தாக்களும் அதன் வட்டியுடன் கூடின பாகத்தையும் அரசாங்க உதவித் தொகையும் அதன் வட்டியும் கூடின பாகத்தையும் 8 ஆம் விதியில் ஏற்பாடுகளின்படி கணக்கில் வைக்கவேண்டும்.

16. (1) உள்விதிகள் (2), (3) இல் உள்ள ஏற்பாடுகளுக்குட்பட்டு நிதியில் சந்தாதாரரின் வரவில் உள்ள தொகைகள் அவர் ஓய்வில் சென்றபோது அவருக்கும் அல்லது அவர் பணியில் உள்ளபோதே இறந்துவிட்டால் அவருடைய வழியுரிமையினர்களுக்கும் 23 ஆம் விதியின் ஏற்பாடுகளுக்கு ஏறபச் செலுத்த வேண்டும்.

(2) அந்த அரசாங்க ஊழியரால் செய்யப்பட்ட பணி ஒரு ஏற்கப்பட்ட பணியாகக் கருதப்படாவிட்டால், தகுதியுள்ள அதிகாரி, அரசாங்க உதவித் தொகையையும் அதற்கு வட்டியை

யும் காட்டும் அவர் வரவில் நிதியிலுள்ள பணத்திலிருந்து முழுமையும் அல்லது யாதொரு பாகத்தையும் எழுத்து மூலமாகப் பதிவு செய்யப்படும் காரணங்களுக்காக நிறுத்திக் கொள்ளலாம். அப்படி நிறுத்திக் கொள்ளப்பட்ட பணம் அரசாங்கத்திற்கு வரவு வைக்கப்பட வேண்டும்.

(3) நிதியில் ஒரு சந்தாதாரரின் வரவில் உள்ள பணம் செலுத்தப்பட வேண்டி வரும்போது அப் பணத்திலிருந்து அரசாங்கம் அவ்வாறு ஆணையிட்டால் அந்தச் சந்தாதாரரால் ஏற்பட்ட பொறுப்பின் கீழ் அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை ஏதேனுமிருந்தால், அதைக் கழித்து அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டும். ஆனால் எப்படியும், அப்படிக் கழிக்கப்படும் தொகை 10, 11 விதிகளின் கீழ் சந்தாதாரருடைய வரவுக்கு வைக்கப்பட்ட உதவித் தொகையும், அதன் மேல் வட்டியும் சேர்ந்த மொத்தத் தொகைக்கு அதிகப்படக்கூடாது.

17. ஒரு அரசாங்கப் பணியாளர் வேலையிலிருந்து விலகிவிட்டாலும் அல்லது விடுவிக்கப்பட்டு அல்லது நீக்கப்பட்டு அல்லது விலக்கப்பட்டாலும் அரசாங்கம் வேறு விதமாக உத்தரவிட்டாலன்றி அந்த நிதியிலிருந்து அவர் வரவில் உள்ள சந்தாக்களும் அவைகளின் வட்டியும் மட்டும் கொடுக்கப்படும். அவர் கணக்கில் வரவில் உள்ள அரசாங்க உதவித் தொகையையும், அதன் மேல் கூடிய வட்டியும் திரும்பப் பெறப்பட்டு அரசாங்கத்திற்கு வரவு வைக்கப்படும்.

18. (1) ஒரு சந்தாதாரர், அவர் நிதிக்குச் சேர்ந்தவுடன் கணக்கு அலுவலருக்குத் தம் பெயரில் அந்த நிதியில் உள்ள பணம் செலுத்தப்படுவதற்கு உரியதாவதற்கு முன்னால் அல்லது செலுத்தப்பட வேண்டியது செலுத்தப்படுவதற்கு முன்னால் தாம் இறக்க நேர்ந்தால் அந்தப் பணத்தைப் பெறுவதற்கு உரிமையளித்து ஒன்று அல்லது மேற்பட்டவர்களை நியமனம் செய்து அனுப்ப வேண்டும்.

ஆயினும், அந்த நியமனம் செய்யப்படும்போது சந்தாதாரர் ஒரு குடும்பத்தையுடையவராயிருந்தால் அந்த நியமனம் அவர் குடும்பத்தின் உறுப்பினர்களல்லாத வேறு யார் பேரிலும் இருக்கக் கூடாது.

(2) ஒரு சந்தாதாரர் உள்விதி (1)-இன் கீழ் ஒருவருக்கு மேற்பட்டவர்களை நியமித்தால் அவர் அந்த நியமனத்தில் நியமிக்கப்பட்டவர்களில் ஒவ்வொருவருக்கும் நிதியில் தம் வரவில் உள்ள பணத்தில் என்ன பாகம் அல்லது பணம் செலுத்தப்பட வேண்டும் என்று குறிப்பாகச் சொல்ல வேண்டும்.

(3) ஒவ்வொரு நியமனமும் முதல் அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள படிவங்களில் சந்தாப்பத்திற்கேற்றவாறு ஒரு படிவத்தில் இருக்க வேண்டும்.

(4) ஒரு சந்தாதாரர் எக்காலத்திலும் கணக்கு அலுவலருக்கு எழுத்து மூலமான ஒரு அறிவிப்பையனுப்பி ஒரு நியமனத்தை ரத்து செய்து விடலாம்.

ஆயினும், அந்தச் சந்தாதாரர் அந்த மாதிரி அறிவிப்புடன் இந்த விதியின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செய்யப்பட்ட ஒரு புதிய நியமனத்தையும் அனுப்ப வேண்டும்.

(5) ஒரு சந்தாதாரர் ஒரு நியமனத்தில் அடியிற் கண்டபடி ஏற்பாடுகள் செய்யலாம்.

(அ) குறிப்பிட்ட நியமிக்கப்பட்டவர் எவரைப் பற்றியேனும் அவர் சந்தாதாரருக்கு முன்னால் இறந்து விட்டால் அவருக்கு அளிக்கப்பட்ட உரிமை அந்த நியமனத்தில் குறிப்பிடக்கூடிய வேறு ஒருவருக்குச் செல்ல வேண்டுமென்றும்,

(ஆ) அதில் குறிக்கப்பட்டுள்ள ஒரு எதிர்பாராத நிகழ்ச்சி ஏற்பட்டால் அந்த நியமனம் சட்டப்படி செல்லாது என்றும், ஆயினும் அப்படி நியமிக்கும்போது அந்த சந்தாதாரருக்குக் குடும்பம் இல்லாதிருந்தால், அவர் அந்த நியமனத்தில் தாம் பின்னால் ஒரு குடும்பத்தை ஏற்படுத்திக் கொள்ள நேரிட்டால் அந்த நியமனம் செல்லாது என்றும் அவர் அதில் சொல்லி வைக்க வேண்டும்.

(6) (ஆ) உள்விதியின் (5) இன் (ஆ) கூற்றின் கீழ் நியமனத்தில் தனி ஏற்பாடு செய்யாமல் நியமிக்கப்பட்ட ஒருவரின் இறப்பு நேர்ந்த உடனேயும் அல்லது (5) ஆம் உள்விதி (ஆ) கூறு அல்லது அதற்குள்ள ஏற்பாட்டின்படி நியமனம் செல்லாததாகக் கூடிய யாதொரு நிகழ்ச்சி நேர்ந்த உடனேயும் அந்தச் சந்தாதாரர் அந்த நியமனத்தை ரத்து செய்து எழுத்து மூலமான ஒரு அறிவிப்

யையும் அத்துடன் இந்த விதியின் ஏற்பாடுகளுக்கு இணங்க அத்துடன் ஒரு புதிய நியமனத்தையும் சேர்த்து கணக்கு அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

(7) செய்யப்பட்ட ஒவ்வொரு நியமனமும் சந்தாதாரரால் ரத்து செய்யும் ஒவ்வொரு அறிவிப்பும் அவை சட்டப்படி செல்லத் தக்க அளவிற்கு அது கணக்கு அலுவலரிடம் சேர்ந்த தேதியில் அமலுக்கு வரும்.

19. சந்தாதாரர் தமது மாதாந்திர சந்தாத் தொகையை நிர்ணயிப்பதை ஒவ்வொரு ஆண்டும்,

(அ) அவர் முந்திய ஆண்டின் மார்ச் 31 ஆம் தேதி பணியில் இருந்திருந்தால் அவர் அதற்காகத் தம்முடைய அந்த மாதச் சம்பளப் பட்டியில் கழிவு செய்வதன் மூலமும்,

(ஆ) அவர் முந்திய ஆண்டின் மார்ச்சு மாதம் 31 ஆம் தேதி விடுப்பில் இருந்து அந்த மாதிரி விடுப்பில் உள்ளபோது சந்தா செலுத்த விரும்பாவிட்டாலும் அல்லது அந்தத் தேதியில் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருந்தாலும் அவர் பணிக்குத் திரும்பி வந்த பிறகு இதற்காகத் தம் முதல் சம்பளப் பட்டியில் கழிவு செய்வதாலும்,

(இ) 6 ஆம் விதியின் கீழ் அவர் நிதியில் சேரத் தகுதி பெறும் போது அவர் நிதியில் சேரும் மாதத்திற்குச் சம்பளப் பட்டியிலிருந்து கழிவு செய்வதன் மூலமாகவும்,

(ஈ) முந்திய ஆண்டின் மார்ச் மாதம் 31 ஆம் தேதி அவர் விடுப்பிலிருந்து பிறகும் விடுப்பில் தொடர்ந்து இருந்து அத்தகைய விடுப்புக் காலத்தில் சந்தா செலுத்த விரும்பினால் அவர் அந்த மாதத்திய தம் சம்பளப் பட்டியிலிருந்து இதற்காகக் கழிவு செய்யுமாறு செய்வதாலும்,

(உ) முந்திய ஆண்டின் மார்ச் மாதம் 31 ஆம் தேதியன்று அவர் வெளிப்பணியிலிருந்தால் நடப்பு ஆண்டின் ஏப்ரல் மாதத்திற்குச் சந்தாவுக்காக அவரால் கருவூலத்தில் செலுத்தப்பட்ட தொகையாலும்,

(ஊ) அவருடைய ஊதியங்கள் மாறக் கூடியவைகளாயிருந்தால் அரசாங்கம் ஆணையிடக் கூடிய முறையிலும்,

தெரியப்படுத்த வேண்டும்.

அப்படி நிர்ணயிக்கப்பட்ட சந்தாத் தொகை அந்த ஆண்டு முழுமையும் மாறுமல் இருக்கும்.

ஆயினும், ஒரு சந்தாதாரர் ஒரு மாதத்தின் ஒரு பகுதியில் பணியிலிருந்து மீதி நாட்களில் விடுப்பிலிருந்தால் அவர் விடுப்பில் உள்ளபோது நிதிக்குச் சந்தா செலுத்த விரும்பாவிட்டால் செலுத்தப்பட வேண்டிய சந்தாத் தொகை அந்த மாதத்தில் பணியில் செலவிடப்பட்ட நாட்களின் எண்ணிக்கை வீதப்படியிருக்க வேண்டும்.

மேலும் ஒரு சந்தாதாரர் அவ்வாறு கணக்கு அலுவலரால் கேட்கப்பட்டால் நிதியிலிருந்து தமது ஈட்டுறுதிக்குப் பணம் செலுத்துவதற்காக ஒரு ஆண்டிற்குள் எக் காலத்திலும் தம் சந்தா விகிதத்தை அதிகப்படுத்தலாம்.

*மேலும் 1957 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரையில், ஒரு சந்தாதாரர், மார்ச் மாதத்திற்குத் தம் சம்பளப் பட்டியில் செய்யக் கூடிய யாதொரு மாறுதலுக்கு மேல் அத்துடன் ஒரு ஆண்டிற்குள் எக்காலத்திலும் ஒரு முறை தமது சந்தாவின் வீதத்தை அதிகப்படுத்தலாம்.

20. ஒரு சந்தாதாரர் வெளிப் பணிக்கு. மாற்றப்பட்டபோது அல்லது இந்தியாவிற்கு வெளியே மறு வேலைக்கு அனுப்பப்பட்டபோது அவர் அவ்வாறு மாற்றப்படாமலும் அல்லது மறு வேலைக்கு அனுப்பப்படாமலுமிருந்தால் எந்த முறையிலிருப்பாரோ அந்த முறையில் நிதியின் விதிகளுக்குக் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

21. (1) ஊதியங்கள் இந்தியாவில் ஒரு அரசாங்கக் கருவூலத்திலிருந்து பெறப்படும்போது இந்த ஊதியங்களிலிருந்தே சந்தா தொகைகளும், முன்பணத்தின் அசலும் வட்டியும் வசூலிக்கப்படும்.

(2) ஊதியங்கள் வேறு எந்த மூலமாகப் பெறப்பட்டாலும் சந்தாதாரர் அவர் செலுத்த வேண்டியவைகளை மாதந்தோறும் கணக்கு அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

---

*அ.ஆ. பலவகை எண் 1051 நிதி (உ.வ.,ஓ.நி.) துறை 20—6—1955 தேதியிட்டது.

22. ஒரு சந்தாதாரர்,

(அ) ஓய்வு பெறுவதற்கு ஆயத்தமாய் விடுப்பில் சென்று விட்டபோதும், அல்லது அவர் ஒரு நீண்ட கால விடுமுறையுள்ள ஒரு துறையில் வேலையிலிருந்து ஓய்வு பெறுவதற்கு ஆயத்தமான விடுப்புடன் சேர்ந்த நீண்டகால விடுமுறையில் சென்றுவிட்ட போதும், அல்லது

(ஆ) விடுப்பில் உள்ளபோது, ஓய்வு பெற அனுமதிக்கப் பட்டிருந்தபோது அல்லது ஒரு மருத்துவ அதிகாரியால் மேற் கொண்டு பணிக்குத் தகுதி அற்றவர் என்று சொல்லப்பட்டிருந்த போது அவருடைய வரவாக நிதியில் உள்ள சந்தாப் பணமும், அதன் வட்டியும் அவரால் கணக்கு அலுவலருக்கு அது பற்றிச் செய்யப்படும் விண்ணப்பத்தின்பேரில் அந்த சந்தாதாரருக்குச் செலுத்தப்படத் தக்கதாகும்.

ஆயினும், சந்தாதாரர் பணிக்குத் திரும்பி வந்தால், அவர் நிதிக்குத் தொகையை அரசாங்கம் கட்டளையிட்டால் திருப்பிச் செலுத்த வேண்டும். இந்த விதியையொட்டி அவருக்குச் செலுத்தப்பட்ட தொகை மொத்தத்தையும் அல்லது பாகத்தையும் 11 ஆம் விதியில் சொல்லிய விதத்தில் அதற்கான வட்டியையும் பணமாகவும் அல்லது அரசுக் கடன் பத்திரங்களாகவும் அல்லது ஒரு பகுதி ரொக்கமாகவும் ஒரு பகுதி அரசுக் கடன் பத்திரங்கள் மூலமாகவும் தவணைகளில் அல்லது வேறுவிதமாக, அவரின் ஊதியத்திலிருந்து பிடித்தம் செய்வதின் மூலமாக அல்லது வேறு விதமாக அல்லது அரசாங்கம் உத்தரவிடுகிறபடி அவருடைய கணக்கில் வரவு வைக்க அவர் திருப்பிச் செலுத்த வேண்டும்.

23. 16 ஆம் விதியின் (2), (3) உள் விதிகளின் அல்லது 17 ஆம் விதியின் கீழ் ஏதாவது கழிவுக்குட்பட்டு, ஒரு சந்தாதாரர் தம் வரவில் உள்ள பணம் செலுத்தப்படுவதற்குரியதான போது அல்லது செலுத்தப்படுவதற்குரியதாகி ஆனால் செலுத்தப் படுவதற்கு முன்னால் அவர் இறந்துவிட்டதின்பேரில்,

அந்தச் சந்தாதாரர் ஒரு குடும்பத்தை விட்டுச் சென்றபோது,

(அ) 18 ஆம் விதியின் ஏற்பாடுகளுக்கிணங்க சந்தாதாரரால் தம் குடும்பத்தில் ஒரு உறுப்பினர் அல்லது உறுப்பினர்களின் பேரில் செய்யப்பட்ட நியமனம் அமுலிலிருந்தால் அந்த நிதியில்

அவர் வரவில் அந்த நியமனத்துக்குச் சம்பந்தப்பட்டதாகவுள்ள தொகை அல்லது பாகம் அந்த நியமனத்தில் குறிக்கப்பட்டுள்ள விதத்தில் அவரால் நியமிக்கப்பட்டவர் அல்லது நியமிக்கப் பட்டவர்களுக்குச் செலுத்தப்படத் தக்கதாகும்.

(ஆ) அவ்வாறு சந்தாதாரரின் குடும்பத்தின் ஒரு உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள் பேரில் அத்தகைய நியமனம் இல்லாதிருந்தாலும் அல்லது அத்தகைய நியமனம், நிதியில் அவர் வரவில் உள்ள தொகையில் ஒரு பாகத்திற்கு மட்டும் பொருந்தி யிருந்தாலும், அந்த நியமனம் சம்பந்தப்படாத மொத்தத் தொகையும் அல்லது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அதன் பாகமும், அவர் குடும்பத்தின் உறுப்பினர் அல்லது உறுப்பினர்களல்லாத வேறு எவர் பேரிலுமுள்ளதாகத் தோன்றும் நியமனத்தின் பொருள் எப்படியிருந்தாலும் அவருடைய குடும்பத்தின் உறுப்பினர்களுக்குச் சம பாகங்களில் செலுத்தப்படுவதற்குரிய தாகும்.

ஆனல், அடியிற் கண்டவர்களுக்கு எந்தப் பாகமும் அளிக்கப் பட மாட்டாது—

(1) சட்டப்படி உரிய வயது வந்த ஆண்மக்கள்.

(2) இறந்துபோன ஒரு மகனின் சட்டப்படி உரிய வயது வந்த ஆண் மக்கள்.

(3) கணவன்மார் உயிருடன் உள்ள திருமணமான பெண் மக்கள்.

(4) இறந்துபோன ஒரு மகனின் திருமணமாகிக் கணவன் மார் உயிருடன் இருக்கும் பெண்மக்கள் (1), (2), (3), (4) ஆம் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டவர்கள் தவிர அந்தக் குடும்பத்தின் வேறு உறுப்பினர்கள் எவராவது இருந்தால் அவர்கள்.

ஆனல் இறந்துபோன ஒரு மகனுடைய விதவை அல்லது விதவைகளும் குழந்தையும் அல்லது குழந்தைகளும், அந்த மகன் சந்தாதாரருக்குப் பின் இருந்திருந்து (1) ஆவது கூற்றின் முதல் ஏற்பாட்டிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டிருந்தால் என்ன பாகம் பெற்றிருப்பானே அதை மட்டும் அவர்களுக்குள் சம பாகங்களாகப் பெற்றுக் கொள்வார்கள்.

குறிப்பு.—1. ஒரு சந்தாதாரரின் குடும்பத்தின் ஒரு உறுப்பினருக்கு இந்த விதிகளில் செலுத்தப்பட வேண்டிய யாதொரு தொகையும், 1925 ஆம் ஆண்டு வருங்காலச் சேம நிதிகள் சட்டத்தில் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் அந்த உறுப்பினருக்குச் சட்டப்படி உரிமையுடையதாகும்.

2. சந்தாதாரர், ஒரு குடும்பத்தை விட்டுச் செல்லாதபோது 18 ஆம் விதிக்கு இணங்க அவர் எவரேனும் ஒருவரை அல்லது பலரை நியமனம் செய்து அந்நியமனம் அமுலில் இருந்தால், நிதியில் அவர் வரவில் உள்ள தொகை அல்லது அந்த நியமனத்திற்குரிய அதன் பாகம் நியமிக்கப்பட்டவர் அல்லது நியமிக்கப்பட்டவர்களுக்கு அந்த நியமனத்தில் குறிக்கப்பட்டுள்ள விகிதாசாரத்தில் செலுத்தப்பட வேண்டியதாகும்.

3. நியமிக்கப்பட்ட ஒருவர் 1925 ஆம் ஆண்டு வருங்காலச் சேம நிதியின் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (இ) கூற்றில் விளக்கப்பட்டுள்ளபடி சந்தாதாரரின் ஆதரவிலிருந்தவராயிருந்தால், அந்தத் தொகை அந்தச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் நியமிக்கப்பட்டவருக்கு சட்டப்படி உரிமையுடையதாகும்.

4. சந்தாதாரர் ஒரு குடும்பத்தை விட்டுச் செல்லாதிருந்தால் அவர் 18 ஆம் விதியின் கீழ் செய்த நியமனம் எதுவும் அமுலிலில்லாவிட்டாலும் அல்லது அப்படிப்பட்ட நியமனம் நிதியில் அவர் வரவில் உள்ள தொகையின் ஒரு பாகத்திற்கு மட்டும் சம்பந்தப்பட்டிருந்தாலும், 1925-ம் ஆண்டு வருங்காலச் சேம நிதி திட்டத்தின் 4-ம் பிரிவின் (1) ஆவது உள்பிரிவின் (இ) கூற்றின் (ii) ஆவது உள் கூற்றிலும் (ஆ) உள் கூற்றிலும் உள்ள சம்பந்தப்பட்ட ஏற்பாடுகள், அந்த மொத்தத் தொகைக்கும் அல்லது அந்த நியமனம் சம்பந்தப்படாத பாகத்திற்கும் பொருந்தும்.

24. (1) நிதியில் ஒரு சந்தாதாரரின் வரவில் உள்ள தொகை அல்லது 16 ஆம் விதியின் உள்விதி (2) இன் கீழ் அல்லது 17 ஆம் விதியின் கீழ் யாதொரு கழிவு போக மீதமிருந்து, அது செலுத்தப்பட வேண்டி வந்தால் அந்த விதியின் கீழ் அவ்வாறு கழிவு செய்வதற்கு ஒரு உத்தரவுமில்லாவிட்டால் கழிவு ஒன்றும் செய்யப்படவில்லை என்று தாம் மனநிறைவு கொண்டு 1925 ஆம் ஆண்டு வருங்காலச் சேம நிதிச் சட்டத்தின் 4 ஆம் பிரிவில் சொல்லியுள்ளபடி அந்தத் தொகையைக் கொடுக்க வேண்டியது கணக்கு அலுவலரின் கடமையாகும்.

(2) இந்த விதிகளின் கீழ் யாதொரு தொகை கொடுக்கப்பட வேண்டிய ஈட்டுறுதி மறு உரிமைப்படுத்தப்பட வேண்டிய அல்லது ஒப்படைக்கப்பட வேண்டிய ஒருவர் ஒரு பைத்தியக்காராயிருந்தால், அவர் சொத்துக்கு அதற்காக 1912 ஆம் ஆண்டு இந்தியப் பைத்தியச் சட்டத்தின் கீழ் ஒரு மேலாளர் நியமிக்கப்பட்டிருந்தால் அந்தப் பணம் செலுத்தப்படல் அல்லது மறு உரிமைப் படுத்தல் அல்லது ஒப்படைப்புச் செய்தல் ஆகியவற்றை அந்தப் பைத்தியக்காரருக்குச் செய்யாமல் அந்த மேலாளருக்குச் செய்ய வேண்டும்.

(3) இந்த விதியின் கீழ் பணம் செலுத்தப்பட உரிமை கோர விரும்பும் எவரொருவரும் அதற்காகக் கணக்கு அலுவலருக்கு ஒரு எழுத்து மூலமான விண்ணப்பம் அனுப்ப வேண்டும். திரும்பப் பெறப்படும் பணங்கள் இந்தியாவில் மட்டும்தான் கொடுக்கப்படும். அந்தப் பணங்கள் கொடுக்கப்பட வேண்டியவர்கள் அவைகளை இந்தியாவில் பெற்றுக் கொள்ளத் தமது சொந்த ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

குறிப்பு—1. ஒரு சந்தாதாரரின் வரவில் உள்ள பணம் 16, 22 அல்லது 23 ஆம் விதிகளின் கீழ் செலுத்தப்பட வேண்டி வந்த போது கணக்கு அலுவலர் ஒரு சந்தாதாரரின் வரவில் உள்ள பணத்தில், தகராறு அல்லது ஐயப்பாடு இல்லாத பாகத்தை உடனடியாகக் கொடுப்பதற்கு அதிகாரமளிந்து, மீதியுள்ளதை அதற்குப் பின் இயன்ற அளவு விரைவாகச் சரிக்கட்ட வேண்டும்.

25. இந்தியாவில் ஒரு சந்தாவை ஊதியங்களிலிருந்து கழிவால் அல்லது பணமாகச் செலுத்தும்போது, ஒரு சந்தாதாரர் அந்த நிதியில் கணக்கு அலுவலரால் தமக்குத் தெரிவிக்கப்பட்ட தம்முடைய கணக்குகளின் எண்ணைச் சொல்ல வேண்டும். அந்த எண்ணில் ஏற்படும் எந்த மாறுதல்களையும் அவ்வாறே கணக்கு அலுவலர் சந்தாதாரருக்குச் தெரிவிக்க வேண்டும்.

26. (1) ஒவ்வொரு ஆண்டிலும் மார்ச் மாதம் 31 ஆம் தேதிக்குப் பிறகு, கூடிய விரைவில் கணக்கு அலுவலர் ஒவ்வொரு சந்தாதாரருக்கும் ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்தபடி முன் இருப்பு அல்லது அந்த ஆண்டில் வரவு வைக்கப்பட்டது அல்லது பற்று வைக்கப்பட்டது, அந்த ஆண்டின் மார்ச் மாதம் 31 ஆம் தேதியிலிருந்தபடி வரவு வைக்கப்பட்ட வட்டித் தொகை, அந்தத் தேதி முடிவில் உள்ள இருப்பு ஆகியவற்றைக் காட்டும், அவர் நிதிச்

கணக்கின் அறிக்கையை அனுப்ப வேண்டும். கணக்கு அலுவலர் அந்தக் கணக்கு அறிக்கையோடு சந்தாதாரரை அடியிற் கண்ட தகவல்களைக் கேட்டுச் சேர்த்து அனுப்ப வேண்டும்.

(அ) 18 ஆம் விதியின் கீழ் செய்யப்பட்ட யாதொரு நியமனத்தில் யாதொரு மாறுதல் செய்ய விரும்புகிறாரா?

(இ) அவர் ஒரு குடும்பத்தை ஏற்படுத்திக் கொண்டாரா; [18 ஆம் விதியின் (1) ஆம் உள் விதியின் ஏற்பாட்டின் கீழ் தமது குடும்பத்தின் ஒரு உறுப்பினர்பேரில் நியமனம் செய்யாத சந்தாதாரர்களுக்கு மட்டும்]

(2) சந்தாதாரர்கள், அந்த ஆண்டு அறிக்கை சரி தானா என்பதைப் பற்றித் தாமே மனநிறைவு பெற வேண்டும். கணக்கு அலுவலருக்கு அந்த அறிக்கை வந்து சேர்ந்த தேதியிலிருந்து ஆறுமாதங்களுக்குள் பிழைகள் தெரிவிக்கப்பட வேண்டும்.

(3) ஒரு சந்தாதார் கோரினல் கணக்கு அலுவலர் கணக்குகள் எழுதப்பட்டுள்ள கடைசி மாதத்தின் முடிவில் அந்த நிதியில் அவருடைய வரவில் உள்ள மொத்தத் தொகையை, ஒரு ஆண்டில் ஒரு முறை மட்டும், ஒரு முறைக்கு அதிகப்படாமல் தெரியப்படுத்த வேண்டும்.

## III. ஈட்டுறுதி.

27. ஒரு அரசாங்கப் பணியாளர் இந்த நிதிக்கு அவர் ஒரு உறுப்பினராகச் சேர்ந்த தேதியிலிருந்து ஒரு முழு ஆண்டுக்குள்ளும் அல்லது ஏற்கனவே 1958 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதிய அரசாங்கத்தின் பணியிலிருந்துள்ள ஒருவரைப் பொருத்தவரை அவர் இந்த விதியின் கீழ் வர விரும்பினல், அவர் இந்த நிதியில் சேர விரும்பிய தேதியிலிருந்து ஒரு முழு ஆண்டிற்குள்ளும் தமது வாழ்வை அஞ்சல் துறை வாழ்வு ஈட்டுறுதியில் அல்லது யாதொரு வேறு ஈட்டுறுதி நிறுமத்தில் கீழே சொல்லப்பட்டுள்ள குறுமத் தொகைக்கு ஈட்டுறுதி பெற்று அதனை அமுலிலும் வில்லங்கமேற்படுத்தாமலும் வைத்திருக்க வேண்டும்.

| | ஈட்டுறுதியின் குறுமத் தொகை. |
|---|---|
| | ரூபாய். |
| 1. அவர் சம்பளம் 45 ரூபாய்க்கு குறைவாயிருந்தால் | 500 |

ஈட்டுறுதியின் குறுமத் தொகை.

| | ரூபாய் |
|---|---|
| 2. அவர் சம்பளம் 45 ரூபாய்களும் அதற்கு மேலும் ஆனால் 90 ரூபாய்களுக்கு அதிகமல்லாத போதும் | 1,000 |
| 3. அவர் சம்பளம் 90 ரூபாய்க்கு அதிகப் பட்டு ஆனால் 150 ரூபாய்களுக்கு அதிகப் படாமலிருந்தால் | 2,000 |
| 4. அவர் சம்பளம் 150 ரூபாய் களுக்கு அதிகப்பட்டு ஆனால் 250 ரூபாய்க்கு அதிகப்படாம லிருந்தால் | 3,000 |
| 5. அவருடைய சம்பளம் 250 ரூபாய் களுக்கு அதிகப்பட்டால் | 5,000 |

ஆயினும், ஒரு அரசாங்கப் பணியாளர் தாம் ஏற்கனவே மேலே குறிப்பிடப்பட்டுள்ள குறுமத் தொகைக்கு ஒரு ஈட்டுறுதி எடுத்திருப்பதாகவும் அது வில்லங்கமில்லாமல் இருப்பதாயும் தம் அலுவலகத் தலைவர் மனநிறைவு கொள்ளும்படி மெய்ப்பித்தால் அவர் இந்த விதியின் கீழ் ஒரு புதிய ஈட்டுறுதியை எடுக்கும்படி சொல்லப்படமாட்டார்.

சொல்லப்பட்ட விதிகளில் 27 ஆம் விதியின் காப்பு வாசகத்தின் பின்னும் I ஆவது குறிப்புக்கு முன்னும் இடையே அடியிற்கண்ட காப்பு வாசகம் நுழைக்கப்படும்; அதாவது :—

அ. ஆ. பலவகை எண். 1107, நிதி (உ.வ.ஓ.நி.) துறை 27-8-1954-ம் தேதியிட்டது.

"மேலும், ஒரு அரசாங்கப் பணியாளர் ஒரு வாழ்வு ஈட்டுறுதிப் பத்திரம் எடுக்க, மேலே குறிப்பிடப்பட்டுள்ள கால வரம்புக்கு மேற்கொண்டு சட்டப்படி செல்லத் தக்க காரணங்களுக்கு அரசாங்கத்தால் காலம் நீடிக்க உத்தர விடலாம்."

*குறிப்பு.—ஒரு அரசாங்கப் பணியாளர் இந்த விதியின்கீழ் எடுக்கப்பட வேண்டிய ஈட்டுறுதிப் பத்திரம் வரையறுக்கப்பட்ட தொகை செலுத்துவதைக் கொண்ட முழு வாழ்வுப் பத்திரமாகவும் அல்லது வரையறுக்கப்பட்ட காலங்களுக்கு ஒரு கட்டணப் பத்திரமாகவும் இருக்கலாம். ஆனால் அந்த ஈட்டுறுதித் தொகை அவர் வயது, முதிர்வு அடைந்த தேதியில் அல்லது அதற்குப் பின் அல்லது அவருக்கு இறப்பு நேரிடும்போது, எது முந்தி நேரிடுகிறதோ, அப்பொழுது செலுத்தப்படக் கூடியதாயிருக்கவேண்டும். ஒரு அரசாங்கப் பணியாளரால். அவர் பணியில் உள்ள போதே செலுத்தப்படக் கூடிய ஈட்டுறுதிப் பத்திரம் இவ்விதிகளின் நோக்கங்களில் போதுமானதாக ஏற்றுக் கொள்ளப்படலாம். ஆனால் அந்தப் பத்திரத்திற்குப் பணம் (இந்த நிதியிலிருந்து அல்லாமல்) அவர் சொந்தத்திலிருந்து செலுத்தப்பட்டு, அவர் ஒரு அரசிதழ்ப் பதிவு பெறாதவராயிருந்தால் அந்தப் பத்திரத்தைத் தமது அலுவலகத் தலைவரிடமும், அரசிதழ்ப் பதிவு பெற்றவராயிருந்தால், அந்தத் துறையின் தலைவரிடமும் வைக்கவேண்டும். பத்திரம் முதிர்வடையும் போது அந்தப் பணத்தை ஈட்டுறுதி நிறுமத்திலிருந்து பெற்றுத் தமது உதவித் தொகையுள்ள வருங்காலச் சேமிப்பு—ஓய்வூதிய நிதிக்குச் செலுத்துவதாக ஆறும் அட்டவணையில் சொல்லப்பட்டுள்ளபடி படிவத்தில் ஒரு உறுதிமொழி கொடுக்க வேண்டும். அவ்வாறு அளிக்கப்பட்ட வாக்குறுதி, அரசிதழ்ப் பதிவு பெறாத அரசாங்கப் பணியாளர்கள் நிகழ்வில் அந்த அலுவலகத் தலைவரின் பொறுப்பிலும், அரசிதழ்ப் பதிவு பெற்ற அலுவலர்கள் நிகழ்வில் துறைத் தலைவர்களின் பொறுப்பிலும் வைக்கப்பட்டிருக்க வேண்டும். அந்த அரசாங்கப் பணியாளரின் வயது முதிர்வு தேதிக்கு முன் பத்திர முதிர்வுத் தொகை செலுத்தப்படுவதற்குரியதாகி, சில காரணங்களால் ஓய்வு பெறும் தேதிக்கு முன்னால் பெறப்படாதவற்றில், அந்தத் தொகை வருங்காலச் சேமிப்பு நிதிக்குச் செலுத்தப்படவேண்டும், என்று வற்புறுத்தாமல் பத்திரத்தை அந்த அரசாங்கப் பணியாளருக்குத் திருப்பி அனுப்பி விட வேண்டும். வருங்காலச் சேமிப்பு நிதிக்கு வரவு வைக்கப்பட்ட ஈட்டுறுதிப் பணத்திற்கு அந்த நிதிக்குச் செலுத்தப்படும் சந்தாத் தொகைகளைப் போலவே வட்டி உண்டு. ஈட்டுறுதி நிறுமத்திலிருந்து பெறப்பட்ட தொகை இந்த விதியின் கீழ்

---

*தலைமை அலுவலக 29—9—1954-ம் தேதியிட்ட F.O.C. எண் 4222-எஸ்.ஆர். 54 மேமெழுத்து 23—10—1954-ம் தேதியிட்ட பொ. சே.

சொல்லப்பட்டுள்ள குறுமத்திற்கு அதிகமாயிருந்தால் அந்த அரசாங்கப் பணியாளர் அவ்வாறு விரும்பினால், நிதிக்குத் தேவைப் படும் குறுமத்தொகையை மட்டும் செலுத்தி மீதியை அவர் வைத்துக் கொள்ளலாம். ஒரு அரசாங்கப் பணியாளர் தாம் பணியில் உள்ளபோதே அந்தப் பணத்தைப் பெற்றுக் கொண்டனரா என்பது 41 ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறையில் சரிபார்க்கப்படவேண்டும். அரசிதழ்ப் பதிவு பெறாத அரசாங்கப் பணியாளர்கள் விஷயத்தில் அந்த அலுவலகத் தலைவரும் அரசிதழ்ப் பதிவு பெற்ற அலுவலர்கள் விஷயத்தில் சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்களும் அந்த அரசாங்கப் பணி யாளர்களுக்குத் தற்காலிகமான அல்லது தனிப்பட்ட முன் பணங்கள் நிதியிலிருந்து கொடுக்க ஒப்பு அளிப்புத் தரும் போது, பத்திரத்தின் தொகை நிதியில் செலுத்தப்பட்ட பின்பு இறுதியில் கணக்குகள் முடிவு செய்யப்படும் வரையிலும் 27 ஆம் விதியில் குறிப்பிட்டுள்ளபடி நிதியில் குறுமத் தொகைகள், வருங்காலச் சேம நிதிக் கணக்கில் விட்டு வைக்கப்பட்டுள்ளன என்று அவர்கள் மனநிறைவு பெறல் வேண்டும். அம்மாதிரியுள்ளவற்றில் கணக்கு அலுவலர் அந்தக் குறுமத் தொகைகளுக்கும் குறையுமானால் அதிலிருந்து பணம் எடுப்பதை மறுத்துவிடலாம்.

நிதியிலிருந்து செலுத்தப்படும் ஒரு ஈட்டுறுதிப் பத்திரப் சந்தாதாரரின் வயது முதிர்வு அடையும் தேதிக்கு முன்னால் முதிர வடையும் நிகழ்வுகளில் நிதியிலிருந்து திரும்பப் பெறப்பட்ட தொகையும் அதன் குறைந்தபட்ச வட்டியும் அல்லது இந்த விதியின் கீழ் தேவைப்பட்ட குறைந்த பட்சத் தொகையும இவற்றில் 38 ஆம் விதியில் சொல்லப்பட்டுள்ளபடி எது அதிகமோ அந்தத் தொகையே நிதிக்கு வரவு வைக்கப்பட வேண்டிய தொகை யாகும்.

28. ஒரு அரசாங்கப் பணியாளரின் சம்பளம் நிலையான அல்லது பதிலியான பணி முறையில், 27 ஆம் விதியில் உள்ள அட்டவணையில் ஒரு உயர்ந்த தொகுதிக்குத் தன்னைக் கொண்டு வரும்படி மாறுதல் ஏற்பட்டால், அவ்வாறு சம்பளத்தில் மாறுதல் ஏற்பட்ட ஆறு மாதக் காலத்திற்குள், அவருடைய புதிய சம்பளத்திற்குத் தக்க வாறு அவரது மொத்த ஈட்டுறுதித் தொகை குறைந்தபட்ச அளவுக்கு வரும்படி கூடுதலான ஈட்டுறுதியெடுக்கவேண்டும் ஆயினும், நியமிக்கும் அதிகாரியின் கருத்தில் அந்த அரசாங்கப்

பணியாளரின் அதிகச் சம்பளம் உள்ள பதிலியாக வேலை பார்க்கும் பணியிடத்தைப் பெற்றிருக்கும் வாய்ப்புகளால் அவர் அதிகத் தொகைக்கான பத்திரத்துக்குப் பணம் செலுத்தக் கூடியதா யில்லாத அம்மாதிரியாயுள்ளவற்றில் கூடுதலான ஈட்டுறுதி யெடுக்கத் தேவையில்லை.

குறிப்பு.—விதிகள் 27, 28 வாழ்வு ஈட்டுறுதி சரியானதல்ல என்று முழுமையும் தள்ளிவிடப்பட்ட அரசாங்கப் பணி யாளருக்கும் 40 வயது முடிந்த ஒரு அரசாங்கப் பணியாளருக்கும் பொருந்தா. வாழ்வு சரியானதல்ல என்று ஈட்டுறுதி முழுமையும் தள்ளிவிடப்பட்ட ஒரு அரசாங்கப் பணியாளர் அவ்வாறாயினும் அவர் பெற்றிருக்கும் பணியிடத்து நியமன அதிகாரியால் உதவித் தொகையுடைய வருங்காலச் சேம ஓய்வு நிதித் திட்டத்திற்குச் சேர்க்கப்பட வேண்டும். நியமிக்கும் அதிகாரி அந்த அரசாங்கப் பணியாளரை அவர் ஈட்டுறுதிக்கு வாழ்வு சரியானதல்ல என்று தள்ளுபடி செய்த ஈட்டுறுதி நிறுமத்தின் கடிதத்தின் அடிப் படையின் பேரில் 27, 28 ஆம் விதிகள் அவருக்குப் பொருந்தா என்று தெரிவிக்க வேண்டும்.

28-A 27, 28 விதிகளின் ஏற்பாடுகளுக்கு ஒரு அரசாங்கப் பணி யாளர் இணங்கத் தவறுதல், அவரை தமிழ்நாடு சிவில் பணியாளர் கள் (வகைப்படுத்தல், கட்டுப்பாடு, மேல்முறையீடு) விதிகளின் கீழ் ஒழுங்குமுறை நடவடிக்கைக்கு உட்படுத்தும். இதற்காகச் சொல்லப்பட்ட அந்த விதிகளில் 15 ஆம் விதியின் கீழ்க் குறிப பிட்டுள்ள நடைமுறை கையாளப்பட வேண்டும்.

29. ஒரு உறுப்பினர் தம் விருப்பத்தில் ஆண்டுதோறும், நிதியில் தமது சந்தாக்களும் அவைகளின் வட்டிகளும் சேர்ந்த மொத்தத தொகையின் பாகத்திலிருந்து வாழ்வு ஈட்டுறுதித் தவணைகள் செலுத்துவதற்காகப் பணம் திரும்பப் பெறலாம். அரசாங்கம், உறுப்பினர்களுக்காக ஈட்டுறுதி நிறுமத்துக்குப் பணம் செலுத்தவும் அல்லது ஒரு பத்திரத்தை அமலில் வைத்திருக்கவும் நடவடிக்கை எடுக்காது.

30. இந்த விதிகளின் கீழ் எடுக்கப்பட்ட ஒரு பத்திரம் சந்தா தாரின் குடும்பத்தின் எவரேனுமொரு உறுப்பினருக்கு உரிமைப் படுத்தப்படலாம். ஆனால் வேறு எவருக்கும் நன்கொடையாக வாவது அல்லது பெறப்பட்ட மதிப்புத்தொகைக்காகவாவது உரிமைப்படுத்தக் கூடாது

30-A. 4 (1) (iii) விதியில் விளக்கப்பட்டுள்ளபடி குடும்ப மில்லாத ஒரு சந்தாதாரராகிய தமது ஈட்டுறுதி பத்திரத்துக்குத் தம் சொந்த ஆதாரங்களிலிருந்து பணம் செலுத்துபவர் ஈட்டுறுதி எடுத்தவுடன் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களை நியமிக்கலாம்; தமக்கு இறப்பு நேரிடின், ஈட்டுறுதியின் வரையறைகளின் கீழ் அந்தத் தொகை கொடுக்கப்படுவதற்குரிய தாவதற்கு முன்பும் அல்லது கொடுக்கப்படுவதற்குரியதாகி கொடுக்கப்படாததற்கு முன்பும்; வர வேண்டிய அத் தொகையைப் பெற்றுக் கொள்ளும் உரிமையை அவருக்கு அளிக்கலாம். ஆனால் அவர் பின்னால் ஒரு குடும்பத்தை ஏற்படுத்திக் கொண்டால் அவர் தமது குடும்பத்தில் ஒன்று அல்லது மேற்பட்ட உறுப்பினர்களின் பேரில் ஒரு புதிய நியமனம் செய்ய வேண்டும். சந்தாதார் ஒரு குடும்பத்தை ஏற்றுக் கொள்ள நேரிடின் அச் செய்தியை அலுவலகத் தலைவருக்கு அவர் அறிவிப்பதாக ஒரு வாக்குறுதியும் தர வேண்டும். அவ்வாறு செய்வதால் சரியான நியமனத்தை அவரிடமிருந்து பெற்றுப் பதிவு செய்து கொள்ளலாம்.

31. 32 முதல் 39 வரையுள்ள விதிகளின் நிபந்தனைக்குட் பட்டு—

(அ) நிதிக்குச் செலுத்தப்படும் சந்தாக்கள் முழுவதற்கு அல்லது பாகத்திற்குப் பதிலாக சந்தாதாரரின் விருப்பத்தில் ஒரு ஈட்டுறுதிப் பத்திரத்துக்குப் பணம் செலுத்தலாம்;

(ஆ) நிதியில் சந்தாதாரின் வரவில் உள்ள வட்டியுடன் கூடிய சந்தாக்களின் தொகையிலிருந்து,

(i) ஒரு ஈட்டுறுதிப் பத்திரத்திற்குப் பணம் செலுத்து வதற்காகவும்;

(ii) ஒரு தடவையில் பணம் செலுத்தும் ஈட்டுறுதிப் பத்திரம் வாங்குவதற்காகவும்;

(iii) ஒரே தடவையில் தவணை செலுத்துவதற்காகவும், பணம் திரும்பப் பெறலாம். ஆனால் (1) எடுக்க உத்தேசிக்கப் பட்டிருக்கிற பத்திரத்தின் விவரங்கள் கணக்கு அலுவலருக்குத் தெரிவிக்கப்பட்டு அவரால் அது சரியானது என ஒப்புக் கொள்ளப் படுவதற்கு முன்பும் அல்லது (2) அந்தப் பணம் திரும்பப் பெறு வதற்கு மூன்று மாத காலங்களுக்கு முன்னால் வாங்கப்பட்ட அல்லது செலவு செய்யப்பட்டதைச் சரி செய்வதற்கும், அல்லது (3) அந்தப் பணம் திரும்பப் பெறப்படும் தேதியிலிருந்து மூன்று

மாத காலத்திற்குள் உண்மையில் செலுத்தப்பட வேண்டிய ஒரு தவணை அல்லது சந்தா செலுத்துவதற்குத் தேவையான தொகைக்கு அதிகமாயும் எந்தத் தொகையும் திரும்பப் பெறப் படக் கூடாது. கணக்கு அலுவலர், உத்தேசிக்கப்பட்டுள்ள பத்திரத்தின் விவரங்களைத் தக்கவை என்று ஏற்றுக் கொள்வதற்கு முன்னால், அப் பத்திரம் அந்த சந்தாதாரின் குடும்பத்தினர் நன்மைக்காகவே முக்கியமாய் எடுக்கப்படுகிறது என்று மன நிறைவு கொள்ள வேண்டும். மேலும் இந்த நிபந்தனையை நிறை வேற்றாத ஒரு பத்திரத்தை ஒப்புக் கொள்ள அவர் மறுத்துவிட வேண்டும்.

மேலும் நிதிக்குச் சந்தாவுக்குப் பதிலாக ஒரு கல்விக் கட்டளைப் பத்திரத்திற்குப் பணம் செலுத்துவது கூடாது. அந்தப் பத்திரம் சந்தாதாரின் இயல்பான வயது முதிர்வுக்கு முன்னால் முழுத் தொகை அல்லது பாகம் செலுத்தப்படக் கூடியதாயிருந்தால் அந்தப் பத்திரத்தின் சம்பந்தமாக யாதொரு பணம் செலுத்து வதற்கும் அல்லது வாங்குவதற்கும் ஒரு தொகையும் நிதியிலிருந்து திரும்பப் பெறப்படாது.

(இ) (ஆ) கூற்றின் கீழ்த் திரும்பப் பெறப்பட்ட யாதொரு தொகையும் எட்டு அணுக்களும் அல்லது அதிகமும் அடுத்த அதிக மான ரூபாய்க்கு எடுத்துக் கொள்ளப்பட்டு, அடுத்த ரூபாய்க்குச் சரி செய்யப்பட்ட முழு ரூபாய்களில் மட்டும் செலுத்தப்பட வேண்டும்.

32. (1) 31-ஆம் விதியின் (அ) பகுதியின் கீழ் பதிலாகச் செலுத்தப்பட்ட யாதொரு சந்தா அல்லது தொகையின் மொத்தம் 9 ஆவது விதியின் கீழ் நிதிக்குச் செலுத்தப்பட வேண்டிய குறைந்தபட்சம் சந்தாவின் தொகையைவிடக் குறை வாயிருந்தால் அந்த வித்தியாசத் தொகை அடுத்த ரூபாய்க்குச் சரி செய்யப்பட்டு எட்டணுக்களும் மேற்பட்டவைகளும் அடுத்த ரூபாயாகக் கணக்கிடப்பட்டு சந்தாதாரால் நிதிக்கு ஒரு சந்தா வாகச் செலுத்தப்பட வேண்டும்.

(2) சந்தாதார் நிதியில் தமது வரவில் உள்ள ஏதாவது ஒரு தொகையை 31-ஆம் விதியின் (ஆ) பகுதியில் குறிப்பிடப்பட் டுள்ள நோக்கங்களில் எவற்றிற்காகவாவது திரும்பப் பெற்றால் அவர் அவ் விதியின் (அ) பகுதியின் கீழ்த் தமது விருப்பத்திற்குட் பட்டு 9-ஆம் விதியின் கீழ்ச் செலுத்தப்பட வேண்டிய சந்தாவைத் தொடர்ந்து செலுத்தி வர வேண்டும்.

33. (1) 31-ஆம் விதியின் (அ) பகுதியின் கீழ் ஒரு சந்தாவை அல்லது பணம் செலுத்துதலை விரும்பும் சந்தாதார் அதற்கிணங்க நிதிக்குத் தமது சந்தாவைக் குறைத்துக் கொள்ளலாம்.

(அ) ஆனால் சந்தாதார் அதைக் குறைத்துக் கொண்டதையும் அதற்குக் காரணத்தையும் தமது சம்பளப் பட்டியின் மேல் அல்லது ஒரு கடிதம் மூலம் கணக்கு அலுவலருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(ஆ) மேலும் கணக்கு அலுவலருக்கு அவர் கோரும் காலத்துக்குள் சந்தா எந்தத் தொகையால் குறைக்கப்பட்டதோ அந்தத் தொகை 31-ஆம் விதியின் (ii) ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன என்று அவர் மனநிறைவு பெற ரசீதுகளை அல்லது ரசீதுகளின் சான்றிட்ட படிகளை அனுப்பவும் வேண்டும்.

(2) 31-ஆம் விதியின் (ஆ) பகுதியின் கீழ் யாதொரு தொகையைத் திரும்பப் பெற்றுக் கொள்ள விரும்பும் ஒரு சந்தாதாரர்—

(அ) அந்த மாதிரி திரும்பப் பெறுவதற்குக் காரணத்தைக் கடிதம் மூலம் கணக்கு அலுவலருக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

(ஆ) கணக்கு அலுவலருடன் அந்தப் பணத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டும்.

(இ) கணக்கு அலுவலருக்கு அவர் கோரும் காலத்திற்குள் அப்படித் திரும்பப் பெறப்பட்ட பணம் 31-ஆம் விதியின் (ஆ) பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்குத் தேவைப்படி பயன்படுத்தப்பட்டுள்ளவைபற்றி கணக்கு அலுவலர் மனநிறைவு கொள்ள ரசீதுகளை அல்லது அவைகளின் சான்றிட்ட படிகளை அனுப்ப வேண்டும்.

(3) கணக்கு அலுவலர் (1) ஆம் உள்விதி காப்பு வாசகத்தின் (ஆ) பகுதியாலும் (2) ஆம் உள் விதியின் (இ) பகுதியாலும் சொல்லப்படுகிற முறையில் தாம் மனநிறைவு கொள்ளாதிருந்தால், சந்தாக்களில் எவ்வளவு தொகை குறைக்கப்பட்டதோ அந்தத் தொகையையும் திரும்பப் பெறப்பட்ட தொகையையும் அத்துடன் 11-ஆம் விதியில் சொல்லியுள்ள விகிதத்தில் வட்டியும் சேர்த்து சந்தாதாரின் ஊதியங்களிலிருந்து வசூலிக்க உத்தரவிட்டு அத் தொகையை நிதியில் சந்தாதாரின் வரவுக்கு வைக்க வேண்டும்.

34. (1) அந்தப் பத்திரம் எந்த வடிவத்திலிருக்கிறதென்பது முக்கியமல்ல. ஆனால் சந்தாதாரால் தம் வாழ்வின் மேல் எடுக்கப் பட்டு, அது அவர் மனைவி அல்லது அவர் மனைவி மக்கள் அல்லது அவர்களில் எவருடைய நன்மைக்காகவென்று அதன் மேல் குறிக் கப்பட்டிருந்தாலொழிய சந்தாதாராலே ஆளுநருக்குச் சட்டப் படி உரிமைப்படுத்தக்கூடியதாயிருக்க வேண்டும்.

விளக்கம் (1).—இந்த உள் விதியின் நோக்கத்திற்குச் சந்தாதார் அவர் மனைவி மக்கள் அல்லது அவர்களில் எவருடைய நன்மைக் ஒரு பத்திரமும் சந்தாதாரரின் உயிரின் மேல் செய்யப்பட்டுள்ள தாகவே கருதப்படும்.

விளக்கம் (2).—சந்தாதாரின் மனைவிக்கு உரிமையளிக்கப்பட்ட ஒரு பத்திரம், அது முதலில் சந்தாதாரருக்கு மறு உரிமையளிக்கப் பட்டாவது அல்லது அந்தச் சந்தாதாரரும் அவர் மனைவியும் ஒரு தக்க உரிமைப்படுத்தலைச் சேர்ந்து செய்திருந்தாலன்றி ஒப்புக் கொள்ளப்படமாட்டாது.

(2) அந்தப் பத்திரம், சந்தாதாரின் மனைவி அல்லது அவர் மனைவி மக்கள் அல்லது அவர்களில் எவருடைய நன்மைக்காக வன்றி பயனடையக் கூடிய வேறு ஒருவருக்காகவும் செய்யப்படக் கூடியதாகாது.

35. (1) ஒரு பத்திரம் சம்பந்தமாய் முதல் முதல் சந்தா விலிருந்து நிறுத்திக் கொள்ளப்பட்ட அல்லது நிதியிலிருந்து பணம் திரும்பப் பெறப்பட்டதிலிருந்து மூன்று மாத காலத்திற் குள்ளும் அல்லது ஈட்டுறுதி நிறுமத்தின் தலைமையிடம் இந்தியா வுக்கு வெளியில் உள்ள ஒரு நிறுமத்தின் விஷயத்தில் கணக்கு அலுவலர் தாக்கல் செய்த முடிவுச் சான்றிதழால் (இடைக்கால ரசீது) மனநிறைவு கொள்வாரானால் அவர் நிர்ணயிக்கக் கூடிய மேற்கொண்ட காலத்திற்குள் அந்தப் பத்திரம்,

(அ) அதன் மேலேயே அந்த சந்தாதாரின் மனைவி அல்லது மனைவி மக்கள் அல்லது அவர்களில் எவருடைய நன்மைக்காக என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ள பத்திரமாயிருந்தாலொழிய, நிதிக்கு 37 முதல் 39-ஆம் விதிகளின் கீழ் செலுத்தப்பட வேண்டிய யாதொரு தொகைக்குப் பிணையமாக ஆளுநருக்கு உரிமைப் படுத்தப்பட்டு கணக்கு அலுவலரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும். உரிமைப்படுத்தல், அந்தப் பத்திரம் சந்தாதாரின் வாழ்வின் மேல், அல்லது சந்தாதாரரும் அவர் மனைவியுடைய

கூட்டு வாழ்வின் மேல் அல்லது அது முன்னாலேயே சந்தாதாரின் மனைவியின் பேரில் உரிமைப்படுத்தப்பட்டிருந்தால், அவற்றிற்குத் தக்கவாறு இரண்டாம் அட்டவணையிலுள்ள படிவங்களில் படிவம் (1) இல் அல்லது படிவம் (4) இல் அந்தப் பத்திரத்தின் மேல் ஒரு மேல்குறிப்பு எழுதப்பட்டு ஒப்படைக்கப்பட வேண்டும்.

(ஆ) அதன் மேலேயே சந்தாதாரரின் மனைவி அல்லது அவர் மனைவி மக்கள் அல்லது அவர்களில் எவருடைய நன்மைக்காக என்று தெளிவாகச் சொல்லப்பட்டிருந்தால் அந்தப் பத்திரம் கணக்கு அலுவலருக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

(2) கணக்கு அலுவலர் கூடுமானவைகளில் அந்த ஈட்டுறுதி நிறுமத்துக்கு எழுதி அந்தப் பத்திரத்திற்குப் பழைய முந்தைய உரிமைப்படுதல் ஒன்றும் இல்லை என்று மனநிறைவு செய்து கொள்ள வேண்டும்.

(3) நிதியிலிருந்து பணம் செலுத்தப்படுவதற்காக ஒரு பத்திரம் கணக்கு அலுவலரால் ஒத்துக் கொள்ளப்பட்டபோது அந்தப் பத்திரத்தின் சொற்கள் மாற்றப்படவும் அல்லது அப் பத்திரத்திற்குப் பதிலாக மற்ற விவரங்களையும் அல்லது புதிய பத்திரத்தின் விபரங்களையும் தெரியப்படுத்த வேண்டிய கணக்கு அலுவலரின் முன் சம்மதம் பெறப்படாமல் இன்னொரு பத்திரம் எடுக்கப்படக் கூடாது.

(4) அந்தப் பத்திரம் உரிமையளிக்கப்பட்டு ஒப்படைக்கப் படாவிட்டாலும் அல்லது அந்த மூன்று மாத காலத்திற்குள் அல்லது உள்விதி (1) இன் கீழ் கணக்கு அலுவலரால் நிர்ணயிக்கப் பட்ட காலத்திற்குள் ஒப்படைக்கப்படாவிட்டாலும் அந்தப் பத் திரத்திற்காக நிதியிலிருந்து திருத்திக் கொள்ளப்பட்ட அல்லது திரும்பப் பெறப்பட்ட தொகையையும் அதன் மேல் 12-ஆம் விதி யில் சொல்லப்பட்டுள்ள வட்டியும் அந்தச் சந்தாதாரால் தக்கபடி நிதிக்குச் செலுத்தப்பட அல்லது திரும்பச் செலுத்தப்பட வேண்டும். தவறினால் அந்தச் சந்தாதாரரின் ஊதியங்களி லிருந்து கழிவு செய்து அல்லது அடிப்படை விதிகளில் விளக்கப் பட்டுள்ளபடி துறைத் தலைவர்களால் உத்தரவிடக்கூடியபடி தவணைகளில் அல்லது வேறுவிதமாக வசூலிக்கும்படி கணக்கு அலுவலரால் உத்தரவிடப்பட வேண்டும்.

(5) பத்திரத்தை உரிமைப்படுத்தலைப் பற்றிய அறிவிப்புச் சந்தாதாரரால் ஈட்டுறுதி நிறுமத்துக்குக் கொடுக்கப்பட வேண்டும். அறிவிப்புக்கான ஏற்புச் சீட்டை ஈட்டுறுதி நிறுமத்தினர் உரிமைப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் கணக்கு அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

குறிப்பு (1)—பொது வருங்காலச் சேமிப்பு நிதி (தமிழ்நாடு) விதிகளின் 26 விதியையொட்டி ஆளுநரால் மறு உரிமைப்படுத்தப்பட்ட ஒரு பத்திரம் வரப்பெற்றதன்பேரில் சந்தாதாரர் அதை மறுபடியும் இவ்விதிகளின் கீழ் ஆளுநருக்கு உரிமைப்படுத்த வேண்டும்.

குறிப்பு (2).—சந்தாதாரர்கள் உரிமைப்படுத்தலின் அறிவிப்பை இரட்டைப் பிரதிகளில் ஈட்டுறுதி நிறுமத்துக்கு அனுப்பும்படியும் அந்த அறிவிப்பை கிரேட் பிரிட்டன் அல்லது அயர்லாந்தில் உள்ள நிறுமத்துக்கு அனுப்ப வேண்டியிருந்தால் 1867 ஆம் ஆண்டு ஈட்டுறுதிகள் பத்திரங்கள் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டபடி ஏற்புச் சீட்டுக்குரிய கட்டணமாகிய ஐந்து ஷில்லிங் தொகையுடன் அனுப்பும்படியும் அறிவுறுத்தப்படுகிறார்கள். ஈட்டுறுதி நிறுமங்கள் சாதாரணமாக அந்தப் பத்திரம் முடிவாகி உரிமைக் கோரிக்கைக்கு வரும் வரையில், அசல் முறை ஆவணங்களைக் கொடுக்கும்படி கேட்காததால், உரிமைப்படுத்தலை மேலெழுத்திட்ட அசல் பத்திரத்தையே நிறுமத்துக்கு அனுப்ப வேண்டியதில்லை

குறிப்பு (3).—பணியை விட்டுவிட்டு கிரேட் பிரிட்டன் அல்லது அயர்லாந்துக்குச் செல்லும் ஆங்கில முத்திரைத்தாள் சட்டத்தின் கீழ் உரிமைப்படுத்தலும் மறு உரிமைப்படுத்தலும் அவை அந்த நாடுகளில் முதலில் வந்து சேர்ந்த 30 நாட்களுக்குள் முத்திரைத்தாளிடப்பட வேண்டும் என்று உத்தரவு இருப்பது சந்தாதாரர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு செய்யாவிட்டால் முத்திரைத்தாள் சட்டத்தின் கீழ் தண்டம் ஏற்கப்படுவதுடன் அந்தப் பத்திரம் முதிர்வடையும்போது இடர்ப்பாடுகளும் உண்டாகலாம்.

36. அந்தப் பத்திரம் நடப்பில் உள்ளபோது அதிலுள்ள வரையறைகளின் கீழ் மிகை ஊதியத்தைப் பெற்றுக் கொள்வது விருப்பத்தைப் பொருத்ததாயுள்ளவற்றில், சந்தாதாரர் எவ்வித மிகை ஊதியத்தையும் பெறக் கூடாது. அந்தப் பத்திரத்தின் வரையறைகளின்படி சந்தாதாரர் மிகையூதியத்தை அந்தப் பத்திரம்

நடப்பில் உள்ளபோது பெற்றுக் கொள்ளாமலிருப்பதற்கு அவருக்கு விருப்புரிமையில்லாதவற்றில் மிகை ஊதியத் தொகையை சந்தாதார் உடனே நிதிக்குச் செலுத்த வேண்டும், அல்லது அவ்வாறு செய்யத் தவறினால், அவர் ஊதியங்களிலிருந்து கழிவு மூலம் தவணைகளில் அல்லது வேறுவிதமாக, அரசாங்கம் கட்டளையிடுகிறபடி, அத்தொகை வசூலிக்கப்பட வேண்டும்.

37. (1) 39-ஆம் விதியின் (3) ஆம் உள் விதியில் சொல்லப் பட்டுள்ளபடி தவிர, சந்தாதாரர் ;

(அ) பணியை விட்டு விலகும்போதும் அல்லது (ஆ) ஓய்வு பெற ஆயத்தமாய் விடுப்பில் சென்றுவிட்டு அந்தப் பத்திரத்தை மறு உரிமைப்படுத்தவோ அல்லது திருப்பித் தரவோ கணக்கு அலுவலருக்கு விண்ணப்பித்தபோதும் அல்லது (இ) விடுப்பில் உள்ளபோது வேலையிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்கப்பட்ட போதும் அல்லது ஒரு மருத்துவ அதிகாரியால் அவர் மேற் கொண்டு பணியாற்றத் தகுதியற்றவர் எனத் தெரிவிக்கப்பட்ட போதும், அவர் அந்தப் பத்திரத்தை மறு உரிமைப்படுத்த அல்லது திருப்பித்தரக் கோரி கணக்கு அலுவலருக்கு விண்ணப்பித்துக் கொண்டபோதும், அல்லது (ஈ) நிதிக்கு 31-ஆம் விதியின் (அ) பகுதியிலும் 31-ஆம் விதியின் (ஆ) பகுதியின் ( (i), (ii) ) கூறுகளி லும் சொல்லப்பட்டுள்ள காரியங்களுக்காக நிதியிலிருந்து செலுத் தாமல் நிறுத்திக் கொண்ட அல்லது திரும்பப் பெற்ற மொத்தத் தொகையையும் 11-ஆம் விதியில் சொல்லப்பட்டுள்ளபடி அதன் மேல் கூடிய வட்டியுடன், செலுத்தினாலும் அல்லது திரும்பச் செலுத் தினாலும் கணக்கு அலுவலர்—

(i) அந்தப் பத்திரம் 35-ஆம் விதியின் கீழ் ஆளுநருக்கு உரிமைப்படுத்தப்பட்டிருந்தால், அதை மூன்றும் அட்டவணையில் காணப்படும் முதல்படிவத்தில் அந்தச் சந்தாதாரருக்கு அல்லது சந்தாதாருக்கும் அவருடன் கூட்டாக உள்ளவருக்கும், மறு உரிமைப்படுத்தி அதை ஈட்டுறுதி நிறுமத்துக்கு முகவரியிட்டுக் கையொப்பமிட்ட மறு உரிமை அறிவிப்புடன் சந்தாதாரருக்குக் கொடுத்துவிட வேண்டும்.

(ii) அந்தப் பத்திரம் தமக்கு 35-ஆம் விதியின் (i) ஆவது உள்விதியின் (ஆ) பகுதியின் கீழ்த் தம்மிடம் ஒப் படைக்கப்பட்டதாயிருந்தால், அந்தப் பத்திரத்தைச் சந்தா தாரருக்கு அளித்துவிட வேண்டும்.

ஆனால், சந்தாதாரர் ஓய்வு பெற ஆயத்தமாக விடுப்பில் சென்ற பிறகு அல்லது விடுப்பில் உள்ளபோது ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்ட பிறகு அல்லது மருத்துவ அலுவலரால் அவர் இனிமேற்கொண்டு பணி செய்ய தகுதியற்றவர் என்று தெரிவிக்கப்பட்ட பிறகு, வேலைக்குத் திரும்பி வந்தால் அப்படி மறு உரிமைப்படுத்தப்பட்ட அல்லது அளிக்கப்பட்ட பத்திரம், அது முதிர்வு அடையாதிருந்தாலும் அல்லது உரிமைப்படுத்தப்படாமலும், பொறுப்பேற்றப்படாமலும், வில்லங்க மேற்படுத்தப்படாமலும் இருந்தால், மறுபடியும் ஆளுநருக்கு உரிமைப்படுத்தப்பட்டு கணக்கு அலுவலருக்கு 35-ஆம் விதியில் சொல்லப்பட்டுள்ள முறையில் ஒப்படைக்கப்படவும், அல்லது ஏற்றவாறு மறுபடியும் ஒப்படைக்கப்படவும் வேண்டும். அதன் மேல் இந்த விதிகளின் ஏற்பாடுகள் தகுந்த அளவில் அந்தப் பத்திரத்தைப் பொருத்தவரை மறுபடியும் பொருந்துவனவாகும்.

மேலும் அந்தப் பத்திரம் முதிர்வடைந்திருந்தாலும் அல்லது உரிமைப்படுத்தப்பட்டிருந்தாலும் அல்லது எப்படியாவது ஒரு பொறுப்பேற்றப்பட்டிருந்தாலும் அல்லது வில்லங்கத்திற்குட்படுத்தப்பட்டிருந்தாலும் ஒரு பத்திரத்தை உரிமைப்படுத்தி ஒப்படைக்கத் தவறியதற்குப் பொருந்துகின்ற 35-ஆவது விதியின் 45-ஆம் உள் விதியின் ஏற்பாடுகள் இந்தப் பத்திரத்திற்கும் பொருந்துவனவாகும்.

(2) 39-ஆம் விதி (3) ஆவது உள்விதியின் ஏற்பாடுகளுக்கிணங்கவல்லாது, ஒரு சந்தாதாரர் பணியை விட்டு விலகுவதற்கு முன்னால் இறந்துவிட்டால், கணக்கு அலுவலர்,

(i) அந்தப் பத்திரம் 35-ஆம் விதியின் கீழ் ஆளுநருக்கு உரிமைப்படுத்தப்பட்டிருந்தால், மூன்றும் அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள இரண்டாம் படிவத்தில் அந்தப் பத்திரத்தை சட்டப்படிப் பெற உரிமையுள்ள நபருக்கு மறு உரிமைப்படுத்தி அதை ஈட்டுறுதி நிறுமத்தாருக்கு எழுதப்பட்டுக் கையொப்பமிடப்பட்ட மறு உரிமை அறிவிப்புடன் அவருக்கு அளித்துவிடவேண்டும்.

(ii) அந்தப் பத்திரம் தம்மிடம் 35-ஆம் விதியின் (1) ஆம் உள் விதியின் (ஆ) பகுதியின் கீழ் ஒப்படைக்கப்பட்டதாயிருந்தால், அதை எவரேனும் பலனடைய வேண்டியவரிடமும் அப்படியெவரும் இல்லாதிருந்தால் அதைப் பெறச் சட்டப்படி உரிமையுடையவருக்கும் அளித்துவிட வேண்டும்.

38. (1) ஆளுநருக்கு 35-ஆம் விதியின்கீழ் உரிமைப்படுத்தப் பட்ட ஒரு பத்திரம், சந்தாதாரர் பணியை விட்டு விலகுவதற்கு முன்னுல் முழு முதிர்வடைந்தாலும் அல்லது சந்தாதாரர் அவர் மனைவி ஆகிய இருவர் வாழ்வுகளும் சேர்ந்து சொல்லப்பட்ட அந்த விதியின்கீழ் (உரிமைப்படுத்தப்பட்ட பத்திரம் மனைவி இறந்து விட்ட காரணத்தால் பணம் செலுத்தப்படுவதற்குரியதாக விருந்த போது, கணக்கு அலுவலர் 39-ஆம் விதி (3) ஆம் உள்விதியில் சொல்லப்பட்டுள்ளபடி தவிர அடியிற்கண்ட முறையைக் கையாள வேண்டும்.

(i) ஈட்டுறுதியளிக்கப்பட்ட தொகையும் மிகையூதிய மாகச் சேர்ந்த தொகையையும் கூடிய தொகை, அந்தப் பத்திரத் தைப் பொருத்தவரை நிதியிலிருந்து நிறுத்திக் கொள்ளப்பட்ட அல்லது திரும்பப் பெறப்பட்ட தொகையுடன், அதற்கு (ii) ஆவது விதியில் சொல்லப்பட்டுள்ள விகிதத்தில் வட்டியும் சேர்ந்த மொத்த தொகையைவிட அதிகமாயிருந்தால், கணக்கலுவலர் நான்காம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி படிவத்தில் அந்தப் பத்திரத்தைச் சந்தாதாருக்கு அல்லது சந்தாதாரருக்கும் கூட்டு உறுதியளிக்கப்பட்டவருக்கும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மறு உரிமைப்படுத்தி சந்தாதாரரிடம் அளித்துவிட வேண்டும். சந்தா தாரர், தாம் நிதியிலிருந்து நிறுத்திக் கொண்ட அல்லது திரும்பப் பெற்ற தொகையையும் அதற்கு வட்டியையும் சேர்த்து நிதிக்குச் செலுத்த அல்லது திரும்பச் செலுத்த வேண்டும். தவறினுல் ஒரு பத்திரத்தை உரிமைப்படுத்தி அளிக்கத் தவறியதற்குப் பொருந்தக் கூடிய 35 ஆம் விதியின் (4) ஆம் உள்விதியின் ஏற்பாடுகள் இதற்கும் பொருந்தும்.

(ii) ஈட்டுறுதியளிக்கப்பட்டுள்ள தொகையும் அதன் மேல் ஏற்பட்ட மிகையூதியமும் சேர்ந்து, நிறுத்திக் கொள்ளப்பட்ட அல்லது திரும்பப் பெறப்பட்ட தொகையும், வட்டியும் சேர்ந்த மொத்தத்தை விடக் குறைவாகயிருந்தால், கணக்கு அலுவலர் ஈட்டுறுதியளிக்கப்பட்ட தொகையுடன், சேர்ந்துள்ள மிகையூதியத் தொகையையும் சேர்த்து வசூலித்து அப்படி வசூலிக்கப்பட்ட தொகையை நிதியில் சந்தாதாரரின் வரவுக்கு வைக்க வேண்டும்.

(2) 39 ஆம் விதியின் (3) ஆம் உள்விதியில் சொல்லப் பட்டுள்ளபடி, தவிர 35 ஆம் உள்விதியின் உள்விதி (1)-இன் (ஆ) கூற்றின் கீழ், கணக்கு அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள ஒரு பத்திரம் அந்தச் சந்தாதாரர் பணியை விட்டு விலகுவதற்கு

முன்னால் முதிர்வு அடைந்தால் கணக்கு அலுவலர் அந்தப் பத்தி ரத்தைச் சந்தாதாரரிடம் அளித்து விடவேண்டும்.

ஆயினும் அந்தப் பத்திரம் முதிர்வடையும்போது அதில் சந்தா தாரரின் மனைவிக்கு அல்லது மனைவிக்கும் மக்களுக்கும் அல்லது அந்தப் பத்திரத்தின்மேல் கூறப்பட்டுள்ள அவர்களில் எவருக் கேனும் அப்பத்திரத்திலுள்ள பற்று முடிவடைந்துவிட்டால், அந்தப் பத்திரத்தின் பணங்கள் சந்தாதாரருக்கு ஈட்டுறுதி நிறு மத்தால் செலுத்தப்பட்டால், சந்தாதார் அதைப் பெற்றவுடனே பின்வருமாறு நிதிக்குச் செலுத்தவோ அல்லது திருப்பிச் செலுத் தவோ வேண்டும் :—

(i) அந்தப் பத்திரத்தைப் பொருத்தவரை நிதியிலிருந்து நிறுத்திக் கொள்ளப்பட்ட அல்லது திரும்பப் பெறப்பட்ட மொத்தத் தொகையையும் 11-ம் விதியில் சொல்லியுள்ள விகிதத்தின் படி அதன் மேல் கூடிய வட்டியும் அல்லது

(ii) ஈட்டுறுதியளிக்கப்பட்ட தொகையும் அதற்கு ஏற்பட்ட மிகையூதியங்களும், அவற்றில் எது குறைந்ததோ அந்தத் தொகையும் ஆகும். தவறினால் ஒரு பத்திரத்தை உரிமைப்படுத்தி ஒப்படைக்கத் தவறியதற்குப் பொருந்தக்கூடிய 35-ஆம் விதியின் 4-வது உள்விதியின் ஏற்பாடுகள் இதற்கும் பொருந்தும்.

39. (1) எக்காரணத்தினாலும் குடும்ப ஓய்வூதிய நிதியில் சந்தா தாரரின் அக்கறை முழுவதுமோ அல்லது ஒரு பகுதியோ முடி வடைந்துவிட்டால், சந்தாதாரரால் அந்தக் குடும்ப ஓய்வூதிய நிதி யிலிருந்து திரும்பப் பெறப்படும் தொகையைக் கொண்டு சந்தா தாரரின் வருங்காலச் சேம நிதிக் கணக்கு ஈடு செய்யப்படும். அப்படி ஈடு செய்யத் தவறினால் அந்தத் தொகை சந்தாதாரரின் ஊதியங்களிலிருந்து தவணைகளிலும் அல்லது வேறு விதமாகவும் அரசாங்கம் கட்டளையிடுகிறபடி கழிக்கப்படும்

(2) அந்தப் பத்திரம் காலக் கழிவால் செல்லாததாகி விட்டாலும், 35-ம் விதியின் கீழ் ஆளுநருக்கல்லாது இதர விதமாக உரிமைப்படுத்தப்பட்டாலும் அல்லது பொறுப்புக்காக ஈடு காட்டப் பட்டிருந்தாலும் அல்லது வில்லங்கத்திற்குட்பட்டிருந்தாலும் ஒரு பத்திரத்தை உரிமைப்படுத்தி ஒப்படைக்கத் தவறியதற்குப் பொருந்தக்கூடிய 35 ஆம் விதி (4) ஆவது உள்விதியின் ஏற்பாடுகள் அதற்குப் பொருந்தும்.

(3) கணக்கு அலுவலர்,

(அ) (35) ஆம் விதியின் கீழ் ஆளுநருக்கல்லாத வேறு ஒரு உரிமைப்படுத்தல் அல்லது,

(ஆ) அதன் மேல் ஒரு பொறுப்பு அல்லது வில்லங்கம், அல்லது

(இ) ஒரு பத்திரத்தில் அல்லது அதற்கு வரப்பெற்ற தொகையின் மேல் உள்ள நடவடிக்கைகளைத் தடைப்படுத்தி ஒரு நீதி மன்றத்தின் ஆணை.

ஆகிய இவற்றைப் பற்றிய அறிவிப்பு வரப்பெற்றால், அந்தக் கணக்கு அலுவலர்,

(i) 37-ஆம் விதியில் சொல்லியுள்ளபடி அந்தப் பத்திரத்தை மறு உரிமைப்படுத்தவோ அல்லது அளித்துவிடவோ அல்லது

(ii) அந்தப் பத்திரத்தால் ஈட்டுறுதியளிக்கப்பட்ட தொகையை வசூலிக்கவோ அல்லது 33-ஆம் விதியில் சொல்லியுள்ளபடி அதை மறு உரிமைப்படுத்தவோ அல்லது அளித்து விடவோ கூடாது. ஆனால் அச்செய்தியினை உடனே அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

40. இந்த விதிகளில் உள்ளவை எப்படியிருந்தாலும், 13-ஆம் விதியின்கீழ் நிதியிலிருந்து முன்பணமாகப் பெறப்பட்ட பணமும் அல்லது 31-ஆம் விதியின் (அ) அல்லது (ஆ) கூற்றின் கீழ் நிறுத்திக் கொள்ளப்பட்ட அல்லது திரும்பப் பெறப்பட்ட பணமும், அவற்றைப் பெறுவதற்கு அல்லது நிறுத்திக் கொள்வதற்கு அல்லது திரும்பப் பெறுவதற்கு எதற்காக ஒப்பு அளிக்கப்பட்டதோ அந்த நோக்கங்களில்லாமல் வேறு நோக்கத்திற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று ஒப்பளிப்புத் தரும் அதிகாரி மனநிறைவு கொள்வாரானால் சம்பந்தப்பட்ட தொகையும் 11-ஆம் விதியில் சொல்லப்பட்ட விகிதத்தில் அதன் மேல் வட்டியும் உடனடியாக நிதிக்குச் சந்தாதாரரால் செலுத்தப்பட்ட அல்லது ஏற்றவாறு திருப்பிச்செலுத்தப்பட வேண்டும். தவறினால் சந்தாதாரரின் ஊதியங்களிலிருந்து ஒரே மொத்தமாக, அவர் விடுப்பிலிருந்தாலும் வசூலிக்குமாறு ஆணையிடப்படும். அப்படிச் செலுத்த

வேண்டிய அல்லது ஏற்றவாறு திரும்பச் செலுத்த வேண்டிய தொகை அவரது ஊதியங்களின் பாதிக்குமேல் இருந்தால், அவா ஊதியங்களின் பாகங்களின் மாதாந்தரத் தவணைகளில், திரும்ப வசூலிக்கப்பட வேண்டிய மொத்தத் தொகையும் அவரால் திரும்பச் செலுத்தப்படும் வரையில் அல்லது செலுத்தப்படும் வரையில் ஏற்றவாறு வசூல் செய்யப்படும்.

குறிப்பு.—இந்த விதியில் சொல்லப்பட்ட படி "ஊதியங்கள்" என்பதில் வாழ்க்கைக் கொடை அடங்காது.

41. தம் ஈட்டுறுதிப் பத்திரத்திற்குத் தாமே பணம் செலுத்தும் ஒரு அரசாங்க ஊழியர் ஆண்டுக்கு ஒரு முறை தம் அலுவலகத் தலைவரிடம் அல்லது தாமே அலுவலகத் தலைவராயுள்ளவற்றில் தமது அடுத்த மேலதிகாரிக்கு அந்தப் பத்திரம் அமுலில் வைக்கப் பட்டிருக்கிறது என்றும் வில்லங்களுக்குட்படவில்லை யென்றும் சான்று அளிக்க வேண்டும்.

(iv) அயல்நாட்டுத் துறைப் பணித் தொகுதியிலுள்ள அல்லது மற்றொரு பணியாளர் தொகுதிக்கு அல்லது தொகுதியி லிருந்து அல்லது யூனியனுக்கு அல்லது யூனியனிலிருந்து மாற்றப் பட்ட அரசாங்கப் பணியாளர்களுக்கான தனி ஏற்பாடுகள்.

42. ஒரு சந்தாதாரர் அயல் பணியிலிருந்தால் நிதிக்கு அரசாங்க உதவியால் செலுத்தப்பட வேண்டிய தொகை அந்த அயல் நாட்டில் வேலை கொடுப்பவரிடமிருந்து வசூலிக்கப்படும். ஓய்வூதியத்திற்கு உதவித் தொகை அடிப்படை விதிகளில் சொல்லப்பட்டுள்ள விகிதங்களில் ஒரு பாதிக்கு வரையறுக்கப் படும்.

43. ஒரு சந்தாதாரர் தற்காலிகமாக இன்னொரு அரசாங்கத் திற்கு மாற்றப்பட்டால் அவரை எடுத்துக் கொள்ளும் அரசாங்கம் குறைக்கப்பட்ட ஓய்வூதியத்திற்குச் செலுத்த வேண்டிய பொறுப்புடன் நிதிக்கு ஒவ்வொரு ஆண்டும் அரசாங்க உதவித் தொகையையும் செலுத்தவேண்டும். அப்படிப்பட்ட வேறு அரசாங்கத்துக்குச் செய்த மாற்றங்கள் பின்னால் நிலையாக்கப்பட்ட வற்றிலும், ஒரு சந்தாதாரர் முதலில் இன்னொரு மாநில அரசாங்கத்திற்கு மாற்றப்பட்டவர் பின்னால் நிலையாக மத்திய அரசாங்கத்துக்கு மாற்றப்பட்டவைகளிலும் அவர்களை ஏற்றுக்

கொண்ட அரசாங்கத்திடமிருந்து வசூலிக்கப்பட்ட உதவித் தொகைகள் அந்த அரசாங்கத்திற்கு மறு வரவு வைக்கப்படும்.

44. ( ஒரு அயல் அமைப்பாளரிடமிருந்து அல்லது ஏற்றுக் கொண்ட அரசாங்கத்திலிடமிருந்து வசூலிக்கப்படும் நிதிக்கு உதவித் தொகை அந்த அரசாங்கப் பணியாளர் அயல் பணியில் அல்லது மற்ற அரசாங்கத்தின் கீழ் அவ்வப்போது பெறும் சம்ப ளத்தின் அடிப்படையில் மேல் விதிக்கப்படும்.

குறிப்பு.—1950 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதிக்கு முன்னால் சார்வாளராக வேறு வேலைக்கு அனுப்பப்பட்டு அவ்வாறு வேறு வேலைக்கு அனுப்பப்பட்டபோது நிலையான ஒரு பதவியைப் பெற்றிராத அரசாங்கப் பணியாளர்களைப் பொருத்தவரை அவர்கள் பணிக்கு அந்த வெளி அமைப்பாளரிடமிருந்து அல்லது அவரை ஏற்றுக் கொண்டிருக்கும் அரசாங்கத்தினிடமிருந்து ஒன்றும் போதிய உதவித் தொகை வசூலிக்கப்படக் கூடியதா யில்லாதபோதும் அரசாங்க உதவித் தொகையானது, உதவித் தொகையுள்ள வருங்காலச் சேம ஓய்வு நிதிக் கணக்குக்கு வரவு வைக்கப்படும். அந்தக் காலத்தில் நிலையான நியமனங்களைப் பெற் றிருப்பவர்களைப் பொருத்தவரை அவர்கள் அயல் பணியில் பெறும் சம்பளத்தின் அடிப்படையில் அரசாங்க உதவித் தொகையளிக்கப் படுகிற என்ற காரணத்தால் அந்த ஓய்வூதிய உதவித் தொகையைக் கேட்கக் கூடாது. ஓய்வூதிய உதவித் தொகை, வழக்கப்படி அவர்கள் நிலையாகவுள்ள பதவியின் பெரும் அளவு சம்பளத்தின் மேல்தான் கணக்கிடப்படும்.

(ii) அயல் பணியிலுள்ள கூட்டுறவுத் துறையைச் சேர்ந்த ஒரு அரசாங்கப் பணியாளரைப் பொருத்தவரை, வசூலிக்க வேண்டிய ஓய்வூதிய உதவித் தொகை அவர் ஒரு அரசிதழ்ப் பதிவு பெறாத பதவியை வகிப்பவராய் இருந்தால் காலக் கிரமச் சம்பள ஏற்ற முறையில் பெருமத் தொகையின் 4¾ சதவிகிதத்திலும் அவர் ஒரு அரசிதழ்ப் பதிவு பெற்ற பதவியை வகிப்பவராயிருந்தால் அவர் காலக் கிரமச் சம்பள ஏற்ற முறையில் பெருமத் தொகையின் 11.13 சதவிகிதத்தில் பாதியும் (அதாவது 5.57 சதவிகிதம்) ஆகும். நிதிக்கு அரசாங்க உதவித் தொகைக்காக வசூலிக்கப்பட வேண்டிய தொகை அவர் அயல் பணியில் வகிக்கும் பணியிடத்தின் சராசரிச் செலவின் அடிப்படையின் மேல் கணக்கிடப்படும். அவருடைய நிதிக் கணக்கிற்கு அரசால் அளிக்கப்படும் உள்ள

படியான உதவித் தொகை, எப்படியும், அவர் அந்த அயல் பணியில் அவ்வப்போது பெறும் சம்பளத்தைப் பொருத்ததாகும்.

(iii) ஒரு அயல் அமைப்பாளர், அயல்பணியின் காலத்திற்கு மட்டுமல்லாமல் அந்த அரசாங்கப் பணியாளர் அயல் பணியில் ஈட்டிய விடுப்புக் காலத்திற்கும் அரசாங்க உதவித் தொகையை நிதிக்குச் செலுத்த வேண்டும்.

45. ஒரு சந்தாதாரர் மற்றொரு அரசாங்கத்திற்கு அல்லது இந்த விதிகள் பொருந்தாத வேறொரு பணியிடத்திற்கு நிலையாக மாற்றப்பட்டால்,

(i) அவர் இந்த நிதிக்குச் சந்தா செலுத்துவதை நிறுத்தி விடவேண்டும் ;

(ii) நிதியில் அவர் கணக்கில் அரசாங்க வரவாக இருக்கும் அரசாங்கத்தால் அளிக்கப்பட்ட உதவித் தொகையும் அதன் வட்டியும் அரசாங்கத்திற்கு மறு வரவு வைக்கப்பட வேண்டும்.

(iii) நிதியில் அவர் வரவில் உள்ள சந்தாக்களின் தொகையும் அதன் மேல் கூடிய வட்டியும், அவருடைய புதிய பணியிடத்தில் சந்தா செலுத்தத் தகுதியுள்ள யாதொரு வருங்காலச் சேம நிதியில் அல்லது வேறு நிதியில் அவர் வரவுக்கு மாற்றப்பட வேண்டும்;

(iv) அவருடைய ஓய்வூதியப் பலன்கள் மேலும் சிவில் பணித் தொகுதி விதிமுறையின் சாதாரண விதிகள் அல்லது அவருக்குப் பொருந்தக்கூடிய ஏனைய விதிகளால் வகைப்படுத்தப் படும். தமிழ்நாடு அரசாங்கம் அதன்கீழ் அவர் செய்த பணிகள் பற்றிய முழு ஓய்வூதியப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளும்.

இணைப்பு I.

முதல் அட்டவணை [18 (3) விதியைப் பார்க்கவும்] நியமனப் படிவங்கள்.

I. சந்தாதாரருக்கு ஒரு குடும்பம் இருந்து அதன் ஒரு உறுப்பினரை அவர் நியமிக்க விரும்பும்போது,

1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு உதவித் தொகையுள்ள வருங்காலச் சேம நிதி ஓய்வூதியம் ஈட்டுறுதி விதிகளின் 4 ஆம் விதியில் விளக்கப்பட்டுள்ளபடி என் குடும்பத்தில் ஒரு உறுப்பினரான அடியில் சொல்லப்பட்டவரை, நிதியில் என் வரவில் இருக்கக்

கூடிய பணம் செலுத்தப்படத் தகுதியாய் வருவதற்குள் அல்லது செலுத்தப்பட வந்தும் செலுத்தப்படுவதற்கு முன்னால் எனக்கு இறப்பு நேரிட்டால் அத்தொகையைப் பெற்றுக் கொள்ள நான் இதனால் நியமிக்கிறேன் —

| (1) நியமிக்கப்பட்டவரின் பெயரும், முகவரியும். | (2) சந்தாதாரருடன் உறவு. | (3) வயது. | (4) இந்த நியமனம் சட்டப்படிச் செல்லத் தகாதவாறு செய்யக்கூடிய எதிர்பாரா நிகழ்ச்சிகள். | (5) நியமிக்கப்பட்டவர் சந்தாதாரருக்கு முன்னால் இறந்து நியமிக்கப்பட்டுள்ளவரின் உரிமை பெறக் கூடியவர் எவராவது இருந்தால் அவருடைய பெயரும், முகவரியும், உறவும். |
|---|---|---|---|---|

இடத்தில் தேதியிட்டது.

சந்தாதாரரின் கையொப்பம்.

கையொப்பத்திற்கு இரண்டு சாட்சிகள்.

(1)

(2)

II. சந்தாதாரருக்கு ஒரு குடும்பமிருந்து அதில் ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களை நியமிக்க விரும்பும் போது.

நான் 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு உதவித் தொகையுள்ள வருங்காலச் சேம நிதி ஓய்வூதியம், ஈட்டுறுதி விதிகளின் 4 ஆம் விதியில் விளக்கப்பட்டுள்ளபடி என் குடும்பத்தின் உறுப்பினர்களாயுள்ள அடியிற் சொல்லப்பட்டுள்ளவர்களை நிதியில் என் வரவில் இருக்கக் கூடிய தொகை செலுத்தப்படுவதற்குரியதாக வருவதற்குள்ளும் அல்லது செலுத்தப்படுவதற்குரியதாக வந்து செலுத்தப்படுவதற்கு முன்னால் எனக்கு இறப்பு நேரிட்டால் அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ள இதனால் நியமிக்கிறேன். மேலும் சொல்லப்பட்ட தொகை சொல்லப்பட்ட அந்த நபர்

களுக்குள் அவர்கள் பெயர்களுக்கு நேரே கீழே காட்டப்பட்ட முறையில் வழங்கப்படவேண்டும் என்றும் கட்டளையிடுகிறேன்--

| (1) நியமிக்கப்பட்டவர்களின் பெயரும், முகவரியும். | (2] சந்தாதாரருடன் உறவு. | (3) வயது. | (4) *சேர்ந்துள்ள தொகையில் ஒவ்வொருவருக்கும் செலுத்தப்பட வேண்டிய பாகம். | (5) இந்த நியமனம் கட்டுப்படி செல்லத்தகாதவாறு செய்யக்கூடிய எதிர்பாராத நிகழ்ச்சிகள். | (6) நியமிக்கப்பட்டவர் சந்தாதாரருக்கு முன்னால் இறந்து அவர் உரிமை பெறக் கூடியவர் எவராவது இருந்தால் அவர் பெயரும், முகவரியும், உறவும். |
|---|---|---|---|---|---|

இடத்தில் தேதியிட்டது.

கையொப்பத்திற்கு இரண்டு சாட்சிகள்.

1.

2.

சந்தாதாரரின் கையொப்பம்.

* குறிப்பு.—எக்காலத்திலும் நிதியில் சந்தாதாரரின் வரவில் இருக்கக் கூடிய மொத்தத் தொகையையும் உள்ளடங்கும்படி இந்தக் கட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

III. சந்தாதாரருக்கு ஒரு குடும்பமில்லாதிருந்தால் ஒரு நபரை நியமிக்க விருப்பப்படும்போது,

1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு உதவித் தொகையுள்ள வருங் காலச் சேம நிதி ஓய்வூதியம் ஈட்டுறுதி விதிகளின் 4 ஆம் விதியில் விளக்கப்பட்டுள்ளபடியான ஒரு குடும்பமில்லாத நான் இதனால் கீழே சொல்லப்பட்டுள்ள நபரை, நிதியில் என் வரவில் இருக்கக் கூடிய தொகை, செலுத்தப்படுவதற்குரியதாவதற்கு முன்பும் அல்லது செலுத்தப்படுவதற்குரியதாகி, உண்மையில் செலுத்தப்

படுவதற்கு முன்பும் எனக்கு இறப்பு நேரிட்டால் அத்தொகையைப் பெற்றுக் கொள்ள இதனுல் நியமிக்கிறேன்.—

| நியமிக்கப்பட்டவரின் பெயரும், முகவரியும். | சந்தாதாரருடன் உறவு. | வயது. | *இந்த நியமிப்பு சட்டப்படி செல்லத் தகாததாகு வாறு செய்யக்கூடிய எதிர்பாராத நிகழ்ச்சிகள். | நியமிக்கப்பட்டவர் சந்தாதாரருக்கு முன் இறந்து அவர் உரிமையை பெறக் கூடியவர் எவராவது இருந்தால் அவர் பெயரும், முகவரியும், உறவும். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |

இடத்தில் தேதியிட்டது.

கையொப்பத்திற்கு இரண்டு சாட்சிகள்.—

1.

2.

சந்தாதாரரின் கையொப்பம்.

* குறிப்பு.—ஒரு குடும்பமில்லாத ஒரு சந்தாதாரர் ஒரு நியமனம் செய்தால் அவர் இந்தக் கட்டத்தில், இந்த நியமனம் தாம் பின்னுல் ஒரு குடும்பத்தை ஏற்படுத்திக் கொண்டால் சட்டப்படி செல்லத் தகாததாய் வரும் என்று குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

IV. சந்தாதாரருக்கு ஒரு குடும்பம் இல்லாதபோது ஒரு நபருக்கு மேற்பட்டவர்களை நியமிக்க விருப்பப்படும்போது.

நான் 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு உதவித் தொகையுள்ள வருங்காலச் சேம நிதி ஓய்வூதியம் ஈட்டுறுதி விதிகளில் 4 ஆம் விதியில் விளக்கப்பட்டுள்ளபடியான ஒரு குடும்பமில்லாத நான், இதனுல் கீழே சொல்லப்பட்டுள்ள நபர்களை, நிதியில் என் வரவில் இருக்கக் கூடிய தொகை செலுத்தப்படுவதற்குரியதாவதற்குள்ளும் அல்லது செலுத்தப்படுவதற்குரியதாக செலுத்தப்படுவதற்கு முன்பும் எனக்கு இறப்பு நேரிட்டால், அத்தொகையைப் பெற்றுக் கொள்ள நியமிக்கிறேன். மேலும் சொல்லப்பட்ட தொகை

களுக்குள் அவர்கள் பெயர்களுக்கு நேரே கீழே காட்டப்பட்ட முறையில் வழங்கப்படவேண்டும் என்றும் கட்டளையிடுகிறேன்—

| நியமிக்கப்பட்டவர்களின் பெயரும், முகவரியும். | சந்தாதாரருடன் உறவு. | வயது. | *சேர்ந்துள்ள தொகையில் ஒவ்வொருவருக்கும் செலுத்தப்பட வேண்டிய பாகம். | இந்த நியமனம் கட்டப்படி செல்லாததாகுமாறு செய்யக்கூடிய எதிர்பாராத நிகழ்ச்சிகள். | நியமிக்கப்பட்டவர் சந்தாதாரருக்கு முன்னால் இறந்து அவர் உரிமை பெறக் கூடியவர் எவராவதிருந்தால் அவர் பெயரும், முகவரியும், உறவும். |
|---|---|---|---|---|---|
| (1) | (2] | (3) | (4) | (5) | (6) |

இடத்தில் தேதியிட்டது.

கையொப்பத்திற்கு இரண்டு சாட்சிகள்.

1.

2.

சந்தாதாரரின் கையொப்பம்.

* குறிப்பு.—எக்காலத்திலும் நிதியில் சந்தாதாரரின் வரவில் இருக்கக் கூடிய மொத்தத் தொகையையும் உள்ளடங்கும்படி இந்தக் கட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

III. சந்தாதாரருக்கு ஒரு குடும்பமில்லாதிருந்தால் ஒரு நபரை நியமிக்க விருப்பப்படும்போது,

1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு உதவித் தொகையுள்ள வருங் காலச் சேம நிதி ஓய்வூதியம் ஈட்டுறுதி விதிகளின் 4 ஆம் விதியில் விளக்கப்பட்டுள்ளபடியான ஒரு குடும்பமில்லாத நான் இதனால் கீழே சொல்லப்பட்டுள்ள நபரை, நிதியில் என் வரவில் இருக்கக் கூடிய தொகை, செலுத்தப்படுவதற்குரியதாவதற்கு முன்பும் அல்லது செலுத்தப்படுவதற்குரியதாகி, உண்மையில் செலுத்தப்

விதியின் (2) ஆம் உள்விதியின் கீழ் உதவித் தொகையுள்ள வருங்காலச் சேம ஒப்பூதிய நிதிக்குச் செலுத்தப்பட வேண்டிய தாக வரக் கூடிய எல்லாத் தொகைகளையும் செலுத்துவதற்குப் பிணையமாக இதனுள்ளடக்க ஈட்டுறுதிப் பத்திரத்தைத் தமிழ்நாடு ஆளுநருக்கு உரிமைப்படுத்துகிறேன்.

............ உள்ளடக்கப் பத்திரத்தின் மேல் யாதொரு முன் உரிமைப்படுத்தல் இல்லையென்றும் இதனால் சான்றளிக்கிறேன்.

............ தேதியிட்டது.

சந்தாதாரரின் கையொப்பம்.

கையொப்பத்திற்கு ஒரு சாட்சி.

(2)

அ, ஆ ஆகிய நான் உள்ளடக்கப் பத்திரத்தையும் அதன் கீழ் அல்லது அதைப் பொருத்து எனக்கும் எனது ..... வயதுள்ள மனைவிக்கும் எனக்காகவும் சொல்லப்பட்ட காகவும் அல்லது கூட்டு உரிமையாளர்களாக பின் இருப்பவர்களுக்காகவும் இதனால் உரிமைப்படுத்தி மாற்றுகிறேன். மேலும் இதில் எவரொருவரின் இறப்பின் பின்னர் இருப்பவரின் ரசீது உள்ளே பெயரளிக்கப் பட்டுள்ள ஈட்டுறுதி நிறுமத்துக்கு உள்ள இந்தியத் தலைவருக்கு பொறுப்பு நீக்கப்பட்டதற்குப் போதுமானதென்று விளம்பு கின்றேன்.

சாட்சிகள் --

19 தேதியிட்டது.

1

2

சந்தாதாரரின் கையொப்பம்.

இடம் :

(3)

.......... விலுள்ள அ, ஆ சந்தாதாரரும்.... -உம் .......... -ள்ள இ, ஈ (கூட்டாக உறுதியளிக்கப்பட்டவரு)மாகிய நாங்கள் மாதம் ஒன்றுக்கு நாங்கள் ...

உதவித் தொகையுள்ள வருங்காலச் சேம ஓய்வூதிய நிதிக்கு உள்ளடக்க ஈட்டுறுதிப் பத்திரத்திற்காகத் தவணை செலுத்துவது சொல்லப்பட அ, ஆ ஆல் செலுத்த வேண்டியதற்காக உதவித் தொகையுள்ள வருங்காலச் சேமிப்பு.

சந்தாக்களுக்குப் பதிலாக உள்ளடக்க ஈட்டுறுதி ஓய்வூதிய நிதியில் சொல்லப்பட்ட அ, ஆ வரவில் பத்திரத்திற்குப் பணங்கள் செலுத்துவதைத் தொகையிலிருந்து ஆண்டுதோறும் ........... ரூபாய்களைத் திரும்பப் பெறுவதை ஏற்றுக் கொள்வதற்கான எங்கள் கோரிக்கைக்குத் தமிழ்நாடு ஆளுநர் சம்மதித்துள்ளதைக் கவனித்து இதனால், கூட்டாகவும் தனியாகவும், 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு உதவித் தொகையுள்ள வருங்காலச் சேம நிதி ஓய்வூதிய ஈட்டுறுதி விதிகளில் 39 ஆம் விதி (2i) ஆவது உள்விதியின் கீழ்.

சொல்லப்பட்ட அ, ஆ இதற்குப் பின்னால் அந்த நிதிக்குச் செலுத்தப்படுவதற்குரிய எல்லாத் தொகைகளைச் செலுத்து வதற்குச் சொல்லப்பட்ட தமிழ்நாடு ஆளுநருக்கு உள்ளடக்க ஈட்டுறுதிப் பத்திரத்தைப் பிணையாக உரிமைப்படுத்துகிறோம்.

நாங்கள் இதனால் உள்ளடக்கப் பத்திரத்திற்கு இதற்கு முந்திய உரிமைப்படுத்தல் இல்லையென்று சான்றளிக்கிறோம்.

10 ஆம் தேதியிட்டது.

கையொப்பத்திற்குச் சாட்சி :

இடம் :

சந்தாதாரரின் கூட்டு உறுதியளிக்கப்பட்டவரின்
கையொப்பம்.

(4)

அ, ஆ இன் மனைவியும் உள்ளடக்கப் பத்திரத்தின உரிமைப் படுத்தப்பட்ட வருமான இ, ஈ ஆகிய நான் உறுதியளிக்கப்பட்ட அ, ஆ இன் வேண்டுகோளின் மேல் அந்தப் பத்திரத்தில் எனக்குள்ள பற்றுத் தொடர்பை அ. ஆ-வால் உதவித் தொகையுள்ள வருங்காலச் சேமிப்பு ஓய்வூதிய நிதிக்குச் செலுத்தப்பட வேண்டிய சந்தாக்களுக்குப் பதிலாக உள்ளடக்கப்பட்ட பத்திரத்திற்குச் செலுத்துவதை ஏற்றுக் கொள்ளச் சம்மதித்துள்ள தமிழ்நாடு

ஆளுநருக்கு அந்தப் பத்திரத்தை அ, ஆ உரிமைப்படுத்தும் பொருட்டு ஆ. ஆ-வின் உதவிக்காக, விடுவித்துக் கொள்ள ஒத்துக் கொண்டுள்ள நான் அ, ஆ-வின் கட்டளைப்படி உரிமைப்படுத்து கிறேன். சொல்லப்பட்ட அ, ஆ ஆகிய நானும் 1950 ஆம் ஆண்டு தமிழ்நாடு உதவித் தொகையுள்ள வருங்காலச் சேமிப்பு நிதி ஓய்வூதியம் ஈட்டுறுதி விதிகளின் 39 ஆம் விதியின் (2) ஆம் உள் விதியின் கீழ் இதற்குப் பின்னால் அ, ஆ-வால் இந்த நிதிக்குச் செலுத்தப்படுவதற்குரிய எல்லாத் தொகைகளும் செலுத்தப் படுவதற்குப் பிணையாக உள்ளடக்க ஈட்டுறுதிப் பத்திரத்தைச் சொல்லப்பட்ட ஆளுநருக்கு உரிமைப்படுத்தி உறுதி செய்கிறேன்.

உள்ளடக்கப் பத்திரத்திற்கு இதற்கு முந்திய உரிமைப்படுத்தல் ஒன்றுமில்லை என்று நாங்கள் இதனால் சான்றளிக்கிறோம்.

19 ஆம் தேதியிட்டது.

உரிமைப்படுத்தப்பட்டவர் சந்தாதாரர்
ஆகியவர்களின் கையொப்பங்கள்.

கையொப்பத்திற்கு ஒரு சாட்சி.

இடம் :

## மூன்றும் அட்டவணை.

(37 ஆம் விதியைப் பார்க்கவும்.)

தமிழ்நாடு ஆளுநர் மறு உரிமைப்படுத்துவதற்கும் உரிமைப் படுத்துவதற்குமான படிவங்கள்.

(1)

மேலே குறிப்பிடப்பட்ட அ, ஆவால் 1950 ஆம் ஆண்டு தமிழ் நாடு உதவித் தொகையுள்ள வருங்கால சேம நிதி—ஓய்வூதியம் ஈட்டுறுதி விதிகளின் 39 ஆம் விதியின் (2) ஆம் உள்விதியின் கீழ்ச் செலுத்தப்படுவதற்குரிய எல்லாத் தொகைகளும் செலுத்தப்பட்டு விட்டாலும் இனிமேல் அந்த மாதிரித் தொகைகளில் அவர் செலுத்தப்படவேண்டிய எல்லாப் பொறுப்புகளும் முடிவாகி விட்டபடியாலும் தமிழ்நாடு ஆளுநர் இதனால் உள்ளடக்க

ஈட்டுறுதிப் பத்திரத்தை சொல்லப்பட்ட அ, ஆவுக்கு மறு
அ, ஆ, & இ, ஈ
உரிமைப்படுத்துகிறார்

19 ஆம் தேதியிட்டது.

க.ச.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் தரப்பிலும்
நிதியின் கணக்கு அலுவலர் முன்னிலையில்.

நிறைவேற்றியவர்.

க.ப.

தம்முடைய அலுவல் பெயரையும் முகவரியையும்
சேர்க்க வேண்டிய ஒரு சாட்சி.

கணக்கு அலுவலரின் கையொப்பம்.

**(2)**

மேலே சொல்லப்பட்ட அ, ஆ ம் தேதியில் இறந்து விட்டதால் தமிழ்நாடு ஆளுநர் இதனால் உள்ளடக்க ஈட்டுறுதிப் பத்திரத்தை இ*, ஈ*க்கு உரிமைப்படுத்துகிறார்.

ம் தேதியிட்டது.

நிறைவேற்றியவர்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்
தரப்பிலும் நிதியின் கணக்கு அலுவலர்
முன்னிலையில்

ச.ப.

(தம்முடைய அலுவல் பெயரையும் முகவரி
யையும் சேர்க்க வேண்டிய ஒரு சாட்சி.)

க.ச.

கணக்கு அலுவலரின்
கையொப்பம்

---

* பத்திரத்தைச் சட்டப்படி உரிமையுள்ள நபரின் விவரங்களைப் பூர்த்தி செய்யவும்.

## நான்காம் அட்டவணை.

(18-ஆம் விதியைப் பார்க்கவும்.)

தமிழ்நாடு ஆளுநரால் மறு உரிமைப்படுத்தலின் படிவம்

தமிழ்நாடு ஆளுநர் இதனால் உள்ளடக்கப் பத்திரத்தில் சொல்லப்பட்ட அ.ஆ. க்கு மறு உரிமைப்படுத்துகிறார்

அ.ஆ.&இ.ஈ

19 ஆம்
தேதியிட்டது.

ஆல் எழுதப்பட்டது.

தமிழ்நாடு ஆளுநருக்காகவும்
அவர் சார்பிலும் நிதியின்
கணக்கு அலுவலர் முன்னிலையில்

ச.ப.
(தமது அலுவல் பெயரையும
முகவரியையும் சேர்க்க
வேண்டிய ஒரு சாட்சி.)

க.ச.
கணக்கு அலுவலரின்
கையொப்பம்.

## ஐந்தாம் அட்டவணை.

(13-ஆம் விதியைப் பார்க்கவும்.)

தற்காலிகமாக முன்பணம் அளிக்கத் தகுதியுள்ள அதிகாரிகள்.

1. ஒரு முன் பணம் அளிக்க, 13-ஆம் விதியின் (ஆ) கூறு அல்லது (இ) கூற்றின் கீழ் தனிப்பட்ட காரணங்கள் தேவைப் படாத முன்பணத்திற்கு அந்தச் சந்தாதாரருக்கு விடுப்பு அளிக்கத் தகுதியுள்ள அதிகாரியால் ஒப்பளிப்புத் தரப்படலாம்.

2. ஒரு முன் பணம் அளிக்க 13-ஆம் விதியின் (ஆ) கூறு அல்லது (இ) கூற்றின் கீழ்த் தனிப்பட்ட காரணங்கள் தேவைப்படு பவைகளில் அந்தச் சந்தாதாரரை வேலையிலிருந்து தள்ளிவிடத் தகுதியுள்ள அதிகாரியாலும் அல்லது சந்தாதாரரின் பணிகள் இரவலாக அளிக்கப்பட்டு அவர் இரவலாக வகிக்கும் பணியிடத்தில் ஒரு நிலையான பதவி வகித்தால், அவரை வேலையிலிருந்து தள்ளி விடத் தகுதியுள்ள அதிகாரியாலும் ஒப்பளிக்கப்படலாம்.

## ஆறும் அட்டவணை.

(27-ஆம் விதியைப் பார்க்கவும்.)

நான் (இவ்விடத்தில் பெயரையும் அலுவல் பெயரையும் இடத்தையும் சொல்லவும், இதனால் இங்கு ஈட்டுறுதி நிறுமத்தின் பெயரைச் சொல்லவும்) உடன் உள்ள                    என் பத்திரம் முதிர்வடைந்ததன் பேரில் அதன் கீழும் அதைப் பொருத்தும், மேலே சொல்லப்பட்ட ஈட்டுறுதி நிறுமத்திலிருந்து வரப்பெற வேண்டிய எல்லாப் பணங்களையும் பெற்று. நான் அவ்வாறு விருப்பப்பட்டால் 1950-ஆம் ஆண்டு தமிழ்நாடு உதவித் தொகை யுள்ள வருங்காலச் சேம நிதி ஓய்வூதியம் ஈட்டுறுதி விதிகளின் 27-ஆம் விதியின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள குறுமத் தொகையை மட்டும் நிதியில் என் வரவுக்குச் செலுத்தவும் மீதியை என்னிடம் நிறுத்திக் கொள்ளவும் எனக்கு உரிமையுண்டு என்று புரிந்து கொண்டு (அல்லது அந்த ஈட்டுறுதி பத்திரம் நிதியிலிருந்து பணம் செலுத்தப்பட்டு வரும் விஷயத்தில் நிதியிலிருந்து திரும்பப் பெறப்பட்ட தொகையும் வட்டியும் 35-ஆம் விதியில் சொல்லப் பட்டுள்ளபடி எது அதிகமானதோ) சொல்லப்பட்ட அந்தப் பணங்களை என்னுடைய உதவித் தொகை சேர்ந்த வருங்காலச் சேம ஓய்வூதிய நிதியின் வரவுக்குச் செலுத்துவேன் என்று உறுதியளிக்கிறேன்.

19        ம் தேதியிட்டது.

சாட்சிகள்.

1.

2.

சந்தாதாரரின் கையொப்பம்.

## இணைப்பு II

[10 (3)-ஆம் விதியைப் பார்க்கவும்.]

மொத்தச் சம்பள விவரப் பட்டியல்கள் தயாரிப்பதற்கும் சரிபார்ப்பதற்கும் அனுப்பப்படுவதற்குமான அறிவுரைகள்.

1. அரசாங்கப் பதிவு பெறாத அரசாங்கப் பணியாளர்களைப் பொருத்தவரை, கட்டுப்பாட்டு அலுவலரும் அல்லது முதல் மாவட்ட அலுவலரும், அரசிதழ்ப் பதிவு பெற்ற அலுவலர்களைப் பொருத்த

வரை துறையின் தலைவரும் அரசாங்கத்தால் செலுத்தப்பட வேண்டிய உதவித் தொகையைக் கணக்கிடும் பொருட்டு நிதிக்குச் சந்தாதாரராயுள்ள ஒவ்வொரு அரசாங்கப் பணியாளரும் பெறும் மொத்தச் சம்பளத் தொகையைக் காட்டும் ஒரு விவரப் பட்டியலைப் பெற்றுச் சரிபார்த்து ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதிக்குள் அந்த நிதியின் கணக்கு அலுவலருக்கு அனுப்ப வேண்டும். அந்த விவரப் பட்டியல் இந்த அறிவுரைகளின் முடிவில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் தயாரிக்கப்பட்டு, அந்த நிதி யாண்டில் ஒவ்வொரு சந்தாதாரராலும் பெறப்பட்ட சம்பளத் தையும் 10(2) ஆம் விதிகளின் கீழ் விடுப்புக் காலங்களில் கணக்குக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டிய சம்பளத்தையும் காட்ட வேண்டும். அரசிதழ் பதிவு பெறாத அரசாங்கப் பணியாளர்களைப் பொருத்தவரை விவரப் பட்டியல் அலுவலகத் தலைவரால் தயாரிக்கப்பட்டு அவர் அந்த விவரப் பட்டியின் (7) ஆவது கட்டத்தில் பதியப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் அந்த அரசாங்கப் பணியாளரின் பணிப் பதிவேட்டில் உள்ள பதிவு களுடன் அல்லது சம்பள பட்டிகளின் அலுவலக பிரதிகளுடன் சரிபார்க்கப்பட்டு சரியாகக் காணப்பட்டது என்று விவரப் பட்டியின் மேல் ஒரு சான்று பதிவு செய்யப்பட வேண்டும். ஒரு சந்தாதாரர் அந்த ஆண்டில் வேறுபட்ட அலுவலகங்களில் பணியாற்றியிருந்தால், கணக்கு அலுவலருக்கு அந்த விவரப் பட்டியல் அனுப்பப்படும்போது அவர் வேலை செய்யும் அலுவலகத் தலைவர் அந்த ஆண்டு முழுவதற்கும் ஒரு முழுப் படிவத்தில் விவரப் பட்டியல் அனுப்பி வைக்கப் பொறுப்பாளியாவார். ஒவ்வொரு அலுவலகத் தலைவரும் தம் கட்டுப்பாட்டின் கீழுள்ள எல்லாச் சந்தாதாரர்களுக்கும் சம்பந்தப்பட்ட மொத்தச் சம்பள அறிக்கைகளைப் பெற்று அவைகளின் பணிப் பதிவேடுகளுடன் முதல் மாவட்ட அலுவலருக்கு அனுப்ப வேண்டும். அவர் தன்னுடைய முறையில் அந்த விவரப் பட்டிகளிலுள்ள பதிவுகளைப் பணி பதிவேடுகளிலுள்ள பதிவுகளுடன் எதிர் சரிபார்த்து விவரப் பட்டிகளில் அந்தப்படி செய்வதற்கு ஒரு சான்று பதிவு செய்து அவைகளை அந்த ஆண்டில் ஏப்ரல் மாதம் 30 ஆம் தேதிக்குள் அந்த நிதியின் கணக்கு அலுவலரிடம் சேரும்படி அனுப்ப வேண்டும்.

2. ஒரு அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரின் மொத்தச் சம்பள விவரப் பட்டியல் அந்த அலுவலராலேயே தயாரிக்கப்பட்டு இரட்டைப் பிரதியில் சம்பந்தப்பட்ட துறைத் தலைவருக்கு ஆண்டு

தோறும் எப்ரல் மாதம் 6 ஆம் தேதிக்கு முன்னால், ஒன்றை நேராகவும் மற்றொன்றை அவர் எந்தக் கருவூல அலுவலரிடமிருந்தும் தம் சம்பளத்தைப் பெறுகிறாரோ அவர் மூலமாயும் அனுப்ப வேண்டும். கருவூல அலுவலர் மொத்தச் சம்பள விவரப் பட்டியலிலுள்ள சம்பள விகிதங்களைக் கணக்குத் துறை தலைவரால் தமக்கு அனுப்பப்பட்டுள்ள சம்பளத்தாளின் பிரதிகளுடன் ஒத்திட்டுச் சரிபார்க்க வேண்டும். பின்னர் அந்த விவரப் பட்டியலின் மேல் அவ்வாறு ஒரு சான்று பதிவு செய்து சம்பந்தப் பட்ட துறைத் தலைவருக்கு அந்த ஆண்டின் எப்ரல் மாதம் 15-ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும். அந்த ஆண்டில் ஒரு அரசிதழ்ப் பதிவு பெற்ற அலுவலர் இரண்டு அல்லது மேற்பட்ட மாவட்டங் களில் பணி செய்திருந்தால், கருவூல அலுவலர் ஏனைய மாவட்டங்களுக்குச் சேர்ந்த காலங்களில் சம்பள விகிதங்களை அந்த ஆண்டு முழுதும் செலுத்தப்பட்ட எல்லாத் தொகைகளின் விவரங்களையும் கொண்டுள்ள முன் ஊதியச் சான்றை வைத்துச் சரிபார்க்க வேண்டும். துறைத் தலைவர் தம் கட்டுப்பாட்டின் கீழ்ப் பணியாற்றும் ஒவ்வொரு அரசிதழ்ப் பதிவு பெற்ற அலுவலரின் மொத்தச் சம்பள விவரப் பட்டியல் கணக்கு அலுவலரிடமிருந்து வருவதை அந்த அலுவலரிடமிருந்து தமக்கு நேரே வந்த பிரதியைக் கொண்டு கவனிக்க வேண்டும். விவரப் பட்டியல்களை அவை வர வர வசதியான தொகுதிகளில் ஒவ்வொரு ஆண்டும் எப்ரல் மாதம் 30 ஆம் தேதிக்குள் கணக்கு அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.

3. தமிழ்நாடு மாநகரத்தில் பணி செய்யும் ஒரு அரசிதழ்ப்பதிவு பெற்ற அலுவலர் அந்த மொத்தச் சம்பள விவரப் பட்டியலை சம்பந்தப்பட்ட துறைத் தலைவருக்குச் சென்னை, சம்பளக் கணக்கு அலுவலர் மூலமாக அனுப்ப வேண்டும். அவர் அவைகளில் காட்டப்பட்டுள்ள சம்பள விகிதங்களைச் சரிபார்த்து அவைகளைச் சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு அனுப்பிவிட வேண்டும்.

4. அந்த ஆண்டு முழுவதும் அல்லது ஒரு பாகத்தில் அயற் பணியிலிருந்த ஒரு அரசாங்கப் பணியாளரைப் பொறுத்தவரை அந்தச் சந்தாதாரர் ஒரு அரசிதழ்ப்பதிவு பெறாத அலுவலராயிருந் தால் முதல் மாவட்ட அலுவலராலும் அந்தச் சந்தாதாரர் ஒரு அரசிதழ்ப் பதிவு பெற்ற அலுவலராயிருந்தால் துறைத் தலைவராலும் அடியிற்கண்ட படிவத்தில் சான்று ஒன்று மொத்தச் சம்பள விவரப் பட்டியலின் மேல் பதிவு செய்யப்பட வேண்டும்.

"உதவித் தொகையுள்ள வருங்காலச் சேம நிதி ஓய்வூதிய விதிகளின் கீழ் அரசாங்க உதவித் தொகைக்காக அயல் நாட்டில் வேலை கொடுப்பவர் உதவித் தொகை—முதல் வரைக்கும் வசூலிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ளது என்று சான்றளிக்கப்படுகிறது."

## மொத்தச் சம்பள விவரப் பட்டியின் படிவம்.

(II ஆவது இணைப்பின் I ஆவது பத்தியைப் பார்க்கவும்.)

| (1) | (2) | (3) | (4) | (5) |
|---|---|---|---|---|
| தொடர் எண். | உதவித் தொகையுள்ள வருங்கால சேம ஓய்வூதிய நிதிக் கணக்கு எண். | சந்தாதாரரின் பெயரும் பதவியும். அவர் தற்காலம் பணி செய்யும் அலுவலகமும். | நிலையாக நியமிக்கப்பட்ட தேதி எதாவது இருந்தால். | முதல் பதவியில் தகுதிகாண் பருவத்தை முடித்த தேதி. |

| (6) | (7) | (8) | (9) | (10) |
|---|---|---|---|---|
| எந்தத் தேதியிலிருந்து அரசாங்கப் பணியில் தொடர்ந்து இருக்கிறார். | அடிப்படை விதி 9 (21)ல் விளக்கியுள்ள படி அவ்வப்போது பதிலிச் சம்பளம் உட்பட பெறப்பட்ட சம்பள விகிதம். | உதவித் தொகை அளிக்கப்பட வேண்டிய ஆண்டில் அல்லது தக்க படி அதன் பாகத்தில் உள்ள படியாகப் பெறப்பட்ட மொத்த ஊதியங்கள். | (7) ஆம் கட்டத்தில் காட்டப்பட்டுள்ள மொத்த ஊதியங்களின்மேல் ரூபாய்க்கு 9 பைசா வீதம் கணக்கிடப்பட்டுச் செலுத்தப்பட வேண்டிய அரசாங்க உதவித் தொகை. | குறிப்புரை எதாவதிருந்தால். |

*குறிப்பு.*—(4), (5), (6) கட்டங்கள் தவறாமல் பணப் பதிவேடுகளிலுள்ள பதிவுகளுடன் ஒத்திட்டுப் பார்க்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

(2) (அ) உதவித் தொகையுள்ள வருங்காலச் சேம ஓய்வூதிய நிதி விதிகளின் 10 ஆம் விதியில் சொல்லியுள்ளபடி அந்தக் காலத்தில் உள்ளபடியாகப் பெறப்பட்ட ஊதியங்கள் மட்டும்

கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். இது இயல்பாகப் பின்வரும் ஆண்டில் மார்ச்சு மாதம் முதல் பிப்ரவரி மாதங் களுக்குச் சம்பளமாக இருக்கும். அதாவது எப்ரல் மாதத்தில் பெறப்பட்ட மார்ச்சு மாதத்தின் சம்பளம் முதல் அடுத்த மார்ச்சில் பெறப்பட்ட பிப்ரவரி மாதச் சம்பளம் வரையில்.

(ஆ) விடுப்பில் உள்ள சந்தாதாரரைப் பொருத்தவரை அவர் விடுப்பில் செல்லாதிருந்தால் என்ன பெற்றிருப்பாரோ அதன் மேல் ஊதியங்கள் கணக்கிடப்பட வேண்டும். விடுப்புக் காலங்கள் எப்படியும் காட்டப்பட வேண்டும். சந்தாதாரர் படிகள் இல்லாத தனிப்பட்ட விடுப்பில் இருந்த காலங்களுக்கும் அரசாங்க உதவித் தொகை ஏற்றுக்கொள்ளத்தக்கதாகும்.

(இ) பதிலியாகவுள்ள உயர்ந்த பணியிடத்திலிருந்து விடுப்பில் செல்லும் ஒரு சந்தாதாரரைப் பொருத்தவரை அந்த விடுப்புக் காலத்திற்கு அந்தப் பதிலிப் பணியிடத்தின் சம்பளத்தின் மேல் அரசாங்க உதவித் தொகை வரவு வைக்கப்பட வேண்டி வருபவைகளில், தகுதியுள்ள அதிகாரியிடமிருந்து அந்த விடுப்பில் அவர் செல்லாதிருந்தால் அந்த உயர்ந்த பணியிடத்தில் அவர் தொடர்ந்து பதிலி பார்த்திருப்பார் என்றதற்கு சான்று அளிக்கப்பட வேண்டும்.

(3) சந்தாதாரர் அந்தக் காலத்தில் ஒரு பணியிடத்துக்கு மேற்பட்டவைகளில் பணி செய்திருந்தால் அவர் வகித்த பணியிடங்கள் அவை வகிக்கப்பட்ட காலங்கள் ஆகிய விவரங்கள் (3) ஆவது கட்டத்தில் கொடுக்கப்பட வேண்டும்.

(4) தகுதிகாண் பருவம் அந்த ஆண்டில் முடிக்கப்பட்டால் அரசாங்க உதவித் தொகை அந்தத் தேதியிலிருந்து தான் ஏற்கத் தக்கது என்பதைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

*(5) அந்த வரைப்பட்டியின் (7) ஆவது கட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சம்பள விகிதங்கள் சந்தாதாரரின் பணிப் பதிவேட்டில் உள்ள அல்லது தக்கபடி சம்பளப் பட்டிகளின் அலுவலகப் பிரதிகளிலுள்ளவை களுடன் ஒத்திட்டுச் சரிபார்க்கப்பட்டன என்று சான்று அளிக்கப்பட வேண்டும்.

*[அ.ஆ. பலவகை எண் 1 நிதி (உ. வ. ஒ. நி) 3—1—1955 தேதியிட்டது.]

**தமிழ் நாடு மாநிலத்தில் மருத்துவ உதவியும் அரசாங்க மருத்துவ நிலையங்களில் கட்டணங்கள் விதிப்பதையும் பற்றியும் விதிகள்.**

1. சிறுதலைப்பு.—இந்த விதிகள் "தமிழ்நாடு மருத்துவ உதவி விதிகள்" என்று சொல்லப்படலாம்.

2. பொருந்தும் பரப்பு.—(அ) இந்த விதிகள் தமிழ்நாடு மாநில முழுமைக்கும் பரவியிருக்கும்.

(ஆ) இந்த விதிகள் செகரட்டரி-ஆப்-ஸ்டேட்ஸ் பணிகள் (மருத்துவ உதவி) 1938 ஆம் ஆண்டு விதியின் கீழுள்ள நபர்களுக்கும் ஆனாலும் இவை செகரட்டரி-ஆப்-ஸ்டேட்ஸ் விதிகளுடன் முரண்பாடில்லாத வரைக்கும் பொருந்தும்.

**விளக்கங்கள்.—**

3. இந்த விதிகளின் நோக்கத்திற்காக அரசாங்கப் பணியாளர் என்பது தமிழ்நாடு அரசாங்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள முழுக் கால அரசாங்கப் பணியாளர் என்று பொருள்படும். மருத்துவ உதவியைப் பொறுத்தவரை பரிமாற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ள ஏனைய மாநில அரசாங்கங்களின் கீழ்ப் பணி செய்யும் அப்படிப்பட்ட அரசாங்கப் பணியாளர்களும் இதில் அடங்குவர். ஆனால் பகுதிக்கால அல்லது சிறப்புறு பணியாளர்கள் இதில் அடங்கார்.

"பதிவு செய்யப்பட்ட மருத்துவர்" என்றால் 1914 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பதிவுச் சட்டத்தின் கீழ்ப் பதிவு செய்யப்பட்ட ஒரு நபர் என்று பொருள்படும்.

*"குடும்பம்" என்பது அந்த அரசாங்கப் பணியாளரின் சட்டப்படி உரிமையுள்ள குழந்தைகளையும் (ஒரு தத்து எடுக்கப்பட்ட மகன் உள்பட) அவருடன் வசித்துக் கொண்டு அவருடைய ஆதரவிலேயே உள்ள மாற்றான் தாய்ப் பிள்ளைகளும் ஒரு ஆண் அரசாங்கப் பணியாளரைப் பொருத்தவரை அவர் மனைவியும், ஒரு பெண் அரசாங்கப் பணியாளரைப் பொருத்தவரை அவள் கணவன் அவளாலேயே முழுதும் ஆதரிக்கப்பட்டிருந்தால், அந்தக் கணவரையும், சேர்த்துப் பொருள்படும். "மருத்துவ உதவி" என்பது ஒரு நியமிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரால் உரிமை

* (அ.ஆ. பலவகை எண் 2436, சுகாதாரம், 30—7—1952 ஆம் தேதியிட்டது.

யுள்ள அரசாங்கப் பணியாளரின் வசிக்குமிடத்திலும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளருடைய மருத்துவ உதவி அறையிலும் தக்கபடியளிக்கக் கூடிய அறுவை மருத்துவம் உள்பட நோய் அல்லது காயம் உள்ளபோது தொழில் முறையில் அளிக்கப்படும் அறிவுரையும் கவனிப்பும் என்று பொருள்படும்.

"வசதியுள்ள நபர்" என்பது ஆண்டு வருமானம் ரூ. 1200-ம் அல்லது அதற்கு அதிகமாகப் பெறும் நபர் என்றும் அல்லது அப்படிப்பட்ட நபரின் குடும்பத்தில் உள்ளபடியாக அவர் ஆதரவில் உள்ள ஒரு உறுப்பினர் என்றும் பொருள்படும்.

**4. இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுடைய நபர்கள்.—** அடியிற் காணும் நபர்கள் இலவச மருத்துவ உதவிக்கு உரிமை பெற்றவர்கள் :—

*இந்த விதிகளில் குறிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்ட தமிழ் நாடு அரசாங்கத்தின் விதி இயற்றும் அதிகாரங்களின் கீழ் உள்ள எல்லா அரசாங்கப் பணியாளர்களும்;

**குறிப்பு.—**எல்லா அரசாங்கப் பணியாளர்களும் அவர்கள் பணியிலிருந்தாலும் அல்லது மாநிலத்தில் எங்கேனும் விடுப்பிலிருந்தாலும் வேற்றுமையின்றி இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுள்ளவர்களாவார்கள்.

†(ஆ) மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய்க்கு அதிகப்படாத சம்பளம் பெறும் உள்ளாட்சிக் கழகங்களின் பணியாளர்கள்.

**குறிப்பு.—**300 ரூபாய் வருமான வரம்பிற்கு அகவிலைப்படி வீட்டு வாடகைப் படியும் வாழ்க்கைப் படியும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டும். ஆனால் ஊர்திப்படியும் அல்லது இலவசக் குடியிருப்பு வசதிக்குப் பதிலாக அளிக்கப்படும் படியும் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது.

(இ) மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய்க்கு அதிகப்படாத சம்பளம் பெறும், தமிழ் நாடு அரசாங்கத்தின் விதிகள் இயற்றும் அதிகாரங்களின் கீழுள்ள அரசாங்கப் பணியாளர் உள்ளாட்சிக்

---

*(அ.ஆ. எண் 2628, சுகாதாரம், 13—8—1952 தேதியிட்டது.)

†(அ.ஆ. எண் 1914, சுகாதாரம், 20—5—1953 தேதியிட்டது.)

கழகங்களில் பணி செய்பவர் இவர்களின் குடும்பங்களும் அடியிற் குறிப்பிட்ட அளவில்;

*ஒவ்வொரு நிகழ்வுகளிலும் அந்த அரசாங்க ஊழியருக்கே ஏற்கப்படும் அளவிலும் நிபந்தனைகளிலும் அரசாங்க மருத்துவ நிலையங்களில் மருத்துவ மனையில் அல்லது நோய்க் குறியியல் அல்லது நுண்ணுயிரியல் அல்லது உடல் ரசாயன இயல் ஆய்வகத்திலும் இலவச மருத்துவ வருகையுதவியும் சிகிச்சையும் இந்தச் சலுகை. இலவசமாக தாமே உரிமையுடைய ஒரு மருத்துவ அல்லது அரசாங்க மருத்துவ நிறுவனங்களிலுள்ள நோய்க் குறியியல் அல்லது பாக்டீரியா (நுண்ணுயிர் இயல்) அல்லது பையோகெமிகல் (உடல் ரசாயன) ஆராய்ச்சி சாலைகளில் தவிர இதர மருத்துவ உதவி அல்லது சிகிச்சை அல்லது மாதிரிகளை ஆய்வு செய்வதையும் சேர்க்காது.

†(ஈ) தமிழ்நாடு மாநிலத்தில் அரசாங்க மருத்துவ மனைகளில் பணி செய்யும் கௌரவ மருத்துவ அலுவலர்கள் மனை (ஹவுஸ்) அறுவை மருத்துவர்களும் மனை மருத்துவர்களும் சென்னை நகரில் அரசாங்க மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களும் இந்த மாநிலத்தில் அரசாங்க மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களும் இந்த மாநிலத்தில் அரசாங்க மருத்துவ மனைகளில் பயிற்சி பெறும் செவிலிய மாணவர்களும் பல்வேறு மகப்பேறு உதவியாளர்களும்.

(1952 செப்டம்பர் மாதம் 9-ம் தேதியிடப்பட்ட அரசாங்கக் குறிப்பாணை எண் 29810 எச்-3, சுகாதாரம்.

**குறிப்பு.—ஒரு அரசாங்கப் பணியாளர் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு மாற்றப்பட்டபோது சென்றவிடத்தில் குடியிருக்க வீடு கிடைக்காமையாலோ அல்லது அவர் குழந்தைகள் படித்துக் கொண்டிருப்பதாலோ அவர் குடும்பத்தைப் பின்னால் விட்டுவிட்டுச் சென்றிருந்தபோது அவர் குடும்பத்தில் உறுப்பினர்கள் அவர்கள் வசிக்கும்

---

* (அ.ஆ. பலவகை எண் 729, பொ.சு., 11—3—1946, தேதியிட்டது.)
† (அ.ஆ. பலவகை எண் 1464, பொ.சு., 28- 6—1943, தேதியிட்டது.
** (அ.ஆ. எண் 29810, எச். 3, சுகாதாரம், 7—9—1952, தேதியிட்டது)

இடத்திலேயே அதை விட்டு அந்த அரசாங்கப் பணியாளர் மாற்றப்பட்டுள்ள இடத்திற்குப் போகும் வரையில், மாநில அரசாங்க மருத்துவ நிலையங்களில் இலவச மருத்துவ உதவிக்குத் தகுதியுள்ளவர்களாவார்கள்.

(ஈ) கிறித்தவச் சிறு கோவில் குருக்களும் ( Chaplains ) கிறித்துவச் சிறு குருக்களின் மனைவிகளும் குடும்பங்களும்.

*குறிப்பு (1).—மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் என்பதில் பி.எஸ்.வி. (மருந்தாக்கல்), துப்புரவு ஆய்வாளர் படிப்பு, மருந்தாக்குவதில் டிப்ளோமா, (மருந்து சரக்குகள் கலந்து கொடுப்பவரும் ரசாயனரும்), பி.எஸ்.வி., L. P. H. போன்ற படிப்புகளில் ஈடுபட்டுள்ள மாணவர்களும் எம்.பி.பி.எஸ். படிப்பில் உள்ளவர்களும் அடங்குவார்கள்.

குறிப்பு (2).—சென்னை மாநகரத்திலும் மாநகரங்களில்லாத ஏனைய பகுதிகளிலும் சட்ட அலுவலர்கள் (அதாவது மாநிலத் தலைமை வழக்கறிஞர் மாநிலக் குற்றவியல் வழக்கு நடத்துநர், மாநில வழக்கறிஞர், அரசாங்கக் குற்றவியல் வழக்கறிஞரும், அரசாங்கக் குற்றவியல் வழக்கு நடத்துநர், தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை, தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள், உள்ளாட்சிக் கழகங்களின் தலைவர்களும் உறுப்பினர்களும், 300 ரூபாய்களுக்கு அதிகமாய் மாதச் சம்பளம் பெறும் உள்ளாட்சிக் கழகப் பணியாளர்கள், பல்கலைக் கழகங்களில், இந்திய ரிசர்வ் வங்கி, நாணய நோட்டு அலுவலகம், ஓய்வு பெற்ற அரசாங்கப் பணியாளர்களும் கிராம அலுவலர்களும் இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுடையவர்களாக மாட்டார்கள்.

5. (இ) இணைக்கப்பட்ட புதுக்கோட்டை மாநிலத்தின் அரசரும் அவர் குடும்பமும், இலவச மருத்துவ உதவி சிகிச்சை நோக்கங்களுக்காக செகரட்டரி-ஆப்-ஸ்டேட் பணியாளர் தொகுதியின் உறுப்பினர்களுடன் சமமாக நடத்தப்படுவார்கள். மேலும் 1938 ஆம் ஆண்டு செகரட்டரி-ஆப்-ஸ்டேட்டு பணியாளர் தொகுதிகள் (மருத்துவ உதவி) விதிகளின் ஏற்பாடுகளில்,

---

*(அ.ஆ. எண் 2053, சுகாதாரம், 20—6—1963 தேதியிட்டது.)

பயணப்படி சம்பந்தமானதும் அவர்களால் பெறப்பட்ட மருத்துவப் பணியின் எதேனும் செலவுகளைத் திரும்பப் பெறுவது சந்பந்தமானதும் தவிர, மற்றவை அவர்களுக்குப் பொருந்தும்.

* (ஆ) இணைக்கப்பட்ட புதுக்கோட்டை மாநில அரசின் நேர்முகப் பணியாளர்களுக்கு மருத்துவ உதவி, சிகிச்சை, இருக்க வசதி ஆகியவற்றில் அரசாங்கத்தின் விதி இயற்றும் அதிகாரங்களின் கீழுள்ள அரசாங்கப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும். அதே மாதிரியான தனிச் சலுகைகள் அளிக்கப் படுவார்கள்.

(6) முடமாக்கப்பட்ட காப்புப் பணியாளர் தொகுதி யிலிருந்து வந்த பணியாளர்கள், அவர்கள் வருமானம் எதுவாயினும் அரசாங்க மருத்துவ மனைகள் பொதுப் பகுதிகளில் உணவும் சிறப்புச் சிகிச்சையும் உள்பட இலவசச் சிகிச்சை யளிக்கப்படுவார்கள்.

† குறிப்பு.—அப்படிப்பட்ட நபர்கள் அ, ஆ அல்லது இ வகுப்புப் பகுதிகளில் அல்லது தனிப்பட்ட பகுதிகளில் சேர்க்கப்பட்டால் வழக்கமான செலவுகள் வசூலிக்கப்படும். ஆனால் தனிப்பட்ட வற்றில், மருத்துவத் துறை இயக்குநரின் பரிந்துரைப்பின் மேல் சலுகைகள் அளிப்பதைப் பற்றிக் கவனிக்க அரசாங்கம் தயாராயிருக்கும்.

## இலவச மருத்துவ உதவிக்கான ஏற்பாடுகள்.

(அ) சென்னை மாநகரம். சென்னை மாநகரத்தின் இந்த வகுப்பு அரசுப் பணியாளர்களைச் சென்று பார்வையிடும் வேலை மருத்துவ அலுவலர்களுக்கு மிகவும் அதிகத் தொல்லை தருமாதலாலும் அவ்விடத்தில் மிகவும் மிதமான செலவில் அரசாங்க மருத்துவ மனைகளில் தகுந்த இடவசதி இருப்பதாலும் அரசாங்க ஊழியர்கள் இந்த வசதிகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்ய ஒப்புக் கொள்ளாதவர்கள் மருத்துவ உதவிக்குத் தம் சொந்த ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

---

* (அ. ஆ. பலவகை எண் 3456, சுகாதாரம், 13—10—1950 தேதியிட்டது.

†(அ.ஆ. எண் 2449, பொ.சு. 17—3—1946 தேதியிட்டது.)

(ஆ) சென்னை நகரத்திற்கு அப்பாலுள்ள மாவட்டங்கள்.—(1) 100 ரூபாயும் அதற்கு மேலும் சம்பளம் பெறும் எல்லா அரசாங்கப் பணியாளர்களும், மருத்துவ அலுவலரை அவர் வீட்டிலேயே கலந்து ஆலோசனை கேட்பதைத் தடுப்பதற்காக, அவர்கள் நோயுற்றிருக்கும்போது அந்த இடத்திலுள்ள அல்லது அந்த மாவட்டத்தின் மருத்துவ அலுவலர் தங்கள் இல்லங்களுக்கு வந்து உதவியளிக்க உரிமை பெற்றிருக்கிறார்கள்.

(2) நூறு ரூபாய்களுக்குக் குறைவாகச் சம்பளம் பெறுபவர்களைப் பொருத்தவரை மருத்துவ அலுவலர், அவர்கள் வீட்டிலேயே சென்று பார்வையிட வேண்டியவை அடிக்கடி நேரலாம். அந்த மாதிரியுள்ளவைகளில் தெளிவான விதிகள் விதிப்பதற்குப் பதிலாகத் தொழிலின் நல்ல எண்ணத்திலும் உணர்விலும் நம்பிக்கையுடையவர்களாயிருக்கிறார்கள்.

(3) ஒரு நோயாளி ஒரு மருத்துவ அலுவலரின் வீட்டில் அல்லது அந்த அரசாங்கப் பணியாளரின் தகுதியினையும் அந்நிகழ்வின் சூழ்நிலையையும் கருத்திற் கொண்டு இக்காரியத்திற்காகக் குறிப்பிட்ட நேரத்தில் ஓரிடத்தில் வந்து காத்திருப்பதற்கு நோயாளிக்கு முடியாததாக இருந்தாலொழிய மருத்துவ அலுவலர்கள் அரசாங்கப் பணியாளர்களை அவர்களது வீட்டிற்கு வந்து கவனிக்க எதிர்பார்க்க முடியாது என்று நன்றாகத் தெரிந்து கொள்ள வேண்டும். இந்த விதியின் (இ) (1) கூற்றின் ஏற்பாட்டிற்கு இது உள்பட்டதாகும்.

(4) ஒரு உதவி மருத்துவர் இருந்தும் தக்க மருத்துவ இட வசதியில்லாத ஒரு இடத்தில், மேற்பட்ட சார்நிலைத் தாத்திலுள்ள அரசாங்க அரசிதழ்ப் பதிவு பெறாத எழுத்தர்கள் உள்பட்ட பணியாளர்களை அந்த மருத்துவ அலுவலர் அலுவல் முறையில் குடியிருக்குமிடத்திலிருந்து இரண்டு மைல்களுக்கு அதிகமான தொலைவில் வசித்திருந்து ஊர்தி வாடகைச் செலவைக் கொடுப்பதாகவுமிருந்தால் அவர்களது இருப்பிடங்களிலேயே சென்று கவனிப்பது அந்த அலுவலரின் கடமையாகும். அந்தத் தூரம் அந்த மருத்துவருக்குப் பயணப்படி பெற உரிமை அளிக்கக் கூடியதாயிருந்தால் அந்தத் தொகை அரசாங்கத்தால் செலுத்தப் படத் தக்கதாகும். அந்நிகழ்வு ஆபத்தானதென்று தெரிவிக்கப் பட்டால் சிவில் மருத்துவர் அந்த நோயாளியைச் சென்று பார்ப்பார்.

(5) செயிண்ட் தாமஸ் மவுண்டில் (பரங்கிமலை) அல்லது அதற்கு மிகவும் அண்மையில் வசிக்கும் சிவில் அலுவலர்கள், அந்த இடத்தில் (கண்டோன்மெண்ட்) பாளையத்தில் உள்ள படை மருத்துவ அலுவலர்களில் ஒருவரிடமிருந்து இலவச மருத்துவ உதவி பெறுவதற்கு உரிமையுள்ளவராவார்கள். அந்த மருத்துவ அலுவலர்கள் இந்தியாவில் படையின் மருத்துவப் பணிகளுக்கான ஒழுங்கு முறை விதிகளின் 90, 252 ஆம் பத்திகளில் கூறப்பட்டபடி உள்ளூர் ஏற்பாடாகப் பணியாளர் மருத்துவரின் கடமைகளைச் செய்யும் பொருட்டுப் படை அதிகாரிகளால் நியமிக்கப்பட வேண்டும்.

(6) அரசாங்க மருத்துவ நிறுவனங்கள் இல்லாத இடங்களில், அடியிற்காணும் வகுப்பு நிறுவனங்களில் அமர்த்தப் பட்டிருக்கும் மருத்துவ அலுவலர்கள் அந்த இடங்களில் உள்ள அரசாங்கப் பணியாளர்களுக்கு இலவச மருத்துவ உதவியளிக்க வேண்டும் :—

(i) அவைகளில் அமர்த்தப்பட்டுள்ள மருத்துவ அலுவலர்களின் சம்பளத்திற்காக ஒரு குறிப்பிட்ட சதவிகித உதவித் தொகையளிக்கப்படும் உள்ளாட்சி நிதி, நகராட்சி மருத்துவ நிலையங்கள்.

(ii) ஆண்டுப் பராமரிப்புச் செலவுகளில் அரசாங்கம் பாதியை ஏற்றுக் கொள்ளும்படியான உள்ளாட்சி நிதி, நகராட்சி மருத்துவ நிலையங்கள்.

(iii) அதில் அமர்த்தப்பட்டுள்ள அரசாங்க மருத்துவ அலுவலர்களின் சம்பளங்கள் முழுவதும் அல்லது ஒரு பாகமும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும் உள்ளாட்சி நிதி, நகராட்சி தாலுகா ஆகியவற்றின் தலைமையிட மருத்துவ நிலையங்கள்.

எல்லாத் துறைகள் அல்லது அலுவலகங்களின் தலைவர்கள் அரசுப் பணியாளர்களுக்காக உள்ளாட்சி நிதி, நகராட்சி ஆகியவற்றின் மருத்துவ அலுவலர்களுடைய மருத்துவச் சான்றிதழ் முதலியவை கேட்டனுப்பும் எல்லா வேண்டுகோள்களும், சம்பந்தப்பட்ட மாவட்ட மருத்துவ அலுவலர் மூலம் அனுப்பப்பட வேண்டும். உள்ளாட்சி நிதி நகராட்சி மருத்துவ நிலையங்களில் சிகிச்சை பெறும் அரசாங்கப் பணியாளர்கள் அந் நிலையங்கள் சாதாரணமாக நோயாளிகளிடம் வசூலிக்கும் மருத்துவம், அறுவை, பேறுதல் ஆகியவற்றிற்கான செலவுத்

தொகைகளைச் செலுத்திவிட வேண்டும். ஆனால் 10 (இ) விதியின் கீழ்ப் பணம் செலுத்தினால் அத்தகைய செலவுகள் அவர்களுக்கு ஈடு செய்யப்படும்.

(இ) **சென்னைக்கும் புறப் பகுதிகளுக்கும் பொது.**—(1) சட்ட மன்ற மேலவைத் தலைவரும் துணைத் தலைவரும், சட்டமன்ற பேரவைத் தலைவரும், துணைத் தலைவரும், நாடாளுமன்றச் செயலாளர்களும் அத்தகைய பணியிலுள்ள காலத்திலும், அரசிதழ்ப் பதிவு பெற்றுள்ள நியமனங்கள் பெற்றுள்ளவர்களும் இருநூற்றைம்பது ரூபாய்ச் சம்பளமும் அதற்கு மேலும் பெறுகின்றவர்களுமாகிய அரசாங்கப் பணியாளர்களும், எல்லாச் சூழ்நிலைகளிலும், தங்களுக்குத் தங்கள் இருப்பிடத்திலேயே, மாவட்டத்தின் அறுவை மருத்துவர் அல்லது சந்தர்ப்பத்திற் கேற்றவாறு சிவில் மருத்துவ அலுவலர் ஆகியவர்களிடமிருந்து இலவச மருத்துவ உதவி கிடைக்கப் பெறுவதற்கு உரிமை யுள்ளவர்களாவார்கள்.

அரசிதழ்ப் பதிவு பெறாத அரசுப் பணியாளர் குடும்பத்தின் உறுப்பினர் ஒருவர் அல்லது 300 ரூபாய்களுக்கு மேற்படாத சம்பளம் பெறும் உள்ளாட்சிக் கழகத்தின் பணியாளர் குடும்பத்தின் ஒரு உறுப்பினர், அப் பணியாளருக்குப் பொருந்துகின்ற அதே நிபந்தனைகளுக்குட்பட்டு அதாவது—

(i) அவரது சம்பளம் மாதத்திற்கு 250 ரூபாய்களுக்கு அதிகமாயிருந்து அவர் மாநகரத்திலோ அல்லது புறப் பகுதியிலோ பணி செய்து கொண்டிருந்தாலும்,

(ii) அவர் புறப் பகுதியில் 100 ரூபாய் அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளத்துடன் வேலை செய்து கொண்டிருந்து, ஆனால் நோயாளிக்குக் கடுமையான நோய் கண்டிருந்தாலும்; தம்முடைய இருப்பிடத்தில் சிகிச்சை பெறுவதற்குத் தகுதியுடையவராவார்.

* அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் எப்படியும் உரிமையுள்ள நோயாளிக்கு ஆபத்தான அவசர காலத்திலும் அல்லது கவலைக்கிடந்தரும் நோயுள்ளபோதும் மட்டும் அவருடைய இருப் பிடத்திற்குச் சென்று உதவியளிப்பது தேவைப்படும்.

---

*(அ.ஆ. எண் 3152, சுகாதாரம், 7—10—1952, தேதியிட்டது.)

(அ.ஆ. எண் 2233, சுகாதாரம், 11—6—1953, தேதியிட்டது.)

**குறிப்பு.**—அமைச்சர்களும் அவர்கள் குடும்பங்களும் தனி விதிகளினால் வகைப்படுத்தப்படுவார்கள்.

(2) யாதொரு அவசரமான நிகழ்வில் நோயைக் கவனிப்பதற்குக் கூப்பிடப்படும்போது, எல்லா மருத்துவ அலுவலர்களும் தாமதமின்றி சென்று பார்க்குமாறு தெரிவிக்கப்பட்டிருக்கிறார்கள். சூழ்நிலைக்கேற்றவாறு தேவையான தக்க உதவியையும் அறிவுரையையும் அளித்துவிட்டு, மேற்கொண்டு சிகிச்சையளிப்பதற்கு அந்த நோயாளியைத் தக்க மருத்துவ உதவியாளருக்கு மாற்றி விடலாம்.

(3) கவலைக்கிடமாக நோயுற்றிருக்கும் ஒரு அரசுப் பணியாளரைப் பொருத்தவரை அவரைக் கவனிக்கும் உள்ளூர் மருத்துவ அலுவலர் வேறொரு மருத்துவரைக் கலந்து பேசுவது இன்றியமையாதது எனக் கருதும்போது வேறொரு மருத்துவரை ஆலோசனைக்காக அனுப்பி வைக்குமாறு மருத்துவத் துறை இயக்குநரை கேட்டுக் கொள்ளலாம். அவ்வாறு அனுப்பப்பட்ட மருத்துவ அலுவலரின் பயணப்படியை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும். ஒரு அலுவலரைத் தேர்ந்தெடுப்பதில் அவர் அண்மையிலிருப்பதையும் நோயாளியின் நலனையும் ஒரு சேரக் கருதிப் பார்க்க வேண்டும்.

(4) 9 ஆவது விதியில் சொல்லப்பட்டுள்ள அவ்வளவே தவிர மற்றவற்றில் ஒரு சிறப்பறிஞர் பணிகள் அலுவலர்களுக்குக் கிடைக்குமாறு செய்யும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொள்வதில்லை.

(5) இலவச வைத்திய உதவிக்கு உரிமையுள்ள அலுவலர் தமக்காவது அல்லது தமது குடும்பத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட அரசாங்க மருத்துவ உதவியாளர் அல்லாத மற்றொரு மருத்துவ அலுவலரின் பணியைப் பெற விரும்பினால், அதனை ஒரு தனிப்பட்ட ஏற்பாடாகக் கருதி அரசாங்கம் அதில் ஒன்றும் செய்வதற்கில்லை.

(6) தங்கள் இருப்பிடத்தில் மருத்துவ அல்லது உதவியாளரின் ஆலோசனை அறையில் கவனிக்கப்படும் அரசாங்கப் பணியாளர்கள் தங்கள் மருத்துவ உதவியாளர்கள் குறிப்பிட்ட மருந்துகளை இலவசமாகப் பெறுவதற்கு உரிமையுள்ளவராவார்கள். ஆனால் அவர்கள் அந்த மருத்துவ உதவியாளர் சேர்ந்துள்ள

அரசாங்க மருத்துவ நிலையத்திலிருந்து அந்த மருந்து பெறுவதற்குத் தங்கள் சொந்த ஏற்பாடுகளைச் செய்து கொள்ள வேண்டும்.

**மேல்நிலை சிவில் பணியாளர் தொகுதியில் உள்ள ஐரோப்பிய அலுவலர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் உள்ள மருத்துவ உதவி.**

8. (அ) மேல்நிலை சிவில் பணியாளர் தொகுதியின் ஐரோப்பிய அலுவலர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் உள்ள மருத்துவ உதவியின் காரியங்களுக்கு 7 (இ) விதி பொருந்தும்.

(ஆ) ஒரு நோயாளி மிகவும் கவலைக்கிடமாக நோயுற்றிருக்க நேரிட்டபோதும் அல்லது நோய் ஒரு தனிப்பட்ட தன்மையுடைய தாயிருந்தபோதும், அவருக்கு மருத்துவம் பார்க்க தம்மால் இயலாதென்று அல்லது தான் விரும்பவில்லையென்று மருத்துவ அலுவலர் நினைத்தால் போதுமான சிகிச்சை கிடைக்கக்கூடிய மிகவும் நெருங்கிய நிலையத்திற்குப் போகும்படி அதிகாரமளித்து அந்த நோயாளிக்கு அவர் ஒரு சான்றிதழ் கொடுக்க வேண்டும். இத்தகையவற்றில் ஏற்படும் பயணப்படி தமிழ்நாடு பயணப்படி விதிகளில் 103 ஆவது விதியினால் ஒழுங்குபடுத்தப்படுகிறது.

குறிப்பு.—(1) " தமிழ்நாடு பயணப்படி விதிகளின் " 103 ஆம் விதியின் கீழ் பயணப்படி கோருவதற்கு ஒரு ஐரோப்பிய பல் வைத்தியரிடம் செல்வது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது.

(ii) கவலைக்கிடமான அல்லது தனிப்பட்ட நோய்களில், சிறப்பறிஞர் சிகிச்சை பெறுவதற்கான உரிமை உயர்நிலை சிவில் பணியாளர்கள் தொகுதியின் இந்திய உறுப்பினர்களுக்கும் அவர்கள் குடும்பத்தினர்களுக்குங்கூட அனுமதிக்கப்பட்டிருக்கிறது ஐரோப்பிய அலுவலர்களும் அவர்கள் குடும்பங்களும் போலவே, மேல்நிலைப் பணியாளர் தொகுதிகளின் இந்திய உறுப்பினர்களும் அவர்கள் குடும்பங்களும் போதுமான சிகிச்சை கிடைக்கக் கூடிய நிலையங்களுக்குச் செல்வதற்கு அதிகாரமளித்து அவர்களுக்கு ஒரு சான்றிதழ் அளிக்க வேண்டும். அவர்களுடைய பயணப்படி " தமிழ்நாடு பயணப்படி விதிகளின் " 103 ஆவது விதியால் ஒழுங்குபடுத்தப்படும்.

(இ) அலுவலர்கள், தங்களுக்கு இலவசமாக மருத்துவ உதவியளிக்கப்பட உரிமையுள்ளவர்களாவார்கள். ஆனால் அவர்கள் குடும்பங்களுக்கு இயல்பான கட்டணங்கள் விதிக்கப்படும்.

(ஈ) "1938 ஆம் ஆண்டு இந்திய மந்திரியின் (மருத்துவ உதவி) விதிகளில்" சொல்லப்பட்டுள்ள தனிச் சலுகைகளுக்கு உரிமையுள்ளவர்கள் அந்தத் தனிச் சலுகைகளைத் தொடர்ந்து அனுபவிப்பார்கள்.

குறிப்பு—அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள மருத்துவ உதவியாளரின் 1938 ஆம் ஆண்டு செகரட்டரி-ஆப்-ஸ்டேட் பணியாளர் தொகுதிகள் (மருத்துவ உதவி) விதிகளின் 5 (2), 6 (2)-ம், (3)-ம், 7 (2)-ம் (3) ஆம் விதிகளால் தேவைப்படும் எழுத்து மூலமான சான்றிதழ்களை மேலொப்பமிடுவதற்கு மருத்துவத் துறை இயக்குநர் அதிகாரியாவார்.

**அரசாங்கப் பணியாளர்களைப் பொருத்தவரை சிறப்பறிஞர்களுடன் அல்லது உடன்பணி செய்பவர்களுடன் ஆலோசனைகள்.**

9. (அ) அரசாங்கப் பணியாளர் ஒருவரைப் பற்றி, அவரை ஒரு சிறப்பறிஞர் ஆராய்வு செய்வது அல்லது அவருக்கு மருத்துவம் பார்ப்பது அவசியமென்று அவருடைய அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் கருதுவாரானால், அந்த அரசுப் பணியாளரை, மருத்துவமனையில் அல்லது அது வசதிப்படாவிட்டால் தன்னுடைய சொந்த ஆலோசனை அறையில் சிறப்பறிஞர் ஆராய்வு செய்வதற்கு அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் அவரோடு எற்பாடு செய்யலாம். அந்த சிறப்பறிஞர் தமது கருத்திற்கிணங்கத் தாமே அந்த அரசாங்கப் பணியாளருக்குச் சிகிச்சையளிக்கலாம் அல்லது அந்த அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளருக்கு ஒரு தகுந்த சிகிச்சை வழியைப் பரிந்துரைக்கலாம்.

(ஆ) அரசிதழ்ப் பதிவு பெற்ற ஒருவர் மருத்துவ மனையிலாவது அல்லது அந்த சிறப்பறிஞரின் சொந்த ஆலோசனை அறையிலாவது, ஆராய்வுக்காக, அவருக்கு அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரின் கருத்தை அனுப்பித் தாமே அந்தச் சிறப்பறிஞர் எற்பாடு செய்து கொள்ளலாம். மருத்துவ மனையிலோ அல்லது தமது சொந்த ஆலோசனை அறையிலோ ஆராய்வு செய்வதற்கு ஒரு தகுந்த காலத்தை குறிப்பிட்டுப் பதில் அனுப்புவது சிறப்பறிஞரின் கடமையாகும்.

(இ) தம் இருப்பிடத்தில் இலவச மருத்துவ உதவிக்கு உரிமையையுடைய யாதொரு அலுவலர் அந்தச் சிறப்பறிஞரின் ஆலோசனை அறைக்கு எளிதில் போகக்கூடாத அளவு நோயுற்றிருந்

தால் மருத்துவ உதவியாளரின் கருத்தில் சிறப்பறிஞரின் ஆலோசனை தேவையென்று தோன்றினால் சிறப்பறிஞர் அதே நகரத்தில் குடியிருப்பாரேயானால் அவர் அந்த அலுவலரை அவரது இருப்பிடத்திலேயே, அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளர் அழைக்கும்போது சென்று ஆராய்வு செய்வது அவரது கடமையாகும்.

(ஈ) சிறப்பறிஞர் நகரத்திற்கு வெளியே வசிக்கும் யாதொரு அரசாங்கப் பணியாளரையும் ஆராய்வு செய்யத் தமது நகரத்தை விட்டுச் செல்லமாட்டார். ஆனால் எந்த அரசாங்கப் பணியாளர் தம்முடைய அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் அத்தகைய ஆலோசனை கேட்பது அவசியம் என்று கருதினால் அதே நகரத்தில் உள்ள அல்லது அதற்கு வெளியேயுள்ள சிறப்பறிஞரை ஆலோசனை கேட்கலாம்.

(உ) (i) ஒரு அரசாங்கப் பணியாளரை அவரது அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரின் வேண்டுகோளின்படி மேல் ஆராய்வு செய்வதற்கு அல்லது சிகிச்சை செய்வதற்கு எந்தச் சூழ்நிலைகளிலும் சிறப்பறிஞர் யாதொரு கட்டணமும் விதிக்கக் கூடாது.

(ii) ஒரு அரசாங்க அலுவலர் தம்மைப் பார்க்கும்படி அரசாங்கத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லது தம் மருத்துவ உதவியாளரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சிறப்பறிஞர் அல்லது உடன்பணி செய்பவர் இவர்களைத் தவிர வேறே ஒரு மருத்துவ அலுவலரை ஆலோசனை கேட்டால் அவர் ஒரு தனிப்பட்ட நோயாளியாகக் கருதப்பட்டு அந்த மருத்துவ அலுவலர் ஒரு கட்டணம் விதிக்கலாம்.

(ஊ) ஒரு சிறப்பறிஞரை ஆலோசனை கேட்பதற்காகத் தமது நகரை விட்டுச் செல்லும் அரசாங்கப் பணியாளர்கள் விதிகளின் கீழ் பயணப்படி செல்லத்தக்கதாயிருக்கக் கூடியவைகளில் தவிர மற்றவற்றில் யாதொரு பயணப்படிக்கும் உரிமையுள்ளவர்களாகமாட்டார்கள்.

(எ) ஒரு சிறப்பறிஞரை ஆலோசனை கேட்பதற்கு மேலே சொல்லப்பட்டுள்ள நடைமுறை, அந்த அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரின் உடன்பணி செய்பவர்களைக் கலந்து ஆலோசனை கேட்பதற்கும் பின்பற்றப்படும்.

## இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுடையவர்களுக்கு மருத்துவம் பார்ப்பது பற்றிய தனிச் சலுகை.

10. (அ) இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுடைய ஒரு நபர் சிகிச்சைக்காக ஒரு அரசாங்க மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டபோது அந்த மருத்துவ மனையில் இயல்பாகவே அதன் சொந்தப் பணியாளர்கள், கருவிகள் சாதனங்கள் இருப்பதால் இலவச மருத்துவமும் அறுவை மருத்துவமும் செவிலிப் பணிகளும் அளிக்கப்படுவார். மேலும் அவருடைய அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளர் அதற்குப் பரிந்துரைத்தாலும் அந்தப்படி சோதனை செய்யவும், சிகிச்சைகள் செய்யவும் அந்த மருத்துவமனை வசதிகள் இருந்தால் அவர் எக்ஸ்-கதிர் ஆய்வு, மின்சார ரேடியம் சிகிச்சைக்கும் வேறு சிறப்பான ஆராய்வுக்கும் அல்லது சிகிச்சை களுக்கும் உரிமையுள்ளவராவார். அவர் சாதாரணமாக மருத்துவ மனைகளில் வைக்கப்பட்டுள்ளதும் அவருக்குத் தேவைப்படுவது மான மருந்தும் தடுப்பு மருந்து முதலியவைகளும் அவைகளின் விலை எதுவாக இருப்பினும் இலவசமாக அவருக்கு வழங்கப்படும். மருத்துவமனையின் இருப்பிலிருந்தும் அல்லது அரசாங்கப் பணி யாளர்களால் வாங்கப்பட்ட சிறப்பு மருந்துகளின் விலையை வசூலிப்பது அல்லது ஈடு செய்வது நடைமுறை 29 ஆவது விதியால் ஒழுங்குபடுத்தப்படும்.

மேலே சொல்லப்பட்ட சலுகைகளுக்குக் கூடுதலாக ஒரு அரசிதழ்ப் பதிவு பெறாத அரசாங்கப் பணியாளரும் அவரது குடும்பமும் மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய்களுக்கும் அதிகமான சம்பளம் பெறாத ஒரு உள்ளாட்சிக் கழகப் பணியாளரும் அவரது குடும்பமும் சிகிச்சைக்காக அரசாங்க மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டுள்ளபோது அவர்கள் உணவுக்காக ஒன்றும் பணம் செலுத்த வேண்டியதில்லை.

*குறிப்பு.—சென்னை மாநகரத்திலுள்ள யாதொரு மருத்துவ மனையில் அல்லது தாம்பரம் அரசாங்க உருக்கி நோய் உடல் நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ள இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுள்ளவர்கள் சென்னை எக்ஸ்-கதிர் பார்னர்ட் நிலையத்தில் இலவச எக்ஸ்ரே சோதனைகளுக்கும் சிகிச்சை முதலியவை களுக்கும் உரிமையுள்ளவர்களாவார்கள்.

---

*(அ.ஆ. எண் 3638, சுகாதாரம் 17—10—1952 தேதியிட்டது.)

(அ.ஆ. எண் 2628, சுகாதாரம், 13—8—1952 தேதியிட்டது.)

(ஆ) 1949 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவ உதவி விதிகள் பொருந்தக்கூடிய கீழ்நிலைப் பணியிலுள்ளவர்கள் உட்பட குடி முறைக் (சிவில்) குழப்பத்தில் காயங்கள் பெறும் எல்லா அரசாங்க ஊழியர்களும் அவர்கள் வேலையிலிருந்தாலும் அல்லது விடுப்பிலிருந்தாலும் மேலே உள்பத்தி (அ) இல் சேர்க்கப்பட்டுள்ள இனங்களோடு கூட அவர்கள் இலவசமாகப் பெறுவதற்கு உரிமையுள்ள சிகிச்சையின் ஒரு பகுதியாக அடியிற் கண்ட வழங்கீட்டுப் பொருள்களுக்கும் பணிகளுக்கும் உரிமையுள்ளவர்களாவார்கள்.

(i) அந்த அரசாங்கப் பணியாளர் சிகிச்சையளிக்கப்படும் மருத்துவ மனையில் அதிகாரமளிக்கப்பட்டது, மருத்துவ உதவியாளர், அந்த அரசாங்கப் பணியாளர் குணப்படுவதற்கு அல்லது அவருடைய உடல்நிலைமை கெட்டுப்போகாமல் தடுப்பதற்கு முக்கியமானவையென்று எழுத்து மூலமாகச் சான்றளிக்கக்கூடியவை அரசாங்கப் பணியாளர் சிகிச்சை பெறும் மருத்துவ மனையில் சாதாரணமாகக் கிடைக்காத மருந்துகள், தடுப்பு மருந்துகள் ஊன் நீர் அல்லது ஏனைய மருத்துவ சம்பந்தமான பொருள்களை வழங்கப் பெறுவதற்கும்,

(ii) அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் அந்த அரசாங்கப் பணியாளர் குணப்படுவதற்காக அல்லது அவரது உடல்நிலைமை கெட்டுப் போகாமல் தடுப்பதற்கு, முக்கியமானது என்று எழுத்து மூலமாகச் சான்றிளிக்கப்படக்கூடிய சிறப்புச் செவிலிப் பணிக்கும்.

குறிப்பு.—நடைமுறையில் ஒரு அரசாங்கப் பணியாளருக்கு அவர் ஒரு அரசாங்கப் பணியாளராயிருந்தால் தாக்கப்பட்டுக் காயப்படுத்தப்பட்டார் என்று மெய்ப்பிப்பது கடினமாயிருக்குமாதலால் இதற்கு முரணுக ஒரு நிகழ்வில் நடந்தவை தெளிவாகக் காட்டினாலன்றி அந்த விடுப்பிலிருந்த அரசாங்கப் பணியாளர், அவர் ஒரு அரசாங்கப் பணியாளராக இருந்ததால் தாக்கப்பட்டுக் காயப்படுத்தப்பட்டார் என்றும் கொள்ளவேண்டும்.

*(இ) அந்த இடத்தில் ஒரு அரசாங்க மருத்துவ மனை இல்லாத காரணத்தால் ஒரு அரசாங்கப் பணியாளர் அல்லது இலவச மருத்துவ உதவி பெற உரிமையுள்ள வேறொருவர் அவருடைய அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரின் அறிவுரையின் மேல்

---

* (அ.ஆ. எண் 58, பொ.சு., 6—1—1946, தேதியிட்டது)

அரசாங்கத்தைச் சேராத ஒரு மருத்துவ மனையில் சிகிச்சைக் காகச் சேர்க்கப்பட்டபோது, அந் நிலையத்தில் ஒரு நோயாளியிட மிருந்து சாதாரணமாக வசூலிக்கப்படும் மருத்துவம், அறுவை மருத்துவம் செவிலிப் பணி ஆகியவற்றிற்கான செலவுகள் அவருக் காக அரசாங்கத்தால் ஏற்றுக் கொள்ளப்படும். அத்தகைய செலவு களைப் பொருத்த எல்லா உரிமைக் கோரிக்கைகளும் அரசாங் கத்தைச் சேராத மருத்துவ மனையில் அந்த நோயாளியைச் சிகிச்சைக்காகச் சேர்க்க வேண்டியது அவசியமாயிருந்ததென்று அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரின் சான்றிதழின் ஆதரவு பெற வேண்டும்.

(ஈ) அந்த இடத்தில் ஒரு அரசாங்கத்தைச் சேர்ந்த அல்லது அரசாங்கத்தைச் சேராத மருத்துவ மனை இல்லாததால் உரிமை யுள்ளவரின் வசிக்கும் இடத்தில் சிகிச்சைக்காக மருத்துவ அறுவை மருத்துவ அல்லது செவிலிப் பணிச் செலவுகள் ஏற்பட்டால் அத்தகைய செலவுகள் திரும்பக் கொடுக்கப்படமாட்டாது.

11. அரசாங்க மனநோய் மருத்துவ மனைகள் தவிர ஏனைய அரசாங்க மருத்துவ நிறுவனங்களில் வந்து செல்லும் நோயாளிகளின் மருத்துவச் சிகிச்சை.—(அ) அரசாங்க மருத்துவ நிறுவனங்களில் வந்து செல்லும் நோயாளிகளுக்கு அளிக்கப்படும் மருத்துவ அறிவுரை, சிகிச்சை அல்லது மருந்துக்களுக்காக எச் செலவும் இருக்கக் கூடாது.

குறிப்பு.—விலை அதிகமாயுள்ள மருந்துக்களுக்கான செலவுகளை வசூலிப்பதற்கு 12 (அ), 29 ஆம் விதியைப் பார்க்கவும்.

(ஆ) வந்து செல்லும் நோயாளிகள் துறையில் சேர்க்கப் படும் பணக்காரர்கள் சென்னை மாநகரத்திலோ அல்லது புறப் பகுதியிலோ யாதொரு தனிச் சலுகைக்கு உரிமையுள்ளவர்களாக மாட்டார்கள். அவர்கள் ஏனைய நோயாளிகளுடன் அவர் முறை வரும் வரையில் காத்து இருக்க வேண்டும்.

(இ) அரசாங்கப் பணியாளர்கள் சாதாரணமாக வந்து செல்லும் நோயாளிகள் துறையில் முதலில் கவனிக்கப்படுவார்கள்.

* குறிப்பு.—விரைவாகக் கவனிக்கப்பட விரும்பும் வந்து செல்லும் நோயாளிகளிடமிருந்து தலைக்கு இரண்டணு தனிக் கட்டணம், சென்னையிலுள்ள அரசினர் பொது மருத்துவ மனையிலும் பெண் களுக்கும் குழந்தைகளுக்குமுள்ள கஸ்தூரிபா காந்தி மருத்துவ மனையிலும் விதிக்கப்படும்.

**12. அரசினர் மனநோய் மருத்துவ மனைகள் தவிர அரசினர் மருத்துவ நிலையங்களில் வந்து தங்கும் நோயாளிகளுக்கு மருத்துவச் சிகிச்சை. பொதுப் பகுதிகள்.**—(அ) இந்த விதியின் (ஆ) உள்விதியில் சொல்லியுள்ளபடி தவிர, தங்களுடைய வருமானம் அல்லது குடும்பத்தலைவரின் வருமானம் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்களுக்குக் குறைவாயுள்ள, வந்து தங்கும் நோயாளிகள் பொதுப் பகுதிகளில் இலவசமாக சிகிச்சை அளிக்கப் படுவார்கள். அவர்கள் இலவச உணவும் அளிக்கப்படுவார்கள்.

† (ஆ) சுரங்கங்கள் தோண்டி எடுக்கும் இடங்கள், ஆலைகள், தொழிற்சாலைகள், தேயிலை, காபி, ரப்பர் தோட்டங்கள், கப்பல்கள், துறைமுக நம்பகங்கள் ஆகிய இவற்றில் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்களுக்குக் குறைவாகப் பெறும் பணியாளர்கள், அவர்களை வேலைக்கு அமர்த்தியவர்களின் வேண்டுகோளின்படி வந்து தங்கும் நோயாளிகளாகச் சேர்க்கப் பட்டபோது ஒவ்வொரு நோயாளியிடமிருந்தும் ஒரு நாளைக்கு 14 அணு வீதம் அவர்களை வேலைக்கு அமர்த்தியவர்களிடமிருந்து மருத்துவ அறிவுரை, செவிலிப் பணி உணவு ஆகியவற்றின் செலவுக்காக வசூலிக்கப்படும். இந்தத் தொகையில் 10 நாட் களுக்குரிய முன்பணம் ஒரே காலத்தில் வசூலிக்கப்படும். ஆனுல், மருத்துவ மனைகளின் சண்காணிப்பாளர்கள் கேட்கும் விதிகளின் படிதான் மருத்துவமனைச் செலவுகளைச் செலுத்த உறுதியளிக்கும் நன்கு நிறுவப்பட்டிருக்கும் நிறுவனங்களைப் பொருத்தவரை இந்த நிபந்தனை மருத்துவப் பணி இயக்குநரின் அனுமதியின் பேரில் தளர்த்தப்படும்.

மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்களுக்குக் குறைவாகப் பெறும் மேல் சொல்லப்பட்ட வகுப்புப் பணியாளர்கள், அவர்களை வேலைக்கு அமர்த்தியவர்களின் வேண்டுதலின் பேரில் வந்து தங்கும் அல்லது வந்து செல்லும் நோயாளிகளாகச் சிகிச்சையளிக்கப்பட்டால்

---

* (அ. ஆ. எண். 576, சுகாதாரம், 22—2—1953 தேதியிட்டது.)
† (அ. ஆ. எண். பலவகை 2033, பொ. சு. 2—3—1945 தேதியிட்டது.)

வழக்கமான செலவுகளோடு அந்தப் பணியா... ...ளுக்காகப் பயன் படுத்தப்பட்ட விலையதிகமான மருந்து... ...க 20 ஆம் விதியில் குறிக்கப்பட்டுள்ள விகிதங்களில் மருத்...வ அ...றிவுரை செவிலிப் பணி உணவு ஆகியவற்றிற்கான ... ...யையும் வேலைக்கு அமர்த்தியவர்கள் செலுத்துவதற்கு வி... வே...ண்டும்.

(இ) சுரங்கங்கள், தோண்டி எடுக்கும் இடங்கள், ஆலைகள் தொழிற்சாலைகள், ரப்பர், காபி, தேயிலைத் தோட்டங்கள் துறைமுக நம்பகங்கள் ஆகிய

ஆ. ஆ. எண். 208 பொ. சு. 20-1-46 ம் தேதியிட்டது.

இவைகளின் பணியாளர்கள் தாமாகவே அரசினர் மருத்துவ மனைகளுக்கு வரும்போது மருத்துவ மனையில் வந்து தங்கும் செலவுகளைப் பொருத்தவரை அவர்களைப் பொதுமக்களின் உறுப்பினர்களாகவே கருத வேண்டும்.

குறிப்பு.—(1) ரயில்வேப் பணியாளர்கள் அரசினர் மருத்துவ மனைகளில் சாதாரணச் சிகிச்சை கோரி வந்தால் அந்த அரசினர் மருத்துவ மனையின் பொறுப்புள்ள அலுவலர் தேவைப்பட்ட சிகிச்சை, அவ்விடத்தில் ரயில்வே ஆட்சித் துறையினரால் அளிக்கப்படுகிறது என்று நம்பக் காரணமாயிருந்தாலும், சிகிச்சை அவசரமானதாயில்லாவிட்டாலும் அவர்களை ரயில்வே மருத்துவ அலுவலரிடம் திருப்பி அனுப்பிவிடலாம்.

(2) சென்னையிலுள்ள அரசினர் அச்சகம், அரசியல் பொறியியல் பணிப் பட்டறைகள், மேட்டூரில் உள்ள மின்சாரப் பட்டறை, தொழில் பொறியியல் பட்டறை இவற்றிலுள்ள எல்லாத் தொழில் நுட்பப் பணியாளர்களும் அவர்கள் வேலையிலிருந்தபோது பட்ட காயங்களுக்கு அரசினர் மருத்துவ மனைகளில் பொதுப் பகுதிகளில் இலவசச் சிகிச்சை அளிக்கப்படுவார்கள்.

(3) தமிழ்நாடு மாநிலத்தில் விமான நிலையங்கள் கட்டுவதில் பணியாற்றும் பேருந்து ஆட்கள், அவர்கள் அப் பணிகளில் உள்ள வரை அரசினர் மருத்துவ மனைகளின் பொதுப் பகுதிகளில் இலவசச் சிகிச்சை அளிக்கப்படுவார்கள்.

அ. ஆ. பலவகை எண். 1136 பொ.சு. 27-5-1943 தேதியிட்டது.

(ஈ) மேலே (ஆ) உள் விதியில் சொல்லப்பட்டுள்ள பணியாளர்களின் குழந்தைகள், அவைகளின் பெற்றோர்கள் மூலமாய் அரசினர் மருத்துவ மனைகளில் அவர்களுடைய பெற்றோர்களுடன் சேர்ந்து அல்லது வேறுவிதமாய் சேர்க்கப்பட்டுள்ளவற்றில் இயல்

பாகக் குழந்தைகளுக்கு விதிக்கப்படும் தொகை, அந்தக் குழந்தைகளுக்காக, வேலையில் அமர்த்தியவர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

(உ) தமிழ்நாடு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத பக்கப் பகுதிகளிலிருந்து நோயாளிகள் தமிழ்நாடு மாநிலத்தில் அரசினர் மருத்துவ மனைகளில் சேரக் கோருபவர்கள் தனிப்பட்ட நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்படுவார்கள். மருத்துவ மனையின் பொறுப்பிலுள்ள மருத்துவ அலுவலர்கள் அந்த நோயாளிகளின் தகுதிக்கும் வருமானத்திற்கும் தக்கபடி அவர்கள் மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெறுவதற்கு அவர்கள் தங்குவதற்கும் சிகிச்சை பெறுவதற்கும் உத்தேசமாக ஆகக்கூடிய காலத்திற்கும் ஏற்றவாறு மருத்துவ மனையில் தங்கு செலவு முதலியவைகளைக் கணக்கிட்டு அந்தத் தொகையை முன்பணமாக வசூலிக்க வேண்டும். ஆனால் விபத்துக்களில் உடனடியான கவனிப்புத் தேவைப்படுபவைகளில் நோயாளிகள் உடனடியாக சேர்க்கப்பட்டு, அவர்கள் அபாயத்திலிருந்து மீண்ட பிறகு அந்தச் செலவுத் தொகைகள் வசூலிக்கப்படும்.

அ. ஆ. எண். 127 பொ. சு. 10-1-1950 தேதியிட்டது.

12-அ. அரசினர் உருக்கி நோய் நிறுவனங்களிலும் உருக்கி நோய்ப் பகுதிகள் உள்ள ஏனைய அரசினர் மருத்துவ நிறுவனங்களிலும் உருக்கி நோய் உள்ள நோயாளிகளைச் சேர்த்துக் கொள்வதை ஒழுங்குபடுத்தும் விதிகள்.

### அ. பொது.

எந்த நோயாளியும் அந்த மருத்துவ மனையில் அல்லது உடல் நலம் பெறும் இடத்தில் ஒரு படுக்கை கிடைக்கக் கூடியதாய் உள்ளது என்ற தகவல் தமக்கு அந்த நிலையங்களின் அதிகாரிகளிடமிருந்து வந்தாலொழிய ஒரு மருத்துவ மனைக்கு அல்லது உடல் நலம் பெறும் இடத்திற்குச் சேர்ந்து கொள்ள வரலாகாது.

(2) அறிவிப்பு இல்லாமல் வருபவர்கள் படுக்கைகள் இல்லாததனாலோ அல்லது அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதற்குத் தகுதியுள்ளவர்களல்லர் என்பதாலோ அவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதை மறுக்கலாம்.

(3) ஏனைய மருத்துவ மனைகளிலிருந்து எந்த நோயாளி யையும் உருக்கி நோய் மருத்துவமனைகளுக்காவது அல்லது உடல் நலம் பெறும் இடத்திற்காவது நேராக அனுப்பக் கூடாது. ஆனால் மிகவும் அண்மையில் உள்ள உருக்கி நோய் சிறு மருத்துவமனை நியாயமான தொலைவில் இருந்தால் அதற்கு அவர்களைப் போகும் படிச் சொல்ல வேண்டும்.

(4) ஒரு நோயாளி சேர்க்கப்படத் தகுதியுள்ளவர் என்பதில் உருக்கி நோய் நிறுவனத்தின் அல்லது உருக்கி நோய் உடல் நலம் பெறும் இடத்தின் இயக்குநரின் கருத்தே முடிவானதாகும்.

ஆ. பொதுப் பகுதிகளுக்குச் சேர்க்கப்படுவதின் விதிகள்.

ஒவ்வொரு உருக்கி நோய் நிறுவனத்திலும் தகுதியுள்ள எல்லா நோயாளிகளின் தனிப் பட்டியல் ஒன்று வைக்கப்பட வேண்டும்.

(2) வந்து செல்லும் நோயாளிகளின் துறையில் அதாவது அரசினர் உருக்கி நோய் நிறுவனத்தில் பார்க்கப்படும் நோயாளிகளில் சேர்க்கப்படுவதற்குத் தகுந்தவர்களாகக் காணப் படுபவர்களை காத்திருப்பவர் பட்டியலில் சேர்க்க வேண்டும்

(3) உடனடியாகக் கவனிக்கப்பட வேண்டிய ஒரு அவசர நிலை ஏற்பட்டாலொழிய, காத்திருப்பவர் பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள முதன்மை முறைப்படியே சேர்த்துக் கொள்ளுதல் கண்டிப்பாய் செய்யப்பட வேண்டும்.

(4) குணமாகக் கூடிய வகையிலில்லாத மிகவும் முற்றிய நோயாளிகளைக் காத்திருப்பவர் பட்டியலில் சேர்க்கக் கூடாது.

(5) மருத்துவ மனையில் அல்லது உடல் நலம் பெறும் இடத்தில் நேரே சேர்த்துக் கொள்ளும்படியாகக் கோரி வரும் பரிந்துரைக் கடிதங்களைக் கவனிக்கக் கூடாது. ஆனால் சோதனையில் அந்த நோயாளிகள் தகுதியுள்ளவர்களென்று காணப்பட்டால் காத்திருப்பவர் பட்டியலில் அவர்களைச் சேர்த்து மற்ற நோயாளி களுடன் அவர்கள் முறை வரும்போது எடுத்துக் கொள்ள வேண்டும்.

*(6) அவர்கள் குடும்பங்களின் உறுப்பினர்கள் உட்பட எல்லா அரசாங்கப் பணியாளர்களும் சேர்க்கப்படுவதற்குத் தகுதியுடைய வர்கள் என்று காணப்பட்டால் உடனடியாகச் சேர்த்துக் கொள்ளப்

---

*(அ. ஆ. பலவகை எண் 373, சுகாதாரம், 14—2—1950 தேதியிட்டது).

படுவார்கள். காவலர்கள் (கான்ஸ்டபிள்கள்) மற்ற அரசாங்கப் பணியாளர்களைக் காட்டிலும் தனிப்பட்ட முதன்மை அளிக்கப் படுவார்கள்.

* குறிப்பு.—ஆ (6) விதியின் நோக்கங்களுக்கு மத்திய அரசாங்கப் பணியாளர்களையும் ரயில்வேப் பணியாளர்களையும் அரசாங்கப் பணியாளர்களாகப் பாவிக்கக் கூடாது.

(7) அரசாங்கப் பணியாளர்களில் மிகவும் முற்றிய நோயுடையவர்களை மருத்துவச் சான்றிதழ்கள் இயலாமைச் சான்றிதழ்கள் முதலியவை அளிக்கப்படும் நோக்கங்களுக்காக வன்றிச் சேர்த்துக் கொள்ளக் கூடாது.

(8) இரத்தம் உமிழ்தல், இருதய வியாதிகள் முதலியவை போன்ற மிக அவசரமான நோயாளிகள் காப்பவர் பட்டியலில் இருந்தாலும் இல்லாவிட்டாலும், நோய் ஆரம்ப நிலையிலிருந்தாலும் அல்லது முற்றிய நிலையிலிருந்தாலும் அவர்களை உடனடியாகச் சேர்த்துக் கொண்டு மிக அவசரமான அந்நிலைமை நீங்கும் வரை அந்த மருத்துவ மனையிலாவது அல்லது உடல் நலம் பெறும் இடத்திலாவது வைத்திருக்க வேண்டும். அதற்குப் பிறகு அவர்கள் சிகிச்சைக்குத் தகுந்தவர்களாய்க் காணப்பட்டால் அவர்களை அந்த மருத்துவ மனையிலிருந்தாவது அல்லது உடல் நலம் பெறும் இடத்திலிருந்தாவது வெளியில் அனுப்பும்போது காத்திருப்பவர் பட்டியலில் அவர்கள் பெயர்களைச் சேர்த்து அவர்கள் முறை வரும் போது அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(9) Thoracoscopy, Thorocoplastry முதலியவை போன்ற அறுவை செய்யப்படும் நடைமுறைக்காக புறப் பகுதியிலுள்ள உருக்கி நோய் தனி மருத்துவ மனைகளிலிருந்தும் மருத்துவ மனைகளிலிருந்தும் அனுப்பப்பட்ட நோயாளிகளை நேராக ஏற்றுக் கொண்டு அறுவை சிகிச்சைக்குப் பிறகு அவரவர் இடங்களுக்குத் திருப்பி அனுப்பிவிட வேண்டும்.

(10) சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக வேறு மருத்துவ மனைகளிலிருந்து அனுப்பப்படும் நோயாளிகளைக் கூடக் காத்திருப்பவர் பட்டியலில் சேர்த்து அந்தப் பட்டியலின் முன்வரிசை நிலையில் அவர்களை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

---

*(அரசாங்க குறிப்பாணை எண் 12777, எல். 59.1, 2—3—1950 தேதியிட்டது.)

(11) குற்றவாளிகளிடையே உருக்கி நோய் ஆரம்ப நிலையில் உள்ள நோயாளிகளை மட்டும் தாம்பரம் உருக்கி நோய் உடல் நலம் பெறும் இடத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**(இ) தனிப்பட்ட பகுதிகளில் சேர்த்துக் கொள்வதற்கான விதிகள்.**—அரசினர் உருக்கி நோய் நிறுவனங்களிலுள்ள தனிப் பட்ட பகுதிகளுக்கு தனிப்பட்ட காத்திருப்பவர் பட்டியல் வைக்கப்பட வேண்டும்.

(2) தனிப்பட்ட பகுதிகளுக்காக வைக்கப்பட்டிருக்கும் காத்திருப்பவர் பட்டியலில் பெயரைச் சேர்ப்பதற்கு பதிவுக் கட்டணமாக 25 ரூபாய் விதிக்கப்பட வேண்டும். சேர்க்கப்படுவதற் கான மனுவுடன் இந்தத் தொகை செலுத்தப்பட வேண்டும். இந்தத் தொகை, நோயாளி சேர்க்கப்பட்டபோது செலுத்த வேண்டிய மருத்துவச் சிகிச்சைச் செலவுகளுக்குச் சரிக் கட்டப் படும். ஒரு படுக்கை காலியாயிருப்பதாகத் தகவல் தமக்கு கிடைக்கப் பெற்ற ஏழு நாட்களுக்குள் அந்த நோயாளி வரா விட்டாலும் அந்த உடல் நலம் பெறும் இடத்தின் கண்காணிப் பாளரிடம் கால நீடிப்புப் பெறப்படாவிட்டாலும் வசூலிக்கப்பட்ட பதிவுக் கட்டணம் அரசாங்கத்திற்குச் சட்ட முறையில் இழக்கப்படும். காத்திருப்பவர் பட்டியலில் அடுத்தபடியாகவுள்ள நோயாளிக்கு அந்தப் படுக்கை அளிக்கப்படும்.

*குறிப்பு.—மாநில அரசாங்கப் பணியாளர்களும் அவர்கள் குடும்பங்களின் உறுப்பினர்களும் அவர்கள் தனிப்பட்ட பகுதிகளில் இலவச இடவசதிக்கு உரிமையுள்ளவர்களானல் பதிவுக் கட்டணமாகிய 25 ரூபாய் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுவார்கள்.

(3) வேறு மாநிலங்களிலிருந்து வரும் நோயாளிகள் தனிப் பட்ட பகுதிகளில் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

(4) தனிப்பட்ட பகுதிகள் இல்லாத போது, ஒரு குடிசை (கொட்டகை) கட்டுவதற்கான செலவை நோயாளி செலுத்தத் தயாராயிருந்தால் உடல் நலம் பெறும் இடங்களின் அதிகாரிகள் ஒரு குடிசை (கொட்டகை)-யைக் கட்டலாம்.

---

*(அ.ஆ. எண். 373, சுகாதாரம், 4—2—1952-ஆம் தேதியிட்டது.)

(5) தாம்பரம் உருக்கி நோய் உடல் நலம் பெறும் இடத்தின் வளைவுக்குள் குடிசைகள் கட்டுவதற்கு அடியிற் கண்ட நடைமுறை கையாளப்பட வேண்டும்.

(அ) உடல் நலம் பெறும் இடத்தின் வளைவுக்குள், மண் பூசப்பட்ட செங்கற் சுவர்களில் ஏற்கெனவே கூரை போடப் பட்டிருக்கும் குடிசைகளை அப்படியே விட்டுவிட வேண்டும். இந்தக் குடிசைகளுக்குப் புதிதாக வருபவர்கள், வந்து தங்கு வதற்கு முன்னால், அவர்கள். செலவிலேயே அவசியமானால் செப்பனிட்டுக் கொள்ளுமாறு சொல்ல வேண்டும். செப்பனிடு வதற்கு முற்றும் தகுதியில்லாததாகி விட்டபோது அவற்றை அழித்து விட வேண்டும். மேலும் புதிதாக எந்தக் கூரைக் கொட்டகையும் போடக் கூடாது.

(ஆ) புதிய குடிசைகளை நாள்பட நிற்கும் பொருள்களைக் கொண்டுதான் கட்ட வேண்டும். இந்தக் குடிசைகள் 1950-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8-ஆம் தேதியிடப்பட்ட 3147 எண் சுகாதாரம் அ. ஆணையில் சொல்லப்பட்டுள்ள தேவைகளுக்கு ஏற்றவாறு இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு குடிசையும் இரட்டைப் பகுதிகளைக் கொண்ட தாயிருக்க வேண்டும்.

இரட்டைப் பகுதிகளைக் கொண்ட ஒரு குடிசை கட்டுவதற்கு உத்தேசச் செலவு 4,950 ரூபாய் ஆகும். உடனடியாக சேர்த்துக் கொள்ளப்பட வேண்டியவர்கள் இந்த மாதிரியான பகுதி கட்டு வதற்காக 2,475 ரூபாய் செலுத்தினால், இந்தப் பகுதியில் இட வசதி யளிக்கப்படுவார்கள்.

இவ்வாறு பணம் கொடுக்க இருவர் முன் வந்த போது, அதாவது முதல் இரட்டைப் பகுதி முழுமையும் ஆட்கள் தங்கி யுள்ள போது இரண்டாவது இரட்டைப் பகுதி அதே மாதிரியில் கட்டப்பட்டு அவைகளில் 2,475 ரூபாய் செலுத்தும் நோயாளிகள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும்.

2,475 ரூபாய் பங்குத் தொகையைச் செலுத்த எவரும் முன் வராவிட்டால் அந்த இரட்டைப் பகுதிகள் காலியாக வைக்கப். படும்.

*(ஈ) **கூட்டக் கதிர்படச் சுற்றுய்வினுல் கண்டுபிடிக்கப்பட்ட நோய்களுக்கான பகுதிகள்.**—தாம்பரம் உருக்கி நோய் உடல் நலம் பெறும் இடத்தில் ஒவ்வொன்றும் 18 படுக்கைகளைக் கொண்ட இரண்டு பகுதிகள். கூட்டக் (கதிர்ப்பட (ரேடியோ கிராபி)-ச் சுற்றுய்வின் மூலம் கண்டுபிடிக்கப்படும். உருக்கி நோயாளிகளுக்கு இடவசதியளித்துச் சிகிச்சையளிப்பதற்காகவே தனியாக விட்டு வைக்கப்பட வேண்டும். இந்த இரண்டு பகுதிகளுக்குக் காத்திருப்பவர் பட்டியல் ஒன்றும் தனியாக வைக்கப்பட வேண்டும். இந்தக் காத்திருப்பவர் பட்டியலில் உள்ளவர்கள் ஒதுக்கப்பட்டுள்ள பகுதிகளில் ஏற்கனவே சேர்க்கப்படாதிருந்தால், வரிசை முறைப்படி உடல் நலம் பெறுமிடத்திலுள்ள மற்றப் பகுதிகளில் சேர்க்கப்பட வேண்டும். இந்த வரிசை முறைக்காக அவர்கள் பெயர்கள் பொதுப் பகுதிகளுக்குக் காத்திருப்பவர் பட்டியலிலும் எழுதப்பட வேண்டும்.

(உ) **கூட்டக் கதிர்ப்பட உருக்கி நோயாளிகளுக்கு மருத்துவ உதவி.**—( i )ஒருவருக்கு ஏற்கனவே கூட்டக் கதிர்ப்படம் எடுக்கப்பட்டு அவர் வருமானம் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயும் அதற்கு மேலுமிருந்தால் அவருக்கு மேற்கொண்டு எடுக்கும் எக்ஸ் கதிர் படங்களுக்கு அட்டவணை விகிதங்களில் கட்டணங்கள் விதிக்கப்படும். ஆனால் முதலில் அடுத்து எடுக்கப்படுவதற்குப் பாதிக் கட்டணமே விதிக்கப்படும்.

(ii) 12 (ஆ) விதியையொட்டி, நிறுவனங்கள் பணியாளர்களுக்கு அவர்கள் கூட்டக் கதிர்ப்படம் எடுக்கப்பட்டதற்குப் பிறகு தாம்பரம் உருக்கி நோய் உடல் நலம் பெறும் இடத்தில் வந்து தங்கும் நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டதும் அவர்களுடைய வருமானம் மாதத்திற்கு 100 ரூபாய்க்குக் குறைவாயிருந்தாலும் மருத்துவ மனைச் செலவுகள் விதிக்கப்பட்டு அவை சம்பந்தப்பட்ட பணியாளர்களிடமிருந்து வசூலிக்கப்படும். இந்த நோயாளிகள் அவர்களை வேலைக்கு அமர்த்தியவர்கள் சம்மதத்தின் பேரிலும் அனுமதிகளின் பேரிலுமே சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். அவர்களை வேலையில் அமர்த்தியவர்களுக்கு அம்மாதிரியானவற்றில் சிகிச்சையளிக்க வேண்டிய தேவையையும் அவசரத்தையும் விளக்கிச் சொல்ல வேண்டும்.

---

*(அ.ஆ. பலவகை, எண் 1489, சுகாதாரம், 27—4—1950 தேதியிட்டது.)

(iii) கூட்டக் கதிர்ப்பட ஆய்வுக்குட்படுத்தப்பட்ட அல்லது உருக்கி நோய்க்கு சிகிச்சையளிக்கப்பட்ட பணியாளர்களுக்குச் சான்றிதழ் அளிக்க அடியிற்கண்ட விகிதங்களில் கட்டணங்கள் அவர்களுக்கு வேலையளித்தவர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

| | ரூபாய். |
|---|---|
| ஒரு சிவில் அறுவை மருத்துவ அலுவலரின் மருத்துவ ஆய்வுச் சான்றிதழ். | 16 |
| ஒரு உதவி அறுவை மருத்துவ அலுவலரின் மருத்துவ ஆய்வுச் சான்றிதழ். | 5 |
| உருக்கி நோய் உடல் நலம் பெறும் இடத்திலிருந்து சேர்க்கப்பட்டதற்கும் வெளியில் அனுப்பப்பட்டதற்கும் சான்றிதழ். | ஒவ்வொன்றுக்கும் 2 அணா |

*(iv) கூட்டக் கதிர்ப்படத்திற்கு உட்படுத்தப்பட்டு உருக்கி நோய் உடல் நலம் பெறும் இடத்தில் சிகிச்சை பெறும் பொதுமக்களுக்கு அவர்கள் வருமானம் 100 ரூபாய்க்கு அதிகமாய் இருந்தால் அவர்களிடமிருந்து மருத்துவ மனை சிகிச்சை தொகைகள் குறிப்பிடப்பட்ட விகிதங்களில் வசூலிக்கப்படும்.

†13. மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய் அல்லது அதிகமாய் வருமானம் உள்ளவர்கள் அல்லது அவர்கள் குடும்பங்களின் உறுப்பினர்கள் தாம்பரம் உருக்கி நோய் உடல் நலம் பெறும் இடத்தில் தவிர வேறு அரசினர் மருத்துவ மனைகளின் பொதுப் பகுதிகளில் வந்து தங்கி சிகிச்சை பெறும் நபர்கள் அடியிற்கண்ட

*(அ. ஆ. எண் 193, சுகாதாரம், 16—1—1953-ஆம் தேதியிட்டது.)

†(அ. ஆ. பலவகை எண் 3508, பொ. சு. 18—12—1944 தேதியிட்டது.)

செலவுத் தொகைகளைச் செலுத்த வேண்டும் :—

| நோயாளியின் அல்லது நோயாளியின் குடும்பத் தலைவரது மாதாந்திர வருமானம். | இலவச மருத்துவ உதவிக்கும் இருக்கை வசதிக்கும் உரிமை யுடைய ஆனால், உணவுக்கும் பணம் செலுத்த வேண்டிய நபர்களுக்குத் தினசரி உணவுச் செலவுகள். | இலவச மருத்துவ உதவிக்கு மட்டும் உரிமையுடைய நபர்களுக்குத் தினசரிச் செலவுகள். | | |
|---|---|---|---|---|
| | | இருப்பு. | உணவு. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை |
| ரூ. 100—149 .. .. | 0 75 | 0 25 | 0 75 | 1 0( |
| ரூ. 15(—199 .. .. | 1 00 | 0 37 | 1 00 | 1 37 |
| ரூ. 200 அல்லது அதிகம் .. | 1 50 | 0 63 | 1 50 | 2 12 |

| நோயாளியின் அல்லது நோயாளியின் குடும்பத் தலைவரது மாதாந்திர வருமானம். | இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுடையவராயில்லாத நபர்களுக்குத் தினசரிச் செலவுகள். | | | |
|---|---|---|---|---|
| | மருத்துவ அறிவுரை. | செவிலிப் பணியும் இருப்பும். | உணவு. | மொத்தம். |
| | (6) | (7) | (8) | ( ) |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| ரூ. 100—149 .. .. | 0 50 | 0 25 | 0 75 | 1 50 |
| ரூ. 150—199 .. .. | 0 75 | 0 37 | 1 00 | 2 11 |
| ரூ. 200 அல்லது அதிகம் .. | 1 25 | 0 63 | 1 50 | 3 37 |

* குறிப்பு.—( i ) ஒரு நோயாளியின் அல்லது அந்த நோயாளியின் குடும்பத் தலைவரின் வருமானம் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்களும் அதற்கு அதிகமாகவுமுள்ளவைகளில், அறுவைகளுக்கும் பிள்ளைப் பேறுகளுக்கும் ரூ. 12.50 முதல் ரூ. 25 வரையில் கட்டணம் விதிக்கப்படும். ஒவ்வொன்றிலும் விதிக்கப்பட வேண்டிய கட்டணத்தை நிர்ணயிக்க மருத்துவ மனைகளின் கண்காணிப்பாளர்களுக்கு உரிமை உண்டு.

எப்படியும், அவள் அல்லது அவர் ஒரு உயர்ந்த வகுப்புப் பகுதிக்கு அல்லது தாழ்ந்த வகுப்புப் பகுதிக்குச் சென்று விட்டால் அவ்வாறு பகுதி மாற்றல், பிள்ளைப் பேறுக்கு அல்லது அறுவை சிகிச்சைக்கு முன்பு இருந்தாலும் அல்லது பின்னரிருந்தாலும் பிள்ளைப் பேறுகளுக்கும் பெரிய அறுவைகளுக்கும் ஏற்பட்டுள்ள உயர்ந்த விகிதக் கட்டணங்களை நோயாளி செலுத்த வேண்டும்.

(ii) 12 ஆண்டு அல்லது அதற்குக் குறைந்த வயதுள்ள சிறுவர்களுக்கு இடவசதிக்கும் செவிலிப் பணிக்கும் உணவுக்கும் ஆகும் செலவுகள் பாதியாகக் குறைக்கப்படும்.

†(iii) உணவுகள் அளிக்கத் தகுந்த ஏற்பாடுகள் இல்லாத இடங்களில், அதனால் நோயாளிகள் (வயது வந்தவர்கள் அல்லது சிறுவர்கள் தாங்களே உணவுகளுக்கு ஏற்பாடுகள் செய்து கொள்ள வேண்டியுள்ளவைகளில்) உணவுக்காகக் குறிக்கப்பட்டுள்ள செலவுத் தொகைகள் வசூலிக்கப்படமாட்டா.

(iv) வேலையில்லாத அகதி நோயாளிகள், அவர்களுக்கு வருமானம் ஒன்றும் இல்லாதபோது அரசினர் மருத்துவ மனைகளில் பொதுப் பகுதிகளில் சேர்க்கப்பட்டால், அவர்களுக்கு இலவசச் சிகிச்சையளிக்க வேண்டும்.

** (13-அ) சென்னை உருக்கி நோய் மருத்துவ மனையிலும், தாம்பரம் உருக்கி நோய் உடல் நலம் பெறும் இடத்திலும் பொதுப் பகுதியில்

---

*(அ. ஆ. பலவகை எண் 3230, பொ. சு. 17—10—1943 தேதியிட்டது.)

†(அ. ஆ. எண் 3508, பொ. சு., 18—12—1944 தேதியிட்டது.)

**(அ. ஆ. எண் 4291, பொ. சு. 6—12—1949 தேதியிட்டது.)

உள்ள பணம் செலுத்தும் நோயாளிகளிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய செலவு தொகைகள் அடியிற்காணுமாறு இருக்கும் :—

| நோயாளியின் அல்லது அவரது குடும்பத் தலைவரின் மாதாந்திர வருமானம். | இலவச மருத்துவ உதவிக்கும் இடவசதிக்கும் உரிமையுடைய ஆனால், உணவுத் தொகை செலுத்தப்பட வேண்டிய நபர் களுக்காகும் தினசரி உணவுச் செலவுகள். | இலவச மருத்துவ உதவிக்கு மட்டும் உரிமையுடைய நபர்களுக்குத் தினசரிச் செலவுகள். | | |
|---|---|---|---|---|
| | | இடவசதி. | உணவு. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| ரூ. 100—149 .. .. | 0 63 | 0 25 | 0 63 | 0 88 |
| ரூ. 150—199 .. .. | 0 75 | 0 37 | 0 75 | 1 12 |
| ரூ. 200 அல்லது அதிகம் .. | 1 25 | 0 63 | 1 25 | 1 88 |

| நோயாளியின் அல்லது அவரது குடும்பத் தலைவரின் மாதாந்திர வருமானம். | இலவச மருத்துவ உதவிக்கு உரிமையில்லாத நபர்களுக்காகும் தினசரிச் செலவுகள். | | | |
|---|---|---|---|---|
| | மருத்துவ அறிவுரை. | செவிலிப் பணியும் இடவசதியும். | உணவு. | மொத்தம். |
| | (6) | (7) | (8) | (9) |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| ரூ. 100—149 .. .. | 0 50 | 0 25 | 0 63 | 1 37 |
| ரூ. 150—199 .. .. | 0 75 | 0 37 | 0 75 | 1 88 |
| ரூ. 200 அல்லது அதிகம் .. | 1 25 | 0 63 | 1 25 | 3 12 |

14. (அ) எதேனும் ஒரு அரசினர் மருத்துவ மனையில் முக்கிய மான பெரிய பொதுப் பகுதிகளோடு சிறிய பொதுப் பகுதிகள் இருந்தால், பொதுப் பகுதிகளில் சேர்க்கப்பட்டுள்ள பணம் செலுத்தும் நோயாளிகள், தனியாக அந்தச் சிறிய பகுதிகளில் இடவசதியளிக்கும்படி விரும்புகின்-வர்கள் மேலே உள்ளபடி விதிக்கப்படக் கூடிய கட்டணத்துடன் கூடிய மேற்கொண்டு நாள் ஒன்றுக்கு 50 பை கட்டணம் செலுத்துவதாயிருந்தால் அவ்வாறிருக்க இடவசதியளிக்கலாம்.

*பணம் செலுத்தாத நோயாளிகள் தனிப்பட்ட காரணங் களுக்காக அல்லாமல் சிறிய பொதுப் பகுதிகளுக்குச் சேர்த்துக் கொள்ளபடக் கூடாது. அத்தகைய நோயாளிகள் ஒரு சிறிய பொதுப் பகுதியில் இருக்க இடவசதியளிக்கப்பட்டுள்ளதற்காக அவர்களுக்கான செலவு ரூ. 100—149 வருமான வகுப்புக்குப் பொருந்தும் விகிதத்தில் விதிக்கப்பட வேண்டும்.

குறிப்பு.—( i ) மேலே சொல்லப்பட்டுள்ள விதி சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையிலுள்ள தனிப்பட்ட அறைகளுக்கும் பொருந்தும்.

( ii ) 19 (2) விதியை யொட்டி அரசிதழ் பதிவு பெற்றுள்ள அலுவலர்களும் ரூ. 250-ம் அதற்கு மேலும் பெறும் அரசிதழ் பதிவு பெறாத பணியாளர்களும் சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் தனி அறைகளில் இலவச இடவசதி பெறுவதற்கு உரிமையுள்ளவர் களாவார்கள்.

(ஆ) இந்த விதியின் (அ) உள்விதியையொட்டி எந்தப் பகுதிகளை சிறிய பொதுப் பகுதிகளாக வகைப்படுத்தப்பட வேண்டு மென்பதை மருத்துவத்துறை இயக்குநரைக் கலந்து மாநகரத்தில் மருத்துவ மனைகளின் கண்காணிப்பாளர்களும் புறப் பகுதிகளில் மாவட்ட மருத்துவ அலுவலர்களும் தீர்மானிக்க வேண்டும்.

15. ‘ இ ’ வகுப்புப் பகுதிகளில் வந்து தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகள்.—(அ) ‘ இ ’ வகுப்புப் பணம் செலுத்தும் பகுதிகளில் வந்து தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளாகச் சேர்க்கப்

*(அ· ஆ எண் 2827, சுகாதாரம், 8—8—1950 தேதியிட்டது.)

பட்டுள்ள நபர்கள் அடியிற்கண்ட தொகைகளைச் செலுத்த வேண்டும்.

| நோயாளியின் அல்லது அவரது குடும்பத் தலைவரின் மாதாந்திர வருமானம். | இலவச மருத்துவ உதவிக்கும் இட வசதிக்கும் உரிமையுடைய ஆனால், உணவுச் செலவைச் செலுத்த வேண்டிய நபர்களுக்கு தினசரி உணவுச் செலவுகள். | இலவச மருத்துவ உதவிக்கு மட்டும் உரிமையுடைய நபர்களுக்குத் தினசரிச் செலவுகள். | | |
|---|---|---|---|---|
| | | இடவசதி. | உணவு. | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| (அ) அரசினர் பொது மருத்துவமனை. | 1 50 | 0 75 | 1 50 | 2 25 |
| (ஆ) தாம்பரம் அரசினர் உருக்கி நோய் உடல் நலம் பெறும் இடம். | 0 86 | 0 38 | 0 86 | 1 18 |
| (இ) மலை இடங்களில் உள்ள மருத்துவ மனைகள்— | | | | |
| ரூ. 100—149 .. .. | 1 25 | 0 37 | 1 25 | 1 62 |
| ரூ. 150—199 .. .. | 1 50 | 0 12 | 1 50 | 2 00 |
| ரூ. 200 அல்லது அதிகம். | 2 00 | 0 75 | 2 00 | 2 75 |
| (ஈ) ஏனைய அரசினர் மருத்துவ மனைகள்.— | | | | |
| ரூ. 100—149 .. .. | 0 75 | 0 37 | 0 75 | 1 12 |
| ரூ. 150—199 .. .. | 1 00 | 0 50 | 1 00 | 1 50 |
| ரூ. 200 அல்லது அதிகம், | 1 50 | 0 75 | 1 50 | 2 25 |

| நோயாளியின் அல்லது அவரது குடும்பத் தலைவரின் மாதாந்திர வருமானம். | இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுடையவராயில்லாத நபர்களுக்குத் தினசரிச் செலவுகள். | | | |
|---|---|---|---|---|
| | மருத்துவ அறிவுரை. | செவிலிப் பணியும் இடவசதியும். | உணவு. | மொத்தம். |
| | (6) | (7) | (8) | (9) |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| (அ) அரசினர் பொது மருத்துவ மனை. | 1 50 | 0 75 | 1 50 | 3 75 |
| (ஆ) தாம்பரம் அரசினர் உருக்கி நோய் உடல் நலம் பெறும் இடம். | 0 86 | 0 38 | 0 86 | 2 00 |
| (இ) மலை இடங்களில் உள்ள மருத்துவ மனைகள். | | | | |
| ரூ. 100—149 .. .. | 0 62 | 0 25 | 1 25 | 2 12 |
| ரூ. 150—199 .. .. | 0 87 | 0 37 | 1 50 | 2 75 |
| ரூ. 200 அல்லது அதிகம். | 1 41 | 0 62 | 2 00 | 4 00 |
| (ஈ) ஏனைய அரசினர் மருத்துவ மனைகள்.— | | | | |
| ரூ. 100—149 .. .. | 0 62 | 0 25 | 0 75 | 1 62 |
| ரூ. 150—199 . .. | 0 87 | 0 37 | 1 00 | 2 25 |
| ரூ. 200 அல்லது அதிகம். | 1 37 | 0 62 | 1 50 | 3 50 |

*குறிப்பு.—மேல் அட்டவணையில் (2) ஆம் கட்டத்தில் குறிப்பிட்டுள்ள விகிதங்கள் தமிழ்நாடு மாநிலத்தின் அரசிதழ் பதிவு பெற்ற அரசாங்கப் பணியாளர்களுக்கும் பொருந்தும். தமிழ்நாடு மாநிலத்தில் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்க்குக் குறைவாய் வருமானம் பெறும் அரசாங்கப் பணியாளர்கள் 'இ' வகுப்புப்

*(அ. ஆ. எண். 2827, சுகாதாரம், 8—8—1950 தேதியிட்டது.)

பகுதிகளில் சேர்க்கப்பட்டால் அவர்கள் இலவச மருத்துவ உதவிக்கு உரிமையில்லாதவர்கள் போலவே செலவுத் தொகை விதிக்கப்படுவார்கள்.

*பணம் செலுத்தாத நோயாளிகள் தனிப்பட்ட காரணங்களுக்காகவன்றி 'இ' வகுப்புப் பகுதிகளில் சேர்க்கப்படமாட்டார்கள். அத்தகைய நோயாளிகள் ரூபாய் 100—149 வருமானத் தொகுதியுடையவர்களுக்குப் பொருந்தக் கூடிய விகிதாசாரப்படி செலவுத் தொகை விதிக்கப்படுவார்கள். சென்னை அரசினர் பொது மருத்துவ சாலையும், தாம்பரம் அரசினர் உருக்கி நோய் உடல் நலம் பெறும் இடத்திலும் தனிப்பட்ட காரணங்களுக்காக அத்தகைய நோயாளிகள் 'இ' வகுப்புத் தனிப்பட்ட பகுதிகளில் சேர்க்கப்படுவார்கள். மருத்துவ மனை மருத்துவச் சிகிச்சை முதலிய செலவுகள் அமுலில் உள்ள ஒரே விகிதங்களில் செலுத்த வேண்டி வரும்.

(ஆ) பெரிய அறுவைகளுக்கும் மகப்பேறுகளுக்கும், அந்த நோயாளி அல்லது அந்த நோயாளியின் குடும்பத் தலைவரின் வருமானம் எதுவாயிருந்த போதிலும் ரூ. 15 முதல் 40 வரையில் கட்டணமாக விதிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு நிகழ்விலும் விதிக்கப்பட வேண்டிய கட்டணத்தைச் சம்பந்தப்பட்ட மருத்துவ மனைகளின் கண்காணிப்பாளர்கள் தங்கள் கருத்துப்படி முடிவு செய்யும் உரிமையுள்ளவர்களாவார்கள். எப்படியும் அவர் அல்லது அவள் ஒரு உயர் வகுப்புப் பகுதிக்கு அல்லது தாழ்வு வகுப்புப் பகுதிக்குச் சென்று விட்டால் அவ்வாறு பகுதி மாறியது, பிள்ளைப் பேற்றுக்கு அல்லது அறுவைக்கு முன்பு இருந்தாலும் அல்லது பின்பு இருந்தாலும் பிள்ளைப் பேறுகளுக்கும் பெரிய அறுவைகளுக்கும் ஏற்பட்டுள்ள உயர்ந்த விகிதக் கட்டணங்களை நோயாளி செலுத்த வேண்டும்.

†(இ) 12 ஆண்டு அல்லது அதற்குக் குறைவான வயதுள்ள சிறுவர்களுக்குச் செவிலிப் பணிக்கும் இடவசதிக்கும் ஆகும் செலவுகள் பாதியாகக் குறைக்கப்படும்.

---

*(அ. ஆ. பலவகை எண் 2827, சுகாதாரம், 8—8—1950 தேதியிட்டது.)

†(அ. ஆ. எண் 2508, பொ. சுகாதாரம், 11—12—1944 தேதியிட்டது.)

*(ஈ) உணவுகள் அளிக்கத் தகுந்த ஏற்பாடுகள் இல்லாமல் இதனுல் நோயாளிகள் (வயது வந்தவர்களும் சிறுவர்களும்) தம்முடைய சொந்த உணவை எடுத்துக் கொள்ளும் நிகழ்வுகளில் உணவுக்காகக் குறிப்பிடப்பட்டுள்ள செலவு தொகைகள் வசூலிக்கப் படமாட்டா.

16. சிறப்புறு மருத்துவ அலுவலர்கள், மனை அறுவை மருத்துவர்கள், மனை மருத்துவர்கள், செவிலியர், மகப்பேறு உதவியாளர்கள், மாணவச் செவிலியர்கள், மருந்துவக் கல்லூரி மாணவர்கள் ஆகியவர்களுக்கு அரசினர் மருத்துவ மனையில் இடவசதி.—(அ) (1) மனை அறுவை மருத்துவர்கள், மனை மருத்துவர்கள், செவிலியர்கள், மகப்பேறு உதவியாளர்கள், அரசினர் செவிலியர்கள், அரசினர் மருத்துவ நிறுவனங்களில் பணியாற்றும் மாணவச் செவிலியர்கள், அரசினர் மருத்துவ நிறுவனங்களில் பயிற்சி பெறும் மகப்பேறு உதவியாளர்கள். அரசினர் மருத்துவக் கல்லூரிகளின் மாணவர்கள் ஆகிய இவர்கள் அடியிற்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு 'இ' வகுப்புப் பணம் செலுத்தும் பகுதிகளில் சேர்க்கப்படலாம்.

(i) மனை அறுவை மருத்துவர்களும் மனை மருத்துவர்களும் மாணவச் செவிலியர்களும்.—இவர்கள் இலவச 'இ' வகுப்புப் பகுதி உணவு அளிக்கப்படுவார்கள்.

குறிப்பு.—இந்தச் சலுகை, நாட்டு மருந்துக் கல்லூரியிலிருந்து சென்னை ராயப்பேட்டை அரசினர் மருத்துவ மனைக்கு மருத்துவப் போதனசாலைப் பயிற்சிக்காக அனுப்பப்படும் மருத்துவர்களுக்குக் கூடப் பொருந்தும்.

(ii) செவிலியர்கள்.—பொதுப் பகுதி விகிதத்தில் 'இ' வகுப்புப் பகுதி உணவு அளிக்கப்படுவார்கள்.

(iii) மகப்பேறு உதவியாளர்களும், பயிற்சி பெறும் மகப் பேறு உதவியாளர்களும்.—அவர்கள் விருப்பப்படி 'இ' வகுப்புப் பகுதி உணவு அல்லது பொதுப் பகுதி உணவு அளிக்கப் படுவார்கள்.

(iv) அரசினர் மருத்துவக் கல்லூரிகளின் மாணவர்கள்.—அவர்கள் பெற்றோர்கள் அல்லது காப்பாளர்களின் மாத வருமானம் ரூ. 100 அல்லது அதற்கு மேற்பட்டிருந்தால் அதற்கேற்ப அவர்கள் விருப்பப்படி 'இ' வகுப்புப் பகுதி அல்லது பொதுப்

*(அ ஆ. பலவகை, எண் 3508, பொ. சு., 18—12—1944 தேதியிட்டது.)

பகுதி உணவு அளிக்கப்பட்டு செலவுத் தொகைகள விதிக்கப்படுவார்கள். தம் பெற்றோர்களின் அல்லது காப்பாளர் களின் மாத வருமானம் ரூ. 100-க்குக் குறைவாயுள்ள மாணவர்கள் இலவச 'இ' வகுப்பு இடவசதியைப் பெற்றுக்கொள்ள விரும்பா விட்டால் அவர்கள் பொதுப் பகுதிக்குப் போகலாம். அங்கு அவர் களுக்கு இலவச உணவோடு இலவச இடவசதியும் அளிக்கப் படும்.

(2) மனை அறுவை மருத்துவர்கள, மனை மருத்துவர்கள், செவிலியர், மகப்பேறு உதவியாளர்கள், மாணவச் செவிலியர்கள் பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கும் மகப்பேறு உதவியாளர்கள் ஆகியவர்களுக்கு இடவசதிக்காக ஒன்றும் விதிக்கப்படமாட்டாது. ஆனல், அரசினர் மருத்துவக் கல்லூரிகளின் மாணவர்களைப் பொருத்தவரை அவர்களுடைய பெற்றோர்களின் அல்லது காப்பாளர்களின் மாதாந்தர வருமானம் ரூ. 100 அல்லது அதிக மாய் இருந்தால், அவர்களுக்குப் பொதுப் பகுதி விகிதத்தில் செலவுத் தொகை விதிக்கப்படும்.

*(3) இந்த உள்விதியின் (1) ஆவது பகுதியின் (iii) ம், (iv) ஆம் இனங்களில் சொல்லப்பட்ட நபர்களால் தங்களுக்குத் தேவைப்படும் உணவு வகையை ஒரு முறை தேர்ந்தெடுத்துக் கொண்டால், அதுவே முடிவானதாகும். அவ்வாறு தேர்ந்தெடுத்த பிறகு, அவர்கள் தங்கள் உணவை 'இ' வகுப்புப் பகுதி உணவி லிருந்து பொதுப் பகுதி உணவுக்கோ அல்லது எதிர்மாறகவோ மாற்றிக் கொள்ளத் தகுதியுள்ளவர்களாக மாட்டார்கள்.

(ஆ) 'இ' வகுப்பு இடவசதியளிக்காத வேறு மருத்துவ மனைகளில் முடியுமானல் மனை அறுவை மருத்துவர்கள், மனை மருத்துவர்கள், மருத்துவக் கல்லூரி மாணவர்கள், செவிலியர்கள், மகப்பேறு உதவியாளர்கள், மாணவச் செவிலியர்கள் ஆகியவர் களுக்குச் சிகிச்சையளிக்க ஒரு சில படுக்கைகளுடன் தனி அறைகள் ஒதுக்கப்படலாம். அதற்காகத் தனி அறைகள் இல்லாதவைகளில் பொதுப் பகுதியில் ஒரு பாகத்தில் திரை போட்டுத் தேவையான இடவசதி அளிக்கலாம். மேற்கண்ட இச் சலுகை அடியிற்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்கும்—

(i) இந்தத் தனி அறைகளில் இருப்பவர்களுக்கு உணவுகள் வழங்கப்படும் அளவு முறையும், அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் தொகைகளும், பொதுப் பகுதிகளில் உள்ள நோயாளிகளுக்கு இருப்பது போலவே இருக்க வேண்டும்.

---

* (அ. ஆ. எண் 274 சுகாதாரம் 28—1—1952 தேதியிட்டது.)

2. இந்த அறைகளில் எப்போதாவது முழுவதிலும் அல்லது ஒரு பாகத்தில் எவரும் இல்லாதுபோனல் மற்ற நோயாளிகளுக்கு அவ்விடத்தில் இடவசதியளிக்க வேண்டும்.

*(இ) அத்தகைய பகுதிகள் உள்ள இடங்களில் சிறப்புறு மருத்துவ அலுவலர்கள் ' அ ' வகுப்புப் பகுதிகளிலும் சிறப்புறு உதவி மருத்துவர்கள் ' அ ' வகுப்பு அல்லது ' ஆ ' வகுப்பு இட வசதியில்லாத மருத்துவ மனைகளில் அவர்களை தனிப் பகுதிகளிலும் சேர்க்கலாம். இப்படிப்பட்டவற்றில் மருத்துவ மனை சிகிச்சைச் செலவுகள், தங்களுக்குப் பொருந்துகின்ற பகுதிகளில் சேர்க்கப் பட்டுள்ள அரசாங்கப் பணியாளர்களுக்கு ஏற்பட்டுள்ள அளவு முறைப்படி இருக்கும்.

† 17. தனிப் பகுதிகள்.—தனிப் பகுதிகளில் சேர்க்கப்பட்டுள்ள அடியிற்காணுமாறு இருக்கவேண்டும்—

| நிறுவனங்கள். | இலவச மருத்துவ உதவிக்கு இடவசதிக்கும் உரிமையுடைய நபர்களுக்குத் தினசரி உணவுச் செலவு. | இலவச மருத்துவ உதவிக்கு மட்டும் உரிமையுடைய நபர்களுக்கு தினசரிச் செலவு. | | |
|---|---|---|---|---|
| | | இடவசதி. | உணவு. | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| (அ) சென்னை மாநகரத்தில் மருத்துவ மனைகள் தனி படுக்கைகள் 'அ' வகுப்புப் பகுதி. | 4 00 | 4 00 | 4 00 | 8 00 |
| இரு படுக்கை 'அ' வகுப்புப் பகுதி. | 3 00 | 2 75 | 3 00 | 5 75 |

* (அ. ஆ. பலவகை என் 1003, பொ. சு. 18—3—1942 தேதியிட்டது.)

† (அ. ஆ. பலவகை என் 3508, பொ. சு., 18—12—1944 தேதியிட்டது.)

| (1) | (2) | (3) | (4) | (5) |
| --- | --- | --- | --- | --- |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| மூன்று அல்லது நான்கு படுக்கைகள் 'அ' வகுப்புப் பகுதி. | 3 00 | 1 50 | 3 00 | 4 50 |
| தனிப் படுக்கை 'ஆ' வகுப்புப் பகுதி. | 3 00 | 1 50 | 3 00 | 4 50 |
| இரட்டைப் படுக்கை 'ஆ' வகுப்புப் பகுதி. | 3 00 | 1 12 | 3 00 | 4 12 |
| (ஆ) உதகமண்டலம் தலைமையிட மருத்துவமனை, குன்னூர் அரசினர் லாலி மருத்துவ மனையும், தாம்பரம் உருக்கி நோய் தங்கி உடல் நலம் பெறும் இடமும் தவிர புறப் பகுதிகளிலுள்ள மருத்துவ மனைகள். | 3 00 | 50 பை ஒரு ரூபாய் ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் மருத்துவத் துறை இயக்குநரால் நிர்ணயிக்கப்பட வேண்டும். | .. | 3 50 முதல் 4 வரையில் வேறுபடும். |
| (இ) உதகமண்டலம் தலைமையிட மருத்துவ மனையும், குன்னூர் அரசினர் லாலி மருத்துவ மனையும். | | | | |
| (1) ஐரோப்பியர் உணவு. | 5 00 | 1 00 | 5 00 | 6 00 |
| (2) இந்தியர் உணவு. | 3 50 | 1 00 | 3 50 | 4 50 |
| (ஈ) தாம்பரம் உருக்கி நோய் தங்கி நலம் பெறும் இடம். | | | | |
| குடிசைகளும், குடிசைகளின் இரட்டை—இனங்களும். | | | | |
| ('அ' வகுப்புப் பகுதி) இரண்டு படுக்கைப் பகுதி— | 1 25 | 2 50 | 1 25 | 3 75 |
| ('ஆ' வகுப்புப் பகுதி) | 1 25 | 1 75 | 1 25 | 3 00 |

| நிறுவனங்கள். | இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுள்ளவர்களல்லாதவர்களுக்குத் தினசரிச் செலவு. | | |
|---|---|---|---|
| | இது அறுவைகள் உட்பட மருத்துவ அறிவுரை. (6) | செவிலியர் பணி. (7) | இடவசதி. (8) |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| (அ) சென்னை மாநகரத்தில் மருத்துவ மனைகள் தனி படுக்கைகள் 'அ' வகுப்புப் பகுதி. | 5 00 | 2 00 | 4 00 |
| இரு படுக்கை 'அ' வகுப்புப் பகுதி. | 5 00 | 2 00 | 2 75 |
| மூன்று அல்லது நான்கு படுக்கைகள் 'அ' வகுப்புப் பகுதி. | 5 00 | 2 00 | 1 50 |
| தனிப் படுக்கை 'அ' வகுப்புப் பகுதி. | 5 00 | 2 00 | 1 50 |
| இரட்டைப் படுக்கை 'ஆ' வகுப்புப் பகுதி. | 5 00 | 0 25 | 1 12 |
| (ஆ) உதகமண்டலம் தலைமையிட மருத்துவ மனை, குன்னூர் அரசினர் லாலி மருத்துவ மனையும், தாம்பரம் உருக்கி நோய் தங்கி உடல் நலம் பெறும் இடமும் தவிர புறப் பகுதி | 1 25 | 14 படுக்கைகளுக்கு ஒரு ஆள் விகிதத்திற்குக் குறையாமல் அந்த மருத்துவ மனையில் செவிலிப் பணியாளர்கள் | 50 பைசா முதல் 1 ரூபாய் வரை ஒவ்வொரு மருத்துவ மனைக்கும் மருத்துவத் துறை இயக்கு |

| நிறுவனங்கள். | இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுள்ளவர்களல்லாதவர்களுக்குத் தினசரிச் செலவு. | | |
| --- | --- | --- | --- |
| | ஆறு அறைகள் உட்பட மருத்துவ அறிக்கை. | செவிலியர் பணி. | இடைச. |
| | (6) | (7) | (8) |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| களிலுள்ள மருத்துவ மனைகள். | | செவிலி மாணவர்கள் உட்பட இருந்தால் ரூ. 1 வேறு விகிதமாயிருந்தால்/ செலவு இல்லை. | நரால் நிர்ணயிக்கப்பட வேண்டியது. |
| (இ) உதகமண்டலம் தலைமையிட மருத்துவ மனையும், குன்னூர் அரசினர் லாலி மருத்துவ மனையும். | | | |
| (1) ஐரோப்பியர் உணவு. | 1 25 | 1 00 | 1 06 |
| (2) இந்தியர் உணவு. | 1 25 | 1 00 | 1 00 |
| (ஈ) தாம்பரம் உருக்கி நோய் தங்கி நலம் பெறும் இடம் குடிசைகளும்; குடிசைகளின் இரட்டை —இனங்களும். | | | |
| ('அ' வகுப்புப் பகுதி) இரண்டு படுக்கைப் பகுதி. | | | |
| ('ஆ' வகுப்புப் பகுதி) | | | |

| நிறுவனங்கள். | இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுள்ளவர்களல்லாதவர்களுக்குத் தினசரிச் செலவு. உணவு. | மொத்தம். | பெரிய அறுவைகளுக்குப், பேறுகாலத்துக்குப். |
|---|---|---|---|
| | (9) | (10) | (11) |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| (அ) சென்னை மாநகரத்தில் மருத்துவமனைகள் தனி படுக்கைகள் 'அ' வகுப்புப் பகுதி. | 4 00 | 15 00 | 100–100–400 |
| இரு படுக்கை 'அ' வகுப்புப் பகுதி. | 3 00 | 12 75 | 100–100–400 |
| மூன்று அல்லது நான்கு படுக்கைகள் 'அ' வகுப்புப் பகுதி. | 3 00 | 11 50 | 75–75–225 |
| தனிப் படுக்கை 'ஆ' வகுப்புப் பகுதி. | 3 00 | 11 50 | 75–75–225 |
| இரட்டைப் படுக்கை 'ஆ' வகுப்புப் பகுதி. | 3 00 | 9 37 | 75–75–225 |
| (ஆ) உதகமண்டலம் தலைமையிட மருத்துவமனை, குன்னூர் அரசினர் லாலி மருத்துவமனையும், தாம்பரம் உருக்கி நோய் தங்கி உடல் நலம் பெறும் இடமும் தவிர புறப் பகுதிகளிலுள்ள மருத்துவமனைகள். | 3 00 | 4·75 முதல் 6·25 வரையில் வேறுபடும். | 75–75–225 |

| நிறுவனங்கள். | இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுள்ளவர்களல்லாதவர்களுக்குத் தினசரிச் செலவு. உணவு. (9) | மொத்தம். (10) | பெரிய அறுவைச் சிகிச்சை, பேறுகாலம். (11) |
|---|---|---|---|
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| (இ) உதகமண்டலம் தலைமையிட மருத்துவமனையும், குன்னூர் அரசினர் லாலி மருத்துவ மனையும். | | | |
| (1) ஐரோப்பியர் உணவு. | 5 00 | 8 25 | 75–75–225 |
| (2) இந்தியர் உணவு. | 3 50 | 6 75 | 75–75–225 |
| (ஈ) தாம்பரம் உருக்கி நோய் தங்கி நலம் பெறும் இடம் குடிசைகளும், குடிசைகளின் இரட்டை—இனங்களும். | | | |
| ('அ' வகுப்புப் பகுதி) இரண்டு படுக்கைப் பகுதி. | | | 100–50–350 |
| ('ஆ' வகுப்புப் பகுதி) | | | 100–50–350 |

| நிறுவனம். | இலவச மருத்துவ உதவிக்கும் இடவசதிக்கும் உரிமையுடைய நபர்களுக்குத் தினசரி உணவுச் செலவுகள். | | இலவச மருத்துவ உதவிக்கு மட்டும் உரிமையுள்ள நபர்களுக்குத் தினசரி செலவு. | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இடவசதி. | | உணவு. | | மொத்தம். | |
| (1) | (2) | | (3) | | (4) | | (5) | |
| | ரூ. | பை. | ரூ. | பை. | ரூ. | பை. | ரூ. | பை. |
| (உ) சென்னை பெண்களுக்கும், குழந்தைகளுக்குமுரிய கஸ்தூரிபா காந்தி மருத்துவ மனை, தனிப்பட்ட படுக்கையறைகள் நோயாளியின் அல்லது அவரது குடும்பத் தலைவரின் வருமானம் மாதத்திற்கு. | | | | | | | | |
| ரூ. 240 வரையில் .. | 1 | 75 | 0 | 87 | 1 | 75 | 2 | 62 |
| ரூ. 250—400 .. | 2 | 00 | 0 | 87 | 2 | 00 | 0 | 87 |
| ரூ. 401—450 .. | 2 | 25 | 1 | 12 | 2 | 25 | 3 | 37 |
| ரூ. 451—600 .. | 2 | 50 | 1 | 12 | 2 | 50 | 3 | 62 |
| ரூ. 601—900 .. | 2 | 75 | 1 | 75 | 2 | 75 | 4 | 50 |
| ரூ. 901—1,200 .. | 3 | 00 | 2 | 25 | 3 | 00 | 5 | 25 |

| நிறுவனம். | இலவச மருத்துவ முதலியவை பெற உரிமையில்லாத நபர்களுக்குத் தினசரிச் செலவு. | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | இரு அறுவை மருத்துவமனை உள்ள மருத்துவ அறிஞரை. | | செவிலிப் பணியாம் இடைச்செயலியும். | | உணவு. | | மொத்தம். | |
| | (6) | | (7) | | (8) | | (9) | |
| | ரூ. | பை. | ரூ. | பை. | ரூ. | பை. | ரூ. | பை. |
| (உ) சென்னை பெண்களுக்கும் குழந்தைகளுக்குமுரிய கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனை, தனிப்பட்ட படுக்கையறைகள் நோயாளியின் அல்லது அவரது குடும்பத் தலைவரின் வருமானம் மாதத்திற்கு. | | | | | | | | |
| ரூ. 240 வரையில் .. | 3 | 12 | 0 | 97 | 1 | 75 | 5 | 75 |
| ரூ. 250—400 .. | 3 | 12 | 0 | 87 | 2 | 00 | 6 | 00 |
| ரூ. 401—450 .. | 3 | 12 | 1 | 12 | 2 | 25 | 6 | 50 |
| ரூ. 451—600 .. | 4 | 50 | 1 | 12 | 2 | 50 | 8 | 12 |
| ரூ. 601—900 .. | 5 | 00 | 1 | 75 | 2 | 75 | 9 | 50 |
| ரூ. 901—1,200 .. | 7 | 50 | 2 | 25 | 3 | 00 | 12 | 75 |

| | பெரிய அறுவை மருத்துவங்கள். (10) | பிள்ளைப் பேறு இயல்பானது. (11) | பிள்ளைப் பேறு இயல்பின்மை மிக்கது. (12) |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| (உ) சென்னை பெண்களுக்கும் குழந்தைகளுக்குமுரிய கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை, தனிப்பட்ட படுக்கையறைகள் நோயாளியின் அல்லது அவரது குடும்பத் தலைவரின் வருமானம் மாதத்திற்கு. | | | |
| ரூ. 240 வரையில் .. | 40 | 30 | 40 |
| ரூ. 250—400 .. | 50 | 35 | 50 |
| ரூ. 401—450 .. | 75 | 50 | 75 |
| ரூ. 451—600 .. | 75 | 50 | 75 |
| ரூ. 601—900 .. | 125 | 75 | 125 |
| ரூ. 901—1,200 .. | 200 | 125 | 200 |

(ஊ) தொண்டைச் சதை அறுவைச் சிகிச்சை.

| நோயாளியின் அல்லது அவரின் குடும்பத் தலைவரின் மாதாந்தர வருமானம். | |
|---|---|
| ரூபாய்கள். | விகிதம். |
| 100—250 | 15—30 |
| 251—500 | 30—50 |
| 501—1,000 | 50—75 |
| 1,000 ரூபாய்களுக்கு மேல். | 100—00 |

*குறிப்பு.—( ) 1938 ஆம் ஆண்டு செகரட்டரி-ஆப்-ஸ்டேட்ஸ் பணியாளர்த் தொகுதிகள் (மருத்துவ உதவி) விதிகள் பொருந்தக்கூடிய நபர்கள் இலவச மான இட வசதிக்கு உரிமை உள்ளவர்களாகிறார்கள். ஆனால் அவர்களிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய செலவு தொகைகள் இந்த விதியின் அட்டவணையில் (2) ஆம் பத்தியின் கீழ்க் குறிக்கப் பட்டுள்ள செலவுத் தொகைகளாகும். மத்திய அரசாங்கத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள அலுவலர்களைப் பொருத்தவரை சென்னை மருத்துவ உதவி விதிகளின் 44 ஆம் விதியின்படி செலவுத் தொகைகள் வசூலிக்கப்படும்.

(ii) பெரிய அறுவைகளுக்கும் அல்லது பிள்ளைப் பேறு களுக்கும் மேலே ஒப்பு அளிப்புத் தரப்பட்டுள்ள அளவு முறை களுக்குள் உள்ளபடியாக விதிக்கப்பட வேண்டிய தொகை அந்த மருத்துவ மனையின் கண்காணிப்பாளரால் நிர்ணயிக்கப்படும்.

எப்படியும், ஒரு நோயாளி, மேல் வகுப்புப் பகுதிக்கு அல்லது கீழ் வகுப்புப் பகுதிக்கு அவன் அல்லது அவர் மாற்றிக் கொண்டு போனால் அந்தப் பகுதி மாற்றம் பிள்ளைப் பேறுக்கு அல்லது அறுவைக்கு முன்பு இருந்தாலும் அல்லது பின்பு இருந்தாலும் பிள்ளைப் பேறுகளுக்கு அல்லது பெரிய அறுவைக்குக் குறிக்கப் பட்டுள்ள அதிகமான விகிதங்களில் கட்டணம் செலுத்தவேண்டும்.

(iii) குழந்தை பிறந்த பத்து நாட்களுக்குப் பிறகு சேர்க்கப் பட்டுத் தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகளிடம் பிள்ளைப் பேற்றுச் செலவு ஒன்றும் வசூலிக்கப்பட மாட்டாது.

(iv) உணவு அளிக்கத் தகுந்த ஏற்பாடுகள் இல்லாதவற்றில் நோயாளிகள் (வயது வந்தவர்கள் அல்லது சிறுவர்கள்) தங்கள் சொந்த உணவைப் பெற்றுக் கொண்டால் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள செலவுத் தொகையை ஒரு நோயாளிக்கு ஒரு நாளைக்கு ரூ. 2 பெறும் அளவுக்குட்பட்டு உணவுச் செலவு குறைக்கப்படும்.

(v) சென்னை அரசினர் கண் மருத்துவ மனையின் தனிப் பகுதிகளில் சேர்க்கப்பட்டுள்ள இலவச மருத்துவ உதவிக்கு உரிமையில்லாத தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கான

* (அ. ஆ. எண். 450, சுகாதாரம், 3—5—1952-ஆம் தேதியிட்டது.)

செலவுகள், அவர்கள் உணவுக்குத் தங்கள் சொந்த ஏற்பாடுகளைச் செய்து கொண்டால் (iv) ஆவது குறிப்பிற்கு ஏற்றவாறு குறைக்கப்பட வேண்டும்.

(vi) 12 வயதும் அதற்குக் குறைந்த வயதுமுள்ள சிறுவர்களுக்கு இடவசதி உணவு செவிலிப் பணி இவற்றிற்கான செலவுகள் ஒரு பாதியாகக் குறைக்கப்படும்.

*(vii) தஞ்சாவூர் ராஜா மிராசுதார் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் தனிப் பகுதிகளுக்கு மருத்துவ மனை பெருமளவுச் செலவு நாள் ஒன்றுக்கு ரூ. 4 ஆகும்.

(viii) (1) தாம்பரம் உருக்கி நோய் உடல் நலம் பெறும் இடத்தில் சொந்தக் கொட்டகையில் தங்கியுள்ளவர்கள் தங்கள் உணவுகளைத் தாங்களே ஏற்பாடு செய்து கொள்ளவேண்டும். அவர்கள் மருத்துவ மனை உணவு எடுத்துக் கொண்டால் மேலே சொல்லப்பட்டுள்ள உணவுச் செலவுத் தொகைகள் அவர்களிடமிருந்து வசூலிக்கப்படும்.

(2) உடல் நலம் பெறும் இடத்தில் கொட்டகைக் கட்டுவதற்கும் அல்லது உள்ள கொட்டகைகளில் சேர்க்கப்படுவதற்கும் தமிழ்நாடு மாநிலத்தைச் சேர்ந்தவர்களுக்கு முதல் சலுகை அளிக்கப்படும்.

**(ix) சென்னைப் பெண்கள் குழந்தைகள் மருத்துவ மனையில் இரண்டு படுக்கையுள்ள குழந்தைகளின் தனிப் பகுதியில் ஒவ்வொரு குழந்தைக்கும் செலவு நாள் ஒன்றுக்கு ரூ. 5 ஆகும்

†(x) சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் எல்லா 'ஆ' வகுப்புப் பகுதிகளும் தனிப் படுக்கைப் பகுதியாக வகைப்படுத்தப்பட்டு அதற்கேற்ப மருத்துவ மனைச் செலவுகள் வசூலிக்கப்படுகின்றன. இலவச மருத்துவ உதவிக்கு உரிமையில்லாதவர்களுக்கு அவ்வாறு செய்வதில்லை. இவர்களுக்கான செலவு இரட்டைப் படுக்கையுள்ள 'ஆ' வகுப்புப் பகுதிக்குள்ள அதே அளவில் இருக்கும்.

---

* அ.ஆ. எண் 3508 பொ.சு. 18—12—1944 தேதியிட்டது.

** (அ. ஆ. எண் 4360, பொ. சு., 9—10—1941-ம் தேதியிட்டது)

† (அ ஆ. எண் 4694, பொ. சு., 3—11—1941-ம் தேதியிட்டது.)

*(xi) ஒரு தற்காலிக ஏற்பாடாக, சேலம் தலைமையிட அரசினர் மருத்துவ மனையில் தனிப் பகுதிகளில் உள்ள நோயாளிகளிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய உணவுச் செலவு நாள் ஒன்றுக்கு ரூ. 2 (ரூபாய்கள் இரண்டு) ஆக இருக்கும்.

## 18. குருதிக்கும், குருதி ஊனீர்க்குமான செலவுகள்.

அ, ஆ, இ வகுப்புப் பகுதிகளில் அரசினர் மருத்துவ மனைகளிலும் சென்னைப் பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனையில் தனி அறைகளிலும் சேர்க்கப்பட்டுள்ள நோயாளிகள், அவர்கள் சிகிச்சைக் காலத்தில் அவர்களுக்கு அளிக்கப்பட்ட குருதிக்கும் குருதியின் ஊனீர்க்கும் அடியிற் காணும் விகிதங்களில் செலவுத் தொகை விதிக்கப்பட வேண்டும்:—

| பகுதியின் வகுப்பு. | ஒரு புட்டி குருதி. | ஒரு புட்டி குருதியிலுள்ள ஊனீர் பாகம் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. பை. | ரூ. பை. |
| அ வகுப்புப் பகுதி .. .. | 30 00 | 50 00 |
| ஆ வகுப்புப் பகுதி .. .. | 15 00 | 30 00 |
| இ வகுப்புப் பகுதி .. .. | 7 50 | 15 00 |
| பெண்களுக்கும் குழந்தைகளுக்குமான கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனையில் தனி அறைகள். | 7 50 | 15 00 |

†குறிப்பு.—குருதி வங்கியிலிருந்து அந்த நோயாளிகளுக்கு அளிக்கப்பட்ட குருதிக்குப் பதிலாக அவர்கள் உறவினர்கள், காப்பாளர்கள் அல்லது நண்பர்களால் குருதி அளிக்கப்பட்டால் செலவுத் தொகை விதிக்கப்பட வேண்டியதில்லை.

---

*(அ. ஆ. எண் 2470, பொ. சு. 24—9—1945-ம் தேதியிட்டது.)

†(அ. ஆ. பலவகை எண் 3272 பொ. சு., 27—9—1947-ம் தேதியிட்டது.)

*19. (1) சென்னை அரசின் விதி செய்யும் அதிகாரங்களின் கீழுள்ள ஒரு அரசாங்கப் பணியாளரும அவருடைய குடும்பமும் இலவசமாக அவா சேர்க்கப்படும் மருத்துவ மனையில் சாதாரணமாக கொடுக்கப்படக் கூடியதும் அவர் தகுதிக்குத் தக்கதுமான இட வசதி அளிக்கப்படும்.

(2) அரசாங்கப் பணியாளர்களில் பல்வேறுபட்ட வகுப்புகளிலுள்ளவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய இடவசதியின் விவரம் பின்வருமாறு :—

மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய்களும் அதற்கு மேலும் பெறும் அரசிதழ்ப் பதிவு பெற்ற அலுவலர்கள் 'அ' வகுப்புப் பகுதி.

மற்ற அரசிதழ்ப்பதிவு பெற்றவர்களும் ரூ. 250 முதல் ரூ. 499 வரையில் பெறும் அரசாங்கப் பணியாளர்கள்—'ஆ' வகுப்புப் பகுதி.

ரூ. 100 முதல் ரூ. 249 வரையில் பெறும் அரசாங்கப் பணியாளர்கள்—'இ' வகுப்புப் பகுதி.

ரூ. 99-உம் அதற்குக் குறைவாகவும் பெறும் அரசாங்கப் பணியாளர்கள்—பொதுப் பகுதி.

(3) 'அ' அல்லது 'ஆ' வகுப்புப் பகுதிகள் இல்லாத மருத்துவ மனைகளில் 'ஆ' வகுப்பு அல்லது உயர்ந்த வகுப்புப் பகுதியில் சேர்க்கப்படத் தகுதியுள்ள அரசாங்கப் பணியாளர்களுக்குத் தனிப் பகுதிகளில் எவையேனுமிருந்தால் அவற்றில் இட வசதியளிக்கலாம்.

†(4) 'இ' வகுப்புப் பகுதியில்லாத அல்லது அப்படிப்பட்ட பகுதியில் காலியில்லாவிட்டால் 'இ' வகுப்புப் பகுதிக்குச் சேர்க்கப்படத் தகுதியுள்ள அரசாங்கப் பணியாளர்கள் 14-ஆம் விதியில் சொல்லப்பட்டுள்ள சிறிய பொதுப் பகுதிகளில் அந்த விதியில் சொல்லப்பட்டுள்ள கட்டணம் செலுத்தாமலே இடவசதியளிக்கப்படலாம்.

---

* (அ. ஆ. எண் 1917 பொ. சு., 8—5—1949 ஆம் தேதியிட்டது.)

† (அ. ஆ. எண் 1592, பொ. சு., 5—6—1944-ஆம் தேதியிட்டது.)

*குறிப்பு—இந்த விதி மனநோய் மருத்துவ மனைகளுக்குப் பொருந்தாது.

(5) மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய்க்கு மேல் சம்பளம் பெறும் மாவட்ட உள்ளாட்சிக் கழகப் பணியாளர்களும் அவர்கள் அரசாங்கப் பணியாளராயிருந்தாலும் இல்லாவிட்டாலும், அரசினர் மருத்துவ மனைகளில் மருத்துவ உதவியுள்பட மருத்துவச் சலுகைகளுக்காக அவர்கள் அரசிதழ்ப் பதிவு பெற்ற அரசாங்கப் பணியாளர்களைப் போலவே கருதப்படுவார்கள். இந்தச் சலுகைகளின் செலவுகள் எப்படியும் அவர்கள் பணியாற்றும் உள்ளாட்சிக் கழகத்திடமிருந்து வசூலிக்கப்படும். மருத்துவச் சிகிச்சைக்கும் மருத்துவ உதவிக்கும் ஆன செலவை வசூலிப்பதில் அடியிற் காணும் நடைமுறை கையாளப்பட வேண்டும் :—

(i) இந்த அலுவலர்கள் பொது மக்களில் அலுவலக சம்பந்தமில்லாத உறுப்பினர்கள் போலவே பாவிக்கப்பட்டு அந்த முறையில் மருத்துவ உதவியுட்பட சிகிச்சைக்குச் செலவுத் தொகை விதிக்கப்படுவார்கள்.

(ii) சிகிச்சை முடிவில் பொறுப்பிலுள்ள மருத்துவ அலுவலர் ஒரு சான்றிதழ் அளிக்க வேண்டும்.

(அ) மாநில அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களைப் போல சிகிச்சையளிக்கப்பட அந்த அலுவலர்கள் செலுத்த வேண்டிய செலவுத் தொகைகளும்,

(ஆ) மருத்துவ உதவிக்கும் மற்றவற்றிற்குமான செலவுகள் ஆகியவை அதில் காட்டப்பட வேண்டும்.

அவர்கள் உணவுச் செலவு முழுவதையும் ஏற்க வேண்டும். மாநில அரசினர் மருத்துவ நிறுவனங்களில் சேர்க்கப்பட்டபோது விலையுயர்ந்த மருந்துகள் இருந்தால், அவ்வாறான விலையுயர்ந்த சிறந்த மருந்துகளின் விலை முழுவதையும் அல்லது பாதியை மருத்துவ அலுவலரின் யுக்தப்படி அவர்கள் ஏற்க வேண்டியதிருக்கும்.

(iii) சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நகராட்சி அல்லது மாவட்டக் கழகம் உணவுச் செலவுகள் உட்பட மேலே (ii) (ஆ) இனத்தின் கீழ்ச் சான்றளிக்கப்பட்ட செலவுகளையும் சிறப்பான

*(அ ஆ. எண் 3508, பொ. சு., 18—12—1944-ம் தேதியிட்டது.)

விலையுயர்ந்த மருந்துகளின் செலவில் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு முழுமையும், அல்லது பாதியையும் அந்தச் சிகிச்சை பெற்ற அலுவலருக்கு ஈடு செய்ய வேண்டும்.

* குறிப்பு.—இந்தச் சலுகைகள் சொல்லப்பட்ட நகராட்சி ஆணையாளர்களின் மாவட்டக் கழகப் பணியாளர்களுடைய குடும்பங்களுக்கும் மாநில அரசாங்க அரசிதழ் பதிவு பெற்ற பணியாளர்களைப் போலவே பொருந்துவதாகும். இந்தச் சலுகையின் செலவு (iii) -ஆம் பத்தியில் சொல்லப்பட்டுள்ள முறையில் வசூலிக்கப்பட வேண்டும்.

**20. (அ) 19 (2)-ஆம் விதியின்கீழ் உரிமையளிக்கப்பட்டுள்ள வகுப்பு பகுதிக்கு உயர்ந்த ஒரு பகுதியில் சேர்ந்து கொள்ளும் மாநில அரசாங்கப் பணியாளர், மருத்துவ உதவிக்கு உரிமையுடையவரல்லாத நபர்களுக்குப் பொருந்தும் விகிதங்களில் மருத்துவ மனையில் தங்கு செலவுகளைச் செலுத்த வேண்டும். ஆயினும் பெரிய அறுவைச் சிகிச்சைகள், பிள்ளைப் பேறுகள் எக்ஸ் கதிர் ஆய்வுச் சிகிச்சை இவற்றிற்கு எவ்விதக் கட்டணமும் வசூலிக்கப்பட மாட்டாது.

† (ஆ) ஒரு அரசிதழ்ப் பதிவு பெறாத அரசாங்கப் பணியாளராவது அல்லது மாதம் ஒன்றுக்கு ரூ. 300-க்கு மேல் சம்பளம் பெறாத உள்ளாட்சிக் கழகப் பணியாளராவது அல்லது அவரது குடும்பத்தின் உறுப்பினராவது அவர் உரிமை பெற்றுள்ள ஒரு பகுதிக்கு உயர்ந்த பகுதியில் சேர்த்துக் கொள்ளப்பட்டால் அவருக்கு இந்த விதியின் (அ) கூற்றின் ஏற்பாடு பொருந்தும்.

†† 21. 19 (2)-ஆம் விதியிலும் 20-ஆம் விதியிலும் உள்ளவை எப்படியிருந்தாலும் அரசாங்க மருத்துவ மனைகளில் வேலை செய்யும் செவிலிப் பணிக் கண் காணிப்பாளர்களும் தலைமைச் செவிலிப் பணியாளர்களும் 'ஆ' வகுப்புப் பகுதி இட வசதிகளுள்ள மருத்துவ மனைகளில் அந்த வகுப்புப் பகுதிகளில் இடமளிக்கப்

*(அ. ஆ. எண் 1325, த. நி., 17—6—1953-ம் தேதியிட்டது.)

**(அ. ஆ. பலவகை எண் 3508, பொ. சு., 18—2—1944ம் தேதியிட்டது.)

†(அ. ஆ. எண் 1914, சுகாதாரம் 20—5—1952-ம் தேதியிட்டது.)

††(அ. ஆ. பலவகை எண் 1136, 27—5—1943-ம் தேதியிட்டது.)

படுவார்கள். அப்படிப்பட்ட பகுதிகள் இல்லாத மருத்துவ மனைகளில் அவர்கள் தனிப்பகுதிகளில் இடவசதி அளிக்கப்படு வார்கள். மருத்துவ மனை தங்கு செலவுகள் வசூலிக்கப்படுவதும் உணவு வழங்கப் படுவதும் அவர்களுடைய சம்பளத்தையொட்டி ஒழுங்குபடுத்தப்படும்.

22. பார்வைக்காகச் சேர்க்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு பணி யாளரிடமிருந்தும், அவர், அரசாங்கம், உள்ளாட்சிக் கழகம் அல்லது நகராட்சி இவற்றில் எதில் வேலை பார்ப்பினும் மருத்துவ மனை தங்கு செலவுகள், சிகிச்சைக்காக வந்து தங்கும் நோயாளி களுக்குப் பொருந்தும் விகிதங்களில் வசூலிக்கப்பட வேண்டும்.

**குறிப்பு 1.**—ஒரு அரசாங்கப் பணியாளர் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளியாக ஏற்றுக் கொள்ளப்பட்டால் எந்த வகுப்புப் பகுதி அவருக்குக் கொடுக்கப்படுமோ, அதே பகுதி அவர் பார்வைக்காகச் சேர்க்கப்படும்போது கொடுக்கப்பட வேண்டும்.

2. மேலே 19 (1)-ஆவது விதியில் சொல்லப்பட்ட அரசாங்கப் பணியாளர்களின் குடும்பங்கள், அந்த அரசாங்கப் பணியாளர் எந்த வகுப்புத் தனிப் பகுதிக்கு உரிமை பெற்றுள்ளாரோ அதே வகுப்புத் தனிப் பகுதிகளில் சேர்க்கப்படலாம். மேலே 19 (2)-ஆம் விதியைப் பார்க்கவும்.

*(3) அரசாங்கப் பணியாளர்களின் மனைவிகள் அவர்களும் அரசாங்கப் பணியாளர்களாயிருந்தால் அரசினர் மருத்துவ மனைகளில் சிகிச்சை பெறும்போது தங்கள் தகுதிக்குத் தகுந்த அல்லது அவர்கள் கணவன்மார்களின் தகுதிக்குத் தகுந்த அவற்றில் எது உயர்ந்ததோ அந்த வகுப்பில் மருத்துவ மனையில் இடவசதி அளிக்கப்படலாம்.

23. அரசினர் மனநோய் மருத்துவ மனையில் வந்து தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகள்.—சென்னையிலும் கள்ளிக்கோட்டை யிலும் மனநோய் மருத்துவ மனைகள் இருக்கின்றன. சென்னை மனநோய் மருத்துவ மனையின் தனிப்பட்ட நோயாளிகளுக்கு (ஐரோப்பியர்களும் ஆங்கிலோ-இந்தியரும், இந்தியரும்) பொதுப் பகுதிகளும் தனிப் பகுதிகளும் இருக்கின்றன. பணம் செலுத்தும் வசதியுள்ளவர்களும் அல்லது அவர்களை ஆதரிக்கக் கூடிய நண்பர்

*(அ.ஆ. பலவகை எண் 729, பொ-சு. 11—2—1946-ஆம் தேதியிட்டது.)

களாயிருப்பவர்களும் அடியிற்காணும் விதத்தில் செலவுத் தொகை விதிக்கப்படுவார்கள்:—

பொது பகுதிகள்.

| மாதாந்தர வருமானம். | நாள் ஒன்றுக்குப் பராமரிப்புச் செலவு. |
|---|---|
| (1) | (2) |
| | ரூ. பை. |
| ரூ. 100—149 .. .. .. | 1 25 |
| ரூ. 150—199 .. .. .. | 1 75 |
| ரூ. 200-ம் அதற்கு அதிகம் .. | 3 00 |

குறிப்பு.—15 வயதுக்குக் கீழேயுள்ள சிறுவர்களுக்கு குடும்பத் தலைவரின் விகிதத்திற்குக் கால்பாகமும் 15 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கும் மனைவிகளுக்கும் குடும்பந் தலைவரின் விகிதத்தில் பாதியும் ஆகும். பொதுப் பகுதிகளில் சிகிச்சையளிக்கப் படும் இராணுவ நோயாளிகள் இராணுவ விதிகளில் இராணுவ மருத்துவ மனைகளைப் போல சொல்லப்பட்டுள்ள விகிதங்களில் செலவு தொகை விதிக்கப்படுவார்கள்.

தனிப் பகுதிகள்.

| நோயாளியின் அல்லது அக்குடும்பத் தலைவரின் மாதாந்தர வருமானம். | அரசாங்க அலுவலர் களுக்கு தினசரிச் செலவுகளின் வீதம். | அலுவல் சம்பள மில்லாதவர் களுக்குத் தினசரிச் செலவுகளின் வீதம். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | ரூ. பை. | ரூ. பை. |
| *ஐரோப்பியரும் ஆங்கிலோ இந்தியரும். | | |
| குறைந்த பட்சம் .. .. .. | 5 00 | 6 00 |
| ரூ. 300 முதல் 399 .. .. .. | 6 00 | 6 50 |
| ரூ. 400 முதல் 499 .. .. .. | 7 00 | 8 00 |
| ரூ. 500 முதல் 599 .. .. .. | 8 00 | 9 00 |
| ரூ. 600 முதல் 699 .. .. .. | 9 00 | 10 00 |
| ரூ. 700 முதல் 799 .. .. .. | 10 00 | 11 00 |
| ரூ. 800 முதல் 899 .. .. .. | 10 00 | 12 00 |
| ரூ. 900 முதல் 999 .. .. .. | 11 00 | 15 00 |
| ரூ. 1,000 முதல் 1,099 .. .. | 12 00 | 16 00 |
| ரூ. 1,100 மேற்கொண்டும் .. .. | 13 00 | 17 00 |

*(அ.ஆ. பலவகை எண் 3508, பொ.சு. 18—12—1946-ம் தேதியிட்டது.)

இந்தியர்கள்.

| | | |
|---|---|---|
| குறுமம் .. .. .. .. | 1 25 | 1 75 |
| ரூ. 100 முதல் 149 .. .. .. | 2 75 | 4 00 |
| ரூ. 150 முதல் 199 .. .. .. | 3 50 | 5 00 |
| ரூ. 200 முதல் 299 .. .. .. | 5 00 | 6 00 |
| ரூ. 300-ம் மேற்கொண்டும் .. .. | ஐரோப்பியர்களுக்கும் ஆங்கிலோ இந்தியர்களுக்குமுள்ள விகிதம். | |

குறிப்பு.—(i) 12 வயதும் அதற்குக் குறைவாயுமுள்ள குழந்தைகளுக்கு எல்லாவற்றிலும் அரை விகிதங்கள் விதிக்கப்பட வேண்டும்.

(ii) ஒரே நபரின் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகள் ஒரே காலத்தில் மருத்துவ மனையில் இருந்தால் மொத்தச் செலவுகள் குடும்பத் தலைவரால் கொடுக்கப்பட வேண்டிய தினசரி விகிதத்திற்கு அதிகப்படாது.

(iii) மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்களுக்குக் குறைவான வருமானமுள்ள தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகள் பொதுப் பகுதிகளில் இலவசமாகச் சிகிச்சையளிக்கப்படுவார்கள். அவர்கள் இலவச உணவும் அளிக்கப்படுவார்கள். சுரங்கங்களிலும் தோண்டி எடுக்கப்படும் இடங்களிலும் ஆலைகளிலும், தொழிற்சாலைகளிலும் தேயிலை, காபி, ரப்பர் தோட்டங்களிலும் மாதம் ஒன்றுக்கு ரூ. 100-க்குக் குறைவாய்ப் பெறும் பணி செய்பவர்கள் அவர்களை வேலையில் அமர்த்தியிருப்பவர்கள் மூலமாகத் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகளாகச் சேர்க்கப்பட்டுள்ளவற்றில் ஒவ்வொரு நோயாளிக்கும் நாள் ஒன்றுக்கு அவர்களுக்கு அளிக்கும் மருத்துவ அறிவுரை செவிலிப் பணி, உணவுச் செலவை ஈடு செய்ய 50 பை விதிக்கப்படும்.

(iv) 1938-ஆம் ஆண்டு செகரட்டரி-ஆப்-ஸ்டேட்ஸ் பணியாளர்த் தொகுதிகள் (மருத்துவ உதவி) விதிகள் பொருந்தக் கூடிய நோயாளிகளிடம் வசூலிக்கப்பட வேண்டிய தொகை, அரசாங்க அலுவலர்களுக்கு 'தனிப் பகுதிகள்' என்பதன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விகிதங்களில் பாதியாகக் கணக்கிடப்பட வேண்டும்.

(v) கள்ளிக்கோட்டை மனநோய் மருத்துவ மனையில் தனிப் பகுதிகளுக்கு விதிக்கக்கூடிய குறைந்தபட்சத் தொகை நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாயாகும்.

*(vi) அரசிதழ்ப் பதிவு பெறாத அலுவலர்களும் அவர்களது குடும்பங்களும் மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய்களுக்கு அதிகப் படாமல் சம்பளங்கள் பெறும் உள்ளாட்சிக் கழகப் பணியாளர்களும் அவர்கள் குடும்பங்களும், பராமரிப்புச் செலவிற்கும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட விலையுயர்ந்த சிறப்பு மருந்தின் விலைக்கும் பணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப் படுவார்கள்.

24. ஏனைய மாநிலங்களைச் சேர்ந்த நோயாளிகளுக்காக வசூலிக்கப்பட வேண்டிய பராமரிப்புச் செலவுத் தொகைகள் பின்வருமாறு.—

**சென்னை அரசினர் மனநோய் மருத்துவச் சாலை.**

| | மாதத்திற்கு ரூபாய் |
|---|---|
| ஒவ்வொரு ஐரோப்பிய அல்லது ஆங்கிலோ-இந்திய நோயாளிக்கும் | 72 |
| ஒவ்வொரு வேறு நோயாளிக்கும் | 36 |

**கள்ளிக்கோட்டையின் அரசினர் மனநோய் மருத்துவ மனை.**

| | மாதத்திற்கு ரூபாய் |
|---|---|
| ஒவ்வொரு நோயாளிக்கும் | 24 |

† இந்தச் செலவுத் தொகைகளுக்கு மேற்கொண்டு எக்ஸ்—கதிர் சிகிச்சைக்கும், எக்ஸ் கதிர் சோதனைக்கும் ரேடியம் சிகிச்சைக்கும் மன நோய் நோயாளிகளுக்குச் சிகிச்சையளிக்கத் தமிழ்நாடு அரசாங்கம் பரிமாற்ற ஏற்பாடு செய்து கொண்டில்லாத, சம்பந்தப்பட்ட வேறு மாநிலங்களிலிருந்தும் 'ஆ' பகுதி மாநிலங்களிலிருந்தும் அல்லது வெளி அரசாங்கங்களிலிருந்தும், கட்டணங்கள் வசூலிக்கப்பட வேண்டும்.

---

*(அ.ஆ. பலவகை எண் 1550, சு: 24—4—1956ம் தேதியிட்டது.)

†(அ.ஆ. பலவகை எண் 3508, பொ.சு. 18—12—1944 தேதியிட்டது.)

24. (அ) திருமணி அரசினர் லேடி வில்லிங்டன் தொழுநோய் உடல் நலம் பெறும் இடத்தில் பணம் செலுத்தும் பகுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகள்.—(1) அடியிற் கண்ட வகைகளில் பணம் செலுத்தும் பகுதிகளிலிருக்கும்.

(i) (அ) ஆண்களுக்குத் தனிப் பகுதிகள் (முன்னால் ஆங்கிலோ-இந்தியர் குடியிருப்பாகப் பயன்படுத்தப்பட்டவை.

(ஆ) பெண்களுக்குத் தனிப் பகுதிகள் (முன்னால் ஆங்கிலோ-இந்தியப் பெண்மணிகளின் குடியிருப்பு இடமாகப் பயன்படுத்தப்பட்டவை)

(ii) 'இ' வகுப்புப் பகுதிகள் [முன்னாள் ஆங்கிலோ-இந்தியரின் நீடித்த காலமான (தீராத) நோய்ப் பகுதியாகப் பயன் படுத்தப்பட்டது.]

(iii) மலை இருப்பிடங்கள்.

(iv) சிறு கட்டணம் செலுத்தும் குடியிருப்புக்கள்.

(2) மேலே சொல்லப்பட்ட பணம் செலுத்தும் பகுதிகளில் சேர்க்கப்பட்ட நோயாளிகளுக்கு அடியிற் காணுமாறு செலவுத் தொகை விதிக்கப்பட வேண்டும்—

(அ) தனிப் பகுதிகளில் உள்ள நோயாளிகள் ஒவ்வொருவரும் மாதம் ஒன்றுக்கு 5 ரூபாய்கள் செலுத்த வேண்டும். இது மருத்துவ அறிவுரைக்கும் செவிலியர் பணி முதலியவற்றிற்கும் சேர்ந்தது. அவர்கள் பொதுப் பகுதி நோயாளிகளைப் போலவே உணவு, படுக்கை, துணிகள் அளிக்கப்படுவார்கள்.

பொதுச் சமையலறையைப் பயன்படுத்துவதற்காக ஒவ்வொரு நோயாளியிடமிருந்தும் மாதம் ஒவ்வொன்றுக்கும் 4 ரூபாய் வசூலிக்கப்படும். சமையல் செய்வதற்குத் தம் சொந்த ஏற்பாடுகளைச் செய்து கொள்ளும் நோயாளிகள் சமையலறைச் செலவுகளுக்காகப் பணம் செலுத்தத் தேவையில்லை.

குறிப்பு.—தனிப் பகுதிகளில் உள்ள பெண் நோயாளிகள் இந்தப் பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ள இரண்டு சமையலறைகளைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

(ஆ) 'இ' வகுப்புப் பகுதிகள்---

| நோயாளியின் அல்லது நோயாளியின் குடும்பத் தலைவரின் மாதாந்தர வருமானம். | மருத்தவ அறிவுரை. | செவிலிப் பணியும் இடவசதியும் தினசரிச் செலவுகளும். | உணவு. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை |
| ரூ. 100—149 .. .. | 0 62 | 0 25 | 0 75 | 1 62 |
| ரூ. 150—199 .. .. | 0 87 | 0 37 | 1 00 | 2 25 |
| ரூ. 200 அல்லது அதிகம் .. | 1 37 | 0 62 | 1 50 | 2 50 |

குறிப்பு.—இப்பகுதிக்குச் சேர்க்கப்படும் அரசிதழ்ப் பதிவு பெறாத அலுவலர்கள் தவிர அரசாங்கப் பணியாளர்களிடமிருந்து மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய்க்கு அதிகமாயில்லாத சம்பளம் பெறும் உள்ளாட்சிக் கழகப் பணியாளரிடமிருந்தும் உணவுச் செலவுகள் அதே விகிதங்களில் வசூலிக்கப்படும்.

(இ) மலைக் குடியிருப்பு இடங்களும் சிறு கட்டண இருப்பிடங்களும்—

| பணம் செலுத்தும் குடியிருப்பின் பெயர், | குடியிருப்பின் எண்ணிக்கை. | குடியிருப்பு ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்குச் செலவு விகிதம். வாடகை. | மருத்துவ அறிவுரையும் செவிலிப் பணியும். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| | | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| (அ) மலை குடியிருப்பு இடங்கள். | 2 | 15 00 | 15 00 | 30 00 |
| (ஆ) சிறு கட்டணம் செலுத்தும் குடியிருப்பு, | 4 | 5 00 | 10 00 | 15 00 |

குறிப்பு.—(1) அந்த நான்கு சிறு கட்டணக் குடியிருப்புகள் ஒவ்வொன்றும் ஒரு நோயாளிக்குத்தான் இடவசதியளிக்கும். மேற்சொன்னபடி செலவுத் தொகைகள் விதிக்கப்படும் அந்த இரண்டு மலைக் குடியிருப்புகள் ஒவ்வொன்றும் ஒரு நோயாளிக்கு

அதிகமானவர்களுக்கு இடவசதியளிக்கும் ஒவ்வொரு குடியிருப்பிலும் ஒரு நோயாளிக்கு இடவசதியளிக்கப்பட்டிருந்தால் செலவுத் தொகைகள் மேலே அட்டவணையில் காட்டப்பட்டுள்ள படியிருக்கும். ஆனால் ஒரு குடியிருப்பில் இரண்டு அல்லது அதிகப்பட்ட நோயாளிகள் இடவசதியளிக்கப்பட்டால் அந்த முழுக் குடியிருப்புக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 15 தான் வாடகையாகும். ஆனால் ஒவ்வொரு நோயாளியும் மருத்துவ அறிவுரைக்கும் செவிலிப் பணிக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ. 15 செலுத்த வேண்டும்.

(2) மலைக் குடியிருப்பிலும் சிறு குடியிருப்புகளிலும் உள்ள நோயாளிகள் மேற்கொண்டு தனியாக மின்சாரச் செலவுகளையும் மீட்டர் வாடகையும் செலுத்த வேண்டும்.

(3) அவர்கள் உணவுக்கும், படுக்கை, உடை முதலியவைகளுக்குத் தம் சொந்த ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும்.

*(4) மலைக் குடியிருப்பிலும் சிறு குடியிருப்புகளிலும் உள்ள நோயாளிகள் ஒரு மாதத்திற்கு அவர்கள் மருத்துவ மனைச் செலவுகளை முன்பணமாகச் செலுத்த வேண்டும். ஒரு மாதத்தில் ஒரு நோயாளி வெளியில் அனுப்பப்பட்டால் அவருக்கு சேர வேண்டிய மீதிப் பணம் அவருக்குத் திருப்பிச் செலுத்தப்படும். ஆனால் செலவு தொகைகள் அவர் வந்து சேர்ந்த தேதிக்கும் விட்டுச் செல்லும் தேதிக்கும் கூடச் சேர்ந்து விதிக்கப்படும்.

**25. எக்ஸ் கதிர் சோதனை, எக்ஸ் கதிர் மின்சார ரேடியம் ரேடான் சிகிச்சைகளுக்குக் கட்டணங்கள் விதிப்பதைச் சார்ந்த விதிகள்—இலவச எக்ஸ் கதிர் சோதனை, சிகிச்சை முதலியவை.—** (1) எக்ஸ் கதிர் சோதனை, எக்ஸ் கதிர் படம் எடுத்தல், எக்ஸ் கதிர் சிகிச்சை, ரேடியோ சிகிச்சை, மின்சாரச் சிகிச்சை முறை, ரேடியம் ரேடான் சிகிச்சை ஆகியவை அடியிற் கண்டவர்களுக்கு இலவசமாக அளிக்கப்படும்.

(அ) மேற்கு வங்காளம், பஞ்சாப் அரசாங்கம் உட்பட எல்லா அரசாங்கப் பணியாளர்களுக்கும் பம்பாய், பீஹார், ஒரிசா, அசாம், உத்திரப் பிரதேசம் அரசாங்கங்களுக்குச் சம்பந்தப்பட்டவரையில் மேல் நிலை சிவில் பணியாளர் தொகுதிகளின் பிரிட்டிஷ் அலுவலர்களும்,

---

*(அ.ஆ. எண் 1424, சுகாதாரம் 22- 4—1951-ஆம் தேதியிட்டது.)

*(ஆ) தமிழ்நாடு அரசாங்கத்தின் விதி இயற்றும் அதிகாரங்களின் கீழுள்ள அரசாங்கப் பணியாளர்களின் குடும்பங்களும்.

**(இ) மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய்களுக்கு மேல் சம்பளம் பெறும் உள்ளாட்சிக் கழகப் பணியாளர்களும் அவர்கள் குடும்பங்களும்.

†(ஈ) யாதொரு மாநில அரசாங்க, நகராட்சி, உள்ளாட்சி நிதி, சமயக் குழு அல்லது வேறு தனிப்பட்ட அற மருத்துவ மனை அல்லது மருந்தகத்தில் தங்கி சிகிச்சை பெறும் பொது மருந்து வாங்கிச் செல்லும் நோயாளிகள் மாதம் ஒன்றுக்கு ரூ. 100-க்கு குறைவான வருமானத்தை யுடையவர்கள் அல்லது அவர்கள் குடும்பத் தலைவர்களின் வருமானம் 100 ரூபாய்களுக்குக் குறைவாயுள்ளவர்கள், அவர்களுடைய மருத்துவ அலுவலர்களால் அனுப்பப்பட்டு, அவர்கள் அம்மாதிரி மருத்துவ மனைகளில் அல்லது மருந்தகத்தில் உண்மையாகவே வந்து சென்று அல்லது தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளிகள் என்று சான்றளிக்கப்பட்டாலும்;

††குறிப்பு—(1) சுரங்கங்கள், தோண்டி எடுக்கும் இடங்கள், ஆலைகள், தொழிற்சாலைகள். தேயிலை, காபி, ரப்பர் தோட்டங்கள், ரயில்வேக்கள், ரயில்வே பட்டறைகள், துறைமுக நம்பகங்கள் ஆகியவை தங்கள் பணியாளர்களுக்காக வைத்து நடத்தும் மருந்தகங்கள் இந்த வகுப்பில் வராது.

---

*(அ.ஆ. பலவகை எண் 729, பி. கே. 11—3—1946-ஆம் தேதியிட்டது.)

**(அ.ஆ. எண் 2628, சுகாதாரம் 13—8—1952-ஆம் தேதியிட்டது.)

†(அ.ஆ. எண் 3638, சுகாதாரம் 17—11—1952-ஆம் தேதியிட்டது.)
அ.ஆ. எண் 246, சுகாதாரம் 21—1—1953-ஆம் தேதியிட்டது.)

††(அ.ஆ. பலவகை எண் 4694, பொது சுகாதாரம் 3—11—1941-ஆம் தேதியிட்டது.)

*(2) சென்னை மாநகராட்சியால் நடத்தப்படும் அசோக் விகார் என்பது (சுகாதார சோர்வு நீக்கப் பொழுதுபோக்கும் நிலையம்) உள்ளாட்சி நிதி மருத்துவ மனை அல்லது மருந்தகத்தின் வகுப்பின் கீழ் வரும்.

†(3) இராணுவ நபர்கள் உட்பட பிற எல்லா மருத்துவ மனை நோயாளிகளிடமிருந்தும் 26 ஆம் விதியில் சொல்லப்பட்டுள்ள விகிதத்தில் கட்டணங்கள் விதிக்கப்பட வேண்டும்.

குறிப்பு.—(1) 2 ஆவது குறிப்பின்கீழ் சொல்லப்பட்டுள்ளவற்றில் தவிர ஒரு மருத்துவ மனையின் மருத்துவ பணியாளர் ஒருவருடைய அல்லது ஒரு பதிவு பெற்ற மருத்துவரின் எழுத்து மூலமான உத்தரவின் கட்டளைகளுடன் அல்லாமல் ஒரு எக்ஸ்-கதிர் சோதனையும் அல்லது எக்ஸ் கதிர் படமெடுத்தலும் அல்லது சிகிச்சையும், சென்னையில் பெர்னார்ட் ரேடியாலஜி நிலையத்திலும் அல்லது யாதொரு அரசாங்க நிலையத்திலும் செய்யக்கூடாது. ரேடியம் அல்லது எக்ஸ் கதிர் சிகிச்சை முறை செய்பவர் ரேடியம் சம்பந்தமாகச் சொல்லப்பட்ட சிகிச்சை நோயாளியின் நலத்திற்காக முரணானது அல்லது கேடு தருவது என்று கருதினால் அந்தச் சிகிச்சைக்காக வேண்டுகோள் அனுப்பிய மருத்துவப் பணியாளர் தொகுதியின் உறுப்பினருக்கு அல்லது பதிவு பெற்ற மருத்துவருக்குத் தம் கருத்தை எழுத்து மூலமாய் தெரியப்படுத்த வேண்டும். தேவையானால் ஒரு நேர்முக ஆலோசனைக்குக் கருத்துத் தெரிவிக்க வேண்டும். அவ்விதக் கருத்து வேறுபாடு மேலும் இருந்தால் அந்த மருத்துவ மனையின் கண்காணிப்பாளரை ஒரு முடிவான தீர்ப்பு அளிக்கச் சொல்ல வேண்டும். சோதனையின் போதும் அல்லது சிகிச்சையின்போதும் நோயாளிகள் தங்கள் சொந்த மருத்துவ ஆலோசகர்கள் கவனிப்பின் கீழே இருப்பார்கள்.

---

*(அ.ஆ. பலவகை எண் 3800, பொது சுகாதாரம் 29—10—1949-ஆம் தேதியிட்டது.)

†(அ.ஆ. பலவகை எண் 2741, பொது சுகாதாரம் 30—6—1941-ஆம் தேதியிட்டது.)

*(2) அரசாங்க மருத்துவ நிறுவனங்களில் எக்ஸ்-கதிர் சோதனை தங்களுக்குத் தேவைப்படும், அரசாங்கப் பணியில் உள்ள அரசிதழ்ப்பதிவு பெற்ற மருத்துவ அலுவலர்களைப் பொருத்தவரை அத்தகைய எக்ஸ் கதிர்ச் சோதனை மருத்துவ அலுவலர்களின் வேண்டுகோள் களின்பேரில் மருத்துவ மனையிலாவது அல்லது தங்கள் வீடு களிலாவது இலவசமாய்ச் செய்யப்படலாம்; ஆனால் அவர் மற்றொரு மருத்துவ அலுவலரின் மருத்துவச் சிகிச்சையில் இருக்கக் கூடாது.

†(3) ஒரு விபத்தில் காயப்பட்டு ஒரு அரசாங்க மருத்துவ மனைக்குக் காவலரால் எடுத்துச் சொல்லப்பட்ட அல்லது ஒரு விபத்தின் பிறகு தானே சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு வந்து அது காவலருக்குத் தெரிந்து பின்னால் மருத்துவச் சட்டப்படி ஒரு வழக்காக பாவிக்கப்படும் ஒரு நிகழ்வில் ஒரு நோயாளியை அவருக்குக் காயம் இருக்கிறதா என்று பார்ப்பதற்குச் செய்யப் பட்ட ரேடியோ கிராபிக் சோதனைக்கு அந்த ரேடியோ கிராப் அலுவலகப் பயனுக்குத் தேவைப்படுமாதலால் ஒரு கட்டணமும் விதிக்கத் தேவையில்லை. ஆனால் அந்த நோயாளிக்கு மேற் கொண்டு செய்யப்பட்ட ரேடியோ கிராபிக் வேலைகள் மருத்தவச் சட்டம் பற்றிய நோக்கங்களுக்காகக் காவலர் வேண்டுகோளுக்கு இணங்கிச் செய்யப்பட்டாலொழிய அந்த வேலைக்கு அத்தகைய நோயாளிகளின் மற்ற எல்லாச் சிகிச்சைக்கும் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களில் செலவுத்தொகை வாங்க வேண்டும்.

(4) புறப் பகுதிகளிலிருந்து சிகிச்சைக்காக பர்னார்டு ரேடிய நிறுவனத்திற்கு வரும் நோயாளிகள் உள்ளூரில் அவர்களுடைய சொந்த மருத்துவ உதவியாளர்கள் எவரும் இல்லாதிருந்தால் பொது மருந்துவ மனைக்கு வந்து மருந்து வாங்கிச் செல்லும் நோயாளிகளாகக் கருதப்படுவார்கள். எக்ஸ்-கதிர் சோதனையும் சிகிச்சையும் அந்த நிறுவனத்தில் செய்யப் பட்டு, தேவைபடக்கூடிய ஆய்வுக்கூடச் சோதனைகள் அந்த

*(அ.ஆ. பலவகை எண் 1747, பொதுச் சுகாதாரம் 2—7—1945-ஆம் தேதியிட்டது.)

†(அ.ஆ. பலவகை எண் 1807, சுகாதாரம் 22—5—1950-ஆம் தேதியிட்டது.)

மருத்துவக் கல்லூரியிலுள்ள சம்பந்தப்பட்ட ஆய்வுக் கூடங்களில் நடத்த ஏற்பாடுகள் செய்யப்படும். தேவையான ஊசி மருந்து போடுவதற்கு ஒரு மனை மருத்துவர் நியமிக்கப்படுவார். எக்ஸ் கதிர் சிகிச்சைக்கு ரேடியோ பர்னர்டு நிறுவனத்திலும் செய்யப் பட்ட சோதனைகளுக்கு ஆய்வுக் கூடம் ஒவ்வொன்றிலும் விதிக்கப் பட்டுள்ள விகிதத்தில் அந்த ஆய்வுக் கூடங்களிலும் கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு அரசாங்கத்திற்கு வரவு வைக்கப்படும். ஊசி மருந்து மருத்துவ மனையால் வழங்கப்பட்டிருந்தால் அதன் விலையும் வசூலிக்கப்பட்டு பொது மருத்துவ மனை வரவினங்களாக வரவு வைக்கப்படும்.

* (5) அதிகாரமளிக்கப்பட்டுள்ள மருத்துவ உதவி யாளர்களால் பரிந்துரைக்கப்பட்ட இராணு வத்தினர் செலவுப் பட்டி துறைத் தலைவர் களுக்கு அல்லது ஏற்றபடி பகுதிகளுக்கு அந்தத் தொகைகளை வசூலிப்பதற்காக அனுப்பப்பட வேண்டும். ஆகையால் பரிந்துரைக்கும் மருத்துவ அலுவலர்கள் அந்தப் பட்டியல்கள் பணம் செலுத்தப்படுவதற்காக அனுப்ப வேண்டிய நோயாளிகளின் பெயர், வரிசை, அதிகாரியின் பெயரும் முகவரியும், படை, அல்லது பகுதியின் எண், எல்லாப் படிகளும் உட்பட மாதாந்தரச் சம்பளம், ஆகிய தகவலோடு அட்டவணை விகிதங் களின்படி கட்டணத்தை மருத்துவ மனைகளில் நிர்ணயிப்பதற்கும், பணம் கொடுக்கும் அலுவலர்கள் அந்தப் பட்டடியல்களை ஏற்கவும் தேவைப்படக்கூடிய நோயாளிகளின் மற்ற விவரங்களையும் கொடுக்க வேண்டும். தவறினால் நோயாளிகளை, சோதனையும் சிகிச்சையும் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னால் தேவையான கட்டணங்களை முன்பணமாக செலுத்தும்படி சொல்ல வேண்டும். மற்ற எல்லாவற்றிலும் நோயாளிகளை, வந்து சிகிச்சை பெற்றுக் கொண்டு செல்லும் நோயாளிகளாகப் பாவித்து அவர்களிட மிருந்து நேரடியாகச் செலவுத் தொகைகள் முன்பணமாக வசூலிக்கப்பட வேண்டும்.

(6) அரசாங்கப் பணியாளர்கள் தனிப்பட்ட மருத்துவர்களால் அனுப்பப்பட்டால் அவர்கள் முன்னால் தமது அலுவலக மருத்துவ உதவியாளர்களை அல்லது யாதொரு

---

*(அ.அ. பலவகை எண் 1874, பொதுச் சுகாதாரம் 24—6—1946-ஆம் தேதியிட்டது.)

அரசினர் மருத்துவ மனையிலுள்ளவரைக் கலந்து ஆலோசிக்க வில்லையென்றும் அவர்களால் சிகிச்சை மறுக்கப்படவுமில்லை என்றும் ஒரு உறுதி மொழிக் கையொப்பமிட வேண்டும். எக்ஸ் கதிர் (துறையின் பொறுப்பிலுள்ள எக்ஸ் கதிர் மருத்துவர் இந்தச் சலுகை தவறுதலாகப் பயன்படுத்தப்பட்டதாகத் தாம் கருதுவதற்கு ஏதுவுள்ள நிகழ்வுகளை மருத்துவத் துறை இயக்கு நரின் பார்வைக்குக் கொண்டுவர வேண்டும்.

26. செலவு தொகையின் வீதம் சென்னை அரசினர் பொது மருத்துவ மனையில் பர்னர்டு ரேடியோ நிறுவனத்திலும் மற்ற அரசினர் மருத்துவ நிறுவனத்திலும் ரேடியோ கிராபிக் சோதனைக்கும் எக்ஸ் கதிர் படமெடுக்கவும், எக்ஸ் கதிர் மின்சார ரேடியமும் மற்ற சிகிச்சை முறைகளுக்கும் ஒப்பு அளிக்கப்பட்ட செலவு தொகையின் வீதம் அடியிற்காணும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளபடியாகும்.

| | ரேடியோ கிராபிக் சோதனை. | | |
|---|---|---|---|
| நோயாளியின் அல்லது நோயாளியின் குடும்பத் தலைவரின் மாத வருமானம். | கைகள், கால்கள், நீள எலும்புகள் கணுக்கால் முட்டிகள். | தாடைகள், பற்கள், தொண்டை, வயிறு, ஈரல், மணிக்கட்டு, கை கணுக் கால் தவிர கை கால் மூட்டுகள். | மண்டை, சிறுநீர் சம்பந்த மான பாகம் முதுகு எலும்பும். |
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| 100 முதல் 199 .. .. | 5 | 10 | 12 |
| 200 முதல் 349 .. .. | 6 | 12 | 15 |
| 350 முதல் 499 .. .. | 8 | 15 | 20 |
| 500 முதல் 749 .. .. | 10 | 20 | 25 |
| 750-ம் மேற்கொண்டும் .. | 15 | 25 | 30 |

| நோயாளியின் அல்லது நோயாளியின குடும்பத் தலைவரின் மாத வருமானம். | செலவு தொகைகள். | | |
|---|---|---|---|
| | பேரியம் மாவு சோதனை. | கழிவுப் பொருள்கள் சம்பந்தமான இருப்பு இரு நீரகம் பித்த நீர்ப்பை சுவாசக குழாய் மைக்ரோலா சம்பந்தமான படமெடுத்தல். | மின்சார இருதய சோதனை. |
| | (5) | (6) | (7) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| 100 முதல் 199 .. .. | .. | .. | 6 |
| 200 முதல் 349 .. .. | 15 முதல் | 25 முதல் | 8 |
| 350 முதல் 499 .. .. | 75 | 75 | 10 |
| 500 முதல் 749 .. .. | | | 14 |
| 750-ம் மேற்கொண்டும் . | | | 16 |

| நோயாளியின் அல்லது நோயாளியின் குடும்பத் தலைவரின் மாத வருமானம். | சிகிச்சை. எக்ஸ் கதிர் படம் எடுத்தல். | எக்ஸ் கதிர் மின்சார மேற்றுறல் பின் ஏத்தடம், பின் குருகு உண்டாகுதல் உயர்ந்த திருப்புத் சோதனை இதர சிகிச்சை. | ரேடியம் அல்லது ரேடான் சிகிச்சை. |
|---|---|---|---|
| | (8) | (9) | (10) |
| | ரூ. | ரூ. | |
| 100 முதல் 199 .. .. | 10 | 2 | வந்து தங்கி சிகிச்சை பெறும் நோயாளிகள் அறுவைச் சிகிச்சை அதாவது அ வகுப்புப் பகுதிகளில் நோயாளிகளின் ரூ. 100—100—400. |
| 200 முதல் 349 .. .. | 12 | 3 | ஆ வகுப்புப் பகுதிகளில் நோயாளிகள் ரூ. 75—75—225. |
| 350 முதல் 499 .. .. | 15 | 5 | இ வகுப்புப் பகுதிகளில் நோயாளிகள் ரூ. 15 முதல் 40. |
| 500 முதல் 749 .. .. | 20 | 7 | பொது பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு ரூ. 100-ம் அதிகமுள்ள நோயாளிகளுக்கு அல்லது அவாது குடும்பத் தலைவர்களின் ரூ. 12½ முதல் 25. |
| 750-ம் மேற்கொண்டும் .. | 25 | 9 | |

* அறுவைச் சிகிச்சை நிகழ்வுகளில் போலவே நோயாளி ஒரு உறுதிமொழிப் படிவத்தை நிறைவு செய்துவிட்ட பிறகு அந்த மருத்துவமனைக் கண்காணிப்பாள

---

*(அ.ஆ. பலவகை எண் 1528, பொது சுகாதாரம் 29—5—1944-ஆம் தேதியிட்டது, அ.ஆ. பலவகை எண் 2033, பொது சுகாதாரம் 2—8—1945-ஆம் தேதியிட்டது.)

ரால் உள்ள படியாகச் செலுத்தப்பட வேண்டிய கட்டணம் நிர்ணயிக்கப்படும்.
ரேடியம், ரேடான் சிகிச்சை பொதுப் பகுதியில் அளிக்கப்பட்டாலும் அம்மாதிரிச் சிகிச்சைக்குக் கட்டணம், அந்த நோயாளி பொதுப் பகுதிக்குச் சிகிச்சைக்காக மாற்றப்படுவதற்கு முன்னல் எந்தப் பகுதியிலிருந்தாரோ அதற்குப் பொருந்தும் விகித முறையில் கட்டணம் விதிக்கப்பட வேண்டும்.

*குறிப்பு.—(1)* கற்பிக்கும் நிறுவனங்களில் சேர்க்கப்பட்டுள்ள அரசினர் மருத்துவ மனைகளின் கண்காணிப்பாளர்கள், மருத்துவப் போதனைச்சாலைக் கவனத்துக்குரியதும் மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குக் கற்பிக்கும் நோக்கத்திற்கு மட்டும் தேவைப் படக் கூடியதுமான நோயாளிகளின் ரேடியோப் படங்களை அரசினர் ரேடியோ நிறுவனங்களில் எடுப்பதற்கு ஒப்பளிப்புத் தர அதிகாரமளிக்கப்பட்டுள்ளார்கள். அத்தகையவற்றில் நோயாளிகளிடமிருந்து ஒரு கட்டணமும் வசூலிக்கப்படக் கூடாது. ஆனல் அந்தப் படங்கள் நோயாளிகளின் சிகிச்சை சம்பந்தமாய் தேவைப் படுபவைகளாக இருந்தால் குறிப்பிடப் பட்டுள்ள செலவு தொகைகள் வசூலிக்கப்பட வேண்டும்.

(2) எக்ஸ் கதிர் துறையில் நோயாளிகளுக்குக் கொடுக்கப் படும் ரேடியோ வெப்பம் அறுவைக்கு உதவியாக மட்டுமே கொடுக்கப்படும். அந்தச் சிகிச்சைக்குச் செலவு தொகை விதிக்கக் கூடாது.

(3) ஒரே நாளில் அளிக்கப்பட்ட இரண்டு அல்லது மேற் பட்ட தொடர்ந்த சிகிச்சைகள் ஒரே ஒரு சிகிச்சையாக எடுத்துக் கொள்ளப்பட்டு அதற்கேற்ப செலவு தொகை விதிக்கப்படும்.

*(4) எக்ஸ் கதிர் சோதனைகளில் பயன்படுத்தப்பட்ட சிறப்பு மருந்துகளின் விலை அந்தச் சோதனைக்குக் குறிப்பிடப்பட்ட செலவுகளோடு சேர்த்துக் தனியாக வசூலிக்கப்படக் கூடாது. அப்படிப் பயன்படுத்தப்பட்ட மருந்துகளின் விலை அந்தச் சோதனைச் செலவுகளை நிர்ணயிப்பதில் கவனிப்பில் எடுத்துக் கொள்ளப் படும்.

*(அ.ஆ. பலவகை எண் 1136 பொ.சு. 29—3—1943-ஆம் தேதியிட்டது.)

(5) அரசினர் மருத்துவ மனையில் தனி இ வகுப்பு சிறிய பொது பகுதி இவைகளில் வந்து தங்கும் நோயாளிகளிடமிருந்து எக்ஸ் கதிர் செலவுகளை மருத்துவ உதவி விதிகளின் 26 ஆம் விதியின் கீழ் வசூலிப்பதற்கு நோயாளியின் அல்லது நோயாளியின் குடும்பத் தலைவரின் வருமானம் இவ்வளவென்று சரியாகத் தெரிந்துகொள்ள முடியாவிட்டால் அவற்றை அடியிற் காணுமாறு எடுத்துக் கொள்ள வேண்டும்.

தங்கியுள்ள நபர்கள்

| | மாதம் ஒன்றுக்கு |
|---|---|
| (அ) வகுப்பு தனிப்பட்ட பகுதிகள் (மாநகரம்) | ரூ. 500. |
| *(ஆ) வகுப்புத் தனிப்பட்ட பகுதிகள் தனிப்பட்ட பகுதிகள் (புறப்பகுதிகள்) | ரூ. 250. |
| (இ) வகுப்புப் பகுதிகள் (மாநகரமும் புறப் பகுதிகளும்.) | ரூ. 100. |
| விதிகளில் 14 (அ) விதியில் சொல்லப்பட்டுள்ள சிறிய பொதுப் பகுதிகள் (மாநகரமும் புறப் பகுதியும்.) | ரூ. 100. |

(6) மேலே 5 ஆம் குறிப்பின் பகுதிகளின் வகுப்புகளுக்கு ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிட்டுள்ள வருமானம் அந்தப் பகுதி வகுப்பின் குறும விகிதாசார வருமானமாகப் பாவிக்கப்பட வேண்டும். தமது வருமானம் அல்லது தம் குடும்பத்தலைவரின் வருமானம் அந்தப் பகுதியின் விகிதாசாரக் குறுமத் தொகைக்குக் குறைவாயுள்ளதாக உறுதி கூறினால் இந்தப் பகுதிகளில் எதிலேனும் சேர்க்கப்பட்ட ஒருவர் அந்தப் பகுதியின் விகிதாசாரக் குறும வருமானத்தின் அடிப்படையில் செலவு தொகை விதிக்கலாம்.

*(அ.ஆ. பலவகை எண் 2033, பொது சுகாதாரம் 2—8—1945-ஆம் தேதியிட்டது.)

*(7) எக்ஸ் கதிர்ப் படமெடுப்பதற்கு (8) ஆம் பத்தியில் குறிப்பிட்டுள்ள கட்டண அளவு முறைகள் உருக்கி நோயுள்ள நோயாளிகளுக்குப் பொருந்தாது. அவர்களைப் பொருத்தவரை அந்த மாதத்தில் அவர்கள் சிகிச்சைக்குப் படமெடுத்ததற்காக மாதம் ஒன்றுக்கு ஒரே மாதிரி விகிதமாக ரூபாய் 10 விதிக்கப்படும். இப் படங்களோடு கூட மேற்கொண்டு நிழற்படங்கள் எடுக்கப்பட்டால் அம்மாதிரி வேலைக்குப் பொருந்தக்கூடிய விகிதங்களின் செலவு தொகை விதிக்கப்படும்.

I. **வந்து செல்லும்** நோயாளிகள்.—ஒருவருடைய அல்லது அந்தக் குடும்பத் தலைவரின் மாத வருமானம் ரூ. 100 வரையில் இருந்தால் அவருக்குச் சிகிச்சை இலவசமாகும். மாதம் ஒன்றுக்கு ரூ. 100 உம் அதற்கு மேலும் வருமானமிருந்தால் முப்பது நாட்களுக்கு நீடிக்கும் சிகிச்சைகளுக்கு :—

(1) இயற்கையான துவாரங்களில் வைப்பதற்கும் செருகுவதற்கும் மாதம் ஒன்றுக்கு 3 ரூபாய் முதல் 250 ரூபாய் வரை.

(2) மேல் பூச்சுகளுக்கு 5 ரூபாய் முதல் 200 ரூபாய் வரை.

குறிப்பு.—சம்பந்தப்பட்ட மருத்துவ மனையின் கண்காணிப்பாளர் அந்த நோயாளியின் அல்லது அவரது குடும்பத் தலைவரின் வருமானத்தையும் அந்தச் சிகிச்சையின் தன்மையும் கருதிக் கட்டணம் நிர்ணயிக்க வேண்டும்.

II. (அ) தொடர்ந்து பத்து நாட்கள் வரை இருந்து கவனிக்கக்கூடிய ஒன்று அல்லது அதிகமான விதங்களில் சிகிச்சை பெறும் நிகழ்வுகளில் எக்ஸ் கதிர் துறையின் பொறுப்பிலுள்ள எக்ஸ் கதிர் மருத்துவரும் மருத்துவ மனையின் கண்காணிப்பாளரும் சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலரும் கலந்து அந்த நோயாளியின் வருமானத்துக்கும் அளிக்கப்பட்ட சிகிச்சையின் தன்மைக்கும் ஏற்றபடி நிர்ணயிக்கும் மொத்தத் தொகையாகும்.

†குறிப்பு.—(1) அதிகமான ஆற்றலும் திறமையும் உள்ள ஆழமான எக்ஸ் கதிரால் நோய் நீக்கும் குறைந்த கால சிகிச்சை முறையை விட, நீடித்த இலகுவான சிகிச்சைக்கு அதிகமான சலுகை காட்டலாம்.

---

*(அ.ஆ. பலவகை எண் 373, சுகாதாரம் 4—2—1952-ஆம் தேதியிட்டது.)

†(அ.ஆ. பலவகை எண் 2033, பொது சுகாதாரம் 2—8—1945-ஆம் தேதியிட்டது.)

(2) ஒரு எக்ஸ் கதிர் சிகிச்சையைப் பெற்றுக் கொண்டிருக்கும் பணம் செலுத்தும் பகுதியில் உள்ள ஒரு நோயாளி தம் முழுச்சிகிச்சை முறைக்கும் மொத்தமாகப் பணம் செலுத்திவிட்ட பிறகு மருத்துவ மனையிலிருந்து வெளியில் அனுப்பப்பட்டு வந்து செல்லும் நோயாளியாகவே சிகிச்சை பெற்றுக் கொள்ளும்படி சொல்லப்பட்டால் ஏற்கனவே அவரால் செலுத்தப்பட்ட மொத்தத் தொகையின் பேரிலேயே அந்தச் சிகிச்சையைத் தொடர்ந்து நடத்தலாம். அவருடைய அல்லது அவர் குடும்பத் தலைவரின் வருமானம் மாதத்திற்கு 100 ரூபாய்க்குக் குறவாகயுள்ளது என்ற காரணத்தால் அவர் வந்து செல்லும் நோயாளியாகச் சிகிச்சை பெற்ற பாகத்திற்குரிய யாதொரு கட்டணம் திருப்பிக் கொடுக்கப் படமாட்டாது. அத்தகைய நோயாளி தாமாகவே, தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளியாகவோ அல்லது வந்து செல்லும் நோயாளியாகவோ அல்லது சிகிச்சையை நிறுத்திக் கொண்டால், மொத்தமாகச் சேர்ந்து முழுக் கட்டணமாகவோ அல்லது அவர் சிகிச்சை பெற்ற எண்ணிக்கை நாட்களின் மேல் தினசரி விகிதத்திலோ அவருக்கு எது அனுகூலமோ அந்தச் செலவு தொகை அவருக்கு விதிக்கப்படும். பின் சொல்லப்பட்டவற்றில் முன்பணமாகச் செலுத்தப்பட்ட தொகையின் மீதம் ஏதாவதிருந்தால் அது அவருக்குத் திருப்பியளிக்கப்படும். இரண்டு வாரங்கள் கழித்துப் பிறகு அவர் திரும்பி வந்து, அவருக்கு ஒரு புதிய முறை குறிப்பிடப்பட்டபோது அவர் தினசரி விகிதங்களில் செலவு தொகை விதிக்கப்படவேண்டும். ஒரு சிகிச்சை முறைக்குரிய மொத்தமாகச் சேர்க்கும் கட்டணச் சலுகை அவருக்கு அளிக்கப்படக் கூடாது.

(ஆ) நோயைக் கண்டுபிடிப்பதற்காக அல்லது சிகிச்சைக்காக அல்லது இரண்டிற்குமான உடம்பின் ஒரு பாகத்தை ஏழு நாள் கால அளவிற்குள் ஒன்று அல்லது தொடர் வரிசையாக ரேடியோ கிராப்பிகள் எடுத்தல் அல்லது திரைப்படம் எடுத்தல் அல்லது இரண்டும் எடுத்தல் ரேடியோ கிராபிச் சோதனையுள் அடங்கும். பின்னரும் ரேடியோ கிராபிச் சோதனைகள் அல்லது திரைப்படமெடுத்தால் தேவையானால் இவைகளுக்கு மேற்சொல்லப்பட்டுள்ள விகிதப்படி பணம் செலுத்த வேண்டும்.

*(இ) மருத்துவ மனையில் மார்பு அறுவைச் சிகிச்சை பெறும் நோயாளியின் விஷயத்தில் அந்த மார்பின் எக்ஸ் கதிர் படங்கள் அறுவைக்கு முன்பும் பின்பும் எடுக்கக் கூடியவைகளுக்கு மாதம் ஒன்றுக்கு மொத்தமாகச் சேர்ந்து 20 ரூபாய் கட்டணம் விதிக்கப்படும்.

(ஈ) ஒரே நாளில் அல்லது பதினைந்து நாட்களுக்குள் உடலின் பல்வேறுபட்ட பாகங்கள் ரேடியோ நிழற்படம் எடுக்கப் பட்டாலும் அல்லது திரைப்படம் எடுக்கப்பட்டாலும் அடியிற் கண்ட மாதிரி மொத்தமாகச் சேர்ந்த ஒரு கட்டணம் விதிக்கப் படும்.

| | |
|---|---|
| (1) உடலின் இரண்டு வேறுபட்ட பாகங்களுக்கும். | ஒவ்வொன்றுக்கும் விதிக்கப் பட்டுள்ள முழு கட்டணத் தின் 75 சதவிகிதம். |
| (2) அந்த உடலின் மூன்று வேறுபட்ட பாகங்களுக்கு | |
| (3) அந்த உடலின் நான்கு அல்லது மேற்பட்ட வேறு பட்ட பாகங்களுக்கு | |

(உ) சிறு நீர் தேர்ந்தெடுத்தலும் பேரியம் மாவும் பற்களும். எக்ஸ் கதிர் துறையைச் சேர்ந்துள்ள மருத்துவ மனைகளின் கண்காணிப்பாளர் ரேடியோ கதிர் மருத்துவர் இவர்களின்படி செலவு தொகைகள் விதிக்கப்படும். அவர்கள் நோயாளிகளின் வசதியையும், குறிப்பிட்ட சோதனைக்கான வேலையின் அளவையும் கருத்தில் எடுத்துக் கொள்வார்கள்.

(ஊ) மேலே கண்ட விதி முறையில் சொல்லப்பட்டில்லாத யாதொரு சோதனைக்கும் அந்த எக்ஸ் கதிர் மருத்துவத் துறை சேர்ந்துள்ள மருத்துவமனைக் கணகாணிப்பாளரால் நிர்ணயிக்கப் படும் செலவு தொகை விதிக்கப்படும்.

III. ரேடியம், சென்னை அரசினர் பொது மருத்துவ மனையின் எக்ஸ் கதிர் பர்னார்டு நிறுவனத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

---

*(அ.ஆ. எண் 398, பொ.சு. 2—2—1960-ஆம் தேதியிட்டது.)

அடியிற்கண்ட நிறுவனங்களில் ரேடியம் சிகிச்சை மேற்கொள்ளப் பட்டுள்ளன :—

(1) சென்னை அரசினர் பொது மருத்துவ மனையின் பர்னார்டு ரேடியோ கதிர் நிறுவனம்.

(2) சென்னை அரசினர் பெண்கள் குழந்தைகள் மருத்துவ மனை.

(3) சென்னை அரசினர் கண் மருத்துவ மனை.

(4) பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் உரிய அரசினர் கஸ்தூரிபா காந்தி மருத்துவ மனை, சென்னை.

(5) சென்னை அரசினர் ஸ்டான்லி மருத்துவ மனை ராடான் சிகிச்சை (1) மதுரை, (2) கோயம்புத்தூர், (3) தஞ்சாவூர் மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும் மேலே சொல்லப் பட்ட ஐந்து நிறுவனங்களிலும் கூட அளிக்கப்படும்.

27. பர்னார்டு ரேடியோ நிறுவனத்திற்கும் அல்லது ஒரு அரசாங்க மருத்துவ மனையின் எக்ஸ் கதிர் துறைக்கும் சோதனைக்காக அல்லது சிகிச்சைக்காகத் தங்கள் மருத்துவ அலுவலர்களாலேயே அனுப்பப்படும் நோயாளிகள் 26 ஆம் விதியில் சொல்லப்பட்டுள்ள விகிதப்படி செலவு தொகை செலுத்த வேண்டும்.

28. 27 ஆம் விதியில் சொல்லப்பட்டுள்ள நோயாளிகள் ஒரு ரேடியோ நிழற்படம் அல்லது திரைப்படம் எடுத்துச் சோதனை செய்யும் முக்கியமான ஒரே நோக்கத்துடன் வந்து தங்கும் நோயாளிகளாக மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தால் அவர்கள் விதிக்கப்பட்டுள்ள விகிதத்தில் கட்டணம் செலுத்த வேண்டும். அத்துடன் வழக்கமான செவிலிப் பணிக்கும் உணவுக்கும் ஆன செலவுகளையும் செலுத்த வேண்டும். ஆனால் மருத்துவ ஆலோசனைக்காகத் தனியாக செலவு தொகை கட்டுவ தினின்றும் விலக்கு அளிக்கப்படுவார்கள்.

29. **எல்லா நோயாளிகளுக்கும் பொருந்தும் பொது விதிகள்.**— வசதியுள்ள நபர்கள் அவர்கள் இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுள்ளவர்களாயிருந்தாலும் இல்லாவிட்டாலும், அரசினர் மருத்துவ மனைகளில் வந்து தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளி களாக அல்லது வந்து செல்லும் நோயாளிகளாக நடத்தப் பட்டாலும் மற்ற மருத்துவ மனைச் செலவுகளுடன் கூட கீழே சொல்லப்பட்டுள்ளபடி சிறப்பான விலையுயர்ந்த மருந்துகளின் செலவையும் செலுத்த வேண்டும்.

(i) இந்த விதியின் நோக்கங்களுக்காகவும் கீழே (i) முதல் (iv) இனங்களின் ஏற்பாடுகளுக்கும் உட்பட்டும். சென்னை மருத்துவ இருப்புக் கிடங்கில் சாதாரணமாக அல்லது இயல்பான முறையில் கிடைக்கப்பெறாத மருந்துகளும் பொதுச் சிகிச்சைப் பணிக்கு இன்றியமையாததாகக் கருதப்படும் கீழே I ஆம் II ஆம் பட்டியல்களில் உள்ள மருந்துகள் இல்லாதவைகளும் எல்லா நோயாளிகளிடமிருந்தும் விலை வசூலிக்கப்பட வேண்டிய சிறப்பான விலையுயர்ந்த மருந்துகளாகப் பாவிக்கப்படும்.

| | |
|---|---|
| (ii) இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுள்ள அரசாங்கப் பணியாளர்கள் தவிர தனிப்பட்ட பகுதிகளில் உள்ள நோயாளிகள். | கீழே I ஆம் பட்டியலில் உள்ளவை தவிர எல்லா மருந்துகளின் விலையும். |
| (iii) இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுள்ள அரசாங்கப் பணியாளர்கள் தவிர மாதம் ஒன்றுக்கு படிகள் முதலியவை உட்பட 500 ரூபாய்களும் அதற்கு மேலும் மொத்த வருமானமுள்ள பணக்காரப் பொதுப் பகுதிகளில் உள்ள நோயாளிகளும் அல்லது வந்து செல்லும் நோயாளிகளும். | ,, |
| (iv) பொதுப் பகுதிகளில் உள்ள மற்ற நோயாளிகள் அல்லது வந்து செல்லும் நோயாளிகளில் மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய்களுக்குக் குறைவான மொத்த வருமானமுள்ளவர்களும் இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுள்ள அரசாங்கப் பணியாளர்களும். | சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலரின் யுக்தத்தில் கீழே I ஆம் II ஆம் பட்டியல்களில் உள்ள மருந்துகள் தவிர மருந்துகளின் முழு விலை அல்லது பாதி விலை முழு விலையும் வசூலிக்கப்படாதவற்றில் அதற்கான காரணங்கள் எழுத்து மூலமாய்ப் பதிவு செய்யப்பட வேண்டும். |

* குறிப்பு.—வசதியில்லாத நோயாளியின் விஷயத்தில் மருத்துவ நிறுவனங்களின் தலைவர்கள் அம்மாதிரி நோயாளிகளுக்கு அளிப்பதற்காகத் தம் வரவு-செலவு திட்ட ஒதுக்கீட்டிற்குள் சிறப்பானதும் விலையுயர்ந்ததுமான மருந்துகளை வாங்குவதில் செலவுகளை எற்க அதிகாரமளிக்கப்பட்டுள்ளார்கள்.

## I-ஆம் பட்டியல்.

| | | |
|---|---|---|
| 1 | சல்பாடயசீன் Sulphadiazine | மாத்திரைகள். |
| 2 | நிக்கோடினிக் ஆசிட் Nictonic Acid .. | 50 மிகி. |
| 3 | நிக்கோடினிக் ஆசிட் Nicotonic Acid .. | 50 மிகி. |
| 4 | நிக்கோடனைமைட் ஆசிட் Acid Nictoinamide. | 50 மிகி. Tablets |
| 5 | நிக்கோடனைமைட ஆசிட் Acid Nictoinamide | 100 ஆம்பியூல்ஸ். |
| 6 | கார் பேசியால் Carbacheol .. .. | மாத்திரைகள். |
| 7 | கார் பேசியால் Carbacheol .. .. | ஆம்பியூல்ஸ். |
| 8 | டிகோக்ஸின் Digoxin .. .. .. | மாத்திரைகள். |
| 9 | டிகோக்ஸின் Digoxin .. .. .. | ஆம்பியூல்ஸ். |
| 10 | சல்பாத்தியசோல் Sulphathiasole .. .. | மாத்திரைகள். |
| 11 | சல்பைனிலாமைட் Sulphanilanide .. | மாத்திரைகள். |
| 12 | சல்பாகியானிடைன் Sulphaguanidine .. | மாத்திரைகள். |
| 13 | காங்கோரெட் Congored .. .. .. | ஆம்பியூல்ஸ். |
| 14 | யூரியாஸ்புரியாமின் Urea Stribamine .. | ·05 கி. ஆம்பியூல்ஸ். |
| 15 | யூரியாஸ்புரியாமின் Urea Stribamine .. | ·01 கி. ஆம்பியூல்ஸ். |
| 16 | யூரியாஸ்புரியாமின் Urea Stribamine .. | 0·15 கி. ஆம்பியூல்ஸ். |
| 17 | யூரியாஸ்புரியாமின் Urea Stribamine .. | 0·2 கி. ஆம்பியூல் ,, |
| 18 | நோவார்செனபில்லான் Novarsenebillon. | ·3 செ.மீ, குழாய்கள். |
| 19 | பால்மாகியூன் Paimaguin .. .. | மாத்திரைகள். |
| 20 | மெபாக்ரின் Mepacrine .. .. .. | மாத்திரைகள். |
| 21 | ஸ்டாபின்டின் பார்டி Stibajin Forte .. | ஆம்பியூல்ஸ் |
| 22 | ஹிஸ்டாமின் Histamine .. .. .. | ஆம்பியூல்ஸ். |
| 23 | பேன்டோதேர்தேனிக் ஆசிட் Pantothenic Acid. | ஆம்பியூல்ஸ். |
| 24 | பேன்டோதேர்தேனிக் ஆசிட் Pantothenic Acid | மாத்திரைகள். |

*(அ.ஆ. பலவகை எண் 3815, சுகாதாரம் 30—10—1953-ஆம் தேதியிட்டது.)

| | | |
|---|---|---|
| 25 | எபிடிவின்ஹைட்ரோ குளோரைட் Ephe-Derine Hydrochloride. | ஆம்பியூல்ஸ். |
| 26 | இன்ஜக்டியோ பிஸ்மத் Injecto Bismuth. | குழாய்கள். |
| 27 | பெனோ பார்பிடோன் Phenobarbitone .. | 1/2 மாத்திரைகள். |
| 28 | ஆட்ராஞலின் எண்ணெய் புட்டிகளில Adrenaline. | .. |
| 29 | பார்பாக்கிரின் B. P. Papawerine .. .. | .. |
| 30 | கால்சியம் குளோரேட் Calcium Gloconate. | 10% 10 ஆம்பியூல்ஸ். |
| 31 | சொலுஸெப்டாசின் Soluzepjasine .. | ஆம்பியூல்ஸ். |
| 32 | குளூகோஸ் சொலுஷன் Glocose .. .. | 25% 20CC ஆம்பியூல்ஸ். |
| 33 | குளூகோஸ் சொலுஷன் Glocose .. .. | 50% 25CC ஆம்பியூல்ஸ். |
| 34 | கட்டாபலாஸ் மாக்லாலின் Kataplas makaolin. | டப்பாக்கள். |
| 35 | எமிடின் ஹைட்ரோ குளோரைட் Emetine Hydrochloride. | குழாய்கள். |
| 36 | நிகெத்டின்மைட் Niketaenamide .. | ஆம்பியூல்ஸ். |
| 37 | கொயினு Quinine .. .. .. | ஆம்பியூல்ஸ். |
| 38 | டிஸ்ட்டில் வாட்டர் Distilled Water .. | ஆம்பியூல்ஸ். |
| 39 | டிட்ரெஸ் செலேன் புட்டிகள் Detrese Saline Bottles. | .. |
| 40 | சல்பஞைமைட் பவுடர் Sulphanilamide Powder. | .. |
| 41 | மெர்சலேல் Mersalyl .. .. .. | ஆம்பியூல்ஸ். |
| 42 | பிரோஜன்பிரி செலேன் Pyrogen Freesaline. | ஆம்பியூல்ஸ். |
| 43 | அமில் மிட்ராஸ் Amyl Mitras .. .. | ஆம்பியூல்ஸ். |
| 44 | சோடியம் சிட்ராஸ் Sodium Citras .. | ஆம்பியூல்ஸ். |
| 45 | சல்பா மெகாசின் Sulphamethazine .. | மாத்திரைகள். |
| 46 | டையல் Dial .. .. .. .. | ஆம்பியூல்ஸ். |
| 47 | எமிடின் பிஸ்மத் ஐயோடைட், Ematine Bismuth Iodide. | மாத்திரைகள். |
| 48 | சோடியம் பெனோ பார்பிரிடோனம் Sodium Phenobarbitonium. | ½ சி. மாத்திரைகள். |
| 49 | அடமின் டிராப்ஸ் Adamin Drops ... | .. |

## II-ஆம் பட்டியல்.

1 இன்சுலின் Insulin எல்லா விதங்களும்.

2 கோகுலன் Coagulen சியா ஆம்பியூல்ஸ்.

3 அட்ரோஞல் கார்டெக்ஸ் ஹார்மோன்ஸ் Adronal Cortex Hormones.

4 தங்க தயாரிப்புகள் Gold Preparations.

5 பேன்சிலின் Pencilin.

6 மெபார்சைட் Maphanside

7 ரிபோபிலோவின் Niboflavine ஆம்பியூல்லும் மாத்திரைகளும்

8 கோட்டிலாசன் Cotylasan குழந்தைக் குழாய்களும், பெரியவர்கள குழாய்களும்.

9 லிவர் எக்ஸ்ட்ராக்ட் Liver Extract ஆம்பியூல்ஸ்

10 டையோடோக்சியுடன் Diodoquine.

11 எல்லா அம்மை போன்ற பால்களும் தடுப்பு ஊசி மருந்துகளும் All Soraa Vaccins.

12 ப்ரோபில்திரேயுரேசில் Prophylthireuracil (மெதில் திரேயு ரேசிலுக்குப் பதில சேர்க்கப்பட வேண்டியது.)

13 அடோகலலின் Adoxelin.

14 சோடியம் பெண்டாகிலியோடைட் Sodium Penjaucleotide.

15 பிராஸ்டிக்மைன் மாத்திரைகள் Prostigmine.*

16 கார்பர் சோன மாத்திரைகள் Carbarsons.

17 கே. வைட்டமின் ஆம்பியூல்ஸ் Vitamine K.

18 டேக் டிகாஸ்ட்ரங் ஆம்பியூல்ஸ் Take Disastese Drugs.

19 எக்ஸ்ரே துறையில் சோதனைக்காகப் பயன்படுத்தப்படும் எல்லா மருந்துகளும்.

20 பி-1. வைட்டமின் ஆம்பியூல்ஸும் மாத்திரைகளும் Vitamin B-1.

21 அஸ்கார்பிக் ஆசிட் ஆம்பியூல்ஸும் மாத்திரைகளும் Acid Ascorbic.

22 "பி" காம்பலக்ஸ் வைட்டமின் ஆம்பில்ஸும் மாத்திரைகளும் Vitamin B. Complex.

23 சோடியம் சல்பாடையாசின் அல்லது சோடியம் Sodium Sulphadiazine or Sodium.

24 பிராஸ்டிக் மைன் Prostigman ஆம்பியூல்ஸ்.

25 அமினோபிலலின் இன்ஜக்ஷன்கள் Aminoplyllin.

26 பெத்தி டோன் ஆம்பியூல்ஸ் Pethidone.

29. (ஆ) 29 ஆம் விதியின் ஏற்பாடுகள் எப்படியிருந்தாலும், ஒரு அரசிதழ் பதிவு பெறாத அரசாங்கப் பணியாளரின் மாதம் ஒன்றுக்கு ரூ. 300க்கு மேற்படாத சம்பளம் பெறும் உள்ளாட்சிக் கழகப் பணியாளரும் அவருடைய அல்லது அவர் குடும்பத்தின் உறுப்பினர் ஒருவரின் சிகிச்சை சம்பந்தமாய் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளியாயிருந்தாலும் அல்லது வந்து செல்லும் நோயாளியாயிருந்தாலும், மருத்துவ மனை இருப்பிலிருந்து எடுத்து அளிக்கப்பட்ட யாதொரு சிறப்புள்ள விலை

*(அ.ஆ. எண் 1424, சுகாதாரம் 24—4—1951 தேதியிட்டது.)

யுயர்ந்த மருந்தின் விலையைச் செலுத்தக் கடமைப்பட்டவராக மாட்டார். மேலும், அவர், சம்பந்தப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் அல்லது மருத்துவ மனையில் அந்த நோயாளியின் பொறுப்பைப் பெற்றுள்ள மருத்துவ அலுவலர் இவர்களின் வேண்டுகோளின் பேரில தனக்குச் செய்த சிகிச்சை அல்லது தம் குடும்பத்தில் ஒரு உறுப்பினரின் சிகிச்சை சம்பந்தமாய் விலைக்கு வாங்கப்பட்ட யாதொரு சிறப்புள்ள விலையுயர்ந்த மருந்தின் விலைக்கு அடியிற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு ஈடு பெறவும் தகுதியுள்ளவர்களாவார்கள் :—

(i) சிறப்புள்ள விலையுயர்ந்த மருந்தின் விலைக்கு ஈடு செய்வதற்கான உரிமைக் கோரிக்கை, அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளரிடமிருந்து அல்லது மருத்துவ மனையில் அந்த நோயாளியின் பொறுப்பைப் பெற்றுள்ள மருத்துவ அலுவலரிடமிருந்து இன்றியமையாமை பற்றிய சான்றிதழுடன் அனுப்பப்பட வேண்டும். அந்தச் சான்றிதழ் அடியில் கண்ட படிவத்திலிருக்க வேண்டும்.

ல் பணியாற்றும் திரு/திருமதி/குமாரி
மருத்துவ மனையில்/எனது ஆலோசனை அறையில்/அவர் இருப்பிடத்தில்/என்னுடைய சிகிச்சையிலிருந்திருக்கிறார் என்றும் அதற்கு என்னால் குறிக்கப்பட்ட அடியில் சொல்லப்பட்ட மருந்துகள் அந்த நோயாளி குணமடைவதற்கு/நிலைமையில் ஆபத்தான சிர்கேட்டைத் தவிர்ப்பதற்கு/முக்கியமானவையாயிருந்தன வென்றும் நான் சான்றளிக்கிறேன்.

இந்த மருந்துகள் நோயாளிகளுக்கு வழங்குவதற்கு
இருப்பில் வைக்கப்படுகிறதில்லை. சமமான மருத்துவ மதிப்புள்ள, குறைந்த விலையில் கிடைக்கக் கூடிய பொருள்களைக் கொண்ட சொந்தத் தயாரிப்புகளைச் சேர்ந்ததில்லை. இவைகள் முதன்மையாக உணவுத் தயாரிப்புகளும் அல்லது தொற்று நீக்கி மருந்துகளும் ஆகமாட்டா.

மருந்துகளின் பெயர்

அதிகாரம் பெற்ற மருந்துவ உதவியாளரின் கையொப்பம் அலுவல் பெயரும்.

---

மருத்துவ மனையில் அந்த நோயாளி பொறுப்பைப் பெற்றிருந்த மருத்துவ அலுவலரின் கையொப்பம்.

குறிப்பு.—(1) அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளரும் அல்லது மருத்துவ மனை அந்த நோயாளியின் பொறுப்பைப் பெற்றிருந்த மருத்துவ அலுவலரும், சமமான மருத்துவப் பயனுள்ள தயாரிப்புகள் மருத்துவ மனையில்/மருந்தகத்தில் உள்ள போது, விலையுயர்ந்த மருந்துகளையும், டானிக்குகளையும், பேதி மருந்துகளையும், அல்லது பிற கவர்ச்சியானதும் சொந்தத் தயாரிப்புகளுமானவைகளைக் குறிப்பிடுவதிலிருந்து தடுக்கப்பட்டிருக்கிறார்.

*(2) மருந்துகள் அல்லாத ஆனால் முதன்மையான உணவுகள் டானிக்குகள் ஒப்பனைப் பொருட்கள் முதலியவைகளுக்குச் சம்பந்தமான தயாரிப்புகள் அல்லது தொற்று நீக்கிச் சுத்தம் செய்யும் மருந்துகளின் செலவுகளை ஈடு செய்வது ஒப்புக் கொள்ளத் தக்கதல்ல.

(ii) சிறப்பானதும் விலையுயர்ந்ததுமான மருந்துகளின் விலையை ஈடு செய்யக் கோரும் பட்டியலுக்குச் சம்பந்தப்பட்ட எல்லா உள் செலவுச் சீட்டுகளும் சேர்க்கப்பட வேண்டும்.

(iii) இன்றியமையாமைச் சான்றிதழில் குறிப்பிடப்பட்ட எல்லா மருந்துகளின் பெயர்களையும் ஒவ்வொரு மருந்து வாங்கியதில் ஏற்கப்பட்ட செலவும் கூறப்பட வேண்டும். அந்த மருந்துகளைக் குறிப்பிட்ட மருத்துவ அலுவலரால் மேலொப்பமிட வேண்டும். உள்செலவுச் சீட்டுகளில் இந்த இன்றியமையாச் சான்றிதழ், மருத்துவ அலுவலர் சேர்ந்துள்ள மருத்துவ மனையின் அலுவலக முத்திரையையும் கொண்டதாயிருக்க வேண்டும்.

(iv) மருத்துவ மனையில் அந்த நோயாளியின் பொறுப்பை ஏற்றுள்ள ஒரு கௌரவ மருத்துவ அலுவலரிடமிருந்து அந்தச் சான்றிதழ் பெறப்பட்டிருந்தால் அது சம்பந்தப்பட்ட மருத்துவ நிறுவனத்தின் தலைவரால் மேலொப்பமிடப்பட வேண்டும்.

†(v) இருப்பிடத்தில் சிகிச்சை பெறத் தகுதி பெற்றிராத ஒரு அரசிதழ்ப் பதிவு பெறாத அரசாங்கப் பணியாளரும் ஒரு உள்ளாட்சிக் கழகப் பணியாளரும் தங்கள் இருப்பிடத்தில் தங்களின் அல்லது தங்கள் குடும்பத்தினரின் சிகிச்

---

*(அ.ஆ. எண் 246, சுகாதாரம் 21—1—1953-ஆம் தேதியிட்டது.)

†(அ.ஆ. எண் 3635, சுகாதாரம் 19—10—1953-ஆம் தேதியிட்டது, அ.ஆ. எண் 313, சுகாதாரம் 9—2—1954 தேதியிட்டது.)

னைக்குச் சிறப்பான விலையுயர்ந்த மருந்துகள் வாங்கினதால் ஏற்கப்பட்ட செலவை ஈடு பெறத் தகுதியுள்ளவர்களாக மாட்டார்கள். அப்படிப்பட்ட செலவை ஈடு செய்வதை, இருப்பிடத்திலேயே சிகிச்சை பெற உரிமையுள்ள ஒரு அரசிதழ்ப் பதிவு பெருத அரசாங்கப் பணியாளர் அல்லது ஒரு உள்ளாட்சிக் கழகப் பணியாளர் விஷயத்தில் ஒப்புக் கொள்ளப்படும்.

30. அரசாங்க மருத்துவ மனைகளில் தனிப் பகுதிகள் அல்லது படுக்கைகள் குறிப்பிட்ட சாதியார்களுக்கு அல்லது இனத்தார்களுக்கு ஒதுக்கி வைக்கக்கூடாது. ஆனால் பகுதிகளும் படுக்கைகளும் நன்கொடைகளால் ஏற்படுத்தப்பட்டிருந்து அவைகள் கொடைகளாக அளிக்கப்பட்டதன் நிபந்தனைகளின் கீழ் குறிப்பிட்ட சாதியார்களுக்கு அல்லது இனத்தவர்களுக்கு குறிப்பாக ஒதுக்கப்பட வேண்டும் என்று இருந்தால் அம்மாதிரி ஒதுக்கல் நீடித்திருக்கவேண்டும்.

31. (அ) பணம் செலுத்தும் நோயாளிகளிடமிருந்து விதிக்கப்படும் தொகைகள், அந்த நோயாளி மருத்துவ மனையில் தங்கியிருந்த முழு 24 மணி நேரத்திற்கு ஒரு நாள் செலவு வீதம் கணக்கிட வேண்டும். 24 மணி நேரத்தின் பாகங்கள் மேலே சொல்லப்பட்டதற்கு மேற்கொண்டிருந்தாலும் அல்லது மொத்தத்தில் ஒரு நாளைக்குக் குறைவாயிருந்தாலும் அது ஒரு முழு நாளைப் போலவே செலவுத் தொகை விதிக்கப்பட வேண்டும்.

(ஆ) ஒரு நோயாளி முதலில் ஒரு தாழ்ந்த வகுப்புப் பகுதியில் சேர்க்கப்பட்டு சேர்க்கப்பட்ட அந்தத் தினமே ஒரு உயர்ந்த வகுப்புப் பகுதிக்கு மாற்றப்பட்டால் அந்த நோயாளி தாழ்ந்த வகுப்புப் பகுதியில் தங்கியிருந்ததற்குத் தனியாக வேறே செலவுத் தொகை விதிக்கக் கூடாது. ஆனால் அந்த உயர்ந்த வகுப்புப் பகுதிக்குப் பொருந்தும் விகிதப்படி அவர் தாழ்ந்த வகுப்புப் பகுதியில் சேர்க்கப்பட்ட காலத்திலிருந்து செலவுத் தொகை விதிக்கப்பட வேண்டும்.

(இ) ஒரு நோயாளி தாம் ஒரு தாழ்ந்த வகுப்புப் பகுதியில் சில நாட்கள் தங்கியிருந்த பிறகு ஒரு உயர்ந்த வகுப்புப் பகுதிக்கும் மாற்றப்பட்டதில் அவர் தாழ்ந்த வகுப்புப் பகுதியில் 24 மணியின் மடங்கு காலத்திற்கு மேற்பட்டு உள்ள அதிக

காலத்திற்கு செலவுத் தொகை விதிக்கப்படமாட்டார். ஆனல் அந்த அதிகக் காலத்திற்கு அவர் உயர்ந்த வகுப்புப் பகுதியி லிருந்தது போல் செலவுத் தொகை விதிக்கப்படுவார்.

*(ஈ) ஒரு நோயாளி, அவர் உயர்ந்த வகுப்புப் பகுதிகளில் சில நாட்கள் தங்கியிருந்த பிறகு அவர் வேண்டுகோள் பேரில் உயர்ந்த வகுப்புப் பகுதியிலிருந்து தாழ்ந்த வகுப்புப் பகுதிக்கு மாற்றப்பட்டு உயர்ந்த வகுப்புப் பகுதியில் அவர் தங்கியிருந்த காலம் 12 மணி நேரங்களுக்குள் இருந்தால், 24 மணி நேரத்தின் பாகத்திற்குச் செலவுத் தொகை விதிக்கப்படக் கூடாது. மாற்றப் பட்ட யாதொரு நிகழ்விலும் 24 மணி நேரங்கள் கொண்ட கால அளவு ஒவ்வொன்றுக்கும் ஒரே ஒரு செலவுத் தொகைதான் விதிக்கப்பட வேண்டும்.

32. நோயாளிகள் தரப்பில் அரசாங்க மருத்துவ மனைகளுக்குள் சேர்க்கப்பட்ட உதவியாட்களுக்கு இட வசதிக்கும் உணவுக்கும் அடியிற்கண்ட விகிதங்களில் செலவுத் தொகை விதிக்கப்பட வேண்டும்.

**பொதுப்பகுதி.**—ஒரு நோயாளியின் அல்லது அவர் குடும்பத் தலைவரின் வருமானம் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாய்களும் அதற்கு மேலுள்ள நோயாளியின் உதவியாளருக்கு 13 ஆம் விதியில் உள்ள விடுப்புகளுக்கு உள்ளவாறு.

**தினசரி செலவு.**—13 ஆம் விதியில் செவிலிப் பணிக்கும், இட வசதிக்கும், உணவுக்கும் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்கள்.

**தனிப் பகுதி.**—இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுடைய வராயிருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒவ்வொரு உதவியாளருக்கும்.

† **தினசரி செலவு.**—15 ஆம் விதியில் செவிலிப் பணிக்கும் இட வசதிக்கும், உணவுக்கும் குறிப்பிடப்பட்டுள்ள விகிதங்களும் 17 ஆம் விதியில் (அ), (ஆ), (இ), (ஈ) இனங்களின் கீழ் இட வசதிக்கும் உணவுக்கும் உள்ள விகிதங்களும்.

---

*(அ.ஆ. பலவகை எண் 2976, பொ.சு 29—8—1951-ஆம் தேதியிட்டது.)

†(அ.ஆ. பலவகை எண் 3508, பொ.சு. 18—12—1944-ஆம் தேதியிட்டது.)

குறிப்பு.—(1) "உதவியாளர்" என்பதில் தன் குழந்தையின் சிகிச்சையின் நலனுக்காகச் சேர்க்கப்பட்ட தாயும் அடங்கும்.

(2) மருத்துவ மனைக் கண்காணிப்பாளர் அல்லது சம்பந்தப் பட்ட மருத்துவ அலுவலர் ஒவ்வொரு நிகழ்விலும் அம்மாதிரி சேர்த்துக் கொள்வது சம்பந்தப்பட்ட நோயாளியின் நலனுக்காகத் தேவையானது என்று சான்றளித்தால் மட்டும் ஒரு உதவியாளைப் பொதுப் பகுதியில் சேர்க்க வேண்டும்.

(3) நோய்வாய்ப்பட்ட தாய்களுடன் சேர்க்கப்பட்டு மருத்துவ மனையில் உணவளிக்கப்படும் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் நாள் ஒன்றுக்குப் பெருமம் 50 பைசாவுக்குட்பட்டு தாய்மார்களிடமிருந்து, வசூலிக்கவேண்டிய உணவுச் செலவுகளில் ஒரு பாதி விகிதத்தில் செலவு தொகைகள் வசூலிக்கப்பட வேண்டும்.

(4) மருத்துவ மனையிலேயே தங்கியிருக்காத உதவியாட்கள், அவர்கள் தேவையான போது வந்து நோயாளிகளைப் பார்க்கும் பொருட்டு அனுமதிச் சீட்டுகள் அளிக்கப்படலாம். அப்படிப்பட்ட உதவியாட்கள் ஒரு தொகையும் செலுத்தக் கடமைப்பட்டவர் களல்ல.

(5) மருத்துவ அலுவலர்களால் உதவியாட்கள் சேர்க்கப்படும் போது அவர்கள் சாதாரணமாக "சொந்த சாப்பாட்டு அனுமதிச் சீட்டுகள்" அளிக்கப்பட்டு அவர்களுக்கான உணவை மருத்துவ மனைக்கு வெளியிலிருந்து பெற்றுக் கொள்ள அனுமதிக்க வேண்டும். ஆனால் தொத்து நோய்க் காலங்களில், உணவு வெளியி லிருந்து கொண்டு வரக்கூடாதபோது அந்த சொந்த உணவு அனுமதிச் சீட்டுகள் ரத்து செய்யப்பட்டு உதவியாட்கள் மருத்துவ மனைக்கு வெளியிலிருந்து உணவு எடுத்துக் கொண்டு வருவதைத் தடுக்க வேண்டும். அந்த உதவியாட்கள் தமது உணவை வெளியிலிருந்து பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளபோது இட வசதிக்காகவும், உணவுக்கா கவும் மொத்தம் சேர்ந்த செலவு தொகைகளில் ஒரு பாதியைச் செலுத்தும்படி கேட்கப்படுவார்கள்.

*(6) தாம்பரம் அரசினர் உருக்கி நோய் உடல் நலம் பெறும் இடத்தில் தனிப்பட்ட பகுதிகளில் உள்ள நோயாளிகளின் உதவியாட்கள் உணவுக்குத் தங்கள் சொந்த ஏற்பாடுகளைச் செய்து கொண்டால் எந்தச் செலவு தொகைக்கும் உள்ளாகமாட்டார்கள்.

33. நோய்வாய்ப்பட்டுள்ள பெற்றோர்களுடன் அவர்கள் குழந்தைகள் வேறு விதமாகக் கவனிக்கப்படாவிட்டால் மருத்துவ மனைகளில் சேர்க்கப்படலாம். அந்தக் குழந்தைகள் சம்பந்தமாக வசூலிக்கப்பட வேண்டிய தொகை பெற்றோருக்கு விதிக்கப்படும் இடவசதிக்கும் உணவுக்குமுள்ள விகிதங்களில் பாதியாகும்.

34. அரசாங்கப் பணியாளர் ஒரு மாதாந்திரச் சம்பள அடிப் படையில் வேலை செய்யும் வேறு நபர்களைப் பொருத்தவரை அவர் களால் சிகிச்சைக் காலத்தில் உண்மையில் பெறப்பட்ட சம்பளத் தொகையின் அடிப்படையில் செலவு தொகைகள் வசூலிக்கப்படும். சம்பளம் பெறாத நபர்களைப் பொறுத்தவரை அவர்கள் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டபோது அவர்களால் சொல்லப்பட்ட மாதாந்தர வருமானத்தின் பேரில், அவசியமானால் அவர்கள் கொடுத்த தகவலை வருவாய் அதிகாரிகளுக்கு அனுப்பிச் சரி பார்த்துக் கொண்டு செலவு தொகைகள் வசூலிக்கப்படும்.

**குறிப்பு—அரசாங்க மருத்துவ மனைகளில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ள கூலியாட்கள் அவர்களு டைய சிகிச்சைக் காலத்தில் உள்ள உண்மை யான வருமானத்தின் அடிப்படையில் செலவு தொகை விதிக்கப்படுவார்கள்.

†35. இந்த விதிகளின் கீழ் வசூலிக்கப்பட வேண்டிய தொகைகள் நோயாளிகளிடமிருந்தே வசூலிக்கப்பட முடி யாதவற்றில் அந்த நோயாளி, யாருடைய ஆதரவில் இருக்கிறாரோ அவரிடமிருந்தாவது அல்லது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு அந்தக் குடும்பத் தலைவரிடமிருந்தாவது வசூல் செய்யப்படும்.

---

*(அ.ஆ. எண் 2662, பொ.சு. 23—9—1944-ஆம் தேதியிட்டது.)

**(அ.ஆ. எண் 4070, சுகாதாரம் 9—11—1951 தேதியிட்டது.)

†(அ.ஆ. பலவகை எண் 2033, 2—8—1945-ஆம் தேதியிட்டது.)

36. ஒரே நபரின் இரண்டு அல்லது மேற்பட்ட குழந்தைகள் அவர் ஆதரவில் கீழேயுள்ளவர்கள் ஒரே காலத்தில் அரசாங்க மருத்துவ மனைகளில் பொதுப் பகுதிகளில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தால், மொத்தச் செலவுத் தொகை அந்தக் குடும்பத் தலைவரால் செலுத்தப்படக்கூடிய தினசரி விகிதத்திற்கு அதிகப் படக் கூடாது.

குறிப்பு.—அரசிதழ்ப் பதிவு பெறாத அரசாங்கப் பணியாளர்கள் அல்லாத வேறு அரசாங்கப் பணியாளர்களுடைய குழந்தைகளுக்கும் மாதம் ஒன்றுக்கு 300 ரூபாய்களுக்கு அதிகச சம்பளமில்லாத உள்ளாட்சிக் கழகப் பணியாளர்களின் குழந்தை களுக்கும் ஏற்பட்ட வரம்பு, அந்தக் குடும்பத் தலைவர் ஒரு அரசாங்கப் பணியாளராக இல்லாதிருந்தால் என்ன செலுத்த வேண்டுமோ அந்தத் தினசரி விகிதமாகும்.

37. அரசாங்க மருத்துவ மனைகளில் தனிப் பகுதிகளில் தங்கி வசதி பெறும் நோயாளிகள், அந்த, மருத்துவ மனையின் கண்காணிப்பாளர் ஏற்றுக் கொண்டால், தனிப்பட்ட செவிலிப் பணியாளர்களை அமர்த்திக் கொள்ளலாம். ஒரு செவிலிப் பணியாளரின் சேவை முழுவதும் ஒரு நோயாளிக்கு அளிக்கும் போது, 1938-ஆம் ஆண்டு செகரட்டரி-ஆஸ்-ஸ்டேட்ஸ் பணியா ளர்கள் தொகுதி (மருத்துவ உதவி) விதிகள் பொருந்தக்கூடிய நபர்களைத் தவிர, நாள் ஒன்றுக்குச் செவிலிப் பணியாளர் ஒருவருக்கு 2 ரூபாய் அதிகக் கட்டணம் விதிக்கப்படும்.

*10. (ஆ) விதியின் கீழ் வரும் ஒரு நிகழ்வில் நோயாளி தனிப்பட்ட செவிலிப் பணி கோரினல் அவருடைய சொந்தச் செலவின் பேரில் அவருக்கு அந்த வசதிகளை அளிக்கலாம். ஆனல் அவருடைய மருத்துவ உதவியாளர் அப்படிப்பட்ட செவிலிப் பணி அவசியம் என்று கருதினல், அதனல் உண்டாகும் செலவை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும்.

38. தம்முடைய பார்வைக்குக் கொண்டு வரப்படும் தனிப்பட்ட நிகழ்வுகளில், பணம் செலுத்தும் நோயாளிகள் அல்லது உதவியாளர்களின் எந்த வகுப்பிற்கும் குறிப்பிட்ட விகிதங்களை அந்த நிகழ்வின் தகுதிகளுக்கேற்றவாறு குறைப்பதற்கு மருத்துவப் பணி இயக்குநருக்கு யுக்தமான அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

*(அ.ஆ. எண் 58, பொ.சு. 6—1—1945-ஆம் தேதியிட்டது.)

குறைப்பதற்கான விண்ணப்பங்கள் அந்த நிறுவனங்களின் பொறுப்பிலுள்ள மருத்துவ அலுவலர்களால் மருத்துவம் I 44-இல் செய்ய வேண்டும்.

39. மருத்துவ மனை அதிகாரிகள், எல்லா நோயாளிகளையும் ஒரு தடவையில் பத்து நாட்களுக்கு அதிகப்படாத காலத்திற்குச் செலவுத் தொகைகளை முன்பணமாகச் செலுத்தும்படி அன்போடு சொல்ல வேண்டும். நோயாளி வெளியேறும் போது அவர் வாவில் உள்ள மீதிப் பணம் அவருக்குத் திருப்பிச் செலுத்தப்படும் அல்லது அவர் இறந்து விட்டால், அது அவரது மனைவி அல்லது மக்கள் அல்லது நெருங்கிய வழியுரிமையருக்குத் திருப்பிச் செலுத்தப்படும். வழி உரிமையில் தகராறு இருப்பின், வழியுரிமைச் சான்றிதழுடன் அல்லது வேறு சட்ட அதிகாரத்துடன் ஒரு உரிமை கோருபவர் வரும்வரையில் அந்தப் பணம் வைப்புத் தொகையாக வைக்கப்படும்.

அவசரமான நேரங்களில் தவிர, எக்ஸ் கதிர் சோதனைக்கும் சிகிச்சைக்குமுரிய கட்டணங்களை, எல்லா நோயாளிகளிடமிருந்தும் தங்கும் நோயாளிகளும் சரி, வந்து செல்லும் நோயாளிகளும் சரி முன்பணமாகவே வசூலிக்க வேண்டும்.

*இந்த விதிகளின் ஏற்பாடுகள் எப்படியிருந்தாலும், மருத்துவ மனைச்செலவுகளை வசூலிக்கும் காரியங்களில் பொது மக்களைப் போலவே ரயில்வேப் பணியாளர்களிடமிருந்தும் அவர்கள் பொதுப் பகுதிகளில் சேர்க்கப்பட்டிருந்தாலும் தனிப் பகுதிகளில் சேர்க்கப்பட்டிருந்தாலும் தவறாமல் மருத்துவ மனைச் செலவுகள் முன்பணமாகச் செலுத்துவதைக் கட்டாயப்படுத்த வேண்டும்.

†மருத்துவ மனைத் தங்கு செலவுத் தொகைகளில் அதிக வசூலைத் திருப்பிக் கொடுக்கும்படி கேட்கும் கோரிக்கைகளுக்கான கால வரம்பு, திருப்பிக் கொடுக்கப்படும் பணத்தைப் பற்றிச் சம்பந்தப் பட்ட நபர்களுக்குத் தகவல் அனுப்பப்பட்ட தேதியிலிருந்து மூன்று முழு நிதி ஆண்டுகளாகும்.

---

*(அ.ஆ. எண் 4079, சுகாதாரம் 29—12—1952-ஆம் தேதியிட்டது.)

†(அ.ஆ. எண் 3588, பொ.சு. 12—10—1949-ஆம் தேதியிட்டது,)

குறிப்பு.—மேலே சொல்லப்பட்ட பத்து நாட்களுக்கான முன்பணத்தைச் செலுத்தும்படி ஒரு அரசாங்கப் பணியாளரைக் கேட்க வேண்டியதில்லை. அவரால் செலுத்த வேண்டிய மருத்துவ மனைத் தங்கு செலவுகளை அவ்வப்போது மருத்துவ மனையிலேயே அவரிடமிருந்து வசூலிக்கலாம். மருத்துவ மனையில் கேட்கும் போது எப்படியும் அவர் அந்த மருத்துவ மனைத் தங்கு செலவுகளைச் செலுத்தத் தவறினால் அவர் பணி செய்யும் அலுவலகத்திற்கு மருத்துவ மனையின் தங்கு செலவுகளுக்கான பட்டியலை அனுப்ப வேண்டும். மருத்துவ மனைத் தங்கு செலவுகள் பட்டியல் வந்து சேர்ந்த போது அந்த அரசாங்கப் பணியாளர் சம்பளத்தில் வசூலிக்க வேண்டிய தொகையைக் குறைத்துக் கொண்டு, சம்பளம் வாங்க வேண்டும். ஆயினும் அந்தத் துறையின் அல்லது அலுவலகத்தின் தலைவர் தமது யுக்தத்தில் அந்த மருத்துவ மனைச் செலவுகளை மூன்றுக்கு மேற்படாத தவணைகளில் வசூலிக்க உத்தரவிடலாம்.

ஒரு அரசாங்கப் பணியாளரின் சம்பளம் குறைவாகப் பெறப்பட்ட போது, அஞ்சல் வாழ்வு ஈட்டுறுதி நிதிக் கழிவுகளைப் போலவே தனியாகக் கழிவுக் குறிப்பு ஒன்று சம்பளப் பட்டியோடு சேர்க்கப்பட வேண்டும். அதில் வசூலின் தன்மையும், வரவுக் கணக்கின் தலைப்பும் காட்டப்பட்டிருக்கும் வசூல் செய்யப்பட்ட பின் அவ்வாறு வசூலிக்கப்பட்ட தொகையைப் பற்றி சம்பந்தப்பட்ட மருத்துவ நிறுவனத்தின் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(அரசாங்கக் குறிப்பாணை எண் 29302-52-1, எச்3, சுகாதாரம் 6—9—1952-ஆம் தேதியிட்டது.)

40. மேற்கு வங்காளம், பஞ்சாப், மத்திய பிரதேசம், ஒரிசா ஆகியவற்றின் அரசாங்கங்களின் எல்லா அலுவலர்களும், பீஹார், உத்திரப் பிரதேசம், அசாம் அரசாங்கங்களைப் பொருத்தவரை மேல் நிலை சிவில் பணித் தொகுதியின் பிரிட்டிஷ் அலுவலகங்கள் மட்டும் இந்த மாநிலத்தில் உள்ள அரசாங்க மருத்துவ மனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டபோது, மருத்துவம், அறுவை மருத்துவம், செவிலிப் பணி இவற்றிற்கான செலவுகளைச் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளார்கள். இந்த ஏற்பாடு, மேற்கு வங்காளம், பஞ்சாப், மத்திய பிரதேசம் ஒரிசா அரசாங்கங்களின் அலுவலர்கள் இந்த அரசாங்கத்தின் நாட்டு பகுதியில் தங்கியிருக்கும்போது அல்லது பயணம்

ஏற்பாடு, மேற்கு வங்காளம், பஞ்சாப், மத்திய பிரதேசம், ஒரிசா அரசாங்கங்களின் அலுவலர்கள் இந்த அரசாங்கத்தின் நாட்டுப் பகுதியில் தங்கியிருக்கும்போது அல்லது பயணம் செய்யும்போது நோய்வாய்ப்படுபவர்களுக்கு மட்டுமே பொருந்தும். அலுவலர்கள் இந்த மாநிலத்தில் விடுப்பில் இருக்கும்போதும் அல்லது தம் விருப்பத்தில் ஒரு குறிப்பிட்ட மருத்துவ அலுவலரைக் கலந்து ஆலோசிப்பதற்கு அல்லது ஒரு குறிப்பிட்ட மருத்துவ நிறுவனத்தில் சிகிச்சை பெறுவதற்குப் பயணம் செய்யும்போதும் அவர்களுக்கு இந்த ஏற்பாடு பொருந்தாது.

41. வெறி விலங்குக்கடி மருத்துவம்.—பின்னால் திருத்தப் பட்டபடி 19—2—1953 தேதியிட்ட அரசாங்க ஆணை எண். 990 பொ. சுகாதாரத்திலுள்ள விதிகளாலும் கட்டளைகளாலும் ஒழுங்கு படுத்தப்படும்.

42. (அ) தனியான நோய் ஆராய்ச்சி, பாக்டீரியா பற்றிய ஆராய்ச்சி அல்லது ரசாயன சம்பந்தமான ஆராய்ச்சி வேலை முதலியவை.—தனியான நோய் ஆராய்ச்சி, பாக்டீரியா பற்றிய ஆராய்ச்சி முதலிய வேலைகளை, சென்னை மாநகரத்திலும் புறப் பகுதிகளிலுமுள்ள எல்லா அரசாங்க மருத்துவ நிறுவனங் களிலும், அப்படிப்பட்ட சோதனைகள் செய்வதற்கு வசதி யுள்ளவைகளில் எடுத்துக் கொள்ளலாம். விதிக்கப்பட வேண்டிய கட்டணங்களின் விகிதங்கள் அடியிற்கண்டபடியாகும் :—

| வேலையின் தன்மை. | மாநகரத்திலும் புறப் பகுதிகளிலுமுள்ள அரசாங்க நிறுவனங் களில் பரிசோதனைப் பணிக்கு அளிக் கப்பட்ட தொகை. |
|---|---|
| (1) | (2) |
| | ரூபாய். |
| (1) விடால் ( Widal ) எதிர் விளைவு [உயிருள்ள பொருள்களின் யாதொரு இணைப்புக்கும், அதாவது டைபாய்ட் (குடற்புண் காய்ச்சல்) டைபாய்டைப் போன்ற ஒரு காய்ச்சல், முறைக் காய்ச்சல் முதலியவை.] | 3 |

| வேலையின் தன்மை. | மாநகரத்திலும் புறப் பகுதிகளிலுமுள்ள அரசாங்க நிறுவனங் களில் பகுமுறைப் பணிக்கு ஒப்பு அளிக் கப்பட்ட விகிதம். |
|---|---|
| (1) | (2) |
| | ரூபாய். |
| (2) விடால் ( Widal ) எதிர் விளைவு (ஒரு தனிப் பட்ட உயிருள்ள பொருளுக்கு). | 3 |
| (3) வாசர்மேன் ( Wajserman reaction ) விளைவு எதிர் விளைவு | 3 |
| (அ) கான் ( Kaen ) சோதனை | 3 |
| (ஆ) கான் வாசர்மேன் இணைக்கப்பட்ட சோதனை | 5 |
| (4) இரத்தக் கறைகள் சோதனை (முறைக் காய்ச்சலுக்கும் அடுத்து அடுத்து வரும் காய்ச்சல் முதலியவை). | 3 |
| (5) வேறுபட்ட அணுக்கள் (Differential Lencoxyttic Count) கணக்கிடப்படுவதற்காக இரத்தக் கரைகள் சோதனை. | 3 |
| (6) சிறுநீர்ச் சோதனை :— | |
| (அ) மருத்துவக் குணத்தின் தன்மை (அதாவது, ரசாயனமும் தேக சம்பந்தமானதும்) | 3 |
| (ஆ) மருத்துவ அளவு முறையில் (அதாவது, சர்க்கரை, இரத்தத் தாது, உரியா ஆசிடோன், இண்டிகான் முதலியவை) | 5 |
| (இ) பாக்டீரியா சம்பந்தமானவை | 3 |
| (7) சீழ்க் கறைகள் | 3 |

| வேலையின் தன்மை. | மாநகரத்திலும் பார்ப் பகுதிகளிலுமுள்ள உபசாரங்க நிறுவனங் ளில் பகுதி றைப் பணிக்கு ஒப்பு அளிக் கப்பட்ட கூடு ப். |
|---|---|
| (1) | (2) |
| | ரூ |
| (8) புண்களின் பிரைகள், புண்களின் தோல் எலும்புகள் முதலியவை | 3 |
| (9) ட்ரெப்போனுமா பல்லிடம்— | |
| (அ) கறைப்படுத்தல் | 3 |
| (ஆ) இருட்டுப் பரப்பில் வெளிச்சம் | 3 |
| (இ) இரு முறைகளும் கலந்து | 5 |
| (10) மலச் சோதனை— | |
| (அ) பூதக் கண்ணாடியால் | 3 |
| (ஆ) பாக்டீரியா முறையில் | 5 |
| (இ) கண்ணாடி மூலமாயும் பாக்டீரியா மூலமாயும் கலந்து | 7 |
| (11) டிப்தீரியா (தொண்டையடைப்பாக) வின் பாக்டீரியா சோதனை. தனிப்பட்ட பஞ்சால் அல்லது ( Culture ) கல்சுரல் | 5 |
| (12) நீர்ச் சோதனை— | |
| (அ) ஒவ்வொரு மாதிரியையும் பாக்டீரியா முறையின் பாகுபடுத்திப் பார்த்தல் | 15 |
| (ஆ) ரசாயன முறையில் ஒவ்வொரு மாதிரிக்கும் | 15 |
| (இ) பாக்டீரியாவும் ரசாயன முறையும் | 20 |
| (ஈ) இயந்திர தொழில் சம்பந்தமான தனிப்பட | 35 |

| வேலையின் தன்மை. | மாநகரத்திலும் புறப் பகுதிகளிலுமுள்ள அரசாங்க நிறுவனங்களில் பகுமுறைப் பணிக்கு ஏற்பு அளிக்கப்பட்ட அதிகம். |
|---|---|
| (1) | (2) |
| | ரூ. |
| (13) இரத்தச் சோதனைகள்— | |
| (அ) மொத்தம் ஆர். பி. சி. ( R. B. C. ) எண் | 3 |
| (ஆ) மொத்த டபிள்யூ. பி. சி. எண் | 3 |
| (இ) ( R.B.C. and W.P.C. ) ஆர். பி. சி.யும் டபிள்யூ. பி. சி.யும் | 5 |
| (ஈ) ஹெமோகுளோபின் மதிப்பீடு | 3 |
| (உ) ரீயஸ் தன்மையும் சோதனையும் | 5 |
| (ஊ) ரீயஸ் வகை செய்தல் | 10 |
| (எ) இரத்தத்தை குழு வகைப்படுத்தல் | 3 |
| (ஏ) நேர்முக இணை செய்தல் | 3 |
| (ஐ) குளிர் ஒட்டு செய்தல் | 5 |
| (ஒ) இரத்தத்தைக் குழு வகைப்படுத்தலும் நேர்முக இணை செய்தலும் | 5 |
| 14. மூளை முதுகெலும்பு நீர்.— | |
| (அ) உயிர் அணு எண்ணிக்கை | 3 |
| (ஆ) நெகடிவ் தேர்வு | 5 |
| (இ) பாசிடிவ் தேர்வு | 10 |
| (ஈ) தங்கத் திரவச் சோதனை | 15 |
| 15. நோய் கண்டுபிடிக்கும் முறைக்காக சிறு விலங்கு கட்குத் தடுப்பு ஊசி போடுதல், டையுபெர்கல் முதலியவை | 10 |
| 16. உறுப்புக்களை வழக்கமாகச் சோதனை செய்தல் | 10 |

| வேலையின் தன்மை. | பாரதத்திலும் புறப் பகுதிகளிலுமுள்ள அரசாங்க நிலையங் களில் பகுமுறைப் பணிக்கு ஒப்பு அளிக் கப்பட்ட விதம். |
|---|---|
| (1) | (2) |
| | ரூபாய். |
| 17. நலங்குன்றிய தசைகளின் பகுதி | 10 |
| 18. தனி ஆடோஜெனஸ் வாக்ஸின்கள் தயாரித்தல்.— | |
| (அ) சாதாரண மீடியத்தைப் பயன் படுத்தி | 5 |
| (ஆ) சிக்கலான மீடியத்தைப் பயன் படுத்தி | 5 |
| (இ) விலங்குச் சோதனையுட்பட்டும் தனிச் சிக்கலான வேலை | 10 |
| 19. கிருமிகளை நீக்கும் நுண்ணுயிரியல் சோதனை (மார்டின்-சிக் ரைடியல் வாக்கல்) | 30 |
| 20. ரசாயன முறையிலும் பாக்டீரியா முறையிலும் பால் சோதனை | 10 |
| 21. தண்ணீருடன் அல்லது ரசாயனப் பொருள் களுடன் கலப்படம் காண்பதற்காகப் பால் ரசாயனச் சோதனை | 10 |
| 22. வெண்ணெய், நெய், எண்ணெய்கள் அல்லது மருத்துவ ரசாயனச் சோதனை | 10 |
| 23. வெறி நீரும் சாராளியும், ஒயினும் ரசாயனச் சோதனை | 20 |
| 24. ரத்தக் கல்சர்கள் (எதிர்மறை) | 10 |
| 25. ரத்தக் கல்சர்கள் (உடன்பாடானவை) | 10 |
| 26. ரத்தத் தொகுப்பு | 5 |

| வேலையின் தன்மை. | மாநகரத்திலும் புறப் பகுதிகளிலுமுள்ள அரசாங்க நிறுவனங் களில் பகுப்பாய்வுப் பணிக்கு ஒப்பு அளிக்கப் பட்ட விகிதம். |
|---|---|
| (1) | (2) |
| | ரூ |
| 27. ரத்தத்தில் சர்க்கரை மதிப்புகள்— | |
| (அ) ஒரு முழுச் சோதனைக்கு | 20 |
| (ஆ) ஒரு தனிப்பட்ட மதிப்பிற்கு | 5 |
| 28. இரத்தத்தின் குளோரைட், பாஸ்பேட்ஸ் கிரீடினைன் அல்லது குளோஸ்டெராலின் ஒரு அளவு மதிப்பீடு | 12 |
| 29. அடிப்படை மெடபாலிக் விகிதம் | 15 |
| 30. ரத்தச் சர்க்கரை தவிர இரத்தத்தில் உள்ள பிறவற்றை மதிப்பிடுதல் | 12 |
| 31. மலத்தின் தன்மை (சோதனை) | 5 |
| 32. மலங்களின் கொழுப்புகளும் கொழுப்பு ஆசிடு களுடைய மதிப்பீடு | 15 |
| 33. வான்டென் பெர்க் தரத் தன்மை மதிப்பீட்டுச் சோதனை | 5 |
| 34. வான்டென் பெர்க் தரத் தன்மை அளவு மதிப்பீட்டுச் சோதனை | 12 |
| 35. சிவப்பு அணுக்களின் நுட்பம் | 5 |
| 36. பகுதி உணவுச் சோதனை—பகுத்து ஆராய்வு மட்டும் | 25 |
| 37. பகுதி உணவுச் சோதனை—ஆய்வுக் கூடச் சோதனையும் பகுத்தாராய்வும் | 40 |
| 38. படியவைத்தல் சோதனை | 5 |

| வேலையின் தன்மை. | மாநகரத்திலும் புறப் பகுதிகளிலுமுள்ள அரசாங்க நிறுவனங் களில் பகுமுறைப் பணிக்கு ஒப்பு அளிக் கப்பட்ட விகிதம். |
|---|---|
| (1) | (2) |
| | ரூ |
| 39. இரத்தம் வடியும் காலம் | 5 |
| 40. இரத்தம் உறையும் காலம் | 5 |
| 41. செரப்ரோஸ்பைனல் திரவத்தில் ஏதேனுமொரு அடக்கப் பொருளின் மதிப்பிடுதல் | 12 |
| 42. செரப்ரோஸ்பைனல் திரவத்தில் குலோபுலின் கண்டுபிடித்தல் அளவு மதிப்பீட்டுச் சோதனை | 5 |

வேறு சிறப்பறிஞர்களின் வேலைகள் அந்த வேலையின் தன்மைக்குத் தக்கபடி விதிக்கப்படலாம்.

42. (ஆ) இராணுவ நோயாளிகள் தவிர அரசாங்கப் பணியாளர்களும் அவர்கள் குடும்பத்தினர்களும், அவர்களுடைய அலுவலக மருத்துவ உதவியாளர்கள் அல்லது அவர்களுக்கு மருத்துவ உதவியளிக்கும் தனிப்பட்ட பதிவு பெற்ற மருத்துவர்கள், தேவைப்படும் சோதனையைக் குறிப்பிட்டு அதற்கு எழுத்து மூலமான ஆணையையும் கட்டளைகளையும் அனுப்பினால் அரசாங்க மருத்துவ நிறுவனங்களில் நோய்க் காரணம், பாக்டீரியா, ஆகியவற்றின் ஆய்வுக் கூடங்களில் செலவில்லாமல் இலவசமாய்ச் சோதிக்கப்பட வேண்டும்.

*குறிப்பு.—ஒரு அரசாங்க மருத்துவ நிறுவனத்தில் உள்ள நோய் கண்டுபிடிப்பு, பாக்டீரியா சம்பந்தமான அல்லது ரசாயன சம்பந்தமான ஆய்வுக் கூடத்தில் தங்களுடைய மாதிரிகளைச் சோதனை செய்யக் கோரும் அரசாங்கப் பணியிலுள்ள அரசிதழ்ப் பதிவு பெற்ற மருத்துவ அலுவலர்களையும் சிவில் உதவி மருத்துவர்களையும் பற்றியவைகளில் அத்தகைய

*அ. ஆ. பலவகை எண். 1136, பொ. சு. 27-5-1943-ம் தேதியிட்டது.
அ. ஆ. பலவகை எண். 1747, பொ. சு. 2-7-1945-ம் தேதியிட்டது.

ஆராய்ச்சிக்கூடச் சோதனைகள் அந்த மருத்துவ அலுவலர்கள், சிவில் உதவி மருத்துவர்கள் இவர்களின் கோரிக்கைகளின் மேல் செலவில்லாமல் இலவசமாக செய்யப்படலாம்.

ஆனால் அவர்கள் ஒரு மருத்துவ மனையிலோ அல்லது தங்கள் வீடுகளிலோ வேறொரு மருத்துவ அலுவலரின் சிகிச்சையில் இருக்கக் கூடாது.

42. (இ) அரசாங்க நிறுவனங்களிலிருந்து அனுப்பப்பட்ட, மருத்துவ மனைகளில் பணம் செலுத்தும் நோயாளிகளுக்காகவும், வசதியில்லாத வந்து செல்லும் நோயாளிகளுக்காகவும், நோயைக் கண்டுபிடிக்கும் நோக்கத்தோடு அரசாங்க ஆய்வுக் கூடங்களில் செய்யப்படும் ஆய்வுக் கூடச் சோதனைகளுக்காக ஒரு கட்டணமும் வசூலிக்கக் கூடாது.

தொற்று நோய் உள்ளதாகச் சந்தேகப்படக்கூடியவற்றில் அரசாங்க மருத்துவ மனைகளுக்கு வந்து செல்லும் நோயாளி களிடமிருந்து பெற்ற மாதிரிகளை அரசாங்க ஆய்வுக் கூடங்களில் அந்த நோயாளிகளின் வருமானத்தைக் கவனியாமல் (வந்து செல்லும் பணக்காரர் அல்லது ஏழை நோயாளிகள் ஆகிய இருவர் திறத்தும்) இலவசமாகச் சோதனை செய்ய வேண்டும்.

(ஈ) தகுதியுள்ள மருத்துவரால் அனுப்பப்பட்ட உருக்கி நோய்க் கிருமிகளுக்கான (நுண்மங்கள்) எச்சிலை எல்லா அரசாங்க மருத்துவ மனைகளிலும் மாநகரத்திலும் மற்ற புறப் பகுதியிலும் இலவசமாகச் சோதனை செய்யப்படும்.

சென்னை மருத்துவக் கல்லூரி, சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் தலைவர்கள் முறையே தங்கள் கல்லூரிகளிலுள்ள நோய்க் கண்டுபிடிப்புத் துறைகளில், தனிப்பட்ட மருத்துவர் களிடமிருந்தும் நிறுவனங்களிலிருந்தும் வரப் பெறும் நோய்க் கண்டுபிடித்ததற்கான மாதிரிகளை, அவர் கல்விக்கு அநுகூல முள்ளவைகளாகவும் சொல்லித் தரும் மாணவர்களுக்குப் பயனுள்ளவைகளாயுமிருந்தால் அவற்றை இலவசமாகச் சோதனை செய்ய ஒப்பு அளித்துத் தர அதிகாரமளிக்கப்பட்டுள்ளார்கள். அந்த மாதிரிகளைச் சோதனை செய்வது நோயாளிகளுக்குச் சிகிச்சையளிப்பதற்காகத் தேவைப்பட்டாலும் அவைகளின் விளைவுகளை அவைகளை இதற்காக அனுப்பும் மருத்துவர்களுக்கும் நிறுவனங்களுக்கும் தெரிவிக்க வேண்டும் என்று கோரப் பட்டாலும், குறிப்பிட்ட கட்டணங்கள் விதிக்கப்பட வேண்டும்.

(உ) அரசாங்க மருத்துவ அலுவலர்களின் கோரிக்கைகளின் மேல் அரசாங்கப் பணியாளர்களுக்கு மருத்துவ நோய் கண்டு பிடிப்பு சம்பந்தமாகச் சோதனைகள் குன்னூர் பாஸ்ட்சர் நிலையத்தில் இலவசமாகச் செய்யப்படுகின்றன.

*(ஊ) கிராம மருந்தகங்களுக்கும், சமயக் குழு (மிஷன்) மருத்துவ மனைகளுக்கும் செல்லும் பணக்காரராயில்லாத நோயாளிகளிடமிருந்து பெற்ற மாதிரிகள், கிண்டி கிங் நிறுவனத்திலும் அல்லது மருத்துவக் கல்லூரிகளைச் சேர்ந்த இரசாயன முறை ஆய்வுக் கூடங்களிலும் இலவசமாய்ச் சோதனை செய்யப்படும்.

43. செலவுகளை வசூலிப்பதற்குச் சிவில் வழக்கு.—மருத்துவ மனைச் செலவுகளின் நிலுவைப் பாக்கிகளை வசூலிப்பதற்கு, அரசாங்கச் சட்ட அலுவலர்களால் அவ்வாறு அறிவுரை கூறப் பட்டால் சிவில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு ஒப்பு அளிப்புத் தா மருத்துவத் துறை இயக்குநர் அதிகாரமளிக்கப் பட்டிருக்கிறார்.

44. மத்திய அரசாங்கப் பணியாளர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் மருத்துவ உதவி.—

1. மாநில அரசாங்கத்தால், மத்திய அரசாங்கத்தின் பணியாளர்களுக்குத் தற்சமயம் அடியிற்கண்ட விகிதங்களில் மருத்துவப் பணிகள் செய்யப்படுகின்றன :—

(i) மாநிலத்தில் தங்கியுள்ள அல்லது மாநிலத்தின் வழியாய்ச் செல்லும் மத்திய அரசாங்கப் பணியாளர்களுக்கு அரசாங்க மருத்துவ அலுவலர்களால் மருத்துவ உதவியும்,

(ii) மாநில அரசாங்க மருத்துவ மனைகளில் மத்திய அரசாங்கப் பணியாளர்களுக்குச் சிகிச்சையும்,

(iii) மத்திய அரசாங்கப் பணியாளர்களுக்கு விடுப்புக்கும் மற்றவற்றிற்கும் மாநில மருத்துவ அலுவலர்களாலும் மருத்துவக் கழகங்களாலும் மருத்துவச் சான்றிதழ்கள் அளித்தலும் ஆகும்.

குறிப்பு.—(1) இனங்கள் (i) (ii) இனங்களைப் பற்றி கீழே சொல்லப்பட்டுள்ள அறிவுரைகள் (அ) ரயில்வே பணியாளர் தொகுதியிலுள்ளவர்களைத் தவிரவும், (ஆ) கீழ்நிலைப் பணியாளர் தொகுதியிலுள்ளவர்களைத் தவிரவும் எல்லா மத்திய அரசாங்கப்

*(அ. ஆ. பலவகை எண் 1136, பொ. சு. 27—5—1943ம் தேதியிட்டது.)

பணியாளர்களுக்கும் பொருந்தும். மேலே (iii) ஆவது இனம் பற்றிய விதிகள் சிவில் மருத்துவ விதித் தொகுப்பிலும் 1944 ஆம் ஆண்டு மத்தியப் பணியாளர்கள் (மருத்துவ உதவி) விதிகளிலும் காணப்படும்.

*(2) பணியாளர்களின் அரசாங்க ஈட்டுறுதி இணையத்தின் (கார்ப்பரேஷன்) பணியாளர்கள் மருத்துவ உதவிக்கும் சிகிச்சை யளிப்பதற்கும் மத்திய அரசாங்கப் பணியாளர்களைப் போலவே நடத்தப்படுவார்கள். மத்திய அரசாங்கப் பணியாளர்களுக்கும் அவர்கள் குடும்பங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரமளிக்கப் பட்ட மருத்துவ உதவியாளர்களே இணையத்தின் (கார்ப்பரேஷனின்) பணியாளர்களுக்கும் அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளர்களாவார்கள்.

(2) (அ) மருத்துவ உதவி நோக்கங்களுக்காக அரசாங்கப் பணியாளர்கள் அடியிற் காட்டியுள்ளபடி மூன்று தொகுப்புகளாக வகுக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஒவ்வொரு தொகுப்புக்கும் அதிகாரமளிக்கப்பட்டுள்ள மருத்துவ உதவியாளர் அதற்கு நேரே சொல்லப்பட்டிருக்கிறது.

| | மத்திய அரசாங்கப் பணியாளர்களின் வகுப்புகள். | அதிகாரமளிக்கப் பட்ட மருத்துவ உதவியாளர். |
|---|---|---|
| | (1) | (2) |
| தொகுப்பு I .. | I ஆவது வகுப்புப் பணியாளர் தொகுதிக்குச் சேர்ந்த அல்லது மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய்களுக்குக் குறைவாயில்லாத சம்பளத்தையுடைய அரசாங்கப் பணியாளர். | மாவட்டத்தில் தம் அலுவலர்களைக் கவனிக்க மாநில அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அந்த மாவட்டத்தின் தலைமை மருத்துவ அலுவலர். |
| தொகுப்பு II .. | I ஆவது வகுப்புப் பணியாளர் தொகுதிக்குச் சேராது மாதம் ஒன்றுக்கு 500 ரூபாய்களுக்குக் குறைவாயும், ஆனால் 150 ரூபாய்களுக்கு அதிகமாயும் சம்பளம் பெறும் அரசாங்கப் பணியாளர்கள். | அந்த இடத்தில் தம் அலுவலர்களைக் கவனிக்க அரசாங்கத்தால் அல்லது மருத்துவத் துறை இயக்குநரால் நியமிக்கப்பட்டுள்ள உதவி அறுவை மருத்துவர் வரிசையிலுள்ள ஒரு அலுவலர். |

*(அ. ஆ. பலவகை எண் 2135 சு. 3—7—1952-ம் தேதியிட்டது.)

| | மத்திய அரசாங்கப் பணியாளர்களின வகுப்புகள். | அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர். |
|---|---|---|
| | (1) | (2) |
| தொகுப்பு III .. | மற்ற எந்த மத்திய அரசாங்கப் பணியாளர். | அம்மாதிரியில் நியமிக்கப்பட்டுள்ள உதவி மருத்துவர் அல்லது உதவி மருத்துவர் வரிசைக்கு தாழ்ந்ததல்லாத வேறு மருத்துவ அலுவலர். |

44. (2) (ஆ) மேலே I-ஆவது தொகுதியில் சொல்லப்பட்ட அலுவலர்கள், அதிகாரம் பெற்ற மருத்துவ அலுவலரால் தேவையென்று கருதப்படும் மாவட்டத்தின் யாதொரு அரசாங்க மருத்துவ மனையில் நோய் கண்டுபிடிக்கும் நோக்கத்திற்காகவுள்ள, நோய்க் கண்டுபிடிப்பு, பாக்டீரியா எக்ஸ் கதிர் சோதனைகளும் அல்லது மற்ற சோதனை முறைகளும் உட்பட அதிகாரம் பெற்ற மருத்துவ அலுவலர் தேவை என்று கருதும் மருத்துவ உதவிகளை மருத்துவ மனையில் அல்லது தமது இருப்பிடத்தில் பெறுவதற்கு உரியவராவார். மேலும் அவர்கள் ஒரு சிறப்பறிஞருடன் அல்லது இந்த மாநிலத்தில் உள்ள அரசாங்கப் பணியிலுள்ள வேறு மருத்துவ அலுவலருடன் ஆலோசனை நடத்துதல் தேவையென்று அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளர் சான்று அளித்தால் அந்தச் சிறப்பறிஞர் அல்லது மருத்துவ அலுவலர், அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளருடன் கலந்து தீர்மானிக்கும் அந்த அளவிலும் முறையிலும் ஆலோசனை பெறுவதற்கும் உரியவராவார்கள்.

(இ) வேறு எந்த அரசாங்கப் பணியாளருக்கும் மருத்துவ மனையிலும் அல்லது அவர் இருப்பிடத்திலேயே தங்கி இருக்கும்படி கட்டாயப்படுத்தக்கூடிய நோய் ஏற்பட்டிருந்தால் அவருடைய இருப்பிடத்திலும் உதவியளிப்பது அனுமதிக்கப்பட்டிருக்கிறது. நோய் கண்டுபிடிக்கும் நோக்கத்திற்காக மிகவும் அண்மையில் இருக்கும் அரசாங்க மருத்துவ மனையில் உள்ள சோதனை முறைகளும் அந்த அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளர் தேவையென்று கருதும் ஒரு சிறப்பறிஞருடன் அல்லது அந்த மாவட்டத்திலுள்ள அரசாங்க மருத்துவ அலுவலர் வேறொருவருடன் ஆலோசனை பெறுதலும் அந்தச் சிறப்பறிஞர் அல்லது மருத்துவ அலுவலர் அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளருடன் கலந்து

தீர்மானிக்கும் அந்த அளவிலும், முறையிலும் ஆலோசனை பெறுதலும் அவ்வுதவியில் சேர்ந்ததாகும்.

(ஈ) இருக்கை வசதி—மருத்துவ உதவியின் நோக்கங்களுக்காக மத்திய அரசாங்கப் பணியாளர்கள், அலுவலர்கள் அல்லாதவர்களைப் போல் பாவிக்கப்படுகிறார்கள். அலுவலர்களல்லாதவர்களுக்குச் சாதாரணமாக அளிக்கும் இடவசதியே அவர்களுக்கும் அளிக்கப்படலாம். ஒரு நோயாளி தனிப் பகுதியில் சேர விரும்பி அதில் சேர்க்கப்பட்டால் அந்தத் தனிப் பகுதிக்குச் செலுத்த வேண்டிய மொத்தக் கட்டணமும் இந்திய அரசாங்கம் செலுத்திவிட்டு அந்த அரசாங்கம் நோயாளியிடமிருந்து அவர்கள் தக்கது என்று கருதும் இடவசதிக்குள்ள கட்டணத்தை நோயாளியிடமிருந்து வசூலிக்கலாம். இந்திய அரசாங்கம் அவர்களுடைய பணியாளர்களுக்குப் பொருந்தக்கூடிய இடவசதியைப் பற்றித் தங்கள் யுக்தத்தின்படி கட்டளைகள் பிறப்பிப்பார்கள். விதிகளில் 19 (2) ஆவது விதியின் கீழ் மாநில அரசாங்கப் பணியாளர்களின் பல்வேறான வகுப்புகளுக்கு ஏற்படுத்தப்பட்ட இடவசதியின் இயல்பு மத்திய அரசாங்கப் பணியாளர்களுக்கு அப்படியே பொருந்தாது.

44. (3) (i) ஒரு அரசாங்கப் பணியாளர் அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளரால் இலவசமாக மருத்துவ உதவி அளிக்கப்பட உரிமையுள்ளவராவார்.

(ii) உள்விதி (i) இன் கீழ் ஒரு அரசாங்கப் பணியாளர் இலவச மருத்துவ உதவி பெற உரிமையுள்ளபோது அந்தச் சிகிச்சையின் சம்பந்தமாய் அவரால் செலுத்தப்பட்ட யாதொரு தொகையும், அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளரின் எழுத்து மூலமான சான்றிதழை இதற்காகத் தாக்கல் செய்தால் மத்திய அரசாங்கத்தால் ஈடு செய்யப்படும்.

(4) (i) ஒரு நோயாளி நோய்வாய்ப்படும் இடம் அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளரின் தலைமையிடமாயில்லாதபோது,—

(அ) அந்தத் தலைமையிடத்திற்குச் செல்லுவதற்கும் அங்கிருந்து திரும்பி வருவதற்குப் பயணப்படி பெற நோயாளி உரிமையுடையவராவார்.

(ஆ) நோயாளி பயணம் மேற்கொள்வதற்குத் தகுதியில்லாதபடி அவ்வளவு நோயுள்ளவராயிருந்தால் அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளர் அந்த நோயாளி இருக்கும் இடத்திற்குச்

செல்லுவதற்கும் அவ்விடமிருந்து திரும்பி வருவதற்கும் பயணப் படிக்கு உரிமையுடையவராவார்.

(i) உள்விதி (i) இன் கீழ்ப் பயணப்படிக்கான விண்ணப் பங்களை அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளருடைய சான்றி தழோடு அனுப்ப வேண்டும். அச் சான்றிதழில் மருத்துவ உதவி அவசியமாய் இருந்தது என்றும், விண்ணப்பம் உள்விதியின் (ஆ) பகுதியின் கீழ் அனுப்பப்பட்டால் அந்த நோயாளி பயணம் செய்ய முடியாதபடி அவ்வளவு நோயுள்ளவராயிருந்தாரென்றும் எழுதப் பட்டிருக்க வேண்டும்.

(5) (i) அதிகாரம் பெற்ற மருத்துவர் ஒரு நோயாளியின் நிலைமை ஆபத்தானதாகவும் அல்லது தனிப்பட்ட தன்மையுடைய தாகவும் இருக்கின்றதென்றும் அதனால் தன்னைத் தவிர மற்றொரு வருடைய மருத்துவ உதவியும் நோயாளிக்குத் தேவையான தென்றும் அல்லது நோயாளிக்கு வெறி விலங்குக்கடி மருத்துவம் தேவையானதென்றும் கருதினால் அவர் இந்த மாநிலத்தின் தலைமைச் செயல் மருத்துவ அலுவலரின் ஏற்பை நோயாளியின் உடல் நலனுக்கு மிகவும் அபாயம் வருவிக்கக் கூடியதாயிருந்தா லொழிய இது முன்கூட்டியே பெறவேண்டும்.

(அ) அவர், எவருடைய மருத்துவ உதவி தேவைப்படு கிறதோ அத்தகைய அண்மையில் உள்ள சிறப்பறிஞரிடம் அல்லது ஏனைய மருத்துவ அலுவலரிடம் (2) ஆம் விதியின் (இ) பகுதியின் ஏற்பாட்டின்படியும், அல்லது வெறி விலங்குக்கடி மருத்துவச் சிகிச்சையாயிருந்தால் மாநிலத்தில் அந்தச் சிகிச்சையுள்ள மிகவும் அண்மையிலுள்ள இடத்திற்கும் நோயாளியை அனுப்பலாம் அல்லது,

(ஆ) அந்த நோயாளி பயணம் செய்ய முடியாதபடி அவ்வளவு நோயுடையவராயிருந்தால் அந்தச் சிறப்பறிஞரை அல்லது மருத்துவ அலுவலரை நோயாளியை வந்து பார்க்கும்படி அழைக்கலாம்.

(ii) உள்விதி (i) இன் (அ) பகுதியின் கீழ் அனுப்பப் பட்ட ஒரு நோயாளி அதற்காக அதிகாரம் பெற்ற மருத்துவ உதவி யாளரின் இதற்கான எழுத்து மூலமாக ஒரு சான்றிதழைத் தாக்கல் செய்வதன் பேரில், சிறப்பறிஞரின் அல்லது மருத்துவ அலுவலரின் தலைமை இடத்திற்குச் செல்வதற்கும் அல்லது வெறி

விலங்குக் கடி மருத்துவச் சிகிச்சையிடத்திற்குச் செல்வதற்கும் பயணப்படி பெற உரிமையுடையவராவார்.

(iii) உள்விதி (i) இன் (ஆ) பகுதியின் கீழ் வரவழைக்கப் பட்ட ஒரு சிறப்பறிஞர் அல்லது மருத்துவ அலுவலர் அதிகாரம் பெற்ற மருத்துவ அலுவலரின் எழுத்து மூலமான சான்றிதழை இதற்காகத் தாக்கல் செய்வதின் பேரில் நோயாளி உள்ள இடத் திற்கு வருவதற்கும் அவ்விடமிருந்து திரும்பிச் செல்வதற்கும் பயணப்படி பெற உரிமையுடையவராவார்.

6. (i) ஒரு அரசாங்கப் பணியாளர்—

I சிகிச்சையை,

(அ) தேவையானதும் தக்கதுமான சிகிச்சை கிடைக்கக் கூடும் என்று அதிகாரம் பெற்ற மருத்துவ அலுவலர் கருதுகின்ற, நோயேற்பட்ட இடத்திலும் அல்லது அதற்கு அண்மையிலுள்ள அத்தகைய அரசாங்க மருத்துவ மனையிலும் அல்லது,

(ஆ) உட்பகுதி (அ) இல் சொல்லப்பட்டபடி ஒரு மருத்துவ மனையில்லாவிட்டால், அதிகாரமுள்ள மருத்துவ உதவி யாளர் நோயாளிக்குத் தேவையானதும் தக்கதுமான சிகிச்சை கிடைக்கக்கூடும் என்று கருதும், அந்த இடத்தில் அல்லது அதற்கு அண்மையில் உள்ள அரசாங்க மருத்துவ மனையல்லாத மற்ற மருத்துவ மனையிலும்,

II. மாநிலத்தில் அத்தகைய சிகிச்சையளிக்கும் மிகவும் அண்மையிலுள்ள அரசாங்க மருத்துவ மனையில் வெறிவிலங்குக் கடி மருத்துவச் சிகிச்சையையும், இலவசமாகப் பெற உரிமை யுடையவராவார்.

(ii) ஒரு அரசாங்கப் பணியாளர் உள்விதி (i)-ன் கீழ் ஒரு மருத்துவ மனையில் வெறி விலங்குக்கடி மருத்துவச் சிகிச்சை இலவசமாகப்பெற உரிமையுள்ளவர். அந்தச் சிகிச்சையின் பொருட்டு அவரால் ஏதாவது செலவிடப்பட்டிருந்தால் அதற்காக அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளரால் ஒரு எழுத்து மூலமான சான்றிதழ் தாக்கல் செய்வதன் பேரில் மத்திய அரசாங்கம் அதை ஈடு செய்ய வேண்டும்.

(7) (i) ஒரு தகுந்த மருத்துவ மனை இல்லாமையாலும் அல்லது அது அதிகத் தொலைவில் இருப்பதாலும் அல்லது அந்த நோயின்

கடுமையான தன்மையாலும் ஒரு அரசாங்கப் பணியாளர் மேலே 6 (1) ஆவது உள்விதியின் (1) ஆம் பகுதியில் சொல்லப்பட்டபடி சிகிச்சையளிக்கப்பட மாட்டாது என்று அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளர் கருதினால் அந்த அரசாங்கப் பணியாளர் தம் இருப்பிடத்திலேயே சிகிச்சை பெறலாம்.

(1) உட்பகுதி (i)இன் கீழ், தம் இருப்பிடத்திலேயே சிகிச்சை பெறும் ஒரு அரசாங்கப் பணியாளர் தம்மால் அத்தகைய சிகிச்சை பெற்றதில் ஏற்பட்ட செலவிற்காக, அவர் தம்முடைய இருப்பிடத்தில் சிகிச்சை பெறாமலிருந்தால் இந்த விதிகளின் கீழ் அவர் எந்தவிதமான சிகிச்சையை இலவசமாகப் பெறுவதற்கு உரிமையுள்ளவராக இருந்திருப்பாரோ அந்தவிதமான சிகிச்சையின் செலவுத் தொகைக்குச் சமமாக ஒரு தொகையைப் பெற உரிமை யுள்ளவராவார்.

(iii) உள்விதி (ii) இன் கீழ் எற்படக்கூடிய தொகை களுக்கு உரிமைக் கோரிக்கைகள் அதிகாரம் பெற்ற மருத்துவ உதவியாளரின் எழுத்து மூலமான சான்றிதழுடன் சேர்ந்து அனுப்பப்பட வேண்டும். அச்சான்றிதழில்

(அ) உள்விதி (ii) இல் சொல்லப்பட்டுள்ள அவர் கூறிய கருத்திற்கான காரணங்கள் ;

(ஆ) உள்விதி (ii) இல் சொல்லப்பட்டுள்ளதைப் போன்ற சிகிச்சையின் செலவு ;

8. (i) இவ் விதிகளின் கீழ் இலவச மருத்துவ வருகைக்கு அல்லது சிகிச்சைக்கு உரிமையுள்ள ஒரு நோயாளி சம்பந்தமாய் மருத்துவ வருகை அல்லது சிகிச்சையில் சேராத ஆனால் அது சம்பந்தமாய் எற்கப்பட்ட பணிகளுக்குரிய கட்டணங்கள் அதிகாரமளிக்கப்பட்டுள்ள மருத்துவ உதவியாளரால் நிர்ணயிக் கப்பட்டு நோயாளியால் செலுத்தப்பட வேண்டும்.

(ii) யாதொரு பணியும் மருத்துவ உதவிக்கு அல்லது சிகிச்சைக்குச் சேர்ந்ததா இல்லையா என்ற யாதொரு கேள்வி எழுந்தால் அது அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டும். அதில் அரசாங்கத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.

9. மத்திய அரசாங்கத்தின் பணியாளர்களுக்கு அவர்கள் இருப் பிடத்தில் அல்லது மருத்தவ அலுவலர் இருப்பிடத்தில் அல்லது ஆலோசனைக் கூடத்தில் மருத்துவ உதவிகளுக்காகக் கட்டணங் களின் விகிதம் அடியிற் கண்டபடியாகும்.

(அ) மருத்துவ வருகைக்குக் கட்டணங்கள்.

| அரசினர் பணியாளரின் சம்பளம். | முதல் ஆலோசனை. | பிந்திய ஆலோசனை. | உயர் தகுதிக்கு மருத்துவ ஆய்வு. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1 மாதம் ஒன்றுக்கு ரூபாய் 500-ம் மேற்கொண்டும் (1-ஆம் வகுப்பு அலுவலர்கள்). | 16 | 10 | 16 |
| 2 மாதம் ஒன்றுக்கு 151 ரூபாய் முதல் 499 ரூபாய்கள் வரை. | 5 | 3 | 3 |
| 3 மாதம் ஒன்றுக்கு 150 ரூபாய்க்கும் அதற்குக் குறைவும். | 3 | 2 | 3 |

(ஆ) ஊசி மருந்துகளுக்குக் கட்டணங்கள்.

| அரசினர் பணியாளர்களின் சம்பளம். | நரம்பு மூலமாய். | தசை மூலமாய. | தோலிற்குக் கீழாக. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | ரூ. | ரூ. | ரூ. |
| 1-ஆம் வகுப்பு அலுவலர்கள் 500 ரூபாய்களுக்கு மேற்கொண்டும். | 5 | 3 | 2 |
| 151 ரூபாய்கள் முதல் 499 ரூபாய்கள் வரை. | 3 | 3 | 2 |
| 150 ரூபாய்களும் குறைவும் .. | 2 | 2 | 2 |

*குறிப்பு.—மத்திய அரசினர் பணியாளர்கள் அடியிற் காணும் தகுதியுள்ள மருத்துவ அலுவலர்களால் மருத்துவ சிகிச்சை பெறவும் ஊசி மருந்து போடப்படுவதற்கும் உரிமையுள்ளவர்களாகிறார்கள்.

| | |
|---|---|
| (i) 500 ரூபாய்களும் அதற்கு மேற்கொண்டும் சம்பளம் பெறும் மத்திய அரசுப் பணியாளர்கள். | —சிவில் மருத்துவ அலுவலர்கள். |
| (ii) 151 ரூபாய்கள் முதல் 499 ரூபாய்கள் வரை வருமானம் உள்ளவர்களும் அதற்குக் குறைவாகப் பெறுபவர்களுமான மத்திய அரசுப் பணியாளர்கள். | —உதவி மருத்துவ அலுவலர்கள். |

* (அரசாங்கக் குறிப்பாணை எண். 767/625 எச் 3. சு. 25—8—1952 ஆம் தேதியிட்டது.)

44. (10) **மருத்துவ மனைத் தங்கு செலவுகளுக்கு விதிப்பு.**— மருத்துவ மனை தங்கு செலவுகள் விதிப்பதற்கான நோக்கங்களுக்காகவும் எக்ஸ் கதிர் (கதிர் சிகிச்சை) இதர கதிர் ஆய்வுகள், சிகிச்சைகள் முதலியவவைகளுக்காகவும் மத்திய அரசுப் பணியாளர்கள், அலுவலர்கள் அல்லாதவர்கள் போலவே நடத்தப்பட வேண்டும். பொதுமக்களுக்கு விதிக்கப்படும் விகிதாசாரத்திலேயே அவர்களுக்கும் விதிக்க வேண்டும். பொது மருந்து வாங்கிச் செல்பவர்களுக்கும் அம்மாதிரியே கட்டணங்கள் விதிக்கப்பட வேண்டும்.

*சென்னை அரசினர் மருத்துவ நிலையங்களில் சேர விரும்பும் மத்திய அரசாங்கப் பணியாளர்கள் விதிப்புகளை (மருத்துவ மனைகளில் தங்குவது எக்ஸ்ரே, கதிர் சிகிச்சை, தனிப்பட்டதும் விலையுயர்ந்த மருந்துகளின் விலை முதலியவைகளுக்காகவும்) மருத்துவ மனை அதிகாரிகளுக்கு முதலில் செலுத்திவிட்டு மத்திய அரசாங்கத்திடமிருந்து திரும்ப ஈடு செலுத்தப் பெற வேண்டும்.

(ii) **மத்திய அரசுப் பணியாளர்களின் குடும்பங்கள்.**— மத்திய அரசுப் பணியாளர்களின் குடும்பங்கள், அந்த அரசுப் பணியாளர்கள் விஷயத்தில் ஒவ்வொருவருக்கும் பொருந்தும் விதிகளில் விளக்கப்பட்டுள்ளபடியே மருத்துவ மனைகளில் செலவில்லாமல் இலவசமாக மருத்துவ வருகைக்கும் சிகிச்சைக்கும் உரிமையுள்ளவர்களாவார்கள். இந்தச் சலுகை அரசுப் பணியாளர் இலவசச் சிகிச்சைக்கு உரிமையுடைய ஒரு மத்துவ மனையைத் தவிர வேறு இடங்களில் மருத்துவ வருகைக்குப் பொருந்தாது. 'குடும்பம்' என்ற சொல் ஒரு அரசுப் பணியாளரின் மனைவியையும், சட்டப்படியான சிறுவர்களையும் அவருடன் வசித்துக் கொண்டு அவருடைய முழுப் பாதுகாப்பிலுள்ள ஒன்றுவிட்ட சிறுவர்களையும் குறிக்கும்.

ஒரு மத்திய அரசுப் பணியாளரின் குடும்பத்தின் ஒரு உறுப்பினருக்கு அளிக்கப்பட்ட மருத்துவ வருகைக்கு சிகிச்சை சம்பந்தமான பணிக்குமான செலவுகளை மருத்துவ மனை அதிகாரிகளுக்கு அவர் செலுத்த வேண்டும். மருத்துவ மனைப் பட்டியல்களை அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரின் மேலொப்பக் கையெழுத்துடன் தாக்கல் செய்தவுடன் அதன் மேல் மத்திய அரசு அந்தச் செலவை ஈடு செய்யும்.

---

* (அ. ஆ. பலவகை எண் 3402, க. 10—10—1951 ஆம் தேதியிட்டது.)

இந்த நோக்கத்திற்காக, ஒரு அரசாங்க மருத்துவமனை யென்பதில் உள்ளாட்சி அதிகாரியால் வைத்து நடத்தப்படும் ஒரு மருத்துவமனையும் அடங்கும்.

அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளருடன் ஏற்பாடு செய்துகொண்டு அவருடைய ஆலோசனை அறையில் செய்யப்பட்ட மருத்துவ உதவியும் சிகிச்சையும், இலவச மருத்துவ உதவியும் சிகிச்சையுமான இவற்றின் நோக்கங்களில் ஒரு மருத்துவ மனையில் செய்த மருத்துவ உதவியும் சிகிச்சையும் போலவே பாவிக்கப்படும். குடும்பங்களுக்கு இலவச மருத்துவ உதவியும் சிகிச்சையும் சென்னையில் பெண்களுக்கும் சிறுவர்களுக்குமான கஸ்தூரிபாய் காந்தி மருத்துவ மனையிலும், சென்னை பெண்கள் சிறுவர்கள் ஆஸ்பத்திரியிலும்கூட அனுமதிக்கப்பட்டுள்ளன. மருத்துவச் சிகிச்சை என்னும் சொல் ஒரு அரசுப் பணியாளரின் மனைவி மருத்துவ மனையில் பிள்ளைப் பேற்றிற்காக இருப்பதையும் குறிக்கும். அந்த அலுவலர் வீட்டில் பிள்ளைப் பேறு காலத்தின் முன்னுள்ள சிகிச்சையும் பிள்ளைப் பேறு காலத்திற்குப் பின்னுள்ள சிகிச்சையும் இதில் சேர்க்கப்படமாட்டா.

## இராணுவப் பணியாளர்கள்.

அரசாங்கத்தின் கீழ் உள்ள சிவில் மருத்துவ மனைகளில் உரிமை பெற்றுள்ள இராணுவப் பணியாளர்களுக்கும் ஒவ்வொன் றிற்கும் சம்பந்தப்பட்ட மருத்துவமனை அட்டவணை விகிதங்களின் படி செலவுத் தொகைகள் செலுத்தப்படுவதன் மேல் சிகிச்சை யளிக்கப்படுவதற்கு ஏற்பாடுகள் உள்ளன. அவை, கப்பல், தரை, விமானப் படைகளைச் சேர்ந்த எல்லா பிரிட்டிஷ், பிரிட்டிஷ் அல்லாத நபர்களுக்கும், இந்தியாவில் படை மருத்துவப் பணி யாளர் தொகுதிகளுக்காக உள்ள ஒழுங்குமுறை விதிகளில் 259ஆம் பத்தியில் சொல்லப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் அத்தகைய சிகிச்சைக்குத் தகுதியுடைய அவர்களுடைய குடும்பங்களுக்கும் பொருந்தும்.

* ஒவ்வொரு நோயாளி சம்பந்தமாய் வசூலிக்க வேண்டிய செலவு தொகைகள் (20-ஆம் விதியின் கீழ் உள்ள குறிப்புப் பொருந்தக் கூடிய எக்ஸ் கதிர், மின் சிகிச்சை முதலியவைகள் தவிர)

---

* (அ.ஆ. என் 3812 பொ. சு., 3—12—1952-ம் தேதியிட்டது.)

அரசினர் பணியாளரல்லாத நோயாளிகளுக்குப் பொருந்தக்கூடிய அதே செலவு தொகைகளாகும். அந்தச் செலவுப் பட்டி சம்பந்தப் பட்ட மருத்துவ நிலையத்தின் தலைவரால் மிகவும் அண்மையிலுள்ள இராணுவ மருத்துவ மனையின் அதிகாரிக்கு ஒவ்வொரு மாத முதலிலும் அனுப்பப்பட வேண்டும். அந்த அதிகாரி சிவில் மருத்துவ மனைப்பட்டியலின் ஆதாரவின் மேல் ஒரு சில்லறைச் செலவுப்பட்டியலைத் தயாரித்து, அதைத் தற்காப்புக் கணக்கு களின் கட்டுப்பாடு அதிகாரிக்கு, சென்னைத் தலைமையிடத்தின் மூலமாய் பணம் செலுத்துவதற்கு அனுப்புவார்.

இந்தியாவில் இராணுவத்தின் மருத்துவப் பணியாளர் தொகுதிகளின் ஒழுங்குமுறை விதிகளில் 259 ஆம் பத்தியின் கீழ் இலவச மருத்துவ உதவிக்கு, அடியிற் கண்ட தகுதியுள்ள அலுவலர் களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், உரிமையுடையவர்களாக மாட்டார்கள் :—

(1) இராணுவச் செவிலித் தாயார் பணியாளர் தொகுதியைச் சேர்ந்தவர்.

(2) ஒரு கீழ் நிலை ஆணை (கமிஷன்) பெற்ற அலுவலர்.

(3) ஒரு இந்தியருக்குள்ள மற்ற வரிசையில் உள்ளவர்கள்.

(4) போரிடாத துறைகளில் சேர்க்கப்பட்டுள்ளவர்.

இவற்றில் தற்காப்புத் துறை, பணம் செலுத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதில்லை. அதனால் இச் செலவுகள் சம்பந்தப்பட்ட வர்களிடமிருந்து நேரே வசூலிக்கப்பட வேண்டும்.

**ஐக்கிய நாடுகள் பணியாளர் தொகுதிகளைச் சேர்ந்த நபர்களின் மருத்துவச் சிகிச்சை.**—ஒரு சிவில் மருத்துவ மனையில் ஐக்கிய நாடுகளின் பணியாளர் தொகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு மருத்துவச் சிகிச்சையளிக்க அவசியமாயுள்ளவற்றில் அவர்கள் சிகிச்சைக்கான செலவுத் தொகை, சிவில் மருத்துவ மனைகளில் சிகிச்சையளிக்கப்படும். பிரிட்டிஷ் இராணுவத்தினர்களின் விஷயத்தில் கையாளப்படும் முறைக்கிணங்கத் தற்காப்புப் பணி யாளர்கள் மதிப்பீடுகளுக்குப் பற்று வைக்கப்படவேண்டும். இந்தப் பற்றுகள் புதிய முக்கியத் தலைப்பான 3 எண் (சி)க்கு இராணுவக் கணக்குகளின் கட்டுப்பாடு அதிகாரியால் சரி செய்யப்படும்.

இராணுவ நோயாளிகளுக்கு உணவுக்காகத் தனிப்பட்ட ஏற்பாடு.—சில மருத்துவ மனைகளில் இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் மருத்துவ மனைகளிலிருந்து அவர்கள் விடுவிக்கப்பட்டவுடனே தம் பணிகளைச் செய்யவுதவும் பொருட்டு, சிவில் நோயாளிகளைவிட அதிகத் தாராளமாய் உணவு அளிக்கப்படுகிறார்கள் அதனால் தாராளமான உணவுக்கு ஆண்டுதோறும் நிர்ணயித்துக் குறிக்கப்படும் அதிகச் செலவையும் சாதாரணமாக, அட்டவணை விகிதப்படி, பொதுமக்களுக்கு விதிக்கப்படக்கூடிய மருத்துவ மனை தங்கு செலவுகளோடு சேர்த்து தற்காப்புத் துறையிலிருந்து வசூலிக்க வேண்டியதாகும்.

## வாணிகக் கப்பற் படை.

அரசாங்க மருத்துவ மனைகளில் சிகிச்சையளிக்கப்படும் வாணிகக் கப்பற்படையாட்களும் மேலே சொல்லப்பட்டுள்ளபடி தாராளமான உணவு அளிக்கப்படலாம். அவர்களின் உணவுச் செலவுக்கு இராணுவ நோயாளிகளுக்கு விதிக்கப்பட்டுள்ள விகிதங்களின்படி விதிக்கவேண்டும்.

இந்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் உள்ள தனிப்பட்ட காவல் பணியாளர் (எஸ்.பி.இ.) அமைப்புகளின் மருத்துவச் சிகிச்சை.

*உள்துறை அமைச்சகத்தின் செயல் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள தனிப்பட்ட காவல் பணியாளர் (எஸ்.பி.இ.) அமைப்பைச் சேர்ந்தவர்களுக்கு அதே வரிசையும் தகுதியுமுள்ள மாநில அரசாங்கப் பணியாளர் தொகுதியிலுள்ளவர்களுக்கு ஏற்படக்கூடிய அதே வசதிகள் அளிக்க வேண்டும். மருத்துவ மனை தங்கு செலவுகள் நோக்கத்திற்காக, அவர்கள், அலுவலர்கள் அல்லாதவர்களாக பாவிக்கப்பட்டு அதைச் சார்ந்த செலவு, மத்திய அரசாங்கத்திற்கு, பஞ்சாப் மாநில கணக்காய்வுத் தலைவர் மூலமாக (தற்காப்புப் பணியாளர் தொகுதிகள் மதிப்பீடுகள், பழைய முக்கிய தலைப்பு 4. ஏ என்ற) பற்று வைக்க வேண்டும்.

---

* (அ.ஆ. எண் 1253, பொது சுகாதாரம், 6—4—1949-ஆம் தேதியிட்டது)

**தமிழ்நாடு அரசுக்கு முகவரி செய்துள்ள மனுக்களையும் ஏனைய கடிதங்களையும் அனுப்புவதும் பெறுவதும் பற்றிய கட்டளைகள்.**

I பொருள் விளக்கம்.—இக்கட்டளைகளில் (1) 'அரசு' என்பது, தமிழ்நாடு அரசாங்கம் ஆகும்.

(2) இரங்கங் காட்டுமாறு செய்துகொள்ளும் மனுக்களும் "நிருபங்களும் மனுக்களின் தன்மையுடைய விண்ணப்பங்களும் "முறையீடு" என்பதனுள் அடங்கியவையாகும்.

II கட்டளைகளின் நோக்கம்.—(1) இக்கட்டளைகள் இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவற்றைத் தவிர்த்து அரசுக்கு எழுதிக் கொள்ளும் இயன்றவரை எல்லா மனுக்களுக்கும் பொருந்தும்.

(2) அவை கீழ் உள்ளவற்றிற்குப் பொருந்தா :—

* (அ) பணி நிபந்தனைகளை முறைப்படுத்தும் விதிகளின்கீழ் அல்லது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பதவிகளை வகித்து வருவோர் செய்துகொள்ளும் மனுக்கள்.

† (ஆ) மாநிலச் சட்டப் பேரவையில் முடிவு பெறாத நிலையில் உள்ள சட்ட மூலத்தைப் பற்றிய முறையீடுகள் அத்தகைய மனுக்கள் சட்டப் பேரவையின் நிலை ஆணைகளுக்குட்பட்டவை.

(இ) மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள குற்றவாளிகளால் அல்லது அவர்களுக்காக மேலனுப்பப்படும் மனுக்கள்.

(ஈ) அரசுப் பணியாளர் என்ற முறையில் அவர்களைப் பாதிக்கக் கூடியவற்றைப் பற்றி அரசினரின் ஆட்சிக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பதவிகளில் பணி புரிபவர்கள் அல்லது பணி புரிந்தவர்களால் கவர்னருக்கு முகவரி செய்யப்பட்ட மனுக்கள்.

---

* (அ. ஆ. எண் 271, பொதுப் பணியாளர் தொகுதி, 4—2—1937 ஆம் தேதியிட்டது.)
(அ. ஆ. எண் 1149, பொதுப் பணியாளர் தொகுதி, 6—7—1938 ஆ தேதியிட்டது.)

†(அ. ஆ. எண் 44, பொதுப் பணியாளர் தொகுதி, 9—1—1939 ஆம் தேதியிட்டது.)

இத்தகைய மனுக்கள் கவர்னரால் இது சம்பந்தமாகப் பிறப்பிக்கப் பட்ட தனிப்பட்ட ஆணைகளுக்குட்பட்டவை.

(3) அங்கீகாரம் பெற்ற அரசுப் பணியாளரின் சங்கங்களால் மேல் அனுப்பப்படும் முறையீடுகள் பற்றிய விதிகள் அல்லது ஆணை களுக்கு இக்கட்டளைகள் பொருந்தா.

III (1) ஒரு மனு கையெழுத்தில் இருக்கலாம் அல்லது தட்டச்சு செய்திருக்கலாம் அல்லது அச்சிடப்பட்டதாக இருக்கலாம்.

(2) ஒவ்வொரு மனுவும் மனு செய்பவரால் எழுதப்பட்டுக் கையொப்பம் செய்யப்பட வேண்டும். அவ்வாறின்றி முறையீடு செய்பவர்கள் பலராக இருப்பின் அவர்களில் ஒருவர் அல்லது ஒன்றுக்கு மேற்பட்டவர்களால் கையெழுத்திடப்பட வேண்டும்.

IV ஒவ்வொரு மனுவிலும்—

(அ) முக்கியமாகச் சொல்லப்பட வேண்டியவை யாவும் அவற்றிற்கு ஆதாரமாக எடுத்துரைக்க வேண்டியவையும் சொல்லப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) எழுதப்பட்டிருக்க வேண்டியவை யாவும் எழுதப்பட் டிருக்கவேண்டும்.

(இ) அரசாங்க அதிகாரியால் எழுத்து மூலமாகப் பிறப் பிக்கப்பட்ட ஆணையை எதிர்த்துக் குறைகூறி முறையீடு செய்தால், அந்த ஆணையின் நகலும் சார்நிலை அதிகாரியால் பிறப் பிக்கப்பட்ட ஆணை அவருக்கு அனுப்பிய மனு ஆகியவற்றின் நகல் களும் குறைகாணும் முறையீட்டுடன் சேர்த்து அனுப்பப்பட வேண்டும்.

(ஈ) குறிப்பான வேண்டுகோளுடன் மனு முடியவேண்டும்.

V அரசினரைப் பற்றிக் குறை கூறுவதற்கான ஆதாரம் ஒருவருக்கு இருக்குமாயின், முதலில் அவர் அக்குறை தவிர்க்கப் பட தலை அதிகாரியைக் கேட்டுக் கொள்ளவேண்டும். அத்தலை அதிகாரி குறையைத் தவிர்க்க இயலவில்லை என்றால் அவ்வாறு இய லாதது பற்றி எழுத்து மூலமாக ஆணையை அவர் பிறப்பிக்க வேண்டும். இந்த முடிவும் மனநிறைவு அளிக்காவிட்டால்,

வருவாய்த் துறை வாரியத்திடம் அல்லது மன்றத்திடம் அல்லது எந்த மேல் அதிகாரியின் கட்டுப்பாட்டில் அத்தல அதிகாரி பணியாற்றுகிறாரோ அந்த மேல் அதிகாரியிடம் மனு செய்து கொள்ள முறையீடு செய்பவருக்கு உரிமை உண்டு. அத்தகைய மேலதிகாரி இல்லையாயின் அவர் அரசினருக்கு முறையிட்டுக் கொள்ளலாம்.

அரசினருக்கு அனுப்பப்படும் கடிதங்கள் "தமிழ்நாடு அரசு" அல்லது தமிழ்நாடு அரசுச "செயலாளர்" என்று முகவரி செய்யப்பட வேண்டும். கவர்னருக்கு அல்லது அமைச்சருக்கு முகவரி செய்யப்பட்ட கடிதம் அரசினருக்கு எழுதப்பட்டதென்று கருதக்கூடாது. ஆளுநர் அல்லது அமைச்சர் அக்கடிதம் செயலாளருக்கு அனுப்பத் தகுந்ததென அதை அனுப்பினாலன்றி அக் கடிதம் அரசின் கவனிப்புக்கு வாராது.

VI. மனு செய்தவர் ஒருவர் முதலில் உள்ளூர் அதிகாரிக்கும், வருவாய்த்துறை வாரியத்திற்கும் அல்லது கட்டுப்படுத்தும் மேல் அதிகாரிக்கும் விண்ணப்பம் செய்து கொண்டார் என்று தெரிந்தாலன்றி எப் பொருளைப் பற்றியுமுள்ள ஒரு மனுவை அவரிடமிருந்து அரசினர் பெற்றுக் கொள்ளமாட்டார்கள்.

VII. முறையீடு செய்து கொள்ளும் கட்சிக்காரர்களுக்கு அநீதி அல்லது கொடுமை நேராதவாறு முன்சொன்ன விதிகளை அரசு கட்டாயமாகச் செயற்படுத்துவதற்கு, ஒரு ஆணையினால் பாதிக்கப் பட்ட கட்சிக்காரர்கள் செய்த மனுவின் மீது பிறப்பிக்கப் பெறும் அவ்வாணையின் நகலை விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளும் உரிமையுடையவர் என்பதை அலுவலகங்களின் தலைவர்கள் எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டும். மேல்முறையீடுகள் செய்துகொள்ள முடியாதனவற்றைத் தவிர ஏனையவற்றில் தீர்ப்பு முடிவுக்கான ஆதாரங்கள் சொல்லப்பட்டிருக்க வேண்டும். இதன் நகல் சாதாரணத் தாளில் கட்டணம் ஏதும் இன்றி வழங்கப்பட வேண்டும்.

VIII. மனுக்கள் அவற்றிற்குரியவர்களிடமிருந்து வருமாயின் அவற்றை அரசினர் ஏற்பர். வழக்கறிஞர் அல்லது அதிகாரம் பெற்றவர் பெயரில் வரும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா. ஊர் பேர் இல்லாத மொட்டை மனுக்கள் முற்றிலும் கவனிக்கப் படாமல் உடனே கிழித்தெறியப்படும்.

IX. சங்கங்களாலும் அவற்றைப் போன்ற குழுவினராலும் மேல் அனுப்பப்படும் தீர்மானங்கள் கவனிக்கப்பட மாட்டா. அத்தகைய குழுவினர் தாங்கள் எடுத்துச் சொல்லியவற்றின் மீது நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்று விரும்புவார்களெனில், அவர்கள் எடுத்துச் சொல்லும் ஒவ்வொன்றும் எந்தச் சூழ்நிலையில் எழுந்தது என்ற ஆதாரத்துடன் தெரிவித்துக் கொள்ளக் கூடிய முறையில் மனு அமைக்கப்பட்டு மேல் அனுப்பப்படவேண்டும்.

X. சார்நிலை நியமனங்கள் பகிர்ந்து வழங்கப்படுவதில் அரசினர் எப்போதுமே தலையிடுவதில்லை. ஆதலால் நியமன அதிகாரிகள் அவர் தம் இயற்கைத் திறத்தில் செய்யத்தக்க நியமனங்களுக்காகச் செய்து கொள்ளப்படும் மனுக்கள் எப்போதுமே கவனிக்கப்பட மாட்டா.

XI. அரசினருக்கு மனு செய்துகொள்ள விரும்பும் ஒவ்வோர் அரசுப் பணியாளரும் தனித்தனியாக முறையீடு செய்துகொள்ள வேண்டும்.

இருப்பினும் இவ்விதிகளிலுள்ள யாதொன்றும் கீழ்க்கண்டுள்ளவற்றிற்குப் பொருந்தாது :—

(i) ஒரு பொருளைப் பற்றியே அரசுப் பணியாளர்கள் பலர் மனுவில் கையெழுத்திட்டு முறையிடுதலும் ;

(ii) அரசினரால் அவ்வப்போது ஏற்படுத்தப்படும் விதிகளை அனுசரித்து அங்கீகாரம் பெற்ற அரசுப் பணியாளரின் சங்கங்களால் மேல் அனுப்பப்படும் முறையீடுகளும்.

XII. சிவில் நியமனத்தில் இருக்கின்றவரும் இருந்துவருபவருமாகிய ஒவ்வொருவரும் அத்தகைய நியமனத்தைப் பற்றி அல்லது அத்தகைய நியமனம் முடிந்துவிட்டது பற்றி அரசினருக்கு முறையிட விரும்பினால், அவர் தமக்காக மாத்திரமே மனு அனுப்பிக் கொள்ள வேண்டும்.

XIII. அரசினரின் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பதவியில் இருப்பவர் அல்லது அதில் முன்பு பணியாற்றியவர் ஒருவரால் எழுதப்படும் ஒவ்வொரு மனுவும் அரசினரின்

செயலாளருக்கு முகவரி செய்யப்பட்டு அவர் எந்த அலுவலகத்தை அல்லது அரசாங்கத் துறையைச் சேர்ந்தவராக இருக்கின்றரோ அல்லது இருந்தனரா அந்த அலுவலகம் அல்லது அரசாங்கத் துறைத் தலைவர் வழியாக அரசினருக்குமேல் அனுப்பப்பட வேண்டும்.

XIV, XX அல்லது XXI ஆவது விதியின் கீழ் மனுவைத் திருப்பி அனுப்ப அல்லது மேலனுப்பாமல் நிறுத்திவிட அதிகாரம் உடையவராக இருந்தாலன்றி அலுவலகத் தலைவர் அல்லது துறைத் தலைவர் சம்பந்தப்பட்ட அரசாங்கத் துறையைச் சேர்ந்த செயலாளருக்கு அந்த மனுவை வழக்கமாக அனுப்பும் அலுவலர்கள் வழியாக அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பும்போது அம் மனுவில் கண்டுள்ள வாசகங்கள் முழுதும் சரியாக இருப்பது பற்றியும் அதிலிருந்து உய்த்துணரத்தக்கவை பற்றியும் தான் அவசியமெனக் கருதுகின்ற குறிப்பினை எழுதி அனுப்புதல் வேண்டும். அம் மனுவிற்கு வேண்டிய உள்ளடக்கங்களான பதிவுக் கட்டுகள், மனு செய்தவரால் அனுப்பப்படாதனவும் மனுவைத் தக்கவாறு முடிவு செய்வதற்கான முறையில் பார்க்கத்தக்கனவாகவுமுள்ள பதிவு மனுவுடன் அனுப்ப வேண்டும்.

XV கர்னாடக உதவிப் பணம் பெறுபவர்களுடைய மனுக்களை அல்லது கர்னாடக உதவிப் பணம் என்னும் பொருள் பற்றிய மனுக்களை கர்னாடக உதவிப் பணம் கொடுக்கும் தலைவர் மூலமாக அனுப்ப வேண்டும்.

XVI. கர்னாடக உதவிப் பணம் பெறுபவர் அல்லாத மற்ற அரசியல் ஓய்வு ஊதியத் தொகை பெறுபவர்களும், கண்டிய ஓய்வுத் தொகை பெறுபவர்களும் செய்து கொள்ளும் மனுக்களையும் அல்லது கர்னாடகம் அல்லாத மற்ற அரசியல் ஓய்வு ஊதியத் தொகை பெறுபவர்கள் என்ற பொருள் பற்றிச் செய்துகொள்ளும் மனுக்களையும் மனுச் செய்தவர் எந்த மாவட்டத்தில் வசிக்கிறரோ அந்த மாவட்ட ஆட்சியாளர் மூலமாக மேல் அனுப்ப வேண்டும்.

XVII. கீழே கண்டுள்ளவற்றில் அரசினருக்குச் செய்துகொள்ளப் படும் மனுக்கள் உடனடியாய் மறுக்கத்தக்கனவாகும் :—

(1) மனு செய்பவர் மேலே உள்ள விதிகளுக்கு இணங்க முறையிட்டுக் கொள்ளாதாவையும் ;

(2) எழுத்து விளங்காமல் அல்லது பொருள் விளங்காமல் இருப்பின் அல்லது மனுவின் வாசகம் அரசினிடம் விசுவாசம் இல்லாமை அல்லது அவமரியாதை அல்லது முறையின்மை ஆகிய வற்றைப் புலப்படுத்தக் கூடியவையும்;

(3) முன்னர் தமிழ்நாடு அரசினரால் அல்லது இந்திய அரசினரால் முடிவு செய்யப்பட்டிருந்து இப்போது சொல்லப் பட்டதை மறுமுறை ஆலோசித்துப் பார்ப்பதற்கான ஆதாரங் களுடைய புதிய உண்மைகள் அல்லது நிலைமைகளோடு கூடிய ஆதாரங்கள் இல்லாதவையும்;

(4) ஒருவர் பண உதவி அல்லது வேறு உதவி கேட்டு (அ) அதைப் பெறுவதற்குத் தனக்கு உரிமையில்லையெனத் தெளிவாய்த் தெரிந்தும் அல்லது பொருளற்ற ஒரு தன்மையை ஆதாரவாகக் கொண்டு உரிமை கொண்டாடியும்; அல்லது

(ஆ) ஆலோசித்துச் செய்வதற்கே இயலாதவாறு அத் துணைக் காலந்தாழ்த்துச் செய்துக்கொள்ளப்பட்ட மனுவும்;

(5) (அ) யாதேனுமொரு விதியை அல்லது நியமன விண்ணப்பம் சம்பந்தமான அறிவிக்கையை அனுசரிக்காத வகையில் அரசினரின் நிருவாகக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட பதவி களில் அமர்த்துமாறு கேட்டுக் கொள்ளும் விண்ணப்பமாக உள்ள மனுவும்;

(ஆ) அரசினர் நிருவாகக் கட்டுப்பாட்டின் கீழுள்ள பதவி களில் வேலை பார்ப்பவர்கள் அல்லது யாதேனும் ஒரு தொழில், அல்லது நியமனத்திலுள்ளவர்கள் ஆகிய இவர்களுக்கு யாதேனும் ஒரு சட்டம் அல்லது விதியினால் நிர்ணயிக்கப்பட்ட தகுதி களினின்றும் விலக்களிக்க வேண்டிக் கொள்ளும் மனுவும்;

(6) கீழே குறிப்பிடப்பட்டவை ஒழிந்த ஏனைய மற்றவற்றில் நீதி முறையான முடிவை எதிர்த்து மேல் முறையீடாகக் கொடுக்கப்பட்ட மனுவும்:—

(அ) தலையிடுவது அரசினர் விருப்பத்தைப் பொறுத்ததாக உள்ள நீதி முறை முடிவு ஒன்றின் மீது செய்துகொள்ளும் மேல் முறையீடும்;

(ஆ) அரசினர் கட்சிக்காரராக இருந்த ஒரு வழக்கில் நீதி முறையான முடிவை எதிர்த்துச் செய்து கொள்ளப்படும் மேல் முறையீடும் ;

(இ) 1898 ஆம் ஆண்டு V ஆவது மத்திய அரசாங்கச் சட்டமாகிய கிரிமினல் நடைமுறை விதித் தொகுப்பு XXIX ஆவது அத்தியாயத்தின் தண்டனை ஆணையை நிறைவேற்ருமல் நிறுத்தி வைக்க அல்லது குறைக்க மன்ருடிக் கேட்கும் மனுவும்;

(7) யாதேனுமொரு சட்டத்தினுல் அல்லது சட்டத்தின் அதிகாரமுடைய விதியினுல் இறுதியானதென்று உறுதியாக்கப் பட்ட முடிவை எதிர்த்து முறையீடு செய்து கொள்ளப்படும் மனுவும்;

(8) குறை தீர்வுக்காக முறையிட்டுக் கொள்வதற்கான கால வரை கடந்துவிட்டபோதிலும் அல்லது கடக்காதபோதிலும் மனுவில் உள்ள பொருள் பற்றி வேறுவகையான அல்லது குறிப் பிட்ட ஒரு தீர்வினைப் பெறுவதற்குச் சட்டம் இடம் அளிக்கின்ற போதும் ;

(9) அரசினரது நிருவாகக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட ஒரு பதவியில் பணியாற்றும் ஒருவருக்கு வருங்காலத்தில் கிடைக்கக் கூடிய ஓய்வுத் தொகையைப் பற்றி மேலே கூறப்பட்ட (14) ஆவது பிரிவின் (அ) இணைப்புப் பகுதியின் கீழ்க் குறிப்பிட்டுள்ள யாதேனுமொரு விதி, ஆணை அல்லது ஒப்பந்தத்துக்கு இணங்காத வேறு வகையில் மனுவை மேல் அனுப்பும்போதும் ;

(10) சட்டம் அல்லது விதியினுல் அளிக்கப்பட்ட விருப் புரிமையை அரசினர் பயன்படுத்தத் தவறியதற்காகச் செய்து கொள்ளும் மேல்முறையீடும்;

(11) உரிமையின் மீதல்லாது ஆதரவு காட்டு மாற்ருன் மேல் நடவடிக்கை கோரிச் செய்யப்படும் மனுவும்;

(12) மனுச் செய்வதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு சார் நிலை அலுவரால் அனுப்பப்பட்ட ஆணையை எதிர்த்துத் தாமதத் திற்குத் தக்க விளக்கமின்றி செய்துகொள்ளும் முறையீட்டு மனுவும்;

(13) (அ) தகுதிகாண் பருவத்தினரது தகுதி பெறுவதற் கான காலம் நடந்துகொண்டிருக்கும்போது ; அல்லது

(ஆ) ஒப்பந்தத்தின் கீழ் அல்லாமல் தற்காலிகமான ஒரு வேலையில் இருக்க அமர்த்தப்பட்டவர் இருக்க வேண்டிய காலம் முடிவடைந்தபின் ; அல்லது

(இ) ஒப்பந்தத்தின் கீழ் வேலையில் அமர்த்தப்பட்டு ஒப்பந்தத்தின் வாசகத்தை அனுசரித்து,

வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டமையை எதிர்த்துச் செய்யப்படும் முறையீட்டு மனுவும்.

(14) அரசுப் பணியாளர் ஒருவரால் கீழே கண்டுள்ளவற்றில் எதிர்த்து எடுத்துச் சொல்லப்படும் மனுவும்;

(அ) (i) ஒருவர் பணி செய்வதற்கான நிபந்தனைகளை ஒழுங்கு செய்யும் விதிகள் அல்லது ஆணைகளின் கீழ் அல்லது பணி செய்வதற்கான ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் ஆகியவற்றின் கீழ் மேல்முறையீட்டு உரிமை பெறுதலும் செயலாற்றலும் எந்த ஆணையால் கிடைத்தனவோ அந்த ஆணையையும்;

(ஆ) மேலே கூறப்பட்ட (அ) இனை உட்பிரிவில் குறிப் பிட்டுள்ளதைப் போன்ற யாதேனுமொரு விதி, ஆணை அல்லது ஒப்பந்தத்தின் மூலமாக மேல்முறையீடு அல்லது திருத்தக் கோரிக்கை மனுவைக் கவனிக்கத்தக்க அதிகாரம் உடைய அதிகாரி யால் பிறப்பிக்கப்பட்ட ஆணையையும் ; அல்லது

(இ) அரசினரால் பிறப்பிக்கப்பட்ட தண்டனை ஆணை அல்லாததான ஆணையை எதிர்த்து (அ) உட்பிரிவில் குறிப்பிட்டது போன்ற யாதேனுமொரு விதி, ஆணை அல்லது ஒப்பந்தத்தினால் மேல்முறையீடு செய்வது தெளிவாகத் தடுக்கப்பட்டுள்ள ஆணையையும் ;

(15) (அ) தனிப்பட்ட ஓய்வு ஊதியம்;

(ஆ) இரக்க ஊதியம் அல்லது

(இ) யாதேனுமொரு சட்டம் அல்லது சட்டத்தின் தன்மையுடைய விதியின் கீழ் மனு செய்பவர் ஒருவர் அடைவதற்கு உரிமை பெற்றிராத பணச் சலுகை அல்லது வேறு சலுகை ஆகிய இவற்றைக் கொடுப்பதற்கு அல்லது பரிந்துரைப்பதற்கு மறுத்து அரசினர் பிறப்பித்த ஆணையைப் பற்றி முறையிட்டுக் கொள்ளும் மனுவும்;

(16) அரசினரின் நிருவாகத்துக்குட்பட்ட பதவியில் பணி புரியும் ஒருவர் வேலையில் வருங்கால வாய்ப்புகள் அல்லது பதவி சம்பந்தமான யாதேனுமொன்றைப் பற்றி முறையிட்டுக் கொள்ளப் பட்டதும் ஆனல் அது யாரைப் பற்றியதோ அவரால் மேல் அனுப்பப்படாததுமான மனுவும்;

(17) ஒரு பொருள் பற்றி அரசினர் ஆணை பிறப்பிக்க அதிகாரம் உடையவராக இருந்தால், அப் பொருள் பற்றி முறையிட்டுக் கொள்பவர் தம் குறையைத் தவிர்க்க வேண்டிய அரசினருக்கு உரிய காலத்தில்.விண்ணப்பம் செய்து கொள்ளாமல் பிறகு அனுப்பும் மனுவும்;

(18) தனிப்பட்ட ஒருவரின் செயலை எதிர்த்தோ அல்லது தனிப்பட்டவர்களைக் கொண்ட குழுவினர் செயலை எதிர்த்தோ அத்தகைய தனிப்பட்டவர் அல்லது குழுவினர்க்கும் தமக்கும் உள்ள தனிப்பட்டதொரு தொடர்பு பற்றி எடுத்துரைக்கும் மனுவும்,

(19) மேலே (6)-ஆவது பிரிவில் விலக்குகளாகக் குறிப்பிடப் பட்டவற்றைப் போன்ற மனுவாக இல்லாமல் முறையிடுபவருக்கு நேராகச் சம்பந்தமில்லாத பொருள்களைப் பற்றிய மனுவும் ஆகும்.

XVIII.(அ) XVII ஆவது கட்டளையின் கீழ் மனுவின் கோரிக்கை அரசினரால் மறுக்கப்படுமாயின் மனு செய்தவருக்கு மறுக்கப் பட்டதை அதற்கான காரணங்களுடன் அறிவிக்க வேண்டும்.

(ஆ) மேலே XVII ஆவது கட்டளையில் இவை எனக் குறிப்பிட்டுள்ள காரணங்கள் அன்றி மற்றக் காரணங்களினால் ஒரு முறையீடு மறுக்கப்படுமாயின், மறுப்பதற்கான காரணத்தையும் முறையிட்டவருக்கு அறிவிப்பது விரும்பத்தக்கதல்ல என்று அரசினர் கருதி அவ்வாறு கருதுவதற்கான காரணம் எழுத்து மூலம் எழுதப்பட்டிருந்தாலன்றி மறுத்ததும் அதற்கான காரணமும் முறையிட்டுக் கொண்டவருக்கு அறிவிக்கப்பட வேண்டும். (இது சம்பந்தமாக 30—1—1958 தேதி 269 எண் அரசாங்கப் பொதுப் பணித் துறை ஆணையைக் காண்க.)

XIX. XVII ஆவது கட்டளையின் கீழ் ஒரு முறையீடு முன்னமே மறுக்கப்பட்டிருந்தால், அப் பொருள் பற்றி முன்னமே அரசினரின் கவனத்திற்குக் கொண்டு வராத புது உண்மைகள் புது மனுவில் இல்லாவிடில் அத்தகைய பிந்திய மனு கவனிக்கப்பட மாட்டாது.

XX. இதன்* விளிம்பில் பெயர் குறிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் வழியாக அரசினருக்கு அனுப்பப்பட்ட மனுக்கள் கீழே குறிப்பிட்டுள்ள சந்தர்ப்பங்களில் திருத்தப்படுவதற்கு அல்லது சரி செய்யப்படுவதற்கு யுக்தம் போல் அவற்றைத் திருப்பி அனுப்ப அவ்வதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

*உயர் நீதி மன்றம், வருவாய்த் துறை வாரியம், மருத்துவ துறை இயக்குநர், தமிழ்நாடு அரசினர், அலுவலர் தேர்வு ஆணைக் குழுவின் தலைவர், அரசாங்கச் செயலாளர்கள், வனத் துறைத் தலைவர், தலைமைப் பொறியாளர், விவசாயத் துறை இயக்குநர், கல்வித் துறை இயக்குநர், அரசாங்கத் தேர்வு ஆணையாளர், காவல் துறைத் தலைவர், சிறைத் துறைத் தலைவர், சுகாதாரத் துறை இயக்குநர், மாநிலத் துறைமுக அலுவலர், காவல் துறை ஆணையாளர், மேற்பார்வைப் பொறியாளர்கள்.

(அ) மனு எழுத்து விளக்கம் இல்லாமல் அல்லது பொருள் விளக்கம் இல்லாமல் இருப்பின்.

(ஆ) மனு யாருடையதாயிருப்பினும் அது அவர் பெயரில்லாமல் அவரது அதிகாரம் பெற்றவர் அல்லது அவரது வழக்கறிஞர் பெயரில் இருப்பின்.

(இ) அரசினரின் ஆட்சிக் கட்டுப்பாட்டுக்குட்பட்ட வேலையில் பணி ஆற்றுகின்றவர் அல்லது பணி செய்து வந்தவர் இக்கட்டளைகளை அனுசரிக்காமல் செய்து கொள்ளும் மனுவாயின்.

XXI. (அ) துறைத் தலைவர்களுக்குச் சார்நிலையிலுள்ள அதிகாரி வழியாகவே அரசினருக்கு அனுப்பப்பட்ட முறையிடுகளை மேல் அனுப்பாமல் யுக்தம்போல் நிறுத்தி வைக்க அவ்வதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது :—

தொழிலாளர் துறை ஆணையாளர், கால் நடைப் பராமரிப்புத் துறை இயக்குநர், பத்திரப் பதிவுத் துறைத் தலைவர், கூட்டுறவுத் துறைத் தலைவர், கலெக்டர்கள், மாவட்டச் செஷன்ஸ் நீதிபதி, சுகாதாரப் பொறியாளர், அரசாங்க அச்சகக் கண்காணிப்பாளர், மாவட்டக் கழகத் தலைவர்கள், நகராட்சி மன்றத் தலைவர், சிங்கோனாத் துறை இயக்குநர், போக்குவரத்து ஆணையாளர், இந்து சமய அறக் கட்டளை ஆட்சித் துறை ஆணையாளர்.

(அ) பண உதவிக்கு உரியரல்லர் என்று நன்கு விளங்குபவர் அதற்காகச் செய்து கொள்ளும் மனுவும்.

(ஆ) ஒரு பொருள்பற்றி அவ்வதிகாரிகளே உத்தரவு பிறப்பிக்க அதிகாரமுடையவர்களாக இருந்து, குறை தவிர்க்கப்பட வேண்டி அவர்களிடம் முன்னதாக முறையிட்டுக் கொள்ளப்படாமல அப் பொருள் பற்றியே செய்து கொள்ளப்படும் மனுவும்.

XXI. (ஆ) துறைத் தலைவர்களுக்குச் சார்நிலையிலுள்ள அதிகாரிகள், எந்தப் பொருள்கள் பற்றி மேல்முறையீடுகளை முடிவு செய்வதற்கான அதிகாரங்களைச் செலுத்துகின்றார்களோ அப்பொருள்கள் பற்றி, அரசிதழ்ப் பதிவு பெறாத அலுவலர்கள் அரசாங்கத்திற்கு அனுப்பும் மனுக்கள் துறைத் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படும்பொழுது துறைத் தலைவர்கள் அவற்றை நிறுத்தி வைத்துக்கொள்ளவேண்டும். சாதாரணமாக, அத்தகைய மனுக்களின் முன் நகல்கள் மீது அரசாங்கத்தால் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது.

ஆனால்—

(i) அரசாங்கப் பணியாளர் ஒருவரைப் பாதிப்பதாக உள்ள குறை உண்மையாக இருந்து, அதற்குப் பரிகாரம் அளிக்கப்பட வேண்டும் என அரசாங்கம் கருதுமிடத்தும் அறிக்கை அனுப்பப்பட வேண்டுமென அரசாங்கம் கேட்கலாம்.

(ii) பணியாளர் ஒருவர் அனுப்பியுள்ள ஒரு மனுவில், ஏதொரு அம்சத்திலாயினும் உண்மையில் அப் பணியாளருக்குப் பரிகாரம் அளிக்கப்பட வேண்டிய குறை ஒன்று இருப்பதாக அத் துறைத் தலைவருக்குத் தெரிய வந்தால், அவர் அதைப் பற்றி அரசாங்கத்திற்கு எழுதலாம்.

(iii) காவல் படைகள் காவலர்களும் தலைமைக் காவலர்களும் தங்களை வேலையிலிருந்து நீக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை எதிர்த்து அரசாங்கத்திற்கு ஒரு முறை முறையீடு செய்து கொள்ளலாம். ஆனால் மேல் முறையீடு செய்து கொள்வதற்கான உரிமையை அவர்கள் பயன்படுத்திய பின்னரே அவ்வாறு அரசாங்கத்திற்கு முறையீடு செய்து கொள்ள வேண்டும். இந்த முறையீடு (மனு) அல்லது முறையீடு எந்த அதிகாரியாலும் நிறுத்தி வைக்கப்படக் கூடாது.

**XXII. XXI** ஆவது அல்லது **XXI** -அ ஆவது கட்டளையின் கீழ்க்கொடுக்கப்படும் ஒரு மனுவை நிறுத்தி வைக்கின்ற ஓர் அதிகாரி அவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டதையும் அதற்கான காரணத்தையும் தெரிவிக்க வேண்டும்.

* அரசாங்கப் பணிகளில் இருக்கும் அல்லது இருந்த நபர்களால் அவர்கள் அரசினர் பணியாளர்களாயுள்ளதைச் சேர்ந்தவை சம்பந்தமாய் ஆளுநருக்கு முகவரியிடப்பட்ட மனுக்களைப் பணிந்து அனுப்புவதற்கும் அவைகளை முடிவு செய்வதற்குமான கட்டளைகள் :—

1. ஆளுநருக்கு முகவரியிடப்பட்ட யாதொரு மனுவும் எந்த அதிகாரியாலும் நிறுத்தி வைக்கப்படக் கூடாது.

2. அத்தகைய ஒவ்வொரு மனுவும் அந்த மனுதார் சேர்ந்துள்ள அலுவலகத்தின் அல்லது துறையின் தலைவர் மூலமாக சம்பந்தப்பட்ட செயல் துறையின் அரசாங்கச் செயலாளருக்குப் பணிந்து அனுப்பப்பட வேண்டும்.

(3) அடியிற் கண்டவைகளில் ஆளுநருக்கு முகவரியிடப்பட்ட ஒரு மனு மேல் நடவடிக்கை எடுக்கப்படாமலே தள்ளுபடி செய்யப்படக் கூடும் :—

(i) அந்நிகழ்விற்குப் பொருந்தும் விதிகளால் அல்லது ஆணைகளால் ஏற்படுத்தப்பட்டுள்ள தீர்வுகளை மனுதாரர் பயன்படுத்திக் கொள்ளாமலிருந்தாலும்; அல்லது

(ii) அவரது மேல்முறையீட்டின் மேல் அல்லது சீராய்வு மனுவின் மேல் விதிகளின்படி முடிவான ஆணை பிறப்பிக்கப்பட்டு அல்லது இதற்குப் பொருந்தக் கூடிய ஆணைகளை மனுதாரருக்கு

---

அ.ஆ. எண் 1306, பொது (பணியாளர் தொகுதி), 7—8—1935 ஆம் தேதியிட்டது. *

அனுப்பிவைக்கப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்கு அந்த மனு பணிந்து அனுப்பப்படாமலிருந்தாலும்; அல்லது

(iii) அந்த மனு எற்கனவே ஆளுநரால் முடிவு செய்ப பட்டுள்ள பொருளைப் பற்றியிருந்தாலும்,

ஒரு மனுவை அனுப்பும் அதிகாரி மேல் அந்த மனுதாரர் மேல் சொல்லப்பட்ட தேவைகளைப் பின்பற்றியுள்ளாரா என்பதைச் சொல்லவேண்டும்.

அகில இந்தியப் பணியாளர் தொகுதிகள் சட்டம், 1951.

1951 ஆம் ஆண்டு **LXI** ஆம் எண் பாராளுமன்றத்தா அடியிற் கண்டபடி சட்டமியற்றப்படுவதாகுக :—

1. சிறு தலைப்பு.—இந்தச் சட்டம் 1951 ஆம் ஆண்டு அனைத்து இந்தியப் பணியாளர் தொகுதிகள் சட்டம் என்று சொல்லப் படலாம்.

2. **விளக்கம்.**—இந்தச் சட்டத்தில் ஒரு அனைத்து இந்தியப் பணி என்னும் சொல் இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி யென்றும் அல்லது இந்தியக் காவல் பணியாளர் தொகுதி என்றும் பொருள்படும்.

3. **ஆட்கள் சேர்ப்பதையும் பணிக்குரிய நிபந்தனைகளையும் ஒழுங்குபடுத்தல்.**—1. மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் அரசாங்கங்களைக் கலந்து பிறகு, ஒரு அனைத்து இந்தியப் பணியாளர் தொகுதிக்கு ஆட்கள் சேர்ப்பதையும் நியமிக்கப் பட்டவர்களின் பணிகளின் நிபந்தனைகளையும் ஒழுங்கு படுத்த விதிகளைச் செய்யலாம்.

2. இந்தப் பிரிவின் கீழ் செய்யப்பட்ட எல்லா விதிகளும் அவைகள் செய்யப்பட்ட பிறகு கூடிய விரைவில் பாராளு மன்றத்துக்கு முன்னால் பதினான்கு (14) நாட்களுக்குக் குறை யாமல் வைக்கப்பட வேண்டும். அவை அவ்வாறு வைக்கப்பட்ட கூட்டத்தில் பாராளுமன்றம் கொண்டுவரும் ஒரு தீர்மானத்தால் நீக்கப்படுதல் அல்லது திருத்தப்படுதல் ஆகிய அத்தகைய மாறுதல்களுக்கு உட்பட்டிருக்கும்.

.4 தற்போதுள்ள விதிகள் தொடர்ந்து நீடித்தல்—இந்தச் சட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு அடுத்து முன்னால் அமுலிலிருந்த வையும் ஒரு அனைத்து இந்தியப் பணியாளர் தொகுதிக்குப் பொருந்துபவையுமான எல்லா விதிகளும் அமுலில் தொடர்ந்து

..து இருப்பதுடன் இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்டுள்ள களாகக் கருதப்படும்.

## அகில இந்தியப் பணியாளர் தொகுதிகள் (நடத்தை) விதிகள், 1954

இந்திய அரசாங்கத்தின் 1954 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆம் தேதியிட்ட புதுடெல்லி உள்துறை அமைச்சகத்தின் அடியிற்கண்ட அறிவிக்கை மறுபடி வெளியிடப்படுகிறது :—

எண். 8/1/54 A,I,S,—(11) 1951 ஆம் ஆண்டு அனைத்து தியப் பணியாளர் தொகுதிகள் சட்டத்தின் (1951 ஆம் ஆண்டு I ஆம் சட்டம் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் ளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, மத்திய அரசாங்கம் சம்மந்தப்பட்ட மாநில அரசாங்கங்களைக் கலந்த பிறகு அடியிற்கண்ட விதிகளை இதனால் செய்கிறது; அவை யாவன :—

1. சிறு தலைப்பு.—இந்த விதிகள் அனைத்திந்தியப் பணியாளர்கள் தொகுதி (நடத்தை) விதிகள், 1954 என்று சொல்லப்படலாம்.

2. விளக்கங்கள்.—இந்த விதிகளில் சூழ்நிலை வேறு விதமாய்த் தேவைப்படுத்தினலொழிய—

(அ) அரசாங்கம் என்பது

(i) யூனியன் அலுவல்களின் சம்மந்தமாய் பணியாற்றும் அந்தத் தொகுதியின் ஒரு உறுப்பினரைப் பொருத்தவரை மத்திய அரசாங்கம் என்றும்; அல்லது

(ii) ஒரு அயல் நாட்டு அரசாங்கத்தில் கீழ் அல்லது இந்தியாவுக்கு வெளியே அலுவலிலிருந்தாலும் அல்லது விடுப்பி லிருந்தாலும் பணியாற்றிக் கொண்டிருந்தாலும் பணியாளர்த் தொகுதியின் ஒரு உறுப்பினரைப் பொருத்தவரை மத்திய அரசாங்கம் என்றும்;

(iii) மாநில அலுவல் சம்மந்தமாய்ப் பணியாற்றும் அந்தப் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினரைப் பொருத்த வரை அந்த மாநிலத்தின் அரசாங்கம் என்றும்—பொருள்படும்.

விளக்கம்.—மத்திய அரசாங்கத்தால் அல்லது ஒரு மாநில அரசாங்கத்தால் ஒரு நிறுமம் இணையம் அமைப்பு அல்லது ஒரு

உள்ளாட்சி ஆகியவற்றில் பணியாற்றுவதற்கு விடப்பட்ட, பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர், இந்த விதிகளின் நோக்கங்களுக்காக அவரது சம்பளம் யூனியன் அல்லது அந்த மாநிலத்தின் தொகுக்கப்பட்ட நிதியில்லாத ஏனைய ஆதரவிலிருந்து பெறப்படுவதாயிருந்தாலும் அவர் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு யூனியன் அல்லது மாநிலத்தின் சம்பந்தமான அலுவல்களைச் செயலாற்றுவதாகவே கருத வேண்டும்.

(ஆ) ஒரு பணியாளர் தொகுதியின் உறுப்பினரைப் பொறுத்தவரை குடும்பத்தின் உறுப்பினர் என்பதில் பின்வருபவர்களும் அடங்குவார்கள்.

(i) அந்த உறுப்பினரின் மனைவி, குழந்தை அல்லது மாற்றான் குழந்தை ஆகிய இவர்கள் அவருடன் வசித்துக் கொண்டிருந்தாலும் இல்லாவிட்டாலும், ஒரு பெண்ணை உள்ள அந்தத் தொகுதியின் உறுப்பினரைப் பொருத்தவரை அவருடன் வசிப்பவரும் அவர் ஆதரவிலுமுள்ள கணவரும்;

(ii) அந்தப் பணியாளர் தொகுதியின் உறுப்பினரின் அல்லது அவருடைய மனைவிக்கு அல்லது அவரது கணவனுக்கு இரத்தத்தால் அல்லது திருமணத்தால் சொந்தமாகவும் அந்த உறுப்பினரின் முழு ஆதரவிலுள்ளவராகவும் உள்ள வேறு எந்த நபரும் ஆனல் அந்தப் பணியாளர் தொகுதியின் உறுப்பினரிடமிருந்து சட்டப்படிப் பிரிக்கப்பட்ட ஒரு மனைவியும் அல்லது கணவனும் அல்லது மேலும் அவர் அல்லது அவள் ஆதரவில் இல்லாத ஒரு குழந்தையும் அல்லது மாற்றான் குழந்தையும் அல்லது சட்டத்தால் அவர்களின் பொறுப்பை உறுப்பினரிடமிருந்து விலக்கப்பட்டவர்களும் இதில் அடங்கார்.

(இ) 'பணியாளர் தொகுதியின் உறுப்பினர்' என்பது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதியின் அல்லது இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் என்று பொருள்படும்.

3. பொது.—பணியாளர் தொகுதியின் ஒவ்வொரு உறுப்பினரும் எப்போதும் முற்றிலும் நேர்மையுடையவராகவும் கடமையில் பற்றுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

4. அரசியலிலும் தேர்வுகளிலும் கலந்து கொள்ளல்.—(1) பணியாளர் தொகுதியின் எந்த உறுப்பினரும் யாதொரு அரசியல் கட்சியின் அல்லது அரசியல் சம்பந்தமான செயலாற்

றும் நிறுவனங்களின் உறுப்பினர்களாகவோ அல்லது வேறு விதமாக அத்துடன் தொடர்பு கொள்ளவோ கூடாது. மற்றும் யாதொரு அரசியல் கிளர்ச்சி அல்லது நடவடிக்கையில் சேர்த்துக் கொள்ளவோ அல்லது அதன் உதவிக்காகப் பணம் அளிக்கவோ அல்லது எந்த விதமாகவும் அதற்கு உதவி செய்யவோ கூடாது.

(2) தம் குடும்பத்தின் எந்த உறுப்பினரும், சட்டப்படி அமைக்கப்பட்டுள்ள அரசாங்கத்திற்கு எதிராக, நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ இருக்கக்கூடிய யாதொரு கிளர்ச்சி யிலும் அல்லது செயலிலும் கலந்து கொள்வதை அல்லது அதன் உதவிக்காகப் பணம் அளிப்பதை அல்லது அதற்கு வேறுவிதமாக உதவியளிப்பதைத் தடுப்பதற்கு முயற்சிக்க வேண்டியது பணி யாளர் தொகுதியின் ஒவ்வொரு உறுப்பினரின் கடமையாகும். ஒரு பணியாளர் தொகுதியின் உறுப்பினர் அப்படிப்பட்ட யாதொரு கிளர்ச்சியில் தம் குடும்பத்தில் யாதொரு உறுப்பினர் கலந்து கொள்வதை அல்லது அதற்குப் பண உதவி செய்வதை அல்லது வேறு எந்த விதமாகவும் உதவியளிப்பதைத் தடுக்க முடியாமற் போகக் கூடியவைகளில் அவ்வாறு ஒரு அறிக்கையை அவர் அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டும்.

(3) யாதொரு கிளர்ச்சி அல்லது செயல் இந்த விதியின் நோக்கத்திற்கு வருகிறதா என்று யாதொரு வினு எழுந்தால் அதன் மேல் அரசாங்கத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.

(4) பணியாளர் தொகுதியின் யாதொரு உறுப்பினரும் யாதொரு சட்டமன்றத்திற்கு அல்லது உள்ளாட்சி அதிகாரிக்குத் தேர்வு வாக்கெடுப்பில் ஆதரவு நாடவோ அல்லது தமது செல் வாக்கைப் பயன் படுத்தவோ அல்லது கலந்து கொள்ளவோ கூடாது.

ஆனல் (i) அப்படிப்பட்ட தேர்தலில் வாக்கு அளிக்கத் தகுதியுள்ள ஒரு பணியாளர் தொகுதியின் உறுப்பினர் தம் வாக் களிக்கும் உரிமையைச் செலுத்தலாம். ஆனல் அப்படிச் செய் கையில் அவர் எந்த முறையில் வாக்கு அளிக்க உத்தேசித்துள்ளார் என்பதையும் அல்லது வாக்கு அளித்துள்ளார் என்பதையும் குறிப் பாகவும் காட்டிக் கொள்ளக் கூடாது.

(ii) பணியாளர் தொகுதியில் ஒரு உறுப்பினர், ஒரு தேர்தலில் அச்சமயம் அமுலிலுள்ள யாதொரு சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் தமக்கு விதிக்கப்பட்டுள்ள பணியை முறைப்படி செயலாற்றி ஒரு தேர்வை நடத்துவதற்கு உதவுகிறார் என்ற காரணத்தால் மட்டும் அவர் இந்த விதியின் ஏற்பாட்டை மீறுவதாகக் கருதக்கூடாது.

(iii) பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினரை ஒரு உள்ளாட்சித் தேர்வுக்கு வேட்பாளராக நிற்க அரசு அனுமதிக்கலாம். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட பணியாளர் தொகுதியின் உறுப்பினர் இந்த விதியின் ஏற்பாடுகளை மீறியதாகக் கருதப்படமாட்டார்.

விளக்கம்.—பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினரால் தம் உடலின் மேலோ, ஊர்தியின் மேலோ அல்லது இருப்பிடத்தின் மேலோ யாதொரு தேர்தல் சின்னத்தை தெரியும்படி வைத்துக் கொள்வது இந்த உள் விதியின் பொருளுக்குள் அவர் ஒரு தேர்வில் தம் செல்வாக்கைப் பயன்படுத்துவதற்கு ஒப்பாகும்.

5. அச்சுச் செய்தித் தாள் அல்லது வானொலியுடன் தொடர்பு.—(1) பணியாளர் தொகுதியின் யாதொரு உறுப்பினரும் அரசாங்கத்தின் முன் ஒப்பளிப்பில்லாமல் யாதொரு செய்தித்தாளையும் அல்லது ஏனைய கால முறை வெளியீடுகளையும் முழுவதுமாகவோ அல்லது ஒரு பாகத்தையோ சொந்தமாகப் பெற்றிருத்தலும் அல்லது அவைகளைப் பதிப்பிப்பது அல்லது மேலாண்மை செய்வது இவற்றைச் செய்யவோ அல்லது இவற்றில் பங்கு கொள்ளவோ கூடாது.

(2) பணியாளர் தொகுதியின் எந்த உறுப்பினரும் அரசாங்கத்தின் அல்லது இதற்காக அதனால் அதிகாரமளிக்கப் பட்டுள்ள மற்றொரு அதிகாரியின் முன் ஒப்பளிப்பின்றியும் அல்லது நல்லெண்ணத்தோடு தம் கடமைகளைச் செய்வதற்காகவன்றியும், வானொலி ஒலிபரப்பில் பங்கெடுத்துக் கொள்ளவோ அல்லது எந்தச் செய்தித் தாளுக்கும் அல்லது கால முறை வெளியீடுகளுக்கும் பெயரில்லாமலும் அல்லது தம் பெயரிலும் அல்லது வேறு ஒரு நபரின் பெயரிலும் யாதொரு கட்டுரையும் அல்லது யாதொரு கடிதமும் எழுதியனுப்பவோ கூடாது.

ஆனால், அத்தகைய ஒலிபரப்பு அல்லது கட்டுரை, முழுதும் இலக்கியம், கலை அல்லது விஞ்ஞானத் தன்மையுடையதாயிருந்தால் அத்தகைய ஒப்பு அளிப்புத் தேவைப்படாது.

6. **அரசாங்கத்தைக் கண்டனம் செய்தல்.**—பணியாளர்கள் தொகுதிகளின் எந்த உறுப்பினரும், யாதொரு வானொலி ஒலி பரப்பிலும் அல்லது பெயரில்லாமல் அல்லது தம்முடைய பெயரில் அல்லது வேறு ஒருவரின் பெயரில் வெளியிடப்பட்ட எந்த ஆவணத்திலும் அல்லது ஒரு பத்திரிகைக்கு அனுப்பப்பட்ட ஒரு செய்தியிலும் அல்லது யாதொரு பொதுச் சொற்பொழிவிலும்.

(i) மத்திய அரசாங்கத்தின் அல்லது மாநில அரசாங்கத்தின் யாதொரு நடப்பு அல்லது சமீப காலத்திய கொள்கை அல்லது செயல் ஆகியவற்றை எதிர்த்துக் கண்டனத் தன்மையோடும் கூடிய எதனையும்;

(ii) மத்திய அரசாங்கத்திற்கும் யாதொரு மாநிலத்தின் அரசாங்கத்திற்கும் உள்ள உறவினைக் குழப்பக் கூடியதாயுள்ள எதையும்; அல்லது,

(iii) மத்திய அரசாங்கத்திற்கும் அயல் நாட்டு அரசாங்கத்திற்கும் உள்ள உறவில் மனக் கலக்கமுண்டாக்கக் கூடியதாயுள்ள எதையும்,

அவற்றின் பொருள்பற்றி அல்லது தம் கருத்துப் பற்றிய எந்த அறிக்கையும் செய்யக்கூடாது. ஆனால் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினரால் தம் அலுவல் முறையில் அல்லது தமக்குரிய பணியைச் செயலாற்றும் வகையில் தெரிவிக்கப்பட்ட யாதொரு அறிக்கைக்கும் அல்லது கூறப்பட்ட கருத்துக்களுக்கும் இவ் விதியில் சொல்லப்பட்ட எதுவும் பொருந்தாது.

7. **குழுவின் முன்னர் அல்லது வேறு அதிகாரி எவரேனும் ஒருவர் முன்னர் சான்றளித்தல்**—(1) (3) ஆம் உள்விதியில் ஏற்படுத்தப்பட்டுள்ளபடி தவிர, பணியாளர் தொகுதியின் எந்த உறுப்பினரும் அரசாங்கத்தினுடைய முன்னொப்பளிப்பில்லாமல் யாதொரு நபரால் அல்லது குழுவால் அல்லது அதிகாரியால் நடத்தப்படும் யாதொரு விசாரணை சம்பந்தமாகவும் சான்று அளிக்கக்கூடாது.

(2) (1)-ஆவது உள்விதியின் கீழ் யாதொரு ஒப்பு அளிப்புத் தரப்பட்டவைகளில் பணியாளர் தொகுதியின் யாதொரு உறுப்பினரும் அப்படிப்பட்ட சான்றளிக்கும்போது மத்திய அரசாங்கத்தின் அல்லது மாநில அரசாங்கத்தின் கொள்கையை அல்லது

யாதொரு நடவடிக்கையைக் கண்டனம் செய்யக்கூடாது. வேறு எந்த நபருக்கும் அறிவிக்கக்கூடாது.

(3) இந்த விதியில் உள்ளது எதுவும்

(அ) அரசாங்கத்தால், பாராளுமன்றத்தால் அல்லது ஒரு மாநிலச் சட்டமன்றத்தால் நியமிக்கப்பட்ட அதிகாரியின் முன்னால் அளிக்கப்பட்ட சான்றுக்கும், அல்லது

(ஆ) யாதொரு நீதிமன்ற விசாரணையில் அளிக்கப்பட்ட சான்றுக்கும் பொருந்தாது.

8. அனுமதி பெருதப்படித் தகவலை அறித்தல்.—பணியாளர் தொகுதியின் யாதொரு உறுப்பினரும் அரசாங்கத்தின் யாதொரு பொது அல்லது தனிப்பட்ட ஆணையின்படியில்லாமலும் அல்லது தமக்கு ஒதுக்கப்பட்டுள்ள பணியை நல்லெண்ணத்துடன் செயலாற்றலினும் தவிர யாதொரு அலுவலக ஆவணத்தையும் அல்லது தகவலையும் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ யாதொரு அரசுப் பணியாளருக்கும் அல்லது அத்தகைய ஆவணத்தையும் தகவலையும் அறிவிப்பதற்குத் தாம் அனுமதிக்கப்பட்டிராத வேறு எந்த நபருக்கும் அறிவிக்கக்கூடாது.

9. சந்தாக்கள்.—பணியாளர் தொகுதியின் யாதொரு உறுப்பினரும் அரசாங்கத்தின் அல்லது இதற்காக அதனால் அதிகாரமளிக்கப்பட்ட அத்தகைய அதிகாரியினுடைய முன் ஒப்பு அளிப்பு இல்லாமல் யாதொரு நோக்கத்திற்காகவும் எந்த முறையிலும் உதவித் தொகை கேட்கவும் அல்லது பெற்றுக்கொள்ளவும் அல்லது வேறு விதமாக அவ்வாறு ஒரு நிதி சேகரிப்பதில் கலந்து கொள்ளவும் கூடாது.

10. கொடைகள்.—(1) இந்த விதிகளில் வேறுவிதமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளபடியல்லாமல் பணியாளர் தொகுதியின் யாதொரு உறுப்பினரும் அரசாங்கத்தினுடைய முன் ஒப்பளிப்பில்லாமல் அற்பமான மதிப்புடையதற்கு மேற்பட்ட யாதொரு கொடையையும் ஏற்றுக் கொள்ளவும் அல்லது அவர் மனைவியை அல்லது அவரது குடும்பத்தின் வேறு எந்த உறுப்பினரையும் யாதொரு நபரிடமிருந்தும் யாதொரு கொடையை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கவும் கூடாது.

ஆனால், மதிப்புள்ள கொடைகள் அந்தந்த எல்லா சந்தர்ப்பங்களையொட்டி உறவினரிடமிருந்தும் அல்லது தனி நண்பர்களிட

மிருந்தும் அல்லது அவர்களுக்குத் திருமணங்கள், ஆண்டு விழாக்கள், இறப்புச் சடங்குகள், சமய சம்பந்தமான அலுவல்கள் ஆகியவற்றில் அத்தகைய கொடைகள் கொடுப்பதும் அல்லது வாங்குவதும் நடைமுறையிலுள்ள சமய அல்லது சமுதாய வழக்கங்களுக்குப் பொருந்துவதாக உள்ள பொழுது அவற்றை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அற்ப மதிப்புள்ளவைகள் தவிர அப்படிப்பட்ட கொடைகளை ஏற்றுக் கொள்ளுதல் அரசாங்கத் திற்கு அறிவிக்கப்பட்டு அரசாங்கம் கட்டளையிடக் கூடிய முறையில் முடிவு செய்ய வேண்டும்.

விளக்கம்.—இந்த உள் விதியின் நோக்கத்திற்காக, அடிக்கல் நாட்டல் அல்லது ஒரு பொதுக் கட்டடம் திறத்தல், அல்லது யாதொரு விழாவின் அலுவலில் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினருக்கு அளிக்கப்படும் யாதொரு கரண்டி, திறவுகோல் அல்லது அதைப் போன்ற பிற சாமான்கள் ஒரு கொடையாகக் கருதப்படும்.

(2) யாதொரு கொடையும் அற்ப மதிப்புள்ளதா அல்லவா என்று ஒரு வினா ஏற்பட்டால் அல்லது பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் தமக்கு அளிக்கப்படும் ஒரு கொடை அற்ப மதிப்புள்ளதா அல்லவா என்று ஐயப்பட்டால் அப்படிப்பட்ட உறுப்பினர் அரசாங்கத்திற்கு எழுதிக் கேட்க வேண்டும். அதன் மேல் அரசாங்கத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.

விளக்கம்.—ஒரு கொடை அற்ப மதிப்புள்ளதாக அல்லது இல்லாததாகக் கருதப்பட வேண்டியது அதை அளிப்பவர் யார் என்பதையும் அந்த கொடையளிக்கப்படும் சந்தர்ப்பம் யாது என்பதையும் பொருத்திருக்கும். மதிப்பில் 20 ரூபாய்களுக்குத் தனி நண்பரால் அல்லாத ஒரு நபரால் அளிக்கப்படுவது சாதா ரணமாக அற்ப மதிப்பில்லாததாகக் கருதப்படும். சொந்தக் கார ரிடமிருந்தும் தனிப்பட்ட நண்பர்களிடமிருந்தும் 50 ரூபாய்கள் மதிப்புள்ள வரையிலும், 1-ஆம் உள்விதியின் ஏற்பாட்டில் சொல்லப் பட்டுள்ள படியான சிறப்பான காலங்களில் 250 ரூபாய் வரையில் கூட அற்ப மதிப்புள்ளவைகளாகக் கருதப்படலாம்.

(3) இந்த விதியில் உள்ளது எதுவும் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் தமக்கு அன்பளிப்பாக அளிப்பதற்காகவல்லாத ஒரு உருச் சித்திரத்திற்கு மேற்பாகத்தை மட்டும் காட்டும் ஒரு

படத்திற்கு அல்லது சிலைக்காக ஒரு பொது குழுவின் வேண்டு கோளின் மேல் அமருவதைத் தடுப்பதாகக் கருதப்பட மாட்டாது.

**11. பணியாளர்த் தொகுதியின் உறுப்பினர்களைச் சிறப்புச் செய்வதற்கான பொது ஆர்ப்பாட்டங்கள்.**—பணியாளர் தொகுதியின் யாதொரு உறுப்பினரும் அரசாங்கத்தினுடைய முன் ஒப்பளிப்பில்லாமல் தம் கௌரவத்திற்காக அல்லது இதர எந்த அரசாங்கப் பணியாளரின் கௌரவத்திற்காக யாதொரு கூட்டத்தில் அல்லது கேலிக்கையில் யாதொரு புகழுரை அல்லது வாழ்த்துரை பெற்றுக் கொள்ளவும் அல்லது நற்சாட்சி இதழ் ஏற்றுக் கொள்ளவும் அல்லது அவைகளில் கலந்து கொள்ளவும் கூடாது.

ஆனால், இதில் உள்ளது எதுவும் ;

(i) பணியாளர் தொகுதியில் ஒரு உறுப்பினர் அல்லது வேறு எந்த அரசாங்கப் பணியாளர் ஓய்வு பெறுவதற்கு வேலையை விடும்போதும் அல்லது மாற்றலாகிச் செல்லும் போதும் அல்லது யாதொரு அரசாங்கத்தின் பணியை அண்மையில் விட்டு விலகிய போதும் அவர்களைக் கௌரவிக்க நடத்தப்படும் பெரிதும் ஒரு தனிப்பட்ட முறைப்படி அமைந்த சாதாரணமான ஒரு வழிய னுப்பு விழாவிற்கும், அல்லது ;

(ii) பொதுக் கழகங்களால் அல்லது நிறுவனங்களால் எளிய முறையில் செலவில்லாமல் ஏற்படுத்தப்பட்ட கேலிக்கைகளை உபசரிப்புகளை ஏற்றுக் கொள்வதற்கும் ;
பொருந்தாது.

**12. தனிப்பட்ட வாணிகம் அல்லது வேலையை ஏற்றுக் கொள்ளல்.**—(1) பணியாளர் தொகுதியில் எந்த உறுப்பினரும் அரசாங்கத்தினுடைய முன் ஒப்பு அளிப்புடனல்லாமல் யாதொரு வாணிகத்திலும் அல்லது தொழிலிலும் நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ ஈடுபடவும் அல்லது யாதொரு வேலையில் அமர்ந்து கொள்ளவும் கூடாது.

ஆனால், பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் அப்படிப் பட்ட ஒப்பளிப்பில்லாமல் ஒரு சமூக அல்லது அற இயல்புள்ள வேலையை அல்லது எப்பொழுதாவது இலக்கியம், கலை அல்லது விஞ்ஞானத் தன்மையுள்ள வேலையைத் தம் அலுவலகப் பணிகள்க

அதனால் பாதிக்கப்படாத நிபந்தனைக்குட்பட்டு சம்பளமில்லாமல் ஏற்றுக் கொள்ளலாம். ஆனாலும் அரசாங்கத்தால் அவ்வாறு கட்டளையிடப்பட்டால் அவர் அப்படிப்பட்ட பணியை ஏற்கக் கூடாது அல்லது தொடர்ந்து செய்யாமல் விட்டு விட வேண்டும்.

**விளக்கம்.**—ஒரு பணியாளர் தொகுதியின் உறுப்பினரால் தம் மனைவியால் அல்லது தமது குடும்பத்தின் யாதொரு பிற உறுப்பினரால் சொந்தமாக நடத்தப்படும் அல்லது மேலாண்மை செய்யப் படும் ஒரு ஈட்டுறுதி முகமை அல்லது தரகு முகமை முதலியவை களுக்காக ஆதரவு நாடுதல் இந்த உள்விதியை மீறுவதாகக் கருதப் படும்.

(2) பணியாளர் தொகுதியின் எந்த உறுப்பினரும் அரசாங் கத்தினுடைய முன் ஒப்பு அளிப்பின்றி யாதொரு வங்கி அல்லது 1913- ஆம் ஆண்டு இந்திய நிறுமச் சட்டத்தின் அல்லது அச் சமயம் அமுலிலுள்ள வேறு எந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட யாதொரு நிறுவனத்தைப் பதிவு செய்வதில், நடத்துவதில் அல்லது மேலாண்மை செய்வதில் பங்கு கொள்ளக் கூடாது.

ஆனால் பணியாளர் தொகுதியில் ஒரு உறுப்பினர் 1912-ஆம் ஆண்டுக் கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் (1912 ஆம் ஆண்டு 11-ம் விதி) அல்லது அச்சமயம் அமுலிலுள்ள வேறு எந்தச் சட்டத் தின்கீழும் பதிவு செய்யப்பட்ட ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது 1860 ஆம் ஆண்டு சங்கங்களின் பதிவுச் சட்டம் (1860 ஆம் ஆண்டு XXI ) அல்லது அமுலிலுள்ள அதற்கு ஒத்துள்ள வேறு எந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு இலக்கிய விஞ்ஞான அல்லது அறச் சங்கத்தைப் பதிவு செய்வதில் அல்லது மேலாண்மையில் பங்கு கொள்ளலாம்.

13. **முதலீடுகளும் கடன் கொடுப்பதும், கடன் வாங்குவதும்.**— (1) பணியாளர் தொகுதியின் எந்த உறுப்பினரும் எந்த முதலீட்டிலும் ஈடுபடக் கூடாது.

**விளக்கம்.**—மதிப்பில் திடீர் மாறுதல்களையுள்ள முறையற்ற ஈட்டுப் பத்திரங்களை வழக்கமாய் வாங்குவதும் விற்பதும் இந்த உள்விதியின் பொருளுக்குள் முதலீடுகளில் ஈடுபடுவதாகக் கருதப்படும்.

(2) பணியாளர் தொகுதியின் எந்த உறுப்பினரும் தம் அலுவலகப் பணிகள் செயலாற்றப்படுவதில் தம்மை ஒரு குழப்பத்திற்கு உட்படுத்த அல்லது செல்வாக்குக்கு காட்ட நேரக் கூடிய யாதொரு முதலீடு செய்யவும் அல்லது தமது மனைவியை அல்லது தம் குடும்பத்தின் யாதொரு உறுப்பினரையும் முதலீடு செய்ய அனுமதிக்கவும் கூடாது.

(3) ஒரு ஈட்டுப் பத்திரம் அல்லது முதலீடு (1) ஆவது உள் விதியில் அல்லது (2) ஆவது உள் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தன்மையுள்ளதாயென்று ஒரு கேள்வி எழுந்தால் அதன் மேல் அரசாங்கத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.

(4) பணியாளர் தொகுதியின் எந்த உறுப்பினரும் அரசாங்கத்தின் முன் ஒப்பு அளிப்புடனல்லாமல் தம் அதிகார இடத்தின் எல்லைக்குள் நிலமுள்ள அல்லது விலையுயர்ந்த சொத்துள்ள யாதொரு நபருக்கும் கடன் கொடுக்கவும் அல்லது எந்த நபருக்கும் வட்டிக்குப் பணம் கொடுக்கவும் கூடாது.

ஆனால், பணியாளர் தொகுதியில் ஒரு உறுப்பினர் தனிப்பட்ட வேலையாளருக்கு சம்பளத்தை முன் பணமாகவோ அல்லது தமது தனிப்பட்ட நண்பருக்கு அல்லது சொந்தக்காரருக்கு அவர் தம் அதிகார எல்லைக்குள் நிலம் உள்ளவராயிருந்தாலும் வட்டியில்லாமல் ஒரு சிறு தொகையைக் கடனாகக் கொடுக்கலாம்.

(5) பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் எவரும் ஒரு வங்கியுடன் அல்லது ஒரு நிலையுள்ள தொழில் நிறுவனத்துடன் சாதாரணத் தொழில் முறையானவை தவிர தம் அதிகார எல்லைக்குள் எந்த ஒரு நபரிடமிருந்தும் பணம் கடன் பெறவும் அல்லது பணம் சம்பந்தமாய் அவருக்குக் கட்டுப்படுத்திக் கொள்ளவும் கூடாது. மற்றும் அந்த மாதிரி நடவடிக்கையில் அரசாங்கத்தின் முன் ஒப்பளிப்புடனல்லாமல் தம் குடும்பத்தின் யாதொரு உறுப்பினரையும் சேர அனுமதிக்கவும் கூடாது.

ஆனால் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் வட்டியில்லாமல் ஒரு சிறு தொகையைத் தம் தனிப்பட்ட நண்பரிடமிருந்து அல்லது சொந்தக்காரரிடமிருந்து, முற்றிலும் தற்காலிகமான கடனைப் பெறலாம் அல்லது ஒரு உண்மையான வணிகருடன் ஒரு பற்றுவரவு கணக்கு வைத்துக் கொள்ளலாம்.

(6) பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் அவ்வா (4) ஆவது உள்விதியின் அல்லது (5) ஆவது உள்விதியின் ஏற்பாடு களை மீற வேண்டிய தன்மையையுண்டாக்கக்கூடிய ஒரு பணி யிடத்துக்கு நியமிக்கப்பட்ட போதும் அல்லது மாற்றப்பட்ட போதும் அவர் தனது சூழ்நிலைகளை அரசாங்கத்திற்குத் தெரிவித்து அதன் மேல் அரசாங்கத்தால் செய்யப்படும் அப்படிப்பட்ட ஆணை களுக்கு இணங்கி நடக்க வேண்டும்.

14. நொடிப்பும் (இன்சால் வென்சி) வழக்கமாய் கடன் பெற்றுக் கொண்டிருப்பதும்:—

பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் வழக்கமாய்க் கடன் வாங்குவதையும் அல்லது நொடிப்பு நேர்வதையும் விலக்கும்படி யாகத் தம் சொந்த அலுவல்களை நடத்திக் கொள்ள வேண்டும். நொடிப்புக்காக சட்டப்படி நடவடிக்கைக்குட்பட்ட, பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் உடனடியாக முழு தகவல்களையும் அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

15. அசையும் சொத்தும், அசையாச் சொத்தும் விலையுயர்ந்த சொத்தும்—

(1) பணியாளர் தொகுதியில் எந்த உறுப்பினரும் அரசாங் கத்திற்கு முன்னதாகவே தெரிந்திருக்கும்படியல்லாமல் யாதொரு அசையாப் பொருளையும் குத்தகையின் மூலம் அடமானத்தின் மூலம், விற்பதின் மூலம் கொடையின் மூலம் அல்லது வேறு விதமாகத் தம்முடைய சொந்தப் பெயரிலோ அல்லது தமது குடும்பத்தின் யாதொரு உறுப்பினர் பெயரிலோ பெற்றுக் கொள்ளுதலோ அல்லது கொடுத்து விடுதலோ கூடாது.

ஆனால், ஒரு ஒழுங்கான நல்ல பெயருள்ள விற்பனையாளர் மூலமாயில்லாத அத்தகைய நடவடிக்கைக்கு அரசாங்கத் தினுடைய முன் ஒப்பளிப்புப் பெற வேண்டும்.

(2) ஆயிரம் ரூபாய் மதிப்புக்கு மேற்பட்ட யாதொரு அசையும் பொருளை வாங்குவதன் மூலமாகவோ விற்பதின் மூலமாகவோ அல்லது பிற விதமாகவோ அது சம்பந்தப்பட்ட ஒரு நடவடிக்கையில் இறங்கும் பணியாளர் தொகுதியின் உறுப்பினர், உடனடியாக அந்த நடவடிக்கையை அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.,

ஆனால் பணியாளர் தொகுதியின் யாதொரு உறுப்பினரும் ஒரு நல்ல பெயருள்ள வணிகர் அல்லது தரமான முகவரோடு அல்லாமலும் அல்லது அவர் மூலமாயில்லாமலும் அல்லது அரசாங்கத்தின் முன் ஒப்பு அளிப்பில்லாமலும் அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையில் புகக் கூடாது.

(3) பணியாளர் தொகுதியின் ஒவ்வொரு உறுப்பினரும் தாம் முதல் முதல் பணியாளர் தொகுதியில் நியமிக்கப்பட்ட போதும் அதற்குப் பிறகு ஒவ்வொரு பன்னிரண்டு மாதங்கள் இடையிலும் இதற்காக அரசாங்கத்தால் குறிப்பிடப்படக்கூடிய படிவத்தில் தம் சொந்தப் பெயரில் அல்லது தம் குடும்பத்தின் யாதொரு உறுப் பினரின் பெயரில் அல்லது வேறு எந்த நபரின் பெயரிலும் தம்மால் சொந்தமாய் வைத்துக் கொள்ளப்பட்டுள்ள அல்லது, கைப்பற்றப்பட்ட அல்லது உரிமை முறையால் அடையப்பட்டுள்ள அல்லது குத்தகையில் அல்லது அடமானத்தால் வசம் வைக்கப் பட்டிருக்கும் ஒரு விவர அறிக்கையைப் பணிந்து அனுப்ப வேண்டும்.

(4) அரசாங்கம் அல்லது இதற்காக அதனால் அதிகாரம் அளிக்கப்பட்ட யாதொரு அதிகாரியும் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினரை எக்காலத்திலும் ஒரு பொது அல்லது தனிப் பட்ட ஆணையால் அந்த ஆணையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அவரால் அல்லது அவரது குடும்பத்தின் யாதொரு உறுப்பினரால் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அவரால் அல்லது அவரது குடும்பத்தின் யாதொரு உறுப்பினரால் குறிப்பிடப்படக் கூடிய தான அப்படிப்பட்ட அசையும் அல்லது அசையாப் பொருட்கள் கைப்பற்றப்பட்டவை அல்லது வசம் வைக்கப்பட்டிருப்பவைகளைப் பற்றிய ஒரு முழு நிறைவான அறிக்கையைப் பணிந்து அனுப்பச் சொல்லலாம். அப்படிப்பட்ட அறிக்கையில் அரசாங்கத்தால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரியால் அவ்வாறு சொல்லப் பட்டால், அந்தச் சொத்து எந்த முறைகளிலும் எந்த ஆதாரங் களிலிருந்தும் கைப்பற்றப்பட்டன என்ற விவரங்களும் சேர்ந் திருக்க வேண்டும்.

16. பணியாளர்த் தொகுதியில் உறுப்பினர்களின் செயல்களையும் தன்மையையும் நியாயம் கூறி நிலைநாட்டல்.—பணியாளர் தொகுதியின் எந்த உறுப்பினரும் அரசாங்கத்தின் முன் ஒப்பளிப் புடனன்றி யாதொரு எதிர்ப்பான கண்டனத்தின் அல்லது அவ தூறுத் தன்மையான அலுவலகச் செயலை நியாயமானதென்று நிலை

நாட்டுவதற்கு யாதொரு நீதிமன்றத்தின் அல்லது பத்திரிகையின் உதவியை நாடக் கூடாது.

**விளக்கம்.**—இவ்விதியில் உள்ளது எதுவும் பணியாளர்த் தொகுதியில் ஒரு உறுப்பினர் தம் சொந்த நடத்தையை அல்லது தம் சொந்த முறையில். செய்யப்பட்ட யாதொரு செய்கையை நியாயமானதென்று நிலைநாட்டுவதைத் தடுப்பதாகக் கருதக் கூடாது.

17. **அலுவலக சம்பந்தமில்லாத அல்லது வேறுவெளி ஆதரவு தேடுதல்.**—பணியாளர்த் தொகுதியின் யாதொரு உறுப்பினரும் தம் பணியாற்றலில் தம் அக்கறையை மேம்படுத்திக் கொள்வதற்காகத் தம் மேலதிகாரியிடம் யாதொரு அரசியல் அல்லது வேறு வெளிச் செல்வாக்கைக் கொண்டு வரவோ அல்லது கொண்டு வர முயற்சிக்கவோ கூடாது.

18. **இரு மனைவித் திருமணங்கள்**—பணியாளர்த் தொகுதியில் யாதொரு உறுப்பினரும் தமக்கு ஒரு மனைவி உயிருடன் உள்ள போது அப்பொழுது அவருக்குப் பொருந்தும் தனிச் சட்டத்தின் கீழ் பிந்திய மணம் செல்லுவதாக இருந்த போதிலும் முதலில் அரசாங்கத்தின் அனுமதி பெற்றாலன்றி, அவர் மற்றொரு திருமணம் செய்து கொள்ளக் கூடாது.

19. **உரை விளக்கம்.**—இந்த விதிகளை விளக்கம் செய்வதின் சம்பந்தமாய் யாதொரு கேள்வி எழுந்தாலும் அது மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு அதன் மேல் அதன் தீர்ப்பே முடிவானதாகும்.

20. **நீக்கலும் காப்பும்.**—இந்த விதிகளுக்கு அடுத்து முன்னால் அமுலிலிருந்தும் பணியாளர் தொகுதியில் உறுப்பினர்களுக்குப் பொருந்தியவைகளுமானவைகளைப் போன்ற எந்த விதிகளும் இதனால் நீக்கப்படுகின்றன.

ஆனால் அப்படி நீக்கப்பட்டுள்ள விதிகளின் கீழ் செய்யப்பட்ட எந்த ஆணையும் அல்லது எடுக்கப்பட்ட எந்த நடவடிக்கையும் இந்த விதிகளின் ஆணைகளைப் போன்றவைகளின் ஏற்பாடுகளால் செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாகக் கருதப்படும்.

## அகில இந்திய பணியாளர் தொகுதிகள் (பயணப்படிகள்) விதிகள், 1954.

1954 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் தேதியில் புதுடெல்லியில் இந்திய அரசாங்க உள்துறை அமைச்சகத்தின் அடியிற்காணும் அறிக்கை மறுமுறை பிரசுரிக்கப்படுகிறது.

எண் 28-1-54 A. I. S. II —1951ஆம் ஆண்டு அனைத்திந்தியப் பணியாளர்கள் தொகுதிகள் சட்டத்தின் (1951 ஆம் ஆண்டு LXI 3-ஆவது பிரிவின் (1) ஆவது உட்பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட மாநிலங்களைக் கலந்த பிறகு அடியிற்கண்ட விதிகளை இதனால் செய்கிறது அதாவது:—

1. சிறு தலைப்பு.—இவ்விதிகள் 1954 ஆம் ஆண்டு அனைத்திந்தியப் பணியாளர்கள் தொகுதிகள் (பயணப்படிகள்) விதிகள் என்று சொல்லப்படலாம்.

2. விளக்கங்கள்.—இந்த விதிகளில் சூழ்நிலை வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலொழிய:—

(அ) 'அரசாங்கம்' என்பது யூனியன் சம்பந்தமான அலுவல்களில் பணியாற்றிக் கொண்டிருக்கும் பணியாளர் தொகுதி உறுப்பினரைப் பொருத்தவரை மத்திய அரசாங்கம் என்றும், ஒரு மாநில அலுவல் சம்பந்தமாய்ப் பணியாற்றிக் கொண்டிருக்கும் பணியாளர்த் தொகுதியின் உறுப்பினரைப் பொறுத்தவரை அந்த மாநிலத்தின் அரசாங்கம் என்றும் பொருள்படும்.

(ஆ) பணியாளர் தொகுதி உறுப்பினர் என்பது இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி அல்லது சந்தர்ப்பத்திற்கேற்றபடி காவல் பணியாளர் தொகுதியின் உறுப்பினர் என்று பொருள்படும்.

3. பயணப்படியை ஒழுங்குபடுத்தல்.—பணியாளர் தொகுதியின் ஒவ்வொரு உறுப்பினரும் பயணத்திற்காக, எல்லாவற்றிற்கும் உயர்ந்த இடவசதிக்கு (இது ரயில்வே மூலம் பயணம் செய்வதில் குளிர்ப்பதனம் செய்யப்பட்டுள்ள இடவசதியை உட்படுத்தாது) உரிமையுள்ளவர்களாவார். மற்ற எல்லாவற்றிலும் அப்படிப்பட்ட உறுப்பினருக்கு ஏற்கப்படக்கூடிய பயணப்படியும் இந்தப் படிகள் செலுத்தப்பட வேண்டிய எல்லாவற்றின் நிபந்தனைகளும் அவர்கள் அச்சமயம் எந்த அரசாங்கத்தின் கீழ்ப் பணியாற்றுகிறார்களோ அதன் முறையான விதிகளால் ஒழுங்கு செய்யப்படும்.

ஆனால், அரசாங்கம் பொது அல்லது தனிப்பட்ட ஆணையால் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் குளிர்ப் பதனம் செய்யப்பட்ட இட வசதியில் பயணம் செய்வதற்கு உரிமைப் படுத்துவதை ஒழுங்கு செய்யலாம்.

யாதொரு குறிப்பிட்ட ரயில் வண்டியில் முதல் வகுப்பு வசதியில்லாதபோது பணியாளர் தொகுதி உறுப்பினர் தம் விருப்பத்தில் குளிர்ப்பதனம் செய்யப்பட்டுள்ள இடவசதியில் பயணம் செய்யலாம். மேலும், அப்படிப் பயணம் செய்யும் போது பயணத்தின் தற்செயல் செலவுகளுக்காக மேலே சொல்லப்பட்ட சரியான விதிகளின் கீழ் முதல் வகுப்புக்குரிய உத்தேச விகிதத்தில் ரயில் கட்டணத்துடன் பயணத்தின் தற்செயல் செலவுக்காகவும் பணம் பெற உரிமையுள்ளவராவார்.

**4. மாற்றலில் அல்லது பதில் வேலைக்கு அனுப்பப்பட்டவரின் பயணப் படிகள்.**—ஒரு அரசாங்கத்தின் கீழ் பணியாற்றிக் கொண்டிருக்கும் பணியாளர் தொகுதியின் உறுப்பினரின் பயணப் படிகள் மாற்றலில் அல்லது வேறு ஒரு அரசாங்கத்தின் கீழ் பணியாற்ற அனுப்பப்பட்ட போது அவர் அப்படிப்பட்ட மாற்றலில் அல்லது வேறு வேலைகளுக்கு அனுப்பப்படுவதற்கு முன்னால் பணியாற்றிக் கொண்டிருந்த அரசாங்கத்தின் விதிகளால் தொடர்ந்து நடத்தப் படவேண்டுமென அரசாங்கத்தின் ஒரு தனிப்பட்ட அல்லது பொது ஆணையிருந்தாலொழிய, அவர் எந்த அரசாங்கத்தின்கீழ் பணியாற்ற மாற்றப்படுகிறாரோ அல்லது அனுப்பப்படுகிறாரோ அந்த அரசாங்கத்தின் விதிகளினால் வகைப்படுத்தப்படுவார்.

**5. உரை விளக்கம்.**—இந்த விதிகளை விளக்கம் செய்வது பற்றி யாதொரு கேள்வி எழுமாயின் அது மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட வேண்டும். அதன் மேல் அந்த அரசாங்கத்தின் தீர்ப்பே முடிவானதாகும்.

**6. நீக்கலும் காப்பும்.**—இந்த விதிகளுக்கு அடுத்து முன்னால் அமுலிலிருந்தவையும், பணியாளர் தொகுதியின் உறுப்பினர்களுக்குப் பொருந்தியவைகளுமான இவைகளைப் போன்ற எந்த விதிகளும் இதனால் நீக்கப்படுகின்றன.

ஆனால் அப்படி நீக்கப்பட்டுள்ள விதிகளின் கீழ் செய்யப்பட்ட எந்த ஆணையும் அல்லது எடுக்கப்பட்ட எந்த நடவடிக்கையும் இந்த விதிகளில் அவைகளைப் போன்றவற்றின் ஏற்பாடுகளால் செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாகக் கருதப்படும்.

## அனைத்திந்திய பணியாளர் தொகுதிகள் (மருத்துவ உதவி) விதிகள், 1954.

புதுடெல்லியில் 1954 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் தேதியிட்ட இந்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சகத்தின் அடியிற்கண்ட அறிக்கை மறுமுறை பிரசுரிக்கப்படுகிறது :—

எண் 6/1/54 A.I.S. II 1951 ஆம் ஆண்டு அனைத்திந்தியப் பணியாளர்கள் தொகுதிகள் சட்டத்தின் (1951 ஆம் ஆண்டு XLI) ஆவது 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி மத்திய அரசாங்கம், சம்பந்தப் பட்ட மாநில அரசாங்கங்களைக் கலந்த பிறகு இதனால் அடியிற் கண்ட விதிகளைச் செய்கிறது :—

1. **சிறுதலைப்பும் பொருந்துதலும்.**—(1) இவ்விதிகள் 1954 ஆம் ஆண்டு அனைத்திந்தியப் பணியாளர் தொகுதிகள் (மருத்துவ உதவி) விதிகள் என்று சொல்லப்படலாம்.

(2) அரசியலமைப்பின் 314 ஆம் பிரிவுக்குட்பட்டு, அவை பணியாளர் தொகுதி உறுப்பினர்களுக்கு அவர்கள் இந்தியா வுக்குள் அலுவலில் உள்ள போதும் அல்லது விடுப்பில் உள்ள போதும் அல்லது தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கி வைக்கப் பட்டிருக்கும்போதும் பொருந்தும். இந்த விதிகள் அப்படிப்பட்ட உறுப்பினர்களுக்கு அவர்கள் அச்சமயம் நியமிக்கப்பட்டுள்ள இடங்களில் உதவித் தொகை உடல்நலப் பணித் திட்டம் அமுலுக்கு வந்தவுடன் பொருந்தாமல் நின்று விடும்.

2. **விளக்கங்கள்.**—இந்த விதிகளில் சூழ்நிலை வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலொழிய,

(அ) அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் என்பது அந்தப் பணியாளர் தொகுதி உறுப்பினர் நியமிக்கப்பட்டுள்ள இடத்தில் அல்லது மாவட்டத்தில் தம் அலுவலர்களுக்கு உதவி செய்ய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள முதன்மை மருத்துவ அலுவலர் என்று பொருள்படும்.

ஆனால் அந்தப் பணியாளர் தொகுதி உறுப்பினர் நோய் வாய்ப் பட்ட போது பணியாற்றிக் கொண்டிருந்த இடத்தில் அல்லது மாவட்டத்தில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட முதன்மை மருத்துவ அலுவலர் எவரும் இல்லாவிட்டால் அந்த இடம் அல்லது

மாவட்டம் எந்த மாநிலத்திற்குள் உள்ளதோ அதன் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட அலுவலர் முதன்மை மருத்துவ அலுவலராவார்.

(ஆ) "உதவித் தொகையுடன் கூடிய உடல்நலப் பணித் திட்டம்" என்பது அரசாங்கப் பணியாளர்களுக்கும் அவர்கள் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கும் அரசாங்கத்தால் அவ்வப்போது நிர்ணயிக்கப்படக் கூடிய ஒவ்வொரு அரசாங்கப் பணியாளரின் மாதாந்திர உதவித் தொகையளிப்பின் பேரில் இலவச மருத்துவமும் சிகிச்சையும் கொடுக்க ஏற்படுத்தப்பட்ட திட்டம் என்று பொருள்படும்.

(இ) "குடும்பம்" என்பது பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினரின் மனைவியும் அல்லது அவளின் முழு ஆதரவில் உள்ள கணவரும் குழந்தைகளும் மாற்றுள் குழந்தைகளும் என்று பொருள்படும்.

(ஈ) "அரசாங்கம்" என்பது யூனியன் சம்பந்தமான அலுவல்களில் பணியாற்றிக் கொண்டிருக்கும் பணியாளர் தொகுதி உறுப்பினரைப் பொருத்தவரை மத்திய அரசாங்கம் என்றும் ஒரு மாநில அலுவல் சம்பந்தமாய் பணியாற்றிக் கொண்டிருக்கும் பணியாளர் தொகுதி உறுப்பினரைப் பொருத்தவரை அந்த மாநிலத்தின் அரசாங்கம் என்றும் பொருள்படும்.

(உ) "அரசினர் மருத்துவ மனை" என்பதில் ஒரு இராணுவ மருத்துவமனையையும் மத்திய அரசாங்கத்தால் இதற்காக அறிவிக்கப்பட்ட யாதொரு ரயில்வே மருத்துவமனையையும் ஒரு உள்ளாட்சியால் நடத்தப்படும் மருத்துவ மனையும் தம் அலுவலர்களுக்குச் சிகிச்சை அளிக்க அரசாங்கத்தால் ஏற்பாடுகள் செய்து கொள்ளப்பட்ட மற்ற எந்த மருத்துவ மனையையும் உள்ளடங்கும்.

(ஊ) "மருத்துவ உதவி" என்பது ஒரு அரசினர் மருத்துவ மனையிலும் அல்லது பணியாளர் தொகுதி உறுப்பினர் வசிக்கும் இடத்திலும் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரால் நடத்தப்படும் மருத்துவ ஆலோசனை அறையிலும் அவருடன் ஏற்பாடு செய்து கொண்டு பெறும் உதவி என்று பொருள்படும் அதில்—

(i) அம்மாநிலத்தின் அரசினர் மருத்துவ மனையில் அல்லது ஆய்வுக் கூடத்தில் உள்ளவற்றில், நோய் கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் உள்ளவற்றில் நோய்க் குறிமுறை, நுண்ணுயிர் முறை,

கதிரியக்க முறை அல்லது வேறு முறைகளால் அதிகாரமளிக்கப் பட்டுள்ள மருத்துவ உதவியாளர் தேவையென்று கருதும் சோதனைகளைச் செய்வதும் ;

(ii) அதிகாரமளிக்கப்பட்டுள்ள மருத்துவ உதவியாளர் தேவையென்று சான்றளிக்கும் அளவிற்கு அரசாங்கப் பணியிலுள்ள பிற எந்த மருத்துவ அலுவலரையும் அல்லது சிறப்பறிஞரையும், அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த அளவிலும் முறையிலும் அவர்களோடு மருத்துவ உதவியாளர் கலந்து ஆலோசிப்பதும் அடங்கும்.

(எ) 'பணியாளர் தொகுதி உறுப்பினர்' என்பது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி அல்லது இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் என்று பொருள்படும்.

(ஏ) 'செவிலியர்' என்பது அந்த மாநிலத்தின் தலைமைச் செயல் மருத்துவ அலுவலரால் அங்கிகரிக்கப்பட்டுள்ள ஒரு சான்றிதழை அல்லது அத்தாட்சிப் பத்திரத்தையுடைய ஒரு தகுதி பெற்ற செவிலியர் என்றும் அல்லது செவிலியர்களைப் பதிவு செய்யச் சட்ட ஏற்பாடுள்ள ஒரு மாநிலத்தில் பதிவு செய்யப் பட்ட செவிலியர் என்றும் பொருள்படும்.

(ஐ) "நோயாளி" என்பது மருத்துவ உதவியும் சிகிச்சையும் பெறவேண்டிய ஒரு பணியாளர் தொகுதி உறுப்பினர் என்று பொருள்படும்.

(ஒ) மாநிலம் என்பது அந்தப் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் நோய்வாய்ப்படும் மாநிலம் என்று பொருள்படும்.

(ஓ) சிகிச்சை என்பது ஒரு நோயாளி, சிகிச்சையளிக்கப் படும் அரசினர் மருத்துவ மனையிலுள்ள எல்லா மருத்துவ அறுவைச் சிகிச்சை வசதிகளைப் பயன்படுத்துதல் என்று பொருள் படும். அதில்—

(i) அதிகாரமளிக்கப்பட்டுள்ள மருத்துவ உதவியாளர் தேவை என்று கருதும் நோய்க் குறி முறைக்கும், நுண்ணுயிர் முறை, கதிரியக்க முறை வேறு எந்த முறைகளையும் பயன்படுத்திக் கொள்வதும் ;

(ii) உடல் சம்பந்தமாக அல்லது வேறு இயலாமை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள ஒரு நோயாளியின் நோயை தீர்மானிப்பதில், அந்த நிலைமைக்குப் பற்கள் உண்மையான

காரணம் என்று காணப்பட்டு, அது ஒரு தாடை எலும்புச் சிகிச்சை, பற்களை முழுவதையும் எடுத்துவிடல் முதலிய பெரிய வகைச் சிகிச்சையாயிருந்தால், அந்தப் பல் சிகிச்சையும்;

**விளக்கம்.**—பல்ருல் கட்டிகளை நீக்கவும் அல்லது மோதும் நடைவாய்ப் பல்லை நீக்கவும் தேவைப்படும் அறுவை நடவடிக்கைகள் ஒரு பெரும் பல் சிகிச்சை முறையின் கீழ் வருவனவாகும். ஈறுக் கட்டிகள் சிகிச்சை வாய் அறுவை சிகிச்சையில் வருவதால் அதுவும் இந்த விதிகளின் கீழ் ஏற்கப்படும். பல் ஈறு சம்பந்தமான ரத்தம் கசியும் நோயும் பற்களின் ஈறு வீக்கமும் இதில் சேரா.

(iii) மாநில மருத்துவ மனைகளில் சாதாரணமாய் வைக்கப்பட்டுள்ள மருந்துகள் தடுப்பு ஊசி மருந்துகள் ஊன் நீர்கள் அல்லது பிற மருத்துவப் பொருட்கள் வழங்குதலும்;

(iv) அந்த நோயாளி குணமடைவதற்கும் அல்லது அவருடைய உடல்நிலை அபாயகரமாகச் சீர்கெட்டு விடுவதைத் தடுப்பதற்கு அவசியம் என்று எழுத்தால் அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் சான்றளிக்கக் கூடிய சாதாரணமாகக் கைவசமில்லாத அத்தகைய மருந்துகளையும், தடுப்பு ஊசி மருந்துகளையும், நிணநீர்களையும் அல்லது மற்ற மருத்துவப் பொருட்களையும் வழங்கலும்;

(v) அந்த நோயாளி சேர்க்கப்பட்டுள்ள அவர் தகுதிக்குத் தக்க அந்த மருத்துவ மனையில் சாதாரணமாக உள்ள இட வசதியும்;

(vi) அந்த நோயாளி சேர்க்கப்பட்டுள்ள மருத்துவ மனையில் சாதாரணமாக அமர்த்தப்பட்டுள்ள அத்தகைய செவிலியர் பணிகளும்;

(vii) அந்த நோயின் தன்மையைக் கருதி அவர் குணமடைவதற்கும் அல்லது அவரது உடல் நிலை அபாயகரமாகச் சீரடைந்து விடுவதைத் தடுப்பதற்கு அவசியம் என்று எழுத்தால் அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் சான்றளிக்கக் கூடிய அத்தகைய சிறப்பான செவிலிப் பணிக்கும்;

(viii) (ஊ) பகுதியின் (ii) ஆம் உட்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள மருத்துவ உதவியும்; அடங்கும்.

ஆனால், உணவும் அல்லது நோயாளியின் வேண்டுகோளின் பேரில் ( V ) ஆம் உட்பகுதியில் விவரிக்கப்பட்டுள்ள இடவசதிக்கு மேலானதொரு இடவசதியும் இதில் சேராது.

3. **அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரால் செய்யப்படும் மருத்துவ உதவி.**—(1) பணியாளர்த் தொகுதியின் ஒரு உறுப்பினர் அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரால் இலவச மருத்துவ உதவிக்கு உரிமையுடையவராவார்.

(2) பணியாளர் தொகுப்பின் ஒரு உறுப்பினர் உள்விதி (1)-ன் கீழ் இலவச மருத்துவ உதவிக்கு உரிமையாயுள்ளவைகளில், அப்படிப்பட்ட மருத்துவ உதவிக்காக அவரால் செலவு செய்யப்பட்ட யாதொரு தொகையும், அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரால் அதற்காக எழுத்து மூலம் ஒரு சான்று அளிக்கப்படுவதன் மேல் அரசாங்கத்தால் அந்தப் பணியாளர்த் தொகுதியின் உறுப்பினருக்கு ஈடு செய்யப்படும்.

4. **பணியாளர் தொகுதியின் உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு மருத்துவ உதவியும் சிகிச்சையும்.**—(1) பணியாளர்த் தொகுதியின் ஒரு உறுப்பினரின் குடும்பத்தினர்கள், இந்த விதிகளின் கீழ் பணியாளர்த் தொகுதியின் உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும் வீதத்திலும். நிபந்தனைகளின் மேலும் ஒரு அரசினர் மருத்துவ மனையில் இலவசமாக மருத்துவ உதவிக்கும் சிகிச்சைக்கும் உரிமையுள்ளவர்களாவார்கள். இந்தச் சலுகையில்—

( i ) ஒரு அரசினர் மருத்துவ மனையில்; அல்லது

( ii ) அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளருடன் ஏற்பாடு செய்து கொள்வதால் அவரால் வைத்து நடத்தப்படும் ஆலோசனை அறையில் செய்யப்படும் சிகிச்சை தவிர ஏனைய மருத்துவ உதவி சேராது.

ஆனால் கவலைக்கிடமான நோய் நிலைமைகளில் அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர், அந்தக் குடும்பத்தின் உறுப்பினரை மருத்துவ மனைக்குக் கொண்டு செல்வது அபாயகரமானதும் உயிருக்குக் கெடுதி விளைவிக்கக் கூடியதும் என்று கருதினால் மருத்துவ உதவியும் சிகிச்சையும் அவர் குடியிருக்குமிடத்திலேயே அளிக்கலாம.

(2) அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரைக் கலந்து ஆலோசிப்பதற்காகச் செய்யப்படும் யாதொரு பயணத்திற்கும் குடும்பங்களின் உறுப்பினர்களுக்கு யாதொரு பயணப்படியும் அளிக்கப்பட மாட்டாது. ஆயினும், அந்த மாவட்டத்தில் அல்லது மாநிலத்தில் வெளியே உள்ள ஒரு அரசு, சிறப்பறிஞரைக் கலந்து ஆலோசிப்பதற்காகச் செய்யப்படும் ஒரு பயணம் சம்பந்தமாய் அப்படிப்பட்ட பயணப்படி அளிக்கப்படும்.

(3) உள்விதி (1) இல் குறிக்கப்பட்டுள்ள மருத்துவ உதவியும் சிகிச்சையும் என்பதில் ஒரு மருத்துவ மனையில் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினரின் மனைவியின் பிள்ளை பேறு மருத்துவமும் பிள்ளைப் பேறுக்கு முந்தியதும், பிந்தியதுமான சிகிச்சையும் சேர்த்துக் கொள்ளப்படும்.

5. **பயணப்படிகள்.**—ஒரு நோயாளி நோய்வாய்ப்படும் இடம் அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரின் தலைமையிடமாயில்லாதபோது—

(அ) அந்த நோயாளி அத்தகைய தலைமை இடங்களுக்குப் போகவும் வரவுமான பயணத்திற்குப் பயணப்படிக்கு உரிமையுள்ளவராவார்; அல்லது

(ஆ) அந்த நோயாளி பயணம் செய்யக் கூடாதபடி அவ்வளவு நோயுடையவராயிருந்தால் அந்த நோயாளியிருக்கும் இடத்திற்குள் போகவும் வரவும் அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் பயணப்படி பெற உரிமையுள்ளவராவார்.

ஆனால், ஒரு நோயாளி, ஒரு பல் மருத்துவரால் அல்லது கண் மருத்துவரால் செய்யப்படும் உதவிக்காக மேற்கொள்ளும் பயணத்திற்குப் பயணப்படி பெற உரிமையுள்ளவராகமாட்டார்.

(2) உள்விதி (1) இன் கீழ் பயணப்படிக்கான ஒரு விண்ணப்பத்தோடு, அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரால் மருத்துவ உதவி தேவையாயிருந்தது என்றும், அந்த விண்ணப்பம் உள்விதியின் (ஆ) கூற்றின் கீழ் உள்ளதாயிருந்தால், அந்த நோயாளி பயணம் செய்யக்கூடாதபடி அவ்வளவு நோய் வாய்ப்பட்டிருக்கிறாரென்றும் எழுத்து மூலமான ஒரு சான்றிதழைச் சேர்த்து அனுப்ப வேண்டும்.

**6. அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவர் அல்லாத வேறு ஒருவரால் மருத்துவ உதவி.**—(1) அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் ஒரு நோயாளியின் நோய், தன்னைத் தவிர வேறு ஒரு நபரால் மருத்துவ உதவி பெற வேண்டிய அத்தகைய கவலைக்கிடமுள்ளதாகவும் அல்லது தனிப்பட்ட தன்மையுள்ளது என்றும் கருதினால் அவர், அந்த மாநிலத்தின் தலைமைச் செயல் மருத்துவ அலுவலரின் ஏற்பை எந்தத் தாமதமும் நோயாளியின் உடலுக்கு அபாயம் உண்டாக்கக் கூடியதாயிருந்தாலொழிய முன்னதாகவே பெற வேண்டும். அந்த ஏற்புடன்,

(அ) நோயாளிக்குத் தம் அபிப்பிராயத்தில் எந்த மருத்துவ உதவி தேவைப்படுகிறது என்று தோன்றுகிறதோ, மிகவும் அண்மையிலுள்ள அந்தச் சிறப்பறிஞரிடம் அல்லது (மாநிலத்துக்குள் உள்ள) வேறு மருத்துவரிடமும் 2-ஆம் விதியின் (ஊ) பகுதியில் ஏற்படுத்தப்பட்டுள்ளபடி நோயாளியை அனுப்பலாம்;

(ஆ) அந்த நோயாளி பயணம் செய்யக்கூடாதபடியான நிலையிலிருந்தால் அப்படிப்பட்ட சிறப்பறிஞரை அல்லது வேறு மருத்துவ அலுவலரை அந்த நோயாளிக்குச் சிகிச்சையளிப்பதற்கு வரவழைக்கலாம்.

(2) ஒரு நோயாளி உள்விதி (1)-இன் (அ) பகுதியின் கீழ் ஒரு சிறப்பறிஞரிடம் அல்லது வேறு மருத்துவ அலுவலரிடம் அனுப்பப்பட்டபோது அவர், அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரின் இதற்கான ஒரு எழுத்து மூலமான சான்றிதழைத் தாக்கல் செய்வதன் பேரில் அந்தச் சிறப்பறிஞரின் அல்லது வேறு மருத்துவ அலுவலரின் தலைமை இடத்திற்குப் போய் வருவதற்குப் பயணப்படி பெற உரிமையுள்ளவராவார்.

(3) உள்விதி (1)-இன் (ஆ) பகுதியின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு சிறப்பறிஞர் அல்லது பிற மருத்துவ அலுவலர் அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளருடைய இதற்கான ஒரு எழுத்து மூலமான சான்றிதழைத் தாக்கல் செய்வதன் மேல் அந்த நோயாளி உள்ள இடத்திற்குப் போய் வருவதற்கான பயணப்படி பெற உரிமையுள்ளவராவார்.

**7. சிகிச்சை பெறக்கூடிய மருத்துவ பணிகளும் அவைகளுக்காகச் செலவை ஈடு செய்தலும்;**

(1) பணியாளர்த் தொகுதியின் ஒவ்வொரு உறுப்பினரும் அடியிற்கண்ட இடங்களில் இலவசமான சிகிச்சை பெற உரிமையுள்ளவராவர்.

(அ) அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் தேவையானதும் தகுதியுடையதுமான சிகிச்சையளிக்கக்கூடியது எனக் கருதும் நோய் ஏற்பட்ட இடத்தில் அல்லது மாவட்டத்தில் உள்ள அரசினர் மருத்துவ மனையிலும் அல்லது

(ஆ) கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ளபடி ஒரு மருத்துவ மனையில்லாவிட்டால் அந்த இடத்தில் அல்லது மாவட்டத்தில் இல்லாத வேறு ஒரு மருத்துவமனையில் மருத்துவத் தேவையானதும் தகுதியானதுமான சிகிச்சையளிக்கக்கூடும் என அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் கருதுவாரானால், அதிலும்;

(இ) (அ) (ஆ) கூற்றுகளில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய மருத்துவ மனையில்லாவிட்டால் அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரின் கருத்தில் தேவையானதும் தகுதியானதுமான சிகிச்சையளிக்கக் கூடிய அந்த மாநிலத்திலுள்ள அத்தகைய மருத்துவ மனையிலும்;

ஆனால் யாதொரு தனிப்பட்ட நிகழ்வில், அந்த அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் அதற்குத் தேவையானதும் தக்கதுமான மருத்துவச் சிகிச்சை மாநிலத்திற்கு வெளியேயுள்ள (ஆனால் இந்தியாவுக்குள்) ஒரு மருத்துவ மனையில் தான் உள்ளது என்று கருதினால் அவர் அந்த மாநிலத்தின் தலைமைச் செயல் மருத்துவ அலுவலரின் ஏற்புடன் (அதில் நேரக் கூடிய தாமதம் அந்த நோயாளியின் உடலுக்கு அபாயம் உண்டாக்கக் கூடியதாயிருந்தாலொழிய இந்த ஏற்பு முன்னதாகவே பெறப்பட வேண்டும்) அத்தகைய மருத்துவ மனையில் சிகிச்சைக்காக அந்த நோயாளியை அனுப்பலாம்.

(2) பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் உள்விதியின் (1)-இன் கீழ் ஒரு மருத்துவ மனையில் இலவசச் சிகிச்சைக்கும் உரிமையுள்ளவராக இருக்கும்போது அத்தகைய சிகிச்சைக்காக அவரால் செலவு செய்யப்பட்ட யாதொரு தொகையும் அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ அலுவலரால் இதற்காக எழுத்து மூலமாக ஒரு சான்றிதழ் அளிக்கப்படுவதன் மேல் அரசாங்கத்தால்

அந்தப் பணியாளர் தொகுதியின் உறுப்பினருக்கு ஈடு செய்யப்படும்.

ஆனல், அப்படிப்பட்ட சிகிச்சையில், தனிப்பட்ட சிறப்புச் செவிலிப் பணி ஒரு பாகமாய்ச் சேர்ந்திருந்தால், அத்தகைய சிறப்புச் செவிலிப் பணி சம்பந்தமான ஈடு செய்யப்பட வேண்டிய தொகை, சிறப்புச் செவிலிப் பணிக் காலத்திற்கு அந்தப் பணியாளர் தொகுதி உறுப்பினரின் சம்பளத்தில் 25 சதவீதத்திற்கு மேற்பட்ட தொகைக்கு வரையறுக்கப்படும்.

8. இருப்பிடத்தில் சிகிச்சை.—(1) ஒரு தக்க மருத்துவ மனையில்லாமையினலோ அல்லது தகுதியான மருத்துவ மனை தொலைவில் இருப்பதாலோ அல்லது நோயின் கடுமையினலோ பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினருக்கு 7-ஆவது விதியின் (1)-ஆவது உள்விதியின் கீழ் ஏற்படுத்தியுள்ளபடி சிகிச்சையளிக்க முடியாது என்று அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளர் கருதினல் அவர் தம் இருப்பிடத்திலேயே சிகிச்சை பெறலாம்.

(2) பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் (1) ஆவது உள்விதியின் கீழ் தம் இருப்பிடத்திலேயே சிகிச்சை பெற்றுக் கொண்டிருக்கும்போது, அவர் இந்த விதிகளின் கீழ் தம் இருப்பிடத்திலேயே சிகிச்சை பெருமலிருந்தால் அவர் இலவசமாக எத்தகைய சிகிச்சை பெற்றிருப்பாரோ அத்தகைய சிகிச்சையின் செலவுக்குச் சமமான தொகையைச் சிகிச்சையின் போது அவரால் செய்யப்பட்ட செலவிற்காகப் பெற்றுக்கொள்ள உரிமையுள்ளவராவார்.

(3) உள்விதி (2)-இன் கீழ் ஏற்படக்கூடிய யாதொரு தொகைக்கான ஒரு உரிமைக் கோரிக்கையோடு அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரின் ஒரு எழுத்து மூலமான சான்றிதழும் சேர்த்து அனுப்பப்பட வேண்டும்; அதில்

(அ) (1)-ஆவது உள்விதியில் குறிப்பிட்டுள்ள கருத்திற்கு தம்முடைய காரணங்கள்;

(ஆ) (2)-ஆவது உள்விதியில் குறிப்பிட்டுள்ள அதைப் போன்ற சிகிச்சையில் செலவுத் தொகை;

(ஆகியவை கண்டிருக்க வேண்டும்.

9. மருத்துவ உதவியைத் தவிர மற்றப் பணிகளுக்காக செலவுத் தொகைகள் செலுத்தப்பட வேண்டும்.

(1) இந்த விதிகளின் கீழ் இலவச மருத்துவ உதவிக்கு அல்லது சிகிச்சைக்கு உரிமையுள்ள ஒரு நோயாளியின் மருத்துவ உதவியில் அல்லது சிகிச்சையில் சேர்ந்தில்லாத, ஆனால் அவை களின் சம்பந்தமாய் செய்யப்பட்ட யாதொரு பணிகளின் யாதொரு செலவு, அதிகாரமளிக்கப்பட்டுள்ள மருத்துவ உதவியாளரால் நிர்ணயிக்கப்பட்டு நோயாளியால் செலுத்தப்பட வேண்டும்.

(2) யாதொரு பணியும் மருத்துவ உதவியில் அல்லது சிகிச்சையில் சேர்ந்துள்ளதா என்று யாதொரு கேள்வி எழு மாயின், அது அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு அதன் மேல் அரசாங்கம் செய்யும் தீர்ப்பே முடிவானதாகும்.

10. பயணப்படி ஈடு செய்யப்படுவதற்காகச் சான்றிதழின் மேலொப்பம்.—அரசாங்கம் பொது அல்லது தனிப்பட்ட ஆணையால் அதிகாரமளிக்கப்பட்ட மருத்துவ உதவியாளரால் இந்த விதிகளின் கீழ் அளிக்கப்பட வேண்டிய யாதொரு சான்றிதழும், ஒரு நோயாளியின் பயணப்படி நோக்கத்திற்காகக் கட்டுப்பாட்டு அலுவலரால் அளிக்கப்பட வேண்டிய சான்றிதழும், அந்த மாநிலத்தின் தலைமைச் செயல் மருத்துவ அலுவலரால் மேலொப்ப மிடப்பட வேண்டும் என்று கட்டளையிடலாம்.

11. அயல்பணிக்கு மாற்றம்.—பணியாளர் தொகுதியின் யாதொரு உறுப்பினரும் அவருக்குக் கூடிய வரையில் அவர், இந்த விதிகளின் கீழ் அரசினர் பணியில் அமர்த்தப்பட்டிருந்தால் எத்தகைய சலுகைகளுக்கு உரியவராவாரோ, அத்தகைய வற்றிற்குக் குறையாத சலுகைகளைக் கூடிய வரை அளிப்பதாக வெளி நாட்டில் வேலை கொடுப்பவர் உறுதியளித்தாலொழிய, அவரை வெளி நாட்டுப் பணிக்கு மாற்றப்படலாகாது;

ஆனால் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் தம் வேண்டுகோளின் பேரில் மாற்றப்பட்டாலும் அந்தப் பணியாளர் தொகுதி உறுப்பினர் இந்த விதியின் ஏற்பாடு தமக்குப் பொருந்தத் தேவையில்லையென்று எழுத்து மூலமாகக் குறிப்பாகக் கேட்டுக் கொண்டாலும் அவரைப் பொருத்தவரை இந்த விதியின் ஏற்பாடுகள் பொருந்தா;

**12. உள்நாட்டு சிவில் கலகங்களால் ஏற்பட்ட காயங்கள்**—(1) ஒரு கலகம் ஏற்பட்டுள்ள பாப்பில் பணியாற்றும் ஒரு பணியாளர் தொகுதியின் உறுப்பினர், தொடர்ந்து பணியிலுள்ளதாகப் பாவிக்கப்பட்டு, அந்தக் கலகத்தின் விளைவாக அவரால் பெறப்பட்ட யாதொரு காயமும் அந்த நிகழ்வில் நடந்த உண்மைகள், அதற்கு மாறாக ஒரு குறிப்பைத் தெளிவாகக் காட்டினாலன்றி, அத்தகைய பணியாற்றும் போது அது பெறப்பட்டதாகக் கருத வேண்டும்.

(2) பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் அந்தக் கலகம் சம்பந்தமாய்ப் பணியிலுள்ள போது யாதொரு காயம் அடைந்தால் அவர் இலவசமாக (2)-ஆவது விதியின் (ஊ), (ஓ) கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவ உதவிக்கும் சிகிச்சைக்கும் உரிமையுள்ளவராவார்.

(3) ஒரு கலகம் ஏற்பட்ட பாப்பில், விடுப்பில் உள்ள ஒரு பணியாளர் தொகுதியின் உறுப்பினரும் கூட அவர் ஒரு அரசினர் பணியாளராயிருப்பதால் தாக்கப்பட்டுக் காயம் அடைந்துள்ளார் என்று உறுதிப்படுத்தப்பட்டால் மேலே (2)-ஆம் உள்விதியில் சொல்லப்பட்டுள்ள சலுகைகளுக்கு உரிமையுள்ளவராவார்.

**13. உரை விளக்கம்.**—இந்த விதிகளுக்கு உரை விளக்கம் சொல்லும் சம்பந்தமாய் யாதொரு கேள்வி எழுமாயின் அது மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு அதன் மேல் அதன் தீர்ப்பே முடிவானதாகும்.

**14. காப்பு.—இந்த விதிகளிலுள்ளவை எவையும்** :—

(1) இந்த விதிகளில் தெளிவாகக் கூறப்பட்டபடியல்லாது வேறு விதமாகப் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் பெற்ற மருத்துவ பணிகளுக்கான யாதொரு செலவுக்கும் அல்லது அவரால் செய்யப்பட்ட யாதொரு பயணத்திற்கான பயணப் படிக்கும் ஈடு செய்துகொள்ள உரிமையுள்ளவராகவும்; அல்லது

(ii) இந்த விதிகளால் அதிகாரமளிக்கப்படாத மருத்துவச் சிகிச்சை அல்லது மருத்துவ உதவி அல்லது அவரால் செய்யப்பட்ட யாதொரு பயணத்திற்கான பயணப்படி சம்பந்தமாய் யாதொரு சலுகையை அளிப்பதிலிருந்து அரசாங்கத்தைத் தடுப்பதாகவும்

## அனைத்திந்தியப் பணியாளர் தொகுதிகள் (ஈட்டுப்படி) விதிகள், 1954.

1954 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் தேதியிட்ட, புதுடெல்லி இந்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சகத்தின் அடியிற்கண்ட அறிவிக்கை மறுபடியும் பிரசுரிக்கப்படுகிறது.

எண் 20/1/54 A.I.S.(11) 1951 ஆம் ஆண்டு அனைத்திந்தியப் பணியாளர் தொகுதிகள் சட்டத்தின் (1954 ஆம் ஆண்டு LXI ) 3 ஆவது பிரிவின் ( ) ஆவது உட்பிரிவால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் அரசாங்கங்களைக் கலந்த பிறகு இதனால் அடியிற்கண்ட விதிகளைச் செய்கிறது ; அவையாவன :—

1. **சிறு தலைப்பு.**—இந்த விதிகள் 1954 ஆம் ஆண்டு அனைத்திந்தியப் பணியாளர் தொகுதிகள் (ஈட்டுப்படி) விதிகள், 1954 என்று சொல்லப்படலாம்.

2. **விளக்கங்கள்.**—இந்த விதிகளில் சூழ்நிலை வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலொழிய,

(அ) "ஈட்டுப்படி" என்பது தனிப்பட்ட சூழ்நிலைகளில் பணியாற்றுவதால் ஏற்பட்ட தனிப்பட்ட சொந்தச் செலவுகளை ஈடு செய்வதற்காக அளிக்கப்பட்ட ஒரு படியென்று பொருள் படும். ஆனால் அது அகவிலைப்படியும், செலவைக் கட்டுப்படுத்துகிற படியும் அல்லது 1956 ஆம் ஆண்டு அனைத்திந்தியப் பணியாளர் தொகுதிகள் சட்டத்தின் (1951 ஆம் ஆண்டு LXI ) கீழ் அவ்வப் போது செய்யப்பட்ட தனிப்பட்ட விதிகளால் ஒழுங்குபடுத்தப் படும் வேறு ஏதேனும் படியும் இதில் சேரா.

**விளக்கம்.**—இந்த விதிகளின் நோக்கங்களுக்காக வாடகை யில்லாமல் இலவசக் குடியிருப்பு வசதி, ஈட்டுப்படியாகக் கருதப்படும்.

(ஆ) அரசாங்கம் என்றால் யூனியன் சம்பந்தமாய்ப் பணி யாற்றிக் கொண்டிருக்கும் பணியாளர்த் தொகுதியின் ஒரு உறுப்பினரைப் பொருத்தவரை மத்திய அரசாங்கம் என்றும் ஒரு மாநில அலுவல் சம்பந்தமாய்ப் பணியாற்றும் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினரைப் பொருத்தவரை அந்த மாநிலத்தின் அரசாங்கம் என்றும் பொருள்படும்.

(இ) "பணியாளர் தொகுதியின் உறுப்பினர்" என்ருல் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதியின் அல்லது இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் என்று பொருள்.

3. ஈட்டுப்படி ஒழுங்கு முறைப்படுத்தல்.—பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினருக்கு ஏற்படக்கூடிய ஒரு ஈட்டுப்படி அளிப்பும் அது எந்த நிபந்தனைகளுக்குட்பட்டு அளிக்கப்படலாம் என்பதும் அப்படிப்பட்ட உறுப்பினர் அச்சமயம் எந்த அரசாங்கத்தின் கீழ் பணியாற்றிக் கொண்டிருக்கிருரோ அந்த அரசாங்கத்தால் அவ்வப்போது செய்யப்படக் கூடிய அப்படிப் பட்ட பொது அல்லது தனிப்பட்ட ஆணையாளரால் ஒழுங்கு படுத்தப்படும்.

4. உரை விளக்கம்.—இந்த விதிகளுக்கு உரை விளக்கம் சொல்லும் சம்பந்தமாய் யாதொரு வினு எழுந்தால் அது மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு அதன்மேல் அதன் தீர்ப்பே முடிவானதாகும்.

**இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (ஆட்கள் சேர்த்தல்) விதிகள், 1954.**

1954 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ஆம் தேதியிட்ட புதுடெல்லி இந்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சகத்தின் அடியிற்கண்ட அறிவிக்கை மறுபடியும் பிரசுரிக்கப்படுகிறது :—

எண் 3/4/54 AIS. (11) 1951 ஆம் ஆண்டு அனைத்திந்தியப் பணியாளர் தொகுதிகள் சட்டத்தின் (1951 ஆம் ஆண்டு LXI) 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங் களைப் பயன்படுத்தி மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட மாநிலங்களைக் கலந்த பிறகு இதனுல் அடியிற்கண்ட விதிகளைச் செய்கிறது ; அவையாவன :—

1. சிறு தலைப்பு.—இந்த விதிகள் இந்தியக் காவல் பணி யாளர் தொகுதி (ஆட்கள் சேர்த்தல்) விதிகள், 1954 என்று சொல்லப்படலாம்.

2. விளக்கங்கள்.—இந்த விதிகளில் சூழ்நிலை வேறு விதமாய்த் தேவைப்படுத்தினுலொழிய,—

(அ) 'ஆணைக் குழு' (கமிஷன்) என்பது மத்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழு என்று பொருள்படும்.

(ஆ) 'கூட்டுப் பணி அமைப்பு'ம் 'மாநிலப் பணி அமைப்பு'ம் முறையே 1954 ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதிப் (பணி அமைப்பு) விதிகளில் அளிக்கப் பட்டுள்ள பொருளையே கொண்டுள்ளன.

(இ) 'இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் உறுப்பினர்' என்பது இந்தியாவில் அரசின் கீழ் இந்தியக் காவல் என்று சொல்லப்பட்ட காவல் பணியாற்ற நியமிக்கப்பட்டிருந்து, இந்த விதிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும் அதற்குப் பிறகும், இந்திய அரசாங்கத்தின் கீழ் தொடர்ந்து பணியாற்றும் ஒரு நபர் என்று பொருள்படும்.

(ஈ) 'பணியாளர் தொகுதி' என்பது இந்தியக் காவல் பணியாளர் தொகுதியென்று பொருள்படும்.

(உ) 'மாநிலம்' என்பது ஒரு அ பிரிவு மாநிலம் அல்லது ஜம்மு, காஷ்மீர் மாநிலம் தவிர ஏனைய ஆ பிரிவு மாநிலம் என்று பொருள்படும். விந்தியப் பிரதேசம் மாநிலமும் இதில் அடங்கும்.

(ஊ) 'மாநில அரசாங்கம்' என்பது விந்தியப் பிரதேச மாநிலத்திற்குச் சம்பந்தப்படும்போது அதன் லெப்டினென்ட் கவர்னர் என்று பொருள்படும்.

(எ) 'சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கம்' என்பது ஒரு கூட்டுப் பணி அமைப்புக்குச் சேர்ந்தவரையில் அந்தக் கூட்டுப் பணி அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா மாநிலங்களின் அரசாங்கங்களும் என்று பொருள்படும். ஒரு குறிப்பிட்ட பொருளில் தங்களுக்காகப் பிரதிநிதித்துவம் வகிக்க நியமிக்கப் பட்ட ஒரு மாநிலத்தின் அரசாங்கமும் இதில் அடங்கும்.

(ஏ) 'மாநிலக் காவல் பணியாளர் தொகுதி' என்பது ஒரு மாநிலத்தின் முக்கியக் காவல் பணியாளர் தொகுதி என்று பொருள்படும். காவல் ஆட்சி முறையின் காரியங்களுக்காக அதன் உறுப்பினர் சாதாரணமாக ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த உட்கோட்டத்தின் பொறுப்பிலிருப்பார். முறையாக அமைக்கப் பட்டும் மாநில அரசால் சமமானதென்று அறிவிக்கப்பட்டு ஒரு மாநிலத்தில் செயலாற்றும் ஏதேனும் மற்றக் காவல் பணியும் இதில் அடங்கும்.

3. **பணியாளர் தொகுதியின் அமைப்பு**—(1) அந்தப் பணி யாளர் தொகுதி அடியிற்கண்டவர்களைக் கொண்டுள்ளது :—

(அ) இந்தியக் காவல் துறை உறுப்பினர்கள் ;

(ஆ) இந்த விதிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்பு பணியாளர் தொகுதிக்குச் சேர்க்கப்பட்டுள்ள உறுப்பினர்கள்;

(இ) இந்த விதிகளின் ஏற்பாடுகளுக்கு இணங்க, பணியாளர் தொகுதிக்குச் சேர்க்கப்பட்டுள்ளவர்கள்.

(2) இந்த விதிகளில் உள்ளது எதுவும் அரசியலமைப்பில் 314 ஆம் பிரிவில் உள்ள ஏற்பாடுகளை, அவைகள் இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் உறுப்பினர்களுக்குப் பொருந்தக்கூடிய அளவில் பாதிப்பதாகப் பொருள் கொள்ளக் கூடாது.

**4. பணியாளர் தொகுதிக்கு ஆட்கள் சேர்க்கப்படும் முறைகள்.**—(1) இந்த விதிகள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு ஆட்கள் சேர்த்தல் அடியிற் கண்ட முறைகளிலிருக்க வேண்டும்; அவை யாவன—

(அ) ஒரு போட்டியுள்ள தேர்வு மூலம்;

(ஆ) ஒரு மாநிலக் காவல் பணியாளர் தொகுதியின் உறுப்பினர்களுக்கு உயர்வு அளிப்பதின் மூலம்.

(2) இந்த விதிகளின் ஏற்பாடுகளுக்குட்பட்டு பணியாளர் தொகுதியிலுள்ள யாதொரு காலியுள்ள இடத்தை அல்லது இடங்களை நிரப்பவும் அல்லது ஆட்கள் சேர்க்கும் காலத்தில் நிரப்பத் தேவைப்படுதற்குரிய காலியிடங்களை நிரப்பவும் கையாளப்பட வேண்டிய முறையையும் அல்லது முறைகளையும் ஒவ்வொரு முறையிலும் சேர்க்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கையையும் ஒவ்வொரு தரமும் மத்திய அரசாங்கம் ஆணைக் குழுவையும் மாநில அரசாங்கத்தையும் கலந்து நிர்ணயிக்கும்.

**5. நியமிக்கப்படுவதற்குத் தகுதியின்மைகள்.**—(1) எவரொருவரும் சாதாரணமாக ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் வசிக்காதவராய், இந்திய நாட்டவராயிருந்தாலொழிய அவர் இந்தப் பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்படத் தகுதியுள்ளவராக மாட்டார்.

(2) உயிருடன் உள்ள ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளையுடைய யாதொரு நபரும் இந்தப் பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்படத் தகுதியுடையவராக மாட்டார்.

ஆனால் மத்திய அரசாங்கம் அப்படிச் செய்வதற்குச் சிறப்பான காரணங்கள் இருக்கின்றன என்று மனநிறைவு கொண்டால் இந்த உள் விதியின் செயலிலிருந்து யாதொரு நபருக்கும் விலக்கு அளிக்கலாம்.

(3) யாதொரு திருமணமான பெண்பிள்ளையும் இந்தப் பணியாளர் தொகுதியில் உரிமையோடு நியமிக்கப்படத் தகுதியுடையவளாகமாட்டாள். பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள ஒரு பெண்மணி, பின்னால் திருமணம் செய்துகொண்டால் மத்திய அரசாங்கம் பணியாளர் தொகுதியின் திறமையை நிலைநாட்டுவதற்கு அது தேவையானால் அந்தப் பெண்மணியை வேலையிலிருந்து விலகுமாறு சொல்லலாம்.

6. **பணியாளர் தொகுதிக்கு நியமனம்.**—இந்த விதிகள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு பணியாளர் தொகுதிக்கு வேண்டிய எல்லா நியமனங்களும் மத்திய அரசாங்கத்தால் செய்யப்பட வேண்டும். 4 ஆவது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள முறைகளில் ஒன்றினால் சேர்க்கப்பட்ட பிறகு அல்லாமல் அத்தகைய நியமனம் செய்யக் கூடாது.

7. **போட்டியுள்ள தேர்வால் ஆள் சேர்த்தல்.**—(1) இந்தியப் பணியாளர் தொகுதிக்கு ஆட்கள் சேர்ப்பதற்காக ஆணைக் குழுவைக் கலந்து மத்திய அரசாங்கம் அவ்வப்போது நிர்ணயிக்கக் கூடிய காலமுறையில் ஒரு போட்டித் தேர்வு நடத்த வேண்டும்.

(2) இந்தத் தேர்வு, மத்திய அரசாங்கம் ஆணைக் குழுவுடனும் மாநில அரசாங்கங்களுடனும் கலந்து அவ்வப்போது செய்யக் கூடிய அத்தகைய ஒழுங்கு முறை விதிகளுக்கு இணங்க ஆணைக் குழுவால் நடத்தப்பட வேண்டும்.

(3) ஆணைக் குழு அந்தப் போட்டித் தேர்வின் முடிவுகளின் மேல் அது அந்தப் பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்படத் தகுதியுள்ளவர்கள் என்று கருதும் பணி வேட்பாளர்களின் பட்டியலையும் அவர்கள் திறமைக்குத் தகுந்த வரிசையில் தயாரிக்க வேண்டும். பணியாளர் தொகுதிக்கு நியமனங்கள் (2) ஆவது உள் விதியின் கீழ் செய்யப்பட்டுள்ள ஏதாவது ஒழுங்கு முறை விதிகளுக்குட்பட்டு சொல்லப்பட்ட அந்தப் பட்டியலில் காணப்படும் வரிசை முறையில் செய்ய வேண்டும்.

(4) உள்விதி (2) இன் கீழ் செய்யப்பட்டுள்ள ஒழுங்கு முறை விதிகள் அட்டவணையில் கண்ட இனங்களையும் பழங்குடியினரையும் சேர்ந்த பணி வேட்பாளர்களுக்கு அனுகூலமாக ஒவ்வொரு தேர்வின் முடிவுகளின் மேல் காலியிடங்களின் எண்ணிக்கையில் முறையே 12½ சதவிகிதத்திற்கும் 5 சதவிகிதத்

திற்கும் மேற்படாத அளவுக்கு ஒதுக்கி வைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

(5) செயல் திறமையைத் தக்கபடி கருதி, இந்தப் பணி யாளர் தொகுதிக்கு நியமிக்கப்படத் தகுதியுள்ளவர்கள் என்று ஆணைக் குழுவால் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள அட்டவணையில் கண்ட இனங்களையும் அட்டவணையில் கண்ட பழங் குடியினரையும் சேர்ந்த பணி வேட்பாளர்களை (4) ஆவது உள்விதியின் கீழ் அட்டவணையில் கண்ட இனங்களுக்கும் அட்டவணையில் கண்ட பழங்குடியினர்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ள காலியிடங்களுக்குத் தக்கபடி நியமிக்கலாம்.

(6) அட்டவணையில் கண்ட இனங்களையும் அட்டவணையில் கண்ட பழங்குடியினர்களையும் சேர்ந்த பணி வேட்பாளர்கள், அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட எல்லாக் காலியிடங்களுக்கும் போதுமான தகுதியுள்ளவர்களின் எண்ணிக்கையாகவும் நிரப்பப் படாவிட்டால் மீதியுள்ளகாலியிடங்கள் மற்றப் பணி வேட்பாளர் பதவிகளால் நிரப்பப்பட்டு ஒரு சமமான எண்ணிக்கைக் காலி யிடங்கள் அடுத்த தேர்வுக்காக அட்டவணையில் கண்ட இனங் களுக்கும் அட்டவணையில் கண்ட பழங்குடியினர்களுக்கும் அதிகமாக ஒதுக்கி வைக்கப்படவேண்டும்.

ஆனால் அடுத்த தேர்விலும் அந்தக் கூடுதலான மேற்கொண்ட காலியிடங்கள் உட்பட ஒதுக்கப்பட்டுள்ள எல்லாக் காலியிடங் களையும் நிரப்பத் தேவைப்படக் கூடிய தகுதியுள்ள பணி வேட் பாளர்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாவிட்டால் அந்தக் கூடுதலான காலியிடங்களும் அல்லது அவற்றால் நிரப்பப் படாத காலியிடங்களும் காலங்கடந்ததாகிவிடும்.

8. போட்டித் தேர்வு முறையில் காலியிடங்களை நிரப்பும் வகை.—7 ஆவது விதியின் (3) ஆவது உள் விதியின் கீழ் நடத்தப் படும் ஒரு போட்டித் தேர்வால் நிரப்பப்பட வேண்டிய ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் பணி அமைப்பிலுள்ள எல்லாக் காலி யிடங்களும், கூடுமான வரையிலும் மத்திய அரசாங்கத்தின் பொது அல்லது தனிப்பட்ட ஆணைக்குட்பட்டு, அந்த மாநிலத்தில் அல்லது அந்த மாநிலத்திற்கு அடுத்த (இ) பிரிவு மாநிலத்தில் சாதாரணமாகக் குடியிருக்கும் தேர்வு பெற்ற பணி வேட்பாளர்களிலிருந்து நிரப்பப்பட வேண்டும்.

9. பதவி உயர்வால் ஆள் சேர்த்தல்.—(1) மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்தின் பரிந்துரைப்பின் மேலும் ஆணைக் குழுவுடன் கலந்தும் ஒரு மாநிலக் காவல் பணியாளர் தொகுதியின் உறுப்பினர்களிலிருந்து மத்திய அரசாங்கமானது மாநில அரசாங்கங்களையும் ஆணைக் குழுவையும் கலந்த பிறகு, அவ்வப்போது செய்யக் கூடிய அத்தகைய ஒழுங்கு முறைகளுக்கு இணங்க அலுவல் உயர்வில் இந்தப் பணியாளர் தொகுதிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளலாம்.

(2) யாதொரு மாநிலத்திலும் அல்லது மாநிலங்களின் ஒரு தொகுப்பிலிருந்தும் (1) ஆவது உள்விதியின் கீழ்ச் சேர்க்கப் பட்டுள்ள நபர்களின் எண்ணிக்கை, எச் சமயத்திலும் அந்த மாநிலத்தின் அல்லது மாநிலங்களின் தொகுப்பின் பணி அமைப்பில் உள்ள மேல் நிலை அலுவலகப் பதவிகளின் எண்ணிக்கையில் 25 சதவிகிதத்திற்கு மேற்படக் கூடாது.

(3) உள்விதி (2) இல் உள்ளது எப்படியிருந்தாலும், மத்திய அரசாங்கம் சம்பந்தப்பட்ட மாநிலங்களுடன் கலந்து எந்த ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள்ளும், யாதொரு (ஆ) பிரிவு மாநிலத்தில் அல்லது விந்தியப் பிரதேசம் மாநிலத்தில் (1) அல்லது உள்விதியின்கீழ் நிரப்பப்படுவதற்காக ஒதுக்கி வைக்கப் படும் இடங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம்.

(4) (2) ஆவது உள்விதியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சதவிகிதத்தை நிர்ணயிப்பதற்கு இந்த விதிகள் ஆரம்பிக்கப்படு வதற்கு முன்னால் 25 சதவீதப் பங்கிற்குப் பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள மாநிலக் காவல் பணியாளர்த் தொகுதியின் அலுவலர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். கீழே குறிப்பிடும் வகையைச் சேர்ந்த அலுவலர்களை நீக்கிவிட வேண்டும்.

(i) 25 சதவிகிதப் பங்கில் அல்லாமல் வேறுவிதமாக அவசர ஆள் சேர்க்கும் திட்டத்தின் கீழ் இந்தப் பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள ஒரு மாநிலக் காவல் பணியாளர் தொகுதியின் காவல் துறை அலுவலர்கள்,

(ii) இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (மாநிலங் களுக்கும் விரிவாக்கப்பட்ட) திட்டத்தின் கீழ் தனிப்பட்ட ஆள் சேர்க்கும் கழகத்தால் தயாரிக்கப்பட்ட ΓI ஆவது பட்டி

யலிலிருந்து இந்தப் பணியாளர் தொதிக்கு நியமிக்கப்பட்டுள்ள ஒரு மாநிலக் காவல் பணியாளர் தொகுதியின் காவல் துறை அலுவலர்கள்.

குறிப்பு.—மாநிலக் காவல் பணியாளர் தொகுதியென்பதில் மேற்கு வங்காள மாநிலத்தில் கல்கத்தா காவல் துறை உதவி (கமிஷனர்) ஆணையர்களும் அடங்குவார்கள்.

10. உரை விளக்கம்.—இந்த விதிகளுக்கு உரை விளக்கம் சொல்லுவதின் சம்பந்தமாய் யாதொரு கேள்வி யெழுமாயின் அது மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு அதன் மேல் அதன் தீர்ப்பே முடிவானதாகும்.

**11. நீக்கலும் காப்பும்.**—இந்த விதிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அடுத்து முன்னால் அமலிலிருந்தவையும் இந்த விதிகளுக்கு ஏற்றவாறு உள்ள விதிகளும் இதனால் நீக்கப்படுகின்றன.

ஆனால் அப்படி நீக்கப்பட்ட விதிகளின் கீழ் செய்யப்பட்ட எந்த ஆணையும் அல்லது எடுக்கப்பட்டுள்ள எந்த நடவடிக்கையும் இந்த விதிகளின் ஏற்பாடுகளின் கீழ் இடப்பட்டவையாகவும் எடுக்கப்பட்டவையாகவும் கருதப்படும்.

மேலும் 1954-இல் நடத்தப்படும் போட்டித் தேர்வின் முடிவுகளின் பேரில் இந்தப் பணியாளர் தொகுதிக்குச் செய்யப் படும் ஆள் சேர்ப்பு, இந்த விதிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அடுத்து முந்தி இதற்காக அமுலிலிருந்த ஆணைகளுக்கும் கட்டளைகளுக்கும் இணங்கியபடி செய்யப்பட வேண்டும்.

## இந்தியக் காவல் துறைப் பணியாளர் தொகுதி ( Probation ) (தகுதிகாண் பருவ) விதிகள், 1954.

1954-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 8-ஆம் தேதியிட்ட புதுடெல்லி இந்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சகத்தின் அடியிற்கண்ட அறிவிக்கை மறுபடி பிரசுரிக்கப்படுகிறது :—

எண் 4-2-54 ஏ.ஐ.எஸ். (11) 1951 ஆம் ஆண்டு அனைத்திந்தியப் பணியாளர் தொகுதிகள் சட்டத்தின் (1951 ஆம் ஆண்டு X 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங் களைப் பயன்படுத்தி மத்திய அரசாங்கம், சம்பந்தப்பட்ட

மாநிலங்களின் அரசாங்கங்களுடன் கலந்த பிறகு, இதனால், அடியிற் கண்ட விதிகளைச் செய்கிறது. அவையாவன :—

1. சிறு தலைப்பு.—இந்த விதிகள், இந்தியக்காவல் பணியாளர் தொகுதி (தகுதிகாண் பருவ) விதிகள் 1954 என்று சொல்லப் படலாம்.

2. விளக்கம்.—இந்த விதிகளில், சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினலொழிய—

(அ) 'தளவாய்' என்பது பயிற்சிக் கல்லூரியின் தளவாய் என்று பொருள்.

(ஆ) 'ஆணைக் குழு' என்பது மத்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழு என்று பொருள்படும்.

(இ) 'தகுதிகாண் பருவத்தினர்' என்பது தகுதிகாண் பருவத் திட்டத்தில் பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள ஒரு நபர் என்று பொருள்படும்.

(ஈ) 'அட்டவணை' என்பது இந்த விதிகளுக்கு ஒரு அட்டவணை என்று பொருள்.

(உ) 'பணியாளர் தொகுதி' என்பது இந்தியக் காவல் பணியாளர் தொகுதி என்று பொருள்படும்.

(ஊ) ஒரு கூட்டுப் பணி அமைப்பைச் சார்ந்த சம்பந்தப் பட்ட மாநில அரசாங்கம் என்பது அந்தக் கூட்டுப் பணியமைப்பு எந்த மாநில அரசாங்கங்களுக்காக ஏற்படுத்தப்பட்டதோ அந்த எல்லா மாநில அரசாங்கங்களுக்கும் என்று பொருள்படும். ஒரு குறிப்பிட்ட பொருள் சம்பந்தமாய் அப்படிப்பட்ட எல்லா மாநில அரசாங்கங்களால் தமக்குப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள ஒரு மாநில அரசாங்கமும் இதில் அடங்கும்.

(எ) 'பயிற்சிக் கல்லூரி' என்பது மத்தியக் காவல் பயிற்சிக் கல்லூரி என்று பொருள்படும்.

3. தகுதிகாண் பருவமும் தகுதிகாண் பருவத்தினரும்.—(1) ஒரு போட்டித் தேர்வு மூலமாய் பணியாளர் தொகுதிக்குச் சேர்க்கப்பட்ட ஒவ்வொரு நபரும், அந்தப் பணியாளர் தொகுதிக்குத் தகுதிகாண் பருவ முறையில் நியமிக்கப்பட வேண்டும்.

(2) ஒவ்வொரு தகுதிகாண் பருவத்தினரும் இரண்டு ஆண்டு காலத்திற்குத் தகுதிகாண் பருவத்திலிருக்க வேண்டும்.

ஆனால், மத்திய அரசாங்கம் யாதொன்றிலும் அல்லது தொகுப்பின் வகுப்பிலும் ஆணைக் குழுவைக் கலந்து தகுதிகாண் பருவ காலத்தை அவ்வாறு கருதினால் நீடிக்க செய்யலாம்.

4. **உடன்படிக்கை எழுதித் தரல்.**—ஒரு தகுதிகாண் பருவத்தினர் பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்பட்டதின் பேரில் தாம் மத்திய அரசாங்கத்தின் மனநிறைவுக்கு, இந்த விதிகளின் ஏற்பாடுகளில் எவற்றிற்கேனும் இணங்கி நடக்கத்தவறினபோது, அவர் ஒரு தகுதிகாண் பருவத்தினராக நியமிக்கப்பட்டதின் விளைவாக அவருக்குச் செலுத்தப்பட்ட யாதொரு பணத்தையும் திருப்பிச் செலுத்தத் தம்மையும் ஒரு பிணையாளரையும், கூட்டாகவும் தனியாகவும் பிணைப் பகுதி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள படிவத்தில் ஒரு உடன்படிக்கை எழுதித் தர வேண்டும்.

5. **பயிற்சி.**—(1) பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்பட்டதன் மேல் ஒரு தகுதிகாண் பருவத்தினர் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்று, அதில் மத்திய அரசாங்கம் கட்டளையிடக் கூடிய அத்தகைய பயிற்சியை அத்தகைய காலத்திற்குப் பயிற்சி பெற வேண்டும்.

(2) அந்தப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி முடிவடைந்ததன் மேல் ஒரு தகுதிகாண் பருவத்தினர், மத்திய அரசாங்கம் சம்பந்தப் பட்ட மாநில அரசாங்கத்தைக் கலந்து கட்டளையிடக் கூடிய மேலுமுள்ள பயிற்சியை அவர் அனுப்பப்படும் மாநிலத்தில் பெற வேண்டும்.

(3) ஒரு தகுதிகாண் பருவத்தினர் தமது தகுதிகாண் பருவ காலத்தை மத்திய அரசாங்கத்தின் மனநிறைவுக்கு முடித்ததும் அவர் இந்த விதிகளின் பிற ஏற்பாடுகளுக்குட்பட்டு, அந்தப் பணியாளர் தொகுதியில் 3 ஆம் விதியின் (2) ஆம் உள் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகாண் பருவ காலத்தின் இறுதியில் நிலைப்படுத்தப்படுவார்.

6. **விரிவுரைகளைக் கேட்க வருதல் முதலியவை**—(1) ஒரு தகுதிகாண் பருவத்தினர் அவ்வப்போது குறிப்பிடக்கூடிய அப்படிப்பட்ட விரிவுரைகளை வந்து கேட்கவும், அதில் தேர்ச்சி பெறவும் அத்துடன் தேகப் பயிற்சிகளையும் செய்யவும் வேண்டும்.

(2) பயிற்சிக் கல்லூரியின் பயிற்சிக் காலத்தின் இறுதியில் அதன் தளவாய், ஒவ்வொரு தகுதிகாண் பருவத்தினருக்கும் அந்தப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி வேலை ஒவ்வொன்றிற்கும் 100 மதிப்பெண்கள் பெறுமத்திற்கு மதிப்பெண்கள் கொடுத்து அவர்கள் வேலையை மதிப்பிடுவார்.

(3) மாநிலத்தில், பயிற்சிக் காலத்தின் இறுதியில் சம்பந்தப் பட்ட மாநில அரசாங்கம், அந்த மாநிலத்தில் பயிற்சி பெற்ற காலத்தில் தகுதிகாண் பருவத்தினரின் வேலையை மதிப்பிட்டு அதை மத்திய அரசாங்கத்திற்கு அனுப்ப வேண்டும்.

**7. இறுதித் தேர்வு.**—(1) ஒவ்வொரு தகுதிகாண் பருவத்தினரும், பயிற்சிக் கல்லூரியில் பயிற்சிக் கால இறுதியில் அல்லது இறுதியாகும் சமயத்தில் ஆணைக் குழுவால் நடத்த வேண்டிய ஒரு இறுதித் தேர்வில் கலந்துகொள்ள வேண்டும்.

(2) அந்தத் தேர்வு, மத்திய அரசாங்கம் மாநில அரசாங் கங்களையும் ஆணைக் குழுவையும் கலந்து அவ்வப்போது செய்யக் கூடிய அப்படிப்பட்ட ஒழுங்குமுறை விதிகளின்படி, ஆணைக் குழுவால் நடத்த வேண்டும்.

**8. சில சந்தர்ப்பங்களில் இறுதித் தேர்வில் பங்கெடுத்துக் கொள்ளத் தவறுதல்.**—ஒரு தகுதிகாண் பருவத்தினர் உடல் நல மின்மையால் அல்லது தம் கட்டுப்பாட்டிலில்லாத பிற காரணத் தால் இறுதித் தேர்வுக்குத் தம் பயிற்சிப் படிப்பு முடிப்பதி லிருந்தும் அல்லது அப்படிப்பட்ட தேர்வில் கலந்து கொள்வதி லிருந்தும் தடுக்கப்பட்டால் மத்திய அரசாங்கம் ஆணைக் குழு வுடன் கலந்து,

(அ) அவரை அடுத்த இறுதித் தேர்வில் அல்லது ஆணைக் குழு நடத்தக் கூடிய யாதொரு தனிப்பட்ட தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கலாம், அல்லது

(ஆ) இறுதித் தேர்வுக்குக் குறிப்பிடப்பட்டுள்ள எல்லாப் பாடங்கள் அல்லது ஏதேனும் பாடங்களில் கலந்துகொள் வதிலிருந்து அவருக்கு விலக்கு அளிக்கலாம்.

**9. இறுதித் தேர்வில் தேர்ச்சி அடையத் தவறுதல்.**—ஒரு தகுதி காண் பருவத்தினர், 7 ஆவது விதியின் கீழ்ச் செய்யப் பட்டுள்ள ஒழுங்கு முறை விதிகளின் கீழ் இறுதித் தேர்வில் யாதொரு பாடத்தில் அல்லது பாடங்களின் தொகுப்பில் அல்லது பாகத்தில்

பெறத் தவறினால், மத்திய அரசாங்கம் குறிப்பிடப்பட்டுள்ள குறும எண்ணிக்கை மதிப்பெண்கள் ஆணைக் குழுவைக் கலந்த பிறகு அவர் தவறிய பாடத்தில் அல்லது பாடங்களில் மறு தேர்வுக்கு உட்காரும்படி அனுமதிக்கலாம் அல்லது அப்படிப்பட்ட பாடத்திற்கு அல்லது பாடங்களுக்கு உட்காருவதிலிருந்து விலக்கு அளிக்கலாம் அல்லது அவரைப் பணியாளர் தொகுதியிலிருந்து நீக்கலாம் அல்லது அது தக்கது என்று நினைக்கும்படியான ஒரு ஆணையிடலாம்.

ஆயினும், அப்படிப்பட்ட மறுதேர்வில், ஒரு தகுதிகாண் பருவத்தினருக்கு அளிக்கப்பட்ட மதிப்பெண்கள், அவருடைய மூத்த நிலையை நிர்ணயிப்பதில் ஆணைக் குழுவால் கணக்கிற்கு எடுத்துக் கொள்ளக் கூடாது.

10. தகுதிகாண் பருவத்தினர்களின் மூத்த நிலை.—(1) ஆணைக் குழு அதே போட்டித் தேர்வின் முடிவுகளின் மேல் பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்படும் எல்லாத் தகுதிகாண் பருவத்தினர்களுக்கும் ஒரு பட்டியலைத் தயாரிக்க வேண்டும். அப்படிப்பட்ட பட்டியல் திறமை வரிசையில் தயாரிக்க வேண்டும். இந்தத் திறமை ஒவ்வொரு தகுதிகாண் பருவத்தினரால் அடியிற் கண்ட தேர்வுகளில் பெறப்பட்ட மொத்த மதிப்பெண்களையொட்டி நிர்ணயிக்கப்பட வேண்டும்:—

(அ) போட்டித் தேர்வில்;

(ஆ) பயிற்சிக் கல்லூரியில் அவரது வேலை சம்பந்தமாய்;

(இ) இறுதித் தேர்வில்.

ஆயினும், அப்படித் திறமை வரிசை முறை நிர்ணயிப்பதில் ஒரு தகுதிகாண் பருவத்தினர் ஆணைக் குழுவிற்கு மனநிறைவு அளிக்கத் தவறிய பாடத்தில் அவருக்கு அளிக்கப்பட்ட மதிப்பெண்களை கணக்கிலெடுத்துக் கொள்ளக் கூடாது.

(2) அந்தப் போட்டித் தேர்வின் அடிப்படையில் சேர்க்கப்பட்ட தகுதிகாண் பருவத்தினர்களின் அவர்களுக்கிடையேயுள்ள மூத்த நிலை (1) ஆம் உள்விதியின் கீழ்த் தயாரிக்கப்பட்ட பட்டியலுக்கு ஒத்தபடி நிர்ணயிக்கப்பட வேண்டும்.

11. ஒழுங்குமுறையும் நடத்தையும்.—(1) ஒவ்வொரு தகுதிகாண் பருவத்தினரும் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெறும் காலம் அதன் தளவாயின் ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டின் கீழும்,

மாநிலத்தில் பயிற்சி பெறும்போது மாநில அரசாங்கத்தின் ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டின் கீழும் இருக்க வேண்டும். மேலும், அவர் அவ்வப்போது அந்தத் தன்மையில் அல்லது மாநில அரசாங்கத்தால் அவ்வப்போது அனுப்பப்படும், அப்படிப்பட்ட பொது அல்லது தனிப்பட்ட ஆணைகளுக்குக் கீழ்ப் படிய வேண்டும்.

(2) ஒரு தகுதிகாண் பருவத்தினர், மத்திய அரசாங்கத்திலிருந்து அல்லது பிற எந்தத் தகுதியுள்ள அதிகாரியிடமிருந்து தமக்கு வரக்கூடிய யாதொரு ஆணைக்குக் கீழ்ப் படியத் தவறினாலும் அல்லது மத்திய அரசாங்கத்தின் அபிப்பிராயத்தில் அவர் வேண்டுமென்றே தமது தகுதிகாண் பருவ படிப்பையும் அல்லது கடமைகளையும் அசட்டை செய்தார் என்றாலும் அல்லது அந்தப் பணியாளர்த் தொகுதியின் ஒரு அங்கத்தினருக்குப் பொருந்தாத நடத்தைக்குக் குற்றவாளியாயிருந்தாலும், அவர் வேலையிலிருந்து விலக்கப்படவும் அல்லது தள்ளிவிடப்படவும் உட்படக் கூடியவராவார்.

ஆயினும், இந்த உள் விதியின் கீழ் ஒரு தகுதிகாண் பருவத்தினருக்கு எதிர்ப்பாக யாதொரு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்னால், அவர் மேல் எடுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைக்கு எதிர்ப்பாகக் காரணம் காட்ட ஒரு வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

மேலும், இந்த உள்விதியின் கீழ் ஒரு தகுதிகாண் பருவத்தினருக்கு எதிராக இறுதியான ஆணைகள் பிறப்பிக்கப்படுவதற்கு முன்னால் ஆணைக் குழுவைக் கழகம் கலந்து ஆலோசிக்க வேண்டும்.

12. ஒரு தகுதிகாண் பருவத்தினரைப் பணியிலிருந்து **விலக்கல்.**—ஒரு தகுதிகாண் பருவத்தினர்,

(அ) அவர், 9 ஆம் விதியில் சொல்லப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் இறுதித் தேர்வில் தேர்ச்சி பெறத் தவறினாலும்; அல்லது

(ஆ) அவருடைய இனம், வயது, உடல் நிலை, குணம், முன் வரலாறு சம்பந்தமாய் வரப்பெற்ற யாதொரு தகவலின்மேல் மத்திய அரசாங்கம், அந்தத் தகுதிகாண் பருவத்தினர் பணியாளர் தொகுதியில் ஒரு உறுப்பினராக இருக்க உரிமை அற்றவர் அல்லது தகுதியற்றவர் என்று மனநிறைவு கொண்டாலும்; அல்லது

(இ) அவர் இந்த விதிகளின் ஏற்பாடுகள் எவைக்கும் இணங்கி நடக்கத் தவறினுலும்,
அவர் வேலையிலிருந்து விலக்கப்படுவதற்கு உட்பட்டவராவார்.

13. சம்பளம்.—தகுதிகாண் பருவத்தின் முதல் ஆண்டில், ஒரு தகுதிகாண் பருவத்தினர் அந்தப் பணியாளர் தொகுதிக்குப் பொருந்தும் இளநிலைக் காலமுறைச் சம்பள ஏற்ற முறையில் மிகவும் குறைவான கட்டத்தின் சம்பளமும் தகுதிகாண் பருவ மீதிக் காலத்தில் அந்த முறையில் இரண்டாம் கட்டத்தின் சம்பளமும் பெறுவார்.

ஆயினும், ஒரு மாநில அரசு ஒரு தகுதிகாண் பருவத்தினருக்கு, அவர், பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று முடிந்ததன் மேல் ஒரு மாநிலத்தில் வேலையில் சேர்ந்தபிறகும் அந்தத் தகுதிகாண் பருவ காலத்திற்குள்ளும், அந்த மாநில அரசாங்கத்தால் அவ்வப் போது குறிப்பிடக்கூடிய திறமைத் தரத்தில் அப்படிப்பட்ட துறைத் தேர்வுகளில் தகுதியடைந்தால், 1954 ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (சம்பளம்) விதிகளின் 7 ஆம் விதியின் ஏற்பாடுகளுக்கு ஒத்தப்படி அந்தப் பணியாளர் தொகுதியின் இளநிலைக் காலமுறைச் சம்பள ஏற்ற முறையில் முன் ஊதிய உயர்வுகள் அளிக்கப்படுவதற்கு ஒப்பளிப்புத் தர வேண்டும்.

14. பயணப்படி—ஒரு தகுதிகாண் பருவத்தினர்—

(அ) அவருடைய பயிற்சி சம்பந்தமாகவும்,

(ஆ) தகுதிகாண் பருவ காலத்திற்குள் யாதொரு தேர்வுக்கு வருவதற்காகவும்,

கட்டளையிடப்படும் ஒவ்வொரு பயணத்திற்கும், பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினருக்கு அனுமதிக்கப்படக்கூடிய அத்தகைய பயணப்படிக்கு உரிமையுடையவராவார்.

15. இயல்பாயுள்ள அதிகாரங்கள்.—இந்த விதிகளில் உள்ளது எதுவும், எப்போதும் ஒரு தகுதிகாண் பருவத்தினரைப் போது மான தக்க காரணங்களுக்காக வேலையிலிருந்து விலக்கிவிட அல்லது நீக்கிவிட மத்திய அரசாங்கத்திற்குள்ள அதிகாரங்களை வரையறைப்படுத்துவதாகப் பொருள் கொள்ளக் கூடாது.

16. உரை விளக்கம்.—இந்த விதிகளுக்கு உரை விளக்கம் சொல்லும் சம்பந்தமாய் யாதொரு கேள்வி எழுந்தாலும் அதனை மத்திய அரசாங்கத்திற்குத் தெரியப்படுத்த வேண்டும். அதன் மேல் அதன் தீர்ப்பே முடிவானதாகும்.

17. நீக்கலும் காப்பும்.—இந்த விதிகளுக்கு ஒத்தபடி இந்த விதிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அடுத்து முன்னால் அமுலிலிருந்த எல்லா விதிகளும் இதனால் நீக்கப்படுகின்றன.

ஆயினும் அப்படி நீக்கப்பட்ட விதிகளின் கீழ்ச் செய்யப் பட்ட யாதொரு ஆணையும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக் கையும் இந்த விதிகளில் அவைகளை ஒத்த ஏற்பாடுகளின் கீழ்ச் செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாகக் கருத வேண்டும்.

மேலும், இந்த விதிகளில் உள்ளவை எவையும் இவ்விதிகள் ஆயம்பிக்கப்படுவதற்கு முன்னால் அமர்த்தப்பட்ட தகுதிகாண் பருவத்தினர்களுக்குப் பொருந்தாது. அவர்கள் இந்த விதிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அடுத்து முன்னால் அமலிலிருந்து தகுதி காண் பருவத்தினர்கள் சம்பந்தமாய் உள்ள ஆணைகளாலும், கட்டளைகளாலும் தொடர்ந்து வகைப்படுத்தியிருக்க வேண்டும்.

அட்டவணை.

இந்தியக் குடியரசுத் தலைவருக்கு :

* ஆகிய இந்தியக் காவல் பணியாளர் தொகுதியில் ஒரு தகுதிகாண் பருவத்தினராக உள்ள நான் (இதற்குப் பின்னால் இதில் தகுதிகாண் பருவத்தினர் என்று குறிப்பிடப்படும்), (1954 ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி தகுதிகாண் பருவம், விதிகளுக்கு இணங்குவதற்குட் பட்டு) தலைவரிடமிருந்து (இதற்குப் பிறகு மத்திய அரசாங்கம் என்று குறிப்பிடப்படும்) அல்லது நான் பணியில் அமர்த்தப்படக் கூடிய மாநிலத்தின் அரசாங்கத்திலிருந்து நான் பயிற்சியின் கீழ் இருக்கும் காலத்திற்குச் சம்பளமும் படிகளும் பெற உரிமை பெற்றிருப்பதால்;

---

* அந்தத் தகுதிகாண் பருவத்தினரின் முழுப் பெயரும் முகவரியும் இவ்விடத்தில் எழுதப்பட வேண்டும்.

தகுதிகாண் பருவத்தினரும் * ஆகியவரு மாகிய நாங்கள் (இதற்குப் பிறகு இதில் "பிணையாளர்" என்று குறிப்பிடப்படும்) கூட்டாகவும், தனிப்படவும், சொல்லப்பட்ட விதிகளையொட்டியும், இதனுல் அந்தத் தகுதிகாண் பருவத்தினர், மத்திய அரசாங்கத்தின் மனநிறைவுக்குத் தமது தகுதிகாண் பருவத்தை முடிக்கத் தவறினுல், கேட்பின் மேல மத்திய அரசாங்கத்திற்கு அவருக்குச் செலுத்தப்பட்டுள்ள சம்பளமும் அவர் பணியில் வந்து சேரப் பயணப்படியுமுட்பட, எந்தப் பணத்தையும் திரும்பச் செலுத்த உறுதி கூறவும் ஒப்புக் கொள்ளவும் செய்கிறோம்.

பிணையாள் இதனுல், இதன் கீழ் உள்ள தமது பொறுப்பு மத்திய அரசாங்கம் தகுதிகாண் பருவத்தை நீடிக்கச் செய்வதாலும் அல்லது இதன் கீழ் செலுத்தப்பட வேண்டிய பணத்தைச் செலுத்தக் காலத்தை நீட்டிப்பதாலும் அல்லது பேரம் செய்வதாலும், பாதிக்கப்படாது என்று ஒப்புக்கொள்கிருர்.

19 ம் தேதியிட்டது.

தகுதிகாண் பருவத்தினரின் கையொப்பம்.

தகுதிகாண் பருவத்தினரால் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது.

சாட்சியின் பெயர்

முகவரி

தொழில்

பிணையாள் கையொப்பம்.

முன்னிலையில் பிணையாளரால் கையொப்பமிடப் பட்டது.

சாட்சியின் பெயர்

முகவரி

தொழில்.

† மேற்கண்ட உடன்படிக்கைக்குப் பிணையாளராகக் கையொப்ப மிட்டுள்ள ஆகிய நான்

---

* பிணையாள் தமது முழுப்பெயரையும், முகவரியையும், தொழிலையும் இவ்விடத்தில் எழுதக் கோரப்படுகிருர்.

† பிணையாள் முழுப்பெயரையும் இவ்விடத்தில் எழுதக் கோரப்படுகிருர்.

** இதனால் (அ) அரசாங்கத்தின் நிலையான பணியாளராயுள்ளேன் என்று உறுதி கூறுகிறேன்.

அல்லது

** (ஆ) நான் சாதாரணமாக இந்தியாவில் குடியிருக்கிறேன் என்றும், இந்த உடன்படிக்கைக்கு இணங்கியபடி அவ்வாறு சரி செய்யச் சொல்லப்படும்போது மத்திய அரசாங்கத்திற்குக் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைச் செலுத்தக் கூடிய வசதியையுடைத்தாயிருக்கிறேன் என்றும், இதனால் உறுதியளிக்கிறேன்.

பிணையாளின் கையொப்பம்.

முன்னிலையில் பிணையாளால் கையொப்பமிடப் பட்டது.

சாட்சியின் பெயர்

முகவரி

தொழில்.

## இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (பணி அமைப்பு) விதிகள், 1954.

1954 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 8 ஆம் தேதியிட்ட புதுடெல்லி, இந்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சகத்தின் அடியிற்கண்ட அறிவிக்கை, மறுமுறை வெளியிடப்படுகிறது :—

**எண் 2-3-54 ஏ.ஐ.எஸ்.** II.—1951 ஆம் ஆண்டு அகில இந்தியப் பணியாளர் தொகுதிகள் சட்டத்தின் (1951 ஆம் ஆண்டு LXI 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, மத்திய அரசாங்கம், சம்பந்தப்பட்ட மாநிலங்களின் அரசாங்களைக் கலந்த பிறகு இதனால் அடியிற் கண்ட விதிகளைச் செய்கிறது. அவையாவன :—

1. **சிறு தலைப்பு.**—இந்த விதிகள் இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (பணி அமைப்பு) விதிகள் 1954 என்று சொல்லப்படலாம்.

2. **விளக்கங்கள்.**—இந்த விதிகளில், சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினாலொழிய.—

---

** ஏதாவது ஒன்றை அடித்துவிட வேண்டும்.

(அ) 'பணி அமைப்பு அலுவலர்' என்பது இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் என்று பொருள்படும்.

(ஆ) 'பணி அமைப்பு பதவி' என்பது 4 ஆம் விதியின் (1) ஆம் உள்விதியின் கீழ்ச் செய்யப்பட்ட ஒழுங்குமுறை விதிகளில் அப்படிக் குறிப்பிடப்பட்ட பதவிகளில் எவையேனும் என்று பொருள்படும்.

(இ) 'மாநிலம்' என்பது ஒரு அ-பிரிவு மாநிலம் என்றும் அல்லது ஜம்மு காஷ்மீர் மாநிலம் தவிர வேறு ஒரு ஆ-பிரிவு மாநிலம் என்றும் பொருள்படும். இதில் விந்தியப் பிரதேச மாநிலம் அடங்கும்.

(ஈ) 'மாநில அரசாங்கம்' விந்தியப் பிரதேச மாநிலம் சம்பந்தப்பட்டதில் லெவ்ட்டினண்டு கவர்னர் என்று பொருள் படும்.

(உ) 'சம்பந்தப்பட்ட மாநில அரசு' ஒரு கூட்டுப் பணி அமைப்புக்குச் சேர்ந்த வரையில் அந்தக் கூட்டுப் பணி அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ள எல்லா மாநிலங்களின் அரசாங்கங்களும் என்று பொருள்படும். இதில் ஒரு குறிப்பிட்ட பொருளில் தங்களுக்குள்ள சார்பாண்மை வகிக்க நியமிக்கப்பட்ட ஒரு மாநிலத்தில் அரசாங்கமும் அடங்கும்.

3. **பணி அமைப்புகள் அமைத்தல்.**—(1) ஒவ்வொரு மாநிலத்திற்கும் அல்லது மாநிலங்களின் ஒவ்வொரு தொகுப்புக்கும் ஒரு இந்தியக் காவல் பணியாளர் தொகுதிப் பணி அமைப்பு அமைக்கப் படும்.

(2) அப்படி அமைக்கப்பட்ட பணி அமைப்புகள் இதற்குப் பின்னல் 'மாநிலப் பணி அமைப்பு' என்றும் ஒரு 'கூட்டுப் பணியமைப்பு' என்றும் முறையே குறிப்பிடப்படுகின்றன.

4. **'பணி அமைப்புகளின் அளவு'.**—(1) 3-ஆம் விதியின் கீழ் அமைக்கப்பட்டுள்ள பணி அமைப்புகளின் அளவும் இணைப்பும் மத்திய அரசாங்கத்தால் இதற்காக மாநில அரசாங்களைக் கலந்து செய்யப்படும் ஒழுங்குமுறை விதிகளால் நிர்ணயிக்கப் பட்டபடியிருக்கும். மற்றும் அப்படிப்பட்ட ஒழுங்குமுறை விதிகள் செய்யப்படும் வரையில் இந்த விதிகள் ஆரம்பிக்கப்படு வதற்கு அடுத்து முன்னல் எப்படியிருந்தனவோ அப்படியே யிருக்கும்.

(2) மத்திய அரசு, ஒவ்வொரு மூன்று ஆண்டு கால இடைவெளியில் அப்படிப்பட்ட ஒவ்வொரு பணி அமைப்பின் அளவையும் இணைப்பையும் சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்தை அல்லது மாநில அரசாங்கங்களைக் கலந்து மறு ஆய்வு செய்யும். அதன் மேல் அதில் தனக்குத் தகுதி என்று தோன்றும் முறையில் அது மாற்றங்களைச் செய்யலாம்.

ஆயினும், இந்த உள்விதியில் உள்ளது எதுவும் யாதொரு தனி அமைப்பின் அளவையும் இணைப்பையும் வேறு எந்தக் காலத்திலும் மாற்றியமைக்க மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்தைப் பாதிப்பதாகக் கருதக் கூடாது.

மேலும், சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கம், பணியமைப்பு இடங்களின் பணித் தன்மையைப் போன்ற அலுவல்களையும் பொறுப்புகளையும் உடைய ஒன்று அல்லது அதிகப் பணியிடங்களை ஒரு ஆண்டுக்கு மேற்படாத ஒரு காலத்திற்குச் சேர்த்துக் கொள்ளலாம்.

**5. உறுப்பினர்களைப் பல்வேறு பணி அமைப்புகளுக்கு வகைப் படுத்தல் (பிரித்துக் கொடுத்தல், ஒதுக்கல்).**—(1) பணி அமைப்பு அலுவலர்களைப் பல்வேறுபட்ட பணி அமைப்புகளுக்குப் பிரித்துக் கொடுத்தல், மத்திய அரசாங்கத்தால் சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்துடன் அல்லது மாநில அரசாங்கங்களுடன் கலந்து செய்யப்படும்.

(2) மத்திய அரசு சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கங்களின் சம்மதத்துடன் ஒரு பணி அமைப்பு அலுவலரை ஒரு தனி அமைப்பிலிருந்து மற்றொரு தனி அமைப்புக்கு மாற்றலாம்.

**6. பணி அமைப்பு அலுவலர்களை மறு வேலைக்கு அனுப்புதல்.**—ஒரு பணி அமைப்பு அலுவலரை மாநில அரசாங்கத்தின் அல்லது சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கம் இவற்றினுடைய சம்மதத்துடன், மத்திய அரசாங்கத்தின் அல்லது பிற அரசாங்கத்தின் கீழ் பணியாற்ற அனுப்பலாம்.

**7. வேலையில் அமர்த்தல்.**—பணியமைப்பு இடங்களுக்குள்ள எல்லா நியமனங்களும்,

(அ) ஒரு மாநிலப் பணியமைப்பைப் பொருத்தவரை மாநில அரசாங்கத்தாலும்,

(ஆ) ஒரு கூட்டுப் பணியமைப்பைப் பொருத்தவரை சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்திலும் செய்யப்பட வேண்டும்.

8. **பணியிடங்கள்.**—பணியமைப்பு அலுவலர்களால் நிரப்பப்பட வேண்டும். இந்த விதிகளில் வேறுவிதமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளபடி தவிர, ஒவ்வொரு பணியமைப்பு இடமும் ஒரு பணியமைப்பு அலுவலரால் நிரப்பப்பட வேண்டும்.

9. **பணியமைப்பிலில்லாத அலுவலர்களைத் தற்காலிகமாகப் பணியமைப்பு இடங்களுக்கு நியமனம் செய்தல்.**—ஒரு மாநிலத்தில் ஒரு பணியமைப்பு இடம் மாநில அரசு அடியிற் கண்டபடி மனநிறைவு கொண்டால் ஒரு பணியமைப்பிலில்லாத அலுவலரால் நிரப்பப்படலாம்.

(அ) அந்த இடம் காலியாயிருக்கும் காலம் மூன்று மாதங்களுக்கு மேல் நீடிக்கக் கூடாதயிருத்தல், அல்லது

(ஆ) அந்த காலியிடத்தை நிரப்புவதற்கு தக்க பணியமைப்பு அலுவலர் இல்லாமை,

(2) யாதொரு மாநிலத்தில் ஒரு பணியமைப்பிலில்லாத அலுவலர் ஒரு பணியமைப்பு இடத்தில் மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு நியமிக்கப்பட்டிருந்தால், மாநில அரசாங்கம் அதை உடனடியாக அந்த நியமனத்துக்கான காரணங்களுடன் மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

(3) (2) ஆம் உள் விதியின் கீழ் ஒரு அறிக்கை வரப்பெற்றதன் மேல் அல்லது வேறுவிதமாக மத்திய அரசாங்கம் அப்படிப்பட்ட நபரை நியமித்திருப்பதை நிறுத்த மறுபடியும் அதற்கு ஒரு பணியமைப்பு அலுவலரை அமர்த்தும்படியும் கட்டளையிடலாம். அப்படிப்பட்ட ஒரு கட்டளை அனுப்பப்பட்டால் மாநில அரசாங்கம் அவ்வாறே செய்ய வேண்டும்.

(4) ஒரு பணியமைப்பு இடம் ஒரு பணியமைப்பிலில்லாத ஒரு அலுவலரால் ஆறு மாதங்களுக்கு மேற்பட்ட ஒரு காலத்திற்கு நியமிக்கப்பட நேர்ந்தபோது மத்திய அரசாங்கம் முழு உண்மையையும் மத்திய அரசினர் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவிற்கு அந்த இடத்தை நிரப்புவதற்குத் தக்க அலுவலர் இல்லையென்று கருதுவதற்குரிய காரணங்களுடன் தெரிவிக்க வேண்டும். அதன் மேல் மத்திய அரசினர் பணியாளர் தேர்வு ஆணைக்குழு கொடுக்கும் அறிவுரையையொட்டித் தக்க கட்டளைகளைச் சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்திற்குப் பிறப்பிக்கலாம்.

ஆயினும், இந்த விதியில் உள்ளது எதுவும் மத்திய அரசாங்கத்தால் ஆ-பிரிவு மாநிலங்களின் அரசாங்கங்களுடனும் விந்தியப் பிரதேசம் மாநிலத்தின் அரசாங்கத்துடனும் கலந்து அந்த மாநிலங்களில் பணியமைப்பிலில்லாத அலுவலர்களால் பணியமைப்பு இடங்கள் வகிக்கப்படுவதற்காக அனைத்திந்தியப் பணியாளர் தொகுதி, பணியமைப்புகள் அமைக்கப்பட்ட சமயத்தில், ஏற்கெனவே செய்யப்பட்ட ஏற்பாடுகளைப் பாதிக்காது.

10. **காலியாயுள்ள பணியமைப்பு இடங்களைப் பற்றி மத்திய அரசாங்கத்திற்கு அறிக்கை.**—ஒரு மாநில அரசு ஒரு பணியமைப்பு இடத்தைக் காலியாக ஆறு மாத காலத்திற்கு மேற்பட்டு வைக்கக் கருதுவதில் அந்த மாநில அரசாங்கம் உடனடியாக அடியிற் கண்டவை சம்பந்தமாய் மத்திய அரசாங்கத்திற்கு ஒரு அறிக்கை அனுப்ப வேண்டும் ; அவையாவன :—

(அ) அவ்வாறு கருதுவதற்குரிய காரணங்கள்;

(ஆ) அந்த இடத்தை மாநில அரசாங்கம் காலியாய் வைத்திருக்கக் கருதியுள்ள காலம் ;

(இ) அந்தப் பணி இடத்தில் தற்காலம் இருப்பவருக்கு ஏற்பாடு ஏதாவது செய்யப்பட்டிருந்தால் அது ;

(ஈ) அப்படி நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பணியிடத்தின் பணிகளைச் செயலாற்ற எவையேனும் ஏற்பாடுகளைச் செய்யக் கருதியுள்ளதா என்றும் அப்பணியின் அத்தகைய ஏற்பாடுகளின் விவரங்களும்.

11. **ஒரு பணியமைப்பு அலுவலரால் ஒரு பணியிடத்திற்கு மேற்பட்டவைகள் வகிக்கப்படல்.**—மாநிலப் பணியமைப்பு அல்லது கூட்டுப் பணியமைப்புகளில் சேர்ந்த பணியிடங்களைப் பொருத்த வரை சந்தர்ப்பத்திற்கேற்றவாறு சம்பந்தப்பட்ட மாநில அரசு விடுப்பு ஏற்பாடுகளுக்கு வசதியுண்டாக்குவதற்கும், ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு காலத்திற்குத் தற்காலிகமான ஏற்பாடுகள் செய்வதற்கும் இரண்டு பணியமைப்பு இடங்கள் அல்லது ஒரு பணியமைப்பு இடமும் அதற்குச் சமமான பணியிடமும் ஒரே காலத்தில் ஒரு தனிப்பட்ட பணியமைப்பு அலுவலரால் வகிக்கப்படலாம் என்று கட்டளையிடலாம்.

12. **உரை விளக்கம்.**—இந்த விதிகளுக்கு உரை விளக்கம் சொல்லப்படுவதில் ஏதாவது வினா எழுமாயின் அது மத்திய

அரசாங்கத்திற்கும் தெரிவிக்கப்பட வேண்டும். அதன் மேல் அதன் தீர்ப்பே முடிவானதாகும்.

**13. நீக்கலும் காப்பும்.**—இந்த விதிகளுக்கு ஒத்தபடி இவ் விதிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அடுத்து முன்னுல் அமலிலிருந்த எல்லா விதிகளும் இதனுல் நீக்கப்படுகின்றன.

ஆயினும், அப்படி நீக்கப்பட்ட விதிகளின்கீழ் செய்யப்பட்ட யாதொரு ஆணையும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கையும் இந்த விதிகளில் அவைகளை ஒத்த ஏற்பாடுகளின் கீழ் செய்யப் பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாகக் கருத வேண்டும்.

## இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (மூத்த நிலை ஒழுங்குபடுத்தல்) விதிகள், 1954

1954-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதத்தில் 8-ஆம் தேதியிட்ட புதுடெல்லி, இந்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சகத்தின் அடியிற்கண்ட அறிக்கை மறுமுறை வெளியிடப்படுகிறது :—

எண் 9-2-54 ஏ.ஐ.எஸ். ( II) 1951-ஆம் ஆண்டு அனைத்திந்தியப் பணியாளர்கள் சட்டத்தின் (1951-ஆம் ஆண்டு LXI ) 3-ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைச் செயலாற்றலில், மத்திய அரசு சம்மந்தப்பட்ட மாநிலங்களைக் கலந்த பிறகு இதனுல் அடியிற் கண்ட விதிகளைச் செய்கிறது. அவையாவன:—

**1. சிறு தலைப்பு**—இந்த விதிகள் 1954-ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (மூத்த நிலையை ஒழுங்குபடுத்தல்) விதிகள் என்று சொல்லப்படலாம்.

**2. விளக்கங்கள்**—இந்த விதிகளில் சந்தர்ப்பம் வேறுவிதமாகத் தேவைப்படுத்தினுலொழிய :—

(அ) 'பணியமைப்பு' என்பது 1954-ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (பணியமைப்பு) விதிகளில் 3-ஆம் விதிக்கு ஒத்தப்படி அமைக்கப்பட்ட ஒரு இந்தியக் காவல் பணியாளர் பணியமைப்பு என்று பொருள்படும்.

(ஆ) 'ஆணைக் குழு' என்பது மத்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழு என்று பொருள்படும்.

(இ) 'போட்டித் தேர்வு' என்பது ஆட்கள் சேர்த்தல் விதிகளில் 7-ஆம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வு என்று பொருள்படும்.

(ஈ) 'தரவாரிப் பட்டியல்' என்பது 6-ஆம் விதியின்கீழ் தயாரிக்கப்பட்ட தரவாரிப் பட்டியல் என்று பொருள்படும்.

(உ) 'அலுவலர்' என்பது பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர் என்று பொருள்படும்.

(ஊ) 'ஆள் சேர்க்கும் விதிகள்' என்பது இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (ஆள் சேர்க்கும்) விதிகள், 1954 என்று பொருள்படும்.

(எ) 'மூத்த நிலைப் பணியிடம் (வேலையிடம்)' என்பது 1954-ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (பணியமைப்பு) விதிகளின் 4-ஆம் விதியின் (1)-ஆம் உள் விதியின் கீழ் தயாரிக்கப்பட்ட 1954-ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (பணியமைப்பு) ஒழுங்குமுறை விதிகளுக்கு ஒவ்வொரு அட்டவணையிலும் (1) ஆம் இனத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ள ஒரு பணியிடம் என்றும் அல்லது சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்தால் அதற்குச் சமமானதாக விளம்பரப்படுத்தப்பட்ட யாதொரு பணியிடம் என்றும் பொருள்படும்.

(ஏ) 'பணியாளர் தொகுதி' என்பது இந்தியக் காவல் பணியாளர் தொகுதி என்று பொருள்படும்.

(i) 'மாநிலப் பணியமைப்பும் கூட்டுப் பணியமைப்பும்' 1954 ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (பணியமைப்பு) விதிகளில் முறையே அவைகளுக்கு அளிக்கப்பட்டுள்ள பொருள்களைப் பெறும்.

(ஐ) விந்தியப் பிரதேசம் சம்பந்தப்பட்டதில் 'மாநில அரசாங்கம்' என்றால் அதன் லெப்டினெண்ட் கவர்னர் என்று பொருள்.

(ஒ) 'சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கம்' ஒரு கூட்டுப் பணியமைப்புக் காலத்தில் அந்தக் கூட்டுப் பணியமைப்பு எந்த மாநில அரசாங்கங்களுக்காக அமைக்கப்பட்டதோ அந்த எல்லா மாநில அரசாங்கங்களும் என்று பொருள்படும். ஒரு குறிப்பிட்ட பொருள் சம்பந்தமாய் அப்படிப்பட்ட எல்லா மாநில அரசாங்கங்களால் தமக்குப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ள ஒரு மாநில அரசாங்கமும் இதில் அடங்கும்.

3. **ஒதுக்கீடு ஆண்டு வகுத்தல்.**—(1) ஒவ்வொரு அலுவல ருக்கும் இந்திய விதியில் பின்னால் உள்ள ஏற்பாடுகளுக்கு ஒத்து ஒரு ஒதுக்கீடு ஆண்டு வகுக்கப்படும்.

(2) இந்த விதிகள் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் பணி யிலிருந்து ஒரு அலுவலரின் ஒதுக்கப்பட்ட ஆண்டு அவருக்கு வகுக்கப்பட்ட அல்லது இந்த விதிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அடுத்து முன்னால் அமுலிலிருந்து ஆணைகள் கட்டளைகளுக்கு ஒத்தபடி மத்திய அரசாங்கத்தால் அவருக்கு வகுக்கப்படக் கூடிய அதே விதமாக இருக்கும்.

ஆயினும், ஆட்கள் சேர்க்கும் விதிகளில் 9-ஆம் விதியின்படி நியமிக்கப்பட்ட ஒரு அலுவலருக்கு வகுக்கப்பட்ட ஒதுக்கீடு ஆண்டு, இந்த விதி ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னால் நிர்ண யிக்கப்படாவிட்டால் அவர் ஒதுக்கீடு ஆண்டு இந்த விதியின் (3)-ஆம் உள்விதியின் (ஆ) பகுதியில் உள்ள ஏற்பாட்டின்படி நிர்ணயிக்கப்பட வேண்டும். இந்த நோக்கத்திற்காக அப்படிப் பட்ட அலுவலர், மத்திய அரசாங்கம் ஆணைக் குழுவுடன் கலந்து அவ்வாறு வேலை பார்ப்பதற்கு அப்படிப்பட்ட காலத்திற்கு ஏற்பளித்திருந்தால் மட்டும் அவர் ஒரு மூத்தநிலைப் பணியிடத்தில் வேலை பார்த்ததாகக் கருத வேண்டும்.

(3) இந்த விதிகள் ஆரம்பிக்கப்பட்டதற்குப் பின்னால் பணி யாளர் தொகுதிக்கு நியமிக்கப்பட்ட ஒரு அலுவலரின் ஒதுக்கீட்டு ஆண்டு அடியிற்கண்டபடி ஆகும்:—

(அ) அந்த அலுவலர், ஒரு போட்டித் தேர்வின் முடிவின் மேல் **பணியாளர்** தொகுதிக்கு நியமிக்கப்பட்டிருந்தால், அந்தத் **தேர்வு** நடத்தப்பட்ட ஆண்டிற்கு அடுத்த ஆண்டாகும்.

(ஆ) அந்த அலுவலர் ஆள் சேர்க்கும் விதிகளில் 9-ஆம் விதியின்படி பதவி உயர்வால் பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப் பட்டிருப்பதில் அந்த விதிகளின் 7-ஆம் விதியின்படி பணியாளர் தொகுதிக்குச் சேர்க்கப்பட்டு, முதல் சொல்லப்பட்டவரால் பதிலி வேலை பார்க்க ஆரம்பிக்கப்பட்ட தேதிக்கு முன்பிருந்து தொடர்ந்து ஒரு மூத்தநிலைப் பணியிடத்தில் வேலை பார்த்த அலுவலர்களுக்குள் எல்லோரையும்விட மிகவும் இளநிலை அலுவலருக்குரிய ஒதுக்கு ஆண்டு ஆகும்.

ஆயினும், இந்த (விதிகளில் 7-ஆம் விதியின்படி) பணியாளர் தொகுதிக்குச் சேர்க்கப்பட்ட எந்த அலுவலர்கள் அவ்வாறு மூத்த

நிலைப் பணியிடத்தில் தொடர்ந்து பதிலி வேலை பார்க்க ஆரம்பித்த தேதிக்கு முன்பே, மூத்த நிலைப் பணியிடத்தில் தொடர்ந்து பதிலி வேலை பார்க்க ஆரம்பித்த ஆட்கள் சேர்க்கும் விதிகளில் 9-ஆம் விதியின்படி நியமிக்கப்பட்ட ஒரு அலுவலரின் ஒதுக்கு ஆண்டு, மத்திய அரசாங்கத்தால் சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்துடன் கலந்து இந்தக் காரணத்திற்காக நிர்ணயிக்கப்படும்.

மேலும், ஆள் சேர்க்கும் விதிகளின் 9-ஆம் விதியின்படி இவ் விதிகள் ஆரம்பிக்கப்பட்ட பிறகு பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்பட்டுள்ள ஒரு அலுவலர், அவருடைய பெயர் ஆள சேர்க்கும் விதிகளின் 9-ஆம் விதியின் கீழ் செய்யப்பட்ட இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (பதவி உயர்வால் நியமித்தல்), ஒழுங்குமுறை விதிகளின் தேவைக்கேற்றவாறு தயாரிக்கப்பட்ட தேர்வுப் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கு முன்பு பதிலியாகப் பார்த்த வேலை, மத்திய அரசாங்கத்தால் ஆணைக் குழுவைக் கலந்து ஏற்கப்பட்டிருந்தால், அவர் அக்காலத்திற்கு முன்பிருந்தே தொடர்ந்து மூத்த நிலைப் பணியில் பதிலி வேலை பார்த்துள்ள தாகக் கருதப்படுவார்.

4 **விளக்கம் 1.**—ஒரு அலுவலர், தாம் ஒரு வெறும் தற்காலிகமான அல்லது உள்ளூர் ஏற்பாட்டின் கீழ் மட்டுமல்லாது யாதொரு தடங்கலும் அல்லது கீழ்நிலைக்கு அனுப்பப்படாமலும் ஒரு மூத்த நிலைப்பணியில் இருந்திருந்தால், அவர் அதற்கு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து அந்த மூத்த நிலைப் பணியில் நிலைப்படுத்தப்படும் வரையில் மூத்த நிலையில் தொடர்ந்து பதிலிப் பணியாற்றியதாகக் கருதப்படுவார்.

**விளக்கம் 2.**—சம்பந்தப்பட்ட மாநில (அரசாங்கம்) ஒருவர் விடுப்பில் செல்லாமலிருந்தாலும் அல்லது வேறொரு பணியில் நியமிக்கப்படாமலும் அல்லது வேறு எந்தத் தனிப்பட்ட சந்தர்ப்பங்கள் நேராமலுமிருந்தாலும் அவர் ஒரு குறிப்பிட்ட காலத்தில் தொடர்ந்து பதிலிப் பணியாற்றியிருப்பார் என்று சான்றளித்தால், அப்படிப்பட்ட அலுவலர் அந்தக் காலத்தில் மூத்த நிலைப் பணியிடத்தில் பதிலி பார்த்திருப்பதாகக் கருதப்படுவார்.

அலுவலர்களின் மூத்த நிலை.—(1) அலுவலர்களின் மூத்த நிலை அவர்களுக்கிடையே இந்த விதியில் இதற்குப் பிறகு உள்ள ஏற்பாடுகளுக்கு ஒத்தபடி நிர்ணயிக்கப்படும்.

(2) இந்த விதிகள் ஆரம்பிக்கப்படும்போது பணியில் இருந்த அலுவலர்களின் மூத்தநிலை, மத்திய அரசாங்கத்தால், இந்த விதிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அடுத்து முந்தி அமுலிலிருந்த ஆணைகளுக்கும் அறிவுரைகளுக்கும் ஒத்தபடி நிர்ணயிக்கப்பட்டுள்ளபடி அல்லது நிர்ணயிக்கப்படக் கூடியபடியிருக்கும்.

ஆயினும், ஆள் சேர்க்கும் விதிகளின் 9-ஆம் விதியின்படி அமர்த்தப்பட்ட ஒரு அலுவலரின் மூத்தநிலை, இந்த விதிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னால் நிர்ணயிக்கப்பட்டில்லாதவைகளில், அவருடைய மூத்த நிலை (3)-ஆம் உள்விதியை ஒத்தப்படி நிர்ணயிக்கப்படும்.

(3) இந்த விதிகள் ஆரம்பிக்கப்பட்டதற்குப் பின்னால் பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்பட்டு ஒரே ஒதுக்கல் ஆண்டு அளிக்கப்பட்டுள்ள அலுவலர்களின் மூத்தநிலை அடியிற்கண்ட முறையில் இருக்கும்; அதாவது

(i) ஒரு போட்டித் தேர்வின் முடிவின்மேல் ஆட்கள் சேர்க்கும் விதிகளின் 7-ஆம் விதியை ஒத்தபடி, பணியாளர் தொகுதிக்கு அமர்த்தப்பட்டுள்ள, 1954-ம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (தகுதிகாண்பருவம்) விதிகளின் 19-ஆம் விதிக்கு ஒத்தபடி அவர்களுக்கிடையே தர வரிசை அளிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் ;

(ii) பதவி உயர்வால் பணியாளர் தொகுதிக்கு ஆட்கள் சேர்க்கும் விதிகளில் 9-ஆம் விதிக்கு ஒத்தவாறு நியமிக்கப்பட்டு, அவர்கள் நியமிக்கப்பட்ட தேதி முறைப்படி தர வரிசை அளிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் ;

ஆயினும், அப்படிப்பட்ட அலுவலர்களில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் நியமிக்கப்பட்ட தேதி ஒரே தேதியாயிருந்தால், அவர்களுக்கிடையே மூத்த நிலை, அவர்கள் பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்பட்ட தேதியில், ஆட்கள் சேர்க்கும் விதிகளில் 9-ஆம் விதியின் கீழ் அமைக்கப்பட்டுள்ள இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (பதவி உயர்வால் நியமித்தல்) ஒழுங்குமுறை விதிகளின் தேவைகளைக் கருதித் தயாரிக்கப்பட்ட தேர்வுப் பட்டியலில் ஆள்கள் பெயர்கள் எந்த வரிசையில் உள்ளனவோ அந்த முறையிலிருக்கும்.

5. ஆட்கள் சேர்க்கும் தனிப்பட்ட கழகத்தால் II-ஆம் பட்டியிலும். III ஆம் பட்டியிலும் வைக்கப்பட்டுள்ள அலுவலர்

களின் மூத்த நிலை.—இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (மாநிலங்களுக்கு விரிவுபடுத்தல்), திட்டத்திற்கு ஒத்தபடி ஆட்கள் சேர்க்கும் தனிப்பட்ட கழகத்தால் II- ஆம் பட்டியலில் அல்லது III- ஆம் பட்டியலில் வைக்கப்பட்டுள்ள ஒரு அலுவலருக்குத் தர வரிசைப் பட்டியலில் ஒதுக்கு ஆண்டு வகைப்படுத்தப் படுவதற்கு இந்தக் காரணத்திற்காக மத்திய அரசாங்கத்தால் சம்மந்தப்பட்ட மாநில அரசாங்கத்தைக் கலந்து நிர்ணயிக்கப் படும்.

6. தர வரிசைப் பட்டியல்.—ஒவ்வொரு மாநிலப் பணி அமைப்புக்கும், கூட்டுப் பணியமைப்புக்கும் ஒவ்வொரு ஆண்டும். 4, 5, 7-ஆம் விதிகளின் ஏற்பாடுகளுக்கு ஒத்தபடி மூத்தநிலை முறையில் அந்தப் பணி அமைப்பில் உள்ள எல்லா அலுவலர்களின் பெயர்களையும் கொண்ட ஒரு தர வரிசைப்பட்டியல் தயாரிக்கப் படும்.

7. மற்றொரு பணியமைப்பிற்கு மாற்றப்படுவதன் மேல் மூத்த நிலை நிர்ணயித்தல்.—பொது அக்கறையில் ஒரு அலுவலர் ஒரு பணி அமைப்பிலிருந்து மற்றொரு தனியமைப்புக்கு மாற்றப் பட்டால், அவர் மாற்றப்படும் பணியமைப்பின் தர வரிசையில் பட்டியலில் அவருக்குரிய இடம், இந்தக் காரணத்திற்கான அடிப் படையில் மத்திய அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படும்.

ஆயினும், அந்த மாற்றல், அலுவலரின் வேண்டுகோளின்மேல் செய்யப்பட்டால் அவர் மாற்றப்பட்ட பணியமைப்பின் தர வரிசைப் பட்டியலில், அதே ஒதுக்கு ஆண்டு உள்ள அவர் தரத்தைச் சேர்ந்த பணியமைப்பில் உள்ள எல்லா அலுவலர் களுக்கும் கீழே அவருக்கு இடம் அளிக்கப்படும்.

8. உரை விளக்கம்.—இந்த விதிகளுக்கு உரை விளக்கம் அளிப்பதில் ஏதாவது கேள்வி எழுந்தால் அது மத்திய அரசாங் கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு, அதன் மேல் அதன் தீர்ப்பே முடிவானதாகும்.

9 நீக்கலும் காப்பும்.—இந்த விதிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அடுத்து முன்னால் அமுலிலிருந்து இவைகளுக்கு ஒத்த எல்லா விதிகளும் இதனால் நீக்கப்படுகின்றன.

ஆயினும், அப்படி நீக்கப்பட்ட விதிகளின் கீழ்ச் செய்யப்பட்ட எந்த ஆணையும் அல்லது எடுக்கப்பட்ட எந்த நடவடிக்கையும், இந்த விதிகளில் அவைகளை ஒத்த ஏற்பாடுகளின் கீழ்ச் செய்யப் பட்டுள்ளதாக அல்லது எடுக்கப்பட்டுள்ளதாகக் கருதப்படும்.

**இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (சம்பளம்) விதிகள், 1954.**

1954-ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 14-ஆம் தேதியிட்ட புதுடெல்லி, இந்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சகத்தின் அடியிற்கண்ட அறிவிக்கை மறு முறை வெளியிடப்படுகிறது :—

எண் 10/2/54 ஏ.ஐ.எஸ். ( II ).—1951 ஆம் ஆண்டு அனைத்திந்தியப் பணியாளர் தொகுதிகள் சட்டத்தின் (1951-ஆம் ஆண்டைய LXI) 3-ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவால் அளிக்கப் பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி மத்திய அரசாங்கம், சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கங்களைக் கலந்த பிறகு இதனால் அடியிற்கண்ட விதிகளைச் செய்கிறது. அவையாவன :—

1. **சிறு தலைப்பு.**—இந்த விதிகள், 1954 ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (சம்பளம்) விதிகள் என்று சொல்லப் படலாம்.

2. **விளக்கங்கள்.**—இந்த விதிகளில், சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலொழிய,—

(அ) 'பணியமைப்பும்' 'பணியமைப்புப் பதவியும்' என்பவை அவைகளுக்கு முறையே 1954-ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (பணியமைப்பு) விதிகளில் அளிக்கப் பட்டுள்ள அதே பொருள்களைப் பெற்றிருக்கும்;

(ஆ) 'துறைத் தேர்வு' என்பது மாநில அரசாங்கத்தால், அவ்வப்போது அந்த மாநிலத்தின் பணியமைப்பில் ஒதுக்கப் பட்டுள்ள அல்லது அந்த மாநிலத்தில் பயிற்சிக்காக அனுப்பப் பட்டிருக்கும் பணியாளர் தொகுதி உறுப்பினர்களுக்காகக் குறிப் பிடப்படக்கூடிய அப்படிப்பட்ட தேர்வு என்று பொருள்படும் :

(இ) 'நேர்முகமாகச் சேர்க்கப்பட்டவர்' என்பது 1954-ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (ஆட்கள் சேர்க்கும்) விதிகளின் 7-ஆம் விதிகளுக்கு ஒத்தபடி அமர்த்தப் பட்ட ஒரு நபர் என்று பொருள் ;

(ஈ) 'பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர்' என்பது இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் உறுப்பினர் என்று பொருள்படும் ;

(உ) 'பதவி உயர்வு அளிக்கப்பட்ட அலுவலர்' என்பது 1954-ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் 9-ஆம் விதிக்கு ஒத்தபடி ஒரு மாநிலக் காவல் பணியாளர் தொகுதியிலிருந்து பதவி உயர்வால் இந்தியக் காவல் பணியாளர் தொகுதிக்கு அமர்த்தப்பட்ட ஒரு அலுவலர் என்று பொருள் ;

(ஊ) 'அட்டவணை' என்பது இந்த விதிகளுக்கு இணைக்கப்பட்டுள்ள ஒரு அட்டவணை என்று பொருள்படும் ;

(எ) 'மாநிலம்' என்பது ஒரு அ பிரிவு அல்லது (ஜம்மு காஷ்மீர் மாநிலம் தவிர) ஒரு ஆ பிரிவு மாநிலம் என்று பொருள் படும் ; விந்தியப் பிரதேச மாநிலமும் அதில் அடங்கும் ;

(ஏ) 'மாநிலப் பணியமைப்பும்' 'கூட்டுப் பணியமைப்பும்' 1954-ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (பணியமைப்பு) விதிகளில் அவைகளுக்கு முறையே, அளிக்கப்பட்டுள்ள பொருள்களைப் பெற்றிருக்கும் ;

(ஐ) 'மாநிலக் காவல் தொகுதி' என்பது, 1954-ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (ஆட்கள் சேர்க்கப் படும்) விதிகளில் அதற்கு என்ன பொருள் கொடுக்கப்பட்டிருக் கிறதோ அதே பொருளைப் பெறும் ;

(ஒ) விந்தியப் பிரதேச சம்பந்தப்பட்டதில் 'மாநில அரசாங்கம்' என்பது அதன் லெப்டினெண்ட் கவர்னரைக் குறிக்கும் ;

(ஓ) 'சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கம்' ஒரு கூட்டுப் பணியமைப்பைப் பொருத்தவரைக் கூட்டுப் பணியமைப்பு அமைக்கப்பட்டுள்ள எல்லா மாநிலங்களின் அரசாங்கங்கள் என்று பொருள்படும். ஒரு குறிப்பிட்ட பொருளுக்காக அப்படிப் பட்ட எல்லா மாநில அரசாங்கங்களால் தமக்குச் சார்பாண்மை வகிக்க நியமிக்கப்பட்ட ஒரு மாநில அரசாங்கமும் அதில் அடங்கும்.

3. காலச் சம்பள ஏற்ற முறை.—பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினருக்கு ஏற்கப்படக்கூடிய காலச் சம்பள ஏற்ற முறை அடியிற் கண்டபடியாகும் :—

இளநிலை முறை.—ரூபாய்கள் 350-350-380-330-30-590. சம்பள உயர்வுத் தடை 30-770-40-850 (19 ஆண்டுகள்).

மூத்த நிலை முறை.—ரூபாய்கள் 600 (6-ஆம் ஆண்டு) அல்லது அதன் கீழ் 40-1,000-1,000-1,050-1,050-1,100-1,100-1,150 (22 ஆண்டுகள்

தேர்வுத் தரம்.—ரூபாய்கள் 1,250.

ஆயினும், மூத்தநிலை சம்பள உயர்வு முறையில் ஒரு பதவியை வகித்துக் கொண்டிருக்கும் ஒரு பணியாளர் தொகுதி அங்கத்தினர் தேர்வுத் தரத்தில் ஒரு பதவிக்கு நியமிக்கப்படலாம். அவர் அப்படி நியமிக்கப்பட்டபோது அந்தத் தேர்வுத் தரம் பதவியின் சம்பளத்தைப் பெற உரிமையுள்ளவராவார்.

மேலும், இந்த விதிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அடுத்து முன்னால் அமுலிலிருந்த யாதொரு ஆணையின் கீழ் வேறு எந்தக் காலச் சம்பள ஏற்ற முறையில் சம்பளம் ஏற்கப்பட்டிருந்ததோ, அதே அளவில் அந்தப் பணியாளர்த் தொகுதி உறுப்பினர் தொடர்ந்து பெறுவார்.

4. **காலச் சம்பள ஏற்ற முறையில் முதல் சம்பளம் நிர்ணயித்தல்.**—(1) நேர்முகமாகச் சேர்க்கப்பட்டவரின் ஆரம்பச் சம்பளம் இளநிலை காலச் சம்பள ஏற்ற முறையில் குறைந்த பட்ச தொகையில் நிர்ணயிக்கப்படும்.

(2) இளநிலைக் காலச் சம்பள ஏற்ற முறையில் உள்ள ஒரு பணியாளர் தொகுதி உறுப்பினரின் சம்பளம், அவர் மூத்த நிலை காலச் சம்பள ஏற்ற முறையில் ஒரு பதவிக்கு அமர்த்தப்பட்டதன் மேல், அட்டவணை I-இல் காட்டப்பட்டுள்ளபடி மூத்த நிலைக் காலச் சம்பள ஏற்ற முறையில் அதற்கு ஒத்த நிலையில் நிர்ணயிக்கப்படும்.

ஆனால், அவசர ஆட்கள் சேர்க்கும் திட்டத்தின் கீழ் இளநிலைக் காலச் சம்பள ஏற்ற முறைப் பதவிக்கு முதல் முதலாக அமர்த்தப்பட்டு உயர்வுப்பெற்ற அலுவலரைப் பொருத்தவரை, அவர் மூத்த நிலை காலச் சம்பள ஏற்ற முறையில் ஒரு பதவிக்கு அமர்த்தப்பட்டபோது அவருடைய சம்பளம், II ஆவது அட்டவணையில் I- ஆவது பிரிவில் சொல்லப்பட்டுள்ள கொள்கைகளை அனுசரித்து மாற்றி நிர்ணயிக்கப்படும். அவ்வாறு மாற்றி மறுபடி நிர்ணயிக்கப்படும் நோக்கங்களுக்காக, அவர் இந்தியக் காவல் பணியாளர் தொகுதிக்கு அமர்த்தப்பட்ட தேதியிலிருந்து மூத்தநிலை

காலச் சம்பள ஏற்ற முறைப் பதவி ஒன்றில் அமர்த்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுவார்.

(3) இந்தியக் காவல் பணியாளர் தொகுதிக்கு அமர்த்தப்பட்ட தேதிக்கு முன்னால் பதிலி பார்க்கும் வகையில் ஒரு பணியமைப்புப் பதவியை வகித்திராத உயர்வு அளிக்கப்பட்ட அலுவலரின் ஆரம்பச் சம்பளம்; II-ஆவது அட்டவணையில் I- ஆவது பிரிவில் சொல்லப்பட்டுள்ள கொள்கைக்கு ஒட்டி நிர்ணயிக்கப்படும்.

(4) இந்தியக் காவல் பணியாளர் தொகுதிக்கு அமர்த்தப்பட்ட தேதிக்கு முன்னால் பதிலி பார்க்கும் வகையில் ஒரு பணியமைப்புப்பணியிடம் வகித்திருந்தவரின் அல்லது தொடர்ந்து வகித்துக் கொண்டிருக்கும் உயர்வு அளிக்கப்பட்ட அலுவலரின் ஆரம்பச் சம்பளம், II -ம் அட்டவணையில் II-ம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள கொள்கைகளை அனுசரித்து நிர்ணயிக்கப்படும்.

*விளக்கம்*.—சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்தால் பணியமைப்புப் பணியிடத்திற்குச் சமமானதென்று அறிவிக்கப்பட்ட பணியமைப்பைச் சேராத பணியிடமும். 1954-ம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (ஆட்கள் சேர்க்கை) விதிகளின் 9 ஆம் விதியின் கீழ் அமைக்கப்பட்டுள்ள ஒழுங்கு முறை விதிகளையனுசரித்து இந்தியக் காவல் பணியாளர் தொகுதி நியமனத்திற்கு ஏற்கப்பட்ட பிறகு, அது ஒரு உயர்வு அளிக்கப்பட்ட அலுவலரால், வகிக்கப்பட்டால், (3)-ம் உள்விதியின் நோக்கத்திற்காகவும் இந்த உள்விதியின் நோக்கத்திற்காகவும் பணியமைப்புப் பணியிடம் என்ற சொல்லில் அடங்கும்.

ஆனால், உயர்வு அளிக்கப்பட்ட அந்த அலுவலர் அந்தப் பணி அமைப்புப் பணியிடமல்லாத பணியிடத்தை வகித்திருந்த காலத்தில், அவர் இந்தியக் காவல் பணியாளர் தொகுதியில் மூத்த நிலை சம்பள ஏற்ற முறையில் -ம் அட்டவணைப்படி ஊதியமளிக்கப்பட்டும்; அப்படிப்பட்ட சமமான பணியமைப்பில் இல்லாத பணியிடத்தில் பதிலி பார்க்க வரிசை முறையில்லாத ஒரு வாய்ப்பைப் பெறாமலும் இருக்க வேண்டும்.

(5) 1954-ம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (பணியமைப்பு) விதிகளின் 9 ஆம் விதியின்படி பதிலி முறையில் ஒரு பணியமைப்புப் பணியிடத்தை வகிக்க அமர்த்தப்பட்ட ஒரு மாநிலக் காவல் பணியாளர் தொகுதியின் ஒரு அலுவலரின்

ஆரம்பச் சம்பளம் II -ஆம் அட்டவணையில் III -ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ளபடியான விதத்தில் நிர்ணயிக்கப்படும்.

(6) இந்த விதியில் உள்ளது எதுவும் இந்த விதிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அடுத்து முன்னால் பணியிலிருந்த பணியாளர் தொகுதி உறுப்பினர்களைப் பொருத்தவரை ஏற்கெனவே தக்க காலச் சம்பள ஏற்ற முறையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஆரம்பச் சம்பளத்தைப் பாதிப்பதாகக் கருதக் கூடாது.

5. ஊதிய உயர்வுகளை ஒழுங்குபடுத்தல்.—(1) சம்மந்தப்பட்ட மாநில அரசாங்கத்தால், விதிகள் 6, 7 இவற்றின்கீழ் செய்யப்பட்ட யாதொரு ஆணைக்குட்பட்டு, பணியாளர்த் தொகுதியின் இளநிலை அல்லது மூத்தநிலை காலச் சம்பள ஏற்ற முறையில் உள்ள ஒரு உறுப்பினருக்கும் ஏற்கப்படக் கூடிய ஊதிய உயர்வு அடியிற் கண்டபடியாகும் :—

(i) 1954-ம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (ஆட்கள் சேர்க்கும்) விதிகளின் 7 ஆம் விதியின் கீழ் அமர்த்தப்பட்ட உறுப்பினரைப் பொருத்தவரை, அவர் பணியாளர் தொகுதிக்கு அமர்த்தப்பட்ட தேதியிலிருந்து ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் ஏற்படும் ;

(ii) 1954-ம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (ஆட்கள் சேர்க்கும்) விதிகள் 9 ஆம் விதியின் கீழ் அமர்த்தப்பட்ட அலுவலரைப் பொருத்தவரை அவர் ஒரு பணியமைப்புப் பணியிடத்தில் அமர்த்தப்பட்ட தேதியிலிருந்து ஒரு ஆண்டு பணி முடிவானதன் மேலும் :

ஆனால்,(i ) உயர்த்தப்பட்ட அலுவலர், ஒருவர் மாநிலக் காவல் பணியாளர் தொகுதியிலும் இந்தியக் காவல் பணியாளர் தொகுதியிலும் குறைந்தது மொத்தம் ஆறு ஆண்டுகள் காலம் பணியாற்றி முடித்ததின் பேரில் மட்டும் இந்த உள்விதியின் (ii) ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தேதியில் மூத்தநிலைக் காலச் சம்பள ஏற்ற முறையில் ஒரு ஊதிய உயர்வு பெறலாம்:

(ii) இந்தியக் காவல் பணியாளர் தொகுதியில் போர்ப் பணி பதவி நாடுபவருக்காக ஒதுக்கப்பட்டுள்ள ஒரு காலி இடத்திற்கு யாதொரு ஆண்டில் நவம்பர் அல்லது டிசம்பர் மாதத்தில் அமர்த்தப்பட்ட ஒரு போர்ப் பணி பதவி நாடுபவரைப் பொருத்தவரை இந்த விதிகளின் நோக்கங்களுக்காக அமர்த்தப்பட்ட தேதி அந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் முதல் தேதியென்று கருதப்படும்;

(iii) இந்த விதிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னால் எக் காலத்திலும் இந்தியக் காவல் பணியாளர் தொகுதிக்கு அமர்த்தப் பட்ட பணியாளர் தொகுதியின் மற்ற எல்லா உறுப்பினர்களைப் பொருத்தும், அவர்களுடைய ஊதிய உயர்வுகள் அவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட தேதிக்கு அடுத்து முன்னால் அமுலிலிருந்த ஆணைகளுக்கு ஒத்தபடி ஒழுங்குபடுத்தப்படும்

**விளக்கம்.**—இந்த விதியின் நோக்கத்திற்காக, பணியமைப்புப் பணியிடம் என்னும் சொல்லில் ஒரு பணியமைப்புப் பணி யிடத்துக்குச் சமமானது என்று சம்மந்தப்பட்ட மாநில அரசாங்கத்தால் செய்யப்பட்ட ஒரு பணியமைப்பில் சேராத பணி யிடமும் அடங்கும். ஆனால் 1954-ம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (ஆட்கள் சேர்க்கை) விதிகளின் 9-ஆம் விதியின்கீழ் அமைக்கப்பட்டுள்ள ஒழுங்குமுறை விதிகளை அனுசரித்து இந்தியக் காவல் பணியாளர் தொகுதியில் நியமிக்க ஏற்கப்பட்ட பிறகு உயர்வு அளிக்கப்பட்ட அலுவலரால் அது வகிக்கப்பட வேண்டும்.

(2) 1954 ஆம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (ஆட்கள் சேர்க்கை) விதிகளின் 7 ஆம் விதியின்கீழ் சேர்க்கப் பட்ட பணியாளர் தொகுதி உறுப்பினர் சம்மந்தமாய். இளநிலை மூத்தநிலை காலச் சம்பள ஏற்ற முறைகளில் உள்ள ஊதிய உயர்வுகள். I ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அவைகளையொட்டி நீடித்த பணிக் கால அளவைப் பொருந் திருக்கும்.

(3) 1954-ம் ஆண்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (ஆட்கள் சேர்க்கை) விதிகளின் 9 ஆம் விதியின் கீழ் சேர்க்கப் பட்டுள்ள வேறு எந்தப் பணியாளர் தொகுதி உறுப்பினர் சம்பந்தப்பட்ட ஊதிய உயர்வுகள், அவர் மூத்தநிலை காலச் சம்பள ஏற்ற முறையில் ஆரம்பச் சம்பளம் நிர்ணயிக்கப்பட்டுள்ள கட்டத்தை ஒட்டி ஒழுங்குபடுத்தப்படும்.

(4) 3-ம் விதியில் குறிப்பிடப்பட்டுள்ள காலச் சம்பள ஏற்றமுறை பொருந்தாத பணியாளர்த் தொகுதி உறுப்பினருக்கு ஏற்கப்படக்கூடிய ஊதிய உயர்வுகள், இவ் விதிகள் ஆரம்பிக்கப் படுவதற்கு அடுத்து முன்னால் அமுலிலிருந்த ஒத்த ஆணைகளை ஒட்டி ஒழுங்குபடுத்தப்படும்

6. **ஊதிய உயர்வுகளை நிறுத்தி வைத்தல்.**—(1) மாநில அரசு, நேர்முகமாகச் சேர்க்கப்பட்ட ஒருவர் துறைத் தேர்வு அல்லது

தேர்வுகளில் அந்த மாநில அரசாங்கம் ஒரு பொது அல்லது தனிப்பட்ட ஆணையால் குறிப்பிட்டிருக்கக்கூடிய காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறினால், அது கட்டளையிடக் கூடிய அந்தக் காலத்திற்கு நேராக சேர்க்கப்பட்ட அவருக்கு உரித்தான ஊதிய உயர்வை நிறுத்தி வைக்கலாம்; ஆனால் அப்படிப்பட்ட ஊதிய உயர்வுகள் நிறுத்தப்படாமல் பின்னால் வரக் கூடிய அவருடைய ஊதிய உயர்வுகளைப் பாதிக்கக் கூடியதாகாது.

(2) இளநிலைக் காலச் சம்பள ஏற்ற முறையில் ஒரு சம்பள உயர்வுத் தடை குறிப்பிடப்பட்டிருப்பவைகளில், அந்தத் தடைக்குப் பிறகு மேலுமுள்ள ஊதிய உயர்வைப் பணியாளருக்கு, அந்த உயர்வை நிறுத்தத் தகுதியையுடைய அதிகாரியின் தெளிவான ஒப்பு அளிப்பு இல்லாமல் அளிக்கக் கூடாது.

ஆயினும், இளநிலைக் காலச் சம்பள ஏற்ற முறையில் ஊதிய உயர்வுத் தடை பொருந்தாது என்பது ஒரு பணியாளர் தொகுதி உறுப்பினரின் மூத்தநிலை காலச் சம்பள ஏற்ற முறையில் சம்பளத்தைப் பாதிக்காது. அதில் அவருக்குரிய சம்பளம் அவர் பணியாற்றிய காலத்தையொட்டி ஒழுங்குபடுத்தப்படும்.

7. ஊதிய உயர்வுகளை முன்னதாக அளித்தல்.—மாநில அரசாங்கம், நேராகச் சேர்க்கப்பட்ட ஒருவருக்கு உரித்தான இரண்டாம் ஊதிய உயர்வையும் மூன்றாம் ஊதிய உயர்வையும், அவர் எவ்வளவு காலம் பணியாற்றியிருந்தாலும், குறிப்பிடப்பட்டுள்ள துறைத் தேர்வு அல்லது தேர்வுகளில் அவர் தேர்ச்சியடைந்த உடனே ஒப்பளிப்புத் தர வேண்டும். அதற்குப் பிறகு அவர், அந்தக் காலச் சம்பள ஏற்ற முறையில் அவர் வகிக்கும் பதவிக்குப் பொருந்தும் விகிதத்தில் சம்பளம் பெற உரிமையுள்ளவராவார்.

**விளக்கம்.**—இந்த விதியின் நோக்கங்களுக்காக '**ஊதிய உயர்வு**' என்னும் சொல் சம்பளத்தில் உள்ளபடியான உயர்வைக் குறிக்குமேயல்லாது அந்தக் காலச் சம்பள ஏற்ற முறையில் உள்ளபடியான கட்டங்களைக் குறிக்காது.

**8. III ஆம் அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள பணியிடங்களை வகித்துக் கொண்டிருக்கும் அலுவலர்களின் சம்பளம்.**— III-ம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பணியிடத்தை வகிக்க அமர்த்தப்பட்ட பணியாளர் தொகுதியின் யாதொரு உறுப்பினர், அவர் அந்தப் பணியிடத்தை வகிக்கும் காலத்திற்குச் சொல்லப்

பட்ட அட்டவணையில் அந்தப் பணியிடத்திற்காகக் காட்டப் பட்டிருக்கும் சம்பளத்தைப் பெற உரிமையுடையவராவார்.

ஆயினும், பணியாளர்த் தொகுதியின் எந்த உறுப்பினரும் எச் சமயத்திலும் 4 ஆம் விதியின் கீழும் 5 ஆம் விதியின் கீழும் அவர் பெற உரிமையுள்ள சம்பளத்திற்குக் குறைவாகப் பெறக்கூடாது.

மேலும், வேறு எந்தத் தனிச் சம்பளத்தை அல்லது சம்பள ஏற்ற முறைச் சம்பளத்திற்கு மேற்கொண்டு III ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதவியிடங்களை வகிப்பதற் காக, இந்த விதிகள் அமைக்கப்படுவதற்கு அடுத்து முன்னால் அமுலிலிருந்த யாதொரு ஆணையின் கீழும் ஏற்கப்படக்கூடிய பணி யாளர் தொகுதியின் ஒரு உறுப்பினர், அவர் அந்தப் பணியிடத்தை வகிக்கும் காலத்திற்கு அதே சம்பளத்தை நீடித்துப் பெறுவார்.

9. III ஆம் அட்டவணையில் சேர்க்கப்பட்டில்லாத பொது பணி யிடங்களுக்கு நியமிக்கப்பட்ட பணியாளர் தொகுதி உறுப் பினர்களின் சம்பளம்.—(1) பணியாளர் தொகுதியின் எந்த உறுப்பினரும், III ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது தவிர வேறு ஒரு பணியிடத்திற்குச் சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கம் தன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பணியிடங்களைப் பொருத்தவரை அல்லது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு மத்திய அரசாங்கம் தன் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பணியிடங்களைப் பொருத்தவரை, சொல்லப்பட்ட பணியிடம், சொல்லப்பட்ட அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒரு பணியிடத்துக்குத் தகுதி யிலும் பொறுப்பிலும் சமமானது என்று அறிவித்தாலொழிய, நியமிக்கப்படலாகாது.

(2) III ஆம் அட்டவணையில் குறிப்பிடப்படாத ஒரு பணி யிடத்துக்கு நியமிக்கப்பட்டதன் பேரில் அப்பணியாளர் தொகுதி உறுப்பினரின் சம்பளம், சொல்லப்பட்ட பணியிடம் எதற்குச் சமானமானது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறதோ அந்தப் பணி யிடத்துக்கு அவர் நியமிக்கப்பட்டிருந்தால் என்ன சம்பளம் பெற உரிமையையுடையவராயிருப்பாரோ அதே சம்பளமாகும்.

10. விலக்கு அளிக்க அதிகாரம்.—மத்திய அரசாங்கம், சம்மந்தப்பட்ட மாநில அரசாங்கத்தின் சம்மதத்துடன், இந்தியக் காவல் பணியாளர் தொகுதி (மாநிலங்களுக்கு விரிவுபடுத்தல்) திட்டத்தின் கீழ் தனிப்பட்ட ஆள் சேர்க்கும் கழகத்தால் தயாரிக்கப்பட்ட II ஆம் பட்டியலில் அல்லது III ஆம் பட்டியலில்

சேர்க்கப்பட்டு இந்தியக் காவல் பணியாளர் தொகுதிக்கு அமர்த்தப் பட்டுள்ள, மாநிலக் காவல் பணியாளர் தொகுதியின் ஒரு அலுவலருக்கு, இந்த விதிகளில் எல்லாவற்றிலிருந்தும் அல்லது ஏதேனும் சிலவற்றிலிருந்தும் விலக்கு அளிக்கலாம்.

**11. அட்டவணையைத் திருத்தல்.**—மத்திய அரசாங்கம், சம்மந்தப்பட்ட மாநில அரசாங்கத்தைக் கலந்ததற்குப் பிறகு III-ஆம் அட்டவணையைத் திருத்தலாம்.

**12. உரை விளக்கம்.**—இந்த விதிகளுக்கு உரை விளக்கம் சொல்லும் சம்மந்தமாய் ஏதாவது கேள்வி எழுந்தால் அது மத்திய அரசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டு அதன் மேல் அது அளிக்கும் தீர்ப்பே முடிவானதாகும்.

**13. நீக்கலும் காப்பும்.**—இந்த விதிகளுக்கு ஒத்ததாய் இந்த விதிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு அடுத்து முன்னால் அமுலிலிருந்த எந்த விதிகளும் இதனால் நீக்கப்படுகின்றன.

ஆயினும், அவ்வாறு நீக்கப்பட்ட விதிகளின்கீழ் செய்யப் பட்ட எந்த ஆணையும் அல்லது எடுக்கப்பட்ட எந்த நடவடிக்கையும் இந்த விதிகளில் அவைகளுக்கு ஒத்த ஏற்பாடு களின்கீழ் செய்யப்பட்டதாகவும் எடுக்கப்பட்டதாகவும் கருதப் படும்.

## I-ஆம் அட்டவணை.

[4 (2), 5 (2)-ஆம் விதிகளைப் பார்க்கவும்.]

இந்தியக் காவல் பணியாளர்த் தொகுதிக்குச் சம்பள முறைகள்.

| பணியின் ஆண்டுகள். | இளநிலை முறை. (ரூபாய்கள்.) | மூத்த நிலை முறை. (ரூபாய்கள்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | (மாதாந்தரச் சம்பள விகிதங்கள்.) | |
| 1-ஆம் | 350 | 600 |
| 2-ஆம் | 350 | 600 |
| 3-ஆம் | 380 | 600 |
| 4-ஆம் | 380 | 600 |
| 5-ஆம் | 410 | 600 |
| 6-ஆம் | 440 | 600 |
| 7-ஆம் | 470 | 640 |
| 8-ஆம் | 500 | 680 |
| 9-ஆம் | 530 | 720 |
| 10-ஆம் | 560 | 760 |
| 11-ஆம் | 590 | 800 |
| | சம்பள உயர்வுத் தடை. | |
| 12-ஆம் | 620 | 840 |

| பணியின் ஆண்டுகள். | இளநிலை முறை. (ரூபாய்கள்.) | மூத்தநிலை முறை. (ரூபாய்கள்.) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 13-ஆம் | 650 | 880 |
| 14-ஆம் | 680 | 920 |
| 15-ஆம் | 710 | 960 |
| 16-ஆம் | 740 | 1,000 |
| 17-ஆம் | 770 | 1,000 |
| 18-ஆம் | 810 | 1,050 |
| 19-ஆம் | 850 | 1,050 |
| 20-ஆம் | | 1,100 |
| 21-ஆம் | | 1,100 |
| 22-ஆம் ஆண்டும் மேற்பட்டும் | | 1,150 |
| தேர்வுப் பிரிவு | | 1,250 |

## II ஆம் அட்டவணை

**பதவி உயர்வு அளிக்கப்பட்ட அலுவலர்கள் இந்தியக் காவல் பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்பட்டதன் பேரில் சம்பளம் திர்ணயிக்கும் கொள்கைகள் (4 ஆம் விதியைப் பார்க்கவும்).**

இந்த அட்டவணையில்,

(i) 'உள்ளபடியான சம்பளம்' என்ற சொல், மாநிலக் காவல் பணியாளர் தொகுதியின் ஒரு அலுவலர் அந்தப் பணியாளர் தொகுதியில் ஒரு பணியமைப்பில் ஒரு நிலையான பதவியை வகிக்கும் காரணத்தால் பெறுதற்கு உரிமையுள்ள சாதாரணக் காலச் சம்பள ஏற்ற முறையில் அல்லது தேர்வுப் பிரிவில் உள்ள சம்பளம் என்று பொருள்படும்.

(ii) 'ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பளம்' என்ற சொல், ஒரு தேர்வுப் பிரிவில் பதிலி பார்த்துக் கொண்டிருக்கும் மாநிலக் காவல் பணியாளர் தொகுதியின் ஒரு அலுவலர், அவர் அப்படித் தேர்வுப் பிரிவில் பதிலி பார்த்துக் கொண்டில்லாமலிருந்தால் அந்தப் பணியாளர் தொகுதியில் சாதாரணக் காலச் சம்பள ஏற்ற முறையில் பெற்றுக் கொண்டிருக்கக் கூடிய சம்பளம் என்று பொருள்படும்.

**பிரிவு 1. 4(3) ஆம் விதியின் கீழ்வரும் உயர்வு அளிக்கப்பட்ட அலுவலர்களின் ஆரம்பச் சம்பளம் நிர்ணயித்தல் :—**

(1) ஒரு உயர்வு அளிக்கப்பட்ட அலுவலரின் ஆரம்பச் சம்பளம், இந்தியக் காவல் பணியாளர் தொகுதி மூத்த நிலைக் காலச் சம்பள ஏற்ற முறையில், சாதாரணக் காலச் சம்பள ஏற்ற முறையில் அவருடைய உள்ளபடியான சம்பளத்திற்கு அல்லது, சந்தர்ப்பத்திக்கேற்றவாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பளத்திற்குச் சமமானதற்கு அடுத்து மேற்பட்ட தொகையில் அவருடைய மாநிலக் காவல் பணியாளர் தொகுதியில் பணிக் காலத்தின் முதுநிலைக் காலச் சம்பள ஏற்ற முறையில் ஒவ்வொரு மூன்றாண்டுக் காலப் பணிக்கு ஒரு ஊதிய உயர்வு விகிதம் அதிகப் படுத்தி ரூ. 150 குறுமத்திற்கும் ரூ. 200 பெருமத்திற்கும் உட்பட்டு நிர்ணயிக்கப்படும்.

ஆயினும்,

(i) அப்படிப்பட்ட அதிகபட்சத்தை அல்லது குறைந்த பட்சத்தைச் சேர்ந்த பிறகு கிடைத்த தொகை இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் மூத்த நிலைக் காலச் சம்பள ஏற்ற முறையில் ஒரு கட்டத்திற்கு ஒத்தில்லா விட்டால், ஆரம்பச் சம்பளம் அந்த ஏற்ற முறையில் அடுத்து மேற்பட்ட கட்டத்தில் நிர்ணயிக்கப்படும்;

(ii) இந்தப் பகுதியின் நோக்கத்திற்காக, அந்த மாநிலத்தின் காவல் பணியாளர் தொகுதியில் ஆற்றிய பணியில், இப்போது அதில் சேர்க்கப்பட்ட ஒரு முந்திய மாநிலத்தில் செய்யப்பட்டுள்ள பணியும் மத்திய அரசாங்கத்தால் சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கத்தைக் கலந்ததில் அந்த மாநிலக் காவல் பணியாளர் தொகுதியில் பணிக்குச் சரிப்படுத்தப்படக் கூடியபடி சேர்த்துக் கொள்ளப்படும்.

விளக்கம்.—தமது உள்ளபடியான அல்லது சந்தர்ப்பத்திற் கேற்றவாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பளம், இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் மூத்த நிலையான ஏற்ற முறையில் குறுமமுள்ள தொகைக்கு அதிகப்படுபவற்றில், அவருக்கு ஏற்கப்படக் கூடிய ஒவ்வொரு ஊதிய உயர்வின் விகிதமும், ஒத்த கட்டத்தில் இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் மூத்த நிலையின் ஏற்ற முறையில் ஏற்கப்படக் கூடிய ஊதிய உயர்வு அல்லது அப்படிப் பட்ட கட்டம் ஒன்றுமில்லாவிட்டால் அடுத்தக் கீழுள்ள கட்டத்தின் ஊதிய உயர்வாகவேயிருக்கும்.

(2) மாநிலக் காவல் பணியாளர் தொகுதியில் தேர்வுப் பிரிவில் ஒரு நிலையாயுள்ள உயர்வு அளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரின் ஆரம்பச் சம்பளம், இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் மூத்தநிலை காலச் சம்பள ஏற்ற முறையில், அந்தத் தேர்வுப் பிரிவில் அவருடைய உள்ளபடியான சம்பளத்திற்கு அடுத்து மேற்பட்ட கட்டத்தில் நிர்ணயிக்கப்படும்.

ஆயினும், இந்தியக் காவல் பணியாளர் தொகுதியில் காலச் சம்பள ஏற்ற முறையில் மூத்தநிலை ஏற்ற முறையில் (1) ஆம் டகுதியின்படி கணக்கிடப்பட்ட சம்பளம் இந்தப் பகுதியின் கீழ் ஏற்கப்படக் கூடியதை விட அதிகமானதாயிருந்தால், அந்த உயர்வு அளிக்கப்பட்ட அலுவலர் அப்படிப்பட்ட உயர்ந்த சம்பளத்திற்கு உரியவராவார்.

(3) இந்தியக் காவல் பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்பட்டபோது தேர்வுப் பிரிவில் பதிலி வேலை பார்த்துக் கொண்டிருந்தவரும், தம்முடைய இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் மூத்த நிலை காலச் சம்பள ஏற்றமுறையில் ஆரம்பச் சம்பளம் I ஆம் பகுதியின்படி நிர்ணயிக்கப்பட்டு உயர்வு அளிக்கப்பட்டுள்ள வருமான அலுவலர் தம்முடைய இந்தியக் காவல் பணியாளர் தொகுதியில் அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட ஆரம்பச் சம்பளத்தைவிட அந்தத் தேர்வுப் பிரிவின் பதிலிச் சம்பளம் அதிகமானதாயிருந்தால், அவர் இந்தியக் காவல் பணியாளர் தொகுதிக்கு நியமிக்கப்பட்டபோது, அந்தத் தேர்வுப் பிரிவில் தொடர்ந்து ஒரு ஆண்டுக் காலம் பதிலியாக இருந்திருந்தால் அல்லது அப்பணியிடத்தை வகித்திருந்தால் மட்டும் அந்த வித்தியாசத்திற்குச் சமமான தொகையைத் தனிப்பட்ட சம்பளமாகப் பெற உரியவராவார். இந்தத் தனிப்பட்ட சம்பளம் பின்னால் பெறும் ஊதிய உயர்வுகளில் ஒன்றாகச் சேர்த்துக் கொள்ளப்படும்.

(4) ஒரு உயர்வு அளிக்கப்பட்ட அலுவலரின் அடிப்படைச் சம்பளம் எப்படியும் மூத்த நிலை சம்பள ஏற்ற முறையில் குறைந்த பட்சத்திற்கு கீழே நிர்ணயிக்கப்படக்கூடாது.

(5) இந்தப் பிரிவின் பகுதி எதிலேனும் உள்ளது எதுவாயிருந்தாலும், இந்தியக் காவல் பணியாளர் தொகுதியில் ஒரு உயர்வு அளிக்கப்பட்ட அலுவலரின் சம்பளம், எப்போதும், அந்தத் தேதியில் அவர் இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் காலச் சம்பள ஏற்ற முறையில் மாநிலக் காவல் பணியாளர்

தொகுதிக்கு நியமிக்கப்பட்ட தேதியில், இந்தியக் காவல் பணியாளர் தொகுதிக்கு நேரே சேர்க்கப்பட்டிருந்தால் என்ன பெறுவாரோ அதை விட அதிகப்படக்கூடாது.

**உதாரணங்கள்.**—ஒரு உயர்த்தப்பட்ட அலுவலரின் சம்பளத்தை இந்தப் பிரிவின் கீழ் நிர்ணயிப்பதில் கையாளப்பட வேண்டிய முறை கீழே காட்டப்பட்டுள்ளது.

I. முதலில், உயர்வு அளிக்கப்பட்ட அலுவலர் சம்பந்தமாக அடியிற்கண்டவைகளை எழுதவும் :—

(அ) அந்த மாநிலக் காவல் பணியாளர்த் தொகுதி அலுவலரின், மாநிலக் காவல் பணியாளர் தொகுதியில் உள்ளபடியான சம்பளம் அல்லது, சந்தர்ப்பத்திற்கேற்றவாறு ஏற்றுக் கொள்ளப்பட்ட சம்பளம் ;

(ஆ) மாநிலக் காவல் பணியாளர் தொகுதியில் பணியின் முடிவு பெற்ற ஆண்டுகள் ;

(இ) மாநிலக் காவல் பணியாளர் தொகுதியில் ஒவ்வொரு மூன்று ஆண்டு காலத்திற்கும் ஒரு ஊதிய உயர்வு விதம் கணக்கிடப்பட்ட இந்தியக் காவல் பணியாளர் தொகுதி மூத்த நிலை காலச் சம்பள ஏற்ற முறையில் ஊதிய உயர்வுகளின் எண்ணிக்கை.

II. அதன் பின்னர் தகவலை அடியிற்கண்ட படிவத்தில் அமைத்துக் கீழே காட்டியுள்ளபடி இந்தியக் காவல் பணியாளர் தொகுதி காலச் சம்பள ஏற்ற முறையில் சம்பளத்தைக் கணக்கிடவும் :—

| | (அ) | (ஆ) | (இ) | (ஈ) |
|---|---|---|---|---|
| (அ) மாநிலக் காவல் பணியாளர் தொகுதியில் சம்பளம். | 380 | 530 | 560 | 630 |
| (ஆ) மாநிலக் காவல் பணியாளர் தொகுதியில் பணியின் முடிவடைந்த ஆண்டு. | 7 | 14 | 18 | 20 |
| (இ) ஊதிய உயர்வுகளின் எண்ணிக்கை. | 2 | 4 | 6 | 6 |
| (ஈ) ஊதிய உயர்வுகளின் தொகை. | 80 | 160 | 240 | 240 |

| | (அ) | (ஆ) | (இ) | (ஈ) |
|---|---|---|---|---|
| (உ) குறிப்பிடப்பட்ட குறைந்த பட்சத்திற்கும் பெருமத்திற்கும் உட்பட்டு உள்ளபடியான அதிகமான தொகை. | 150 | 160 | 200 | 200 |
| (ஊ) (அ), (ஆ) சேர்த்ததால் பெறப்பட்ட சம்பளம். | 540 | 690 | 760 | 830 |
| (எ) இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் காலக் கிரம சம்பள ஏற்ற முறையில் மூத்த நிலையில் சம்பளம் நிர்ணயிக்கப்பட வேண்டிய கட்டம். | 600 | 720 | 760 | 840 |

(அ) என்பது மாநிலக் காவல் பணியாளர் தொகுதியின் சம்பளத்தின் மேல் அதிகம் செய்யப்பட்ட குறுமத் தொகை ரூ. 600-க்குக் கீழே ஒரு எண் ஆகும். அதனால் அதில் சம்பளம் மூத்த நிலைக் காலச் சம்பள ஏற்ற முறையில் குறைந்த பட்சத் தொகையில் நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பது நன்கு புலப்படும்.

(ஆ) என்பது ஊதிய உயர்வுகள் தொகை எப்படிக் கணக்கிடப்பட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுகிறது. அதனால் பெறப்பட்டது, இந்தியக் காவல் பணியாளர் தொகுதி காலச் சம்பள ஏற்ற முறையில் ஒரு கட்டத்திற்கு ஒத்தில்லாததால், சம்பளம் அடுத்த மேற்பட்ட கட்டத்தில் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(இ) என்பது குறிப்பிடப்பட்ட 200 ரூபாய்களின் பெரும உயர்வினால் இந்தியக் காவல் பணியாளர் தொகுதி கால சம்பள ஏற்ற முறையில் ஒரு கட்டத்திற்குச் சமமாயுள்ள ஒரு தொகை ஏற்படுகிறது. அப்போது சம்பளம், அந்தக் கட்டத்திற்கு மேற்பட்ட அடுத்த கட்டத்தில் அல்லாமல் அந்தக் கட்டத்திலேயே நிர்ணயிக்கப்படுகிறது. 200 ரூபாய் ஆகிய பெரும உயர்வால் அந்த மூத்த நிலை காலச் சம்பள ஏற்ற முறையில் ஒரு கட்டத்தைப் பெறும்பொழுது மட்டும் அதே கட்டத்தில் சம்பளம் நிர்ணயிக்கப்படுவது நிகழ்கிறது.

(ஈ) என்பது, 200 ரூபாய்களின் பெரும உயர்வால் மூத்த நிலை காலச் சம்பள ஏற்ற முறையில் ஒரு கட்டத்தைச் சாராத

தொகை பெறப்படும். அப்படிப்பட்டதில் சம்பளம் அடுத்த மேற்பட்ட கட்டத்தில் நிர்ணயிக்கப்படுகிறது.

## II- ஆம் பிரிவு 4(5) ஆம் விதியின் கீழ் வரும் உயர்த்தப்பட்ட அலுவலர்களின் ஆரம்பச் சம்பளம் நிர்ணயித்தல்.

(1) மத்திய அரசினர் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவைக் கலந்து மத்திய அரசாங்கத்தின் ஏற்புடன், பணியாளர் தொகுதிக்கு அமர்த்தப்படுவதற்கு முன்னுல் ஒரு பணியமைப்புப் பணியிடத்தில் ஏற்கெனவே பதிலி பார்த்து உயர்த்தப்பட்ட அலுவலரைப் பற்றியவரை, அவருடைய சம்பளம் அப்படிப்பட்ட பதவியில் கடைசியாக இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் மூத்த நிலை காலச் சம்பள ஏற்ற முறையில் அவர் பெற்ற சம்பளத்திற்குக் குறையாத ஒரு கட்டத்தில் நிர்ணயிக்கப்பட வேண்டும்.

(2) இந்தியக் காவல் பணியாளர் தொகுதியில், விதிகளின் 5 ஆம் விதியின் கீழ், ஊதிய உயர்வுகளுக்காக ஒரு குறிப்பிட்ட சம்பள விகிதத்தில் ஒரு ஆண்டுப் பணியைக் கணக்கிடும் நோக்கத்திற்காக, அந்தச் சம்பள விகிதத்தில், இடையே விட்டுப்போன காலங்களில் பதிலி பார்த்த பணிகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## III- ஆம் பிரிவு 4(5) விதியின் கீழ் வரும் உயர்த்தப்பட்ட அலுவலர்களின் ஆரம்பச சம்பளம் நிர்ணயித்தல்.

(1) இந்தியக் காவல் பணியாளர் தொகுதியில் பணியமைப்புப் பதவிகளுக்கு அமர்த்தப்பட்ட ஒரு மாநிலக் காவல் பணியாளர் தொகுதி அலுவலரின் ஆரம்பச் சம்பளம், I- ஆம் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள கொள்கைகளின்படி நிர்ணயிக்கப்படும்.

ஆயினும், மத்திய அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக் குழுவைக் கலந்தும் மத்திய அரசாங்கத்தின் ஏற்புடனும் உயர்த்தப்பட்ட அலுவலர் ஏற்கெனவே இந்த விதிகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னுல் ஒரு பணியமைப்புப் பணியிடத்தில் பதிலி பார்த்திருந்தால், இந்தப் பிரிவின்கீழ் அவருடைய சம்பளம், அவர் அப்படிப்பட்ட பணியிடத்தில் கடைசியாகப் பதிலி பார்த்தபோது இந்தியக் காவல் பணியாளர் தொகுதியில் மூத்த நிலையில் அவர் பெற்ற சம்பளத்திற்குக் குறையாத ஒரு கட்டத்தில் நிர்ணயிக்கப்படும்.

(2) மாநிலக் காவல் பணியாளர் தொகுதியின் சாதாரண காலச் சம்பள ஏற்ற முறையில் அந்த மாநிலக் காவல் பணியாளர் தொகுதியில், அவருடைய சம்பளம் ஊதிய உயர்வின் விளைவாக உயர்த்தப்பட்டதன் பேரில், ஒரு மாநிலக் காவல் பணியாளர் தொகுதியின் அலுவலர், இந்தியக் காவல் பணியாளர் தொகுதியில் மூத்த நிலைக் காலச் சம்பள ஏற்ற முறையில் உள்ள சம்பளம் பெறும் ஒரு பணியிடத்தில் பதிலியாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கும்போது, தமது மூத்த நிலை இந்தியக் காவல் பணியாளர்த் தொகுதியில் உள்ள சம்பளத்தை, அவருடைய உயர்த்தப்பட்ட மாநிலப் பணியாளர்த் தொகுதியின் சம்பளத்தின் அடிப்படையிலும், அப்படிச் சம்பளம் உயர்த்தப்பட்ட தேதியிலிருந்து அமுலி லிருக்கும் மூத்த நிலை இந்தியக் காவல் பணியாளர் தொகுதியில் உள்ள சம்பளத்தையுடைய ஒரு பணியிடத்தில் அமர்த்தப்பட் டிருப்பது போலவும் I ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ளபடி மறு கணக்கிடுவதற்கு உரிமையுடையவராவார்.

(3) இந்தியக் காவல் பணியாளர் தொகுதியில் பதலி முறை யில் ஒரு பதவியை வகித்துக் கொண்டிருக்கும் ஒரு மாநிலக் காவல் பணியாளர் தொகுதி அலுவலர், நிரந்தரமாக, மாநிலக் காவல் பணியாளர் தொகுதியில் தேர்வுப் பிரிவுக்கு உயர்வு அளிக்கப்பட்டால், அவருடைய இந்தியக் காவல் பணியாளர் தொகுதி மூத்த நிலையில் சம்பளம், அவர் அவ்வாறு உயர்த்தப் பட்ட தேதியிலிருந்தே இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் மூத்த நிலையில் சம்பளம் உள்ள ஒரு பணியிடத்தின் பதிலியாக அமர்த்தப்பட்டுள்ளபடியே I ஆம் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள கொள்கைகளின்படி மாற்றி நிர்ணயிக்கப்படும்.

(4) ஒரு பதிலித் தன்மையில் இந்தியக் காவல் பணியாளர் தொகுதியில் மூத்த நிலைக் காலச் சம்பள ஏற்ற முறையில் சம்பளம் உள்ள ஒரு பதவியை வகித்துக் கொண்டிருக்கும் மாநிலக் காவல் பணியாளர் தொகுதி அலுவலருக்கு, அந்த ஏற்ற முறையில் எந்தக் கட்டத்திலும் ஒரு முழு ஆண்டுப் பணி முடிவடைந்ததன் பேரில், இந்தியக் காவல் பணியாளர் தொகுதி மூத்த நிலை காலச் சம்பள ஏற்ற முறையில் அவருடைய சம்பளம் அதற்கு முன்னரேயே மேலே (2) அல்லது (3)-இன் கீழ் அடுத்த மேல் கட்டத்தில் மறு நிர்ணயம் செய்யப்பட்டிருந்தாலொழிய, இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் மூத்த நிலைக் காலச் சம்பள ஏற்ற முறையில் உள்ள சம்பள உயர்வுகள் அளிக்கப்படும்.

இந்தப் பகுதியின் கீழ் ஒரு ஆண்டின் பணியைக் கணக்கிடும் நோக்கத்திற்காக,—

(i) ஒரு குறிப்பிட்ட சம்பள விகிதத்தின் மேல் பதிலிப் பணி செய்யப்பட்ட இடையே விட்டுப் போன காலங்களும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும் ;

(ii) இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் மூத்த நிலைக் காலச் சம்பள ஏற்ற முறையில் ஒரு பணியிடத்தில் பதிலி பார்க்கும் காலத்தில் எடுக்கப்பட்ட விடுப்பு முடிந்ததன் மேல் அந்த அலுவலர் அதே பணியிடத்துக்கும் அல்லது அதே சம்பள விகிதத்தையுடைய அதைப் போன்ற பணியிடத்துக்கும் திரும்பி வந்தாலும், அப்படி அவர் விடுப்பில் செல்லாமலிருந்தால் அந்த அலுவலர், இந்தியக் காவல் பணியாளர் தொகுதியில் தொடர்ந்து நீடித்திருப்பார் என்று அரசாங்கம் சான்றளித்தாலும், அத்தகைய விடுப்பை இடையே பணி விட்டுப் போனதாக எடுத்துக் கொள்ளக் கூடாது ;

(iii) அவ்வாறு பதலி பார்க்கும் காலத்தில் ஒரு அலுவலரால் செய்யப்பட்ட வெளிநாட்டுப் பணி, மாநில அரசாங்கம் அந்த அலுவலர் அவ்வாறு வெளி நாட்டுப் பணியில்லாதிருந்தால், அதே இந்தியக் காவல் பணியாளர் தொகுதிப் பதவியில் அல்லது அதே சம்பள விகிதத்தையுடைய அதேமாதிரியான ஒரு பதவியில் பதிலியாக நீடித்திருப்பார் என்று சான்றளித்தால், அது இடையே பணிவிட்டுப் போனதாக அமையாது.

## III- ஆம் அட்டவணை.

அ. மாநில அரசாங்கங்களின் கீழ், இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் காலச் சம்பள ஏற்ற முறைச் சம்பளத்திற்கு அதிகமான சம்பளத்தையுடைய பதவிகள்.

| மாநிலம். | பணியிடத்தின் விவரம். | சம்பளம்/ சம்பள ஏற்றமுறை ரூபாய். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| ஆந்திரா .. .. .. | காவல் துறைத் தலைவர் .. | 1,850–100–2,250. |
| | காவல் துறைத் துணைத் தலைவர்கள். | 1,400–50–1,650. |

| மாநிலம் | பணியிடத்தின் விவரம் | சம்பளம்/ சம்பள ஏற்றமுறை ரூபாய் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| தமிழ்நாடு .. .. | காவல் துறைத் தலைவர் .. | 1,850–100–2,250. |
| | காவல் ஆணையாளர் .. | 1,450–50–1,650. |
| | காவல் துறை துணைத் தலைவர் (சரகம்). | 1,450–50–1,650. |
| | காவல் துறைத் துணைத் தலைவர் (ரயில்வேயும் ஐ.பு.ஆ.ம்.) | 1,450–50–1,650. |

* * * *

| | | |
|---|---|---|
| விந்தியப் பிரதேசம். | காவல் துறைத் தலைவர் .. | 1,450–50–1,650. |

† ரூ. 100 தனிச் சம்பளமாகக் கூடுதல்.

**விளக்கம்.**—(1) 'ஆ' பிரிவு மாநிலங்கள் விந்தியப் பிரதேசம் மாநிலத்தைப் பொருத்தவரை, சம்மந்தப்பட்ட மாநிலங்களைக் கலந்து மத்திய அரசாங்கம் இந்த விதிகள் ஆரம்பிக்கப்பட்ட தேதியிலிருந்து ஐந்தாண்டு காலத்திற்கு, இந்த அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள பணியிடங்களுக்கு நேராகக் குறிப்பிடப்பட்டுள்ள சம்பளம் அல்லது சம்பள விகிதத்தைப் பெற உரிமையை யுடைய ஒரு பணியாளர் தொகுதியின் உறுப்பினர் எவ்வளவு காலம் பணியாற்றியிருக்க வேண்டுமென்று வரையறுக்கலாம்.

(2) இந்த அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள பணியிடங்களில் எவற்றையும் வகிக்க ஆ-பிரிவு மாநிலங்களிலும் விந்தியப் பிரதேச மாநிலத்திலும் உள்ள பணியாளர் தொகுதியின் யாதொரு உறுப்பினர், இந்த விளக்கத்தின் (1)-ஆம் பகுதியின்கீழ் மத்திய அரசாங்கத்தால் குறிப்பிடப்பட்ட பணியின் காலம் குறும அளவாயில்லாதபோது, அப்படிப்பட்ட உறுப்பினர் அப்படிப்பட்ட எந்தப் பணியிடத்தையும் வகித்துக் கொண்டிருக்கும்போது, மத்திய அரசாங்கம், சம்மந்தப்பட்ட மாநில அரசாங்கத்தைக் கலந்து நிர்ணயிக்கக் கூடிய, அவருடைய காலச் சம்பள ஏற்ற முறையில் உள்ள சம்பளத்திற்கு மேற்கொண்டு, அப்படிப்பட்ட தனிப்பட்ட சம்பளம் பெற உரிமையுள்ளவராவார்.

## III ஆம் அட்டவணை

ஆ. காலச் சம்பள ஏற்ற முறையில் சம்பளத்துடன் தனிப்பட்ட சம்பளங்களுமுடைய பணியிடங்கள் உட்பட மாநில அரசாங்கங்களின் கீழ் உள்ள இந்தியக் காவல் பணியாளர் தொகுதியின் மூத்த நிலைக் காலச் சம்பள ஏற்ற முறையில் சம்பளம் பெறும் பணியிடங்கள்.

(1) ஒரு மாநிலத் தேர்வு நிலைப் பணியிடங்களின் எண்ணிக்கையை நிர்ணயிப்பதற்கு அந்த மூத்த நிலைப் பணிப் பகுதியின் மொத்த எண்ணிக்கையில் இருபது சதவிகிதத்தில் அவ்வித காலச் சம்பள ஏற்ற முறைக்கு மேற்பட்ட சம்பளங்களை வாங்குபவர்களுடைய எண்ணிக்கையைக் கழிக்கவேண்டும்.

(2) சம்பந்தப்பட்ட மாநில அரசு அட்டவணையின் இந்தப் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பணியிடங்களில் எவற்றிற்குமாவது அல்லது அப்படிப்பட்ட பணியிடங்களின் தொகுப்புக்கு அல்லது வகுப்புக்குச் சம்பந்தமாகவாவது ஒரு தனிப்பட்ட சம்பளம் அளிக்கத் தகுதியுள்ளதாகும்.

ஆயினும், காவல் துறை உதவித் தலைவர் (தலைமையிடத்தில்), காவல் துறைத் தலைவரின் (தலைமையிடத்து) உதவியாளர், காவல் துணை ஆணையர், காவல் பயிற்சிப் பள்ளி அல்லது கல்லூரியின் முதல்வர், ஆயுதக் காவல் படைப் பிரிவு அல்லது படை அல்லது பகுதித் தலைவர், ரயில்வேக் காவல் கண்காணிப்பாளர், கு.பு.ப. காவல் கண்காணிப்பாளர், ஆகியவர்களின் பணியிடங்கள் ஒரு தனிப்பட்ட சம்பளத்தைக் கொண்டதாயிருக்கும்.

(3) சம்மந்தப்பட்ட மாநில அரசாங்கங்களால் (1)-ஆவது பகுதியின் கீழ் ஒப்பு அளிக்கப்படக் கூடிய தனிப்பட்ட சம்பளம், அவ்வப்போது சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கங்களால், நிர்ணயிக்கப்படக்கூடியபடி, 100 ரூபாய்கள், 150 ரூபாய்கள் அல்லது 200 ரூபாய்களாகும்.

(4) இளநிலைக் காலச் சம்பள ஏற்ற முறையிலுள்ள பணியிடங்கள் அட்டவணையில் குறிப்பிடப்படவில்லை. ஆயினும் அப்படிப்பட்ட பணியிடங்களுக்கு யாதொரு தனிப்பட்ட சம்பளங்கள்

ஒப்பு அளிப்பும் சம்பந்தப்பட்ட மாநில அரசாங்கங்களின் தகுதிக்குள் இருக்கும்.

| மாநிலம். (1) | பணியிடங்களின் விவரங்கள். (2) |
|---|---|
| ஆந்திரா .. .. .. .. | காவல் துறை உதவித் தலைவர்.<br>ரயில்வே காவல், கண்காணிப்பாளர்கள்.<br>காவல் கண்காணிப்பாளர் தனிப் பிரிவு கு.பு.ப.<br>காவல் கண்காணிப்பாளர், குற்றமும். கு.பு.ப. குற்றமும் பிரிவும்.<br>போலீஸ் பயிற்சிக் கல்லூரி முதல்வர். |
| தமிழ்நாடு .. .. .. .. | சென்னை மாநகர, காவல் துணை ஆணையாளர்கள் (சட்டமும், ஒழுங்கும், குற்றப் பிரிவும், போக்குவரத்தும் உரிமம் வழங்கலும்) காவல் துறை உதவித் தலைவர்.<br>காவல் கண்காணிப்பாளர்கள் கு.பு.ப. (குற்றமும் X பிரிவும், தனிப் பிரிவும்).<br>காவல் பயிற்சிக் கல்லூரி முதல்வர், மலபார் தனிக் காவல் தளவாய், திருச்சிராப்பள்ளி ரயில்வே காவல் கண்காணிப்பாளர்.<br>மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், நீலகிரி,கோயமுத்தூர், சேலம், தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென் ஆற்காடு, தஞ்சாவூர், இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை (வடக்கும்) மதுரை (நகர்ப் புறமும்), கன்யாகுமரி. |
| விந்தியப் பிரதேசம் .. .. | காவல் துறைத் துணைத் தலைவர் காவல் கண்காணிப்பாளர் கு.பு.ப தனி ஆயுதப் படை (த.அ.வ.) தளவாய். மாவட்டங்களில் கண்காணிப்பாளர்கள். |

## III-ம் அட்டவணை.

இ. (மத்திய அரசாங்கத்தின் கீழ் பணியாளர் தொகுதி உறுப்பினர்களால் வகுக்கப்பட்டுள்ளபோது அவர்கள் காலச் சம்பள ஏற்ற முறையில் உள்ள சம்பளத்திற்கு மேற்கொண்டு) அந்தக்

காலச் சம்பள ஏற்றமுறை அல்லது தனிச் சம்பளத்திற்கு அதிகமாய்ச் சம்பளங்களையுடைய பணியிடங்கள்.

| அலுவல் அல்லது மாநிலம். | பணியிடங்களின் விவரங்கள். | சம்பளம்/ சம்பள ஏற்ற முறை. | தனிச் சம்பளம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. |
| புலன் ஆய்வுக் கழகம் (I.B.). | இயக்குநர் .. .. | 2,500 | .. |
| | துணை இயக்குநர்கள் .. | காவல் துறைத் துணைவர்களின் சம்பள முறை. | 200 |
| | உதவி இயக்குநர்கள் .. | மூத்த நிலைச் சம்பள முறை. | 300 |
| | மத்தியப் புலனாய்வு அலுவலர்கள். | ஷை | 200 |
| தனிப்பட்ட காவல் பணியமைப்பு (S.P.E.). | காவல் துறைத் தலைவர். | 1,850–100–2,250 | .. |
| | காவல் கண்காணிப்பாளர்கள். | மூத்த நிலைச் சம்பள முறை. | 200 |
| | காவல் துறை உதவித் தலைவர். | ஷை | 200 |
| மத்திய காவல் பயிற்சிக் கல்லூரி. | தலைவாய் (முதல்வர்). | 1,850–100–2,250 | .. |
| | உதவித் தலைவாய் .. | மூத்த நிலைச் சம்பள முறை. | .. |
| டெல்லி மாநிலம். | காவல் துறைத் தலைவர். | 1,850–100–2,250 | . |
| | மூத்த நிலைக் காவல் கண்காணிப்பாளர்கள் | மூத்த நிலைச் சம்பள முறை. | 200 |
| | கு.பு.ப.. கண்காணிப்பாளர். | ஷை | 150 |
| | காவல் கண்காணிப்பாளர். | ஷை | .. |
| அஜ்மீர் மாநிலம். | காவல் துறைத் துணைத் தலைவர். | 1,450–50–1,650 | .. |
| | காவல் கண்காணிப்பாளர். | மூத்த நிலைச் சம்பள முறை. | .. |

| அலுவல் அல்லது மாநிலம். | பணியிடங்களின் விவரம். | சம்பளம்/சம்பள ஏற்ற முறை. | தனிச் சம்பளம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. |
| அஜ்மீர் மாநிலம்—தொடர்ச்சி. | காவல் துறைத் துணைத் தலைவர். | மூத்த நிலைச் சம்பளம். 1,450–50–1,650 | |
| | காவல் கண்காணிப்பாளர். | ஷை | .. |
| | ரயில்வே கண்காணிப்பாளர். | ஷை | 100 |
| அந்தமானும், நிகோபாரும். | காவல் கண்காணிப்பாளர். | மூத்த நிலைச் சம்பளம். | (ரூ. 300 பெருமதிப்பிற்குட்பட்டு) தாச் சம்பளத்தில் 33⅓ சதவீதம். |
| குடகு .. .. | காவல் கண்காணிப்பாளர். | ஷை | .. |
| போபால் .. | காவல் கண்காணிப்பாளர் தேர்வுப் பிரிவு தகுதியையுடைய காவல் துறைத் தலைவர். | 1,250 | .. |
| | காவல் கண்காணிப்பாளர். | மூத்த நிலைச் சம்பள முறை. | .. |
| திரிபுரா .. .. | காவல் கண்காணிப்பாளர். | ஷை | .. |
| | ஆயுதக் காவல் தளவாய். | ஷை | .. |
| மணிபூர் .. .. | காவல் கண்காணிப்பாளர். | ஷை | .. |
| கட்ச் .. .. | காவல் கண்காணிப்பாளர். | ஷை | .. |
| இமாசலம் பிரதேசம். | காவல் துறைத் தலைவர். | ஷை | .. |
| ரயில்வேக்கள் .. | வாட்ச் வார்டு (காப்பு, காவல்படை) தலைமைப் பாதுகாப்பு அலுவலர்கள். | காவல் துறைத் துணைத் தலைவர்கள் சம்பள ஏற்ற முறை. | 200 |

## 1859 ஆம் ஆண்டு சென்னை மாவட்டக் காவல் சட்டம் XXIV

சென்னை மாகாணத்திற்குட்பட்ட பரப்புகளுக்குள் காவல் ஒழுங்கு முறையை மேம்பாடு செய்வதற்காக ஒரு சட்டம்.

**முன்னுரை.**—தமிழ்நாடு முழுமையிலும் காவல் படையை . . . . குற்றங்களைத் தடுப்பதற்கும் கண்டுபிடிப்பதற்கும் அதிகத் திறமையையுடைய கருவியாக ஆக்குவதும் காவல் படையை மறு அமைப்பாக்குவதும் தக்கதாகவிருப்பதால்,

அடியிற் கண்டபடி சட்டமியற்றப்படுகிறது.

**1. உரை விளக்கம்.**—இந்தச் சட்டத்தில் அடியிற்கண்ட சொற்களும், சொற்றொடர்களும் அவைகளின் பொருள்களில் அல்லது சூழ்நிலைகளில் அத்தகைய சொல்லாக்கத்தில் ஏதேனும் முரணாக இருந்தாலொழிய, அவைகளுக்கு இங்கு கொடுக்கப்பட்டுள்ள பொருள்களே அவற்றின் பொருளாக இருக்கும். (அதாவது)—

**குற்றவியல் நீதிபதி (மாஜிஸ்ட்ரேட்டு).**—குற்றவியல் நீதிபதி என்னும் சொல்லில், தத்தம் அதிகார எல்லைக்குள் ஒரு குற்றவியல் நீதிபதிக்குரிய அதிகாரங்கள் எல்லாவற்றையும் அல்லது சிலவற்றை செயல்படுத்துகிற எல்லா நபர்களும் அடங்குவார்கள்.

**மேல் நிலைக் காவல்.**—"மேல் நிலைக் காவல்" என்னும் சொல் காவல் துறைத் தலைவர், காவல் துறைத் துணைத் தலைவர்கள், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்கள், உதவிக் காவல் கண்காணிப்பாளர்கள் ( I.P.S. ) துணைக் காவல் கண்காணிப்பாளர் (M. P. S. ) என்று பொருள்படும்.

**கீழ்நிலைக் காவல்.**—"கீழ்நிலைக் காவல்" என்னும் சொல் ஒரு காவல் ஆய்வாளரின் தகுதியையுடையவர்களும் அதற்குக் கீழ்ப்பட்டத் தகுதியுடையவர்களுமான எல்லா அலுவலர்களையும் குறிக்கும்.

**காவல்.**—"காவல்" என்னும் சொல்லில் இந்தச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள எல்லா நபர்களும் அடங்குவார்கள்.

**பொதுக் காவல் மாவட்டம்.**—"பொதுக் காவல் மாவட்டம்" என்னும் சொல் இந்தச் சட்டத்தின் செயல் முறைகள் விரிவாக்கப்படும் எல்லா மாவட்டங்களையும் சார்ந்திருக்கும்.

**சொத்து.**—"சொத்து" என்ற சொல்லில் யாதொரு பொருளும், பணமும் அல்லது மதிப்புள்ள பிணையமும் அடங்கும்.

**நபர்.**—"நபர்" என்ற சொல்லில் நிறுவமும் இணையமும் அடங்கும்.

"மாதம்" — "மாதம்" என்ற சொல் காலண்டர் (நாள் காட்டி) மாதத்தை குறிக்கும்.

**கால்நடை.**— "கால்நடை" என்ற சொல்லில் கொம்புள்ள கால்நடைகளுடன் யானைகளும், ஒட்டகங்களும், குதிரைகளும், கழுதைகளும், கோவேறுக் கழுதைகளும், செம்மறியாடுகளும், பன்றிகளும் அடங்கும்.

2. சில சட்டங்களை நீக்கலும் திருத்தலும் (1870 ஆம் ஆண்டு XIV ) 1870 ஆம் ஆண்டு நீக்கல் சட்டத்தால் நீக்கப்பட்டவை.

3. (1816 ஆம் ஆண்டு XI ஆம் ஒழுங்குமுறை விதிகளின் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்களின் அதிகார எல்லை) 1870 ஆம் ஆண்டு நீக்கல் சட்டத்தால் (1870 ஆம் ஆண்டு XIV ஆவது சட்டத்தால்) நீக்கப்பட்டது. கண்காணிப்பு மாநில அரசாங்கத்தில் உரிமைப் படுத்தப்பட்டது.

4. பொதுக் காவல் மாவட்ட முழுமையிலும், காவல் கண்காணிப்பு மாநில அரசாங்கத்தில் உரிமைப்படுத்தப்பட்டு அதனால் செயலாற்றப்படக் கூடும். இதற்கு மாறாக, எந்த ஒழுங்குமுறை விதி, சட்டம் அல்லது வழக்கம் எப்படியிருந்தபோதிலும், மாநில அரசாங்கங்களால் (அதனால்) இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ளபடி தவிர எந்த நபரும், அலுவலரும் அல்லது நீதிமன்றமும் யாதொரு காவல் அலுவலரை ஒதுக்கவோ கட்டுப்படுத்தவோ அல்லது அவர் மேல் அதிகாரம் செலுத்தவோ அதிகாரம் அளிக்கப்படவில்லை.

5. **காவல் துறைத் தலைவர் முதலியவர்கள்.**—பொதுக் காவல் மாவட்டத்தின் முழுவதிலுமுள்ள காவல் நிர்வாகம், தமிழ்நாடு மாநிலத்திற்குக் காவல் துறைத் தலைவர் என்று சொல்லப்படும் ஒரு காவல் அலுவலரிடமும் மாநில அரசாங்கத்திற்கு தக்கது என்று தோன்றும் குறிப்பிட்ட மேல்நிலைக் காவல் அலுவலர்களிடமும் சட்டப்படி உரிமைப்படுத்தப்பட வேண்டும்.

6. **காவல் அதிகாரங்கள் முதலியவை**—இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாயில்லாது, இந்தச் சட்டம் இயற்றப்படும் வரையில் அப்போதுள்ள காவல் அதிகாரிகளுக்குச் சட்டப்படி உரியனவாய் இருந்த எல்லா அதிகாரங்களும், இந்தச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட காவல் அதிகாரிகளிடமும் சட்டப்படி உரிமைப்படுத்தப்பட வேண்டும். ஆயினும், அப்படி நியமிக்கப்

பட்ட எந்தக் காவல் அதிகாரியும் யாதொரு நீதிமன்றம் அல்லது வருவாய் அதிகாரத்தையுடையவராகவோ பயன்படுத்துபவ ராகவோ ஆகமாட்டார்.

7. **காவல் துறைத் தலைவர் அமைதிக்காப்பு நீதிபதியாயிருப் பார், அவருடைய அதிகாரங்கள்.**—காவல் துறைத் தலைவர் ஒரு அமைதிக் காப்பு நீதிபதியாக ( J.P. ) நியமிக்கப்படுவார் ; அவர் பொதுக் காவல் மாவட்ட முழுவதற்கும் ஒரு குற்றவியல் நீதிபதி யின் முழு அதிகாரங்களையும் பெற்றிருப்பார் ; ஆனால் அவர் மாநில அரசாங்கத்தால் அவ்வப்போது, வெளியிடும் ஆணை களுக்குட்பட்டு இந்த அதிகாரங்களைச் செலுத்த வேண்டும்.

**மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் குற்றவியல் நீதிபதியாக இருக்கலாம், அவருடைய அதிகாரங்கள்.**—மாநில அரசாங்கத்தார் யாதொரு மாவட்டக் காவல் கண்காணிப்பாளருக்கு அவர்கள் தக்கது என்று கருதக் கூடிய அத்தகைய எல்லைகளுக்குள் ஒரு குற்றவியல் நீதிபதியின் அதிகாரங்கள் எல்லாவற்றையும் அல்லது சிலவற்றை உரிமைப்படுத்தி அளிக்கலாம். ஆனால் அப்படிப்பட்ட காவல் கண்காணிப்பாளர், அமைதியை நிலைநாட்டவும் குற்றங் களைத் தடுக்கவும், குற்றவாளிகளை ஒரு குற்றவியல் நீதிபதி முன் கொண்டு வந்து சேர்க்கவும் நிறுத்தி வைக்கவும் எவ்வளவு தேவைப்படுமோ அவ்வளவாக அவருக்குக் கொடுக்கப்பட்ட அதி காரங்களை இந்தச் சட்டத்தால் அவருக்கு கொடுக்கப்பட்டிருக்கும் பணிகளைச் செயலாற்றுவதற்கு எவ்வளவு அவசியமோ அவ்வளவில் மட்டும் செலுத்த வேண்டும்.

8. **படையின் அமைப்பு, சம்பளம் முதலியவை.**—இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, தமிழ்நாடு மாநிலத்தின் முழுக் காவல் பணியமைப்பு ஒரே காவல் படையாகக் கருதப்பட்டு அதற்கு ஆட்கள் சேர்க்கப்படுவார்கள். அதில் வேண்டிய எண் ணிக்கையுள்ள அலுவலர்களும் பணியாட்களுமிருப்பார்கள். அப்போதைக்கப்போது மாநில அரசாங்கம் ஆணையிடுகிறபடி அந்த முறையில் வேறு விதமாகவும் அப்படை அமைக்கப்படும்.

இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குட்பட்டு சார் நிலைக் காவல் அலுவலர்களின் சம்பளமும் மற்ற எல்லா நிபந்தனைகளும், மாநில அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படக் கூடியபடியிருக்கும்.

9. **காவல் துறைத் தலைவர் படையைக் கட்டுப்படுத்தலும் விதி களை அமைத்தலும்.**—மாநில அரசாங்கத்தின் ஏற்புக்குட்பட்டு,

காவல் துறைத் தலைவர், அவ்வப்போது, அந்தப் படையின் பொது ஆட்சியும் அதன் பங்கீடு பற்றியும், அலுவலர்களின் குடியிருப்பிடங்கள், அவர்களின் வகை, வரிசை, குறிப்பிட்ட பணி, அவர்களின் ஆய்வு, அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய படைகளின் விவரங்கள், தளவாடங்கள், இதரத் தேவைகள், ஆகியவை பற்றியும் புலனாய்வு, தகவல் சேகரிப்பதும் தெரிவிப்பதும் பற்றியும், தாம் தகுதியென்று கருதும் அத்தகைய ஆணைகளையும் ஒழுங்கு முறை விதிகளையும் ஏற்படுத்தலாம். அந்தக் காவல் படை சம்பந்தமாக, செய்யத் தகாதனவற்றைச் செய்வதையும் செய்ய வேண்டியவற்றைச் செய்யாமல் இருத்தலையும் தவிர்ப்பதற்காகவும் அப்படை தன் கடமைகளை ஆற்றுவதில் திறமையோடு இருப்பதற்காகவும் அவ்வப்போது காவல் துறைத் தலைவர் தனக்குச் சரியென்று தோன்றுகின்ற, அத்தகைய மற்ற ஆணைகளையும் ஒழுங்கு முறை விதிகளையும் ஏற்படுத்தலாம்.

**10. சார்நிலைக் காவல் அலுவலர்கள் வேலையிலிருந்து விலக்கப்படலும், தற்காலிகமாக விலக்கி வைக்கப்படலும் அல்லது குறைக்கப்படலும்.**—அரசியலமைப்பின் 311-ம் பகுதியின் ஏற்பாடுகளுக்கும், மாநில அரசாங்கம் அவ்வப்போது இந்தச் சட்டத்தின் கீழ் செய்யக்கூடிய அப்படிப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டு, காவல் துறைத் தலைவரும், காவல் துறைத் துணைத் தலைவர்களும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளரும், எக்காலத்திலும், சார்நிலைக் காவலில் உள்ள எந்த அலுவலரையும் அவர், தம்முடைய வேலையில் அசட்டையாகவும் கவனக் குறைவாகவும் உள்ளவரென்றுவது அல்லது வேறுவிதமாக அந்த வேலைக்குத் தகுதியற்றவரென்றுவது தாங்கள் கருதுகின்றவர்களை, வேலையிலிருந்து விலக்கவும் அல்லது தற்காலிகமாக விலக்கி வைக்கவும் அல்லது ஒரு குறைந்த பணியிடத்திற்கு அல்லது காலச் சம்பள ஏற்ற முறைக்கு அல்லது அந்தக் காலச் சம்பள ஏற்ற முறையில் ஒரு தாழ்ந்த கட்டத்திற்குக் குறைத்துத் தள்ளவும் செய்யலாம். அவருடைய கவனக் குறைவால் அல்லது ஆணைகளை மீறியதால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட பண இழப்பை முழுவதையுமோ அல்லது ஒரு பாகத்தையோ வசூலிக்க ஆணையிடலாம்.

**11. காவல் அலுவலர்கள் அலுவலகச் சான்றிதழ் பெறுதல்.**—சார்நிலைக் காவல் அலுவலராக நியமிக்கப்பட்ட ஒவ்வொரு நபரும் அவர் சேர்க்கப்பட்டவுடன் காவல் துறைத் தலைவரின் முத்திரையின் கீழ் ஒரு காவல் அலுவலரின் அதிகாரங்களையும், பணிகளையும்,

சலுகைகளையும் பெறச் செய்யும் ஒரு சான்றிதழைப் பெற வேண்டும். அப்படிப்பட்ட சான்றிதழ், அதில் பெயரிடப் பட்டுள்ள நபர் தற்காலிகமாக வேலையிலிருந்து விலக்கப்பட்ட போதும் அல்லது காவல் படையிலிருந்து விலக்கப்பட்ட போதும் அல்லது நீக்கப்பட்ட போதும் அமுலிலிருக்காது. அதன் பிறகு, உடனே அவருடைய மேல் நிலை அலுவலரிடமும் அல்லது அதைப் பெற்றுக்கொள்ள அதிகாரமுள்ள நபரிடம் ஒப்புவிக்கப்பட வேண்டும்.

12. காவல்துறை வயது முதிர்ந்தவர்கள் நிதி, 1874 ஆம் ஆண்டு நீக்கல் சட்டத்தால் (1874 ஆம் ஆண்டு XVI) நீக்கப் பட்டது.

**13. தனிப்பட்டவர்கள் செலவில் நியமிக்கப்படும் அதிகப்படி யான காவல் அலுவலர்கள்.**—எவரேனும் ஒருவர் அதிக எண்ணிக் கையில் காவல் அலுவலர்கள் தேவை என்று காட்டி விண்ணப்பித் துக் கொண்டதின் பேரில், மாநில அரசு அது சரி என்று நினைத் தால், விண்ணப்பம் செய்து கொண்ட அவருடைய செலவில் பொதுக் காவல் மாவட்டத்திற்குள் எந்த இடத்திற்கும் அமைதியை நிலைநாட்ட, காவல் துறைத் தலைவர் அல்லது காவல் துறைத் துணைத் தலைவர் அல்லது மாவட்டக் காவல் கண்காணிப் பாளர் ஆணைகளுக்குட்பட்டு அவர்கள் கருதுகின்ற கால அளவிற்கு அதிகப்படியான எண்ணிக்கையில் காவல் அலுவலர்களை நியமித்து கொள்வது சட்டப்படி சரியானதாகும். ஆனால் அப்படிப்பட்ட நியமனம் எவருடைய விண்ணப்பத்தின் பேரில் செய்யப்பட்டதோ அவர் எப்போதும், எழுத்து மூலமான ஒரு மாத கால அறிவிப்புக் கொடுத்து காவல் துறைத் தலைவருக்கு அல்லது காவல் துறைத் துணைத் தலைவருக்கு அல்லது மாவட்டக் காவல் கண்காணிப்பாள ருக்கு அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்களை நிறுத்திவிட வேண்டுமென்று எழுத்து மூலமான ஒரு மாத கால அறிவிப்புக் கொடுத்துக் கேட்டுக் கொள்வது சட்டப்படி சரியானதாகும். அந்த அறிவிப்பின் காலம் முடிவடைவதிலிருந்து அதிகப்படியான காவல் படையின் செலவை ஏற்பதினின்றும் அவர் விடுவிக்கப்படு வார்.

**14. ரயில்வேக்களுக்கும், வேறு தொழில் அமைப்புக்களுக்கும் பக்கத்தில் அதிகப்படியான படை.**—நாட்டில் எந்தப் பக்கத்தி லேனும் ரயில்வே அல்லது கால்வாய் அல்லது பொது வேலை செய் யப்படுவதற்காக உள்ள போதும் அல்லது செயல் முறையிலுள்ள

போதும் அவ்வாறு வேலை செய்து கொண்டிருக்கும் ஆட்களின நடத்தையிலிருந்தும் அல்லது அவ்வித நடத்தையிருக்கக் கூடும் என்று அச்சப்படுவதற்கான ஏதுவிலிருந்தும் அந்த இடத்திற்கு அருகாமையால் அதிகப்படியான காவல் படை இருக்க வேண்டுவது அவசியமெனக் காவல் துறைத் தலைவருக்குத் தோன்றினல், மாநில அரசாங்கத்தினுடைய சம்மதத்தின் மேல் அப்படிப்பட்ட அதிகப்படியான காவல் படையை அவர் நியமிக்கக் கட்டளையிடுவதும் அந்தத் தேவை நீடிக்கும் வரையில் அதை வைத்துப் பராமரிப்பதும் சட்டப்படி சரியானதாகும். அப்படிப்பட்ட வேலையைச் செய்யும் நிறுமத்தின் பொருளாளரை அல்லது அதன் நிதியின் பொறுப்பிலுள்ள எந்த ஒரு அலுவலரை மேலே கூறியவாறு அவசியமாகவுள்ள அதிகப்படியான படைக்குண்டான செலவை ஏற்கும்படி அப்போதைக்கப்போது ஆணையிடுவதும் சட்டப்படி சரியானதாகும்.

15. **அதிகப்படியான காவல் படையை வைத்துப் பெறுவதில் உண்டான செலவு தொகையை வசூலித்தல்.**—இதற்கு முந்திய இரண்டு பிரிவுகளின் கீழ் செலுத்தப்பட வேண்டிய எல்லாப் பணமும் தகுதியுள்ள ஒரு நீதிமன்றத்தில் செய்து கொள்ளும் உரிமை வழக்காலும் அல்லது ஒரு குற்றவியல் நீதிபதியின் பிடியாணையின்கீழ் பணம் செலுத்தத் தவறியவருடைய சாக்குகளை ஜப்தி செய்து, விற்பதாலும் வசூலிக்கப்படும்.

16. **தனிப்பட்ட காவல் அலுவலர்கள்.**—எந்த ஒரு இடத்திலும் ஒரு சட்டத்திற்கு எதிரான கூட்டம் அல்லது கலகம் அல்லது அமைதிக் குழப்பம் நேர்ந்துவிட்டபோதும் அல்லது ஏற்படக்கூடும் என்று அச்சப்படுவதற்குத் தக்க காரணங்களிலிருந்தபோதும் அமைதியை நிலைநாட்டவும் அங்கு வசிப்பவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கவும், அந்த இடத்தில் உள்ள சொத்துக்கள் பத்திரமாய்க் காப்பாற்றப்படுவதற்கும் சாதாரணமாய் நியமிக்கப்பட்டுள்ள அலுவலர்கள் போதிய அளவில் இல்லை என்று தோன்றிய போதும் காவல் ஆய்வாளர் வரிசைக்குக் குறையாத ஒரு காவல் அலுவலர் பொது மக்களிலிருந்தும் அல்லது கிராமப் பணியாளர்களிலிருந்தும் அங்கு குடியிருப்பவர்களிலிருந்தும் தேவைப்பட்டவர்களைக் காவல் அலுவலர்களாகக் குறிப்பிட்ட காலத்திற்குக் குறிப்பிட்ட விதத்தில் நியமிக்கும்படி மிகவும் அண்மையிலுள்ள குற்றவியல் நீதிபதிக்கு விண்ணப்பிப்பது சட்டப்படி சரியானதாகும். அப்படிப்பட்ட குற்றவியல் நீதிபதி உடனடியாக அந்த விண்ணப்பத்திற்கு

இணங்கி, அவ்விதம் நியமனம் செய்வது அவருடைய கடமை யாகும்.

17. **தனிக் காவல் அதிகாரம்.**—அவ்வாறு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு காவல் அலுவலரும், சாதாரணக் காவல் அலுவலர்களைப் போலவே அதே அதிகாரங்களையும், சலுகைகளையும் பாதுகாப்பையும் பெற்றிருப்பார். அவர் சாதாரணக் காவல் அலுவலர்களைப் போலவே அதே அதிகாரிகளுக்குக் கீழுள்ளவராக அத்தகைய கடமைகளுக்கும் தண்டனைகளுக்கும் உரியவராக இருப்பார். மாநில அரசு நிர்ணயிக்கும் படிவத்தில் தம்மை நியமித்த குற்றவியல் நீதிபதியின் கையெழுத்தோடு கூடிய ஒரு சான்றிதழைப் பெற்றிருப்பார்.

18. **பணியாற்ற மறுப்பதற்குத் தண்டனை.**—மேலே சொல்லப்பட்டுள்ளபடி ஒரு தனிக் காவல் அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள எந்த ஒரு நபரும் போதுமான தக்க காரணமில்லாமல் அவ்வாறு பணியாற்ற மறுத்தாலும் அசட்டையாயிருந்தாலும் அல்லது அவருடைய பணியைச் செய்ய அளிக்கப்பட்ட யாதொரு சட்டப்படியான ஆணைக்கு அல்லது கட்டளைக்குக் கீழ்ப்படிய மறுத்தாலும் அல்லது அசட்டை செய்தாலும் அவர் ஒரு குற்றவியல் நீதிபதியால் குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் அப்படிப்பட்ட அசட்டைக்கு அல்லது மறுத்ததற்கு அல்லது கீழ்ப்படியாததற்கு ஐம்பது ரூபாய்களுக்கு அதிகப்படாத தண்டப் பணம் விதிக்கப்படுவதற்கு உரியவராவார்

19. **காவல் அலுவலர்கள் அனுமதியில்லாமல் அல்லது அறிவிப்பு இல்லாமல் வேலையினின்று விலகுதலும் அல்லது வேறு வேலையை மேற்கொள்ளுதலும் கூடாது.**—யாதொரு காவல் அலுவலரும் மாவட்டக் காவல் கண்காணிப்பாளரால் விளக்கமாக எழுத்து மூலம் அனுமதிக்கப்பட்டிருந்தாலொழிய தம் வேலையினின்றும் விலகிக் கொள்ளுவதற்கும் அல்லது அதன் பணிகளிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளுவதற்கும் உரிமையுடையவராகார். தமக்கு மேற்பட்ட அலுவலருக்கு எழுத்து மூலமாக இரண்டு மாத கால அளவில் அறிவிப்புக் கொடுக்கப்பட்டிருந்தாலொழிய அப்படிப்பட்ட காவல் அலுவலர் இந்தச் சட்டத்தின்கீழ் தம் பணிகளைத் தவிர வேறு எந்த வேலையிலும் எப்படியும், காவல் துறைத் தலைவரின் முத்திரையுடன் அவ்வாறு செய்யலாம் என்பதற்கு விளக்கமாக எழுத்து மூலமான அனுமதியின் மேலன்றி, ஈடுபடவும் கூடாது.

**20. காவல் அலுவல்களை சட்டத்திற்கு எதிராக மேற்கொள்ளல், காவல் ஆள் மாருட்டம் செய்தல் முதலியவை.**—இந்தச் சட்டம் இயற்றப்பட்டதிலிருந்தும் அதற்குப் பிறகும் முறைப்படி ஒரு காவல் அலுவலராகச் சேர்க்கப்பட்டிராதவராயிருந்து அல்லது அப்படியிருந்து விலகிவிட்டவராயிருந்து காவல் துறைக்குச் சேர்ந்த யாதொரு அதிகாரத்தை அல்லது பணியை சட்டவிரோதமாய் ஏற்றுக் கொள்பவரும், தம் வேலையை நிறைவேற்றும் காலத்தில் பயன்படுத்தப்படவேண்டி அவருக்கு அளிக்கப்பட்டுள்ள சான்றிதழையும், ஆடைகள், தளவாடங்கள், அமைப்புகளையும், இதர தேவைப்பட்டவைகளையும் உடனடியாகத் திருப்பிக் கொடுத்துவிடாதவரும், காவல் படையால் மட்டும் வைத்திருக்கப் பட வேண்டிய கட்டளையிடப்பட்ட யாதொரு ஆடையில் அல்லது அமைப்பில் ஒரு தெளிவான பொருளைத் தன்வசம் வைத்துக் கொண்டிருந்து அதை வைத்திருப்பதற்குத் திருப்திகரமான காரணம் காட்டாதவரும் அல்லது ஒரு காவல் அலுவலரின் உடையையோ அல்லது அதைப் போன்று இருக்கக் கூடிய அல்லது அதுவாகவே கருதக்கூடிய ஒரு உடையைப் போட்டுக் கொள்பவரும் அல்லது யாதொரு நோக்கத்திற்காகவும் இதர விதமாகவும் யாதொரு காவல் அலுவலரின் நடத்தையை அல்லது குணத்தைக் காட்டி ஆள்மாருட்டம் செய்கிறவருமாகிய ஒவ்வொரு நபரும் அவ்வாறு பாவனை செய்த நடத்தைக்கான குற்றத்திற்குரிய வேறு எந்தத் தண்டனையோடுங்கூட ஒரு குற்றவியல் நீதிபதி குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் 200 ரூபாய்களுக்கு அதிகப்படாத அபராதத்திற்கும் அல்லது கடும் உழைப்புடனும் அல்லது உழைப்பில்லாமலும் ஆறு மாதங்களுக்கு அதிகப்படாத சிறைத் தண்டனைக்கும் அல்லது இரண்டுக்குமுட்பட்டவராவார்.

**21. காவல் அலுவலர்களின் பணிகள்.**—இந்தச் சட்டத்தில் உள்ளவைகளின் நோக்கங்களுக்காக, ஒவ்வொரு காவல் அலுவலரும் எப்போதும் அலுவலிலிருப்பதாகக் கருதப்படுவதுடன் அந்தப் பொது காவல் மாவட்டத்தில் ஒவ்வொரு பாகத்திலும் ஒரு காவல் அலுவலரின் அதிகாரங்களைப் பெற்றிருப்பார். எல்லாக் குற்றங்களையும், சட்ட விரோதச் செயல்களையும் பொதுத் தொல்லைகளையும் தடுப்பதற்கும், ஒழுங்கு அமைதியை நிலைநாட்டுவதற்கும் ஒழுங்கற்றவர்களையும், ஐயுறக்கூடியவர்களையும் பிடித்துக் கைது செய்வதற்கும் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதிபதிக்கு முன் கொண்டு வருவதற்கும், பொது அமைதிக்குக் கேடு விளைவிக்கக் கூடிய தகவல்களைச் சேகரித்து அனுப்புவதற்கும் சட்டப்படி

அவருக்கு அளிக்கப்பட்ட எல்லா ஆணைகளுக்கும் பிடியாணை களுக்கும் உடனுக்குடன் கீழ்ப்படிந்து செயலாற்றுவதற்கும் தம்முடைய சிறந்த முயற்சிகளையும் திறமையையும் பயன் படுத்துவது அவருடைய கடமையாகும்.

ஆணைகள் 22 முதல் 43 (காவல் அலுவலர்கள் பிடியாணைகளில் லாமல் கைது செய்யக்கூடிய குற்றங்கள், கைது செய்ததன் பேரில் உள்ள நடைமுறை) பிணையமும், அடையாளந் தெரிந்து கொள்ளு தலும் பற்றிய விதிகள்; தற்காலிகமாக சிறையில் வைத்தல்; குடிக்குமிடங்கள் முதலியவைகளில் நுழைய அதிகாரம்; எடைகள், அளவுகள், ஆய்வு செய்தல்; சிறு குற்றங்களைப் பற்றிய புகார் களைப் பெற்றுக்கொள்ளாத தடை தகவல் அளிக்கவும், வழக்குத் தொடரவும் அதிகாரம்; பிடியாணைகளை நிறைவேற்றுவதற்கும் அழைப்புக் கட்டளைகளைச் சேர்பித்ததற்குமான ஏற்பாடுகள்; காவல் அலுவலர்கள் பயமுறுத்தலும், வாக்களித்தலும் செய்யாமை; காவல் அலுவலர்களுக்கு உதவி செய்தலாகிய கடமை 1862-ம் ஆண்டு, XVII சட்டத்தால் நீக்கப்பட்டுள்ளன.

**22. தீப்பிடித்தபோது காவல் துறையினருக்குள்ள அதிகாரங் கள் முதலியவை.**—ஆணைகள் 42, 43 ஆம் இனங்கள் 1947-ம் ஆண்டு VIII ஆம் சட்டத்தால் சேர்க்கப்பட்டன. தீப்பிடித்தபோது காவலர் வரிசைக்கு மேற்பட்ட ஒரு காவல் அலுவலரும் அல்லது தியாள் வரிசைக்கு மேற்பட்ட தமிழ்நாடு தீயணைப்புப் பணியாளர் தொகுதியின் ஒரு உறுப்பினரும்,—

(அ) அந்தத் தீயை அணைப்பதற்காக அல்லது உயிரை அல்லது சொத்தைக் காப்பாற்றுவதற்காக உள்ள செயல்களில் தாம் அங்கு இருந்துகொண்டு தலையிடுபவர்களும் அல்லது அவற்றைத் தடைசெய்பவர்களுமான எவரேனும் நபர்களை அவ்விடமிருந்து அப்புறப்படுத்தலாம் அல்லது அப்புறப்படுத்தும் படி ஆணையிடலாம்.

(ஆ) தீ எரிந்து கொண்டிருக்கும் இடத்தில் அல்லது அதற்குப் பக்கத்தில் உள்ள யாதொரு தெருவையும் அல்லது வழியையும் அடைத்துவிடலாம்.

(இ) தாமாகவோ அல்லது தம் ஆணையின்கீழ்ப் பணி யாற்றும் மற்றவர்களைக் கொண்டோ அந்தத் தீயை அணைக்கும் பொருட்டு கூடிய வரை மிகவும் குறைந்த சேதத்தோடு யாதொரு கட்டத்திலும் அதன் சுற்றுப்புறத்திலும் வழியை உடைத்துக் கொண்டு உள்ளே செல்லவோ, அவற்றை இடித்துக் கீழே

தள்ளவோ அல்லது குழாய்களை அல்லது மற்ற சாதனங்களைக் கொண்டு செல்வதற்கு வழியை உபயோகப்படுத்தவோ செய்யலாம்.

(ஈ) தீ ஏற்பட்ட இடத்தில் அதிகமாகத் தண்ணீரின் அழுத்தம் உண்டாகும் பொருட்டு யாதொரு பரப்பில் உள்ள முக்கிய குழாய்களையும் சிறிய குழாய்களையும் மூடிவிடும்படி செய்யலாம்.

(உ) கூடிய அளவில் உதவியளிக்கும்படி யாதொரு தீயணைப்புப் பொறியின் பொறுப்பிலுள்ள எவரையும் அழைக்கலாம்.

(ஊ) பொதுவாக, உயிரையும் சொத்தையும் பாதுகாப்பதற்குத் தேவையாய்த் தோன்றக்கூடிய அத்தகைய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

தீப்பிடித்த காலங்களில் தமிழ்நாடு தீயணைக்கும் பணியாளர் தொகுதிகளின் உறுப்பினர்களால் அல்லது யாதொரு தீயணைக்கும் படையால் அல்லது காவல் அலுவலர்களால் அல்லது உதவியாளர்களால் அவர்களுக்குரிய பணியைச் செய்யும்போது ஏற்பட்ட பொருட்சேதமும், தீ எதிர்ப்பு ஈட்டுறுதிப் பத்திரத்தில் கண்ட பொருளின்படி தீயினால் ஏற்பட்ட சேதமாகவே கருதப்படும். ஆயினும் இந்தப் பிரிவில் உள்ளது எதுவும், யாதொரு காவல் அலுவலரும் அல்லது தமிழ்நாடு தீயணைக்கும் பணியாளர் தொகுதிகளின் யாதொரு உறுப்பினரும் அல்லது யாதொரு தீயணைக்கும் படையும் நியாயமான காரணமில்லாமல் செய்த செய்கைகளினால் ஏற்பட்ட சேதங்களின் பொறுப்பிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்காது.

23. **தீப்பிடித்ததாகப் பொய்யான பீதி உண்டாக்குவதற்குத் தண்டனை.**—எவரொருவர், பொய் என்று தெரிந்திருந்தும் தீயைப் பற்றிய அபாய அறிவிப்பை யாதொரு தீயணைப்புப் படைக்கு அல்லது அதன் யாதொரு உறுப்பினருக்கு அல்லது சென்னை தீயணைக்கும் பணியாளர் தொகுதியின் யாதொரு உறுப்பினருக்கு ஒரு தெருவிலுள்ள தீ எச்சரிக்கை மூலமாகவோ, அறிக்கை மூலமாகவோ தகவல் அனுப்புவதன் மூலமாகவோ அல்லது வேறு எந்த வகையாகவோ தெரிவித்தால் அல்லது தெரிவிக்கும்படி செய்தால் அவர் குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் ஐம்பது ரூபாய்கள் வரை தண்டப் பணம் விதிக்கப்படுவதற்குரியவராவார்

இந்தப் பிரிவின்கீழ் அல்லது 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகர காவல் சட்டத்தின் 62 (அ) பிரிவின்கீழ் குற்றவாளி யென்று முன்னால் தண்டிக்கப்பட்டிருந்து இந்தப் பிரிவின் கீழ்த் தண்டிக்கப்படும் எவரும் ஆறு மாதங்கள் வரை சாதாரணச் சிறைக் காவல் தண்டனைக்கும் தண்டப் பணம் இறுக்கப் படுவதற்கும் உரியவராவார்.

**கடமையைச் செய்வதில் அசட்டையாயிருத்தல் முதலியவை களுக்குத் தண்டனைகள்.**

24. கடமையைச் செய்யத் தவறுபவரும் அல்லது ஒரு தகுதியுள்ள அதிகாரியால் செய்யப்பட்ட யாதொரு விதி அல்லது ஒழுங்கு முறை விதி அல்லது சட்டப்படியான ஆணையை வேண்டுமென்றே அசட்டை செய்பவரும் அல்லது விடுப்பு அனுமதி இல்லாமலும் அல்லது இந்தச் சட்டத்தின் ஏற்பாட்டின் படி இரண்டு மாத கால அறிவிப்பு இல்லாமல் அலுவல் பணி செய்வதை நிறுத்தி விடுகிறவரும் அல்லது தமது காவல் பணியைத் தவிர அதிகாரமில்லாமல் வேறு எந்தப் பணியிலாவது ஈடுபடுகிறவரும் அல்லது யாதொரு தனிப்பட்ட நபரின் மேல் கெட்ட எண்ணத்துடனும் காரணமில்லாமலும் யாதொரு பொய்யானதும், தொந்தரவு அளிக்கக் கூடியதும் அல்லது அற்பமானதுமான குற்றச்சாட்டை அல்லது தகவலை ஏற்படுத்து கிறவரும், தெரிந்திருந்தும் வேதுடுமென்றே தீய எண்ணத்துடன் தமது அதிகாரங்களின் வரம்பு கடந்து செய்கிறவரும் அல்லது பிடியாணை இல்லாமல் தம் காவலில் உள்ள நபரைச் சட்டப்படி குற்றவியல் நீதிபதி முன்னால் கொண்டு வந்து ஒப்புவிக்காமல் வேண்டுமென்றே குற்றப்படுமாறு தம் கடமையைப் புறக்கணிக் கின்றவரும் அல்லது தம் காவலில் உள்ள யாதொரு நபருக்குச் சரியில்லாத முறையில் தீங்கு செய்கிறவரும் ஆன ஒவ்வொரு காவல் அலுவலரும் ஒரு குற்றவியல் நீதிபதியால் குற்றவாளி யென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் மூன்று மாதச் சம்பளத்திற்கு அதிகப்படாத தண்டத் தொகை செலுத்தவும் அல்லது மூன்று மாதங்களுக்கு அதிகப்படாத காலத்திற்கு கடும் உழைப்புடன் கூடிய அல்லது கடும் உழைப்பில்லாத சிறைத் தண்டனைக்கும் அல்லது இரண்டுக்கும் உட்படுவார்.

**அனுமதியற்ற கட்டணங்கள் முதலியவைகளைப் பெறுவதற்குத் தண்டனை.**

25. எந்தச் சாக்கு போக்கின் கீழும் அல்லது எந்தச் சூழ்நிலையின் கீழும் நேராகவோ அல்லது வேறுவிதமாகவோ,

தாம் வசூலிக்க அல்லது பெறுவதற்கு முறைப்படிக் காவல் துறைத் தலைவரால் அல்லது அவருடைய ஆணையின் கீழ்ச் செயலாற்றும் ஒருவரால் அனுமதிக்கப்பட்டவையல்லாத வேறு எந்தக் கட்டணத்தையோ, நன்கொடையையோ, சாப்பாட்டிற்காகப் பணத்தையோ, படியையோ அல்லது கைம்மாறாகவோ வசூலிக்கும் அல்லது ஏற்றுக் கொள்ளும் எந்தக் காவல் அலுவலரும் ஒரு குற்றவியல் நீதிபதியால் குற்றவாளியென்று தீர்ப்பு அளிக்கப் பட்டதன் பேரில் ஆறு மாதச் சம்பளத் தொகைக்கு அதிகப் படாத தண்டத்திற்கும் உழைப்புடன் கூடிய அல்லது உழைப்பு இல்லாத சிறைத் தண்டனைக்கும் அல்லது இரண்டுக்கும் உட்படுவார்.

### அச்சுறுத்திப் பறித்தல் முதலியவைகளுக்குத் தண்டனை.

26. யாதொரு சட்டவிரோதமான அச்சுறுத்தியும் அல்லது மோசடி செய்தும், அல்லது தாம் செய்ய வேண்டிய அல்லது செய்விக்க வேண்டிய ஒரு செயலைச் செய்வதற்காக அல்லது செய்யாமலிருப்பதற்காக அல்லது தாமதப்படுத்துவதற் காக அல்லது தாம் கொடுப்பதற்கு அல்லது தெரிவிப்பதற்குக் கடமைப்பட்டுள்ள ஒரு தகவலை நிறுத்தி வைப்பதற்காக அல்லது தாமதிப்பதற்காக நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ யாதொரு லஞ்சத்தை அல்லது அனுமதியற்ற நன்கொடையை அல்லது வேறு சலுகையை அச்சுறுத்தி அல்லது வலிந்து பெற விரும்புகின்றவரும் அல்லது பெறுகின்றவரும் அல்லது மேலே சொல்லப்பட்ட குற்றங்களில் எவைகளையும் செய்ய முயற்சி செய்பவரும் அல்லது கோழைத்தனத்தையுடையவராயிருப்ப வருமான எந்தவொரு காவல் அலுவலரும் ஒரு குற்றவியல் நீதிபதியால் குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் பன்னிரண்டு மாதங்கள் சம்பளத் தொகைக்கு அதிகப்படாத தண்டத்திற்கும் அல்லது கடும் உழைப்புடன் கூடிய அல்லது கடும் உழைப்பில்லாத பன்னிரண்டு மாதங்களுக்கு அதிகப்படாத சிறைவாசத் தண்டனைக்கும் அல்லது இரண்டுக்கும் உட்படுவார்.

### கடுமையான வழக்குகளைக் குற்றவியல் நீதிபதி மேல் விசாரணைக்கு அனுப்புதல்.

இதற்கு முந்திய மூன்று பிரிவுகளால் உள்ளவை எவையும் குற்றவியல் நீதிபதியை எப்போதும் இந்த மாதிரிக் கொடுமையான தன்மையுள்ள எந்த வழக்குகளையும் மேல் விசாரணைக்காக அனுப்புவதைத் தடுப்பதாகக் கருதக் கூடாது.

## காவல் அலுவலருக்கு எதிர்ப்பாகச் செய்யப்பட்ட குற்றங்களுக்குத் தண்டனை.

27. எவரொருவரும், தம் பணியை நிறைவேற்றவிருக்கும் ஒரு காவல் அலுவலரைத் தாக்கினாலும் அல்லது தடங்கல் செய்தாலும் அல்லது வேறு ஒரு நபர் அந்த மாதிரி செய்வதற்கு உதவி யளித்தாலும் அல்லது தூண்டினாலும் அல்லது தக்க காரண மில்லாமல் ஒரு காவல் அலுவலருக்கு எதிர்ப்பாகப் பொய்யான அல்லது அற்பமான பொருளற்ற குற்றத்தைச் சுமத்தினாலும் அவர் அப்படிப்பட்ட குற்றத்திற்கு ஒரு குற்றவியல் நீதிபதியால் குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் ஐம்பது ரூபாய்களுக்கு அதிகப்படாத அபராதத் தண்டனைக்கும் மூன்று மாதங்களுக்கு அதிகப்படாத காலத்திற்குக் கடும் உழைப்புடன் கூடிய அல்லது கடும் உழைப்பில்லாத சிறைவாசத்திற்கும் அல்லது இரண்டுக்கும் உட்படுவார்.

28. *(நகரங்களின் பரப்புகளுக்குள் சில குற்றங்களுக்குத் தண்டனையும், பிடியாணையில்லாமல் கைது செய்ய அதிகாரமும், கால்நடைகளைக் கொலை செய்வதும்; சீற்றத்தோடு சவாரி செய்தல் முதலியவைகள்) 1889 ஆம் ஆண்டு நகரத் தொல்லைகள் சட்டத்தால் (1889 ஆம் ஆண்டு சென்னை I II-ஆம் சட்டம்)* நீக்கப்பட்டுள்ளன.

29. பொது ஊர்வலங்கள் முதலியவைகளை ஒழுங்குபடுத்தல். பொது மக்கள் கூடுமிடங்களில் மக்களையும் ஊர்திகளையும் ஒழுங்கு படுத்தல்; தெருக்களில் இசைக் கருவிகள் பயன்படுத்துவதைப் பற்றிய ஒழுங்குமுறை விதிகள் *(1896 ஆம் ஆண்டு தமிழ்நாடு V ஆம் சட்டத்தால் நீக்கப்பட்டுள்ளன.)*

## காவல் அலுவலர் சிலருக்கு எதிர்ப்பாக உள்ள குற்றச்சாட்டுக்களை விசாரித்தல்.

30. * இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு காவலர் வரிசைக்கு மேற் பட்ட ஒரு காவல் அலுவலருக்கு எதிராகவுள்ள எந்தவொரு குற்றச்சாட்டும் ஒரு குற்றவியல் நீதிபதியின் அதிகாரங்களைச் செயலாற்றும் ஒரு அலுவலர் மட்டும் விசாரிக்கப்பட்டு தீர்க்கப்பட வேண்டும்.

---

* திருத்தங்கள் 1936-ஆம் ஆண்டு சென்னை மாவட்டக் காவல் (திருத்தச்) சட்டத்தால் (1936-ஆம் ஆண்டு XXI புகுத்தப் பட்டன.

### மேற்பட்ட தண்டங்களுக்குக் குற்றவியல் வழக்கு தொடரப் படுவதற்கு உட்படல் ஏற்பாடு.

*31.* எப்போதும் எந்த நபரும் ஒரே குற்றத்திற்கு இரண்டு முறை தண்டிக்கப்படக் கூடாது என்ற நிபந்தனைக்குட்பட்டு, இந்தச் சட்டத்தில் உள்ளது எதுவும் இந்தச் சட்டத்தால் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்ட பிறகு தண்டிக்கப்படக் கூடிய யாதொரு குற்றத்திற்கு வழக்குத் தொடரப் படுவதிலிருந்தும் அல்லது எந்த நபரும் வேறு எந்த விதி அல்லது ஒழுங்குமுறை விதி அல்லது சட்டத்தின் கீழ் இந்தச் சட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் உள்ள தண்டனைக்கு மேற்பட்ட அல்லது வேறுவிதமான தண்டத்திற்கு அல்லது தண்டனைக்கு உள்ளாகுவதிலிருந்தும் தடுப்பதாக பொருள் செய்யக் கூடாது.

### தண்டங்கள் விதிப்பு.

32. இந்தச் சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் விதிக்கப்பட்ட எல்லாத் தண்டப் பணங்களும் தண்டங்களும் வசூலிக்கப்பட வேண்டிய எல்லாத் தொகைகளும், அவை செலுத்தப்படாத போது ஒரு குற்றவியல் நீதிபதியின் பிடியாணையால் அந்தக் குற்றவாளியின் அசையும்* பொருளை ஜப்தி செய்து விற்பனை மூலம் வசூலிக்கப்படலாம்.

### நடவடிக்கைகளுக்குக் காலவரம்பு—அறிவிப்பு—வாதியால் வசூலிக்கப்படல்—செலவுகள்—நடவடிக்கைக்குத் தடை

33. ** (இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது காவல் துறைக்கு அதிகாரங்கள் அளிக்கும் அப்போது அமலிலுள்ள வேறு ஒரு சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், செய்யப் பட்ட அல்லது செய்ய எண்ணப்பட்ட எந்தவொரு செயலுக்காக எந்தவொரு நபருக்கு எதிராக சட்டப்படி கொண்டுவரப்படக் கூடிய எல்லா நடவடிக்கைகளும் வழக்குத் தொடர்வுகளும் அப்படிச் சாட்டப்பட்ட நடவடிக்கை செயல்பட்டதற்குப் பிறகு வேறுவிதமாக இல்லாமல் மூன்று மாதங்களுக்குள்ளும் ஆரம்பிக்கப்பட வேண்டும். அந்த நடவடிக்கையைப் பற்றிய அறிவிப்பு எழுத்து மூலமாய் அதற்குரிய காரணங்களுடன் பிரதி

---

* திருத்தங்கள் 1936 ஆம் ஆண்டு சென்னை மாவட்டக் காவல் (திருத்த) சட்டத்தால் (1936 ஆம் ஆண்டு) புகுத்தப் பட்டது.

** 1947 ஆம் ஆண்டு ஆம் சட்டத்தால் பதிலீடு செய்யப்பட்டது.

வாதிக்கு அல்லது அந்தச் செய்கை நடந்த மாவட்டத்தின் காவல் கண்காணிப்பாளருக்கு அல்லது வேறு மேல் அலுவலருக்கு அந்த நடவடிக்கை ஆரம்பிப்பதற்கு குறைந்தது ஒரு மாதத்திற்கு முன்னல் கொடுக்கப்பட வேண்டும். அத்தகைய நடவடிக்கை கொண்டு வருவதற்கு முன் போதுமான ஈடு அளிக்க முன் வந்திருந்தாலும் அல்லது ஒரு போதுமான தொகை அந்த நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு பிரதிவாதியால் அல்லது அவருக்காக நீதிமன்றத்தில் செலுத்தப்பட்டிருந்தாலும், வாதி ஒன்றும் வசூலிக்கக் கூடாது. அப்படிப்பட்ட நடவடிக்கையில் நீதிமன்றத்தால் வாதிக்கு ஒரு தீர்ப்பாணை அளிக்கப் பட்டிருந்தாலும் நடவடிக்கை எடுத்தது சரி என்று வழக்கு விசாரணை நடத்தும் நீதிபதி சான்றிதழ் அளித்திருந்தாலொழிய வாதி பிரதிவாதிக்கு எதிராகச் செலவு தொகை பெற முடியாது.

ஆனல் எப்போதும், அதே செயலுக்கு அத்தகைய அலுவலர்கள் மீது கிரிமினல் குற்றத்திற்காக வழக்குத் தொடரப் பட்டிருந்தபோது, எந்த நடவடிக்கையும் ஏற்புடையதாகாது.

**பிடியாணையின் கீழ் அந்தச் செயல் செய்யப்பட்டது என்னும் வாதம்—பிரதிவாதிக்குத் தீர்ப்பாணைக் கையொப்பத்தின் சான்று.**

34. ஒரு காவல் அலுவலர் அலுவல் முறையில் செய்த ஒரு செயலுக்காக அவருக்கெதிராக ஏதேனும் வழக்கோ, குற்ற வழக்குத் தொடர்தலோ அல்லது நடவடிக்கையோ கொண்டு வரப்பட்டபோது அவர் அப்படிப்பட்ட செயல் ஒரு குற்றவியல் நீதிபதியால் அளிக்கப்பட்ட ஒரு பிடியாணையின் அதிகாரத்தின் கீழ் செய்யப்பட்டது என்று வாதாடுவது சட்டப்படி சரியான தாகும்; அத்தகைய வாதம், ஒரு நீதிபதியால் கையொப்பமிடப் பட்டதாக உள்ள அந்தச் செயலைச் செய்யக் கட்டளையிடும் பிடியாணையைக் கொண்டு வந்து காட்டுவதால் மெய்ப்பிக்கப்படும். அதன் மேல் அந்தக் குற்றவியல் நீதிபதியின் அதிகார வரம்பில் குறையேதாவதிருந்தாலும் கூட பிரதிவாதி தமக்கு அனுகூலமாக ஒரு தீர்ப்பாணை பெற உரிமையுள்ளவராவார். அப்படிப்பட்ட அலுவலரின் கையொப்பம் உண்மையானதா என்று நீதிமன்றம் சந்தேகிப்பதற்குக் காரணம் இருந்தாலொழிய அக்கையொப்பத்தை மெய்ப்பிக்க வேண்டிய தேவையில்லை.

பிடியாணை அளிப்பதற்கு எதிராகப் பரிகாரப் பாதுகாப்பு.

ஆனால், எப்போதும், அந்தத் தாப்பைச் சார்ந்தவர் அத்தகைய பிடியாணையை வெளியிட்ட அதிகாரிக்கு எதிராகக் கோரும் தீர்வு முழுவதாகவே இருக்கும்.

சட்டத்தின் சில ஏற்பாடுகளை ஒரு நகருக்கு விரிவுபடுத்துவதற்கான மாநில அரசாங்கத்தின் அதிகாரம்.

*34.அ. (1) மாநில அரசாங்க அரசிதழில் ஒரு அறிவிக்கையால் யாதொரு நகரத்திற்கும் 1888 ஆம் ஆண்டு சென்னை நகரக் காவல் சட்டத்தின் அட்டவணையில் சொல்லப்பட்டுள்ள ஏற்பாடுகளில் எல்லாவற்றையும் அல்லது சிலவற்றை விரிவுபடுத்தலாம். அரசு தக்கதென்று கருதும் அத்தகைய மாறுதல்களுக்கு, விரிவாக்குவது உட்பட்டிருக்கும் என்று தெரியப்படுத்தலாம்.

(2) மாநில அரசு, அரசிதழில் செய்யும் அறிவிக்கையின் மூலம் (1) ஆவது உட்பிரிவில் சொல்லப்பட்டுள்ள அப்படிப்பட்ட அறிவிக்கையை ரத்து செய்யலாம் அல்லது மாற்றியமைக்கலாம்.

சட்டத்தின் செயல் முறை.

35. இந்தச் சட்டம் மாநில அரசு அரசிதழில் விளம்பரப் படுத்தப்பட்ட அறிவிக்கையின் மூலம் நியமிக்கும் அத்தகைய ஒவ்வொரு மாவட்டத்திலும் அல்லது எந்த மாவட்டத்திலும் அமலுக்கு வரும்.

அட்டவணை.

[54 அ. (1) பிரிவைப் பார்க்கவும்.]

† 3 ஆம் பிரிவில் 'சிறை வைத்தல்', 'சூதாட்டம்', 'சூதாட்டக் கருவிகள்', 'பொதுச் சூதாட்ட இல்லம்', 'குற்றவாளி என்ற தீர்ப்பு' பிரிவுகளில் 23, 24, 26, 28, 33, 48, 63, 64, 66, 71 ஆவது பிரிவின் (iii), (v), (vi), (vii), (viii), (x), (xiii), (xiv), (xv), (xvi), (xvii), (xviii) கூறுகளும் 73, 74, 75, 77, 78, 79, 80 பிரிவுகளும்.

---

* 1936 ஆம் ஆண்டு சென்னை மாவட்டக் காவல் (திருத்தச்) சட்டத்தால் (1936 ஆம் ஆண்டு xxi) புகுத்தப்பட்டது.

† 1938 ஆம் ஆண்டைய சென்னை xiii ஆம் சட்டத்தால் மாற்றப்பட்டது.

### அ படிவம்.

(11 ஆம் பிரிவைப் பார்க்கவும்.)

அ, ஆ என்பவர் 1859 ஆம் ஆண்டு XXIV ஆம் சட்டத்தின் கீழ் காவல் படையின் ஒரு உறுப்பினராக நியமிக்கப் பட்டிருக்கிருர். அவர் ஒரு காவல் அலுவலருடைய அதிகாரங் களையும், பணிகளையும், சலுகைகளையும் அடைந்திருக்கச் சட்டப் படி உரிமைப்படுத்தப்பட்டிருக்கிருர்.

### சென்னை மாநகரக் காவல் சட்டம் iii (1888).

சென்னை மாநகரக் காவல் முறையை ஒழுங்குபடுத்தும் ஒரு சட்டம்.

முன்னுரை.—சென்னை மாநகரக் காவல் முறையை ஒழுங்கு படுத்தச் சட்டங்களின் ஏற்பாடுகளைத் திருத்துவதும், தொகுப்பதும் தக்கதாயிருப்பதால் அடியிற்கண்டபடி சட்ட மியற்றப்படுகிறது:—

### சிறு தலைப்பு.

1. (1) இந்தச் சட்டம் 1388 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டம் என்று சொல்லப்படலாம்.

### உள்ளூர்ப் பரப்பு.

(2) இது 3 ஆம் பிரிவில் விளக்கியுள்ளபடி சென்னை மாநகரம் முழுமைக்கும் பரவியுள்ளது.

(3) -0- 0- -0-

2. (நீக்கப்பட்ட சட்டங்கள்) 1901 ஆம் ஆண்டு நீக்கல் திருத்தச் சட்டத்தால் (1901 ஆம் ஆண்டு XI சட்டம்) நீக்கப் பட்டது.

### விளக்க உரைக் கூறுகள்.

3. இந்தச் சட்டத்தில் பொருளிலேனும் அல்லது சூழ்நிலை யிலேனும் ஏதாவது முரண்பாடு இருந்தாலொழிய—

"சென்னை மாநகரம்"

"சென்னை மாநகரம்" என்பதில் சென்னை உயர்நீதி மன்றத்தின் சாதாரணமான முதன்மை அதிகார வரம்பில் உள்ள உள்ளூர் எல்லைகளுக்கு உட்பட்ட எல்லா இடங்களும் அடங்கும்.

### "ஆணையர்"

"ஆணையர்" என்பது 5 ஆம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள சென்னைக்குள்ள காவல் ஆணையர் என்று பொருள்படும்.

### "குற்றத் தீர்ப்பு"

"குற்றத் தீர்ப்பு" என்பது ஒரு மாநிலக் குற்றவியல் நீதிபதியின் முன் குற்றம் சாட்டப்பட்டவரைக் குற்றவாளி என்று தீர்ப்பளித்தல் என்று பொருள்படும்.

### "சிறைத் தண்டனை"

"சிறைத் தண்டனை" என்பது இந்தியக் குற்றத் தண்டனை விதித் தொகுப்பில் விளக்கப்பட்டுள்ளபடி இரண்டு விதமான சிறைத் தண்டனைகள் என்று பொருள்படும்.

### "பொதுச் சூதாட்ட இல்லம்"

"பொதுச் சூதாட்ட இல்லம்" என்பது ஒரு வளைவு, அறை அல்லது இடத்தைச் சொந்தமாகப் பெற்றிருக்கிற அல்லது அனுபவித்து வருகிற அல்லது உபயோகித்து வருகிற அல்லது வைத்திருக்கிற நபர் சீட்டுகள், பகடை, மேஜை அல்லது மற்ற சூதாடு கருவிகளைப் பயன்படுத்துவதற்காக அல்லது வளைவு அறை அல்லது இடத்திற்காக அல்லது வேறு விதமாகப் பணம் பெற்றுக் கொண்டு அந்த நபரின் லாபத்திற்காக அல்லது ஊதியத்திற்காக அக் கருவிகள் வைக்கப்பட்டும் அல்லது உபயோகப்படுத்தப்பட்டும் வரும் வளைவு அறை அல்லது இடம் என்று பொருள்படும். ஒரு குதிரைப் பந்தயத்தின் மேல் சூதாட்டம் ஆடுவதற்காகத் திறக்கப்பட்டுள்ள, வைக்கப்பட்டுள்ள பயன்படுத்தப்பட்டுள்ள அல்லது திறக்கப்பட அல்லது பயன் படுத்தப்பட அனுமதிக்கப்பட்டுள்ள யாதொரு வளைவும் அறையும் அல்லது இடமும் இதில் அடங்கும்.

### "சூதாட்டம்"

"சூதாட்டம்" என்பதில் லாட்டரி (குலுக்குச் சீட்டு) சேராது. ஆனால் பந்தயம் கட்டுவதும் பணயம் வைப்பதும் அதில் சேரும்.

**விளக்கம்.**—இந்த விளக்கத்தின் நோக்கத்திற்குப் பந்தயம் கட்டுவது அல்லது பணயம் வைப்பது என்பதில் பந்தயங்கள் சேர்ப்பது அல்லது விரும்பிக் கேட்பது யாதொரு பணயம் அல்லது பந்தயம் சம்பந்தமாய் பணமாகவாவது அல்லது வேறு விதமாகவாவது கெலித்தவற்றை அல்லது வெகுமதியைப் பெறுவதும் அல்லது வழங்குவதும் அல்லது பந்தயங் கட்டுவதையோ அல்லது பணயம் வைப்பதையோ சேகரித்தல், விரும்பிக் கேட்டல், பெறுதல் அல்லது வழங்கல் ஆகியவற்றிற்கு உதவி செய்ய அல்லது வசதியளிக்கும் எந்தச் செயலும் அடங்கும்.

### சூதாட்டக் கருவிகள்.

"சூதாட்டக் கருவிகள்" என்பதில் சூதாட்டப் பொருளாக அல்லது அதற்கு ஏதுவாகப் பயன்படுத்தும் அல்லது பயன்படுத்தக் கருதியுள்ள யாதொரு பொருளும், யாதொரு சூதாட்டத்தின் பதிவேடாக அல்லது பதிவுருவாக அல்லது சான்றுகப் பயன் படுத்தப்படும் அல்லது பயன்படுத்தக் கருதியுள்ள யாதொரு ஆவணமும், யாதொரு சூதாட்டத்தின் வருமானமும் கெலித்தவைகளும் அல்லது யாதொரு சூதாட்டத்தில் பணமாகவாவது அல்லது வேறுவிதமாக வழங்கப்பட அல்லது வழங்கக் கருதிய வெகுமதிகளும் அடங்கும்.

### பொது இடம்.

"பொது இடம்" என்பது (ஒரு சாலை, தெரு அல்லது வழி, பொதுப் போக்குவரத்து வழியாயிருந்தாலும் அல்லது இல்லாவிட்டாலும், ஒரு இறக்குமதி இடம் ஆகியவை உட்பட) பொது மக்கள் வந்து போகக்கூடிய அல்லது வந்து சேர உரிமையுள்ளதாயிருக்கிற அல்லது அவர்கள் அதன் மேலே கடந்து செல்லும் உரிமையைப் பெற்றிருக்கிற ஒரு இடம் என்று பொருள் படும்.

### கால்நடை.

"கால்நடை" என்பதில் கொம்புள்ள கால்நடை, குதிரைகள், கழுதைகள், கோவேறு கழுதைகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகள், பன்றிகள், ஒட்டகங்கள், யானைகள் ஆகியவை அடங்கும்.

"கீழ் நிலை அலுவலர்கள்" என்பது காவல் உதவி ஆணையர் வரிசைக்குக் கீழுள்ளவர்கள் என்று பொருள்படும்.

### காவல் ஏற்ற வயது முதிர்ந்தவர்கள் நிதி.

4. 1867 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ஆம் தேதியன்று 1856 ஆம் ஆண்டு XIII ஆம் நகரக் காவல் வயது முதிர்ந்தவர்கள் நிதிக்குச் சந்தாதாரராயிருந்தவரை அந்தச் சட்டத்தின் 18 ஆம், 19 ஆம் பிரிவுகளின் கீழ் அவர் அடையக் கூடிய சலுகைகளில் எவற்றையும் அவர் அடையாதவாறு செய்ய இந்தச் சட்டத்தில் உள்ளது எதுவும் செயற்படாது.

### காவல் ஆணையரிடம் உரித்தாக்கப்பட்ட ஆட்சி முறை.

5. சென்னை மாநகரத்தின் காவல் ஆட்சி முறை சென்னைக் காவல் ஆணையர் என்று பெயரிடப்படும் ஒரு அலுவலரிடம சட்டப்படி கொடுக்கப்பட்டுள்ளது.

ரயில்வே நிலையங்கள் முதலியவைகளில் நியமிக்கப்பட்டிருக்கும் காவல் துறையினர் ஆட்சி முறை காவல் துறைத் தலைவரிடம் சட்டப்படி கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் மாநில அரசாங்கம் அரசிதழில் செய்யும் அறிவிக்கையின் மூலம் சென்னை மாநகரத்திற்குள் உள்ள எந்த ரயில்வே நிலையங்களிலும் அல்லது எந்த ரயில்வே இடங்களிலும் அல்லது சென்னை மாநகர எல்லைக்குள் உள்ள யாதொரு ரயில்வே எல்லையிலும் அல்லது ரயில்வேயின் பகுதியிலும் நியமிக்கப்பட்டுள்ள அல்லது நியமிக்கப்படக்கூடிய அப்படிப்பட்ட காவல் நிர்வாகம் காவல் துறைத் தலைவரிடம் கொடுக்கப்படலாம். அந்த அறிவிக்கையை மாநில அரசாங்கம் எந்த நேரத்திலும் ரத்து செய்யலாம் அல்லது மாற்றலாம். அப்படிப்பட்ட அறிவிக்கை வெளியிடப்பட்டதிலிருந்தும் அதற்குப் பிறகும் இந்தச் சட்டத்தின் கீழ் ஆணையருக்கும் அவரது துணை அதிகாரிகளுக்கும் உதவி அலுவலர்களுக்கும் அத்தகைய காவல் துறை பற்றிய அதிகாரங்கள் முடிவடைந்துவிடும். இந்தச் சட்டத்தின் கீழ் ஆணையருடைய எல்லா அதிகாரங்களும் அத்தகைய காவல் துறை பற்றிய வரை காவல் துறை தலைவராலும், அவர் கட்டுப்பாட்டின் கீழ், மாநில அரசாங்கத்தால் ரயில்வே காவல் கண்காணிப்பாளராகவும் நியமிக்கப்படும், அத்தகைய அலுவலர்களாலும் செயலாற்றப்படும். ஆனால் 10 ஆம் பிரிவின் கீழ் ஆணையருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், அந்தக் காவல் துறையைப் பொறுத்த வரை காவல் துறைத் தலைவரால் மட்டும் செயலாற்றப்படும்.

### ஆணையருக்குத் துணை அலுவலர்களும் உதவி அலுவலர்களும் நியமிக்கப்படுதல்.

6. அரசாங்கம், அவ்வப்போது ஆணையருக்கு ஒன்று அல்லது மேற்பட்ட துணை அலுவலர்களையும் உதவி அலுவலர்களையும் நியமிக்கலாம். இவர்கள் ஆணையரின் ஆணைகளின் கீழ் ஆணையரைப் போலவே அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள பணிகளில் எவற்றையேனும் செய்யவும் அதிகாரங்களில் எவற்றையேனும் செலுத்தவும் தகுதியுள்ளவர்களாயிருப்பார்கள்.

### ஒரு குற்றவியல் நீதிபதி போன்று ஆணையருக்குள்ள அதிகாரங்கள்.

7. ஆணையர் தம் அலுவலின் முறையால் ஒரு மாநில குற்றவியல் நீதிபதியாயிருப்பார். ஆனால் அவருக்குள்ள குற்றவியல் நீதிபதியின் அதிகாரங்களை அவ்வப்போது மாநில அரசாங்கத்தால் அளிக்கக்கூடிய அத்தகைய ஆணைகளுக்குட்பட்டுச் செலுத்த வேண்டும். அவர் 1882 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பின் XVIII, XX அல்லது XXI ஆம் அதிகாரங்களில் எவற்றையும் செயல்படுத்தக் கூடாது.

### ஆணையரும் அவரது துணை அலுவலர்களும் உதவி அலுவலர்களும் அமைதி நீதிபதிகளாயிருப்பார்கள்.

8. தம் அலுவல் வகிக்கும் முறையில் ஆணையரும் அவருடைய துணை அலுவலர்களும் உதவி அலுவலர்களும் அமைதி நீதிபதிகளாயிருப்பார்கள். ஆனால், அவர்கள் அமைதியைக் காக்கவும் குற்றங்களைத் தடுக்கவும், குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவும், கைது செய்யவும், காவலில் நிறுத்தி வைக்கவும் இந்தச் சட்டத்தால் ஆணையருக்கு இடப்பட்ட பணிகளை தேவைப்படும் அளவில் மட்டும் செயலாற்ற வேண்டும்.

### காவற் படை அமைப்பு.

9. சென்னை மாநகரத்திற்கு, மாநில அரசாங்கம் அவ்வப்போது ஆணையிடக்கூடியபடி அப்படிப்பட்ட எண்ணிக்கையிலும் விதத்திலும் காவல் அலுவலர்களையும் காவலர்களையும் கொண்டதுமான ஒரு காவல் படை அமைக்கப்படும்.

இந்தச் சட்டத்தின் ஏற்பாட்டிற்குட்பட்டு, மாநில அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்படக்கூடியபடி காவல் படையின் சார்நிலைப் பணி வரிசையிலுள்ள உறுப்பினர்களின் சம்பளமும் ஏனைய பணி விதிகளும் இருக்கும்.

மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்டு காவல் ஆணையாளரால் அந்தக் காவல் படையின் நிர்வாகத்துக்கு வேண்டிய விதிகள் செய்யப்பட வேண்டும்.

10. மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டு ஆணையர் அவ்வப்போது, அந்தப் படையின் பொது நிர்வாகத்திற்காக ஆணைகளையும் ஒழுங்குமுறை விதிகளையும் செய்யலாம்.

காவல் ஆணையர் படையின் சார்நிலைப் பணியாளர் வரிசையின் உறுப்பினர்களை வேலையிலிருந்து விலக்கவோ தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ கீழ்நிலைக்குத் தள்ளவோ செய்யலாம்.

11. காவல் ஆணையர் எச் சமயத்திலும், அரசியலமைப்பின் 311-ஆம் பகுதி ஏற்பாடுகளுக்கும் மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கும் உட்பட்டு காவல் படையின் சார்நிலைப் பணியாளர் வரிசையில் யாதொரு உறுப்பினரை வேலையிலிருந்து விலக்கவோ தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ அல்லது ஓர் சார்நிலைக்கு அல்லது கீழ் காலக் கிரமச் சம்பள ஏற்ற முறைக்கு அல்லது அந்தக் காலக் கிரமச் சம்பள ஏற்ற முறையில் ஒரு கீழ்ப்பட்ட கட்டத்திற்கோ தள்ளலாம். மேலும், அவர், அந்த உறுப்பினரிடமிருந்து, அவருடைய அசட்டையால் அல்லது ஆணைகளை மீறியதால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட யாதொரு பண இழப்பை முழுவதும் அல்லது ஒரு பாகத்தை அவரது சம்பளத்திலிருந்து வசூலிக்க ஆணையிடலாம்.

காவல் படையின் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டதற்குச் சான்றிதழ்கள் பெறுதல்.

12. காவல் படையின் ஒவ்வொரு உறுப்பினரும் வேலையில் சேர்க்கப்பட்டபோது அடியிற்கண்ட படிவத்தில் ஆணையரின் கையொப்பத்தின் கீழ் ஒரு சான்றிதழ் பெற வேண்டும்.

படிவம்.

"அ, ஆ . . சென்னை மாநகர காவல் படையில் ஒரு உறுப்பினராகச் சேர்க்கப்பட்டுள்ளார். அவருக்கு ஒரு காவல் அலுவலரின் அதிகாரங்களும் பணிகளும், சலுகைகளும் கொடுக்கப்பட்டுள்ளன.

அப்படிப்பட்ட சான்றிதழின் முறையால் அவர் ஒரு காவல் அலுவலரின் அதிகாரங்களும், பணிகளும், சலுகைகளும் கொடுக்கப் படுவார். அந்தச் சான்றிதழ், அதில் பெயரிடப்பட்டுள்ள நபர் தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டபோதும் அல்லது விலக்கப்பட்டபோதும் அல்லது வேறுவிதமாக அவர் அந்தப் படையில் வேலையிலிருந்து நின்றுவிட்டபோதும் அமலிலிருக்காது.

**படையின் சார்நிலைப் பணியாளர் வரிசையின் உறுப்பினர்கள் அனுமதியில்லாமலும் அறிவிப்பு இல்லாமலும் வேலையை ராஜினுமா செய்யப்படாது.**

13. படையின் சார்நிலைப் பணியாளர் வரிசையிலுள்ள உறுப்பினர்கள் எவரும் ஆணையரின் எழுத்து மூலமான அனுமதி யின்றியும் அல்லது அப்படி வேலையை விட்டுவிடத் தம் விருப்பத்தை எழுத்து மூலமான ஒரு அறிவிப்பை ஆணையருக்கு அவர் அளித்த தேதிக்குப் பிறகு இரண்டு மாதங்கள் முடிவடையும் வரையிலும் தம் வேலையை ராஜினுமா செய்யவோ அல்லது அதன் பணிகளைச் செய்வதிலிருந்து நிறுத்திக் கொள்ளவோ அருகதை யுள்ளவராகமாட்டார். அவ்வாறு ராஜினுமாச் செய்யும் அல்லது வேலையிலிருந்து நின்று கொள்ளும் சார்நிலைப் பணியாளர் வரிசையின் உறுப்பினர் ஒவ்வொருவரும், ஆணையர் யுக்தத்தில், அவருக்கு அப்போது சேர வேண்டிய சம்பளப் பாக்கித் தொகை முழுமையும் அல்லது அதில் ஒரு பாகத்தையும் இழப்பதற்கு உள்ளாவார். மேலும் அவர் குற்றவாளியென்று குற்றவியல் நீதிபதி தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐம்பது ரூபாய்களுக்கு அதிகப் படாத தண்டத்திற்கும் அல்லது இரண்டு மாதங்களுக்கு அதிகப் படாத சிறைத் தண்டனைக்கும் அல்லது இரண்டுக்கும் உட்பட வேண்டிவரும்.

**காவல் படையிலிருந்து நின்றுவிடும் உறுப்பினர் சான்றிதழையும், உடுப்பையும், தளவாடங்கள் முதலியவைகளையும் ஒப்படைத்து விட வேண்டும்.**

14. காவல் படையின் ஒவ்வொரு உறுப்பினரும் அதிலிருந்து நின்றுவிட்டதன்பேரில் உடனடியாக, அவருடைய சான்றி தழையும், எல்லா உடுப்புகளையும், தளவாடங்களையும், அவர் பணிகளைச் செயலாற்றுவதற்காக அவருக்கு வழங்கப்பட்டுள்ள இதர எல்லாப் பொருள்களையும் ஆணையருக்கு அல்லது ஆணையரால்

கட்டளையிடப்படக்கூடிய நபருக்கு அந்த இடத்திலும் காலத்திலும் ஒப்படைத்துவிட வேண்டும். அவ்வாறு செய்யத் தவறினால் அவர் குற்றவாளியென்று குற்றவியல் நீதிபதி தீர்ப்பு அளிக்கப்பட்டதன் பேரில் இருநூறு ரூபாய்களுக்கு அதிகப்படாத அபராதத் தண்டனைக்கும் ஆறு மாதங்களுக்கு அதிகப்படாத சிறைவாசத் தண்டனைக்கும் அல்லது இரண்டுக்கும் உட்படுவார். அப்படி ஒப்படைக்கப்படாத எல்லா உடுப்புகளையும், தளவாடங்களையும் இதர பொருள்களையும் சோதனையிட்டுக் கைப்பற்ற காவல் ஆணையர் அல்லது குற்றவியல் நீதிபதி பிடியாணை வெளியிடுவது சட்டப்படி சரியானதாகும்.

### பணிகளை அசட்டை செய்வதற்கும் மீறுவதற்கும் தண்டம்

15. தம் அலுவலில் அசட்டையாக இருப்பதற்கும் அல்லது பணியை மீறுவதற்கும் மேலே சொல்லியுள்ளபடி இயற்றப்பட்ட எந்த ஆணைகளையும் ஒழுங்குமுறை விதிகளையும் மீறியதற்காகவும், படையின் ஒவ்வொரு உறுப்பினரும் தம் வேலையிலிருந்து மேலே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளபடி தற்காலிகமாக நிறுத்தி வைக்கப் படுவதுடனும் அல்லது விலக்கப்படுவதுடனும் மேற்கொண்டு குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் குற்றவியல் நீதிபதி பேரில் ஒரு நூறு ரூபாய்களுக்கு அதிகப்படாத அபராதத் தண்டனைக்கும் அல்லது மூன்று மாதங்களுக்கு அதிகப்படாத சிறைத் தண்டனைக்கும் அல்லது இரண்டுக்கும் உட்படுவார்.

### 1859- ஆம் ஆண்டு XXIV ஆம் சட்டத்தின் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ள காவல் துறையினர் சென்னை மாநகரத்தில் காவல் அதிகாரங்களைப் பெற்றிருத்தல்.

16. 1859 ஆம் ஆண்டு XXIV ஆம் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு காவல் அலுவலரும் எச் சமயத்திலும் சென்னை மாநகரத்தில் பணியில் நியமிக்கப்படலாம். அப்படி நியமிக்கப்பட்டுள்ளபோது அவர் இந்தச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள காவல் அலுவலர்கள் போலவே அதே பணிகளையும், அதிகாரங்களையும் சலுகைகளையும் பெற்றிருப்பார். மேலும் இந்தச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டுள்ள அதே அதிகாரிக்கு உட்பட்டிருப்பார்.

### தனிக் காவல் அலுவலர் நியமிக்கப்படல்

17. காவல் ஆணையர் தம் அதிகாரத்திலேயே, யாதொரு தற்காலிகமான அவசர நிலையில் பதினெட்டு வயதிற்கும் ஐம்பத்தைந்து வயதிற்கும் இடையேயுள்ள நல்ல உடம்புள்ள ஆண் நபரைக் காவல் படைக்கு உதவியளிப்பதற்காக தனிக் காவல் அலுவலராக நியமிக்கலாம்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு காவல் அலுவலரும் மாநில அரசாங்கம் நிர்ணயிக்கக் கூடிய அப்படிப்பட்ட படிவத்தில் ஆணையரின் கையொப்பத்தின்கீழ் ஒரு சான்றிதழ் பெற வேண்டும்.

### தனிக் காவல் அலுவலரின் அதிகாரங்கள்

18. அப்படி நியமிக்கப்பட்ட ஒவ்வொரு தனிக் காவல் அலுவலரும் சாதாரணக் காவல் அலுவலர்களைப் போலவே அதே அதிகாரங்களையும் சலுகைகளையும் பாதுகாப்பையும் பெற்றிருப்பதுடன் அதே பணிகளைச் செய்வதற்கு உட்பட்டும் அதே தண்டங்களுக்கு அருகராயும் அதே அதிகாரிகளுக்குக் கீழ்ப் பணி செய்பவர்களாகவுமிருப்பார்கள்.

### தனிக் காவல் அலுவலர் பணியில் அசட்டையாயிருப்பதற்கும் பணிகளைச் செய்ய மறுப்பதற்கும் தண்டம்.

19. மேலே சொல்லப்பட்டுள்ளபடி ஒரு தனிக் காவல் அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள எந்தவொரு நபரும் போதுமான காரணமில்லாமல் அப்படிப் பணி செய்ய அசட்டையாயிருந்தாலும் அல்லது மறுத்தாலும் அல்லது அவருடைய பணிகளைச் செய்வதற்கு அளிக்கப்படக் கூடிய சட்டப்படியான ஆணை அல்லது கட்டளைக்குக் கீழ்ப் படிய மறுத்தாலும் அவர் குற்றவாளியென்று குற்றவியல் நீதிமன்றத்தால் தீர்ப்பு அளிக்கப்பட்டதன் பேரில் ஐம்பது ரூபாய்களுக்கு அதிகப்படாத அபராதத் தண்டனைக்கும் உட்படுவார்.

### மாநகரத்தில் குழப்பமுள்ள பாகங்களில் அதிகமாகக் காவல்படை வைக்க அதிகாரங்கள்.

20. அரசிதழில் அறிவிக்கப்படுவதற்கு வேண்டிய மாநில அரசாங்கத்தின் ஒப்பளிப்புடனும், அந்த மாநில அரசு கட்டளையிடக்கூடிய அப்படிப்பட்ட எனைய விதத்திலும் சாதாரணமாச

நிர்ணயிக்கப்பட்ட காவல் படைக்கு அதிகமாக மாநகரத்தில் குழப்பமும் அபாயமும் உள்ளதாய்த் தோன்றும் எந்தப் பகுதியிலும் அல்லது அதில் வசிப்பவர்களின் நடத்தையிலிருந்து அந்த இடத்தில் காவல் படையை அதிகரிப்பது தக்கது என்று அவர் கருதக்கூடிய மாநகரத்தின் எநத ஒரு பாகத்திலும் அல்லது யாதொரு தெருவிலும் காவல் ஆணையர் யாதொரு காவல் படையை அதிகமாக நியமிப்பது சட்டப்படி சரியானதாகும். அந்த அறிவிக்கையில் விவரிக்கப்பட்டுள்ள தெருவில் அல்லது மாநகரப் பாகத்தில் வசிப்பவர்கள் அந்த மேற்கொண்ட காவல் படையின் செலவை அல்லது மாநில அரசு கட்டளையிடக்கூடிய அத்தகைய செலவின் பாகத்தைக் கொடுக்கும்படி உத்தரவிடப் படுவார்கள். அங்கு வசிப்பவர்கள் செலுத்த வேண்டிய விகிதத்தை அவர்களின் முறையான வசதியையொட்டி ஆணையர் தமக்குத் தோன்றியபடி மதிப்பிடுவார்

### கூடுதலான காவல் அலுவலர்களை நியமிக்க அதிகாரங்கள்.

21. (1) யாதொரு நபரின் விண்ணப்பத்தின் பேரிலும் அவருடைய செலவிலும் மாநில அரசாங்கம், அமைதியை நிலைப் படுத்தவும், யாதொரு இடத்திலும் ஒழுங்கைக் காக்கவும், யாதொரு குறிப்பிடப்பட்ட வகுப்புக் குற்றங்கள் சம்மந்தமாய் இந்தச் சட்டத்தின் அல்லது வேறு எந்தச் சட்டத்தில் ஏற்பாடுகளை வற்புறுத்தவும், அவர்கள் தக்கது என்று நினைக்கக் கூடிய அப்படிப் பட்ட தகுதியில் அல்லது தரத்தில், ஏதாவதிருந்தால் அப்படிப் பட்ட சம்பளத்திலும், காலத்திற்கும், கூடுதலாக காவல் அலுவல் களை நியமிக்கலாம்.

ஆயினும், விண்ணப்பதாரரிடமிருந்து அல்லது அவர் பிரதி நிதியிடமிருந்து அறிவிப்பு எழுத்து மூலமாய் வந்த பிறகு ஒரு மாத காலத்திலும் அல்லது மாநில அரசாங்கம் நிர்ணயிக்கக்கூடிய அதற்குக் குறைந்த காலத்திலும் மாநில அரசு அப்படி நியமிக்கப் பட்ட காவல் அலுவலர்களை நிறுத்திவிட வேண்டும்.

(2) அவ்வாறு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு காவல் அலுவலரும்—

(அ) மாநில அரசாங்கம் நிர்ணயிக்கக் கூடிய அத்தகைய படிவத்தில் ஒரு சான்றிதழ் காவல் ஆணையர் கையொப்பத்தின் கீழ்ப் பெற வேண்டும்.

(ஆ) (அ) கூற்றில் குறிப்பிடப்பட்ட சான்றிதழில் சிறப்பாகச் சொல்லப்பட்டுள்ள அந்த வரிசையைப் போன்ற வரிசையில் உள்ள சாதாரணக் காவல் அலுவலரின் அதிகாரங்களையும், பணிகளையும் பெற்றிருப்பார்; அவைகளைச் செலுத்துவதில் அல்லது செயலாற்றுவதில் அப்படிப்பட்ட அலுவலரைப் போலவே அதே பாதுகாப்பும், சலுகைகளும் பெற்றிருப்பதுடன் அதே மாதிரியான தண்டங்களுக்கும் அதே அதிகாரங்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பதற்கும் உட்பட்டவராவார்.

### சேரவேண்டிய பாகங்களை வசூலித்தல்.

22. அடுத்து முன் இரண்டு பிரிவுகளின்கீழ் செலுத்தப்பட வேண்டிய எல்லாப் பணத் தொகைகளும் ஒரு தகுதியுள்ள நீதிமன்றத்தில் செய்யும் சிவில் வழக்காலும் அல்லது ஒரு குற்றவியல் நீதிபதியால் பிடியாணையின்கீழ் அந்தப் பாக்கிதாரருடைய சரக்குகளை ஜப்தி செய்து, விற்பனை செய்வதாலும் வசூலிக்கப்படும்.

### காவல் அலுவலர்களின் பணிகள்.

23. இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக ஒவ்வொரு காவல் அலுவலரும், எப்போதும் அலுவலில் உள்ளவராகவே கருதப்படுவார். அவர் இந்தச் சட்டத்தின்கீழ் செய்யும் பணிகளைத் தவிர வேறு எந்த அலுவலிலும் ஆணையரின் எழுத்து மூலமான அனுமதியில்லாமல் ஈடுபடக் கூடாது. குற்றங்களையும், அமைதியை நிலைநாட்டவும், ஒழுங்கற்ற அல்லது ஐயத்திற்குட்பட்ட நபர்களைக் கைது செய்யவும், குற்றவாளிகளைக் கண்டுபிடித்து நீதிமன்றத்திற்குக் கொண்டு வரவும், உரிமைக் கோரிக்கையற்ற சொத்துக்களைக் கைவசம் பொறுப்பேற்றுக்கொள்ளுதலும்; திரியும் கால்நடைகளைப் பிடித்துப் பவுண்டில் (பட்டியில்) அடைக்கவும், பொது அமைதியைப் பாதிக்கும் தகவலைச் சேகரித்து அளிக்கவும்; தாமதமின்றி தமக்குச் சட்டப்படி அளிக்கப்பட்ட ஆணைகளுக்கும் பிடியாணைகளுக்குக் கீழ்ப்படிந்து நிறைவேற்றவும், ஆகியவற்றில் தமது சிறந்த முயற்சியையும், திறமையும் பயன்படுத்துவது அவரது கடமையாகும். இந்தப் பிரிவில் சொல்லப்பட்ட எந்த நோக்கங்களுக்கும் ஒவ்வொரு காவல் அலுவலரும் பிடியாணை இல்லாமல் யாதொரு மதுபானக் கடையிலும், சூதாடும் இடத்திலும் அல்லது ஒழுங்கற்ற நல்ல நடத்தை (கண்டிப்பில்) யில்லாத நபர்கள் தங்கும் இதர இடங்களிலும் உள் நுழைந்து ஆய்வு செய்வது சட்டப்படி சரியானதாகும்.

காவல் அலுவலரும், விலங்குகளுக்குக் கொடுமை செய்வதைத் தடுக்கும் சங்கத்தின் முகவரும் குற்றம் செய்வதைப் பார்த்தால் பிடியாணையில்லாமல் கைது செய்யலாம்.

24. (1) எந்தக் காவல் அலுவலரும் இந்தச் சட்டத்தால் தண்டிக்கப்படக்கூடிய யாதொரு குற்றத்தைத் தம் பார்வையில் செய்யும் எந்த நபரையும் பிடியாணையில்லாமல் கைது செய்யலாம்.

ஆயினும் 71 ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கப்படக் கூடிய குற்றம் சம்மந்தமாய் அப்படிப்பட்ட கைது செய்தலை காவல் உதவி ஆய்வாளர் வரிசைக்குக் குறைந்த எந்தக் காவல் அலுவலரும் செய்யக் கூடாது.

(2) மாநில அரசாங்கத்தாரால் இதற்காகத் தனிப்பட அதிகாரம் அளிக்கப்பட்ட விலங்குக் கொடுமையைத் தடுக்கும் ஒரு சங்கத்தின் யாதொரு முகவரும் தம் பார்வையில் 53 ஆம் பிரிவின்கீழ் தண்டிக்கப்படக்கூடிய யாதொரு குற்றத்தைச் செய்பவரைப் பிடியாணையில்லாமல் கைது செய்யலாம்.

(3) அவ்வாறு கைது செய்யப்பட்ட எந்த நபரையும் தேவையானாலும் தேவையானபோதும் அவர் ஒரு குற்றவியல் நீதிபதி முன்னால் வருவதற்கு பிணையாட்களுடனோ அல்லது இல்லாமலோ ஒரு பிணைப் பத்திரம் எழுதித் தருவதின்மேல் அந்த முகவர் அவரை விடுவிக்க அதிகாரமுள்ளவராவார்.

(4) இந்தப் பிரிவின்கீழ் செய்யப்பட்ட யாதொரு கைதுக்கும் பெறப்பட்ட எந்தப்பிணைப் பத்திரத்திற்கும், அவை 1898 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித்தொகுப்பின்கீழ் செய்யப்பட்டவை போலவே அத்தொகுப்பின் ஏற்பாடுகள் பொருந்துவதாகும்.

### தனிப்பட்ட நபரால் குற்றவாளிகள் கைது செய்யப்படல்.

25. எவரொருவர் மற்றொருவரின் உடல் அல்லது சொத்து பாதிக்கப்படக் கூடிய வகையில் ஒரு குற்றம் செய்கிறாரோ, அவருடைய பெயரும், முகவரியும் தெரிந்திராவிட்டால் அவ்வாறு பாதிக்கப்பட்ட அல்லது சம்பந்தப்பட்ட சொத்தின் பொறுப்பிலுள்ள நபராலும் அல்லது அந்த நபருக்கு உதவியாகவுள்ள எந்த நபராலும் அவர் கைது செய்யப்படலாம் அவர் தம் பெயரையும் முகவரியையும் தெரிவித்து அவ்வாறு தெரிவித்த

பெயரும் முகவரியும் உண்மையானவை என்று திருப்திப்படுத்தும் வரையிலும் அல்லது அவர் ஒரு காவல் அலுவலரின் காவலில் ஒப்படைக்கப்படும் வரையிலும் நிறுத்தி வைக்கப்படலாம்.

### சிலவற்றில் பிடியாணையில்லாமல் கள்ளச் சொத்தைத் தேடுவதற்கு அதிகாரங்கள்.

26. ஒரு குடியிருப்பு வீட்டில் அல்லது வேறு இடத்தில் திருட்டுச் சொத்து மறைக்கப்பட்டிருக்கிறது அல்லது வைக்கப்பட்டிருக்கிறது என்று ஒரு சோதனைப் பிடியாணை பெறப்படுவதற்குள் அது அப்புறப்படுத்தப்படலாம் என்று சந்தேகிக்க நியாயமான காரணமுள்ள காவல் அலுவலர் ஒருவர் அவர் காவலர் வரிசைக்கு மேற்பட்ட தகுதியுடையவராயிருந்தால் அத்தகைய வீட்டை அல்லது இடத்தை 1882 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பில் சோதனைகள் சம்பந்தமாகவுள்ள பொது ஏற்பாடுகளுக்குட்பட்டு சோதனையிடலாம்.

### ஒரு குற்றம் செய்யப்பட்டுள்ளதாக சந்தேகப்படும்படியான சொத்தைக் கைப்பற்றல்.

27. யாதொரு காவல் அலுவலரும் யாதொரு நபர் வசம் உள்ள சொத்து அல்லது பொருள், ஒரு குற்றம் செய்யப்பட்டதன் விளைவாக அவர் வசம் இருக்கலாம் என்று நியாயமான சந்தேகம் ஏற்பட்டால் அப்படிப்பட்ட நபரிடமுள்ள அதேச் சொத்தை அல்லது பொருளைக் கைப்பற்றலாம். அப்படிப்பட்ட கைப்பற்றல் உடனடியாகக் காவல் ஆணையருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். அதன் மேல் ஆணையர் அந்தச் சொத்தைப் பொறுப்பில் வைப்பது பற்றியும் அல்லது தாக்கல் செய்வது பற்றியும் தமக்குச் சரியானதென்று தோன்றும் அத்தகைய ஆணையை இடுவார்.

### அடகு பிடிப்பவர்கள் முதலியவர்கள் கள்ளச் சொத்து அடகுக்கு அல்லது விற்பனைக்குத் தம்மிடம் வாய்பெற்றால் அதைப் பற்றித் தகவல் கொடுக்க வேண்டும்.

28. எந்தக் காவல் அதிகாரியும் யாதொரு அடகு பிடிப்பவருக்கு பழைய பொருள்கள் விற்பனையாளருக்கு அல்லது உலோகங்களில் வேலை செய்பவருக்கு களவு போனதாக நம்பப்பட்ட யாதொரு சொத்துக்களின் பட்டியலைக் கொடுக்கலாம். அதன்மேல், அப்படிப் பட்ட பட்டியலில் காணப்பட்ட விவரத்தைக் கொண்ட யாதொரு

பொருளும் தமக்கு அடகுக்காக அல்லது விற்பனைக்காக அல்லது வேறு விதமாக வந்த போது, அதைக் கொண்டு வரும் நபரின் பெயரையும் முகவரியையும் விசாரிப்பதும், அந்தப் பொருளைக் கைப்பற்றி நிறுத்தி வைப்பதும், உடனடியாக அப்படிப்பட்ட பொருள் தம்வசம் அளிக்கப்பட்டதையும் அப்படி அளித்தவர் கொடுத்த பெயரையும் முகவரியையும், மிகவும் சமீபத்திலுள்ள காவல் நிலையத்திற்கு தெரிவிக்க வேண்டியது. மேலே சொல்லப்பட்ட அத்தகைய அடகு பிடிப்பவர் வியாபாரி அல்லது தொழிலாளியின் கடமையாகும். தக்க காரணமின்றி, இந்தப் பிரிவின் கட்டளைகளுக்கு இணங்கி நடக்கத் தவறும் அடகு பிடிப்பவரும் வியாபாரியும் அல்லது தொழிலாளியும், குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டதன்பேரில் அப்படிப்பட்ட ஒவ்வொரு குற்றத்திற்கும் ஐம்பது ரூபாய்களுக்கு அதிகப்படாத ஒரு அபராதத் தண்டனைக்குட்படுவார். மேலே சொல்லப்பட்ட அத்தகைய அடகு பிடிப்பவர் அல்லது வியாபாரி அல்லது பணியாள் மேலே சொல்லப்பட்ட யாதொரு பொருளைக் கொடுக்கின்ற யாதொரு நபரையும், காவல் படையினர் வரும் வரையில் நிறுத்தி வைக்கவும் செய்யலாம்.

### அலைந்து திரிகின்ற நாய்களைக் கொல்லக் கூடிய காலங்களை நிர்ணயிப்பதற்கான அதிகாரம்.

29. காவல் ஆணையர் முக்கியமான காவல் நிலையங்களில் ஒட்டப்பட வேண்டியதும் ஒரு பொதுச் செய்தித் தாளில் வெளியிடப்பட வேண்டியதுமான எழுத்து மூலமான ஆணையில் அலைந்து திரியும் நாய்களையும் பட்டையில்லாத நாய்களையும் எந்தெந்த காலத்திற்குள் கொல்லலாம் என்று அப்போதைக்கப்போது உறுதி செய்யலாம்.

### உயில் எழுதாமல் இறந்து போகிறவர்களுடைய இருநூறு ரூபாய்கள் மதிப்பிற்குக் குறைந்த அசையும் பொருளைக் கைப்பற்றிப் பொறுப்பேற்றுக் கொள்வதற்கும் அதற்கு உரிமையுள்ள நபருக்கு ஒப்படைப்பதற்குமான அதிகாரம்.

30. சென்னை மாநகரத்தில் இருநூறு ரூபாய் மதிப்பிற்குக் குறைந்த அசையும் பொருளை விட்டு விட்டு யாதொரு நபர் உயில் எழுதாமல் இறந்து விட்டபோது, அந்தச் சொத்துக் காவல் படையினால் பொறுப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதற்கு உரிமை உள்ளவராகத் தமக்குத் தோன்றும் யாதொரு நபருக்கும்

தாம் தக்கது என்று நினைக்கும் நிபந்தனைகளின் பேரில் யாதொரு விருப்புறுதி மெய்ப்பிதழ், நிர்வாக உரிமைப் பத்திரம் அல்லது சான்றிதழ் அல்லது இதர உரிமைக்கான முடிவான வேறு சான்று இல்லாமலே காவல் ஆணையர் அந்தச் சொத்தை ஒப்படைக்கும்படி ஆணையிடுவது சட்டப்படி சரியானதாகும். அப்படி ஒப்படைப்பது அந்த ஆணையரையும் அரசாங்கத்தையும் அந்தச் சொத்து சம்பந்தமாய் எல்லாப் பொறுப்பிலிருந்தும் முழுமையாய் விடுவிப்பதாகும்.

### 1882-ம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பின் சில ஏற்பாடுகளைப் பொருந்த வைத்தல்.

31. 1882-ம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பின் 523, 524, 525-ம் பிரிவுகளின் ஏற்பாடுகள், சாத்தியமாகக் கூடிய வரையில் காவல் படையினரால் கைப்பற்றப்பட்ட அல்லது பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்ட எல்லாச் சொத்துக்கும் பொருந்தும்.

காவல் ஆணையர் மூல அளவு எடைகளும், அளவுகளும் வைத்திருக்க வேண்டும்.

32. காவல் ஆணையர் தம் அலுவலகத்தில், மாநில அரசாங்கத்தால் அவ்வப்போது, குறிப்பிடப்படும் அல்லது சரியென்று விளம்பரப்படுத்தப்படும் அப்படிப்பட்ட மூல அளவு எடைகளையும் அளவுகளையும் மூல அளவுகளுடன் ஒத்தில்லாத போது எடைகளும் அளவுகளும் பொய்யானவை என்று கொள்ளப்படும். இந்தியக் குற்றத் தண்டனை விதித் தொகுப்பின் XIII ஆம் அத்தியாயத்தின்கீழ் ஒரு குற்றவாளியென்று தீர்ப்புப் பெற்றதன் பேரில் அந்தக் குற்றச் சாட்டிற்குச் சம்பந்தப்பட்ட எடைகளும், அளவுகளும் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப்படும்.

### எடைகள் முதலியவைகளை ஆய்வு செய்ய கடைகளில் நுழைய காவல் படையின் அதிகாரம்.

33. ஒரு காவலர் வரிசைக்கு மேற்பட்ட யாதொரு காவல் அலுவலரும் அவைகளில் வைக்கப்பட்டுள்ள அல்லது பயன்படுத்தப் படுகின்ற எடைகளையும், அளவுகளையும், எடைக் கருவிகளையும் அளவுக் கருவிகளையும் ஆய்வு செய்யும் நோக்கத்திற்காக யாதொரு கடைக்குள்ளும் அல்லது இடத்திற்குள்ளும் நுழையலாம். மேலும் தாம் பொய் என்று நம்பக் காரணமுள்ள யாதொரு எடையையும்,

அளவையும் அல்லது எடை போடும் கருவியையும் அல்லது அளப்பதற்கான கருவியையும் கைப்பற்றலாம்.

**பொதுமக்கள் கூடுமிடங்களுக்கு உரிமம் கொடுத்தல்.**

34. ஐந்நூறு சதுர அடிகளை அல்லது அதற்கு மேற்பட்ட பரப்புகள் உள்ள எந்த ஒரு வளைக்கப்பட்ட இடமும் அல்லது கட்டடமும், காவல் ஆணையரிடமிருந்து உரிமம் பெறுமல் ஒரு பொது கேளிக்கை இடமாகவோ அல்லது பொது மக்கள் வந்து சேருமிடமாகவோ பயன்படுத்தப்படக் கூடாது.

**உணவு, விடுதிகள், ஓட்டல்கள், மதுக்கடைகள் சிலம்பப் பயிற்சிப் பள்ளிகள் முதலியவைகள் உரிமம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும்.**

35. யாதொரு வளைக்கப்பட்ட இடமும், அல்லது கட்டடமும் ஒரு சாப்பிடுமிடமாகவோ, காபிக் கடையாகவோ, உணவு வசதியில்லமாகவோ, தங்குமிடமாகவோ, உணவகமாகவோ, மதுக் கடையாகவோ, ஒயின், பீர் அல்லது சாராவி கடையாகவோ சாராய அல்லது கள்ளுக் கடையாகவோ உடற்பயிற்சி அல்லது சிலம்பப் பயிற்சி இடமாகவோ அல்லது யாதொரு போதையுண்டாக்கும் மருந்தை அல்லது மதுவை விற்பதற்கோ அல்லது அருந்துவதற்கோ, காவல் ஆணையரிடமிருந்து ஒரு உரிமம் பெறுமல் பயன்படுத்தக் கூடாது. ஆயினும், இந்தப் பிரிவில் உள்ளது எதுவும் யாதொரு மருந்தும் அல்லது பொருளும் நியாயமான அளவில் மருத்துவ நோக்கங்களுக்காக விற்பனை செய்வதற்கும் அல்லது மாநில அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப் பட்டுள்ள அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரு கல்வி நிலையத்தைச் சேர்ந்த யாதொரு உடற்பயிற்சி நிலையத்திற்கும் அல்லது சிலம்பப் பயிற்சிப் பள்ளிக்கும் பொருந்தாது.

34, 35-ம் பிரிவுகளின்கீழ் உரிமம் அளிப்பதற்கான நிபந்தனைகள்.

36. அடுத்து முன் இரண்டு பிரிவுகளின்கீழ் உரிமங்கள், மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிற்கும், கட்டளைக்குமுட்பட்டு, காவல் ஆணையால் தாம் குறிப்பிடக்கூடிய நிபந்தனைகளுக்குட் பட்டும் உரிமத்தில் குறிப்பிடும் ஒரு ஆண்டுக்கு அதிகப்படாத காலத்திற்கும் அளிக்கப்படலாம். ஆயினும் சுங்கத் தீர்வையை ஒழுங்குபடுத்துவதற்காக அப்பொழுது அமுலில் உள்ள யாதொரு சட்டத்தின்கீழ் விற்பனைக்கு உரிமம் தேவைப்படும் யாதொரு

மதுபானம் அல்லது மருந்து சம்மந்தமாய், அத்தகைய சட்டத்தின்கீழ் உரிமம் வைத்துள்ள நபர்களுக்கு மட்டும் ஆணையரால் உரிமம் அளிக்கப்பட வேண்டும். இது, அத்தகைய உரிமம் செல்லக் கூடியதாயிருக்கும்வரையில் மட்டுமே, அமுலில் இருக்கும்.

34 அல்லது 35-ம் பிரிவின்படி உரிமம் பெறத் தவறுவதற்குத் தண்டனை.

*37.* (1) எவரொருவர் 34 அல்லது 35-ம் பிரிவின்கீழ் உரிமம் தேவைப்படும் யாதொரு வளைக்கப்பட்ட இடத்தை அல்லது கட்டிடத்தை அதில் சொல்லப்பட்டுள்ளபடி ஒரு உரிமம் பெருமல் வைத்து நடத்துகிருரோ அல்லது பயன்படுத்துகிருரோ அல்லது வைத்து நடத்தவோ அல்லது பயன்படுத்தவோ அனுமதிக்கிருரோ அவர் குற்றவாளியென்று தீர்ப்பு அளிக்கப்பட்டதன் பேரில் அத்தகைய இடம் அல்லது கட்டடம் அவ்வாறு பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு நாளுக்கும் ஐம்பது ரூபாய்களுக்கு மேற்படாத அபராதத்திற்குட்படுவார்.

(2) எவரொருவர்:—

(அ) யாதொரு வீட்டின், அறையின் அல்லது இடத்தின் சொந்தக்காரராய் அல்லது தன் வசம் வைத்திருப்பவராய் அல்லது பயன்படுத்துபவராயிருந்து அதை ஒரு குதிரைப் பந்தயத்திற்காகத் திறந்து காட்டியிருக்கிருரோ, வைத்திருக்கிருரோ அல்லது பயன்படுத்துகிருரோ அல்லது

(ஆ) அப்படிப்பட்ட யாதொரு வீட்டின், அறையின் அல்லது இடத்தின் சொந்தக்காரராய் அல்லது அவற்றைத் தன் வசம் வைத்திருப்பவராயிருந்து, தெரிந்தோ அல்லது வேண்டுமென்றே அதை வேறெரு நபர் மேலே சொல்லப்பட்டுள்ள நோக்கத்திற்காகத் திறப்பதற்கு, அனுபவிப்பதற்கு, வைத்திருப்பதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு அனுமதிக்கிருரோ, அல்லது

(இ) மேலே சொல்லப்பட்டுள்ள நோக்கத்திற்காகத் திறந்து விடப்படும் அனுபவிக்கப்பட்டும், வைக்கப்பட்டும் அல்லது பயன்படுத்தப்பட்டும் உள்ள அத்தகைய வீடு அல்லது அறை அல்லது இடத்தின் பொறுப்பை அல்லது மேலாண்மையை வகித்திருக்கிருரோ அல்லது அவற்றில் வைத்து நடத்தும் தொழிலுக்கு எந்த விதத்திலும் உதவி செய்கிருரோ அல்லது

(ஈ) அப்படிப்பட்ட விட்டிற்கு அல்லது அறைக்கு அல்லது இடத்திற்கு அடிக்கடி வரும் நபர்களுடன் ஒரு குதிரைப் பந்தயத்தின் மேல் சூதாடுவதற்காக பணம் அல்லது முன்பணம் அளிக்கிறாரோ அவர் குற்றவாளியென்று தீர்ப்பு அளிக்கப்பட்டதன் பேரில் ஏழு மாதங்கள்வரை சிறைத் தண்டனை பெறவும் அல்லது ஒரு ஆயிரம் ரூபாய்கள்வரை தண்டம் செலுத்தவும் அல்லது இரண்டும் செய்யவும் தண்டிக்கப்படுவதற்குரியவராவார்.

ஆயினும், இதற்கு மாறாகச் சொல்லப்படுவதற்குரிய சிறந்த காரணங்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பில் காணப்படாவிட்டால், அப்படிப்பட்ட சிறைத் தண்டனை ஒரு மாதத்திற்கு குறைவாகவும், அபராதம் ஐந்நூறு ரூபாய்களுக்கு குறைவாகவும் இருக்கக் கூடாது.

(3) (2)-ம் உட்பிரிவில் சொல்லப்பட்டுள்ள யாதொரு வீட்டில், அறையில் அல்லது இடத்தில், எவரொருவர் ஒரு குதிரைப் பந்தயத்தில் சூதாடுவதாக அல்லது அப்படிப்பட்ட பந்தயத்தில் சூதாடுவதற்காக வந்திருப்பதாகக் கண்டுபிடிக்கப் பட்டால், அவர் குற்றவாளியென்று தீர்ப்பு அளிக்கப்பட்டதன் பேரில் ஐந்நூறு ரூபாய்கள் வரை தண்டம் செலுத்த அல்லது ஒரு மாதம் வரை சிறைத் தண்டனை பெற அல்லது இரண்டும் செய்யத் தண்டிக்கப்படுவதற்குரியவராவார்.

குதிரைப் பந்தயத்தின் மேல் சூதாட்டம் நடந்து கொண்டிருக்கும்போது அத்தகைய வீட்டில் அறையில் அல்லது இடத்தில் காணப்படும் எவரும், அதற்கு மாறாக மெய்ப்பிக்கப் படும் வரையில், ஒரு குதிரைப் பந்தயத்தின் மேல் சூதாடும் நோக்கத்துடனேயே அவ்விடம் இருந்ததாக வைத்துக் கொள்ளப் பட வேண்டும்.

(4) எவரொருவர் ஒரு பொதுத் தெருவில் அல்லது வழியில் அல்லது பொது மக்கள் வந்து போகும் அல்லது வந்து போக அனுமதிக்கப்படும், யாதொரு இடத்திலும் ஒரு குதிரைப் பந்தயத்தின் மேல் சூதாடக் கண்டுபிடிக்கப்பட்டால் அவர் குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் முந்நூறு ரூபாய்கள் வரை அபராதத் தண்டனையும் அல்லது மூன்று மாதங்கள் வரை சிறைத் தண்டமும் அல்லது இரண்டும் பெறத் தண்டிக்கப்படுவதற்குரியவராவார்.

### சட்டத்திற்கு விரோதமாகப் பயன்படுத்துவதாக நம்பப்படும் உரிமம் உள்ளதும் உரிமம் இல்லாததுமான இடங்களில் நுழைந்து ஆய்வு செய்ய அதிகாரம்.

38. காவல் ஆணையர் எழுத்து மூலமான ஆணையால், காவலர் வரிசைக்கு உயர்ந்த எந்தக் காவல் அலுவலருக்கும் தேவைப்படக் கூடிய அத்தகைய உதவியுடன் 26-ம் பிரிவின்கீழ் உரிமம் அளிக்கப்பட்டுள்ள யாதொரு அடைப்பு இடத்தையும் அல்லது கட்டடத்தையும் அவ்விடம் வரக் கூடியவர்களைச் சேர்த்துக் கொள்ளும் பொருட்டு திறக்கப்பட்டிருக்கும் எந்த நேரத்திலும் நுழையவும், ஆய்வு செய்யவும் அதிகாரமளிக்கலாம். மற்றும் தம்முடைய காரணங்களை எழுத்தில் பதிவு செய்த பிறகு அப்படியே, அப்படிப்பட்ட அலுவலருக்கு 34 அல்லது 35 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுவதாக ஆணையர் நம்புவதற்குக் காரணமுள்ள உரிமம் அளிக்கப்படாத யாதொரு இடத்தில் நுழையவும், ஆய்வு செய்யவும் அதிகாரமளிக்கலாம்.

### விதிகள் செய்ய அதிகாரம்.

39. காவல் ஆணையர், பொதுக் கேளிக்கை நடக்கும் அல்லது பொது மக்கள் வந்து கூடும் எல்லா இடங்களிலும் ஒழுங்கும் பண்பும் நிலவும்படி உறுதிப்படுத்திக் கொள்வதற்கும், 34 ஆம் அல்லது 35-ம் பிரிவில் சொல்லப்பட்டுள்ள இடங்கள் எந்தெந்தக் காலத்தில் திறந்து வைக்கப்படலாம் அல்லது பயன்படுத்தப் படலாம் என்பதற்கும் விதிகளை இயற்றலாம். அவ்வப்போது அத்தகைய விதிகளை ரத்து செய்யவோ அல்லது மாற்றவோ செய்யலாம்; அத்தகைய விதிகளை அல்லது 36-ம் பிரிவின்கீழ் அளிக்கப்பட்ட உரிமத்தின் நிபந்தனைகளை மீறியபோது, அத்தகைய இடங்களை மூடிவிடும்படி ஆணையிடலாம். அந்த ஆணை அமுலிலுள்ளபோது அவ்வாறு மூடுவதற்கு ஆணையிடப்பட்ட இடங்கள் உரிமை இல்லாத இடங்களாகக் கருதப்படும்.

### ஆணையின் பிரதி சொந்தக்காரருக்கு அளிக்கப்படல்.

40. மேற்கண்ட பிரிவின் கீழ் செய்யப்பட்ட ஆணையின் ஒரு பிரதி அப்படிப்பட்ட இடத்தின் சொந்தக்காரருக்கு, அல்லது அதன் அனுபோகதாரருக்கு அல்லது வைத்து நடத்துபவருக்குச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்குப் பிறகு அந்த ஆணைக்குக் கீழ்ப்படியாமல் யாதொரு செயலைச் செய்தாலும் அல்லது செய்ய

அனுமதித்ததாலும் அவர், குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப் பட்டதன் பேரில் மூன்று மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனையும் அல்லது அபராதத் தண்டனையும் அல்லது இரண்டும் பெறத் தண்டிக்கப்படுவதற்குரியவராவார்.

**கேளிக்கைகள் நடத்தப்படும் சில இடங்களில் புகைப்பிடித்தலைத் தடுத்தல்.**

ல. அ. (1) பொது மக்கள் பணம் கொடுத்தோ அல்லது கொடுக்காமலோ அனுமதிக்கப்படும் திரைப்படக் காட்சி, நடனம் அல்லது நாடகம் உட்பட எந்தக் கேளிக்கையும் ஒரு அடைப்பு இடத்தில் அல்லது கட்டடத்தில் நடத்தப்பட்டால் (2) ஆம் உட்பிரிவில் விளக்கப்பட்டுள்ளபடி தடை செய்யப்பட்டிருக்கும் காலத்தில் எவரொருவரும்,

(அ) கேளிக்கையோடு சேர்ந்த ஒரு பாகமாகவல்லாத போது, மேடையின் பேரிலோ, அல்லது

(ஆ) கூடத்திலோ, அதாவது அந்த அடைப்பு இடத்தில் அல்லது கட்டடத்தில் பொது மக்கள் இருக்க வசதி செய்யப் பட்டுள்ள இடத்திலோ,

புகைப்பிடிக்கக் கூடாது.

ஆயினும், மாநில அரசு சென்னை தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையால் இந்த உட்பிரிவின் ஏற்பாடுகளிலிருந்து எந்த வகுப்புக் கேளிக்கைகளுக்கும் விலக்கு அளிக்கலாம்.

(2) (1) ஆம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக 'தடை செய்யப்பட்டுள்ள காலம்' என்பது மாநில அரசு தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையை கேளிக்கைகளுக்குப் பொதுவாகவும அல்லது எந்த வகுப்புக் கேளிக்கைகளுக்கும் இதற்காகக் குறிப்பிடும் காலத்திற்குள் வரும் அந்தக் கேளிக்கை ஆரம்பிக்கப் படுவதற்கு முப்பது நிமிடங்கள் முன்பிருந்து அந்தக் கேளிக்கை முடிவடையும் வரையில் உள்ள காலத்தின் பாகம் என்று பொருள்படும்.

(2) இந்தப் பிரிவின் ஏற்பாடுகளை மீறும் எந்த நபரும், யாதொரு காவல் அலுவலரால் அந்த அடைப்பு இடத்திலிருந்து அல்லது கட்டடத்திலிருந்து ஒரு விசாரணையுமில்லாமல் வெளி யேற்றப்படுவதோடு ஐம்பது ரூபாய் வரை அபராதத் தண்டனைக்கும் உட்படுவார்

(3) இந்தப் பிரிவின் ஏற்பாடுகளை மீறும் எந்த நபரும், அந்தக் கேளிக்கையில் கலந்து கொள்ளுவதற்கு செலுத்திய யாதொரு பணத்தைத் திரும்பப் பெறவும் அல்லது வேறு யாதொரு ஈட்டிற்கும் உரிமையுடையவராகமாட்டார்.

**பொதுத் தெருக்களில் ஊர்வலங்களை ஒழுங்குபடுத்தல் அமைதிக் காவல் முதலியவைகளுக்கான அதிகாரம்.**

41. காவல் ஆணையர் அல்லது அவருடைய ஆணைக்குட்பட்டு, தலைமைக் காவலர் வரிசைக்கு மேற்பட்ட எந்த ஒரு காவல் அலுவலரும் சந்தர்ப்பத்திற்கேற்றபடி, பொது இடங்களில் எல்லாக் கூட்டங்களையும், ஊர்வலங்களையும் செல்வதையும் சரியானபடி நடத்தக் கட்டளையிடலாம். அப்படிப்பட்ட ஊர்வலங்கள் செல்லக் கூடிய வழிகளையும், காலங்களையும் குறிப்பிடலாம்; பொது இடங்களில் அமைதியை ஏற்படுத்தலாம் அத்தகைய கூட்டங்களால் அல்லது ஊர்வலங்களால் ஏற்படக் கூடிய தடங்கல்களைப் பொதுத் தொழுகைக் காலத்தில், தொழுதல் நடக்கும் இடங்களுக்குப் பக்கத்திலும், பொது இடங்களில் அதிகக் கூட்ட நெருக்கடி ஏற்படும்போது அல்லது, தடங்கல் ஏற்படுவதற்குரியதாயிருக்கும்போது அத்தகைய தடங்களைத் தவிர்க்கலாம். பொது இடங்களில் வாத்தியங்களை அல்லது ஒலி பெருக்கிகளை உபயோகப்படுத்துவதைத் தடுக்கவோ அல்லது உரிமம் வழங்கி ஒழுங்குபடுத்தவோ செய்யலாம். காவல் ஆணையர் எந்தவொரு கூட்டத்தையும் அல்லது ஊர்வலத்தையும், அப்படித் தடுப்பது பொது அமைதியை அல்லது பொதுப் பாதுகாப்பை நிலைநிறுத்தத் தேவையானது என்று கருதினால், அவ்வாறு தடைசெய்யலாம்; அவ்வாறு வெளியிடப்பட்ட மேலே சொல்லப் பட்ட ஆணையை எதிர்க்கும் அல்லது அதற்குக் கீழ்ப்படியாமலிருக்கும் அல்லது அப்படிப்பட்ட ஒரு உரிமத்தின் நிபந்தனைகளை மீறும் ஒவ்வொரு நபரும், குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப் பட்டதன் பேரில் நூறு ரூபாய்களுக்கு மேற்படாத அபராத தண்டனைக்குட்படுவார்.

**பொதுச் சூதாடும் இடத்தில் நுழையக் காவல் ஆணையர் பிடியாணை அளிக்கலாம்.**

42. (1) காவல் ஆணையை யாதொரு இடமும், ஒரு பொதுச் சூதாடும் கூடமாகப் பயன்படுத்தப்படுகிறது என்று நம்புவதற்குக் காரணமிருந்தால், அவர் தம் பிடியாணையால் காவலர் வரிசைக்கு

மேற்பட்ட எந்தவொரு காவல் அலுவலருக்கும் தேவையாகக் காணப்படக் கூடிய உதவியுடன், இரவிலோ அல்லது பகலிலோ தேவையானல் வலுக்கட்டாயமாக அத்தகைய எந்த ஒரு இடத்திலும் உள் நுழைந்து அவ்விடம் காணப்படும் எல்லா நபர்களையும் கைது செய்யவும் அவ்விடத்தில் காணப்படும் எல்லாச் சூதாட்டக் கருவிகளையும், எல்லா பணங்களையும் பிணைப் பத்திரங்களையும் சூதாட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படுவதற்காக வைக்கப்பட்டுள்ளதாக நியாயமாக சந்தேகப்படக் கூடிய மதிப்புள்ள பொருள்களையும் கைப்பற்றவும்; மேலும் அப்படிப்பட்ட இடத்தின் எல்லாப் பாகங்களையும் அவ்விடத்தில் காணப்பட்ட எல்லா நபர்களையும் சோதனையிடவும் அதிகாரம் அளிக்கலாம்.

(2) காவலர், (1) ஆவது உட்பிரிவின் கீழ் ஒரு பிடியாணை அளிப்பதற்குப் பதிலாகத் தாமே அப்படிப்பட்ட பிடியாணையின் கீழ் செயலாற்றப்படக் கூடிய எல்லா அதிகாரங்களையும் அல்லது சில அதிகாரங்களைச் செலுத்தலாம்.

**முன் பிரிவின் கீழ் சோதனையில் காணப்பட்ட சீட்டுகள், பகடைகள் முதலியவை, அந்த இடம் ஒரு பொதுச் சூதாட்டக் கூடம் என்பதற்குச் சான்ருகும்.**

43. அடுத்து முன் பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் நுழைந்த அல்லது சோதனையிட்ட எந்த ஒரு இடத்திலும், அல்லது அங்கு காணப்பட்ட யாதொரு நபரிடத்திலும் காணப்பட்ட சீட்டுகள், பகடைகள், சூதாட்ட மேசை அல்லது துணி, பலகை அல்லது இதர சூதாட்டக் கருவிகள், அந்தக் காவல் அலுவலரால் அல்லது அவருடைய உதவியாளர்களில் எவரும் உண்மையில் ஒரு ஆட்டமும் பார்க்காவிட்டாலும் கூட, அந்த இடம் ஒரு பொதுச் சூதாட்டக் கூடமாகப் பயன்படுத்தப்படுகிறது என்பதற்கும் அவ்விடத்தில் காணப்பட்ட நபர்கள் சூதாடும் நோக்கத்திற்காக அவ்விடம் இருந்தார்கள் என்பதற்கும் சான்ருகும்.

**பணயத்திற்காக ஆடப்பட்டது என்று மெய்ப்பிப்பது தேவையில்லை.**

**44.** ஒரு நபரை, அவர் ஒரு சூதாட்டக் கூட்டத்தை வைத்து நடத்திஞர் அல்லது ஒரு பொதுச் சூதாட்டக் கூட்டத்தின் மேலாண்மையில் சம்மந்தப்பட்டிருக்கிருர் என்று குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்படுவதற்கு, யாதொரு நபரும் ஒரு ஆட்டத்தில்

யாதொரு பணத்திற்காக அல்லது பந்தயத்திற்காக அல்லது பணையத்திற்காக அவர் விளையாடியது பார்க்கப்பட்டது என்று மெய்ப்பிக்கத் தேவையில்லை.

### ஒரு பொதுச் சூதாட்டக் கூடத்தைத் திறப்பது முதலியவைகளுக்குத் தண்டம்.

45. எவரொருவர் யாதொரு பொதுச் சூதாட்டக் கூடத்தை திறக்கிறரோ, வைத்து நடத்துகிறரோ அல்லது பயன்படுத்துகிறரோ அல்லது பயன்படுத்த அனுமதிக்கிறரோ அல்லது யாதொரு பொதுச் சூதாட்டக் கூடத்தை நடத்துகிறரோ அல்லது நடத்துவதில் உதவியளிக்கிறரோ அல்லது அதில் சூதாடுவதற்கு முன்பணம் அல்லது பண வசதியளிக்கிறரோ, அவர் குற்றவாளி யென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் ஐந்நூறு ரூபாய்களுக்கு மேற்படாத அபராதத் தண்டனைக்கும் அல்லது மூன்று மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனைக்கும் அல்லது இரண்டும் பெறுவதற்குத் தண்டிக்கப்படுவதற்கு உள்ளாவார்.

### ஒரு பொதுச் சூதாட்டக் கூடத்தில் சூதாடக் காணப்படுவதற்குத் தண்டம்.

46. எவரொருவர், ஒரு பொதுச் சூதாட்டக் கூடத்தில், சூதாடும்போதும் அல்லது சூதாடுவதற்காக அங்கு இருக்கும் போதும் கண்டுபிடிக்கப்படுகிறரோ குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் இருநூறு ரூபாய்களுக்கு அதிகப்படாத அபராதத் தண்டனைக்கும் அல்லது ஒரு மாதத்திற்கு அதிகப்படாத சிறைத் தண்டனைக்குமுட்படுவார். யாதொரு சூதாட்டம் அல்லது விளையாட்டு நடக்கும் போது ஒரு பொதுச் சூதாட்டக் கூடத்தில் காணப்படும் எவரும் அதற்கு மாருக மெய்ப்பிக்கப்படும் வரையில், சூதாடும் நோக்கத்திற்காகவே அவர் அவ்விடம் இருந்ததாக எடுத்துக் கொள்ளப்படும்.

### குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் சூதாட்டக் கருவிகளை அழிந்து விடும்படி ஆணையிடலாம்.

47. ஒரு பொதுச் சூதாட்டக் கூடம் வைத்து நடத்தியதாக அல்லது அவ்விடத்தில் சூதாடுவதற்கு இருந்ததாக, யாதொரு நபர் குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில், அங்கு காணப்பட்ட எல்லாக் கருவிகளையும் குற்றவியல் நீதிபதியின் ஆணையின் பேரில் அழித்து விடலாம். கைப்பற்றப்பட்ட எல்லாப்

பொருள்களையும் அல்லது ஏனைய வேறு பொருள்களையும் அல்லது அவற்றின் ஆதாயங்களையும் பறிமுதல் செய்ய அந்தக் குற்றவியல் நீதிபதி ஆணையிடலாம்.

### சான்று அளிப்பவர்களுக்குக் காப்பீடு செய்தல்.

48. இந்தச் சட்டத்திற்கு எதிராகச் சூதாட்டத்தில் சம்மந்தப் பட்டிருப்பவரும், இந்தச் சட்டத்தின் சூதாட்டம் சம்மந்தப்பட்ட ஏற்பாடுகளை மீறியதற்காகவுள்ள வழக்கு விசாரணையில் யாதொரு நபருக்குக் குற்றவியல் நீதிபதி முன்பு சாட்சியாக விசாரிக்கப் படுபவரும், அவ்வாறு விசாரிக்கப்படும் போது தமக்குத் தெரிந்த வரையில் உண்மையானதும் நம்பிக்கையானதுமான நிகழ்வுகளை வெளிப்படுத்துபவரும் அதற்காக சொல்லப்பட்ட அந்தக் குற்றவியல் நீதிபதியிடமிருந்து ஒரு சான்றிதழ் பெறுபவருமாகிய ஒருவர், அத்தகைய சூதாட்டத்தில் அந்தக் காலத்திற்கு முன்னால் செய்த யாதொரு செயலிலிருந்தும் இந்தச் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்குத் தொடரும் எல்லாவற்றி லிருந்தும் விடுவிக்கப்படுவார்.

### திறமை ஆட்டங்களுக்குப் பாதுகாப்பு.

49. இந்தச் சட்டத்தின் 42 முதல் 48 பிரிவுகளில் உள்ள எவையும் வெறும் திறமையைக் காட்டும் ஆட்டங்களுக்கு அவையெவ்விடத்தில் ஆடப்பட்டாலும், பொருந்தா.

### குதிரைப் பந்தயங்கள் சம்மந்தமான வெளியீடுகளைத் தடை செய்தல்.

49. (அ) (1) எவரொருவர், குதிரைப் பந்தயங்களை ஒப்புக் கொள்ளல் அல்லது அவற்றிற்கான இரகசியங்களின் செய்திகளை அல்லது குதிரைப் பந்தயங்களின் மேல் பந்தயம் அல்லது பணையம் கட்டுவதற்கு உதவியளிக்கக் கூடிய அல்லது வசதி யளிக்கக் கூடிய தகவலைக் கொண்ட எந்தப் புத்தகத்தை அல்லது துண்டுப் பத்திரிகையை அல்லது வேறு ஆவணங்களை தயாரிக்கிறாரோ, அச்சிடுகிறாரோ, அல்லது வெளியிடுகிறாரோ, அல்லது விற்பனை செய்கிறாரோ அல்லது விற்பனைக்கு வைக்கிறாரோ அல்லது பகிர்ந்து கொடுக்கிறாரோ அவர் ஐந்நூறு ரூபாய்கள் வரை அபராதத் தண்டனையும் அல்லது ஒரு மாதம் வரை சிறைத் தண்டனையும் அல்லது இரண்டும் பெறத் தண்டிக்கப் படுதற்குரியவராவார்.

ஆயினும், இந்த உட்பிரிவில் உள்ளது எதுவும், தமிழ்நாடு மாநிலத்திற்கு வெளியேயுள்ள குதிரைப் பந்தயங்களுக்குச் சம்மந்தப்பட்ட வரையில் யாதொரு செய்தித் தாளுக்கும் பொருந்தாது.

மேலும் தமிழ்நாடு மாநிலத்திற்குள் நடக்கும் குதிரைப் பந்தயங்கள் சம்மந்தமாய்—

(i) யாதொரு செய்தித்தாளும் அல்லது

(ii) மாநில அரசாங்கத்தால் இதற்காக அதிகாரமளிக்கப் பட்ட யாதொரு பந்தயக் கழகத்தால் அல்லது அதன் அதிகாரத்தின்கீழ் வெளியிடப்பட்டு பந்தயக் கழகத்தைச் சேர்ந்த இடத்திலும் அல்லது சம்பந்தப்பட்ட பந்தய வெளியில் உள்ள இடத்திலும் வழங்கப்படும் யாதொரு வெளியீடும் மாநில அரசாங்கம் (2)-ஆம் உட்பிரிவின் கீழ் மாநில அரசாங்கத்தால் செய்யப்பட்ட விதிகளால் அனுமதிக்கப்பட்ட அத்தகைய தகவலை உடையதாயிருக்கலாம்.

**விளக்கம்.**—இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக 'செய்தித் தாள்' என்பது பொதுச் செய்திகளையும் அல்லது பொதுச் செய்திகளின் மேல் கருத்துரைகளையும் கொண்டுள்ளதும் முக்கியமாக அல்லது முழுவதுமாகப் பந்தயங்களைப் பற்றி மட்டுமல்லாது ஒரு வாரத்திற்கு அதிகப்படாத இடைக் காலங்களில் வெளியிடப்படுவதுமான பருவஇதழ் என்று பொருள் படும்.

(2) மாநில அரசு தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கையின் மூலம் (1) ஆவது உட்பிரிவின் ஏற்பாடுகளைச் செயல்படுத்து வதற்காக விதிகளை இயற்றும்.

**தண்டப் பணத்தில் ஒரு பாகத்தைத் தகவல் அளிப்பவர்களுக்கும் காவல் அலுவலர்களுக்கும் கொடுத்தல்.**

50. (1) குற்றவியல் நீதிபதி 37-ஆம் பிரிவின் (2), (3) அல்லது (4)-ஆவது உட்பிரிவின் கீழும் 45 அல்லது 46-ஆவது பிரிவின் கீழும் விதிக்கப்பட்ட அபராதத்தில் பாதிக்கு மேற்படாத யாதொரு பாகத்தையும், 47-ஆம் பிரிவின் கீழ் பறிமுதல் செய்ய ஆணையிடப்பட்டுக் கைப்பற்றப்பட்ட பணங்களையும் விற்பனைத் தொகையையும் அல்லது பொருட்களையும், குற்றவாளியைக் கண்டுபிடிக்க உதவக் கூடிய அத்தகைய தகவல்

அளித்தவர்களுக்கும் காவல் அலுவலர்களுக்கும் கொடுக்கும்படி கட்டளையிடலாம்.

மேல் முறையீட்டுக்கான, அல்லது தகவல் கேட்கப்பட்ட அல்லது சீராய்வுக்கான நீதிமன்றம் இந்த உட்பிரிவின் கீழ் கட்டளையிடலாம்.

(2) உட்பிரிவின் (1) இன் கீழ் ஒரு கட்டளையிட்டபோது சம்பந்தப்பட்ட குற்றவியல் நீதிபதி அந்த உட்பிரிவின் கீழ் செலுத்தப்பட வேண்டிய பணத்தைக் காவல் ஆணையருக்கு அனுப்பிவிடுவார். காவல் ஆணையர் மேலே சொல்லப்பட்டுள்ள அத்தகைய தகவல் கொடுத்தவர்கள் காவல் அலுவலர்கள் இவர்களுக்குள் தாம் தேர்ந்தெடுக்கக் கூடியவர்களுக்குத் தமக்குச் சரியென்று தோன்றும் அந்த விகிதத்தில் வழங்குவார்.

(3) மேலே சொல்லப்பட்ட தொகையை (1) ஆவது உட்பிரிவின் கீழ்க் கட்டளையிடப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடியும் வரையிலும் அல்லது அந்தக் காலத்திற்குள் மேல்முறையீடு செய்யப்பட்டிருந்தால் அது முடிவு செய்யப்படும் வரையிலும் காவல் ஆணையருக்கு அனுப்பக் கூடாது.

## சூதாட்டங்களில் மோசம் செய்வதற்குத் தண்டம்.

51. யாதொரு மோசடியால் அல்லது சட்டவிரோதமான முறையில் அல்லது நேர்மையற்ற நடத்தையில் சீட்டாடுபவர் அல்லது பகடை வைத்து ஆடுபவர் அல்லது வேறு சூதாட்டம் ஆடுபவர் அல்லது பணயங்கள் பந்தயங்கள் அல்லது துணிவான முயற்சி இவற்றில் பங்கெடுத்துக் கொள்பவர்கள் அல்லது விளையாடுபவர்கள் கட்சியில் அல்லது கைகளில் பந்தயம் கட்டுபவர்கள் அல்லது யாதொரு விளையாட்டு, விளையாட்டுப் போட்டி, பொழுதுபோக்கு அல்லது பயிற்சியில் பந்தயம் கட்டிப் பணயம் வைப்பவர்கள் ஆகிய ஒருவர் தமக்காக அல்லது வேறு ஒரு நபருக்காக அல்லது நபர்களுக்காக யாதொரு பணத்தை அல்லது விலையுள்ள பொருளை வேறு எந்த நபரிடமிருந்தும் அடைகிறாரோ அவர் ஐந்நூறு ரூபாய்களுக்கு அதிகப்படாத அபராதத் தண்டனைக்கு அல்லது ஆறு மாதங்களுக்கு அதிகப்படாத, சிறைத் தண்டனைக்கும் அல்லது இரண்டுக்கும் உட்படுவார்.

## தனிப்பட்ட நிகழ்வுகளில் மாநகரத்திலிருந்து நபர்களை வெளியேறக் கட்டளையிட அதிகாரம்.

51. ஆ. (1) வரப்பெற்ற தகவலிலிருந்து அல்லது வேறு விதமாய் காவல் ஆணையர்,

(அ) சென்னை மாநகரத்தில் அல்லது செங்கற்பட்டு, வட ஆற்காடு அல்லது நெல்லூர் மாவட்டத்தில் பிறந்திராத யாதொரு நபரின் நடமாட்டங்களும் அல்லது செயல்களும், மனிதர் ஆளுக்கு அல்லது சொத்திற்குப் பீதியை அல்லது அபாயத்தை அல்லது கெடுதியை உண்டாக்குகின்றன அல்லது உண்டாக்கு வதற்காக செய்யப்படுகின்றன என்றும் அல்லது அந்த நபர் இந்தியக் குற்றத் தண்டனை விதித் தொகுப்பின் XII, XVI-ஆம் அல்லது XVIII-ஆம் அத்தியாயத்தின் கீழ்த் தண்டிக்கப்படக் கூடிய வன்முறையால் அல்லது கொடுமையான குற்றத்தைச் செய்வதில் அல்லது அதற்கு உடந்தையாயிருப்பதில் ஈடு பட்டிருக்கிறார் அல்லது ஈடுபடத் தயாராயிருக்கிறாரென்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் உள்ளன என்றும்,

(ஆ) சாட்சிகள் தம் உடல் அல்லது சொத்து இவற்றின் பாதுகாப்பிற்கான பயம் காரணமாக வெளிப்படையாய் அப்படிப் பட்ட நபருக்கு எதிராகச் சான்றளிக்க விரும்பவில்லையென்றும், மனநிறைவு கொண்ட போதெல்லாம்.

காவல் ஆணையர் தம்மால் கையொப்பமிடப்பட்ட எழுத்து மூலமான ஒரு ஆணை மூலம் அத்தகைய பயம், அபாயம் அல்லது தீங்கு அல்லது குற்றம் இழைத்தல் ஆகிய இவற்றைத் தடுப்பதற்கு அவசியமென்று ஆணையருக்குத் தோன்றுமாறு அந்த நபர் நடந்துகொள்ளும்படி அவருக்குக் கட்டளையிடலாம் அல்லது அந்த நபரை, மாநகரத்தை விட்டு அந்த ஆணையில் குறிப்பிடப் பட்ட காலத்திற்குள் வெளியேறும்படியும் கட்டளையிடலாம்.

**விளக்கம்.**—இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக, ஒரு நபர் சென்னை மாநகரத்தில் அல்லது செங்கற்பட்டு, வட ஆற்காடு அல்லது நெல்லூர் மாவட்டத்தில் பிறந்தவரா அல்லரா என்பதில் காவல் ஆணையருடைய தீர்ப்பே முடிவானதாகும்.

(2) உட்பிரிவு (1) இன் கீழ் ஒரு ஆணையை ஒரு நபரின் மேல் பிறப்பிப்பதற்கு முன்னால் காவல் ஆணையர் அல்லது அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட யாதொரு துணை ஆணையர் அந்த நபர் மீதுள்ள முக்கியமான சாட்டுரைகளின் பொதுத் தன்மையை

எழுத்து மூலமாக அவருக்குத் தெரிவித்து, அவற்றிற்கு விளக்கமளிக்க அவருக்கு ஒரு நியாயமான வாய்ப்பு அளிக்க வேண்டும். காவல் ஆணையரும் அல்லது துணை ஆணையரும் அவரால் கொண்டுவரப்பட்ட யாதொரு சாட்சிகளை விசாரிக்கவும் செய்யலாம். அவரால் ஏதாவது எழுத்து மூலமான வாக்குமூலம் கொடுக்கப்பட்டால் அது பதிவருடன் சேர்த்து வைக்கப்பட வேண்டும்.

அப்படிப்பட்ட நபர் காவல் ஆணையர் அல்லது துணை ஆணையர் முன்னால் தம் மீது கொண்டு வரப்பட்டுள்ள சாட்டுரைகளை விளக்கிக் கூறத் தம்மால் கொண்டுவரப்பட்ட சாட்சிகளை விசாரிக்கவும் ஒரு வழக்கறிஞர் மூலம் அல்லது சட்ட அறிஞர் மூலம் வருவதற்கு உரிமையுள்ளவராவார்.

(3) காவல் ஆணையர் அல்லது (2)-ஆவது உட்பிரிவின்கீழ் அதிகாரமளிக்கப்பட்டுள்ள துணை ஆணையர், (1)-ஆவது உட்பிரிவின் கீழ் எவர் மேல் ஒரு ஆணை பிறப்பிக்கக் கருதியுள்ளரோ அவரை வரச் செய்வதற்காக 1898-ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பின் 75 முதல் 77 பிரிவுகளின்கீழ், ஒரு நீதிமன்றத்தின் எல்லா அதிகாரங்களும் அல்லது எந்த அதிகாரங் களையும் செலுத்தலாம்.

(4) உட்பிரிவு (1) இன் கீழ்ச் செய்யப்பட்ட ஆய்வாளரின் யாதொரு ஆணையால் பாதிக்கப்பட்ட எந்த நபரும், அப்படிப் பட்ட ஆணையின் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் மாநில அரசாங்கத்திடம் மேல்முறையீடு செய்யலாம். மாநில அரசாங்கம் அது பற்றி எல்லாச் சூழ்நிலைகளையும் அனுசரித்து அந்த ஆணையை உறுதிப்படுத்தலாம் அல்லது மாற்றலாம் அல்லது ரத்து செய்யலாம். இந்த உட்பிரிவின்கீழ் மாநில அரசாங்கத்திற்கு ஒரு மேல்முறையீடு செய்யப்பட்டதில், அவர்கள் தம் பக்கத்தில், சரி என்று தோன்றும் அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு காவல் ஆணையரின் ஆணை செயல்படுவதை மேல்முறையீட்டின் மீது முடிவான ஆணைகள் இடும் வரையில் நிறுத்தி வைக்கலாம்,

(5) உட்பிரிவு (1) இன் கீழ் காவல் ஆணையரால் செய்யப்பட்ட ஆணையும் அல்லது (4)-ஆவது உட்பிரிவின் கீழ் அரசாங்கத்தால் செய்யப்பட்ட ஆணையும். அடியிற்கண்ட ஒன்று அல்லது மேற்பட்ட காரணங்களால் அல்லாமல் யாதொரு நீதிமன்றத்

தாலும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படக்கூடாது அவையாவன :—

(அ) உட்பிரிவு (2) இல் விதிக்கப்பட்டுள்ள நடைமுறை கையாளப்படவில்லை; அல்லது

(ஆ) அந்த மாதிரியான ஆணை பிறப்பிக்கப்படுவதற்கு அடிப்படையாக இருக்கக்கூடிய தகவல் ஒன்றும் இல்லை; அல்லது

(இ) அந்த ஆணை யார் மேல் செய்யப்பட்டதோ அதற்கு எதிராக வெளிப்படையாகச் சாட்சியம் சொல்ல சாட்சிகள் விரும்பவில்லை என்று நம்பப் போதுமான காரணமில்லை.

6. (அ) உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு, (4) இன் கீழ் தமக்கு அளிக்கப்பட்ட யாதொரு கட்டளையை மீறிக் குற்றம் செய்ததாகத் தீர்ப்பளிக்கப்பட்ட எந்த நபரும் இரண்டாண்டுகள் வரை சிறைத் தண்டனையும் அல்லது அபராதத் தண்டனையும் அல்லது இரண்டும் பெறுவதற்குத் தண்டிக்கப்படக் கூடியவராவார்.

(ஆ) உட்பிரிவு (1) இன் கீழ் அல்லது உட்பிரிவு (4) இன் கீழ் சென்னை மாநகரத்தை விட்டு வெளியேறும்படி ஆணையிடப் பட்ட யாதொரு நபரும் அப்படிச் செய்யத் தவறினாலும் அல்லது மறுத்தாலும் அல்லது அந்த ஆணை அமலில் உள்ளபோது அந்த மாநகரத்திற்குள் மறுபடியும் நுழைந்தாலும் காவல் ஆணையர் (அ) கூற்றின் கீழ் அவர் மீது வழக்குத் தொடர்வதற்குப் பதிலாக அல்லது வழக்குத் தொடர்வதோடு கூட மேலும் தாம் கட்டளை யிடுகிறபடி அவரைக் கைது செய்யும்படிச் செய்யலாம்; அல்லது காவல் படையின் பொறுப்பில் அந்த மாநகரத்திற்கு வெளியில் உள்ள ஒரு இடத்துக்கு அப்புறப்படுத்தும்படிச் செய்யலாம்.

(7) இந்தப் பிரிவில் உள்ளது எதுவும் ஒரு காவல் அலுவலரை (1)-ஆவது உட்பிரிவின் கீழ் யார் மேல் ஆணை செய்யப்படுகிறதோ அவருக்காவது அல்லது எந்த நீதிமன்றத்திற்காவது தமக்குத் தகவல் வந்த ஆதாரத்தையோ அல்லது எதைச் சொன்னால் அது யாதொரு தகவல் அளிப்பவரின் அடையாளத்தை அல்லது பெயரை வெளிப்படுத்தும் என்று காவல் ஆணையர் கருதுகிறாரோ அந்தத் தகவலையோ ஒரு காவலில் அலுவலர் தெரிவிக்க வேண்டுமென இந்தப் பிரிவின் கீழ் உள்ள எதுவும் தெரிவிப்பதாகக் கருதக்கூடாது.

### பரத்தையர் விடுதிகள்.

52. ஒரு வீடு பரத்தையரின் விடுதியாகவும் அல்லது பரத்தையர்களுக்கு அல்லது ஒழுங்கீனமுள்ள எத்தகைய நபர்களுக்குத் தங்க வசதியளிக்கும் இடமாகவும் பயன்படுத்தப்படுகிறது என்று காவல் ஆணையர் நம்பக் காரணமிருந்தால் அவர் அந்த வீட்டின் சொந்தக்காரரை அல்லது குடியிருப்பவரை வரவழைக்கலாம். அந்த வீடு அவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்றும், பக்கத்தில் வசிப்பவர்களுக்குத் தொல்லையும், அருவருப்பும் அளிக்க ஆதாரமாயிருக்கிறதென்றும் மனநிறைவு கொண்டால் அவ்வாறு அதைப் பயன்படுத்துவதை விட்டுவிடும்படி அந்தச் சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பவருக்கு ஆணையிடலாம்.

**53. விலங்குகளுக்குக் கொடுமை செய்வதற்குந் தண்டம்.**—எவரொருவர், யாதொரு விலங்கைக் கொடுமையாக அடிக்கிறரோ அல்லது நடத்துகிறரோ அல்லது சித்திரவதை செய்கிறரோ அல்லது யாதொரு விலங்கைக் கொடுமையாக அடிக்கும்படி செய்கிறரோ அவர் குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் பேரில் ஒரு நூறு ரூபாய்களுக்கு அதிகப்படாத அபராதத் தண்டனைக்கும் அல்லது மூன்று மாதங்களுக்கு அதிகப்படாத சிறைத் தண்டனைக்கும் அல்லது இரண்டுக்கும் உட்படுவார்.

**54. விலங்குகளுக்கு மருத்துவ மனை அமைத்தல்.**—மாநில அரசாங்கம் முன் பிரிவின் கீழ் தீங்கு செய்யப்பட்ட விலங்குகளின் பாதுகாப்பிற்காகவும், சிகிச்சைக்காகவும் மருத்துவ மனைகளை ஏற்படுத்தலாம். அப்படிப்பட்ட மருத்துவ மனையிலிருந்து வெளியே அனுப்பிவிடுவதற்குச் சான்றிதழ்கள் அளிக்கத் தகுதியான நபர்களை நியமிக்கலாம்.

**55. குற்றவியல் நீதிபதி விலங்கை அழித்துவிடவும் அல்லது மருத்துவ மனைக்கு அனுப்பிவிடவும் கட்டளையிடலாம்.**—இந்தச் சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் ஒரு குற்றத்திற்குக் குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு குற்றவியல் நீதிபதி தக்க விசாரணைக்குப்பின் அந்தக் குற்றம் எந்த விலங்கு சம்பந்தமாய்ச் செய்யப்பட்டதோ, அந்த விலங்கை அழித்து விடும்படியும் அல்லது பாதுகாப்பிற்காகவும் சிகிச்சைக்காகவும் ஒரு மருத்துவ மனைக்கு அனுப்பும்படியும் கட்டளையிடலாம். அந்தக் குற்றவியல் நீதிபதி தமது ஆணையால், அப்படிப்பட்ட பாதுகாப்பிற்கும், சிகிச்சைக்கும் ஆகும் நியாயமான செலவை

அல்லது அதில் ஒரு பாகத்தையும் அந்த விலங்கின் சொந்தக் காரரால் செலுத்தப்பட வேண்டும் என்றும் கட்டளையிடலாம்.

56. மருத்துவ மனைகளுக்கு அனுப்பப்பட்ட விலங்குகள் **நிறுத்தி வைக்கப்படலாம், மேலும் அறிவிப்புக்குப் பிறகு அப்புறப்படுத்தப்படலாம்.**—அவ்வாறு சிகிச்சைக்கு அனுப்பப் பட்ட ஒவ்வொரு விலங்கும் 54 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப் பட்டுள்ள ஒரு நபரால் அதை வெளியே அனுப்பிவிட அதிகார மளிக்கப்படும் வரையில் அந்த மருத்துவ மனையில் நிறுத்தி வைக்கப்படலாம். அதன் பிறகு மருத்துவ மனையின் பொறுப்பில் உள்ள நபர் அந்த விலங்கின் சொந்தக்காரருக்கு அதைப் பாது காத்ததற்கும், சிகிச்சையளித்ததற்கும் உண்டான குற்றவியல் நீதிபதியின் ஆணையின் கீழ்ச் சேர வேண்டிய யாதொரு பணத்தைச் செலுத்தவும், அறிவிப்பு சேர்க்கப்பட்டத்திலிருந்து நாற்பத்தி எட்டு மணி நேரத்திற்குள் அதை மருத்துவ மனை யிலிருந்து அப்புறப்படுத்திக் கொள்ளவும் கோரி அறிவிப்புக் கொடுக்க வேண்டும்.

**57. செலவுகள் முதலியவைகளைச் சொந்தக்காரர் செலுத்தத் தவறினால் விலங்கை விற்பனை செய்யலாம்.**—சொந்தக்காரர் அதற் குரிய பணத்தைச் செலுத்தவும் 56-ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அதை அப்புறப்படுத்தவும் மறுத்தாலும் அல்லது அசட்டை செய்தாலும் யாதொரு குற்றவியல் நீதிபதி அந்த விலங்கை விற்றுவிடவும், அதில் பெறப்பட்ட தொகையை விற்பனைச் செலவு போக, கொடுக்க வேண்டிய பணத்திற்காக வைக்கப்படவும் கட்டளையிடலாம் மிகுதியாயுள்ளதை அந்த விற்பனைத் தேதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள், மனுவின் மேல் அந்த விலங்கின் சொந்தக்காரருக்குச் செலுத்த வேண்டும். அப்படி விண்ணப்பம் செய்யத் தவறினால் அத்தொகை அரசாங்கத் தால் பறிமுதல் செய்யப்படும். ஆனால் அந்தச் சொந்தக்காரர் அப்படிப்பட்ட விற்பனையின் நிகரத் தொகைக்கு மேற்கொண்டு யாதொரு தொகையும் செலுத்த உட்பட்டவராகமாட்டார்.

58. குற்றவியல் நீதிபதி விலங்கைச் சொந்தக்காரரிடம் ஒப்படைக்க ஆணையிடலாம்.—யாதொரு குற்றவியல் நீதிபதி எச்சமயத்திலும், தமக்குத் தக்கது என்று நினைக்கும் நிபந்தனை களின் மேல், இந்தச் சட்டத்தின் 55 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகளின் கீழ் நிறுத்தி வைக்கப்பட்ட யாதொரு விலங்கும் அதன் சொந்தக் காரரிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று ஆணையிடலாம்.

**59. விசாரணைகளின் செலவுகள்.**—இந்தச் சட்டத்தின் 55-ஆம் பிரிவின் கீழ்ச் செய்த விசாரணைகளின் எல்லாச் செலவுகளும் குற்றவியல் நீதிபதி கட்டளையிடக் கூடியபடி விசாரணையில் சம்பந்தப்பட்ட அத்தகைய நபர்களிடமிருந்து அபாராதத் தொகை விதிப்புகளை வசூலிக்கும் விதத்திலேயே வசூலிக்கப்படும். கட்டளையிடக் கூடியபடி விசாரணையில் சம்பந்தப்பட்ட அத்தகைய நபர்களிடமிருந்து அபாராதத் தொகை விதிப்புகளை வசூலிக்கும் விதத்திலேயே வசூலிக்கப்படும்.

**60. அலைந்து திரியும் விலங்குகள் பட்டியில் அடைக்கப்பட வேண்டும்.**—யாதொரு பொது இடத்தில் அல்லது சொந்த நிலங்களில் அத்துமீறி நுழைந்து அலைந்து திரிகிற விலங்குகள் எவற்றையும் எல்லோரும் பிடித்துக் காவல் ஆணையரால் நியமிக்கப்பட்ட யாதொரு பட்டியில் அடைப்பது சட்டப்படி சரியானதாகும். அப்படி அடைக்கப்பட்ட பிறகு பத்து நாட்களுக்குள் அந்தப் பட்டிப் பொறுப்பிலுள்ள நபரிடம் ஒவ்வொரு வெள்ளாடு, செம்மறியாடு அல்லது பன்றிக்கு 50 பைசாக் கட்டணமும் வேறு எந்த ஒவ்வொரு விலங்குக்கும் ஒரு ரூபாயும் அவ்வாறு அடைக்கப்பட்டிருந்த சமயம் அவைகளுக்குத் தீனியளிக்கப்பட்டதற்காக அவ்வப்போது ஆணையரால் நிர்ணயிக்கக் கூடிய நாள் விகிதத்தில் செலவு தொகையுடன் செலுத்தி அவற்றை விடுவிக்காமற்போனால் அப்படிப்பட்ட விலங்குகள் வெளிப்படையாக விற்கப்பட்டு அவ்வாறு விற்பனை செய்ததில் வரும் தொகையிலிருந்து சொல்லப்பட்ட கட்டணமும் தீனிச் செலவும் செலுத்தப்பட்ட பிறகு, மீதியும் அவைகளின் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்படும் அல்லது விற்பனைக்குப் பிறகு பதினைந்து நாட்களில் அந்தத் தொகையை அவர்கள் உரிமை கோரத் தவறினால் அது காவல் நோக்கங்களுக்காகப் பொருந்தும் யாதொரு நிதிக்குச் சேர்த்து விடப்படும்.

61. **தீப்பிடித்தபோது காவற்படையினருக்கும் தமிழ்நாடு தீயணைப்புப் பணியாளர் தொகுதியினருக்குள்ள அதிகாரங்கள்.**—சென்னை மாநகரத்தில் ஒரு தீ ஏற்பட்ட போது காவல் ஆணையர் அல்லது காவலர் வரிசைக்கு மேற்பட்ட எந்தக் காவல் அலுவலரும் ஒரு தீயணைப்புப் பணியாளர் தொகுதியின் யாதொரு உறுப்பினரும்—

(அ) அந்தத் தீயை அணைக்கவும் அல்லது உயிரை அல்லது சொத்தைக் காப்பாற்றவும் எடுக்கும் நடவடிக்கைகளில் தாம்

அவ்விடம் இருப்பதன் மூலம் தலையிடுபவரும் அல்லது தடை செய்பவருமான யாதொரு நபரையும் அவ்விடமிருந்து அப்புறப் படுத்தலாம் அல்லது அப்புறப்படுத்தும்படி ஆணையிடலாம். மேலும், தீ எரிந்து கொண்டிருக்கும் இடத்தில் அல்லது அதற்குப் பக்கத்தில் உள்ள யாதொரு தெருவையும் அல்லது வழியையும் அடைத்து விடலாம்.

(ஆ) தாமாகவோ அல்லது தம் ஆணையின் கீழ் பணியாற்றும் மற்றவர்களாலோ அந்தத் தீயை அணைக்கும் பொருட்டு கூடிய அளவு மிகவும் குறைந்த இழப்பில் யாதொரு இடத்தையும் இடிக்கவோ அல்லது இடித்துத் தள்ளிவிடவோ அல்லது குழாய்களை அல்லது இதர சாதனங்களைக் கொண்டு செல்வதற்காக உபயோகப் படுத்தவோ செய்யலாம்.

(இ) தீ ஏற்பட்ட இடத்தில் தண்ணீருக்கு அதிக அழுத்தம் உண்டாக்கும் பொருட்டு யாதொரு மாவட்டத்தில் உள்ள முக்கிய குழாய்களையும் சிறு குழாய்களையும் மூடிவிடும்படிச் செய்யலாம்.

(ஈ) கூடிய அளவு உதவியளிக்கும்படி யாதொரு தீ அணைப்பு இயந்திரத்தின் பொறுப்பிலுள்ள எவரையும் அழைக்கலாம்; அல்லது

(உ) பொதுவாக உயிரும் சொத்தும் பாதுகாக்கப்படுவதற் காகத் தேவையாய்த் தோன்றக்கூடிய அப்படிப்பட்ட முறைகளைக் கையாளலாம்.

தீ ஏற்பட்டவற்றில் தமிழ்நாடு தீயணைக்கும் பணியாளர் தொகுதிகளின் உறுப்பினர்களால் அல்லது யாதொரு தீயணைக்கும் படையால் அல்லது காவல் அலுவலர்களால் தம் முறையான பணி யாற்றுவதில் உண்டான பொருள் இழப்பு: ஈட்டுறுதிப் பத்திரத் தைப் பொருத்தவரையில் தீயால் ஏற்பட்டுள்ள இழப்பாகவே கருதப்படும். ஆயினும், இந்தப் பிரிவில் உள்ளது எதுவும் யாதொரு காவல் அலுவலருக்கும் அல்லது தமிழ்நாடு தீயணைக்கும் பணி யாளர் தொகுதிகளின் யாதொரு உறுப்பினருக்கும் அல்லது யாதொரு தீயணைக்கும் படைக்கும் அவர்களால் நியாயமான காரணமில்லாமல் செய்யப்பட்ட காரியத்தால் ஏற்பட்ட இழப்பு களுக்குப் பொறுப்பிலிருந்து விலக்கு அளிக்காது.

62. தீயை அணைப்பதற்குரிய பணியமைப்புகள் முதலிய செலவுகளை நகராட்சி ஏற்க வேண்டும்.—மாநில அரசாங்கத்தின்

ஆணையால் பொதுப் பயனுக்காகக் காவல் துறையால் வைக்கப்பட்டுள்ள எல்லாப் பணியமைப்புச் சாதனங்களின் செலவுகளும் யாதொரு தீ ஏற்பட்டபோது காவல் துறை பணியாற்றுங்காலத்து ஏற்பட்ட எல்லாச் செலவுகளும் காவல் ஆணையர் அந்தத் தொகைக்குச் சான்றளித்ததன் பேரில் சென்னை மாநகரத்தில் நகராட்சி ஆணையாளர்களால் செலுத்தப்பட வேண்டும்.

**தீயென்று பொய்த்தகவல் அளிப்பதற்குத் தண்டனை.**—(அ) எவரொருவர், பொய்யென்று தெரிந்திருந்தும் தீயைப் பற்றிய அபாய அறிவிப்பைச் சென்னை மாநகரத்தில் யாதொரு உறுப்பினருக்கு, அல்லது சென்னைத் தீயணைப்புப் பணியாளர் தொகுதிகளின் யாதொரு உறுப்பினருக்கு, ஒரு தெருவிலுள்ள தீ எச்சரிக்கை மூலமாகவும் அறிவிக்கை மூலமாகவும் தகவல் அனுப்புதல் மூலமாகவும் அல்லது வேறு எதன் மூலமாயும் கொடுக்கிறரோ அல்லது கொடுக்கும்படிச் செய்கிறரோ அவர், தாம் குற்றவாளியென்று தீர்ப்பு அளிக்கப்பட்டதன் பேரில் ஐம்பது ரூபாய்கள் வரை அபராதத் தண்டனைக்குட்படுபவராவார்.

இந்தப் பிரிவின் அல்லது 1859 ஆம் ஆண்டு சென்னை மாவட்டக் காவல் சட்டத்தின் 43 ஆம் பிரிவின் கீழ்க் குற்றவாளியென்று முன்னல் தண்டிக்கப்பட்டிருந்து இந்தப் பிரிவின் கீழ்த் தண்டிக்கப்படும் எவரும் ஆறு மாதங்கள் வரை வெறும் சிறைத் தண்டனைக்கும் அபராதத் தண்டனைக்கும் உட்படுவார்.

**63. வேண்டுமென்றே எல்லை மீறுதலுக்குத் தண்டனை.**—எவரொருவர், நியாயமான காரணமில்லாமல், வேண்டுமென்றே யாதொரு குடியிருப்பு வீட்டிற்குள் அல்லது வீட்டின் மேல் அல்லது இதர கட்டடத்திற்குள் அல்லது அதற்குச் சேர்ந்த யாதொரு நிலம் அல்லது தரையின் மேல் அல்லது யாதொரு படகு அல்லது கப்பலின் மேல் அல்லது அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது பொது நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் யாதொரு நிலத்தின் மேல் வரம்பு கடந்து பிரவேசிக்கிறரோ, அவர் குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இருபது ரூபாய்களுக்கு மேற்படாத அபராதத் தண்டனைக்குட்படுவார்.

**64. ஒரு குற்றம் செய்யும் எண்ணத்துடன் சூரியன் மறைவிற்கும், சூரியன் கிளம்புவதற்கும் இடையில் ஆயுதங்களுடன் இருக்கக் காணப்படுவது முதலியவைகளுக்குத் தண்டனை.**—எவ

ரொருவர் சூரியன் மறைவிற்கும் சூரியன் கிளம்புவதற்கும் இடையில்—

(1) ஒரு குற்றம் செய்யும் எண்ணத்துடன் யாதொரு அபாய கரமான கருவியுடனும், அல்லது

(2) ஒரு குற்றம் செய்யும் எண்ணத்துடன் தமது முகத்தை மூடிக்கொண்டு அல்லது வேடம் தரித்துக் கொண்டும், அல்லது

(3) அவ்விடம் தாம் இருப்பதற்கு மனநிறைவு தரக் கூடிய வகையில் காரணம் சொல்லக் கூடாதபடி யாதொரு குடியிருப்பு வீட்டில் அல்லது இதரக் கட்டடத்தில் அல்லது யாதொரு கப்பல் அல்லது படகின் மேலும், அல்லது

(4) ஒரு பெயர் பெற்ற திருடனாயிருந்து யாதொரு கடைத் தெருவில், புறப் பகுதியில் அல்லது பொது இடத்தில் படுத்துக் கொண்டும் திரிந்துகொண்டும் தன்னைப் பற்றிய மனநிறைவு கொள்ளத் தக்க விவரம் அளிக்கக்கூடாதவராகவும், அல்லது

(5) தம் வசம் ஒரு சட்ட சம்மந்தமான காரணமில்லாமல் கன்னம் வைக்கும் யாதொரு கருவியையும் வைத்திருப்பவராகவும் காணப்படும் நபரை எந்தக் காவல் அலுவலரும் ஒரு பிடியாணை இல்லாமல் கைது செய்யலாம். அவர் குற்றவாளி என்று தீர்ப் பளிக்கப்பட்டபின் மூன்று மாதம் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படுவதற்குரியவராவார்.

**65. களவு செய்யப்பட்டதென நம்பப்பட்ட உடைமைகளை வைத்திருத்ததற்குத் தண்டம்.**—களவு செய்யப்பட்ட உடைமை அல்லது மோசடியான வழியில் கிடைத்த உடைமை மற்றும் உரித்தாயிருப்பதற்கு நம்பகமான கணக்கு காட்டத் தவறும் பொருள்கள் ஆகியவற்றை எவரொருவர் வைத்திருப்பினும் அல்லது வைத்திருப்பதாக மெய்ப்பிக்கப்படினும் அவர் நூறு ரூபாய் வரை அபராதத் தண்டம் அல்லது மூன்று மாதத்துக்கு மிஞ்சாத சிறைத் தண்டனை விதிக்கப்படுதற்குரியவராவார்.

**66. ஒரு குழந்தையிடமிருந்து அடகு வாங்குவதற்கு அல்லது அடகு பெறுவதற்குத் தண்டம்.**—பதினன்கு வயதுக்குக் குறைந்த தோற்றமுடைய எந்தக் குழந்தையிடமிருந்தும், எந்தப் பொருளையும் உரிமையாளருக்குத் தெரியாமல் அல்லது உடன் பாடில்லாமல் வாங்கினாலும் அல்லது அக் குழந்தைக்குத் தரப்பட்ட அல்லது முன்பணமாகத் தரப்பட்ட எந்தத் தொகைக்காகவும் ஈடு,

அடகு அல்லது பிணையாகவோ எடுத்துக் கொண்டாலும் அவர் யாராயிருப்பினும் நூறு ரூபாய்க்கு மேற்படாது அபராதத் தண்டனை விதிக்கப்படுவதற்குரியவராவர்.

67. **பாளையங்களில் அல்லது போருக்குரிய கப்பல் தளங்களில் சாராயம் முதலியவற்றைப் புகுத்துவதற்குத் தண்டம்.**—செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குள்ளும் அல்லது எந்தப் பட்டாளப் பாளையத் துள்ளும், காவல் அறை அல்லது முகாம் அல்லது அரசுக்குரிய எந்தப் போர்க் கப்பலின் தளத்திலும் உணர்ச்சியையூட்டவல்ல அல்லது புளிக்க வைக்கப்பட்ட வெறிநீர் அல்லது போதையூட்டும் மருந்துப் பொருள் அல்லது தயாரிப்பை ஆணை (கமிஷன்) பெறுத அலுவலர் வரிசைக்கு மேற்பட்ட வரிசையில் உள்ள சில நபர் களுக்காக அல்லாமல் படைத் தலைமை அதிகாரியின் எழுத்தாலான உரிமம் இன்றி யார் கொண்டுவந்தாலும் அவர் ஒரு நூறு ரூபாய்க்கு மேற்படாத அபராதத் தண்டனைக்கும் அல்லது இரண்டு மாதத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனைக்கும் உரியவராவார். அத்தகைய வெறிநீர், மருந்துப் பொருள் அல்லது தயாரிப்புகளும் அவற்றைக் கொண்டுள்ள கலங்களும் பறிமுதல் செய்யப்படும்.

68. **மருத்துவ நிலையங்களில் சாராவி முதலியவைகளைக் கொண்டு வருவதற்குத் தண்டனை.**—எவரொருவர், தக்க அனுமதி யுடனல்லாமல், யாதொரு பொது மருத்துவ நிலையத்திற்குள் யாதொரு சாராவி சம்பந்தமான அல்லது போதை உண்டாக்கு மாறு புளிக்க வைக்கப்பட்ட மதுப்பொருளை அல்லது போதை யுண்டாக்கும் மருந்தை அல்லது தயாரிப்பைக் கொண்டு வருகிறாரோ அல்லது கொண்டுவர முயற்சிக்கிறாரோ அவர் ஐம்பது ரூபாய்களுக்கு மேற்படாத அபராதத் தண்டனைக்கும் அல்லது இரண்டு மாதங்களுக்கு மேற்படாத சிறைத் தண்டனைக்கும் உட்படுவார்.

69. **அதிகாரமில்லாமல் ஆயுதங்களை எடுத்துச் செல்வதற்குத் தண்டனை.**—இந்தியக் காலாட்படை அல்லது கப்பற்படையில் ஒரு வீரர் அல்லது மாலுமி அல்லது ஒரு காவல் அலுவலர் அல்லது தொண்டர் படையில் சேர்ந்தவர் ஆகிய இவர்கள் அல்லாத எவரும் காவல் ஆணையர் அனுமதியின்றி யாதொரு ஈட்டி, உடைவாள், துப்பாக்கி அல்லது தீங்கு விளைவிக்கக்கூடிய வேறு ஆயுதங்களுடன் ஒரு பொது இடத்தில் சென்றால் எந்தக் காவல் அலுவலரும்

அவருடைய ஆயுதங்களைப் பறித்துவிடக் கூடும். அவ்வாறு கைப்பற்றப்பட்ட ஆயுதம் ஆணையால் விதிக்கப்படக்கூடிய பத்து ரூபாய்களுக்கு அதிகப்படாத அபராதத் தொகை செலுத்தப் பட்டுத் திரும்பப் பெறப்பட்டாலொழிய அரசாங்கத்திற்குப் பறி முதல் செய்யப்படும்.

*70. கப்பல்களிலிருந்து தப்பியோடியவர்களை மறைத்து வைப்பதற்குத் தண்டனை.*—எவரொருவர் வேண்டுமென்றே, யாதொரு கப்பலைச் சேர்ந்த மாலுமியை அல்லது பயிற்சி பெறு பவரை, அவர் தப்பியோடியவர் என்று தெரிந்தும் அல்லது அவ்வாறு நம்பக் காரணமாயிருந்தும் அவருக்கு இடமளிக்கிறாரோ அல்லது மறைத்து வைக்கிறாரோ அவர் குற்றவாளியென்று தீர்ப பளிக்கப்பட்டதன் பேரில் ஒரு நூறு ரூபாய்களுக்கு மேற்படாத அபராதத் தண்டனைக்குட்படுபவராவார்.

*71. பொதுத் தெருவில் செய்யும் சில குற்றங்களுக்குத் தண்டனை.*—எவரொருவர், யாதொரு பொது இடத்தில் அடியிற் கண்ட குற்றங்களில் எவைகளையேனும் செய்கிறாரோ அவர் குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டதன்பேரில் ஐம்பது ரூபாய் களுக்கு மேற்படாத அபராதத் தண்டனைக்கும் அல்லது ஒரு மேற்படாத சிறைத் தண்டனைக்குமுட்படுபவராவார்.

(i) *கண்மூடித்தனமாக அல்லது கவனக் குறைவாக ஓட்டுதல்.*—எவரொருவர் கண்மூடித்தனமாக அல்லது கவனக் குறைவாக யாதொரு விலங்கை ஓட்டுகிறாரோ அல்லது சவாரி செய்கிறாரோ அல்லது யாதொரு ஊர்தியை ஓட்டுகிறாரோ அல்லது இழுக்கிறாரோ அல்லது தள்ளுகிறாரோ;

(ii) *கால்நடைகளை ஓட்டுவதில் கவனக் குறைவால் தடங்கல் உண்டாக்கல்.*—கவனக் குறைவால் அல்லது தவறான முறையில் எவரொருவர் கால்நடைகளை ஓட்டுவதால் அத்தகைய கால்நடைகளால் தொல்லை அல்லது தடங்கல் உண்டாக்குகிறாரோ;

(iii) *ஆணையர் அனுமதியில்லாமல் யானையை அல்லது ஒட்டகத்தை ஓட்டுதல் முதலியவை.*—ஆணையரிடமிருந்து அனுமதி பெறாமல் எவரொருவர் யாதொரு யானையை அல்லது ஒட்டகத்தை ஓட்டுகிறாரோ அல்லது பிடித்துச் செல்கிறாரோ;

(iv) . . . . . .

(v) **சாலையின் இடது பக்கத்தில் அல்லது அதன் அருகில் அல்லாமல் வேறுவிதமாய் ஓட்டுதல் முதலியன.**—எவரொருவர் நியாயமான காரணமில்லாமல் யாதொரு ஊர்தியையும், மாநில அரசாங்கத்தால் அவ்வப்போது வெளியிடப்பட்ட சாலைகளின் விதிகளுக்கு இணங்காமல் ஓட்டுகிறரோ, இழுக்கிறரோ, அல்லது தள்ளுகிறரோ அல்லது போக்குவரத்தை ஒழுங்குபடுத்த அப்பொழுது பொறுப்பிலுள்ள ஒரு காவல் அலுவலரின் கட்டளை களைக் கீழ்ப்படியத் தவறுகிறரோ ;

(vi) **வில் இல்லாத ஊர்திகளைச் சாலைகளின் பக்கங்களி லாவது வேறு விதமாகவாவது ஓட்டுதல் முதலியவை.**—எவ ரொருவர் வில் இல்லாத யாதொரு ஊர்தியையும் சாலையிலும் அல்லது தெருவிலும் அதன் பக்கவாட்டில் அல்லாமல் ஓட்டு கிறரோ, இழுக்கிறரோ அல்லது தள்ளுகிறரோ அல்லது போக்கு வரத்தை ஒழுங்குபடுத்த அப்பொழுது பொறுப்பிலுள்ள ஒரு காவல் அலுவலரின் கட்டளைகளைக் கீழ்படியத் தவறுகிறரோ ;

**நடைபாதையின் மேல் விலங்கை அல்லது ஊர்தியை ஓட்டுதல்.**

(vii) யாதொரு கால்நடைப் பாதையில் எவரொருவர் எந்த விலங்குகளையும் பிடித்துச் செல்கிறரோ அல்லது சவாரி செய் கிறரோ அல்லது யாதொரு ஊர்தியை ஓட்டுகிறரோ, இழுக் கிறரோ அல்லது தள்ளுகிறரோ அல்லது அத்தகைய கால்நடைப் பாதையின் குறுக்கே அல்லது மேலே நிற்கும்படியாக யாதொரு விலங்கைக் கட்டி வைக்கிறரோ ;

(viii) **கால்நடைகளை அல்லது ஊர்தியை சிறுவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்கும்படி அனுமதிப்பது.**—எவரொருவர் யாதொரு கால்நடைகளை அல்லது ஊர்தியைப் பன்னிரண்டு வயதுக்குக் கீழேயுள்ள சிறுவரின் கட்டுப்பாட்டின்கீழ் இருக்க அனுமதிக்கிறரோ ;

(ix) **தக்க கட்டுப்பாட்டிலில்லாமல் கால்நடைகளை அல்லது ஊர்தியை விட்டு வைத்தல்.**—எவரொருவர் யாதொரு ஊர்தியின் அல்லது கால்நடைகளின் பொறுப்பிலிருந்துகொண்டு அதை அல்லது அவைகளைக் கட்டுப்படுத்த முடியாத அவ்வளவு தொலைவில் விட்டு வைக்கிறரோ ;

(x) **காவல் ஆணையர் அனுமதிப்படியல்லாது விலங்கை அல்லது ஊர்தியைப் பார்வைக்கு வைப்பதும் அல்லது ஊர்தியைப்**

**பழுதுபார்ப்பதும் அல்லது குதிரைகளுக்குப் பயிற்சியளிப்பதும்.**—எவரொருவர், காவல் ஆணையர் அனுமதிக்கப்படக்கூடிய அத்தகைய காலத்திலும் அப்படிப்பட்ட இடங்களிலுமல்லாமல், யாதொரு விலங்கை அல்லது ஊர்தியைச் சுத்தம் செய்கிறரோ அல்லது பார்வைக்கு, வாடகைக்கு அல்லது விற்பனைக்கு வைக்கிறரோ அல்லது அதே இடத்தில் பழுது பார்க்கும் அவசியமுள்ளதை தவிர மற்றவற்றில் யாதொரு ஊர்தியின் எந்தப் பாகத்தையும் பழுதுபார்க்கிறரோ அல்லது யாதொரு குதிரையைப் பழக்கப்படுத்துகிறரோ அல்லது அதற்குப் பயிற்சி அளிக்கிறரோ;

(xi) **பொதுப் போக்குவரத்தைத் தடை செய்தல்.**—எவரொருவர் காவல் ஆணையரால் அந்த நோக்கத்திற்காக நியமிக்கப் பட்ட இடங்களில் தவிர யாதொரு ஊர்தியை நிறுத்தி வைக்கிறரோ அல்லது அதனை சரக்குகளை ஏற்றவும் அல்லது இறக்கவும் தேவையாகக் கூடிய நேரத்திற்கும் அதிகமாக அங்கு இருக்கும்படி செய்கிறரோ அல்லது தடங்கல் உண்டாகும்படி யான மாதிரியில் யாதொரு குதிரையை அல்லது வேறு விலங்கைக் கட்டி வைக்கிறரோ அல்லது எந்த வகையிலும் சாதாரணமாகப் போக வர உள்ள ஒரு பொது வழியை வேண்டுமென்றே தடங்கல் செய்கிறரோ அல்லது அவ்வாறு செய்விக்கிறரோ;

(xii) **கட்டி வைக்காமல் குதிரைகளை அல்லது நாய்களைத் திரிய விடுதல்.**—எவரொருவர் கவனக் குறைவால் யாதொரு குதிரையையும் அலைய விடுபவரும் அல்லது யாதொரு கொடிய நாயைப் பட்டிச் சங்கிலியில்லாமல் திரிய விடுபவரும் அல்லது யாதொரு நாயையும் அல்லது விலங்கையும் தாக்கும்படி தூண்டி விட்டு எந்த நபருக்கும் அல்லது கால்நடைகளுக்கும் பயத்தை உண்டாக்குகிறவரும்;

(xiii) **ஐந்து அடிகளுக்கு வெளியே நீட்டிக் கொண்டிருக்கும் யாதொரு பொருளையும் எடுத்துச் செல்லல்.**—எவரொருவர் எந்தப் பொருளையும் அவை வைக்கப்பட்டிருக்கும் ஊர்தி அல்லது ஊர்திகளில் முன்புறம் அல்லது பின்புறம் ஐந்து அடிகளுக்கு மேல் வெளியே நீட்டிக் கொண்டிருக்கும்படி தெருக்கள் வழியாய் எடுத்துச் செல்லுகிறவரும்;

(xiv) **காற்றாடி விடுதல் ஒரு குதிரையை வேண்டுமென்றே மிரட்டுதல் முதலியன.**—எவரொருவர் ஒரு காற்றாடியைப் பறக்க விடுகிறரோ அல்லது ஒரு குதிரையை வேண்டுமென்றே மிரள

வைக்கிறரோ அல்லது யாதொரு ஊர்தியை ஓட்டும்போது அல்லது இழுக்கும்போது அல்லது தள்ளும்போது அந்த வழியைப் பயன்படுத்துபவர்களுக்கு நியாயப்படி அபாயம் உண்டாக்கக் கூடிய மாதிரியில் ஒரு சத்தத்தை எழுப்புகிறரோ;

(xv) **வாத்தியம் வாசித்தல், பறையடித்தல் முதலியன.**—எவரொருவர் காவல் ஆணையரால் அவ்வப்போது அனுமதிக்கப் படும் அத்தகைய காலங்களிலும் இடங்களிலும் அல்லாமலும் அப்படிப்பட்ட நிபந்தனைக்குட்படாமலும் பறையை அல்லது தண்டோராவை அடிக்கிறரோ அல்லது கொம்பை அல்லது ஒரு குழலை ஊதுகிறரோ அல்லது யாதொரு செம்பாலான அல்லது இதர கருவியை அல்லது சாமானை அடிக்கிறரோ அல்லது சத்தம் உண்டு பண்ணுகிறரோ அல்லது யாதொரு வாத்தியத்தை முழங்குகிறரோ அல்லது யாதொரு ஒலி பெருக்கியைப் பயன்படுத்துகிறரோ;

(xvi) **சுவர்களில் விளம்பரங்களை ஒட்டுதலும் அல்லது வடிவத்தைக் கெடுத்தலும்.**—எவரொருவர் சொந்தக்காரர் அல்லது அனுபவதாரரின் சம்மதமில்லாமல் யாதொரு விளம்பரத்தை அறிவிப்பை ஆவணத்தைக் காகிதத்தை அல்லது மற்ற பொருளைத் தெருவில், சாலையில், பெரு வழியில் அல்லது பொதுமக்கள் கூடு மிடத்தில் அல்லது அவைகளில் யாதொரு கட்டடத்தின் பொருட் சின்னத்தின் சிலையில், உருவமைப்பில் கம்பத்தில் சுவற்றில், வேலி யின் மரத்தில் அல்லது வேறு அமைப்பில் எந்த ஒரு விதத்திலும் ஒட்டுகிறரோ அல்லது ஒட்டவைக்கிறரோ அல்லது எந்தவிதத் திலும் பொது இடத்தில் அல்லது அப்படிப்பட்ட கட்டடம் பொருட்சின்னம், சிலை, உருவமைப்பு, கம்பம், சுவர், வேலி, மரம் அல்லது வேறு உருவமைப்பு இவற்றின் உருவத்தைக் கெடுக் கிறரோ, விகாரப்படுத்துகிறரோ அதன் மேல் எழுதுகிறரோ அல்லது வேறுவிதமாகக் குறியிடுகிறரோ அல்லது வருவதைத் கெடுக்கும்படி விகாரப்படுத்தும்படி மேல் எழுதும்படி அல்லது வேறுவிதமாகக் குறிகளிடும்படி செய்கிறரோ;

(xvii) **பொதுச் தெருவில் அல்லது நீர்த் தேங்கலில் (பாலக் காலில்) குளித்தல்.**—எவரொருவர் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் தவிர வேறு இடத்தில் குளிக்கிறரோ அல்லது கழுவிக் கொள்கிறரோ அல்லது வேறு எந்த நபரையும் அல்லது விலங்கையும் அல்லது துணிகளையும் கழுவிச் சுத்தம் செய்கிறரோ;

(xviii) **குளிக்குமிடத்தில் புகுதலும் அசுத்தப்படுத் தலும்.**—எவரொருவர், ஒரு குளிக்கும் இடமாக ஒதுக்கப்

பட்டுள்ள இடத்தில் குளிக்கும் ஒரு நபரை வேண்டுமென்றே புகுவதால் அல்லது கால்நடைகளை அல்லது நாய்களை அதில் அல்லது அதன் பக்கத்தில் கழுவுவதால் அல்லது வேறு எந்த விதத்திலோ தடங்கல் செய்யவோ அல்லது நிம்மதியாய்க் குளிக்கவொட்டாமல் செய்கிறாரோ ;

(xix) **மரியாதையில்லாத அல்லது அச்சமுறுத்தும் மொழியைப் பயன்படுத்தல்.**—எவரொருவர், யாதொரு மரியாதை யில்லாத அச்சமுறுத்தும், புண்படுத்தக்கூடிய அல்லது அவமானப்படுத்தக்கூடிய சொற்களைப் பயன்படுத்துகிறாரோ அல்லது பயம் விளைவிக்கும் அல்லது அவமானப்படுத்தும் விதத்தில் நடந்துகொள்ளுகிறாரோ அல்லது யாதொரு அநாகரீகமான, அச்சத்தை விளைவிக்கும், புண்படுத்தக்கூடிய அல்லது அவமானப்படுத்தக்கூடிய காகிதத்தை அல்லது வரைபடத்தை அமைதியைக் குலைக்கும் எண்ணத்துடன் அல்லது அதனால் ஒரு அமைதிக் குலைவு உண்டாகுமாறு நடுகிறாரோ அல்லது ஒட்டுகிறாரோ அல்லது காட்டுகிறாரோ ;

**பொது இடங்களில் பிச்சை எடுப்பதற்குத் தண்டனை.**

71. அ. எவரொருவர் யாதொரு பொதுத் தெருவில், சாலையில் அல்லது போக்குவரத்து வழியில் அல்லது யாதொரு பொது மக்கள் கூடும் இடத்தில் பிச்சை எடுக்கிறாரோ அல்லது உதவி கோருகிறாரோ அறச் சிந்தனையை உண்டாக்கும் அல்லது உதவிப் பொருளை வற்புறுத்திப் பெறும் எண்ணத்துடன் யாதொரு புண்ணையும், காயத்தையும், உடல் நோயையும் அல்லது குறைபாட்டையும் வெளிப்படையாய்க் காட்டுகிறாரோ, அவர் ஐம்பது ரூபாய் வரை அபராதத் தண்டனையும் அல்லது ஒரு மாதம் வரை சிறைத் தண்டனையும் பெறுதற்குரியவராவார்.

**'வேலைக்கூடம்', 'தனி இல்லம்' என்பனவற்றின் விளக்கங்கள்.**

71. ஆ. பிரிவுகள் 71 இ முதல் 71 ஔ வரையிலும்.—(அ) 'வேலைக்கூடம்' என்பது மாநில அரசாங்கத்தால் தமிழ்நாடு அரசிதழில் சொல்லப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகளில் எவற்றின் கீழாவது ஒரு வேலைக் கூடத்திற்கு அனுப்பப்படும் சாதாரண உடலுழைப்புச் செய்யக்கூடிய நபர்களைச் சேர்த்துக்கொள்ளத் தகுதியுள்ளதென்று அறிவிக்கப்பட்ட ஒரு இடம் என்று பொருள் படும் ;

(ஆ) தனிப்பட்ட இல்லம் என்பது சொல்லப்பட்ட பிரிவுகளின் ஏற்பாடுகளில் எவைகளின் கீழாவது ஒரு தனி இல்லத்திற்கு அனுப்பப்படும் சாதாரண உடலுழைப்புச் செய்ய முடியாத உடலுடைய நபர்களைச் சேர்த்துக் கொள்ளத்தக்கதென்று மாநில அரசாங்கத்தால் தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கப் பட்டுள்ள ஒரு இடம் என்று பொருள்படும்.

71 ஈ முதல் 71 ஐ வரையுள்ள பிரிவுகள் பொருந்துதல்.

71. இ. மாநில அரசாங்கம் ஒரு இடத்தை ஒரு வேலைக் கூடமாக அல்லது தனி இல்லமாக விளம்பரப்படுத்தியிருந்தால் மட்டும், 71 ஈ முதல் 71 எ வரையுள்ள பிரிவுகளின் ஏற்பாடுகள் பொருந்தும். 71 ஏ பிரிவின் ஏற்பாடுகள் மாநில அரசாங்கம் ஒரு இடத்தை வேலைக்கூடமாக விளம்பரப்படுத்தியிருந்தால் பொருந்தும்.

**71. அ. பிரிவின் கீழ் குற்றத்திற்குக் கைது செய்யப்பட்ட நபர்கள் மருத்துவ அலுவலரால் பரிசோதிக்கப்பட வேண்டும்.**

71. ஈ. ஒரு காவல் அலுவலரால் 71. அ. பிரிவின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்ட யாதொரு நபரும், அவர் அப்படிப்பட்ட காவல் அலுவலரின் அபிப்பிராயத்தில் பதினாறு வயதடைந்தவரானால் கூடிய விரைவில் அவ்வாறு கைது செய்ததற்குக் காரணங்களைத் தெரிவித்து, கைது செய்த இடத்திலிருந்து குற்றவியல் நீதி மன்றத்திற்குப் பயணம் செய்யத் தேவையான காலத்தை நீக்கிக் கைது செய்ததிலிருந்து இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் மிகவும் அண்மையிலுள்ள குற்றவியல் நீதிபதிக்கு, சேர்ப்பிக்கப்பட வேண்டும். அத்தகைய எந்த நபரும் சொல்லப்பட்ட அந்தக் காலத்திற்கு மேற்பட்ட ஒரு குற்றவியல் நீதிபதியின் அதிகாரமில்லாமல் நிறுத்தி வைக்கப்படக் கூடாது. குற்றவியல் நீதிபதி தாமதமின்றிக் காவல் துறைக்குச் சேர்ந்த ஒரு மருத்துவ அலுவலரிடம் அவரைக் கொண்டு செல்லும்படி கட்டளையிட வேண்டும். மருத்துவ அலுவலர் அந்த நபரைச் சோதனை செய்த பிறகு, அவருடைய வயதைப் பற்றியும், சாதாரண உடலுழைப்பிற்குத் தகுதியுள்ளவரா என்பதைப் பற்றியும் ஒரு சான்றிதழ் அளிக்க வேண்டும்.

கைது செய்யப்பட்ட நபர் 16 வயதுக்குட்பட்டு இருப்பவராகக் காணப்பட்டால் இளங்குற்றவாளிகள் நீதிமன்றத்தின் முன்னால் கொண்டுவரப்பட வேண்டும்.

71. உ. கைது செய்யப்பட்ட நபர் மருத்துவ அலுவலரின் கருத்தில் பதினாறு வயதடையாதவராயிருந்தால், அப்படிப்பட்ட நபர் தாமதமின்றி, மருத்துவ அலுவலரின் சான்றிதழுடன் 71. ஓ. பிரிவின் (1) ஆவது உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு இளங் குற்றவாளிகள் கோர்ட்டின் முன்னால் கொண்டுவரப்பட வேண்டும். அதன் மேல் அந்தப் பிரிவின் ஏற்பாடுகள் அதற்குப் பொருந்தும். கைது செய்யப்பட்டவர் 16 வயது அல்லது மேற்பட்ட வயதை யடைந்தவராகக் காணப்பட்டால் சம்பளம் பெறும் மாநில நீதிபதி முன்னால் கொண்டுவரப்பட வேண்டும்.

71. ஊ. (1) அப்படிப்பட்ட மருத்துவ அலுவலரின் அபிப் பிராயத்தில் கைது செய்யப்பட்ட நபர் பதினாறு வயதையடைந்த வராயிருந்தால், அவர் தாமதமின்றி அந்த வழக்கின் உண்மை களைப் பற்றிய ஒரு காவல் அலுவலரின் அறிக்கையுடன் சம்பளம் பெறும் ஒரு மாநிலக் குற்றவியல் நீதிபதிக்கு முன்னால கொண்டு வந்து சேர்க்கப்பட வேண்டும்.

(2) அந்தக் குற்றவியல் நீதிபதி அந்த வழக்கின் உண்மை களைப் பற்றியும் தம் முன்னால் கொண்டுவரப்பட்டுள்ள நபரின் சந்தர்ப்பங்களையும் குணத்தையும் பற்றியும் சுருக்கமாக விசாரணை செய்ய வேண்டும்.

(3) அப்படிப்பட்ட விசாரணையின் போது, குற்றவியல் நீதிபதி அந்த நபருக்குக் காவல் அறிக்கையில் அவர் மேல் கொண்டு வரப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளை விளக்கிக் கூறி, அது சம்மந்தமாய் அந்த நபர் சொல்லிக் கொள்ள விரும்பும் வாக்கு மூலத்தைப் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

(4) அப்படிப்பட்ட யாதொரு முக்கியமான நிகழ்வில் காவல் அறிக்கையின் சரியான தன்மையை எதிர்த்து வாதாடினால் அந்தக் குற்றவியல் நீதிபதி, 1898 ஆம் ஆண்டு குற்றவியல் நடைமுறை விதித் தொகுப்பில் சிறு குற்ற வழக்குகளை விசாரிப்பதற்காக விதிக்கப்பட்டுள்ள முறைக்கேற்ப கூடுமான வரையில் நடை வடிக்கை எடுக்க வேண்டும்.

## குற்றஞ்சாட்டப்பட்டவர் 16 வயதுக்குள் இருப்பதாகத் தெரிந்தால், குற்றவியல் நீதிபதி பிறப்பிக்கும் ஆணைகள்.

71. எ. 71. ஊ. பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்டதில் சம்பந்தப்பட்ட அந்த நபர் 71. அ. ஆவது பிரிவின் கீழ் ஒரு குற்றத்தைச் செய்தவர் என்றும் ஆனால் பதினாறு வயதையடையாதவரென்றும், குற்றவியல் நீதிபதிக்குத் தெரிந்தால், இளங் குற்றவாளிகள் நீதிமன்றத்தின் முன்பு 71. ஒ. பிரிவின் கீழ் (1) ஆம் உட்பிரிவின் கீழ் அந்த நபர் கொண்டுவரப்பட்டிருந்தால் அந்த நீதிமன்றம் எந்த ஆணைகளைப் பிறப்பித்திருக்கக் கூடுமோ அப்படிப்பட்ட யாதொரு ஆணையையும் குற்றவியல் நீதிபதி பிறப்பிக்கலாம்.

## 16. அல்லது அதற்கு மேற்பட்ட வயதுள்ள உடல் திடமுள்ள குற்றஞ் சாட்டப்பட்டவர்களை, ஒரு வேலைக் கூடத்திற்கு அனுப்புவதற்கானக் குற்றவியல் நீதிபதியின் அதிகாரம்.

71. ஏ. அப்படிப்பட்ட விசாரணை நடத்தப்பட்ட நபர், 71. அ. பிரிவின் கீழ் ஒரு குற்றத்தைச் செய்தவராகவும், பதினாறு வயதடைந்தவராகவும், சாதாரண உடலுழைப்புக்குத் தகுதியான உடல் வன்மையையுடையவராகவும், அந்தக் குற்றவியல் நீதிபதிக்குத் தெரிந்தால் அந்தக் குற்றவியல் நீதிபதி, ஒரு வேலைக் கூடமிருக்குமானால், அவரை 71. அ. பிரிவின் கீழ் தண்டிப்பதற்குப் பதிலாக, மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அப்படிப்பட்ட வேலைக் கூடத்திற்கு அனுப்புவதற்கு ஆணையிடலாம்.

ஆயினும், அந்தக் குற்றவியல் நீதிபதி, தம் யுக்தத்தில், அந்த நபர், குற்றவியல் நீதிபதி கட்டளையிடக் கூடிய இரண்டாண்டுகளுக்கு மேற்படாத அப்படிப்பட்ட காலத்தில் தான் மறுபடியும் 71. அ. பிரிவின் கீழ் ஒரு குற்றம் செய்வதில்லை என்று எழுத்து மூலமான ஒரு உறுதிமொழியளித்தால், அவரை விடுதலை செய்ய ஆணையிடலாம்.

(2) எவரொருவர், தாம் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாட்டின் கீழ் தம்மால் அளிக்கப்பட்ட உறுதிமொழிக்கு மீறி 71. அ. பிரிவின் கீழ் ஒரு குற்றம் செய்கிறாரோ, அவர் குற்றவியல் நீதிபதியின் அபிப்பிராயத்தில் சாதாரண உடலுழைப்புக்குத் தக்க உடல் அமைப்பையுடையாராயிருந்தால், ஆறு மாதங்கள் வரை சிறைத் தண்டனை பெறுதற்குரியவராவார்.

ஆயினும், குற்றவியல் நீதிபதி மேலே சொல்லப்பட்டபடி அந்தக் குற்றவாளியைத் தண்டிப்பதற்குப் பதிலாக அவரை மூன்று மாதங்களுக்கு மேற்படாத ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வேலைக் கூடத்திற்கு அனுப்புவதற்கு ஆணையிடலாம்.

### குற்றஞ்சாட்டப்பட்ட திடமான உடம்பில்லாதவராயிருந்தால் அவரைத் தனி இல்லத்திற்கு அனுப்பக் குற்றவியல் நீதிபதியின் அதிகாரம்.

71. ஐ. 71. ஊ. பிரிவின் கீழ் விசாரணை செய்யப்பட்ட நபர் 71. அ. பிரிவின் கீழ்க் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப் பட்டவராகவும், 16 வயது அடைந்தவராகவுமிருந்து ஆனால் சாதாரண உடலுழைப்புக்குத் தகுதியில்லாதவராகக் குற்றவியல் நீதிபதிக்குத் தெரிந்தால், அந்தக் குற்றவியல் நீதிபதி அவரை 71. அ. பிரிவின் கீழ் தண்டிப்பதற்குப் பதிலாக, அப்படிப்பட்ட இல்லத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வைத்திருப்பதற்காக ஆணையிடலாம்.

### நிறுத்தி வைக்கப்படும் காலத்தை நீடித்தல்.

71. ஒ. இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு வேலைக் கூடத்தில் அல்லது தனி இல்லத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள யாதொரு நபரின் விண்ணப்பத்தின் மேலும், அந்த விண்ணப்பத்தின் மேல் அந்த வேலைக்கூடம் அல்லது தனி இல்லத்தின் பொறுப்பிலுள்ள அலுவலரின் குறிப்புரைகளைக் கவனித்தும், அந்த விண்ணப்பதாரால் அல்லது அவர் சார்பில் செய்யப்பட்ட முறையீடுகளைக் கேட்டும், சம்பளம் பெறும் ஒரு மாநிலக் குற்றவியல் நீதிபதி, தாம் அப்படி நீடித்து வைத்திருப்பது விண்ணப்பதாரால் கோரப்படுகிறது என்றும் அது அவர் நன்மைக்காக இருக்கும் என்றும் மனநிறைவு கொண்டால், அவர் அந்த விண்ணப்பதாரரை அந்த வேலைக்கூடத்தில் அல்லது தனி இல்லத்தில், மற்றப்படி அவர் வைக்கப்பட்டிருப்பது முடிவாகும் தேதியிலிருந்து ஒவ்வொரு தடவையும் இரண்டு ஆண்டுகளுக்கு மேற்படாதபடி நீடித்து வைத்திருக்க ஆணையிடலாம்.

### வயதைப் பொருத்தவரை குற்றவியல் நீதிபதி தீர்ப்பு முடிவானது.

71. ஓ. ஒரு குற்றவியல் நீதிபதி 71. எ, 71. ஏ அல்லது 71. ஐ பிரிவின் கீழ் தாம் நடவடிக்கையெடுக்க ஒரு நபரின் வயதைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்ததில் அந்த வயது, அவைகளின்

நோக்கங்களுக்காக அவருடைய உண்மையான வயதாகக் கருதப்பட வேண்டும். அந்தக் குற்றவியல் நீதிபதியின் ஆணை அல்லது தீர்ப்பு, அப்படிப்பட்ட நபரின் வயது குற்றவியல் நீதிபதியால் சரியானபடி நிர்ணயிக்கப்படவில்லை என்ற காரணத்தால், சட்டப்படி செல்லத் தகாததாகக் கருதப்படவும் கூடாது அல்லது அது மேல்முறையீட்டில் அல்லது சீராய்வில் தலையிடப்படக் கூடியதுமாகாது.

**16 வயதுக்குக் கீழ் உள்ள கைது செய்யப்பட்ட நபரை இளங் குற்றவாளிகள் நீதிமன்றத்தின் முன் கொண்டுவருவதும் அத்தகைய நீதிமன்றத்தின் நடைமுறையும், அதிகாரங்களும்.**

71. ஔ. 71. அ. பிரிவின் கீழ் தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றத்திற்காக ஒரு காவல் அலுவலரால் கைது செய்யப்பட்ட யாதொரு நபரும். அந்தக் காவல் அலுவலரின் அபிப்பிராயத்தில் பதினாறு வயதையடையாதவராயிருந்தால் கூடிய விரைவில் அப்படிக் கைது செய்ததற்குக் காரணங்கள் சொல்லப்பட்டு, அவ்வாறு கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து குற்றவியல் நீதிபதி கோர்ட்டுக்குப் பயணம் செய்யத் தேவைப்படும் காலம் நீங்கலாக இருபத்துநான்கு மணி நேரத்திற்குள் மிகவும் சமீபத்திலுள்ள குற்றவியல் நீதிபதிக்கு முன்னால் கொண்டு வரப்பட வேண்டும். அப்படிப்பட்டவர் எவரும் ஒரு குற்றவியல் நீதிபதியின் அதிகாரமில்லாமல் சொல்லப்பட்ட காலத்திற்கு மேற்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருக்கக்கூடாது. அவ்வாறு கொண்டுவரப்பட்டதன் மேல் அந்தக் குற்றவியல் நீதிபதி தாமதமின்றி, அந்த நபரை 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுவர்கள் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் (1) ஆவது உட்பிரிவின் கீழ் நிறுவப்பட்டுள்ள இளங்குற்றவாளிகள் நீதிமன்றத்தின் முன்னால் கொண்டு செல்லும்படி கட்டளையிட வேண்டும். அதன் மேல் அந்த நபர் இந்தப் பிரிவின் ஏற்பாடுகளால் மாற்றியமைக்கப் பட்டுள்ள அந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நடத்தப்பட வேண்டும்.

ஆயினும், விசாரணையில் அந்த இளங்குற்றவாளிகள் கோர்ட்டு அப்படிப்பட்ட நபர் பதினாறு வயதையடைந்துள்ளார் என்று மனநிறைவு கொண்டால் அது அவ்வாறு ஒரு தீர்ப்பைப் பதிவு செய்ய வேண்டும். இதன் மேல், காவல் துறையால் அந்த நபரின் மேல் 71-அ. பிரிவின் கீழும் அல்லது ஒரு வேலைக்கூடம் அல்லது தனி இல்லம் இருந்தால் 71-ஈ பிரிவின் கீழும் நடவடிக்கையெடுக்க வசதியிருக்குமாயின் சொல்லப்பட்ட. அதில் 71-ஈ பிரிவில் குறிப்

பிடப்பட்ட மருத்துவ அலுவலர் அந்த நபரின் சாதாரண உடலுழைப்புக்குத் தகுதியான தன்மையைப் பற்றி மட்டும் சான்றளிக்கக் கோரப்படுவார். அப்படிப்பட்ட நபரின் வயது சம்மந்தமாய் இளங்குற்றவாளிகள் கோர்ட்டின் முடிவு, அவர் ஆஜர் செய்யப்படும் சம்பளம் பெறும் மாநில குற்றவியல் நீதிபதியை கட்டுப்படுத்தும்.

(2) விசாரணையின் மேல் அந்த இளங்குற்றவாளிகள் கோர்ட்டு, அதன் முன்னால் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கொண்டு வரப்பட்ட யாதொரு நபரும் பதினன்கு ஆண்டுகள் வயதடைய வில்லை என்றும் 71-அ பிரிவின் கீழ் அவர் குற்றவாளி யென்றும்;

(அ) அவருக்கு ஒரு வீடும் அல்லது தங்கும் நிரந்தரமான இடமும் அல்லது தெரிந்து பிழைக்கும் வழியும் இல்லையென்றும், அவருக்குப் பெற்றோர் எவரும் அல்லது காப்பாளரும் இல்லை யென்றும், அல்லது பெற்றோர் அல்லது காப்பாளர் இருந்தும் அவர்கள் சரிப்பட்ட காவல் அல்லது பாதுகாப்பு அளிப்பதில்லை யென்றும்; அல்லது

(ஆ) திக்கற்றவராய், அவரது இரு பெற்றோர்களும் அல்லது உயிருடனுள்ள ஒருவரும் அல்லது முறையின்றிப் பிறந்த சிறுவரைப் பொருத்தவரை அவரது தாயாரும் ஆயுள் தண்டனை அல்லது சிறைத் தண்டனையிலிருக்கிறார்கள் என்றும், அல்லது

(இ) அவர் பெற்றோர் அல்லது காப்பாளர் பாதுகாப்பில் இருக்கிறார் என்றும் ஆனால் அந்தப் பெற்றோர் அல்லது காப்பாளர் தமது குற்றவியல் அல்லது குடிப்பழக்கத்தால் அப்படிப் பொறுப் பேற்கத் தகுதியில்லாதவர் என்றும்,

கண்டுணர்ந்தால், அந்தக் கோர்ட் அவர் அதன் முன்பு, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுவர்கள் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தால் எத்தகைய ஆணையிடலாமோ அப்படிப்பட்ட ஆணையை அந்தக் குற்றவாளி சம்பந்தமாய்ப் பிறப்பிக்கலாம்.

ஆயினும், அந்த இளங்குற்றவாளியின் கோர்ட்டு அந்தக் குற்ற வாளியை அவரது உடல் நலமின்மை அல்லது தகுதியின்மை அல்லது இதர காரணத்தால் அவரை ஒரு சீர்திருத்தப் பள்ளிக்கு

அனுப்புவது உசிதமல்ல என்று மனநிறைவு கொண்டால், அந்தக் கோர்ட்டு ஒரு தனி இல்லம் இருந்து அதில் பதினுன்கு வயதை யடையாத நபர்களுக்குத் தனியாகத் தங்க வசதி செய்யப் பட்டிருந்தால், அப்படிப்பட்ட இல்லத்திற்கு மூன்று ஆண்டு களுக்கு மேற்படாத ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அனுப்புவதற்கு ஆணையிடலாம்.

(3) இளங்குற்றவாளிகள் கோர்ட்டு அதன் முன்பு (1) ஆவது உட்பிரிவின் கீழ் கொண்டுவரப்பட்ட நபர், விசாரணையின் மேல் 14 வயது அடைந்திருக்கிருர் என்றும், 16 வயது அடையவில்லை யென்றும், 71. அ. ஆம் பிரிவின் கீழ் உள்ள ஒரு குற்றத்தைச் செய்திருக்கிருர் என்றும் கண்டுணர்ந்தால், அந்தக் கோர்ட்டு, அவரை மூன்று ஆண்டுக்கு மேற்படாமல் ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ;

(அ) அவர் உடலுழைப்புக்குத் தகுதியான உடல் உள்ளவ ரென்று தெரிந்தால் ஒரு வேலைக் கூடம் இருந்தால் அதற்கும் ;

(ஆ) அவர் உடலுழைப்புக்குத் தகுதியில்லாதவரென்று தெரிந்தால், தனி இல்லம் இருக்குமாயின் அதற்கும் ; அனுப்பி வைக்கும்படி ஆணையிடலாம்.

**71. ஆ. முதல் 71. ஒ. வரையுள்ள பிரிவுகளைச் செயலாற்ற விதிகளை இயற்ற மாநில அரசாங்கத்தின் அதிகாரம்.**

71. ஔ. (1) மாநில அரசாங்கம், தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை மூலம் 71 ஆ முதல் 71. ஔ வரையுள்ள பிரிவுகளின் ஏற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) முக்கியமாகவும், மேலே சொல்லப்பட்டுள்ள அதிகாரத் திற்குப் பாதகமில்லாமலும் ;

(அ) வேலைக் கூடங்கள், தனி இல்லங்கள் இவற்றின் மேலாண்மை, அப்படிப்பட்ட வேலைக் கூடங்களுக்கும் தனி இல்லங் களுக்கும் அனுப்பப்பட்ட நபர்களை நிறுத்தி வைப்பது, அத் தகைய நபர்களின் பராமரிப்புக்கும், பாதுகாப்புக்கும், சிகிச்சைக்கும் அறிவுரையளிப்பது, அவர்களுடைய உணவு, இருக்கை வசதி, அவர்களுக்கான தொழில் பொது நடத்தை உட்பட அவற்றின் சம்மந்தப்பட்டவைகள் ;

(ஆ) அப்படிப்பட்ட வேலைக் கூடங்கள் ; சிறப்பு இல்லங் களிலிருந்து நபர்களை விடுவித்தல் :

(இ) அவைகளில் வைக்கப்பட்டுள்ள நபர்களுக்கு அப்படிப்பட்ட வேலைக் கூடங்களுக்கும், சிறப்பு இல்லங்களுக்கும் வெளியே தக்க வேலையில் அமர்த்துவது ;

(ஈ) வேலைக் கூடங்களிலும் தனி இல்லங்களிலும் வைக்கப் பட்டுள்ள நபர்கள் யாதொரு விதிகளை மீறுவதற்கு அல்லது அப்படிப்பட்ட வேலைக் கூடத்திற்கு, தனி இல்லத்திற்கு வெளியே அவர்களுக்காக பெறப்பட்ட தக்க வேலையை ஏற்றுக்கொள்ளத் தவறுவதற்கு விதிக்கப்பட வேண்டிய தண்டனைகளின் தன்மையும் நிகழ்ச்சிகளும் பெரும் அளவு காலங்களும்; ஆகிய இவைகளுக்கான விதிகள் இயற்ற ஏற்பாடு செய்யலாம்.

**கைவண்டிகள் முதலியவைகளின் பெருமச் சுமையின் எடை முதலியன.**

"71. ஏ, ஒரு கை வண்டியின் பெருமச் சுமையின் எடை அடியிற்கண்ட வரம்புகளுக்கு மேற்படக் கூடாது :—

| | வண்டியின் இரண்டு அல்லது எல்லா சக்கரங்களிலும் ரப்பர் பட்டைகள் பொருத்தப்பட்டிருந்தால். | மற்ற வகையில், |
|---|---|---|
| | அண்டர் வெயிட். | அண்டர் வெயிட். |
| (i) வண்டி ஒரு நபரால் இழுக்கப்பட்ட அல்லது தள்ளப்பட்டபோது. | 7 | 6 |
| (ii) வண்டி இரண்டு நபர்களால் இழுக்கப்பட்ட அல்லது தள்ளப் பட்டபோது. | 14 | 12 |
| (iii) வண்டி மூன்று நபர்களால் இழுக்கப்பட்ட அல்லது தள்ளப் பட்டபோது. | 23 | 18 |
| (iv) வண்டி நான்கு நபர்களால் அல்லது மேற்பட்டவர்களால் இழுக்கப்பட்டபோது அல்லது தள்ளப்பட்டபோது. | 30 | 24 |

(2) ஒரு கைவண்டியின் மேல் சுமையின் உயரம், இந்தச் சட்டத்தின் கீழ் உள்ள துணை விதிகளில் சொல்லப்பட்ட எந்த வரம்புக்கும் மேற்படக் கூடாது.

(3) பதினெட்டு ஆண்டுகளுக்கு குறைந்த வயதுள்ள எந்த நபரும் தானகவோ அல்லது மற்றவருடன் சேர்ந்தோ ஒரு கை வண்டியை இழுக்கவோ அல்லது தள்ளவோ கூடாது.

(4) உட்பிரிவுகள் (1), (2) அல்லது (3) இன் ஏற்பாடுகளுக்கு மீறி ஒரு கைவண்டியை இழுக்கின்ற அல்லது தள்ளுகின்ற ஒரு நபர், அவரை வேலையில் அமர்த்திய அல்லது அத்தகைய மீறுதலுக்கும், வேலையில் அமர்த்துவதற்கும் அதற்குப் பொறுப்பாயுள்ள அல்லது உடந்தையாயுள்ள நபரும் ஒரு மாதம் வரை நீடிக்கக் கூடிய சிறைவாசமும் அல்லது ஐம்பது ரூபாய்கள் வரை அபராதம் செலுத்தவும் தண்டிக்கப்படுவதற்குரியவராவார்".

**பொது இடத்தில் சூதாடுவதற்கும் அல்லது சேவல் சண்டை விடுவதற்கும் தண்டனை.**

72. எவரொருவர், ஒரு பொது இடத்தில் சீட்டுகளுடனும், பாய்ச்சிக் காய்கள், பலகைகள், பணம் அல்லது வேறு சூதாட்டக் கருவிகளுடன் சூதாடவும் அல்லது பொது இடத்தில் சேவலை சண்டைக்கு விடவும் அல்லது அப்படிப்பட்ட சூதாட்டம் அல்லது சேவற் சண்டை நடக்கும் இடத்தில் பார்வையாளராக இருக்கவும் காணப்பட்டால் அவர் குற்றவாளியென்று தீர்மானிக்கப்பட்டதன் மேல் ஐம்பது ரூபாய்களுக்கு மேற்படாத அபராதத் தண்டனைக்கும் அல்லது ஒரு மாதத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனைக்கும் உட்படுவார்.

**பொது இடத்தில் தொல்லை செய்வதற்குத் தண்டனை.**

73. எவரொருவர் யாதொரு பொது இடத்தில் அல்லது அதற்குப் பக்கத்தில் அல்லது அதற்கு அருகில் வேண்டுமென்றே அநாகரீகமான முறையில் தம் உடலைக் காட்டுகிறரோ அல்லது கழிவு செய்து தொல்லை ஏற்படுத்துகிறரோ எவரொருவர் ஏழு வயதுக்குக் குறைந்த குழந்தையின் பொறுப்பை அல்லது காவலை உடையவர் மேலே சொல்லியபடி அப்படிப்பட்ட குழந்தை ஒரு தொல்லை ஏற்படுத்துவதைத் தடுக்க எவரொருவர் தவறுகிறரோ அவரும், குற்றவாளியென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐம்பது ரூபாய்களுக்கு மேற்படாத அபராத தண்டனைக்குட்படுவார்.

**யாதொரு பொது இடத்தின் அல்லது அதற்கு அருகாமையில் பெருநெருப்பை வைப்பதற்கும், வைக்கோலைக் கொளுத்துவதற்கும் சுடுபடைக்கலம் விடுவதற்கும் தண்டனை.**

74. எவரொருவர் காவல் ஆணையர் அனுமதிக்கக் கூடிய காலத்திலும், இடங்களிலும் தவிர யாதொரு பொது இடத்தில் அல்லது

அதற்கு அருகாமையில் யாதொரு பெரு நெருப்பை வைக்கிருரோ, வைக்கோலுக்கும் அல்லது வேறு பொருளுக்கும் நெருப்பு வைக்கிருரோ அல்லது கொளுத்துகிருரோ, துப்பாக்கியை அல்லது விளையாட்டுத் துப்பாக்கியைச் சுடுகிருரோ, வாண வெடியை விடுகிருரோ அல்லது வெடிக்கிருரோ அல்லது அவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இடத்தில் அவ்வாறு செய்ய அனுமதிக்கிருரோ, அவர் குற்றவாளியென்ற தீர்ப்பின் மேல் ஐம்பது ரூபாய்களுக்கு அதிகப்படாத அபராதத் தண்டனைக்குட்படுவார். அப்படிப்பட்ட செயல் ஒரு சொந்த இடத்தில் செய்யப்பட்ட போது அந்த இடத்தின் உடன் பொறுப்பிலுள்ள நபர், அந்தச் செயல் தனக்குத் தெரியாமலே செய்யப்பட்டது என்று மெய்ப்பிக்க கூடியவராயிருந்தாலொழிய அவர் அந்தச் செயலை அனுமதித்ததாகக் கருதப்படும்.

**பொது இடத்தில் குடிபோதையோடிருத்தல், கலகம் செய்தல் அல்லது அநாகரீகமாக நடந்து கொள்ளல் முதலியவைகளுக்குத் தண்டனை.**

75. எவரொருவர், குடித்து விட்டுத் தம்மைத் தாமே காத்துக் கொள்ளச் சக்தியற்றவராய், யாதொரு கலகமுண்டாக்கும் ஒழுங்கற்ற அல்லது அநாகரீகமான நடத்தையுடன் யாதொரு பொது இடத்தில், யாதொரு பொதுக் கேளிக்கையிடத்தில் அல்லது ஒரு பயணிகளின் படகின் அல்லது கலத்தின் மேல் காணப்படுகிருரோ, அவரும், எவரொருவர் யாதொரு காவல் துறை நீதிமன்றத்தில் யாதொரு முரட்டுத் தனமான ஒழுங்கற்ற அல்லது அநாகரீகமான நடத்தைக்குக் குற்றவாளியாகிருரோ அவரும் குற்றவாளியென்ற தீர்ப்பின் மேல் ஐம்பது ரூபாய்களுக்கு மேற்படாத அபராதத்தாலும் அல்லது ஒரு மாதத்திற்கு மேற்படாத சிறைவாசத்தாலும் அல்லது இரண்டாலும் தண்டிக்கப்படுவதற்குரியவராவார்.

உரிமங்களின் நிபந்தனையை மீறுவதற்குத் தண்டனை.

76. இந்தச் சட்டத்தின் கீழ் அளிக்கப்பட்ட ஒரு உரிமத்தின் யாதொரு நிபந்தனைகளை மீறிய எதற்கும், குற்றவாளிகள்யென்று தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஒரு நூறு ரூபாய்களுக்கு மேற்படாத அபராதத் தண்டனைக்குட்படுவார்கள். மேலும், அப்படிப்பட்ட மீறுதல் அந்தக் கடையின் அல்லது இடத்தின் பொறுப்பிலிருந்த அவாது பணியாளருடைய அல்லது முகவருடைய தவற்றினுல் அல்லது கவனக் குறையால் ஏற்பட்டிருக்கக் கூடியதாயிருந்தாலும் கூட உரிமம் அளிக்கப்பட்ட நபரிடமிருந்து அந்த

அபராதத் தொகை வசூலிக்கப்படலாம். அப்படிக் குற்றவாளி யென்று தண்டிக்கப்பட்ட யாதொரு நபரும் காவல் ஆணையர் யுக்தப்படி தமது உரிமத்தைச் சட்டப்படி பறிமுதல் செய்யப்படு வதற்கும் உரியவராவார்.

### உரிமத்துக்குக் கட்டணம்.

77. இந்தச் சட்டத்தின் கீழ் ஒவ்வொரு உரிமத்திற்கும் அல்லது அனுமதிக்கும், காவல் ஆணையர் அவ்வப்போது மாநில அரசாங்கம் நிர்ணயிக்கக்கூடிய இரண்டு ரூபாய்களுக்கு மேற்படாத அப்படிப் பட்ட கட்டணத்தை விதிக்கலாம்.

### துணை விதிகள் செய்ய அதிகாரம்.

இந்த மாநில அரசுச் சட்டத்திற்குப் பொருந்துமாறு அதன் நோக்கங்களை அதிகத் திறமையாகச் செயலாற்றுவதற்காகவும், ஒழுங்கைக் காப்பாற்றுவதற்காகவும் துணை விதிகளைச் செய்யலாம். அப்படிப்பட்ட யாதொரு துணை விதியை அவ்வப்போது நீக்கவும், மாற்றவும் அல்லது திருத்தவும் செய்யலாம்.

### துணை விதிகளை ஆங்கிலத்திலும், நாட்டு மொழியிலும் விளம்பரப் படுத்தவேண்டும்.

78. ஒவ்வொரு துணை விதியும் அலுவலக அரசிதழில், ஆங்கிலத் திலும், தமிழிலும், தெலுங்கிலும், இந்துஸ்தானியிலும் விளம்பரப் படுத்தப்படவேண்டும். ஒரு துணை விதியும் அது முதலில் அலு வலக அரசிதழில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலம் முடிவடையும் வரையில் அமுலுக்கு வராது.

### துணை விதியை மீறுவதற்குத் தண்டனை.

79. அப்படிப்பட்ட யாதொரு துணை விதியை மீறியதற்கு, அக்குற்றவாளி, அவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் பத்து ரூபாய்களுக்கு மேற்படாத அபராதத் தண்டனைக்கும் அல்லது ஒரு வாரத்திற்கு மேற்படாத சிறைத் தண்டனைக்கும் உட்படுவார்.

### நடவடிக்கைகளுக்குக் காலவரம்பு.

81. இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அல்லது காவல் துறைக்கு அதிகாரங்கள் அளிக்கப்பட்டுள்ள, அப்பொழுது அமுலி லிருந்த வேறு எந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி செய்யப்பட்ட அல்லது செய்ய எண்ணிய யாதொன்றின் காரணமாக, புகார்

செய்யப்பட்ட செய்கை நடந்த தேதியிலிருந்து ஆறு மாதங்கள் கழிந்த பின் ஒரு நடவடிக்கையும் கொண்டுவரக் கூடாது. அச்செய்கை நடந்த தேதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்பு எந்த ஒரு வழக்கும் தொடரக் கூடாது. ஒரு குற்ற வழக்குத் தொடரப்பட்டு அது தோற்றுவிட்ட யாதொரு செயல் சம்மந்தமாய் யாதொரு நடவடிக்கையும் செல்லாது.

### இதர சட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட தண்டனைக்குப் பாதுகாப்பு.

இந்தச் சட்டத்தில் உள்ளது எதுவும் யாதொரு நபரையும் வேறு எந்தச் சட்டத்தின் கீழும் வேறு எந்த அல்லது அதிகமான தண்டனைக்குட்படக் கூடியதைத் தடுப்பதாகப் பொருள் செய்யக் கூடாது. ஆயினும், எவரொருவரும் அதே குற்றத்திற்கு இரு முறை தண்டிக்கப்படக் கூடாது.

### *1907 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டத்தின் கீழ் உள்ள விதிகள்.

1907 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் (திருத்தச்) சட்டத்தின் (தமிழ்நாடு 1907 ஆம் ஆண்டு, III ஆம் சட்டம்) 31 ஆம் பிரிவில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்திப் பின்னால் திருத்தப்பட்டபடியான 28—4—1908 ஆம் தேதி தமிழ்நாடு அரசிதழின் I ஆம் பாகத்தின் 360-361 ஆம் பக்கங்களில் சட்டநீதித் துறை 256 ஆம் எண்ணுள்ளதும் 21—4—1908 ஆம் தேதியிட்டதுமான அறிவிக்கையோடு வெளியிடப்பட்டுள்ள விதிகளை ஒதுக்கிவிட்டு, மேன்மை தங்கிய ஆளுநர் சென்னை மாநகரத்திற்காகக் காவல் ஆணையர் சம்மந்தமாய் செய்யப்பட்ட சட்டத்தின் 2 ஆம் பிரிவால் காவல் துறைத் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அதிகாரங்களையும் கட்டளையிடக் கூடிய அதிகாரங்களையும் செலுத்துவதை வரையறுக்கவும் ஒழுங்கு படுத்தவும் அடியிற்கண்ட விதிகளைச் செய்கிறார்.

### விதிகள்.

1. சென்னைக் காவல் ஆணையர் 1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் (தமிழ்நாடு 1888 ஆம் ஆண்டு III ஆம் சட்டம்) 10 ஆம் பிரிவின் கீழ் மாநகரக் காவல் படையைப் பொது ஆட்சிக்காக தாம் பிறப்பிக்க கருதக்கூடிய எல்லா ஆணை

*உள்துறை அறிவிக்கை எண் 413, அ. ஆ. எண் 1544, உள்துறை 15-4-1937ஆம் தேதியிட்டதும், 1902ஆம் எண், உள்துறை 7-5-1927 தேதியிட்டதும்.

களையும் ஒழுங்குமுறை விதிகளையும் மாநில அரசாங்கத்திற்குக் காவல் துறைத் தலைவர் மூலமாகப் பணிந்தனுப்பவேண்டும்.

2. 1888 ஆம் ஆண்டு தமிழ்நாடு I ஆம் சட்டத்தின் 14, 29, 30, 38, 39, 41, 42, 52 & 60 ஆம் பிரிவுகளின் கீழ் காவல் ஆணையரின் ஆணைகள் காவல் துறைத் தலைவரால் சீராய்வு செய்வதற்கு உரியனவாகா.

3. காவல் ஆணையர் 1878 ஆம் ஆண்டு இந்தியப் படைக்கலங்கள் சட்டம், 1878 ஆம் ஆண்டு இந்திய வெடிப் பொருள்கள் சட்டம் அல்லது வேறு தனிப்பட்ட சட்டங்கள் சம்மந்தப்பட்டவற்றிலும், சாதாரண நடைமுறைகளிலும் அரசாங்கத்திடமிருந்து வரும் கேட்புக் கடிதங்களுக்குப் பதில் அனுப்புவதிலும் அரசாங்கத் துடன் கடிதப் போக்குவரத்துத் தொடர்ந்து வைத்துக்கொள்வார்; ஆனால், காவல் பணியமைப்புகளில் மாறுதல் அல்லது சேர்த்தல் நேருவனவற்றில் அவர் காவல் துறைத் தலைவர் மூலமாய்க் கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ளவேண்டும்.

4. காவல் ஆணையர், காவல் துறைத் தலைவருக்கு எழுதிக் கேட்காமலே அரசாங்கத்தால் பல்வேறுபட்ட தணிக்கை விதித் தொகுப்புகள் மூலமும், விதிகள் மூலமும் குறிப்பிட்டு அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு துறைத் தலைவரின் அதிகாரங்களைச் செலுத்தலாம்.

## சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் 71 (I) பிரிவின் கீழ் உள்ள சாலை விதிகள்.

### அறிவிக்கை.

1888 ஆம் ஆண்டு சென்னை மாநகரக் காவல் சட்டத்தின் (தமிழ் நாடு 1888 ஆம் ஆண்டு III ஆம் சட்டம்) 71 ஆம் பிரிவின் V கூற்றால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, தமிழ் நாடு அரசாங்கம் கீழே சொல்லப்பட்ட 1938 ஆம் ஆண்டு தமிழ் நாடு போக்குவரத்து விதிகள், அவை ஊர்திகளுக்குப் பொருந்தும் அந்த அளவில் சொல்லப்பட்ட கூற்றுகளின் கீழ், சாலை விதிகளாக இருக்கும். இதனால், அறிவிக்கை செய்துள்ளார்கள்.

1938 ஆம் ஆண்டு தமிழ்நாடு போக்குவரத்து விதிகளில் 3 4, 5, 6, 7; 8, 9, 10, 11, and 14, 16, 17, 18, 19, 20 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31, 33, 36, 39, 40 41, 42.

**சென்னை மாவட்டக் காவல் (திருத்தச்) சட்டம், 1865 (தமிழ் நாடு 1865 ஆம் ஆண்டு V ஆவது சட்டம்) 1859 ஆம் ஆண்டு XXIV ஆம் சட்டத்தைத் திருத்த ஒரு சட்டம்.**

*முன்னுரை :—*

1859 ஆம் ஆண்டு XXIV ஆம் சட்டத்தின் கீழ் ஒரு அபராதத்தை விதிக்கும் யாதொன்றிலும், அந்த அபராதத் தொகை உடனடியாகச் செலுத்தப்படாவிட்டால் யாதொரு குற்றவாளியை குற்றவியல் நீதிபதி ஜப்தி வாரண்டு திரும்பி வரும் வரையில் கைது செய்யவும் நிறுத்தி வைக்கவும், அல்லது அவ்வாறு அபராதம் விதிக்கப்பட்டவரும் உடனே அவருடைய அபராதத்தை செலுத்தாதவருமான அவர் வந்து சேருவதற்கு பிணையம் பெறவும், ஒரு குற்றவியல் நீதிபதிக்கு அதிகாரமளித்து அந்தச் சட்டத்தைத் திருத்துவது தக்கதாக இருப்பதாலும், போதுமான அளவிற்கு ஜப்தி செய்யக் கூடாதவைகளில் எடுக்கவேண்டிய நடைமுறையைச் சொல்லவேண்டியதும் தக்கதாக இருப்பதாலும்; இதனால் சட்டமியற்றப்படுகிறது—

**1. பணம் செலுத்தாதவைகளில் பறிமுதல்கள் அல்லது தண்டங்கள் விதிப்பது.**—ஒரு குற்றவியல் நீதிபதியால் தண்டிக்கப்படக்கூடிய குற்றங்களுக்கு 1859 ஆம் ஆண்டு XXIV சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் விதிக்கப்பட்ட எல்லாப் பறிமுதல்களும், தண்டங்களும், அவை செலுத்தப்படாமல் இருந்தால் அந்த மாவட்டக் குற்றவியல் நீதிபதியின் அதிகார எல்லைக்குள் இருக்கும் குற்றவாளியின் சொத்தை, அந்த ஆணையைப் பிறப்பித்த குற்றவியல் நீதிபதியின் கையொப்பத்தின் கீழ் அனுப்பப்படும் ஆணையின் மூலம் ஜப்தி செய்து விற்பனை செய்வதால் வசூல் செய்யப்படும்.

**2. தண்டப் பணம் முதலியவை உடனடியாகச் செலுத்தப்படாவிட்டால் குற்றவாளி நிறுத்தி வைக்கப்படலாம் அல்லது பிணை கொடுக்கும்படி கட்டாயப்படுத்தப்படலாம்.**—யாதொரு தண்டப் பறிமுதல் செய்யப்பட்ட பணம் அல்லது அபராதம் உடனடியாகச் செலுத்தப்படாதவற்றில் குற்றவியல் நீதிபதி ஜப்தி ஆணை நிறைவேற்றப்பட்டுத் திரும்பி வரும் வரையில், அந்த ஜப்தி ஆணை திரும்பி வருவதற்காக நியமிக்கப்பட்ட இடத்திற்கு நியமிக்கப்பட்ட காலத்தில் குற்றவாளி வந்து சேருவதற்குப்

பிணை கொடுத்தாலொழிய, அவரைக் கைது செய்யவும், சேமக் காவலில் நிறுத்தி வைக்கவும் ஆணையிடலாம்.

3. **குற்றவாளி எப்போது சிறையிலடைக்கப்படலாம்.**—அப்படிப்பட்ட ஆணை திரும்பி வந்ததன் பேரில், விதிக்கப்பட்ட அபராதத்தை வசூலிப்பதற்கும் ஜப்தி செய்யப் போதுமான சொத்து கிடைக்கவில்லையென்று தெரிந்தாலும் அது உடனடியாகச் செலுத்தப்படா விட்டாலும் அல்லது ஜப்தி ஆணை பிறப்பித்தால் அத்தகைய அபராதம் அல்லது பணத்தை வசூலிக்கப் போதுமான சொத்து இல்லையென்று அந்தக் குற்றவாளி ஒப்புக் கொண்டபடி அல்லது வேறு விதமாக குற்றவியல் நீதிபதி மனநிறைவு கொண்டால் அந்தக் குற்றவியல் நீதிபதி தம் கையொப்பத்தின் கீழ் பிறப்பித்த ஆணையால் அந்தக் குற்றவாளியைச் சிறைக்கு அனுப்பலாம். குற்றவியல் நீதிபதி யுக்தத்தின்படி அபராதத் தொகை ஐம்பது ரூபாய்களுக்கு மேற்படாதபோது இரண்டு மாத சிறைத் தண்டனைக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கும், அந்தத் தொகை ஒரு நூறு ரூபாய்களுக்கு மேற்படாதபோது நான்கு மாதங்களுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கும் மற்றவற்றில் ஆறு மாதங்களுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கும் மற்றவற்றில் தண்டனை பெற அவ்வாறு அனுப்பலாம். மேலே சொல்லப்பட்ட ஒவ்வொன்றிலும் அந்தத் தொகை செலுத்தப் படுவதின் மேல் சிறையிலிருப்பது முடிவடையும்.

4. . . . .

5. **பொருள் கொள்ளல்.**—இந்தச் சட்டம் 1859 ஆம் ஆண்டு XXIV ஆம் சட்டத்துடன் வாசிக்கப்படவும் அதன் ஒரு பாகமாக எடுத்துக் கொள்ளப்படவும் வேண்டும்.

### 1861 ஆம் ஆண்டு V ஆவது காவல் சட்டம்.

தமிழ்நாட்டிற்கு நீடிக்கப்பட்ட பிரிவுகள் :

1861 ஆம் ஆண்டு V ஆவது காவல் சட்டத்தின் அடியிற் கண்ட பிரிவுகள் மத்திய அரசாங்கத்தின் 728 ஆம் எண்ணுள்ள 1895 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம், 31 ஆம் தேதியிட்ட அறிவிக்கையால் தமிழ் நாட்டிற்கு நீடிக்கப்பட்டிருக்கின்றன.

## குழப்பம் ஏற்பட்டுள்ள அல்லது அபாயகரமான மாநிலங்களில் அதிகப்படியான காவல்படை வைத்தல்.

15. (1) மாநில அரசாங்கம், அதன் அதிகாரத்திற்குட்பட்ட எந்தப் பரப்பும் குழப்பம் ஏற்பட்டுள்ள அல்லது அபாயகரமான தன்மையில் உள்ளது என்றும் அல்லது அந்தப் பரப்பின் குடிமக்களின் அல்லது அவர்களின் ஒரு வகுப்பினரின் அல்லது பிரிவினரின் நடத்தையிலிருந்து காவல் அலுவலர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது தக்கதென்றும், மாநில அரசு கட்டளையிடுகிற எந்த ஒரு விதத்திலும், அலுவல் அரசிதழில் அறிவிக்கை மூலம் விளம்பரப்படுத்துவது சட்டப்படி சரியானதாகும்.

(2) அதன் மேல் காவல் துறைத் தலைவர் அல்லது மாநில அரசாங்கத்தால் இதற்காக அதிகாரமளிக்கப்பட்ட வேறு அலுவலர் மாநில அரசாங்கத்தின் ஒப்பு அளிப்புடன் மேலே சொல்லப் பட்டுள்ளபடி அப்படிப்பட்ட அரசாங்க அறிவிப்பில் குறிப்பிடப் பட்ட பரப்பில் வைக்கப்படுவதற்கு நிரந்தரமாக நிர்ணயிக்கப் பட்ட சாதாரணக் காவல் படைக்கு அதிகப்படியாக யாதொரு காவல் படையை அமர்த்திக் கொள்வது சட்டப்படி சரியானதாகும்.

(3) இந்தப் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்குட் பட்டு அப்படிப்பட்ட அதிகப்படியான காவல் படையின் செலவு அந்த அரசாங்க அறிவிப்பில் விதிக்கப்பட்டுள்ள அந்தப் பரப்பிலுள்ள குடிமக்களால் ஏற்கப்பட வேண்டும்.

(4) அந்த மாவட்டத்தின் குற்றவியல் நீதிபதி அவர் தேவையென்று கருதக் கூடிய அத்தகைய விசாரணைக்குப் பிறகு அந்தச் செலவை மேற்சொல்லியுள்ளபடி ஏற்க வேண்டியவர்களாயுள்ளவர்களுக்கு, அடுத்து வரும் உட்பிரிவின் கீழ் விலக்கு அளிக்கப் படாத குடிமக்களுக்குள் பிரித்துக் கொடுப்பார். அத்தகைய பங்கீடு அந்தப் பரப்பிற்குள் குடிமக்களின் முறையான வசதிகளை அனுசரித்து குற்றவியல் நீதிபதியின் தீர்ப்பின்படியே செய்யப் படும்.

(5) அப்படிப்பட்ட செலவின் யாதொரு பாகத்தைச் செலுத்த வேண்டிய பொறுப்பிலிருந்து அந்தக் குடிமக்களில் எந்த நபர் களுக்கும் அல்லது வகுப்பு அல்லது பிரிவுக் குடிமக்களுக்கும் மாநில அரசாங்கம் ஆணை மூலம் விலக்கு அளிப்பது சட்டப்படி சரியானதாகும்.